# நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரலாறு

# மக்கா வாழ்க்கை

**பரம்பரை**

ஆசியாவிலுள்ள பல நாடுகளில், தென்வடலாக 1500 மைல் நீளமும் கிழமேலாக 800 மைல் அகலமுள்ள பாலைவனப் பிரதேசமான அரபு நாடும் ஒன்று. அந்த நாடு செழிப்பால் வறண்ட நாடு. ஆயினும் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களும் ஒளிதில் தொடர்பு கொள்ளத்தக்க முக்கியமான ஓர் இடத்தில் அது அமைந்திருக்கிறது. எனவே தான் மக்கா பண்டைக்காலங்தொட்டு ஒரு முக்கிய வியாபார கேந்திரமாகத் திகழ்ந்து வந்துள்ளது.

இவ்வித நடு நாயகமான ஓர் இடத்தில் அரபு நாடு அமைந்திருந்த போதிலும், வளமில்லாத பாலைவனப் பிரதேசமாக இருக்கும் காரணத்தினால், சுற்றுப்புற நாடுகளை அரசாண்ட அரசர்கள் எவரும் அரபு நாட்டின் மீது ஆசையோ, அக்கறையோ கொண்டு ஆட்சி கொள்ளமுன் வரவில்லை. ஆனதால், அந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்து வரலாயினர். இங்கு வாழ்ந்த வழுகின்ற மக்களை, நூஹ் நபியவர்களின் புத்திரர் ஷாம் என்பவரின் வழித்தோன்றல்களான ஆதிப் பழங்குடி அரபியர்கள், பாலைவன அராபியர்கள், குடியேறிகளான அந்நியர்கள் என மூன்று பெரும் பிரவுக்குள் அடக்கலாம்.

அரபுநாட்டில் குடியேறி வசித்த அந்நியர்களில் ஆபிரஹாம் தீர்க்கதரிசி என்னும் இப்ராஹீம் நபியும் அவரது மகன் இஸ்மாயீல் நபியும் சேருகின்றனர். இப்ராஹீம் நபி இராக்கிலுள்ள கல்தூனியா என்ற இராச்சியத்தைச் சேர்ந்தவர். இவருடைய சிறிய தந்தை ஆஸர் என்பவர் கோயில்களுக்கு உருவ வழிபாடு செய்வோருக்கும் விக்கிரகங்கள் செய்து கொடுத்து வந்தார். இப்ராஹீம் நபி விக்கிரக வணக்கத்தை கண்டித்து ஏக இறைவனை வணக்குமாறு மக்களிடையேப் பிரச்சாரம் செய்தார். இதனால் அவரின் சிறிய தந்தையும் அந்நாட்டு அரசன் நம்ரூது என்பானும், உற்றார் உறவினரும் இவரை வெறுத்து அந்நாட்டை விட்டும் வெளியேற்றிவிட்டனர்.

எனவே, அவர் பாலஸ்தீனம் சென்று அங்கு கன்ஆன் என்னும் இடத்தில் தங்கினார். பின் அங்கிருந்து வெளியாகி சிரியாவுக்கு வந்து வசித்த போது தமது சிறிய தந்தையின் மகளான சாரா என்ற பெண்மணியை மணம் செய்து கொண்டார். சில காலஞ்சென்று மீண்டும் சொந்த நாட்டுக்கு வந்து இறைவனின் மகத்துவத்தைப் பற்றியும், விக்கிரக வணக்கத்தைக் கண்டித்தும் பிரச்சாரம் செய்யலானார். அதனால் அரசன் நம்ரூது அவரை நெருப்புக் குண்டத்துள் எறியச் செய்தான். இறைவனின் ஆணைப்படி அந்நெருப்பு அவருக்கு குளிர்ந்த பூங்காவாக மாறி விட்டது. பின்னர் சொந்த நாட்டைத் துறந்து மனைவி சாராவுடன் எகிப்து நாட்டுக்குச் சென்றார். எகிப்து அரசன் ரக்கிய்யூன் என்பான் இப்ராஹீம் நபியைக் கண்ணியப்படுத்தி பல வெகுமதிகளுடன் அரசகுமாரி ஹாஜரா என்ற மங்கையையும் பரிசிலாகக் கொடுத்தனுப்பினான். இப்ராஹீம் நபியவர்களுக்கும் வயதாகி வந்தது. ஆயினும் சாராவைக் கொண்டு மகப்பேறு கிட்டாதிருந்தது. எனவே ஹாஜராவையும் அவர்

திருமணம் செய்து கொண்டார். சிறிது காலத்தில் ஹாஜராவுக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. அவ்வன்புக் குழந்தைக்கு இஸ்மாயீல் என அழகுத் திருப்பெயர் சூட்டி மிக்கப் பற்றுப் பாசத்துடன் வளர்த்தார்கள். இப்ராஹீம் நபியவர்களுக்கு அது சமயம் 86 வயதாக இருந்தது. அதன்பின் மூத்த மனைவி சாராவுக்கும் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இதற்கு இஸ்ஹாக் எனப் பெயரிட்டார். அது போழ்து இப்ராஹீம் நபி 99 வயதை அடைந்திருந்தார்கள்.

**ஜம்ஜம்**

இஸ்மாயீல் நபி பச்சிளங்குழந்தையாக இருந்த போது இறைவனது கட்டளைப்படி ஹாஜராவையும் குழந்தையையும் பாரான் என்னும் வனாந்திரப் பிரதேசமான அரேபியாவில் மக்கா என்னுமிடத்தில் கொண்டு வந்து விட்டு அங்க வசித்து வருமாறு இப்ராஹீம் நபி ஏற்பாடு செய்தார்கள். அங்கு ஒரு நாள், குழந்தை இஸ்மாயீலுக்கு தண்ணீர் தாகமேற்பட்டுப் பரிதாபமாக தவித்து அழுதது. கைவசம் தண்ணீரில்லாத நிலையில் குழந்தையின் பரிதாபந் தாங்காத அன்னை ஹாஜரா, சபா, மர்வா என்ற இரு குன்றுகள் மத்தியிலுள்ள இடத்திலும் வேறு இடங்களிலும் தண்ணீரைத் தேடி அங்குமிங்கும் ஓடி அலைந்தார். எந்த இடத்திலும் தண்ணீர் கிடைக்கவில்லை. குழந்தையின் வீறிட்ட அலறல் தாயின் உள்ளத்தைப் பிழிந்தெடுக்க, அலைந்து கொண்டிருந்த அன்னை ஹாஜரா மனங்கசிந்து உருக்கமுடன் இறைவனைப் பிரார்த்தித்தார். அந்நேரத்தில் வானவர் ஜிப்ரீல் குழந்தை இருந்த இடத்தில் தோன்றித் தம் குதிங்காலால் மிதிக்கப் பள்ளமுண்டாகியது. குழந்தை இஸ்மாயீல் அலறித் துடிக்கும் போது கால்களை உதறி அடித்ததில் பள்ளமேற்பட்டதாகவும் கூறுவர். அக்குழியினின்று இனிய நீர்க்குமிழியிட்டு வெளிவந்தது. தண்ணீருக்காக அலைந்து திரிந்த அன்னை ஹாஜரா எங்கு அலைந்தும் நீர் கிடைக்காமையால் ஏமாற்றமும் மனச்சோர்வும் உற்றவராக குழந்தை இருந்த இடம் நோக்கி அசந்து போய் வந்தார். என்ன ஆச்சரியம்!. அங்கு வந்து பார்த்த போது குழந்தையின் அருகில் தண்ணீர் குமிழியிட்டு வழிந்தோடுவதைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவராக இரு கரமேந்தி இறைவனைப் போற்றினார். தண்ணீர் எங்கே பெருக்கெடுத்தி ஓடி விரைவில் வற்றி விடுமா எனப் பயந்து “ஜம் ஜம்” நில் நில் எனப்பத்தட்டத்துடன் கூறியவராய் அவ்வூற்றைச் சுற்றி மணல் கொண்டு அணைகோலினார். நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பு குமிழியிட ஆரம்பித்த இப்புனித ஜம் ஜம் ஊற்று இன்றும் குமிழியிட்டுக் கொண்டு மக்காவுக்கு வரும் இலட்சோப லட்சம் மக்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வருவது இறைவனின் ஒப்பற்ற அதிசயங்களில் ஒன்றாகும்.

அன்றியும், ஜம்ஜம் நீரில் எல்லாவிதத் தாதுப் பொருள்களும் கலந்திருப்பதாக மருத்து பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை பொதுவாக உடம்புக்கு ஆரோக்கியமளிப்பதுடன் எலும்பை உறுதியாக்கவும், ஞாபக சக்தியை அதிகரிக்கவும், சர்ம நோய், வயிற்றுக் கோளாறுகளைப் போக்கவும், கொழுப்புச் சத்தைக் கரைக்கவும், களைப்பு, சுவாச காசத்தை நீக்கவும், நீரிழிவு, கல்லடைப்பு, வயிற்றுப் போக்கை அகற்றவும், பாரிச வாயுவை கலைக்கவும் கூடிய சக்தி வாய்ந்தவை எனவும் கூறப்படுகிறது. இது குறித்து நபிகள் பெருமானார் (ஸல்) “ஜம் ஜம்” எந்த எண்ணத்தில் அருந்தப்படுகிறதோ அதற்குரிய பயனைத் தரக்கூடியதாயிருக்கிறது” என இரத்தினச் சுருக்கமாக இயம்பியுள்ளார்கள். ஜம் ஜம் தண்ணீரை எவ்வளவு காலத்திற்குப் புட்டியில் அடைத்து வைத்தாலும் அது

கெடுவதுமில்லை. வாடை மாறுவதுமில்லை. இதில் தான் அதன் மகத்துவமும் அதிச சக்தியும் பொதிந்துள்ளதைக் காணுகிறோம்.

இளவல் இஸ்மாயீல் சுமார் 12 வயதை அடைந்திருந்த போது, அது சமயம் மக்காவில் வசித்து வந்த நபி இப்ராஹீம் அவர்களுக்குத் தம் ஏக புத்திரரைப் பலியிடுமாறு – குர்பானி செய்யுமாறு - இறைவன் கனவில் அறிவித்தான். இக்கனவு தொடர்ந்து மூன்று இரவுகள் நிகழ்ந்ததால் நபியவர்கள் அது இறைவனின் திட்டமான கட்டளை என உறுதி பூண்டு, விடிந்ததும் தம் உயிரன்ன புத்திரரிடம் கனவு கண்ட விஷயத்தைக் கூறினார்கள். தந்தைக்கு நிகரான இறையன்பு பூண்ட தனயரும் கனவில் பெற்ற கட்டளையைக் கடிதில் நிறைவேற்றுமாறு தந்தையை வேண்டினர். நபியவர்கள் தம் செல்வ மைந்தனை அழைத்துக் கொண்டு மக்காவுக்கு அருகிலுள்ள மினாவில் இரு குன்றுகளுக்கு இடையிலான பள்ளத்தாக்கு ஒன்றினை அடைந்து பலியை நிறைவேற்ற முனைந்த போது பலிவாள் பணிய மறுத்து விட்டது. கழுத்து அறுபடாது போயிற்று. உடனே இறைவன், நபியவர்களின் குர்பானி உளப்பூர்வமாக நிறைவேறி விட்டதாக அசரீரியால் அறிவித்து, அருகில் நின்ற ஆடொன்றை அதற்குப் பகரமாகப் பலியிடுமாறு கட்டளையிட்டான்.

**குறைஷிகள்**

அன்னை ஹாஜரா காலமானதன் பின் நபி இஸ்மாயில் (அலை) அமாலகா கோத்திரத்தைச் சார்ந்த உமரா என்ற அரபுப் பெண்ணை மணம் முடித்திருந்தார்கள். பாலஸ்தீனம் சென்று மக்கா திரும்பிய நபி இப்ராஹீம் அவர்கள் மகனைக் காணச் சென்றபோது மருமகள் வீட்டிலிருந்தாள். ஆனால் அப்பெண்ணோ மனிதரின் மேதை மரியாதை அறியா உபச்சாரமற்ற மட்டியாக இருந்தாள். இதனைக் கண்ட நபியவர்கள் மகன் வந்தவுடன், ஒரு பெரியவர் பரி மீது வந்ததாகவும் அவர் இந்த வீட்டின் வாசற்படி சரியில்லாதிருப்பதால் அதை மாற்றியமைக்குமாறு கூறிச் சென்றதாகவும் தகவல் சொல்லுமாறு பணித்துவிட்டுத் திரும்பிவிட்டார்கள்.

சிறிது நாள் கழித்து நபியவர்கள் மீண்டும் தம் மகனைக் காணவந்தபோது வீட்டிலிருந்த புதிய பெண் நபியவர்களை நலன் விசாரித்து நன்கு உபசரித்துத் தங்க வைத்திருந்தார் நபி இஸ்மாயீல் அவர்கள் வீடு திரும்பியபோது தாம் வாசற்படியை மாற்றியமைத்தது குறித்து நபி இப்ராஹீம் அவர்கள் மகிழ்வும், மனத்திருப்தியும் அடைந்திருந்ததைக் கண்டார்கள். அரபிகளில் ஜிர்ஹும் கோத்திரத்தைச் சேர்ந்த ஸைதாவென்னும் இப்பெண்மணியின் திருவயிற்றில் உதித்த சந்ததியின் எழுபதாம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள்தாம் நம் பெருமானார் நாகயத் திருமேனி (ஸல்) அவர்கள்.

அதன்பின் இபுறாஹீம் நபியவர்கள் இறைவனது கட்டளைப்படி ஆதம் நபியவர்களால் இப்பூவுலகில் முதல் வணக்க ஸ்தலமாக நிறுவப்பெற்று நூஹு நபிக்காலத்து வத்தப் பெருவெள்ளத்தால் மறைந்து போன க.ஃபத்துல்லாஹ்வை அந்த இடத்தில் அடையாளங் காட்டப்பெற்று அதனைப் புதிதாக எடுத்துக் கட்டினார்கள். இத்திருப்பணியில் நபி இஸ்மாயீல் அவர்கள் தம் தந்தைக்கு முழு உதவியாக இருந்து அக்கட்டிடத்தை கட்டி முடித்தனர். கட்டிட நிர்மாணத்தின் போது, இறைநேசச் செல்வர் இபுறாஹீம் நபியும் தனயர் இஸ்மாயீல் நபியும் “எங்கள் இறைவா! எங்கள் வித்தின் சந்ததியினரான அவர்களிடமே உன் திருவசனங்களை ஓதிக்

காண்பிப்பவராகவும், வேதத்தையும் விவேகத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களைத் தூய்மையில் வளர்ப்பவராகவுமுள்ள ஒரு தூதரை எழச் செய்வாயாக!. நிச்சயமாக நீயோ வல்லமையுடையோனும் பேரறிவு படைதோனுமாய் இருக்கின்றாய்" (2:129) என இரு கரமேந்தி இறைஞ்சி வந்தனர். அன்று முதல் தந்தையும் மகனும் க.்.பத்துல்லாஹ்வில் நியமமாக இறைவணக்கம் புரிந்து வந்தனர். இதனைக் கண்ட மக்காவிலும் சுற்று வட்டாரத்திலுமுள்ள ஏனைய மக்களும் க.்.பத்துல்லாஹ்வைத் தங்களுக்கும் வணக்க ஸ்தலமாக ஆக்கிக் கொண்டனர். அங்கு ஆண்டுத் திருவிழாக்களும் நடந்து வரலாயின. இஸ்மாயில் (அலை) 136 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து மரணித்தார்கள். இஸ்மாயில் நபியவர்களின் புதல்வர் பன்னிருவரில் தலைமகன் நாபித் ஆவார்.

இவ்வாறிருக்க, மக்கா விரிந்து மக்கள் பெருகிய போது வேற்றிடந்தேடி அதனை விட்டும் வெளியேறியவர் ஒவ்வொருவரும் அந்நகரின் புனிதத் தன்மையை மனதிற் கொண்டு அதனின்றும் ஒரு கல்லை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர். அவர்கள் குடியேறிய அவ்வவ்விடங்களில் அக்கல்லை இருத்தி க.்.பாவை இடம் வருவது போல் அதையும் சுற்றி வரலாயினர். இப்பழக்கம் காலப்போக்கில் அவர்களுக்கு விருப்பமான அல்லது உள்ளங்கவரும் கற்களை எடுத்துக் கொண்டு போய் அவற்றை வணங்கிவரும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இவ்வாறு பல தலைமுறைகளுக்குப் பின் அம்மக்கள் இப்ராஹீம் (அலை) பின்பற்றி வந்த மார்க்கத்தை மறந்து மனம் போனவாறு கற்களை வணங்கும் விக்கிரக வணக்கத்தாராக மாறி விட்டனர்.

நாபிதின் கிளையில் நாற்பதாம் தலைமுறையில் அத்னான் என்பவர் பிறந்தார். அவரின் பதினோராம் சந்ததியில் பிஹ்ர் என்பவர் பிறந்தார். இவரைத் தான் மக்கள் "குறைஷ்" பெரு வணிகர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அழைத்து வந்தனர். குறைஷ் என்பது சமுத்திரத்தில் பல மிக்க மீன் ஒன்றினுக்குரிய பெயராகும். எனவே குறைஷ்கள் என்பது வீரமறவர் என்பதையும் குறிப்பதாயிருக்கிறது. பிஹ்ரின் ஏழாம் பௌத்திரராக குஸையி கி.பி. 398ல் பிறந்தார். இவர் காலத்தில் க.்.பாவின் நிர்வாகம் மீண்டும் குறைஷிகளின் கைக்கு வந்தது. "தாருன் நத்வா" என்ற நகர மன்றத்தை மக்காவில் தோற்றுவித்த மூல புருடர் இவரேயாம். ஆண்டுதோறும் அந்நகருக்கு வரும் யாத்ரிகர்களுக்கு தேவையுள்ள தண்ணீர், உணவு மற்றும் சவுகரியங்கள் செய்து கொடுப்பது இப்பெருந்தகையின் பொறுப்பாக இருந்து வந்தது.

குஸையின் புதல்வர் அறுவரில் அப்துல் மனாப் (கி.பி. 430) இரண்டாவது மகன். அவரின் புத்திரர் அறுவரில் ஹாஷிம் (கி.பி. 464) ஒருவர். இவர் மக்காவிலும் அதற்கு வெளியிலும் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கினார். தம் மூதாதை குஸையியைப் போல் யாத்திரிகர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். அன்றியும் குறைஷிகளின் வியாபாரங்கள் ஒழுங்குற நடைபெறுவதற்கான வழிமுறைகளையும் ஹாஷிமே வகுத்தளித்தார். குறைஷிகள் வியாபாரத்திற்காகச் செல்லும் பாட்கைளில் வழிப்பறி நடவாதவாறு பல கூட்டத்தாருடனும் உடன்படிக்கைகள் செய்து கொண்டார். ரோமானியச் சக்கரவர்த்தி அபிஸீனியா மன்னர் இவர்களிடம் தூதுகள் அனுப்பிக் குறைஷிகள் அந்நாடுகள் சுங்கம் செலுத்தாது வாணிபம் செய்து வருவதற்கான சலுகைகளையும் பெற்றார். இதனால் மக்கா நகரம் வியாபாரத்தில் தழைத்தோங்கி வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது. அந்நகரம்

ஒரு பரிசுத்த ஸ்தலமாக மட்டுமின்றி வியாபாரக் கேந்திரமாகவும் வாணிபக்கூட்டங்கள் சந்தித்துத் தங்கி வணிகப் பெருமாற்றங்கள் செய்து பிரித்து செல்லும் பெருஞ்சந்தையாக விளங்கியது. மக்காவின் மக்களுக்கு வாணிபமே ஜீவனோபாயமாக இருந்தமையால் அவர்கள் குறைஷிகள் எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்தனர். ஆதிதேவாலயமாம் க.்.பாவினால் தாங்கள் பெற்றிருந்த பெருமையும் யாத்திரிகர்களின் வருகையால் அடைந்து வந்த வருவாய்களும், வாணிபக் கூட்டங்களின் நடமாட்டத்தால் அடர்ந்தேறிவந்த செல்வமும் குறைஷிகளைச் செழிப்புறச் செய்தன. இவற்றின் காரணமாக அவர்கள் தங்களை மிக்காரும் தக்காரும் இல்லையெனக் கருதி செருக்குற்று நின்றனர்.

### இரு பலிகள்

ஹாஷிமுக்குப் பெருமானார் அவர்களின் பாட்டனாரான அப்துல் முத்தலிப் (கி.பி. 496) ஏக புத்திரராக பிறந்தார். இவர் மதீனாவின் நஜ்ஜார் கோத்திர அழகியான ஸ ல்மாவுக்குப் பிறந்தவர். இவரது உண்மைப்பெயர் ஆமிர் என்பதாகும். அப்துல் முத்தலிபுக்குப் பிறவியில் நெற்றியில் நரை மயிர் இருந்ததால் மக்கள் அவரை ஷைபா என அழைத்தனர். தமது பெரிய தந்தை முத்தலிபின் பராமரிப்பில் வாழ்ந்ததால் இவர் தம்மை அப்துல் முத்தலிப் (முத்தலிபின் அடிமை) என நாமம் சூட்டிக் கொண்டார். ஹாஷிம், வியாபார நிமித்தம் யத்ரிபு சென்றிருந்த பொழுது ஸ ல்மாவைத் திருமணம் செய்து கொண்டார்.

குஸையுடைய புத்திரர் அப்துமனாப் நம்முடைய தகப்பனார் காலத்திலேயே க.்.பாவின் திருப்பணி, தண்ணீர் வழங்குதல், உபசரித்தல் முதலிய காரியங்களைக் கவனித்து வந்தார். குறை தமது மூத்த மகன் அப்துத் தாரும் இப்பணிகளைச் செய்து வர வேண்டுமென விருப்பங்கொண்டார். எனவே, தமக்குப்பின் அப்துத்தார் இப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறிச் சென்றார். அப்துமனாபும் தம் தந்தையின் எண்ணப்படி அவற்றை அப்துத்தாரிடம் ஒப்படைத்துவிட்டார்.

அப்து மனாபுக்குப்பின் அவரது மக்கள் அப்துத்தாரின் மக்களிடம் வாதாடியதில் க.்.பாவின் பாதுகாப்பு, கொடி, “தாருன் நத்வா” நிர்வாகம் ஆகியவை அப்துத்தாரின் மக்களுக்கும், தண்ணீர் வழங்குதல், யாத்திரிகர்களை உபசரித்தல் ஆகியவை அப்துமனாபுடைய புத்திரர்களுக்குமெனப் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அப்துமனாபுடைய புத்திரர்கள் தங்களுக்கிடையில் தங்கள் திருப்பணி பற்றித் திருவுளச் சீட்டுப்போட்டதில் அப்பாக்கியம் ஹாஷிமுக்குக் கிடைத்தது. இவரது ஏகபுத்திரர் அப்துல் முத்தலிப் ஏற்றுச் சிறப்பாக நடத்தி வந்தார்.

அப்போது ஹாஷிமுடைய சகோதரர் அப்துஷ் ஷம்ஸுவின் புதல்வர் உமய்யா இவற்றை அபகரிக்க எண்ணங்கொண்டு வழக்காடினார். ஆனால் குறைஷிகள் அனைவரும் தாருன் நத்வாவில் கூடிப் பேசி அத்திருப்பணிகளை அப்துல் முத்தலிபே தொடர்ந்து நடத்திவருமாறு சமரசஞ் செய்வித்தனர். எனினும், உமய்யாக்களுக்கு ஹாஷிமிகளின் மீது அழுக்காறு இருந்துகொண்டே வந்தது.

மக்காவுக்கு வரும் யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் வழங்கும் பொறுப்பும் கவுரமும் நபிகள் நாயகம் அவர்களின் பாட்டனரான அப்துல் முத்தலிபுக்கும் அவருக்கு ஐந்து தலைமுறைகளுக்கு முன்னுள்ள அவர் மூதாதையருக்கும் இருந்து வந்தது. ஆயினும்

ஜம்ஜம் கிணறு தூர்ந்து போயிருந்த இடம் எதுவென்பது யாருக்கும் தெரியாதிருந்தது. அதன் பெருமையைப் பற்றி மக்கள் பேசிக்கொள்வார்களேயன்றி, அதைக் கண்டுபிடிப்பதில் எவரும் ஆர்வம் காட்டினாரில்லை. இக்கிணற்றைக் கண்டுபிடித்தால் தமது தண்ணீர் பந்தல் தர்மத்திற்கு மிக்க உதவியாக இருக்குமே என்ற எண்ணம் மட்டும் அப்துல் முத்தலிபுக்குச் சில காலமாக இருந்து வந்தது.

ஓரிரவு, அவர் க.்.பாவுக்கு அருகாமையில் நபி இஸ்மாயீலும் அவர்களின் அன்னை ஹாஜராவும் அடக்கமாகியுள்ள அரைவட்ட வடிவமுள்ள ஹிஜ்ர் என்னும் தலத்தில் தூங்கிக் கொண்டிருக்கும்போது அமரர் ஒருவர் கனவில் தோன்றி ஜம்ஜம் கிணற்றைத் தோண்டுமாறு கட்டளையிட்டுச் சென்றார். ஆனால் அவ்வானவர் கிணறு இருக்கும் இடத்தை தெரியப்படுத்தினாரில்லை. அடுத்த இரவும், மூன்றாம் இரவும் அதே இடத்தில் அப்துல் முத்தலிப் தூங்கிக் கொண்டிருந்தபோது அவ்வானவர் மீண்டும் மீண்டும் தோன்றினார். மூன்றாம் இரவுதான் க.்.பாவின் எல்லைக்குள் குறைஷியரின் இஸாப், நாயிலா விக்கிரகங்களுக்கு மத்தியில் கிணறு இருந்த இடத்தை அவ்வானவர் அடையாளங் காட்டி, அங்கு ஓர் எறும்புப் புற்றின் மீது அண்டங்காக்கையொன்று அமர்ந்து கொத்திக் கொண்டிருக்கும் எனவும் அறிவித்துத் தெளிவுபடுத்திச் சென்றார்.

மறுநாள் காலையில் மண்வெட்டி கடப்பாரை சகிதம் அப்போது இருந்த ஒரே மகன் ஹாரிதையும் அழைத்துக் கொண்டு வானவர் அடையாளம் சொன்ன இடத்திற்கு அப்துல் முத்தலிப் சென்றார். கனவில் அறிவித்தபடி அங்கு அண்டங்காக்கை எறும்புப் புற்றின் மீது உட்கார்ந்து கொத்திக் கொண்டிருந்தது. உடனே அப்துல் முத்தலிப் அவ்விடத்தில் தமது கிணறு தோண்டும் பணியை ஆரம்பித்தார். பைத்தியக்காரத்தனமாக இவர் இவ்வேலையில் இறங்கியிருக்கிறார் எனக் கூறி மற்ற குறைஷிகள் எவரும் அவருடன் பங்கு கொள்ளவோ அல்லது உதவவோ, ஊக்கமளிக்கவோ முன்வரவில்லை. இதைக் கண்ட அப்துல் முத்தலிப், மனம் நொந்தவராக இறைவனிடம், “இறைவா! இந்தப் புனிதப் பணியில் என்னுடன் ஒத்துழைக்க எவரும் முன்வரக் காணோம், ஆனால் நீ அருள்கூர்ந்து எனக்குப் பத்துப் புத்திரர்களை அளித்து, இந்த ஜம்ஜம் கிணற்றைக் கண்டுபிடிப்பதிலும் எனக்கு வெற்றியை நல்குவாயானால், என் புத்திரர் பதின்மரில் ஒருவனை உனக்கு நான் உயிர்த்தியாகம் செய்துவிடுகிறேன்” என பிரார்த்தித்துப் பிரதிக்னை எடுத்துக் கொண்டார். இறைவனும் அவரது பிரார்த்தனை ஏற்று மொத்தம் அவருக்குப் பதினைந்து புதல்வர்களையும், ஆறு புதல்விகளையும் அளித்து ஜம்ஜம் கிணற்றையும் கண்டுபிடிக்க அருள்பாலித்தான். அன்று முதல் இன்று வரை மக்காவுக்கு யாத்திரை செல்லும் மக்களுக்கு ஜம்ஜம் தான் ‘மாஉல் ஹயாத்’தாக, உயிரூற்றாக நின்று உதவுகிறது.

தமக்குப் பத்து ஆண் மக்கள் பிறந்ததின் பின்னரே அப்துல் முத்தலிபுக்குத் தாம் எடுத்துக்கொண்ட பிரதிக்கினை நினைவுக்கு வந்தது. உடனே அதை நிறைவேற்ற உறுதிபூண்டு தம் மக்கள் பதின்மரையும் குடும்பத்தாரையும் அழைத்துக்கொண்டு க.்.பாவுக்குச் சென்றார். அங்கு பதின்மரின் பெயர்களையும் தனித்தனியாக எழுதித் திருவுளச் சீட்டுப் போட்டு எடுத்ததில், தம் அழகு மைந்தர் அப்துல்லாஹ்வின் (கி.பி 545) பெயர்தான் கைக்கு வந்தது. இவர் அப்துல் முத்தலிபின் அன்பு மனைவி பாத்திமா என்பவரின் மணி வயிற்றில் பிறந்தவர். இம்மைந்தன் மீதுதான் அவர்

அலாதியான கரிசனங்காட்டி வந்தார். திருவுளச் சீட்டில் அப்துல்லாஹ்வின் பெயர் வந்திருப்பதைக் கண்டு அங்கு கூடியிருந்த குடும்பத்தார், மக்கள் அனைவரும் கோவெனக் கதறியழுதனர். அங்கிருந்த சில நல்லவர்களும் பெரியவர்களும் அப்துல் முத்தலிபை நோக்கி, “நீர் அப்துல்லாஹ்வைப் பலியிடுவது கூடாது, ஒவ்வொருவரும் இப்படித் தம் அன்புக் குழந்தைகளைப் பலி கொடுக்க ஆரம்பித்தால் மக்களின் நிலைமை என்னாவது? அதற்குப் பிராயசித்தமாக ஒட்டகங்களை பலியிடுவதுதான் அறிவுடைமையாகும்” என மாற்றுப் பரிகாரம் கூறினர். இதனைப் பூசாரியுள்பட அங்கிருந்த அனைவரும் ஆமோதித்தனர். எனவே, அப்துல் முத்தலிபும் இப்பரிகாரத்திற்கு ஒருவாறு சம்மதித்தார்.

பின், அப்துல்லாஹ்வின் பெயரையும் ஒட்டகம் பத்தின் எண்ணிக்கையையும் தனித்தனிச் சீட்டெழுதிப் போட்டுக் குலுக்கி எடுத்தார்கள். அதிலும் அப்துல்லாஹ்வின் சீட்டே கைக்கு வந்தது. ஒட்டக எண்ணிக்கையை பத்துப் பத்தாக அதிகரித்துச் சென்று இறுதியில் நூறு ஒட்டகை என்ற சீட்டைப் போட்டு குலுக்கி எடுத்தபோது தான் ஒட்டகைச் சீட்டு கைக்கு வந்தது. அப்துல்லாஹ்வின் பெயர் வரவில்லை. கூடியிருந்தோர் அனைவரும் ஆறுதல் பெருமூச்சு விட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அப்துல்லாஹ்வின் உயிர் காக்கப்பட்டது. அப்துல் முத்தலிபு நூறு ஒட்டகங்களைப் பலியிட்டுத் தம் விரதத்தை இனிதுற முடித்து மனநிறைவு கொண்டார். அன்று முதல் அரபு நாட்டில் நரபலிக்குப் பகரமாக நூறு ஒட்டகங்களை அறுப்பது என்பது நிலை நிறுத்தப்பட்டது. இவ்வழகுசால் அப்துல்லாஹ்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைத் தந்தையாவார். இறைவனுக்காகப் பலியிட அழைத்துச் செல்லப்பட்ட நபி இஸ்மாயீல் அவர்களையும் அன்னாரின் வழித்தோன்றலான தம் அன்புத் தந்தையையும் மனதில் கொண்டுதான் பெருமானார் அவர்கள் “நான் பலியிட அழைத்துச் செல்லப் பட்ட இரு தந்தையரின் புதல்வனாக இருக்கிறேன்” எனக் கருத்தாழத்துடன் ஒருமுறை கூறினார்கள்.

### மறுவிழா முழுமதி

இளவல் அப்துல்லாஹ்வுக்கு இருபத்தி நான்கு வயதான போது, அப்துல் முத்தலிப் தம் அன்புத் திருமகனுக்கு யத்ரிபிலிருந்து வந்து மக்காவில் தம் சிறிய தந்தை உஹைபின் இல்லத்தில் தங்கியிருந்த வஹ்ப் இப்னு அப்துமனாப் இப்னு ஜஹ்ரா என்பவரின் அழகுத் திருமகள் ஆமினா என்ற மங்கை நல்லாரைப் பெண் பேசிச் சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தார். அதே சமயம் உஹைபின் புதல்வி ஹாலாவை அப்துல் முத்தலிப் தமக்குத் திருமணம் செய்து கொண்டார். ஹலரத் ஹம்ஸாவும் சபிய்யாவும் மற்றுமிருவரும் இப்பெண்மணிக்குப் பிறந்தவர்களாவர். திருமணமாகிச் சில மாதங்களில் அப்துல்லாஹ் வியாபார நிமித்தம் சிரியாவுக்குச் சொன்றார். அங்கிருந்து மக்கா திரும்புகையில் யத்ரிபிலுள்ள தம் மைத்துனர் வீட்டில் வந்து தங்கினார். அங்கு அவர் நோயுற்றுக் குணமாகாது இறைவன் நாட்டப் படி யத்ரிபிலேயே மரணமாகி நல்லடக்கம் செய்யப்பட்டது. அப்துல்லாஹ் கி.பி. 545ல் பிறந்து 571ல் இறப்பெய்தினார். நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் அதுசமயம் தம் அன்னை வயிற்றில் எட்டு மாதச் சிசுவாக இருந்தார்கள். அப்துல்லாஹ் இறக்கும் போது தம் மனைவிக்கும் மகனுக்கும் பிதுரார்ஜிதமாக விட்டுச் சென்ற சொத்துக்கள் ஐந்து ஒட்டகங்களும் சில ஆடுகளும் உம்மு ஐமன் என்னும் ஒரு நீக்ரோ பெண் அடிமையுமேயாகும். ஆமினாவின் மணி வயிறு பெற்ற மாணிக்கச்சுடர் பத்து மாதங்கள்

கழிந்ததும் யானை ஆண்டு ரபீயுல் அவ்வல் திங்கள் 12ம் நாள் கி.பி. 571 ஏப்ரல் 20, திங்கள் கிழமை அதிகாலையில் மறுவிலா தெழுந்து முழுமதி எனலாய் இப்பூதலத்தில் உதித்தது.

தாமரை மலரத் தண்தளிர் மலரத்
தழல்கனி முச்சுடர் மலர
காமுறு தமிழும் கங்கையும் மலரக்
காற்றொடு வெளியெலாம் மலர
மாமண மேனி மங்களம் மலர
மணிநபி நாயகர் இன்றே
ஆமினா என்னும் அன்னை எம்அன்னை
ஆர்தவ கர்ப்பமே மலர்ந்தார்
எண்ணெலாம் மலர எழுத்தெலாம் மலர
இன்சுவைப் பாவினம் மலர
பண்ணெலாம் மலர, பகருகவிஞ் ஞானப்
பாடெலாம் மலரவே மேலாம்
ஒண் கலையான நுண்கலை மலர
உம்மிமா நபிமணி இன்றே
பெண்ணின மணியாம் ஆமினா அன்னை
பெருந்தவ கர்ப்பமே மலர்ந்தார்!
வேதமெய்ஞ் ஞான மோனமே மலர
வியனெழில் மானுடம் மலர
சோதரம் மலர, சோபனம் மலர
சொர்க்க நன் நானிலம் மலர
சாதகம் மலர சாந்தியே மலர
ஸையிது னாநபி இன்றே
மாதருக் கரசி ஆமினா அன்னை
மாதவ கர்ப்பமே மலர்ந்தார்

எனக்கவிஞர் முகம்மது மூஸா இனிமையுறப் பாடியுள்ளார்.

பெருமானாரின் பிறப்பு ஈஸா நபியவர்களுக்குச் சுமார் 571 வருடங்களுக்குப் பின்னரும், தாவூது நபியவர்களுக்கு 1800 வருடங்களுக்குப் பின்னரும், மூஸா நபியவர்களுக்கு 2300 வருடங்களுக்குப் பின்னரும், இப்ராஹீம் நபியவர்களுக்கு 3070 வருடங்களுக்குப் பின்னரும், நூஹு நபியவர்கள் காலத்து வந்த பெருவெள்ளத்திற்கு 4490 வருடங்களுக்குப் பின்னரும், ஆதம் நபியவர்களுக்கு 6750 ஆண்டுகளுக்குப் பின்னரும் நிகழ்ந்ததாக வால்டயர் என்னும் பிரெஞ்சு சரித்திர ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**யானைப்படை**

க.்.பத்துல்லாஹ்வின் காரணமாக மக்கா வாசிகளான குறைஷிகளுக்கு ஏற்பட்டிருந்த செல்வம், செல்வாக்கு, பெருமை இவற்றைக் கண்டு பொறாமையுற்ற அபிஸீனிய மன்னரின் ஆட்சியின் கீழிருந்த யமன் மாகாணத்தின் கவர்னரான அப்ரஹா அல்அஷ்ரம் என்னும் கிறிஸ்தவர் க.்.பத்துல்லாஹ்வை இடித்துத் தரைமட்டமாக்கும் எண்ணத்தில் யானைப் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு மக்காவைத் தாக்க வந்தார். அப்ரஹாவுக்கேற்பட்ட ஆத்திரம் எதனாலெனில், யாத்திரைக்காக அரபு நாட்டு

மக்களனைவரும் மக்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்ததைத் திசை திருப்புவான் வேண்டி அவர் தனது தலைநகரான ஸன்ஆவில் மிக்க அழகான கலீஸ் என்ற கிறிஸ்தவ மாதா கேவரில் ஒன்றை நிர்மாணித்து மக்களை அங்கு யாத்திரைக்கு வருமாறு அழைப்புகள் விடுத்தார். ஆனால் அரபு நாட்டு மக்களோவெனில், மக்காவையும் அதில் இடம் பெற்றுள்ள க.்.பாவையுந்தான் புனிதமாகக் கருதினார்களேயன்றி அப்ரஹாவை மதித்து அவர் கட்டிய “கலீஸை”த் தரிசிக்க ஸ ன்ஆவின் பக்கம் முகந்திருப்பக் கூட மனங் கொண்டார்களில்லை. இதுவே, அப்ரஹாவின் பொறாமைத் தீயை மூண்டெழச் செய்து க.்.பத்துல்லாஹ்வின் மீது படையெடுக்குமாறு அவரைத் தூண்டியதாகும். ஆனால், இறைவனோ தன் இல்லத்தைக் காக்கும் முறையில் “அபாபீல்” என்ற ஒரு வகைக் குருவிகளைக் கூட்டமாக அனுப்பி அவற்றின் அலகுகளிலும் கால்களிலும் பற்றியிருந்த “ஸிஜ்ஜீல்” என்ற சிறிய கற்களைக் கொண்டு அப்ரஹாவையும் அவருத யானைப் படையையும் அழியச் செய்தான். அப்பறவைகள் உதிர்த்த கற்கள் யானைகள் மீதும் படை வீரர்கள் மீதும் பட்டு அவர்களை ஊடுருவித் துளைத்துச் சென்று மடியச் செய்தன. அபாபீல் பறவைகள் கரிய நிற உடலும், பச்சை நிறக் கழுத்தும், மஞ்சள் நிறச் சொண்டும் உடையனவாயிருந்தன. “ஸிஜ்ஜீல் கற்களில் சில ஹலரத் அலீயின் சகோதரி உம்முஹானி வீட்டில் இருந்ததைப் பார்த்ததாக இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார். இச்சம்பவம் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறப்பதற்குச் சுமார் 50 தினங்களுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிற. எனவே தான், இந்த வருடத்தை மக்கள் யானை ஆண்டு என அழைக்கின்றனர்.

### கிராம வாழ்க்கை

தந்தையைக் காணும் பாக்கியம் பெறாத தம் அன்புப் பேரனாருக்கு பாட்டனார் அப்துல் முத்தலிப், சிறப்பான விருந்தொன்றை நடத்தி மக்கள் அனைவர் முன்னிலையிலும் “முஹம்மது – புகழப் பெற்றவர்” என்னும் அழகுத் திருப்பெயரைச் சூட்டி மகிழ்ந்து மனம் பூரித்தார். அன்னை ஆமினா தன் கண்மணியை “அஹ்மது” பெரும் புகழுக்குரியவர் என்ற செல்லப் பெயரிட்டு அழைத்து அகங்குளிர்ந்தார்.

மக்காவிலுள்ள செல்வந்தர் வீடுகளில் பிறக்கும் குழந்தைகளைச் சுற்றுப் புற க்கிராமாங்களில் இருந்து வரக்கூடிய ஹவாஸின் வகுப்பைச் சார்ந்த செவிலித் தாய்மார்களிடம் ஒப்படைத்து வளர்க்கச் செய்வது அந்நாட்டுப் பழக்கமாக இருந்து வந்தது. பெருமானார் (ஸல்) பிறந்த சமயத்திலும் அது போல் தாயிப் பிரதேசத்திலிருந்து பல செவிலித் தாயாக வந்து மக்காவில் பிறந்திருந்த குழந்தைகளைப் பெற்றுச் சென்றனர். ஆனால் பாலகர் முஹம்மது ஒரு தகப்பனில்லாக் குழந்தையாக இருந்ததால் போதிய சன்மானம் கிடைக்காதெனக் கருதி எவரும் அவரை ஏற்கத் துணியவில்லை. செவிலித்தாயார் அனைவரினும் கடைசியாக ஹலீமா அஸ்ஸ.்.திய்யா பின்து அபீ துஐப் அஸ்ஸஅத் பின் பக்ர் என்ற பெண்மணி மக்காவை வந்தடைந்தார். இம்மாதரசி தம் மெலிந்த கோவேறு கழுதையில் பால்வற்றிய இளைத்த ஒட்டகையையும் இழுத்துக் கொண்டு தம் கணவர் ஹாரித் பின் அப்தில் உஸ்ஸாவுடனும் கைக்குழந்தையுடனும் வந்து சேர்வதில் காலதாமதமாகி விட்டது. அதனால், நல்ல சன்மானம் கிடைக்கக்கூடிய பணக்கார வீட்டுக் குழந்தை எதுவும் அப்பெண்மணிக்குக் கிடைக்க வாய்ப்பில்லாது போயிற்று. இதில் பாலகர்

முஹம்மதுவை ஏற்பதானால் பிரதிபலன் சரியாகக் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற தயக்கம் வேறு ஏற்பட்டது. ஆனாலும் வெறுங்கையுடன் வீடு திரும்பினால் மற்றவர்களின் நகைப்பிற்கு இடமாகுமே என்ற அச்சம் வேறு குறுக்கிட்டது. இவ்வாறான சங்கடங்களுக்கிடையில் மனதை ஒருவாறாகத் தேற்றி கணவரையும், கலந்து கொண்டு, அநாதையாம் முஹம்மதுவை, அற்புதப் பொக்கிஷத்தை, அரவணைக்க முன் வந்தார். அம்மாது நல்லாள் ஹலீமா அப்துல் முத்தலிபும் ஹலீமாவிடம், “பெண்ணே! கவலையுற வேண்டாம். இக்குழந்தையைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வருவீர். உமக்கு மற்றவர்களைப் போன்றோ, அல்லது அதிகமாகவோ நான் அன்பளிப்புச் செய்வேன். என ஆறுதல் மொழி கூறினார்.

அப்துல் முத்தலிபிடமிருந்து குழந்தையைப் பெற்ற ஹலீமா அதைத் தம் மடி மடி மீதமர்த்திப் பாலூட்ட முன் வந்தார். அது தன் செவிலித் தாயின் முகத்தைக் களிப்புடன் நோக்கிய வண்ணம் பால் சுவைக்கத் துவங்கியது. என்ன ஆச்சரியம்!. கடும் பஞ்சத்தின் காரணமாக துவண்டு வறண்டிருந்த ஹலீமாவின் மார்பகங்கள் விம்மிப் பெருத்து மளமளமவெனப் பாலைச் சுரந்தன. குழந்தை முஹம்மதுவும் ஹலீமாவின் மைந்தன் அப்துல்லாஹ்வும் வயிறு முட்டப் பாலருந்தி நிறைவு கொண்டனர். பிரயாணக் களைப்பு தீர அங்கு சற்று தூங்கி விழித்த ஹலீமாவின் கணவர் தம் கிழட்டுப் பெண் ஒட்டகையைப் பார்க்கச் சென்ற போது அதன் மடு பருத்துப் பால் நிரம்பி நின்றதைக் கண்டு ஆச்சரியமுற்றார். பின் ஒட்டகையிலிருந்து பாலைக் கறந்து கணவனும் மனைவியும் வயிரார அருந்திப் பசி தீர்ந்தனர்.

மறுநாள் காலையில் ஹலீமாவும் குழந்தை முஹம்மதுவும் கோவேறு கழுதையிலமர்ந்து மக்காவை விட்டு கிராமத்தை நோக்கிப் பயணமாயினர். களைத்துச் சோந்திருந்த அக்கோவேறு கழுதை இப்போது பீடு நடை போட்டு மற்றக் கோவேறு கழுதைகளை முந்திக் கொண்டு விரைந்து சென்றது. ஹலீமா தம் கிராமத்தை அடைந்த சில தினங்களில் அவரது இல்லம் வறுமை நீங்கி சுபிட்சம் பெற்றுத் திகழ்ந்தது. கால்நடைகள் பெருகின. உணவுப் பொருட்கள் குவிந்தன. குடும்பம் மகிழ்ச்சியில் திளைத்தது. ஆறு மாதத்திற்கொரு முறை ஹலீமா, பாலகர் முஹம்மதுவை மக்காவுக்கு அழைத்து வந்து அவரது தாயார், பாட்டனார் இவர்களிடம் காட்டிச் செல்வது வழக்கம். ஹலீமாவிடம் தம் குழந்தை செழுமையுடன் வளர்ந்து வருவதைக் கண்டு அன்னை ஆமினாவும் உளம் பூரித்தார்.

இவ்வாறாக, ஆண்டுகள் மூன்று உருண்டோடிய பின் ஹலீமா, பாலகர் முஹம்மதுவுக்குப் பால்குடி மறக்கடித்து அன்னை ஆமினாவிடம் ஒப்படைத்துச் செல்ல அழைத்து வந்தார். எனினும், அழகு முஹம்மதுவை அன்னையிடம் விட்டுச் செல்ல மனமில்லாது ஹலீமா ஏக்கமுற்று நின்றாக அவரது ஏக்கத்தைப் போக்கும் வகையில் மக்காவில் அது போழ்து ஏதோ தொத்து நோய் பரவியிருந்தது. இதனால் அன்னை ஆமினா குழந்தைனயத் திரும்பவும் ஹலீமா வசமே ஒப்படைத்து மேலும் சிறிது காலம் வைத்துப் பாதுகாத்து வரச்சொன்னார். பெரு மகிழ்ச்சியடைந்த ஹலிமா பேரருள் பெ்ற பாலகர் முஹம்மதுவைத் தாம் தேடக் கிடைக்காத தங்கமாக அள்ளியணைத்துக் கிராமம் திரும்பினார். அங்கு மேலும் இரண்டாண்டுகள் முஹம்மதுவைச் சீரும் சிறப்புமாகத் தன் மக்களுடன் வைத்து வளர்த்து ஐந்து வயது பூர்த்தியானபோது அன்னை ஆமினாவிடம் கொண்டு வந்து ஒப்படைத்துச் சென்றார். தமக்கும் பாலூட்டி வளர்த்த மாதரசி ஹலீமாவின் மீ பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அன்பும் பாசமும் என்றும் பசுமையாகவே இருந்து வந்தது.

ஹலீமா வாழும் ஹுனைன் பிரதேசத்தைச் சேர்ந்த அரபு மக்கள் கலப்பற்ற சுத்தமான அரபுமொழி பேசுபவர்கள், இவர்களின் பேச்சு இனிமையாகவும், எளிமையாகவும், திறமையாகவும் , செம்மையாகவும், ஆழமாகவும் இருக்கும் தமது குழந்தைப் பருவத்தின் ஐந்து ஆண்டுகளைப் பெருமானார் அவர்கள் அப்பிரதேசத்து பனூ சஅத் வம்சத்து மக்களிடையே வாழ்ந்து கழித்ததின் காரணமாக, எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருந்தும், அவர்கள் மக்கா வாழ் மக்களை விட மிக்கத் திறமையாகவும், செம்மையாகவும், திருத்தமாகவும், கவர்ச்சியாகவும் அரபி மொழி பேசும் ஆற்றல் பெற்று திகழ்ந்தார்கள். இஸ்லாம் அரபு நாட்டில் பரவுவதற்கு அண்ணலார் பெற்றிருந்த மொழி சிறப்பும் ஒரு முக்கிய காரணம் என்று சரித்திர ஆசிரியர் பலர் எடுத்துக் கூறுகின்றனர். “பொருட்செறிவு, விரிவாக விஷயங்களை வெளியிடும் பேச்சு வன்மையுடன் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். உங்களிடை நான் மிகவும் அதிகமான நாவன்மையவன். பிறப்பால் நான் குறைஷி குலத்தை சேர்ந்தவன். எனது நாவு ஹவாஸின் கூட்டத்தாரில் ஓர் உட்பிரிவினரான பனூ ஸ அதின் நாவாகும்” என நபிகள் கோமான் தன் தோழர்கள் மத்தியில் நவின்றுள்ளார்கள்.

சுத்தமான காற்றும், ஆரோக்கியமான சூழல்களும் கொண்ட கிராமப்புறத்தில் வாழ்ந்த காரணத்தால் பாலகர் முஹம்மது அழகிய தோற்றமும், உடற்கட்டும் ஆரோக்கியமும் பெற்றவராக விளங்கினார்கள். அன்றியும் தம் மைந்தர் திருத்தமாகவும் அழகாகவும் அரபு மொழி பேசுவதைக் கண்ட அன்னை ஆமினா அளவற்ற பரவசமுற்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

**அநாதை நிலை**

சிறிது காலஞ் சென்று, செல்வ முஹம்மதுவை அழைத்துப் போய் யத்ரிபில் வசிக்கும் தம் உற்றார் உறவினரிடம் காண்பித்து வரவும், தனது அன்புக்கணவர் அப்துல்லாஹ்வின் சமாதியைத் தரிசித்து வரவும் அன்னை ஆமினா எண்ணங்கொண்டார். எனவே, தமது பணிப்பெண்ணான பரகா என்ற உம்மு ஐமனையும் பாலகர் முஹம்மதையும் அழைத்துக் கொண்டு அப்துல் முத்தலிபிடம் விடைபெற்று யத்ரிபுக்குப் பயணமானார். அங்கு சென்று தம் உற்றார் உறவினர்களைச் சந்தித்து உரையாடி நலம் கேட்டுத் தம் மாணிக்க மைந்தர் முஹம்மதுவையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். தனயனை அழைத்துச் சென்று, தம் கணவர் நோயுற்றுக் காலமான தம் சகோதரன் இல்லத்தையும் காண்பித்தார். தாயார் சொன்ன செய்திகளும் அடையாளம் காட்டிய இடங்களும் பாலகர் முஹம்மதுவின் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணியெனப் பதிந்து என்றும் நினைவில் நின்று வந்தன.

ஒருமாத காலம் யத்ரிபில் தங்கிய பின்னர், அன்னை ஆமினா தம் பாலகரையும், பணிப்பெண்யையும் அழைத்துக் கொண்டு உறவினரிடம் பிரியா விடை பெற்று மக்காவை நோக்கிப் பயணமானார் பயணம் தொடர்ந்த சில தினங்களில் பயணிகள் மூவரும் யத்ரிபுக்கும் மக்காவுக்கும் இடையிலுள்ள அபுவா என்ற சிற்றூரை அடைந்தனர். இறைவனது நாட்டத்தை என்னென்போம்! அன்னை ஆமினா அவ்விடத்தில் மீளா நோயுற்று தம் இருபத்தாறாம் பிராயத்தில் இறைவனடி சேர்ந்தார்.

பாலகர் முஹம்மது தமது ஆறாண்டு வாழ்விலேயே அருமைத் தந்தையும், அன்புத் தாயுமற்று அநாதையாகி நின்ற அவலநிலையை என்னென்போம்! இந்நிலையைத் தாங்களே சுதாவில் அனுபவித்து அறிந்ததின் காரணமாகவே பிற்காலத்தில் பெருமானார் அவர்கள் அநாதைகள் மீது அளவற்ற கருணையுற்று ஆதரவளித்து வந்தார்கள்.

அன்னை ஆமினாவை அப்வாவில் நல்லடக்கம் செய்து விட்டு பணிப்பெண் உம்மு ஐமன் பாலகர் முஹம்மதை அழைத்துக் கொண்டு மக்கா நகர் வந்து சேர்ந்தாள். நடந்த விபரங்களைப் பாட்டனார் அப்துல் முத்தலிபிடம் எடுத்துரைத்து குழந்தையை அவரிடம் ஒப்படைத்தாள். இளம் வயதில் பெற்றோரை இழக்குமாறு பேரர் முஹம்மதுவுக்கு நேர்ந்த அபாக்கிய நிலையை எண்ணி அப்துல் முத்தலிப் அளவற்ற துயரமும் வேதனையுமடைந்து அழுது கண்ணீர் வடித்தார்.

பிஞ்சுப் பருவத்தில் பெற்றோரைப் பறிகொடுத்துத் திக்கற்ற நிலையிலிருந்த பேரரை அப்துல் முத்தலிப் மிக்கப் பரிவோடும் பாசத்தோடும் வளர்த்து வந்தார். இரண்டு ஆண்டுகள் உருண்டோடின. நூற்றுப்பத்து வயதைக் கடந்து நின்ற அப்துல் முத்தலிப் இப்போது நோயுற்றார். தமது வாழ்நாள் முடிவெய்துகிறது என்பதை உணர்ந்தார். பாலகர் முஹம்மதை யாருடைய பாதுகாப்பில் ஒப்படைத்துச் செல்வது என்பது பற்றிப் பலவாறு சிந்தித்தார். தாமே ஒரு முடிவெடுப்பதை விடத் தம் மக்களைக் கலந்து செய்வதே நல்லதென அவரது மனம் துண்டியது. அனைவரையும் அழைத்து வரச் செய்து பேரரது பிற்காலம் பற்றிய பிரச்சினையை அவர்கள் முன்பு வைத்தார். பணக்கார பெரிய தந்தையான அபூலஹப் என அழைக்கப்படும் அப்துல் உஸ்ஸாவும் ஏழைப் பெரிய தந்தையான அபூதாலிபும் தம் தம்பியின் புதல்வரைப் போற்றி வளர்க்கப் போட்டியிட்டனர். ஆனால், பாட்டனாரும் பேரரும் ஏழையாகவிருந்த அபூதாலிபையே உவந்தேற்றுக் கொண்டனர். அப்துல் முத்தலிப் கி.பி. 579ல் மரணமடைந்தார். அரபு நாட்டு வள்ளலும் பரோபகாரியுமான ஹாத்திம் தாயும் இதே ஆண்டில் காலமானதாகச் சொல்லப்படுகிறது.

## பெரிய தந்தை அபூதாலிப்

அப்துல் முத்தலிபுக்கு நான்கு மனைவியரிந்தனர். அவர்கள் மூலம் அவருக்குப் பதினைந்து ஆண்களும், ஆறு பெண்களும் பிறந்தனர். இவர்களில் ஜுபைர், அபூதாலிப், அப்துல்லாஹ் ஆகிய மூன்று ஆண்களும், ஐந்து பெண்களும் மக்ஜூமி வமிசத்தைச் சேர்ந்த அம்ரு என்பவரின் புதல்வி பாத்திமாவின் வயிற்றில் பிறந்தவர்கள். எனவே அபூதாலிப் தம் உடன் பிறந்த தம்பி மகன் முஹம்மதுவைத் தமது சொந்தக் குழந்தைகளினும் அதிகப் பிரியமாகப் பேணி வளர்த்து வந்தார். அவரது மனைவி பாத்திமாவும் அவ்வாறே தம் சொந்தக் குழந்தைகளினும் மேலாக அன்பு பாராட்டினார். இதனால், பெற்றோரில்லா ஏக்கம் பெருமானார் அவர்களுக்கு ஓரளவு குறைந்திருந்தது. அபூதாலிப் நேர்மையானவராகவும் திகழ்ந்தார்.

சிறுவன் முஹம்மதுவுக்குப் பன்னிரண்டு வயதாக இருந்த பொழுது அபூதாலிப் வியாபாரத்துக்காக சிரியா செல்ல நேர்ந்தது. பயண ஏற்பாடுகள் நடைபெறுவதைக் கண்ட இளைஞர் தாமும் பெரிய தந்தையுடன் பிரயாணம் செய்து வர எண்ணங்கொண்டார். தம் உள்ளக் கருத்தைப் பதனமாக வெளியிட்டுக் காட்டினார்.

அதனைச் செவியேற்ற அபூ தாலிப் தம்பி மகனைத் தம்முடன் வர அன்புள்ளங் கொண்டு அனுமதித்தார்.

சிரியாவில் புஸ்ரா என்னும் இடத்தில் பஹீரா என்ற பெயருடைய கிறிஸ்தவப் பாதிரி ஒருவர் இருந்தார். அவர் சிறுவர் முஹம்மதுவின் அங்க அடையாளங்களைக் கூர்மையாக நோக்கி, வருங்கால தீர்க்கதரிசி இவர்தான் என்பதை உறுதி செய்து கொண்டு, அபூதாலிபிடம், “இந்த இளவலுக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது, இவரை நக்கு கண்காணித்து வளர்த்து வாருங்கள். யூதர்கள் இவரை இன்னாரென்று அறிந்தால் உயிராபத்து விளைவிக்கவும் எத்தனிப்பர். எனவே, வந்த காரியத்தை விரைவில் முடித்துக் கொண்டு தாமதியாது ஊர் திரும்புங்கள்” என எச்சரித்தார் அபூதாலிபும் அவ்வாறே வேலைகளை விரைவில் முடித்துக் கொண்டு தம் தம்பி மகனுடன் கடிதில் மக்கா வந்து சேர்ந்தார். இந்த வியாபாரத்தில் அபூதாலிபுக்கு எப்போதும் கிடைப்பதை விட அதிகமான இலாபம் கிடைத்தது.

ஏந்தல் நபி இளம் பிராயத்திலேயே வாணிபம் செய்ய முற்பட்டுவிட்டார்கள். தங்களிடம் பணமில்லாதிருப்பினும் பொருளுள்ளவர்களுடன் கூட்டுச் சேர்ந்து சிறமையுடன் வியாபாரம் செய்து இலாபத்தில் சமபங்கு அடைவார்கள்.

முஹம்மது சிறுவராயிருந்தபோது தம் பெரிய தந்தையின் ஆடுகளை மேய்ப்பது வழக்கம். பெரிய தந்தைக்குத் தாம் ஒரு சுமையாகத் தோன்றக்கூடாது என்பதற்காக மற்றவர்களின் ஆடுகளைக் கூலிக்கும் மேய்த்து வந்தார்கள். ஆடுகளை மக்காவுக்கு வெளியேயுள்ள கராரீத் என்னும் மைதானத்தில் மேயவிட்டுச் சிறுவர் முஹம்மது சிந்தனையில் மூழ்கியிருப்பார்கள். மற்ற ஆடு மேய்க்கும் சிறுவர், அவரைத் தங்களுடன் விளையாட வருமாறு அழைப்பர். அதற்கு முஹம்மது, “நாம் விளையாடித் திரிவதற்காகப் படைக்கவில்லையே! வேறு ஏதோ உன்னத காரியத்திற்காக வன்றோ படைக்கப்பட்டுள்ளோம்!” எனப் புத்திசாலித்தனமாக பதில் கூறி விளையாடச் செல்ல மறுத்துவிடுவார். எனினும், வாலிபத்தை எய்தியக்கால் அவர்கள் தற்காப்புக்கான குதிரைச் சவாரி, ஓட்டப் பந்தயம், வாள்வீச்சு, மல்யுத்தம், அம்பெய்தல் போன்றவற்றில் ஆர்வமுடன் பங்கு கொண்டார்கள்.

**அல் அமீன்**

வாலிபத்திலேயே பெருமானார் அவர்கள் நேர்மையுடன் நடந்து, சத்தியத்தைக் கடைப்பிடித்து, வாக்குத் தந்தங்களை வாய்மை தவறாது நிறைவேற்றுபவராகவும், அமானிதங்களை அக்கறையுடன் காத்து ஒப்படைப்பவராகவும் இருந்து வந்தார்கள். எனவே, ஒழுக்கத்தின் உயர் குன்றான அவர்களை மக்காவிலுள்ள மக்கள் அனைவரும், “அல் அமீன்” நேர்மையாளர் என்னும் சிறப்புப் பெயரிட்டு அழைத்து வந்தனர்.

அன்றைய மக்காவில் நோக்குமிடமெல்லாம் குடியும், கூத்தியும், கொலை, களவு, சூதும், இழைந்து கொண்டிருந்ததின் நடுவில் பெருமானார் அவர்கள் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகப் பிரகாசித்து எவ்விதத் தீய செயல்களிலும் ஈடுபடாமல் தங்களைக் காத்துக் கொண்டார்கள். அன்றியும், எந்த விக்கிரகத்தின் எதிரிலும் அவர்கள் தலை சாய்ந்தறியார்கள். அவற்றிற்காகப் பலியிடப்பட்ட மிருகங்களின் இறைச்சியையோ,

பிரசாதம் போன்ற படையல்களையோ ருசி பார்த்ததும் கிடையாது. இவ்வாறு வாழ்க்கையில் அவர்கள் தூய்மை காத்து நின்றார்கள்.

பெருமானாருக்குப் பதினாறு வயதாக இருந்தபோதே அவர்கள் மக்கள் நலன் காக்கும் பரோபகாரக் காரியங்களில் ஈடுபாடு கொண்டு பணியாற்றி வந்தார்கள். மக்காவில் அப்போது சீர்திருத்தக் கருத்துக் கொண்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வலியாரின் வன்முறைகளுக்கும் வஞ்சகச் செயல்களுக்கும் இலக்காகி நிராதரவாக நிற்கும் எளியார்களுக்கு உதவிடும் வகையில் “ஹில்புல் புளூல் (கி.பி. 595) என்றதொரு நற்பணி மன்றத்தைத் தோற்றுவித்து அரும்பணி புரிந்து வந்தனர். இதில் நம் அண்ணல் நபியவர்களும் அன்று அங்கம் வகித்து நலிவுற்ற மக்களுக்கு நன்மைகள் பல புரிந்தார்கள்.

எற்றமிகு ஏந்தல் நபி இறை தூதராவதற்கு – நுபுவ்வத்துக்கு ஏழெட்டு ஆண்டுகட்கு முன்பு, அப்துல்லாஹ் பின் அபில்ஹமா என்னும் நண்பரொருவர் ஒரு பேரத்தின் போது பணம் எடுத்து வருவதாகக் கூறி அவர்களை ஓரிடத்தில் நிற்க வைத்து விட்டு சற்று நேரத்தில் திரும்பி விடுவதாகக் கூறிச் சென்றவர் அதனை மறந்து திரும்பி வராதிருந்து விட்டார். மூன்று தினங்கள் வரை பெருமானார் அங்கு அவருக்காகக் காத்து நின்றார்கள். நான்காம் நாள் அந்நண்பர் திடுகூறாக அவ்வழியே செல்லும்போது பெருமானாரைக் கண்டு திடுக்கடும் வெட்கமுமுற்று மன்னிப்புக் கேட்டு நின்றார். பெருமானார் வெறுப்புணர்ச்சி சிறிதுமின்றி, “என் செய்வது? எனது சொல்லைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?” என்று மட்டும் குறிப்பிட்டார்கள்.

**திருமணம்**

மக்க மாநகரிலேயே பெரும் செல்வச் சீமாட்டியாகவும், வர்த்தகத் திலகமாகவும், ஒழுக்கத்தின் குன்றாகவும், பண்பில் சிறந்தவராகவும் வாழ்ந்தார். நாற்பது பயதை எட்டிய கதீஸா நாச்சியார் என்னும் மாது சிரோமணி, இவர் முன்பு இரு கணவருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானவர். எவ்வளவு தான் திறமைசாலியாக இருப்பினும் ஒரு பெண் தனது திரண்ட செல்வத்தையும் பெருங்கொண்ட வியாபாரத்தையும் பொறுப்பு மிக்க ஓர் ஆண் மகனின் துணையின்றி எவ்வாறு கட்டுக்கோப்புடன் நன்கு நிர்வகிக்க முடியும்? மக்காவிலிருந்து சரக்கு ஏற்றிய வணிக ஒட்டகக்கூட்டம் ஆயிரம் புறப்பட்டால் அதில் பாதிக்கு மேல் கதீஜா நாச்சி யாரைச் சேர்ந்ததாக இருக்கும் என்றால், அம்மாது நல்லாரின் பெருமிதமான வியாபாரத்தையும் குவடு முட்டிய செல்வத்தையும் நாம் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். எனவே, தமது திரண்ட செல்வத்தையும், வியாபாரத்தையும், நிருவாகம் செய்வதற்கு அவர் தகுதியும், திறமையும் நாணயமும், அனுபவமுள்ள ஓர் ஆண்மகனைத் தம் மனத்தால் தேடிக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. அவரைத் தம் பணியாளராகவல்லாமல் தமக்கே உரியவராக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்பதும் அவரது பெரு விருப்பமதாக இருந்து வந்தது. கதீஜா நாச்சியாரின் கூரிய பார்வையில் முஹம்மது என்னும் இளவல் தான் அதற்கும் முற்றும் பொருத்தமுடையவர் எனப்பட்டது. அவ்வாலிபரின் திறமை, நாணயம், சொல்லுறுதி, கண்ணியம் இவற்றையெல்லாம் தம் உறவினர் குஸைமா இப்னு ஹகீம் மூலம் கேட்டறிந்தார். உடனே ஆளனுப்பி வாலிபர் முஹம்மதுவை வரவழைத்துத் தமக்காக சிரியா சென்று வியாபாரம் செய்து வருமாறு கேட்டார். பெரிய தந்தை அபூதாலிபை மேவிய பின் இளவல் முஹம்மது, கதீஜா நாச்சியாரிடம் சிரியா சென்று வர

ஒப்புதலளித்தார். அது சமயம் புறப்பட்ட வாணிபக் கூட்டத்துடன் கதீஜா நாச்சியாரின் சரக்கேற்றிய ஒட்டகங்கள் இளைஞர் முஹம்மதுவின் தலைமையில் அணிவகுத்துச் சிரியா நோக்கிப் பயணமாயின. கதீஜா நாச்சியார் தமது நம்பிக்கைக்குரிய இளம் பணியாளான மைசராவையும் உடன் செல்லுமாறு அனுப்பி, அவரை முஹம்மதுவுக்கு உதவியாக இருந்து வருமாறும், அத்துடன் அவரின் வியாபாரத் திறமைகளையும் மற்ற நடவடிக்கைகளையும் அறிந்து வருமாறும் பணித்தார்.

கட்டழகர் முஹம்மது தாம் ஏற்றிச் சென்ற சரக்குகளையெல்லாம் சிரியாவில் நல்ல முறையில் அதிக லாபத்திற்கு விற்பனை செய்து. வேறு வித சரக்குகளையும் கொள்முதல் செய்து கொண்டு மைசராவுடன் மக்கா நோக்கிப் பயணமானார். அப்போது நண்பகல், வெய்யில் கடுமையாகக் காய்ந்த காலம். வழியில் காளையர் முஹம்மது மீது கதிரவன் வெப்பம் தாக்கா வண்ணம் வானவர் இருவர் சிறகு விரித்து தண்ணிழல் பரப்பி வந்ததைக் காண மைசரா ஆச்சரியமுற்றார். மேகம் நிழல் பரப்பி ஊர்ந்து வந்ததாகவும் கூறுகின்றனர். மக்காவை அடைந்ததும் முஹம்மது நேரே கதீஜா நாச்சியாரை அண்மி தாம் சிரியாவில் செய்து வந்த வியாபாரத்தின் கணக்குகளை அணு பிசகாது ஒப்பவித்து, வியாபாரச் சரக்குகளையும், மீதப்பணத்தையும் ஒப்படைத்து விட்டு, இல்லம் திரும்பினார். மைசராவும், முஹம்மதுவின் வியாபார சாமர்த்தியத்தையும், பேரங்களின் போது உரையாடும் இனிய பண்பினையும் அவரில் தான் கண்ட அதிசயச் சிறப்புகளையும் ஒன்று விடாது தம் எஜமானியிடம் எடுத்துரைத்தார். கதீஜா நாச்சியார் எல்லாவற்றையும் காதாரக் கேட்டு மகிழ்ந்து தம் உள்ளங்கவர் முஹம்மதுவுக்கு வாக்களித்த தொகைக்கு மேல் இரட்டிப்பாகக் கொடுத்து மற்றும் பல பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

கட்டிளங்காளையரான முஹம்மதுவின் நடையுடை பாவனை, மேதை, மரியாதை, கம்பீரம் ஆகிவனைத்தும் ஒன்று சேர்ந்து கதீஜா நாச்சியாரின் உள்ளத்தைக் கவ்வி, அதில் ஒருவித கவர்ச்சியை, பற்றை, பாசத்தை, காதலை, ஏக்கத்தை வளர்த்து விட்டன. இது அப்பெண்ணரசியிடம் ஒரு நீக்கவியலா ஏக்கமாக, காதல் கனலாக மாறி விட்டது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பின், "அடைந்தால் முஹம்மதுவை அடைவேன். இன்றேல் விதவையாகவே இருந்து விடுவேன்". என்ற சங்கல்பத்தினைப் பூண்டு விட்டார். கதீஜா நாச்சியார் அவர் விதவையானபோது பல குறைஷிச் செல்வந்தர்களும், தாஹிரா – பரிசுத்தமானவர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற அப்பெண்கள் நாயகியை அடைவதற்குப் பெருந்தவம் புரிந்தனர்.

இவர்களெல்லாம் தங்கள் மனக்கோரிக்கையைப் பலகால் விடுத்தும், அவற்றையெல்லாம் மறுத்து ஒதுக்கி விட்டார் அம்மாது நல்லார். இப்போது தம் உள்ளக்கிடக்கையை நபீஸா பின்து முநய்யா என்ற பெண்மணியின் மூலமாக முஹம்மது அவர்களுக்கு வெளியிட்டுக் காட்டலானார். நபீஸா கொண்டு வந்த நற்செய்தியைத் தம் பெரிய தந்தை அபூதாலிபிடம் தெரிவித்து, அவரது ஆலோசனையை அனுமதியையும் வேண்டி நின்றார். அவரும் தம் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர்களுடன் கலந்து, ஏகோபித்த சம்மதத்தினை நபீஸாவிடம் கூறியனுப்பினார். திருமண ஏற்பாடுகள் சிறப்பாகவும் துரிதமாகவும் நடைபெற்றன. குறித்த நாளன்று பெருவிருந்து நடத்திப் பெருமானாருக்குக் கதீஜா நாச்சியாரை மக்காவின் பிரபலஸ்தர்கள் முன்னிலையில் விமரிசையாகத் திருமணம்

செய்விக்கப்பெற்றது. கதீஜா நாச்சியாரின் தந்தை குவைலித் அப்போது காலமாகி விட்டதால், அவரின் சிறிய தந்தை அம்ரிப்னு அஸத் முன்னின்று இத்திருமணத்தை நடத்திக் கொடுத்தார். திருமண நிச்சயதார்த்தம், மற்ற மாப்பிள்ளை சார்பான காரியங்களைப் பெருமானாரின் சிறிய தந்தை ஹம்ஸா முன்னின்று நடத்தி வைத்தார். பெண்ணுக்குரிய மஹராக 500 தினார்கள் (தங்க நாணயங்கள்) 20 பெண் ஒட்டகைகள் எனவும் கூறப்படுகிறது. கொடுக்கப்பெற்றன. அப்பொழுது அண்ணலாரின் வயது 25 ஆகவும் கதீஜா பிராட்டியாரின் வயது 40 ஆகவும் இருந்தது.

பெருமானாரின் நேசர்களையும், குடும்பத்தாரையும் கதீஜா நாச்சியார் மிகுந்த அன்புடனும், உவப்புடனும் வரவேற்று உபசரித்து வந்தார். விசேஷ அழைப்பின் மீது திருமணத்திற்கு வருகை தந்த அண்ணலாரின் செவிலித் தாய் ஹலீமாவை கதீஜா நாச்சியார் நன்முறையில் உபசரித்துப் பெருமைப்படுத்தினார். ஊர் திரும்பிய ஹலீமாவுக்குப் பெருமானார் தம்பதிகள் நாற்பது ஆடுகளையும் ஓர் ஒட்டகையையும் அது சுமக்கும் அளவு சாமான்களையும் அன்பளிப்புச் செய்து அனுப்பி வைத்தனர். வறுமைப்படும் போதும் பஞ்ச காலங்களிலும் ஹலீமா, பெருமானாரிடம் வந்து அன்பளிப்புப் பெற்றுச் செல்பவராய் இருந்தனர்.

கதீஜா நாச்சியாருக்குப் பெருமானார் மூலம் காஸிம், அப்துல்லாஹ் (தாஹிர்) என்ற இரண்டு ஆண்களும், ஜைனப், ருகையா, உம்மு குல்தூம், பாத்திமா என்ற நான்கு பெண்களும் பிறந்தனர். ஆண் மக்கள் இருவரும் குழந்தைப் பருவத்திலேயே காலமாகிவிட்டனர்.

இத்திருமணத்தின் வாயிலாகப் பெருமாட்டி கதீஜா நாச்சியாரின் திரண்ட செல்வம் அண்ணலாரின் ஆதிக்கத்தில் வந்துற்றது. அதனை ஏழைகள், ஆதரவற்றோர், இயலாதோருக்கு வழங்கித் தமது ஈகைத்தன்மை, தயாள குணம், இரக்கச் சிந்தனை முதலிய கல்யாண குணங்களை நிதர்சித்துக் காட்டும் பெரு வாய்ப்பு பெருமானாருக்குக் கிட்டியது. மக்கள் மத்தியில் அவர்களது மதிப்பும், கண்ணியமும், செல்வாக்கும் முன்னிலும் பன்மடங்கு உயர்ந்தன. அவையன்றி பெருமானார் தமது ஆத்மசோதனை, தவம், பிரபஞ்ச ஆராய்ச்சி, இறைவனை அறியும் முயற்சி முதலிய பாரமார்த்திக விஷயங்களில் ஈடுபடுவதற்கான உந்து தலையும் ஓய்வையும் நிம்மதியையும் கதீஜா பிராட்டியாரின் சௌபாக்கிய நிலை அளிப்பதாயிருந்தது.

**இறைதாகம் :**

இவ்வாறிருந்து வருங்கால், தாம் பிறந்து வாழும் மக்கமா நகரில் விக்கிரக வணக்கங்களும், மனதுக்கு ஒவ்வாப் பழக்க வழக்கங்களும், அனாச்சாரங்களும் மலிந்திருப்பதைப் பெருமானார் கண்டார்கள். மக்கள் அறியாமையில் உழன்றனர். மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கியிருந்தனர். ஒற்றுமையற்று ஒன்றுக்கும் உதவாத காரியத்திற்கெல்லாம் ஓயாச் சண்டையிலீடுபட்டு வந்தனர்! விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கோ, சகிப்புத் தன்மையோ அவர்களிடம் சிஞ்சித்தும் இல்லாதிருந்தது. மது அருந்துவதும், மங்கையரை முயங்குவதும், சூதாடுவதும், பந்தயம் விடுவதும், அவர்களின் அன்றாட அலுவல்களாக அமைந்திருந்தன. பொதுவாக, அரபு நாடு எங்கினும் மக்கள் இந்தவிதமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.

நேர்மையும் பரிசுத்தத் தன்மையுமுள்ள உள்ளம் படைத்த அண்ணலார் மக்களின் இந்த அநாகரிக வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தார்கள். மனம் நொந்தார்கள். துணக்குற்றார்கள். இத்தீமைகளைக் களைந்து அகற்ற வழி காணுவதில் சிந்தையைச் செலுத்தினார்கள். நேர்மை, திறமை, அறிவு, ஊக்கம் இவற்றை மட்டும் துணையாகக் கொண்டு தீயவர்களை நல்லவர்களாக்கி விடுவது முடியாத காரியம் என்பதையும், மனிதனைப் படைத்துள்ள மகாசக்தியான அவ்விறைவனின் துணையும் அவனது அருளும் தேவை என்பதையும் உணர்ந்தார்கள்.

விக்கிரக வணக்கத்தை அக்காலத்தில் வெறுத்த பலர் இப்ராஹீம் நபியுடைய மார்க்கத்தை விளக்கம் காணுவதில் முயன்று வந்தனர். இவர்கள் "ஹனீப்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். இந்த "ஹனீப்"கள் ஒரு சமூகமாக கூட்டத்தாராக – அமையாமல், அவரவரும் தத்தம் மன சாட்சியும் அறிவாராய்ச்சியும் காட்டிய வழியில் உண்மைத் தெய்வத்தை கண்டறிவதில் முயன்று நின்றனர். அண்ணலாரும் இத்தகைய "ஹனீப்"களில் ஒருவராக இறைவனைப் பற்றிய சத்திய சோதனையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

எனவே, அந்த மகா சக்தியின் உதவியையும், கருணையையும், வழிகாட்டுதலையும் நாடியவர்களாக மக்கா நகருக்கு வடகிழக்கே சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள "ஹிரா" என்னும் குன்று நோச்கிச் சென்று அதிலுள்ள குகையொன்றில் தனித்திருந்து இறைவனின் தியானத்திலும், சிந்தனையிலும் ஈடுபட்டு வந்தார்கள். நோன்பிருந்தும் தவம் செய்தார்கள். தமது தியானம், வணக்கம், நோன்பு இவற்றிற்கு உற்றகாலமாக ரமளான் மாதத்தைப் பிரதானமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். ரமளான் மாதங்களில் ஹிராக் குகைக்குச் சென்று தனித்திருந்து தியானம் புரிவது பாட்டனார் அப்துல் முத்தலிபின் வழக்கமாகவும் இருந்து வந்தது எனவும் கூறுகின்றனர். ஹிரா குகைக்குத் தாங்கள் மட்டும் தனித்துச் செல்வதன்னியில், தம் அன்பு மனைவி கதீஜா நாச்சியாரையும் குழந்தைகளையும் ஓரோர் சமயம் அழைத்துச் செல்வதும் உண்டு. இவ்வரும் தவத்தினைப் பெருமானார் ஓராண்டு மட்டுமே நடத்தினார் களென்பதில்லை. திருமணமான பின்னர் சுமார் பத்தாண்டு காலமாக இவ்வாறான கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

**ஹஜருல் அஸ்வத்**

கி.பி. 605ம் ஆண்டு பெருமானாருக்கு அப்போது 35 வயது. இறைவனின் இல்லமான க.்.பத்துல்லாஹ்வைப் புதுப்பித்துக் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பணியை மக்காவின் நான்கு பிரதான கோத்திரத்தாரும் மேற்கொண்டு செய்து வந்தனர். கட்டுமான வேலை ஆள் மட்டத்துக்கு உயர்ந்தவுடன், அதில் இப்ராஹீம் நபியவர்கள் பதித்திருந்த "ஹஜருல் அஸ்வத்" என்னும் புனிதக் கருங்கல்லை அது முன்பிருந்த இடத்தில் எடுத்து வைத்துக் கட்ட வேண்டியதாயிருந்தது. அக்கல்லைத் தூக்கிக் கொண்டு போய் அந்த இடத்தில் வைக்கும் பாக்கியம் தங்களையே சாரவேண்டுமென எண்ணியவர்களாய், அந்நான்கு கோத்திரத்தாரும் தனி உரிமை கொண்டாடி ஐந்து நாட்கள் வரை வழக்காடினர். விவாதம் முற்றி வன்செயல் மூளும் நிலை ஏற்பட்டது. அப்போது சட்டென்று அங்கிருந்த முதியவரான அபூ உமய்யா பின் முகீரா அல்மக்ஜூமி என்பவர் அவர்களை இடைமறித்து "நாம் ஏன் வீணில்

சண்டையிட்டுக் கொண்டு இரத்தம் சிந்த வேண்டும்? நாளை அதிகாலையில் பனீஷைபா என்னும் பாபுஸ்ஸலாம் வாயில் வழியே இந்த தேவாலயத்திற்கு முதன் முதலாக யார் பிரவேசிக்கின்றாரோ அவரிடமே நம் வழக்கைச் சொல்லி தீர்ப்புக் கோருவோம். அவரது தீர்ப்பின் படியே நாம் நடந்து கொள்வோம். என்ற அரியதொரு யோசனையைக் கூறினார். அதனை அனைவரும் ஒரு மனதாக ஏற்றனர். மறுநாள் அதிகாலையில் க.ஃபாவுக்குள் யார் பிரவேசிக்கின்றார் என்பதைக் காண அனைவரும் விடியும் வரை அங்கு விழித்துக் காத்திருந்தனர்.

வைகறையின் போது பாபுஸ்ஸலாம் வாயில் வழியே தேவாலயத்தை நோக்கி ஓர் உருவம் வந்து கொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. நெருங்கி வந்த அந்த உருவம் “அல் அமீன்” என்பதை அறிந்ததும், காத்திருந்த மக்கள் களி பேருவகை கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அண்ணலார் அங்கு வந்ததும் விஷயத்தை கேட்டறிந்து ஒரு கணம் சிந்தித்தார்கள். பின், தங்கள் மீதிருந்த போர்வையை எடுத்து விரித்து அதன் மீது “ஹஜருல் அஸ்வத்” கல்லைத் தங்கள் திருக்கரங்களால் எடுத்து வைத்து வாதாடிய கோத்திரத்தார் நால்வரையும் போர்வையின் நான்கு விளிம்புகளையும் பற்றிக் கல்லைப் பதிக்க வேண்டிய இடத்தருகே கொண்டு வந்து வைக்கச் சொன்னார்கள். இத்தீர்ப்பை அனைவரும் பரம திருப்தியுடன் ஏற்று அவ்வாறே கல்லைப் போர்வையுடன் தூக்கிக் கொண்டு போய் வைத்தனர். பெருமானார் அதை மீண்டும் தம் திருக்கரங்களால் தூக்கி க.ஃபாவின் சுவரில் அதற்குரிய இருப்பிடத்தில் வைத்து கட்டிட வேலையைத் தொடருமாறு பணித்தார்கள். அதன் பின் க.ஃபத்துல்லாஹ்வின் கட்டுமானம் துரிதமாக நடைபெற்றுப் பூர்த்தியானது. அப்போது அதன் உயரம் 18 முழம் அல்லது 27 அடியாக இருந்தது.

**இறைவனின் தூதர்**

இறைவனின் அருட்பெருங் கருணையை இறைஞ்சியவர்களாக அண்ணலார் அருத்தவங்கிடத்தும் வணக்கம் புரிந்தும், நோன்பிருந்தும் வருங்காலை, அவர்களது நாற்பதாம் வயதை ஒட்டிய சில மாதங்களாக உடனுக்குடன் நனவாகி வந்த பல கனவுகளைக் கண்டும், நல் ஆசி கூறும் அதிசயத் தொனிகளை கேட்டும் வந்தார்கள். அதையடுத்து, பிரமாண்டமான மனித உருவில் ஒருவர் அடிக்கடி தோன்றிப் பெருமானாரைப் பிடிக்க வருவதுபோல் நெருங்குவதும் பின் விலகிச் செல்வதுமாக இருந்துவந்தார். இக்காட்சிகள் நாயகம் அவர்களுக்குப் பயத்தையும் மனக்குழப்பத்தையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன. சில சமயங்களில் இருதயமே வெடித்து விடுமோ என அஞ்ச வேண்டும் போலிருந்தது. இதனால் அண்ணலாரின் ஊணுறக்கங்கெட்டு உடம்பு நலிவுற ஆரம்பித்தது. இதனைக் கண்டு கவலையுற்ற அன்பு மனைவி கதீஜா நாச்சியார் தம் அன்பு நாயகருக்குத் தைரியம் பல கூறி தேறுதல் செய்து வந்தார். என்றும் நன்மையையே நாடி நற்காரியங்ளையே புரிந்து வரும் நாயகம் அவர்களுக்கு இம்மாதிரி நடைபெற்று வருவது நன்மை விளைவிப்பதாக இருக்குமேயல்லாது ஒருக்காலும் தீமை பயக்காது என ஆறுதல் கூறி உற்சாகமூட்டி வந்தார் அம்மங்கையர்க்கரசி.

இவ்வாறு இருந்து வருங்கால், அவ்வாண்டு ரமளான் மாதமும் வந்துவிட்டது. பெருமானார் வழக்கம் போல் ஹிராக் குகைக்குச் சென்று நோன்பிருந்து கடுந்தவத்தில்

ஈடுபட்டார்கள். அம்மாதத்தின் பிற்பகுதி இரவொன்றில் இது 27ம் பிறை திங்கள்கிழமை இரவென்பது மார்க்க அறிஞர் பெரும்பாலாரின் முடிவாகும். அண்ணலார் அருந்தியானத்தில் மூழ்கித் தூக்கமும் விழிப்புமான ஓர் மத்திய நிலையில் மல்லாந்து படுத்திருந்தார்கள். அப்போது இருள் கம்பியிருந்த குகை திடீரென ஒளிமயமாகக் காட்சியளித்தது. அதைத் தொடர்ந்து இடி முழக்கம் போன்ற ஓர் எதிரொலி எழுந்து குகையின் உள்ளும் புறமும் அலைபோன்று பரவியது. அந்த ஒளி மயத்தினூடே அதனினும் மிக்கப் பிரகாசமாக, புன்முறுவல் பூத்த வண்ணம், மனித உருவம் ஒன்று தோன்றி நின்றது.

நித்தில நிரைத்த விருசிறை யொழுங்கு
    நீணிலாக் கதிர்கள் விட்டொழுக
வித்திரு மத்தாள் சிறந்தணி திகழ
    வில்லுமிழ் கரங்கிடத் திலங்கப்
பத்திவிட் டெறிக்குஞ் செம்மணி யிருகட்
    பார்வையிற் கருணைவீற் றிருக்கச்
சித்திர வடிவைச் சுருக்கிமா னிடர்போற்
    செபுறயீ லவ்விடத் தடைந்தார்.

அது வேறு யாருமல்ல. தம் முன் அடிக்கடி வந்து சென்ற, தம்மைப் பலகாலும் வாதனைப் படுத்தி வந்த பெரிய உருவந்தான அது பெருமானார் சுருட்டி மடக்கி எழுந்து உட்கார்ந்து அதனைக் கூர்ந்து நோக்கினார். தங்க மயமான எழுத்துக்கள் பொறித்த பீதாம்பரம் ஒன்றைக் காட்டி அண்ணலாரை விளித்து, :"ஓதுவீராக!." என்றது அவ்வுருவம் பெருமானார் மெய்சிலிர்த்து விதிர்ப்படைந்த நிலையில் "எனக்கு ஓதத் தெரியாதே" எனத் தடுமாற்றத்துடன் பதிலிறுத்தார்கள். அவ்வுருவம் நாயகம் அவர்களை நெருங்கி இறுகக் கட்டியணைத்தபின் "ஓதுவீராக" எனச் சற்று உரக்கக் கூறியது. அதற்கு அண்ணலவர்கள் "நான் ஓதினவன் அல்லனே" எனப் பரிதாபந்தோய்ந்த குரலில் பதிலளித்தார்கள். இப்போது அவர்களின் உடம்பு வியர்வையால் நீராடி நின்றது. மறுமுறையும் அவ்வுருவம் பெருமானாரை அண்மிக் கட்டியணைத்த பின் விலகி நின்று "ஓதுவீராக" என முன்னிலும் சற்று உரத்துக் கூறியது. அதற்கு நாயகம் அவர்கள் "நான் எதை ஓதுவது" என வாய் குழற உதடு பதய வினவினார்கள். மூன்றாம் முறை அவ்வுருவம் உடலிலுள்ள உயிர் வெளியேறுமாப் போல் இறுகக் கட்டித் தழுவிய பின் " ஓதுவீராக! அனைத்தையும் இரட்சிப்பவனாகிய உம் இறைவனின் திருநாமங் கொண்டு, அவன் மனிதனை இரத்தக் கட்டியினின்றும் உருவாக்கினான். ஓதுவீராக!. உமது இறைவன் மகோன்னதமானவன்: எழுதுகோலினால் அறிவை விரிவாக்கியவன். மனிதன் அறியாதவற்றையெல்லாம் அவனுக்கு அறிவித்துத் தந்தவன்" என்ற ஐந்து திருவசனங்களை ஓதிக் காட்டியது அவ்வொளி உருவம். இவை திருக்குர்ஆன் 96ம் அத்தியாயத்தின் முதல் ஐந்து திருவசனங்களாகும். இவ்வைந்தும் பெருமானாரின் உள்ளத்தில் கல்மேல் எழுத்தாகப் பதிந்து விட்டன. அவற்றை அவ்வுருவத்தினிடம் ஒப்பித்துக் காண்பித்தார்கள். அவ்வளவோடு அவ்வுருவம் மறைந்து விட்டது. பெருமானார் சட்டெனப் பொதும்பை விட்டும் வெளிவந்து சுற்றும் முற்றும் அதனைத் தேடினர். காணாது தவித்தனர். அது

சமயம் அவ்வுருவம் வானமெங்கும் பேரொளியாகப் பெருகி நின்று, “முஹம்மதே! நீ இறைவனின் தூதராவீர்!. யான் அவன் பணியாள் ஜிப்ரயீல் என்னும் வானவராயிருக்கும்” என கணீரென முழங்கியது. அத்தொனி அலையலையாக வானவெளியில் பரவி எதிரொலி செய்து நின்று, பின்னர் படிப்படியாக அவ்வுருவமும் ஒளியும் ஒலியும் குறைந்து மறைந்தன. எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் அன்று இறைவனின் இறுதித் தூதராக, நபிமார்களின் முத்திரையாக முடிசூடப் பெற்றார்கள். நபிகள் பெருமான் எழுதப்படிக்கத் தெரியாத “உம்மியாக” இருந்தார்கள். “நபியே நீர் இதற்கு முன்னர் (திருக்குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னர்) எந்த வேதத்தையும் கற்று அறிந்தவரல்லர். உமது வலக்கரங்கொண்டு எதையும் எழுதியருமல்ல” என இறைவன் தன் திருமறையின் 29:48 திருவசனத்தில் குறிப்பிடுகிறான். இந்நிகழ்ச்சி கி.பி. 610 ஆகஸ்டு 23-24 அதிகாலை 3:30, 4 மணியளவில் நிகழ்ந்ததாக கணித்துள்ளனர். அப்போது அண்ணலாரின் வயது 41 ஆக இருந்தது.

கிழக்கு வெளுக்கிறது. வியப்பும் அச்சமும் கலந்த ஒருவித நடுக்கத்துடன் இறைவனின் இன்னருள் தூதர் ஹிராவினின்றும் வீடு நோக்கி விரைந்தார்கள். வீட்டின் கதவு தட்டப்பட்டது. கணவரின் வருகையை எதிர்பார்த்தவராக இராக்காலங்களில் தூங்கியும் தூங்காமலும் படுக்கையில் கிடந்த கதீஜா நாச்சியார், கதவு தட்டும் சப்தம் கேட்டுப் பதறி எழுந்து சென்று யாரெனக் கேட்டு, பெருமானார் வந்திருப்பதைத் தெரிந்து விரைவில் கதவைத் திறந்தார். உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அண்ணலார் தம் அருமை நாயகியை விளித்து “என்னைப் போர்த்துங்கள். என்னைப் போர்த்துங்கள்” எனக்கூறியவர்களாய்ப் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டார்கள். மனம் பதறிய அம்மாதரசி, தம் கணவரைப் போர்வை கொண்டு போர்த்தியவராக, “அபுல்காஸிம்! தங்களுக்கு என்ன நேர்ந்தது? தாங்கள் எங்கு சென்றீர்கள் நேற்றுத் தானே ஹிராவுக்கு ஆளனுப்பித் தங்களைப் பார்த்து வரச் சொன்னேன். அவர்கள் தேடி அலைந்து பார்த்து விட்டு தங்களைக் காணவில்லை என வந்து சொன்னார்கள். தாங்கள் ஏன் இவ்வாறாக மாறுதலடைந்து இருக்கிறீர்கள்? தங்களது திருவதனம் இதற்குமுன் என்றுமில்லா ஜோதியை வீசி நிற்பதையும், தங்களின் திருமேனி நான் முகர்ந்தறியா நறுமணத்தை முகிழ்வதையும் நான் காண்கிறனே! தங்களுக்கு யாதேனும் நேர்ந்ததோ? தயை கூர்ந்து நடந்ததைச் சொல்லுங்கள், என் பெருமானே! எனப் பரிவும், பாசமும், கனிவும் கரிசனையும் கலந்து ஏக்கத்துடன் வினவினார். போர்வைக்குள் கிடந்த பெருமானார் தம் துணைவியாரிடம் ஹிராக்குகைக்குள் நடந்த அற்புதங்களை யெல்லாம் ஒன்றுவிடாது விவரித்து, நாமூஸ் (ஜிப்ரீல்) ஓதிக் காண்பித்த ஐந்து திருவசனங்களையும் ஒப்பிப்பார்கள். எல்லாவற்றையும் கதீஜா நாச்சியார் இன்புறக் கேட்டு, இனம் புரியா மகிழ்வடைந்து, அண்ணலாருக்கு ஆறுதல் மொழி பகர்ந்தார்.

“உம்மீது வேதம் இறக்கப்படுமென நீர் ஆதரவு வைத்திருக்கவில்லை, உமது இறைவனின் கிருபையாலேயே அன்றி” (28:86)

“உமது இறைவன் உம்மைக் கலக்கமுற்றவராகக் கண்டு நபித்துவத்தை அருளினன்” (குர்ஆன்)

இப்போது கதீஜா நாச்சியார் எழுத்து தம்மைப் போர்த்திக் கொண்டு தம் பெரிய தந்தையின் மகன் வரகா இப்னு நௌபல் என்பாரின் இல்லம் நோக்கி நடந்தார். வரகா, யூத, கிறிஸ்தவ வேதங்களை நன்கு கற்றறிந்தவர். உருவ வழிபாட்டில் ஈடுபடாதவர். எனவே தான், ஹிராக் குகையில் நடந்தவற்றைத் தம் அண்ணனிடம் சொல்லி ஐயத் தெளிவு பெறலாம் எனக் கருதி கதீஜா நாச்சியார் அங்கு சென்றார். தங்கை கூறியவற்றைக் கேட்டபோது, வரகாவின் மனதில் "உம்மைப் போல் ஓர் தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர் தம் உடன் பிறந்தாரிலிருந்து எழுப்பி என் வார்த்தைகளை அவரது வாயில் அருளுவேன். நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லிக் காண்பிப்பார்" என மூஸா நபிக்கு இறைவன் கூறிய வார்த்தைகளும் (உபாகமம் 18:18) "வேத நூலானது கல்வி பெறாத அவருக்கு அளிக்கப்பெற்று, "ஓதுவீராக!" என்னும் அத்திரு வசனங்களை ஓதுமாறு கூறப்படுங்காலை, எனக்கு ஓதத் தெரியாதே! எனக் கூறுவார். (ஏசாயா 29:12) என்ற வேத வாக்கியங்களும் பளிச்சிட்டன. அவர் கதீஜா நாச்சியாரை நோக்கி, "தங்கையே நிச்சயமாக இவர்தான் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் 'வஹி' (தேவ அறிவிப்பு) கொண்டு வந்த நாமூஸுல் அ.்.லம் (ஜிப்ரீல்) ஆவார். உலக மாந்தர் இதுவரை எதிர்பார்த்திருந்த உலக மாநபி உம் கணவர் முஹம்மதுவேயாவார். விரைவில் வீடு சென்று அவரைக் கண்ணினை இமை காப்பாது போல் காத்து வருவாய்!" எனக் கூறி அனுப்பினார். கதீஜா நாச்சியார் இல்லம் திரும்பி வரகா சொன்ன செய்திகளைப் பெருமானாரிடம் கூறித் தைரியமூட்டினார். அதுகேட்டு அண்ணலாரும் ஒருவாறு மன நிம்மதியடைந்திருந்தார்கள்.

ஓர் நாள் நாயகம் அவர்கள் வழக்கம் போல் 'தவாபு' செய்யக் க.்.பாவுக்குச் சென்றபோது வரகாவைச் சந்திக்க நேர்ந்தது. 'வஹீ' வந்த அவ்விரவு ஹிராக் குகையில் நடந்தவற்றை அண்ணலாரின் அமுதவாயால் கேட்ட வரகா, "உம்மை இறைவன் தன் இறுதி நபியாக நியமித்துள்ளான். மக்கள் உம்மைப் பொய்யரென்றும், பைத்தியக்காரரென்றும், சூனியக்காரரென்றும் பழித்துரைப்பர். விரோதம் பாராட்டுவர். தாங்கவொண்ணாத துன்பம் விளைவிப்பர். வீட்டை விட்டும் விரட்டியடிப்பர். எனவே நீர் என்றும் எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளும். எனக்கூறிப் பெருமானாரின் நெற்றியில் முத்தமிட்டு ஆசி கூறி அனுப்பினார். வரகா கூறிய வார்த்தைகள் பெருமானாருக்குப் பெரும் ஆறுதலளித்த போதிலும், வீட்டை (மக்காவை) விட்டும் விரட்டியடிப்பர்" என்ற சொற்கள் மட்டும் நபிகள் நாதரின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்று இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தன.

"நாம் குர்ஆனைப் படிக்கும் போதெல்லாம் அது நமக்குப் புதிதாகவே தோன்றுகிறது. அதனுடைய ஆகர்ஷண சக்தி நம்மை அதன் பால் கொஞ்சம் கொஞ்சமாக ஈர்ப்பது தெரிகிறது. சில இடங்களில் அது நம்மை கிளு கிளுக்கச் செய்கின்றது. சில இடங்களில் அது நம் கண்களில் நீரை வரவழைக்கின்றது. இறுதியாக, அது தன்னைப் படித்தவர்களைத் தன்மீது ஆவல் கொண்டவர்களாக ஆக்கி விடுகிறது." என்கிறார் ஜெர்மன் மகாகவி கத்தே.

“திருக்குர்ஆன் பரிசுத்தமான நடையையும், ஞானத்தையும், சத்தியத்தையும், அற்புதமாக்கிக் கொண்டது. இதை ஒரு ஸ்திரமான மாபெரும் அற்புதமெல்லாம், ஏனெனில் முஹம்மது நபி (ஸல்) ஒன்றும் படித்திருக்கவில்லை. அவர் வாய் மூலம் வெளிப்பட்ட திருக்குர்ஆன் பெரிய சட்ட புஸ்தமாகவும், பொது வழிபாட்டுக்குரியதாகவும் மானிட வர்க்கத்தின் ஆறிலொரு (நான்கிலொரு) பங்கு மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாகவும் அமைந்து விட்டது. எக்காலத்துக்கும் எந்த அரசாங்கத்துக்கும் எப்போதும் பொருந்தக்கூடிய நூல் திருக்குர்ஆன் ஒன்றே” எனக் குறிப்பிடுகிறார் வரலாற்றாசிரியர் பாஸ்வர்த் ஸ்மித் என்பவர்.

“திருக்குர்ஆன் ஒரு காவியமல்லவென்றால், அது ஒரு காவியமா, அல்லவாவென நிர்ணயிப்பது மிகக்கடினம். அது கவிதையைக் காட்டிலும் சிறந்தது, அது ஒரு சரித்திரத் தொகுப்பன்று! ஒருவருடைய வாழ்க்கை வரலாறுமன்று! மூஸா நபி அவர்கள் தூர்ஸீனா மலையில் வசனித்த விருத்தாந்தங்கள் அடங்கிய ஞான போதமுமன்று, உண்மையான, பொய்யான தீர்க்கதரிசிகள் யாவர் என்பதைப் பற்றித் தர்க்க ரீதியான முறையில் பிளேட்டோ எழுதிய வேதாந்த ஆராய்ச்சிப் பிரபந்தமுமன்று!

“இது ஓர் தீர்க்கதரிசியின் அறைகூவல். தனக்குத் தானே நிகராய், எனினும் அதன் ஆழிய கருத்துக்கள் அகில உலகத்துக்கும் பொதுவானவையாய், விரும்பியோ விரும்பாமலோ எக்காலத்தவரும் அதன் உபதேசங்களை ஏற்று நடந்தே தீர வேண்டியதாய் அமைந்திருக்கின்றது.

“இந்த அறைகூவல் அரண்மனைகளிலும், பாலைவனங்களிலும், பட்டணங்களிலும், ஏன், சாம்ராஜ்யங்களிலும், வித்தியாசமின்றி எதிரொலித்தது, முதலில் இந்த அறைகூவல் உண்மையான விசுவாசிகளை ஊக்குவித்து உலகத்தையே வெற்றி கொள்ள உதவியது. அதன்பின் அது ஒரு புனருத்தாரண இயக்கமாயத் திரண்டு, கிரீஸிலும் ஆசியாவிலுமுள்ள ஆக்க ஞானங்களை உருவாக்கி, அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்த கிறிஸ்தவ ஐரோப்பாவில் ஊடுருவிப்பாய்ந்தது” என டாக்டர் சாமுவேல் ஜான்ஸன் தமது “ஓரியண்டல் ரிலிஜண்ஸ்” என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

“இயற்கையை வருணிக்கும் பல கருத்தோவியங்கள் குர்ஆனின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. உயிர்த்துடிப்புடன் வெளிப்படும் இச்சொற் சித்திரங்கள், வாய்விட்டு வாசிக்கும் பொழுது, பாலையின் மணல் பா இசைப்பது போலவும், அலைகடல் ஆர்த்தெழுவது போலவும் நாம் உணர்கிறோம். சொல்லழகும், பொருட்செறிவும் நிறைந்த திருக்குர்ஆனின் வசனங்கள் நம் இதயத்தை ஈர்க்கின்றன.

“அன்பு பற்றியும், அருள் பற்றியும் மனிதப் பண்பு பற்றியும், இயற்கை எழிலைச் சுற்றிப் படரும் கருத்துப் படையல்கள் மூலம் மெய்யறிவு பற்றியும் உணர்ந்து வியப்புறுகிறோம்.

விண்மீன்கள் கண் சிமிட்டும் வியனுறு வானவெளியில் விளைந்திடும் அற்புதங்கள், நியதி தவறாது இரவைப் பின் தொடரும் பகல், ஆழ்கடலில் ஆடி அசைந்து செல்லும் மரக்கலங்கள், வானத்து முற்றத்திலே வண்ணச் சிறகடித்து வளைந்து, வளைந்து, செல்லும் பறவைக் கூட்டங்கள், நாற்கால் பாய்ச்சலிலே பாய்ந்தோடும் குதிரை இனம், ஆடாது நிற்கும் மலர், தூங்கும் கற்குன்றங்கள், வீசும் தென்றல், வேவும் நெருப்பு, விரைந்தோடும் கார்முகில் கூட்டம், இனிய நீர்ப்பெருக்கு, பெண்மையின் குளிர்நோக்கு, பச்சிளங்குழந்தையின் பரவசச் சிரிப்பு, கனிந்து தொங்கும் பழக் குலைகளைச் சுமந்து சாய்ந்து நிற்கும் ஈச்சமரங்கள், நம்பிக்கை கொண்ட மனிதர்களே! அல்லாஹ்வின் வல்லமையை உணர்ந்து கொள்வதற்கு இவை இணையற்ற சான்றுகளன்றோ?" என வினவுகின்றார் பிரெஞ்சு ஆசிரியர் ஜார்ஜ் ரோத்ராண்டு.

"இவ்வுலகிலும் மறுவுலகிலும் நிகழும் நிகழ்சிகளுக்கு அடிப்படையாக இயங்குவது குர்ஆன் வாழ்க்கைக்குரிய சட்டங்கள், இறைவனுடைய ஒருமை, உரிமைகளின் வரம்புகள், தண்டனைகளின் விவரங்கள், சமுதாய அமைப்புகள், நீதியின் நிலைகள் ஆகிய அனைத்தும் திருக்குர்ஆனின் தெள்ளிய முறையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன" என ஹங்கேரிய அறிஞர் தேஹாவெனஸத்தே கூறுகிறார்.

ஹிராக் குகையில் முதல் வேத வசனங்கள் வெளியான தன் பின் சுமார் ஆறுமாத காலம் வரை வானவர் ஜிப்ரீல் மீண்டும் தோன்றவுமில்லை. புதிய திருவசனம் எதுவும் கொண்டு வரவுமில்லை. அதனால் பெருமானார் கிலேசமும் சஞ்சலமுமுற்ற நிலையில் இருந்து வந்தார்கள். முதல் வெளிப்பாட்டுக்குப் பின்பிருந்தே எப்போதும் தங்களைப் போர்வையால் போர்த்திக் கொள்வது அவர்களது நீங்கா வழக்கமாகிவிட்டது. ஆறு மாதங்கழித்து அண்ணலாருக்கு மிக்க ஆறுதலளிக்கும் வகையில் "உம் இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை, வெறுக்கவுமில்லை, நிச்சயமாக பிற்பகுதி (வாழ்க்கை)யானது முற்பகுதியை விடச் சிறப்புடையதாக விருக்கும்! இன்னும் நிச்சயமாக உம் இறைவன் நீர் மன நிறைவு கொள்ளும் அளவு உமக்கு வழங்கக் கூடியவனாகயிருக்கின்றான்" என்ற திருவசனங்களைக் கொண்ட 93வதுா் அத்தியாயம் வெளியானது. அதனையடுத்து," (அங்கியால்) போர்த்திக் கொண்டிருப்பவரே! எழுந்து சென்று (மக்களுக்கு) எச்சரிக்கை செய்வீராக!" எனவுள்ள 74வது அத்தியாயம் வெளியானது. இதன்பின் நபிகளார் இறைவனின் தூதைத் தம் நம்பிக்கைக்குரியவர்களிடம் வெளியிட்டு அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். பெருமானாரின் தூதைக் கதீஜா நாச்சியார் ஹிரா வெளிப்பாட்டின் போதே ஒப்புக்கொண்டு இஸ்லாத்திலாகிவிட்டார்கள்.

**இறைவணக்கம்**

இதனை அடுத்து, இறைவணக்கம் பற்றிய கட்டளையைக் கொண்ட 73வது அத்தியாயம் வெளியானது. அதன்டி தொழுகையைக் கடைப்பிடித்துக் காலையிலும் மாலையிலும் இரண்டு ரக்அத்துகள் வீதம் தொழுது வந்தார்கள். ஒருநாள் மக்காவின் அருகிலுள்ள குன்றுக்குச் சென்றிருந்த போது, வானவர் ஜிப்ரீல் தோன்றித் தம் குதிங்காலால் தரையை மிதித்துப் பள்ளப்படுத்தி, அதினின்று தண்ணீர் குமிழியிடச்

செய்து அதனைக் கொண்டு ‘ஒலூ’ செய்து காட்டினார். பெருமானாரையும் அவ்விதமே செய்து கொள்ளுமாறு பணித்து இருவரும் ‘ஒலூ’ செய்து கொண்ட பின் ஜிப்ரீல் முன்னின்று தொழுக வைத்து வணக்க முறையையும் கற்றுத்தந்துவிட்டு மறைந்தார். பெருமானாரின் விண்ணேற்றத்தின்போது ஐவேளைத் தொழுகையை இறைவன் முஸ்லிம்களுக்கு நியமம் செய்தபின் அவற்றின் வணக்க நேரங்களை அண்ணலாருக்கு அறிவிப்பான் வேண்டி அவ்வவ்வேளைகளிலும் அமரர் ஜிப்ரீல் தோன்றி ஒவ்வொரு தொழுகையின் முன்னேரம் பின்னேரத்தைப் பொழுதைக் கணக்கிட்டுக்காட்டி நிர்ணயித்துக் காண்பித்துச் சென்றார்.

நபிகள் பிரான் வீடு திரும்பித் தாம் ஜிப்ரீல் மூலம் கற்ற தொழுகை முறையைத் தம் செல்வ நாயகி கதீஜா பிராட்டி யாருக்கும் கற்றுக்கொடுத்து இருவரும் இரவு நேரங்களில் இறைவணக்கத்திலீடுபட்டு வந்தனர். ஓர் இரவு தூக்கத்திலிருந்த பத்து வயதுச் சிறுவர் அலீ கண்விழித்த போது தம் அண்ணனும் அண்ணியும் தனித்தனியாக நிலை நிற்பதும், குனிவதும், நிமிர்வதும் பின் மண்டியிட்டுச் சென்னியைத் தரையில் வைப்பதுமாகச் செயல்புரிவதைக் கண்டு ஆச்சரிய முற்றார். இவ்வாறு அவர்கள் தொடர்ந்து பல இரவுகள் செய்து வருவதைப் பார்த்து, அதன் காரணத்தைத் தாமாகப் புரிந்துகொள்ள இயலாமல், ஒருநாள் பெருமானாரிடம் அதுபற்றிப் பரிவுடன் வினவினார். அதற்கு அண்ணலார், தாம் இறைவனால் அவனின் திருத்தூதராக நியமிக்கப்பெற்று அவனது ஏகத்துவத்தை மக்களுக்கு எடுத்து விளக்கக் கட்டளையிடப்பட்டிருப்பதாகவும், வானவர் ஜிப்ரீல் தமக்கு இறைவசனங்கள் கொண்டு வருவதாகவும் இறை வணக்க முறைகளையும் அவரே வந்து கற்றுத் தந்ததாகவும் அதன்படியே தாமும் தம் மனைவியும் நடந்து வருவதாகவும் நயமுடன் விளக்கிக் கூறினார்கள். இவற்றைக் கேட்ட அலீ “அவ்வாறாயின், நானும் தங்களையே பின்பற்றி நடப்பேன்” எனக் கூறியவாறு கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து தொழுகையையும் அன்றிலிருந்தே கைக் கொண்டார். பத்து வயதுச் சிறுவரேயாயினும் அலீ மிக்கத் திடசித்தமுடையவராயிருந்ததைக் கண்டு கணவரும் மனைவியும் ஆச்சரியக் களிப்புள் ஆழ்ந்தனர்.

**அலீ (ரலி)**

பெருமானாரின் பெரிய தந்தை அபூதாலிபின் புதல்வர் தாம் அலீ. இவர் கி.பி. 600ல் பிறந்தார். அலீ சிறுவராக இருந்தபோது அரபு நாட்டில் கடும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அதனால் அபூதாலிப் தமது பெரிய குடும்பத்துடன் வறுமையுற்று நின்றார். அதுகண்ட அண்ணலாரும் அவர்கள் தம் சிறிய தந்தை அப்பாஸும் அபூதாலிபிடம் சென்று, “தாங்கள் அதிகக் குழந்தைகளுடன் ஏன் சிரமப்பட வேண்டும்? நாங்கள் இருவரும் ஆளுக்கொரு பிள்ளையை அழைத்துச் சென்று வளர்த்து வருகிறோம், அதற்கு அனுமதி அளியுங்கள், தங்களுக்கு இதனால் குடும்ப பாரம் சற்று தணியுமென எண்ணுகிறோம்” என வேண்டி நின்றனர். அபூதாலிப் அதற்கு ஒருவாறு இணங்கியவராய் தம் மூத்த மகன் ஜ.ஃபரை அப்பாஸுடனும் இளைய மகன் அலீயைப் பெருமானார் அவர்களுடனும் அனுப்பி வைத்தார். இரு சிறுவர்களையும் அழைத்துச் சென்ற அவர்கள் பற்றுடனும் பாசத்தோடும் வளர்த்து வந்தனர். சிறுவர் அலீக்கு அப்போது ஆறு வயதாக இருந்தது.

நபிகள் பிரானும் அலீயும் பகல் காலங்களில் மக்காவுக்கு அருகிலுள்ள முற்கூறிய குன்றுக்குச் சென்று இறை வணக்கம் புரிந்து வந்தனர். சில தினங்களுக்குப் பின், அபூதாலி தம் தம்பி மைந்தர் முஹம்மது, இறைவனின் தூதராகப் புதியதொரு மார்க்கத்தைப் பிரகடனப்படுத்தி இக்குன்றுக்குச் சென்று தொழுதுவருகிறார் என்பதைக் கேள்வியுற்றார். அதனை அறிந்து கொள்வதற்காக, ஒரு நாள் பெருமானாரும், அலீயும் அங்கு சென்றிருப்பது தெரிந்து தாமும் அக்குன்று நோக்கி சென்றார். அங்கு தம்பி மகனும், தனயனும் புதிய முறையில் இறைவணக்கம் புரிவதைக் கண்டு வியப்புற்றார். தொழுது முடிந்ததும் அவர்களை அணுகி, "என் தம்பி மகனே! இப்போது நீர் பின்பற்றியுள்ள மார்க்கம் யாது?" என கனிவுடன் வினவினார். அதற்கு நபிகள் கோமான், "பெரிய தந்தையே! இப்போது நாங்கள் பின்பற்றியுள்ள மார்க்கம் இறைவனுடையதும் அவன் உவப்பிற்குரியதுமாகும், அவனின் முந்தையத் திருத்தூதர்களும், வானவர்களும், நம்முடைய மூதாதை நபி இப்ராஹீம் அவர்களும் பின்பற்றி வந்த மார்க்கமும் இதுவேயாகும்" எனப் பணிவன்புடன் எடுத்துக்கூறி, இறைவன் தம்மை அவனுடைய திருத்தூதராக நியமித்து வானவர் ஜிப்ரீல் மூலம் தமக்கு புர்கான் வேதத்தை இறக்கியருளிவரும் விவரங்களையும் இஸ்லாத்தின் ஏகத்துவக் கோட்பாடுகளையும் விளக்கிக் காட்டி, ‘‘பெரிய தந்தையே! தூங்களும் இறைவனின் இந்த உண்மைச் சன்மார்க்கத்தை பின்பற்றி ஈருலக ஈடேற்றத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்’’ என வினயமுடன் கூறி நின்றார்கள். ஆதுகேட்ட அபூதாலிப் ஒரு கணம் சிந்தனையிலாந்தார். பின் பெருமானாரை நோக்கி, ‘‘என் தம்பி மகனே! நீர் மாசு மறுவற்ற மாணிக்கம், உண்மையின் உறைவிடம். நீர் கூறியவனைத்தும் உண்மை என்பதை நான் நன்கு அறிவேன். எனினும், பன்னெடுங்காலமாக நம் மூதாதையர் பின்பற்றி வரும் கொள்கையைக் கைவிடுவது மக்கள் மத்தியில் நமக்கிருக்கும் கண்ணியம் கௌரவம் இவற்றைக் கெடுத்துவிடுமே என அஞ்சுகிறேன். அந்நிலையை ஏற்க நான் தயாராகயில்லை. எனினும், உனது புதிய மார்க்கத்தின்பால் நீர் மக்களை அழைக்குங்காலை, உமக்கு இடர் ஏதும் நேராவண்ணம்ஈ எனது இறுதி மூச்சு வரை உதவியாக இருந்து பாதுகாப்பேன்’’ என உணர்ச்சி ததும்பக் கூறினார்: உறுதியளித்தார். பின்னர், தம் மகன் அலீயை விளித்துத் தம்முடன் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். ஆனால், அலீயோவெனில், தாம் உத்தமர் நபிகளாருக்கு உறுதுணையாக நிற்கப்போவதாகக் கூறி உடன் செல்ல மறுத்துவிட்டார். அது கண்டு அபூதாலிப் ஆத்திரங் கொள்ளவில்லை. மாறாக, புன்முறவல் பூத்தவராய், ‘‘நல்லது, உன் விருப்பப்படியே நடந்துகொள். முஹம்மதுவுடன் இருப்பது நன்மை பயக்குமேன்றித் தீமை ஒரு போதும் நேராது,’’ என மொழிந்தவராய் அவ்விடத்தை விட்டும் அகன்றார்.

### ஜைது பின் ஹாரிதா (ரலி)

திருமணத்திற்குப் பின் கதீஜா ாநச்சியார், பெருமானாரின் பணிவிடைக்காக ஜைத் பின் ஹாரிதா என்ற பதிமூன்று வயதுச் சிறுவரை அடிமையாக விலைக்கு வாங்கி ஒப்படைத்ததார். அச்சிறுவரைத் தாம் அடிமையாக வைத்திருக்க மனமில்லாமல் விடுதலை வழங்கி, விருப்பமானால் தம்மிடம் இருந்து வருமாறும் இல்லாவிடின் தம் பெற்றோரிடம் திரும்பிச் செல்லலாமெனவும் நபிகள் பிரான் நவின்றார்கள். ஆனால், ஜைது அண்ணலாருடனேயே இருந்து அவர்களுக்கு பணிவிடை புரியப் போவதாகக்

கூறி கதீஜா நாசச்சியாரின் இல்லத்திலேயே இருந்து கொண்டார். சில தினங்களுக்குப் பின் ஜைதின் தந்தை தன் மகனை மீட்டிச் செல்வதற்காகப் பணத்துடன் மக்கா வந்து பெருமானாரை அணுகி விஷயத்தைச் சொன்னார். ஸைஜதுக்குத் தாம் ஏற்கனவே உரிமையளித்து விட்டதாகவும், மீட்புத்தொகை செலுத்தாமலே அவரைக் கூட்டிச் செல்லலாமெனவும் அண்ணலார் ஹாரிதாவிடம் கூறினார்கள். பெருமகிழ்ச்சியுற்ற ஹாரிதா தம் மகனை உடன்வருமாறு அழைத்தபோது அச்சிறுவர் தாம் பெருமானாரிடமிருந்து பணிவிடை செய்வதையே பெரும் பேறாகக் கரதுவதாகக் கூறி உடன் செல்ல மறுத்துவிட்டார். ஹாரிதா ஒருவகையில் ஏமாற்றமும் மற்றொரு வகையில் பெருமானாரின் பெருந்தன்மையின் மீது பெருமதிப்பும் உற்றவராக வீடு திரும்பினார்.

பெருமானார் ஜைதைத் தங்கள் வளர்ப்பு மகனாகக் கருதி அன்புடன் அழைத்து வந்தனர். அவ்விளவலுக்கு வயது வந்தபோது தம் சொந்த அத்தை உமைமாவின் மகள் அழகு சௌந்தர்யமுள்ள ஜைனபைத் திருமணம் செய்வித்தார்கள். குலப்பெருமையின் காரணமாக அத்திருமணம் ஓராண்டுக்குப் பின் பிரிவனையில் முடிந்தது. ஓர் ஹபஷி அடிமையின் மனைவியாக இருந்தார் என்பதற்காக குறைஷி குலத்ததவர் எவரும் ஜைனபை அவர் மிக்க அழகுள்ளவராகயிருந்தும், மறுமணம் செய்து கொள்ள முன்வரவில்லை. நீண்ட நாள்களுக்குப் பின், தம்மால் தம் அத்தை மகள் வாழாவெட்டியாக இருந்து வருவதைக் கருதிப் பெருமானார் அப்பெண்மணியை கடிமணம் செய்து கொள்ள முன்வந்தார்கள். ஸைஜனப் மிக்க இறை பக்தியுள்ளவராயிருந்தமையால் திருவசனம் வெளியாகி அவனது நாட்டமறிந்த பின்பே திருமணத்திற்கு உட்பட்டார். ஸைஜனபுக்கு மண விடுதலையளித்த பின் ஜைது பெருமானாரின் அடிமைப் கெண்ணும், வளர்ப்புத் தாயும் ஹபஷி இனத்து மாதுமான உம்மு அய்மனை மணந்து அவர் மூலம் உஸாமா என்ற ஆண் மகனையும் பெண் மக்களையும் பெற்றார்.

**அபூபக்கர் ஸித்தீக் (ரலி)**

நாட்கள் பல சென்றன, நபிகள் கோமானுக்கு வஹீ வந்து கொண்டிருப்பதும் அவர்கள் புதிய மார்க்கம் உன்றை மக்களிடையே போதித்து வருகிறார்கள் என்பதும் மக்காவிலுள்ள குறைஷிகளுக்கு மத்தியில் பரவியது. அது சமயம் அப்துல் க.்.பா-அபூபக்கர் (ரலி) என்ற ஜவுளி வர்த்தகர் ஒருவர் சிரியா சென்று வியாபாரம் செய்து விட்டு மக்கா திரும்பிக் கொண்டிருந்தார். இவர் தந்தை உதுமான் அபூ குஹைபா என்பவராவார். தாயார் உம்முல்கைர் ஸல்மா என்பதாகும். சிரியாவிலிருந்து வரும் வழியில் மக்காவை அடுத்து, குறைஷிகள் சிலரை அப்துல் க.்.பா சந்தித்த போது ஊர் நடப்புகள் பற்றி விசாரிக்கலானார். தநற்கவர்கள், பெருமானார் தம்மை நபியாகவும் தமக்கு வேதம் இறங்குவதாகவும் கூறிக் கொண்டு புதிய மார்க்கமொன்னைப் பிரச்சாரம் செய்து வருவதாகவும் தங்களின் (கல்) தெய்வங்களை இழித்துரைப்பதாகவும் இதுபற்றி ஊரில் ஒரே குழப்பமும் கொந்தளிப்புமாக இருந்து வருவதாகவும் எடுத்துச் சொல்லி அண்ணலாரை அடாத வார்த்தைகள் கொண்டு தாக்கிப் பேசினார்கள். அவர்கள் கூறியவை அனைத்தையும் கேட்ட அப்துல் க.்.பா அமைதியுடன், “அல் அமீன்” அவ்வாறு கூறுவாரானால் அது உண்மையாகத் தான் இருக்க வேண்டும். அது பற்றி சந்தேகிக்கத் தேவையில்லை. முஹம்மது அவர்களின்

தாவாவை நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன்” எனக்கூறியவராய் மக்கா விரைந்தார். அண்ணலாரை அண்மி அனைத்தையும் கேட்டறிந்தார். அது வரை வெளியாகியிருந்த வேத வசனங்களையும் செவி குளிர இதயம் இனிக்க ஓதக் கேட்டார். அக்கணமே கலிமாச் சொல்லி ஈமான் கொண்டார். இஸ்லாத்தின் அணியில் இணைந்தார்.

இவரது இயற்பெயர் அதீக் என்பதாகும். இஸ்லாத்தைத் தழுவிய பின் இவர் தம்மை “அப்துல்லாஹ்” (இறைவனின் அடியான்) என அறிவித்துக் கொண்டார். ஆயிஷா திருமணத்திற்குப் பின் “அபூபக்கர்” (கன்னியின் தந்தை) என அழைக்கப்பட்டார். இப்பெயர் இவருக்குப் பெருமானார் அவர்களால் சூட்டப்பட்டது எனவும் கூறுகின்றனர். பெருமானாரின் விண்ணேற்றம் (மி.ஃ.ராஜ்) பற்றிய செய்தியை இவர் தயக்கமின்றி ஏற்றதால் பெருமானார் இவரை “சித்தீக்” (மெய்ப்பித்தவர்) என்ற அடைமொழியுடன் “அபூபக்கர் சித்தீக்” என அன்புகனிய அழைத்து வந்தார்கள்.

குறைஷிகளின் மத்தியில் அபூபக்கர் (ரலி) ஒரு பெரிய வர்த்தகராகவும், செல்வந்தராகவும், நாணயமானவராகவும் திகழ்ந்தார். கூரிய மதியும் நினைவாற்றலும் பெற்றவர் எனவும் திறமைமிக்கவர் எனவும், தீர்ப்பு வழங்குவதில் நீதவான் எனவும் ஒழுக்கத்தில் உயர்ந்தவர் எனவும் புகழ் பெற்றிருந்தார். இத்தகு சிறப்புகளையுடைய ஒருவர் இஸ்லாத்தில் இணைந்தது பெருமானாரின் புதிய இயக்கத்திற்கு முதுகெலும்பாக அமைந்து விட்டது என்றே கூற வேண்டும். அபூபக்கர் (ரலி) அண்ணலாரின் இளமைப் பருவத்துத் தோழர். சுமார் இரண்டு அல்லது மூன்று வயது இளையவர், மது அருந்தாதவர், உருவ வழிபாட்டில் ஈடுபடாதவர், நாயகத் திருமேனியை நன்கு அறிந்தவர்.

நபித்துவம் அருளப்பெற்ற மூன்று ஆண்டுகள் மட்டும் இஸ்லாம் இரகசியமாகவே பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. அதுவரை, வாலிபர், நடுத்தர வயதினர், ஏழைகள், செல்வந்தர் ஆகியோர் ஆண்களும் பெண்களுமாக நாற்பது பேர் மட்டுமே இஸ்லாத்தின் அணியில் வந்து இணைந்தனர். இவர்கள் உதுமான் இப்னு அ.ஃ.ப்பான் (ரலி) என்னும் தனவந்தர் குறிப்பிடத் தக்கவர். இவரே பெருமானாரின் இரு புதல்விகளைத் திருமணம் செய்யும் பெருமையையும் பாக்கியமும் பெற்ற இஸ்லாத்தின் மூன்றாம் கலீ.ஃ.பா ஆவார். மக்காவெங்கும் புதிய மதம் பற்றிய பேச்சு மக்களிடையே பரவி வந்தது.

**பகிரங்கப் பிரச்சாரம்**

நபித்துவம் நான்காம் ஆண்டு ஆரம்பம். இப்போது இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்யுமாறும், தம் குடும்பத்தினர், உறவினர், செல்வர், செல்வாக்குடையோர், அனைவரையும் அதன் பால் அழைக்குமாறும் இனியும் தயங்கித் தாமதித்துக் கொண்டிருந்தால் தண்டனைக்காளாக நேருமெனவும் வானவர் ஜிப்ரீல் மூலம் இறைவனின் உத்தரவு இறங்கியது.

உடனே நபிகள் நாதர், ஸபா குன்றின் மீது ஏறி நின்று நெருக்கடி காலங்களில், மக்காவின் மக்கள் அக்குன்றின் மேல் ஏறி நின்று ஜனங்களைக் கூவி அழைப்பது போன்று, சப்தமிட்டு அழைத்தார்கள். எல்லா மக்களும் அங்கு வந்து ஒன்று

சேர்ந்தனர். அவர்களை நோக்கிப் பெருமானார், “இந்த மலையின் பின்புறத்தில் எதிரிப்படையொன்று நம்மைத் தாக்க வந்திருப்பதாக நான் கூறினால் அதனை நீங்கள் நம்புவீர்களல்லவா! என வினவினார்கள். அதற்கு அனைவரும் ஒருமித்த குரலில் “நீர் மறந்தும் பொய் பேசா அல்அமீன் என்பதை நாங்கள் அறிவோமாதலின் உம் வார்த்தைகளை நிச்சயமாக நம்பவே செய்வோம்” என பதிலிறுத்தனர். அது கேட்ட அண்ணலார் “அவ்வாறாயின், நான் சொல்வதைக் கேளுங்கள்! நீங்கள் ஏகனாகிய இறைவனை மட்டுமே வணங்க வேண்டுமெனவும், அவனுக்கு இணை, துணை கற்பித்து விக்கிரகங்களை வணங்கக்கூடாதெனவும் உங்களுக்கு எச்சரிக்கை செய்யுமாறு அக்கருணையாளன் எனக்கு உத்தரவிட்டுள்ளான். எனவே, அப்து முனாப், ஸஹ்ரா, மக்ஜூமி, தமீம், அஸது ஆகியோரின் சந்ததயாரே! நீங்கள் விக்கிர வணக்கத்தைக் கைவிட்டு. உருவமில்லா இறைவனை வணங்கி வந்தால் ஈருலகிலும் ஈடேற்றம் பெறுவீர்கள். அவ்வாறல்லாது எனது வார்த்தைகளைப் புறக்கணித்து உங்களின் பழைய மூடக் கொள்கையின் வழியிலேயே இனியும் செய்து கொண்டிருப்பீர்களாயின், நிச்சயமாக நீங்கள் இன்னல், இடையூறுகளுக்கும் பெரிய இழப்புக்கும் ஆளாவீர்கள். இதனை எடுத்துரைத்து எச்சரிக்கை செய்யவே நான் உங்களை அழைத்தேன்” எனக் கூறினர். அக்கூட்டத்தினரிடையே நின்ற பெருமானாரின் பெரிய தந்தையாகிய அபூலஹப் என்னுங் கொடியோன், தங்களை வீணுக்கழைத்துச் சிரமங் கொடுத்து பீதியடையச் செய்ததாகக் குறை கூறிக் கடிந்து கொண்டதுடன் மண்ணையும் வாரித் தூற்றிவிட்டுச் சென்றான். அவனைத் தொடர்ந்து அங்கிருந்தவர்களனைவரும் வெறுமனே கலைந்து சென்றனர். உத்தமத் திருநபியவர்களுக்கு ஊக்கமளிப்போர் அப்போது அங்கே எவருமில்லை.

இதுபோல பிறிதொரு சமயம், பெருமானார் அலீயை அழைத்து, “நம் உறபினரிடம் எனது தூதை அறிவித்தால் அது அவர்களுக்கு மிகக் கசப்பாயிருக்கும் என்பது தெரிந்து மௌனமாயிருந்தேன். ஆனால், இப்போது ஜிப்ரீல் வந்த தூதை நான் நம் உறவினரிடம் அறிவிக்க வேண்டுமெனவும் இல்லாவிடில் நான் இறைவனின் தண்டனைக்கு ஆளாக நேரிடுமெனவும் அறிவித்துள்ளார். எனவே, நீ சிறிது ஆட்டிறைச்சியுடன் கூடிய உணவும் ஒரு கோப்பை பாலும் ஆயத்தம் செய்து கொண்டு அப்துல் முத்தலிபின் மக்களை விருந்துக்கு அழைத்து வருவாய். நான் அவர்கள் மத்தியில் இறைவன் எனக்கு உத்திரவிட்டுள்ளதை வெளியிட்டுக் காண்பிக்கிறேன்” எனக் கூறினார்கள். அலீ, பெருமானார் கூறிய வண்ணம் விருந்துக்கழைத்தார். அதற்கு அபூத்தாலிப், ஹம்ஸா, அப்பாஸ், அபூலஹப் உட்பட சுமார் 40 பேர் வந்திருந்தனர்.

பெருமானார், அலீ கொண்டு வந்த பாத்திரத்திலிருந்து இறைச்சித் துண்டொன்றை எடுத்து அதைக் கடித்து இரண்டாக்கி, “பிஸ்மில்லாஹ், சாப்பிடுங்கள்” எனக் கூறி அனைவரையும் விருந்துண்ணச் சொன்னார்கள். விருந்து முடிந்ததும் பெருமானார் பேச வாயெடுத்தார்கள். அப்போது அண்ணலாரின் பெரிய தந்தையான அப்துல் உஸ்ஸா என்ற ‘அபூலஹப்’ (நெருப்பின் தந்தை) “விருந்துண்ண அழைத்தீரேயன்றி உம் பேச்சைக் கேட்க அழைக்கவில்லையே!” எனக் கூறியவாறு எழுந்து வெளியேறினான். அவனைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் வெளியேறினர். தம் முயற்சி தோல்வியுற்றதைக் கண்ட பெருமானார் மீண்டும் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து முன்போல் உறவினர்களை அழைத்தார்கள்.

அவர்கள் மறுமுறையும் வந்து விருந்துண்டனர். ஆனால், இன்று இறைவனின் தூதர் சற்று முன்னெச்சரிக்கையுடன் எழுந்து நின்று வந்துள்ளோரை விளித்து, “எனது உறவின் முறையாரே! அப்துல் முனாபின் வழித்தோன்றல்களே! நான் உண்மை பேசுபவனா அல்லனா என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அப்துல் முத்தலிபின் சந்ததியாரே! எந்த அராபியனும் நான் கொண்டு வந்திருப்பதை விட மேலானதொரு செய்தியை உங்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் என்றும் கொண்டு வந்ததில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். இம்மையிலும், மறுமையிலும் சிறந்த பயனளிக்கும் சுபச் செய்தியை நான் உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் விக்கிரக வணக்கத்தைக் கைவிட வேண்டுமெனவும், உங்களைத் தன் மார்க்கத்தின்பால் அழைக்குமாறும் இறைவன் எனக்கு உத்தரவிட்டுள்ளான். இவ்வழைப்பை உங்களில் எத்தனைபேர் ஏற்று எனது தூதுக்கு ஆதரவு நல்கச் சித்தமுடையோராய் இருக்கிறீர்கள்?” என அன்புக்கரம் நீட்டி மும்முறை வினவினார்கள். ஒருவரும் பதில் பேசவில்லை. மௌனம் சாதித்தனர். சுமார் பன்னிரண்டு வயதே நிரம்பப் பெற்ற சிறுவர் அலீ மட்டும் எழுந்து, “தங்களுடைய தூதில் நான் தங்களுக்கு உதவியாளனாக இருந்து வருவேன்” எனக் கணீரென மொழிந்தார். குழந்தையாகத் தொட்டிலில் தூங்கியபோது, ஓர் நாள், நச்சரவம் ஒன்று தம்மீது ஊர்ந்ததால் விழிப்புற்ற பாலகர், விளையாட்டாக அதன் தலையைப் பிடித்துக் கையாலேயே இறுக்கிச் சாகடித்த அல்லாஹ்வின் புலி’யல்லவோ இந்த அலீ! ஆனால் விருந்துண்ட மற்றவர்கள் முன்தினம் போலவே இன்றும் அபூலஹபைப் பின் தொடர்ந்து ஏளனம் பேசியவாறு எழுந்து கலைந்து சென்றனர். அந்த நெருப்பின் தந்தை ஏசிப் பேசி வசைப் பாடிக்கொண்டு சென்றான்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் நபிகள் பெருமான் கஃபாவிலும், முச்சந்திகளிலும், மக்கள் கூடுமிடங்களிலும், சந்தை, திருவிழா நடக்குமிடங்களிலும் தம் பிரச்சாரப் பணியை உத்வேகத்துடன் செய்யத் துவங்கி விட்டார்கள். ஏகநாயனாகிய இறைவன் ஒருவனையே மெய்யான தெய்வமாகக் கொள்ள வேண்டுமென்றும், அவனுடைய அளப்பரிய அருட்கொடைகளை எடுத்து விளக்கியும், விக்கிர வணக்கத்தைக் கைவிடுமாறும், அவ்வாறு செய்து அனாச்சாரங்களை விட்டொழித்து நாகரிகத்தையும், நற்கருமங்களையும், கைக்கொண்டால் இம்மையிலும், மறுமையிலும் ஏற்றம் அடையலாம் என்றும், அவ்வாறு நடக்கத் தவறி, தாங்கள் இருந்து வரும் தீயவழியிலேயே மக்கள் சென்று கொண்டிருந்ததால் இறைவனின் முனிவுக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரும் எனவும் எச்சரித்து உபதேசம் புரிந்து வந்தார்கள்.

திருத்தூதரவர்கள் இஸ்லாத்தைப் பற்றிய பிரச்சாரம் செய்வதை மக்கத்துக் காபிர்களான (நிராகரிப்பவர்) குறைஷிகள் அதிகம் பொருட்படுத்தவில்லை. ஆனால் விக்கிர வணக்கம் ஒழிக்கப்பட்டால் தங்களில் சுகவாழ்வு, பொருளாதாரம், பிழைப்பு, குலப்பெருமை, தலைமைத்தனம், ஆகிய எல்லாம் அழிந்து விடுமே என்ற அச்சம் தான் அவர்களை வாட்டி வேதனைப்படுத்தியது. தவிரவும், பெருமானாரின் பதிய கொள்கை, குறைஷிகளின் மத நம்பிக்கை, வணக்கமுறை, வாழ்க்கைப் பாதை, இவற்றையெல்லாம் முற்றிலும் மாற்றியமைத்து பணக்காரன் - ஏழை, ஆண்டான் - அடிமை, முதலாளி – ஊழியன் என்ற பாகுபாடுகளை ஒழித்துக் கட்டி, எல்லோரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் நிறை என்ற புதிய தத்துவத்தைப் புகுத்த முனைவதால்,

ஆணவம் நிறைந்த அக்குறைஷிகள் அது கண்டு துணுக்குற்றனர். எனவே ஏந்தல் நபியவர்களைத் தீவிரத்துடன் எதிர்ப்பதெனவும் பகைமையுடன் பாவிப்பது எனவும் முடிவு செய்தனர். குறைஷிகள் தம்மைப் பழிப்பதையோ புறக்கணிப்பதையோ பெருமானார் கிஞ்சிட்டும் பொருட்படுத்தவில்லை. இறைவனின் கட்டளையை இம்மியும் பிசகாது எடுத்துக்கூறுவதிலும் செயலாற்றுவதிலுமே அவர்கள் ஓர்மையுடன் முனைந்து நின்றார்கள்.

**அபூலஹப்**

வள்ளல் நபியவர்கள் வீதியில் நடந்து செல்லும் போது வசைபாடுவதும், கேலி, நையாண்டி செய்வதும், பைத்தியம் பிடித்தவர், சூனியக்காரர், மாயாவி, பிசாசு பிடித்தவர் எனத் தூற்றுவதும் குறைஷிகளின் அன்றாடக் கடமையாகிவிட்டது. பெருமானார் மீது வசை கவிகள் எத்தனையெத்தனையோ பாடப்பெற்றன. இடையூறுகள் எவ்வளவோ செய்யப்பெற்றன. கஃபாவிலும் தெரு முனைகளிலும், சந்தை கூடுமிடங்களிலும் நின்று அவர்கள் பிரச்சாரத்தை ஆரம்பிக்கையில், சிறுவர்களையும், காலாடிகளையும், ஏவிவிட்டுக் கூச்சலிடச் செய்வது, குப்பை கூளங்களையும், சேறு சகதிகளையும் வாரி வீசுவது, கஃபாவில் தொழுது கொண்டிருக்கும்போது ஒட்டகையின் குடல், இளங்கொடி இவற்றைக் கொண்டு வந்து பெருமானாரின் புனித மிக்க முதுகிலும், கழுத்திலும் போடுவது, வழிநடக்கும் பாதைகளில் முட்களைப் பரப்பி வைப்பது, இன்னும் இதைப் போன்ற எத்தனையோ இன்னல்களைச் செய்து வந்தனர். வன்னெஞ்சம் மிக்க குறைஷிக் காபிர்கள். இந்த நீசத்தனமான “கைங்கரியத்தில் பெருமானாரின் பெரிய தந்தையான அபூலஹபும் அவன் மனைவியும் அபூசுப்யானின் தங்கையுமான கொடு நீலி உம்முஜமீலும் பிரதானப் பங்கு பற்றிக் கண்ணும் கருத்துமாயிருந்து இடுக்கண் விளைவித்து வந்தனர். மற்றவர்களை விடத் தம் நெருங்கிய உறவினரான இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதை நினைத்துப் பெருமானார் பெரிதும் வேதனையுற்றார்கள். மரணப் படுக்கையிலிருந்த அப்துல் முத்தலிப் தம் பேரர் முஹம்மதுவைத் தம் மக்களில் ஒருவரிடம் ஒப்படைத்துச் செல்ல கருதிய போது பெருமானாரை ஏற்க முதன்மையாக முன் வந்தவன் இக்குணங்கெட்ட கொடியோன், அபூலஹபேயாவான், இதனாலன்றோ இறைவனின் நாட்டம் அண்ணலாரை அன்புள்ள கொண்ட அபூதாலிபிடம் ஒப்படைக்குமாறு செய்து விட்டது.

இக்கொடுந் தம்பதியர் அடையவிருக்கும் அவகேடான சாவு பற்றி இறைவன் தன் திருமறையின் 111ம் அத்தியாயத்தின் மூலம் முன்னறிவிப்புச் செய்தான். இவ்வத்தியாயம் வெளியான செய்தியறிந்து அபூலஹபும் அவன் மனைவியும் அடங்காச் சினம் கொண்டனர். ரசூலுல்லாஹ் அவாகளின் புத்திரிகள் ருகையா, உம்மு குல்தூம் ஆகிய இருவரையும், அபூலஹபின் புதல்வர்களான உத்பா, உதைபா ஆகிய இருவருக்கும் அப்போது திருமணம் செய்யப் பெற்றிருந்தது. அவ்விரு பெண்மணிகளுக்கும் மணவிடுதலையளித்துப் பெருமானாரிடம் அனுப்பி விடுமாறு அபூலஹப் தன் புத்திரரை வற்புறுத்தினான். தகப்பனுக்கு அஞ்சிய தனயர்களிருவரும் தம் மனைவியரை விவாகரத்துச் செய்து பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டனர். பின்னர் இவ்விரு திருப்புதல்வியரையும் ஹலரத் உத்மான் அவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராகத் திருமணம் செய்து கொண்டார்கள்.

திருத்தூதரவர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களைக் கண்டு மணந்தாளா அபூதாலிப். இனி எவரும் தம் தம்பி மகனுக்கு இன்னல் விளைவிப்பின் தம் குடும்பத்தார் அனைவரும் ஒன்றுபட்டு உயிர்த்தியாகம் செய்தாகிலும் குடும்ப கவுரவத்தைக் காக்க நேருமென எச்சரித்தார். அதனைக் கேட்ட குறைஷிகள் தங்கள் கொடுமைகளைசட சற்றுத் தளர்த்திக் கொண்டனர். அண்ணலாரும் சபா குன்றின் மீதமர்ந்த அர்கம் என்பாரின் மாளிகையில் போயிருந்து சிறிது காலம் வீட்டங்கத் தம் பிரச்சாரத்தைச் செய்து கொண்டிருந்தார்கள்.

**குறைஷிகள் தூது**

எனினும், மக்கள் தொடர்ந்து சிறுகச் சிறுக இஸ்லாத்தில் இணைந்து வருவதைக் கண்ட குறைஷிகள் மனங்குமைந்தனர். தங்களின் எதிர்ப்பை வலுப்படுத்தத் துவங்கினர். முதன் முறைாக அபூசுப்யான் தலைமையில் அபூதாலிபிடம் தூது சென்று குறையிரந்தனர். அவர் ஒருவகையாகச் சமாதானங்கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

மறுமுறை, குறைஷிகள் தங்களுக்குள் ஆலோசனை கலந்து, அம்மார் பின் வலீத் என்னும் சௌந்தர்யமிக்க வாலிபனை, அபூதாலிபிடம் அழைத்துச் சென்று, “இவ்வழகிய வாலிபனைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு, முஹம்மதை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்கள் அவரை ஒழித்துக் கட்டி விடுகிறோம்.” என இரக்கமற்ற மொழி பகர்ந்தனர். அபூத்தாலிப் ஆத்திரங் கொண்டவராய் எக்களிப்புச் சிரிப்பொன்றை வெடித்தவாறு, “நன்று, நன்று நீங்கள் சொல்வது வெகு அழகாக இருக்கின்றது “ உங்கள் மகனை நாம் ஊட்டி வளர்க்குமாறும், என் உயிருக்குயிரான மகனை நான் உங்களிடம் கொல்லத் தருமாறும் என்னிடமே துணிந்து கேட்க முன் வந்து விட்டீர்கள். சென்று வாரீர்” இது ஒருக்காலும் நடவாது” என முகத்தில் அறைந்தாற் போல் பதில் கூறி அனுப்பி விட்டார்.

மற்றொரு முறை இவர்கள் அபூதாலிபிடம் சென்று முஹம்மதைக் கட்டுப்படுத்த முடியாவிடில் தங்களிடம் ஒப்படைத்துவிடுமாறும், அவ்வாறு செய்யாவிடில், ஹாஷிம் குலத்தாருக்கும் ஏனைய கோத்திரத்தாருக்குமிடையில் போர் மூளும் சூழ்நிலை ஏற்படுமென்றும் கடுமையாக எச்சரிக்கை விடுத்தனர். அபூதாலிபுக்கு அப்போதிருந்த வறுமையும், ஒன்றுபட்ட எதிர்ப்பைச் சமாளிக்க இயலாத தன்மையும் சிறிது கவலையளித்தன. குறைஷிகளைத் தனிமையில் எதிர்ப்பதற்குச் சற்று தயங்கினார். மனந்தளர்ந்தார். குறைஷிகளைப் பகைக்கவும் மனமில்லை. அதேசமயம் தம் தம்பி மகனைக் கைவிடவும், கஷ்டத்திற்குள்ளாக்கவும் விருப்பமில்லை. ஆலோசித்தார் அழைத்துவரச் சொன்னார். குறைஷிகள் வந்தபோன விவரத்தை எடுத்து விளக்கினார். அவர் நயனங்கள் கண்ணீரை மல்கி நின்றன் அபூதாலிப் பேச்சைத் துவக்கினார். “என் அன்பிற்குரிய தம்பி மகனே! என்மீதும் எனது முதுமைப்பருவத்தின் மீது இரக்கங்காட்டுவாய். நான் தாங்க முடியாத பொறுப்பை என்மீது சுமத்திவிடாதே. குறைஷிகள் அனைவரையும் நாம் ஏக காலத்தில் பகைத்துக் கொள்ளவும் எதிர்த்து நிற்கவும் இயலாதன்றோ?” என ஏக்கம் மேலிடக் கேட்டார். அவருடைய இவ்வார்த்தைகளைச் செவியேற்ற அண்ணலவர்கள் தம் நிலையையும் தம் பெரிய தந்தையாரின் நிலையையும் மனதில் திரையிட்டுக் கொண்டு சற்று நேரம்

சிந்தனையிலாழ்ந்தார்கள். ஏன்? இ∴து நபிகளாரின் வாழ்க்கைக்கும் உலகின் எதிர்காலத்திற்கும் சவாலான ஒரு பிரச்சனையாகத் தலை தூக்கி நின்றது. சிந்தனைன கலைந்தது. இறைவனின் பாதுகாப்பிலே தங்களை முற்றும் ஒப்படைத்தவர்களாக, அபூதாலிபை நோக்கி, “என்னருமைப் பெரிய தந்தையே! இறைவன்மீது பிரமாணமாகக் கூறுகிறேன். அவர்கள் சூரியனை எனது வலக்கரத்தின் மீதும் சந்திரனை எனது இடக்கரத்தின் மீதும் கொண்டு வந்து வைத்து எனது தூதைக் கைவிடச் சொல்லினும், அதை நான் ஏற்கமாட்டேன். இம்முயற்சியில் இறைவன் எனக்கு வெற்றியை நல்கும் வரை அல்லது இதனால் நான் அழிந்தொழியும் வரை எனது பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்றே தீரும். உங்களுக்கு இயலாதாயின் என்னைத் தனியாக விட்டுவிடுங்கள். நீங்கள் வேண்டுமாயின் குறைஷிகளின் சார்பில் இருந்து கொள்ளுங்கள்” என உணர்ச்சி ததும்பக் கூறியவர்களாய் அவ்விடத்தை விட்டும் புறப்பட்டார்கள். இவ்வார்த்தைகள் தளர்வு கண்ட அபூதாலிபின் மனதில் மின்சாரம் போல பாய்ந்து புதிய தெம்பையும் தைரியத்தையும் ஊட்டின. பாய்ந்து சென்று அபூதாலிப், பெருமானாரைக் கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டு “நல்லது மகனே! உம் நோக்கப்படியே நடந்து கொள்ளும். க∴பாவின் இறைவன்மீது ஆணையாக எதுவரினும் உம்மை நான் புறக்கணிப்பதில்லை. என்றும் நான் உமக்குப் பக்கபலமாகவே இருந்து வருவேன், இது உறுதி” எனக் கூறி அனுப்பி வைத்தார்.

இதற்குப் பின் அறைவனின் திருத்தூதர் தமது இஸ்லாமியப் பிரச்சாரத்தை முன்னிலும் பன்மடங்கு வேகமாக செய்ய முனைந்தார்கள். விக்கிர வணக்கத்தின் வழிகேட்டையும் குறைஷியரின் குறைமதியையும் வன்மையாகத் தாக்கி அவர்களை இறைவனது சன்மார்க்கத்தின் பக்கம் அழைத்தார்கள்.

இப்போது குறைஷிக் கோத்திரத்தாருக்குள் வாக்கு வாதங்கள் முற்றிப் பிளவுகள் தலைநீட்டின. பெருமானாரின் தூதை அபூதாலிப் ஏற்கவில்லையாயினும் தம் தம்பி மகனை மற்றவர்கள் அவமதிப்பாக நடத்துவதையும் அதனால் ஹாஷிம் வமிசத்திற்கு அவகீர்த்தி நேருவதையும் தடுக்க முனைந்தனர். தம் உறவழனர் அனைவரையும் ஒன்றுகூட்டிப் பெருமானாரைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அபூலஹபையும் பெரிய தந்தை ஹாரிதின் மகன் அபூசுப்யானையும் தவிர்த்து ஹாஷிம் குலத்தார் அனைவரும் அபூதாலிபின் ஆணைப்படி நடக்கச் சித்தமாயினர். அது கண்டு அவர் அகமகிழ்ந்தார். தம் குலத்தின் கீர்த்தி, மேன்மை இவற்றை நினைவு கூரும் கவிதை ஒன்றைப் புனைந்தார். ஹாஷிமிகளுக்கும் ஏனையக் குறைஷிகளுக்கும் இடையில் பூசலும் பிணக்குகளும் ஏற்பட்டன.

**எதிர்ப்பின் உச்சம்**

இப்போது க∴பாவைத் தரிசிப்பதற்காக வெளியூர் யாத்திரிகர் மக்காவில் வந்து கூடும் சமயம்ஈ நபிகள் கோமானின் தூதுபற்றி அவர்கள் ஓரளவு கேள்வியுற்றிருந்த நேரம் அது. இதைக் கருதிக் குறைஷிகள் வலீத் பின் முகைரா என்பவரின் தலைமையில் கூடி ஆலோசனை கலந்தனர். முடிவில் மக்காவுக்கு வரும் எல்லாப் பாட்டைகளிலும் தம் ஆட்களை நிறுத்தி, முஹம்மது ஒரு மாயா ஜாலக்காரர் எனவும், பேச்சுத் திறமையுள்ளவர் எனவும் விஷயங்களை உண்மைக்கு மாறாகத் திரித்துக் கூறி, யாத்திரிகர்களை ஏமாறாதிருக்குமாறு எச்சரிக்க வேண்டுமென்ற தீர்மானத்துக்கு

வந்து அவ்வாறே செயலாற்றவும் துவங்கினர். குறைஷியரின் இம்முயற்சி நினைத்தற்கு நேர் மாறான பலனையே அவர்களுக்கு அளித்தது. மக்கா வந்த யாத்திரிகர் குறைஷினளின் வார்த்தையில் மயங்காமல், அதில் ஏதோ சூது இருப்பதாக கருதி, பெருமானரை நேரில் காணவும், அவர்களின் திருவாய் மொழிகளைச் செவிமடுக்கவும் அவாவுற்று அன்னார் பிரச்சாரம் புரியும் இடங்களை நோக்கி விரைந்தனர். அண்ணலாரின் அமுதவாய் மொழிகளையும் இற்புதத் திருவசனங்களையும் அள்ளிப்பருகி ஆனந்தமுற்றனர். தெளிவான விளக்கமும் பேச்சுத் திறனும் கொண்ட அவர்களது ஹவாஸின் நாக்கு, கேட்போர் உள்ளங்களைத் தம்பால் பற்றி இழுத்தது. அனைவரும் மெய் மறந்து நின்று கேட்டனர். இதனைக் கண்ட குறைஷிகள் ஏமாற்றமும் அவமானமுற்றனர். யாத்திரை காலம் முடிந்தது. பெருமானரைப் பற்றிய பேச்சும் புகழும் அரபு நாடெங்கும் பரவியது.

யாத்திரையிலிருந்து திரும்பியவர்கள் வாயினின்றும் யத்ரிப் மக்கள் பெருமானாரையும் அவர்களின் புதிய தூதையும் பற்றிக் கேட்டறிந்தனர். ஏற்கனவே, யத்ரிபிலுள்ள மக்களுக்கு அங்கு வசதியும் யூதர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகமிருந்ததால், அவர்களிடமிருந்து அரபு நாட்டில் இறைதூதர் ஒருவர் தோன்றவருக்கிறார் என்பதை அவர்கள் அட்டின்றி அங்கரீத்தனர். உண்மையென உவந்தனர். மக்காவின் குறைஷியர் காட்டிய எதிர்ப்புத் தன்மையையும் ஒருவாறு புரிந்துகொண்டனர்.

குறைஷிகளின் பொறமைத்தீ இப்போது கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. முட்டாள்களையும் முரடர்களையும் தூண்டி விட்டுத் திருத்தூதரவர்களை ஏசிப் பேசத் தலைப்பட்டனர். ஒருமுறை குறைஷிகள் க.்.பாவில் கூடி ஊர்வம்பு பேசிக்கொண்டிருந்த போது, நாயகம் அவர்கள் ‘தவாபு’ செய்வதற்காக அங்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் சிலர் அடாத வார்த்தைகளால் ஏசியது பெருமானாரின் காதில் விழுந்தது. ஒருமுறைக்கு இருமுறை பொறுத்தார்கள். மூன்றாம் முறையும் அவ்வாறு பேசவே, குறைஷிகளை நெருங்கி ‘ஏ குறைஷிகளே! நான் சொல்வதை நீங்கள் கேட்பீர்களா? ஆண்டவன் மீது பிரமாணமாக, இறைவனின் பெயரில் அர்ப்பணிக்கப்பெற்றவற்றை நான் உங்களுக்குக் கொண்டு வரட்டுமா?” என வினவினார்கள். கூடியிருந்தவர்கள் பதில் சொல்லத் தெரியாது விழித்தனர்.

முரடனான ஒருவன் மட்டும் எழுந்து, “அபுல் காஸிமே! ஆண்டவன் மீது ஆணையாகத் தாங்கள் என்றும் பலாத்கார வழியில் சென்றதில்லை” எனக் கூறிச் சமாதானப்படுத்தினான். அதன்பின் நபிகள் பிரான் அங்கிருந்து அகன்றார்கள்.

மறுநாளும் குறைஷிகள் க.்.பாவில் கூடி அண்ணலாரைப் பற்றி ஆத்திரத்தோடு பேசிக் கொண்டிருந்தனர். அன்றும் நாயகம் அவர்கள் அங்கு வர நேர்ந்தது. அனைவரும் அவர்கள் முன் பாய்ந்து சென்று “எங்களின் தெய்வங்களைப் பழித்து பேசுவது நீர்தானா?” எனக் கேட்டனர். “ஆம், நான்தான்” எனக் கனீரெனக் கழன்றனர் நபிகள் நாதர். அவர்களில் உத்பா பின் அபூமுயீத் என்பவன் சட்டென தனது மேலத்துணியைப் பெருமானாரின் கழுத்தில் போட்டு முறுக்கினான். அதனால் அவர்கள் மூச்சுத் திணறி மயக்கமுற்றார்கள். எதிர்பாராத விதமாக அந்நேரத்தில் அபூபக்கர் (ரலி) அங்கு வந்தார்கள். அண்ணலாரின் நிலையைக் கண்டு கண் கலங்கியவராய்,

“இறைவன் ஒருவனே என்ற உண்மையைச் சொல்வதற்காகவா ஒருவரை நீங்கள் கொல்ல முற்படுகிறீர்கள்?” என ஆவேசத்துடன் கூறியவராய், அம்மூடனின் முரட்டுப் பிடியிலிருந்து பெருமானாரை விடுவித்தார்கள்.

**அபூஜஹல்**

குறைஷிகளில் சுமார் 45 வயதுடைய அம்ருப்னு ஹிஷாம் மக்ஜூமி என்பவன் இருந்தான். இவன் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவன். வாக்குச் சாதுரியமும் செல்வாக்கும் உடையவன். அபூலஹப் போன்று இவனும் அண்ணலாருக்கு இன்னல் விளைவிப்பதில் அளவற்ற இன்பங்கண்டு வந்தான். இதன் காரணமாக முஸ்லிம்கள் அவனை ‘அபூஜஹல்’ அறிவீனத்தின் தந்தை என அழைக்கலாயினர். குறைஷிகள் அவனை ‘அபுல்ஹிகம்’ (அறிவின் தந்தை) என்று அழைத்து வந்தனர்.

ஒரு தடவை நபிகள் நாதர் கஃபாவுக்குச் சென்று தொழுது கொண்டிருந்தார்கள். அபூஜஹலின் தூண்டுதலின் பேரில், உத்பாபின் அபூமுயீத் என்பவன் அப்போது ஈன்ற ஒட்டகையின் இளங்கொடி ஒன்றை எடுத்து வந்து பெருமானாரின் பிடரியின் மீது போட்டான். இதைக் கண்ட அபூஜஹலும் அவன் சகாக்களும் கைகொட்டி விழுந்து சிரித்தனர். அண்ணல் நபியவர்கள் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது வணக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். பெருமானாரின் திருப்புதல்வி பத்து வயதுச் சிறுமியான பாத்திமா இதையறிந்து ஓடிவந்து அந்த அசுத்தத்தை அப்புறப்படுத்திக் குறைஷிகளையும் சபித்தார். சாந்த சொரூபியான சத்தியத் திருநபியவர்கள் தம் புதல்வியைச் சமாதானப்படுத்தி பேசுவதை நிறுத்தினார்கள்.

மற்றொரு நாள் பெருமானார் ‘சபா’ குன்றருகே இருப்பது தெரிந்த அபூஜஹல் அங்கு சென்று அண்ணலாரை வாயில் வந்தபடி ஏசிவிட்டுக் கஃபாவுக்கு வந்தவன். அங்கிருந்த தன் சகாக்கள் மத்தியில் உட்கார்ந்து அதுபற்றி ஜம்பம் அடித்துக் கொண்டிருந்தான். இச்செய்தியை வேட்டைக்குச் சென்று வீடு திரும்பிய பெருமானாரின் சிறிய தந்தை ஹம்ஸா, அப்துல்லா பின் ஜுத்ஆன் என்பவரின் பணிப்பெண் வாயால் கேட்டறிந்தார். ஆத்திரம் மிகக் கொண்டவராக வேட்டைக்குச் சென்ற கோலத்துடனேயே நேரே கஃபாவுக்குச் சென்றார். அங்கு வீற்றிருந்த அபூஜஹலை நோக்கி, “நான் முஹம்மதுவின் மார்க்கத்தைப் பின்பற்றி அவரைப் போல் நானும் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டால் என்னைத் தடுத்து நிறுத்தும் திராணி உனக்கு உண்டா? என வினவியராய்த் தம் வில்லால் அவனை ஓங்கி அடித்தார். அருகிலிருந்த அவன் தோழர்கள் ஹம்ஸாவுடன் பொருத எழுந்தனர். அபூஜஹர் அவரைக் கையமர்த்தியவாறு ஹம்ஸாவை நோக்கி, “உண்மையில் நான் முஹம்மதை அனாவசியமாகவே பேசி விட்டேன்” எனக்கூறி வருத்தம் தெரிவித்தான். உடனே ஹம்ஸா அர்கம் மாளிகைக்குச் சென்று பெருமானாரிடம் நடந்தவற்றைக் கூறி இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார். இது நுபுவ்வத் ஆறாம் ஆண்டு நிகழ்ந்தது. அன்று முதல் ஹம்ஸா தம் அண்ணன் மகனைக் கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார்.

நாளுக்கு நாள் நபிகளாரின் பிரச்சாரத்திற்கு ஆதரவு ஒரு பக்கமும், எதிர்ப்பு மறு பக்கமும் வலுத்தன. ஒவ்வொரு கோத்திரத்திற்குள்ளேயும், குடும்பத்திற்குள்ளேயும், பிணக்கும் பூசலும் தலை தூக்கின. அண்ணன் பெருமானாரை எதிர்ப்பவனாகவும், தம்பி ஆதரிப்பவனாகவும், தந்தை விக்கிரக வணக்கக்காரனாகவும், மகன் முஸ்லிமாகவும், கணவன் பல தெய்வ வணக்கமுள்ளவனாகவும், மனைவி இஸ்லாத்தைத் தழுவியவளாகவும், ஆண்டான் விக்கிரகத் தொழும்பனாகவும், அடிமை ஏக தெய்வ வணக்கமுள்ளவனாகவும் இருந்து வந்தனர். இவ்வித முரண்பாடுகள் காரணமாக அவர்களுக்குள் எதிர்ப்புணர்ச்சிகள் நெடுகிலும் பரவி நின்றன.

**ஏழைகள் பட்டபாடு**

நபிகள் நாதரை மட்டும் குறைஷிகள் துன்புறுத்துவதோடு திருப்தியடையவில்லை. இஸ்லாத்தைத் தழுவிய ஏழைகளையும், அடிமைகளையும் அவர்கள் படுத்திய கொடுமைகளும் பண்ணிய சித்ரவதைகளும் சொல்லுந்தரமன்று, கல் மனமும் கரைந்து விடும் தன்மையதாயிருந்தன. கொதிக்கும் மணலில் கிடத்தி நெஞ்சில் பாராங்கல்லை தூக்கி வைப்பர். தண்ணீருக்குள் தலையை அமிழ்த்தி மூச்சுத் திணறச் செய்வர். காலில் பிரியைக் கட்டித் தெரு தெருவாக இழுத்துச் செல்வர். இன்னும் எத்தனையெத்தனையோ விதமான கொடுமைகள்! காணச் சகியாது. கண்ணீரைச் சிந்த வைக்கும்!. அவற்றின் சிலவற்றைக் கீழே காண்போம்.

பிலால் இப்னு ரபாஹ் என்ற நீக்ரோ அடிமையை அவர் எஜமானன் உமய்யா பின் கலப் என்பவன் அவரது கழுத்தில் கயிற்றைக் கட்டி பையன்களை ஏவித் தெரு தெருவாக இழுத்துச் செல்லச் செய்வான். அதனால் கயிறு அழுத்திக் கழுத்திலிருந்து இரத்தம் வழிந்தோடும். முதுகும் தேய்ந்து குருதி தோய்ந்தோடும். அவரது உடலைப் பச்சைத் தோல் கொண்டு சுற்றி அத்தோல் கிழியும் வரை கழி கொண்டு நையப் புடைப்பான். இத்தனை கொடுமையிலும் அவரது புனித வாய் “அஹதுன் அஹதுன்” (ஏகன், ஏகன்) என்ற வார்த்தைகளை மட்டிலுமே உச்சரித்துக் கொண்டிருக்கும். அப்போது பிலாலுக்கு வயது இருபத்தேழு.

இக்கொடுமையைத் தாம் செல்லும் பாதையில் பல தடவை கண்டு மனந்தாளா அபூபக்கர் ஒருநாள் பிலாலின் எஜமானன் உமய்யாவிடம், “இவ்வேழை அடிமையை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறாய்? இவைனின் அச்சம் உனக்கு ஏதும் இல்லையா? எனச் சினந்து கேட்டனர். அதற்கவன், “நீர் தானே இவனைக் கெடுத்து விட்டீர். உமக்கு இரக்கமாக இருந்தால் உமது பணப்பையைத் திறந்து இவனை வாங்கிக் காப்பாற்றுமே என ஏளனத்துடன் கூறினான். அதற்கு அபூபக்கர் (ரலி) “உன்னைப் போல் கல்லை வணங்கும் அடிமையொருவன் என்னிடமிருக்கிறான். நீ அவனை ஏற்றுக் கொண்டு பிலாலை என்னிடம் ஒப்படைத்து விடுகிறாயா?” எனக் கேட்டார். உமய்யா அதற்குச் சம்மதித்தான். உடனே தம் அடிமையைக் கொடுத்து, பிலாலைப் பெற்று அக்கணமே அவருக்கு விடுதலை அளித்து விட்டார் அபூபக்கர் (ரலி).

உமர் இப்னு கத்தாப் இஸ்லாத்தில் சேருமுன் முஸ்லிமாகி இருந்த தமது பெண் அடிமை லுபைனாவைத் தினமும் கை கடுக்கு மட்டும் அடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அபூஜஹல் தன் அடிமைப்பெண் சுமய்யாவை இஸ்லாத்தை தழுவியதற்காக மர்ம ஸ்தானத்தில் அம்பெய்து கொன்றான்.

யாஸிர் என்பவரை அவருடைய எஜமானன் அவரின் இரண்டு கால்களையும் இரண்டு ஒட்டகங்களின் பின்னங்கால்களில் இணைத்துக் கட்டி அவ்வொட்டகைகளை வலமும் இடமுமாக விரட்டிக் கவடு கிழித்து உயிர் துறக்கச் செய்தான். அக்கொடிய மாபாவி.

அபூபக்கர் (ரலி) இனிய சந்தமுடையவர். சாதாரணமாக அவர் தமது வீட்டின் முன் திண்ணையில் அமர்ந்து தினமும் குர்ஆன் திருவசனங்களை உருக்கமுடன், இனிய ராகத்தில் பரவசமுற்று ஓதுவது வழக்கம். அவ்வழியே செல்வோரும், அக்கம் பக்கத்துப் பெண்களும், சிறார்களும் அவர் ஓதுதலை லயித்து நின்று கேட்பர். அவர் ஓதுவதைக் காதால் கேட்ட அநேகர் அத்திருவசனங்களால் வசீகரிக்கப்பெற்று, இஸ்லாத்தைத் தழுவினர். இதைக்கண்ட குறைஷி களின் நெஞ்சம் புண்ணாகி நெடுமூச்செறிந்தன. அபூபக்கர் (ரலி)க்கு பல தொல்லைகளை அளித்தனர். அவர் மக்காவைத் துறந்து அபிஸீனியாவுக்குப் புறப்பட்டார். ஆனால் இடையில் இப்னு தக்னா என்ற தலைவர் ஒருவர் குர்ஆனின் திருவசனங்களை மற்றவர் காதில் விழா வண்ணம் மெல்லிய சத்தத்தில் ஓதிவருமாறு சமரசஞ்செய்து மக்காவிலேயே தங்க வைத்தார். எனினும், நீடித்து அவ்வாறு இருந்து வர அவரால் முடியவில்லை. எதுவரினும் வரட்டு மெனத் துணிந்து மீண்டும் சப்தமிட்டே ஓதத்தலைப்பட்டு விட்டார்.

அதுவுமின்றி, அவர் இஸ்லாத்தை மக்களிடை நன்கு பரவச் செய்யும் ஆர்வத்தினால், உணர்ச்சியினாலும் க.்.பாவுக்குச் சென்று பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்வதற்குப் பெருமானாரிடம் அனுமதி கேட்டார். அதற்குக் காலம் கனியவில்லை. எனக்கூறி அண்ணலார் அணைபோட்டு வந்தார்கள். எனினும், அபூபக்கர் (ரலி) கேட்பதாக இல்லை. பெருமானாரை வற்புறுத்தி அனுமதி வாங்கி ஒருநாள் க.்.பாவுக்குச் சென்று தமது குத்பாவைத் துவக்கினார். உடனே அங்கிருந்த குறைஷிகள் ஆத்திரமுற்றவர்களாய், அபூபக்கரை உணர்வு இழக்குமளவுக்கு அடித்தும் தாடியைப் பிடித்தும் படுகாயப்படுத்தினர்.

கப்பாப் இப்னுல் இர்ஸ் தமீமி என்பவர் உம்மு நுமர் என்பவரின் அடிமையாக இருந்தார். இஸ்லாத்தை ஏற்றதற்காக குறைஷிகள் கனலும் கங்குளின் மீது அவரைக் கிடத்தித் துன்புறுத்தினர். அதனால் அவரது முதுகு வெந்து பெரியதொரு வெண் தழும்பு ஏற்பட்டிருந்தது. பின்னொரு நாளை அதனைக் காண நேர்ந்த அமீருல் மூமினீன் ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் மிக்க அனுதாபமுற்றுக் கண்ணீர் சிந்தினார்கள்.

சில அடிமைகளை அவர்களின் கழுவிரக்கமற்ற எஜமானர்கள் ஓட்டகைகளின் பச்சைத் தோலில் சுற்றி மணலில் கிடத்திடுவர். சூரியன் கிழக்கிலிருந்து உதயமாகி மேலே ஏறிக் கொண்டு வரும்போது, அதன் சூடு அதிகமாகிக் கொண்டும் வரும் தோலால் சுற்றுப்பட்டுள்ள அவ்வடிமை சுருக்க இறுக்கத்தின் பிடியில் சிக்கி மரண வேதனையடைய நேரும்.

நஹ்தியா என்ற பெண்மணியும் அவர் மகளும் இஸ்லாத்தைத் தழுவி அப்துத்தார் என்பவரிடம் அடிமைகளாய் இருந்து வந்தனர். அபூபக்கர் (ரலி) அவ்விருவரையும் விலை கொடுத்து வாங்கி விடுதலை அளித்தார். அச்செய்தியை அவர் அப்பெண்மணிகளிடம் சொல்ல வந்தபோது, அவர்கள் தம் எஜமானருக்கு மாவு

அரைத்துக் கொண்டிருந்தனர். விடுதலைச் செய்தியைக் கேட்ட நஹ்தியா அரைப்பதை நிறுத்திவிட்டு எழுந்து சென்றுவிடவில்லை. மாறாக, அபூபக்கர் (ரலி)யிடம், “நாங்கள் இருவரும் வெகு நாட்களாக இந்த எஜமானரின் உணவை உண்டு வந்திருக்கிறோம். ஆனதால் குறை வேலைகளையும் சரிவர முடித்துக் கொடுத்துவிட்டு வருகிறோம்” என நன்றி விசுவாசத்துடன் நவின்றனர். இவ்வார்த்தைகளைக் கேட்ட அபூபக்கர் (ரலி) உள்ளம் பூரித்தார். அம்மாதரசியைப் போற்றிப் புகழ்ந்தார்.

**சாணக்கியம்**

நாளுக்கு நாள் நபிகள் நாதரின் சன்மார்க்க அணியில் மக்கள் அதிகமாகச் சேர்ந்து கொண்டே வந்தனர். இதைக் கண்ட குறைஷிகள் கிலேசமுற்றனர். ஒரு நாள் கஃபாவில் குறைஷிப் பிரமுகர்கள் பலர் கூடியிருந்தனர். அவர்களில் உத்பா பின் ரபீஆ என்பவரும் இருந்தார். இவர் அபூசுப்யானின் மாமனார் ஆவார். அங்கே அண்ணலாரும் தனியே ஓரிடத்தில் அமர்ந்திருந்தார்கள். உத்பாவுக்கு ஓர் யோசனை பளிச்சிட்டது. “முஹம்மதை அணுகி நயமாக ஆசை காட்டிப் பேசிப் பார்ப்போம். ஒரு வேளை வழிக்கு வந்தாலும் வரக்கூடும்”. எனக் கருதியவராய் மற்றவர்களையும் கலந்தார். இது நல்ல யோசனைதான் என அனைவரும் உவந்தனர். உத்பா மெதுவாக எழுந்து நாயகம் அவர்கள் இருந்த இடத்தில் போய், அவர்களில் அருகில் அமர்ந்து பேச்சை நளினமாகத் துவங்கினார். “சகோதரர் மகனே! நீர் உயர் குடியில் பிறந்தவர், உம் மூதாதையர் பெருமைமிக்கவர்கள், மேலும் நீர் எங்களைச் சேர்ந்தவர், நமது தெய்வங்களையும் ஆச்சாரங்களையும் நீ கண்டித்துப் பிரச்சாரம் புரிவதால் நமக்குள் வீண் பூசல்கள் உண்டாகின்றன. இதைச் சரிப்படுத்துவற்குச் சில வழிவகைகளை உம்மிடம் சொல்லலாமென நினைக்கிறேன்” என்றார். “நல்லது தெரிவியுங்கள்” என்றனர் பெருமானார். உத்பா தம் பேச்சைத் தொடர்ந்தார். “உமக்குப் பொருள்மீது விருப்பமிருந்தால் எங்களின் செல்வங்களை எல்லாம் உமது காலடியில் கொண்டு வந்து குவித்து உம்மைச் சீமானாக்குகிறோம். அல்லது பதவியின் மீது ஆசை இருந்தால் உம்மை எங்கள் மன்னராக முடி சூட்டி மகிழ்கிறோம். அல்லது பெண்களின் மீது உமக்கு விருப்பமிருந்தால் இவ்வரபு நாட்டின் அழகு மிக்க ஆரணங்கை உமது கைப்பிடிக்கச் செய்கிறோம். இவை எதிலும் உமக்கு ஆசையில்லையெனில் ஏதோ ஒருவித மூளைக் கோளாறினால் நீர் அவதிப்படுதாகவே நாங்கள் எண்ணத் துணிவோம். எனினும், அதையும் நிவர்த்திக்க எவ்வளவு பொருள் தேவைப்படினும், தயங்காது செலவிட நாங்கள் சித்தமாகவே இருக்கிறோம்” என ஒருவாறு கூறி முடித்தார்.

உத்பா கூறியவை அனைத்தையும் பெருமானார் பொறுமையுடன் புன்முறுவல் பூக்கக் கேட்டறிந்தனர். பின் அவரை நோக்கி, “தாங்கள் கூறிய ஆசைகள் எதுவும் எனக்கில்லை. நான் மூளைக் கோளாறினாலும் அவதிப்படவில்லை. என்னைப் பேய், பிசாசு எதுவும் பிடிக்கவுமில்லை. கருணையங்கடலான இறைவன் என்னை அவனின் திருத்தூதனாக நியமித்து, அவனது வேதத்தை அரபு மொழியில் அருளிச் செய்து, உங்களை நேர்வழிப்படுத்துமாறு உத்திரவிட்டுள்ளான். ஆனால் நீங்களோ நான் கூறுவதைக் கேட்க மனமில்லாது வெறுப்புக் காட்டி விலகி நிற்கிறீர்கள். இறைவனின் திருவசனங்களைக் கேட்டு அவற்றின்படி, நீங்கள் நடக்க முற்பட்டால் இம்மை.

மறுமைப் பேறுகளைப் பெற்றுய்வீர்கள். இல்லையேல், அவ்விறைவனே உங்களுக்கும் எனக்கும் இடையில் தீர்ப்பளிக்கப் போதுமானவன்" எனக் கூறியவர்களாய் குர்ஆனின் 41ம் "ஹாமீம்" அத்தியாயத்தின் 37 திருவசனங்களை உத்பாவுக்கு ஓதிக் காண்பித்தார்கள். இறுதியாக, "தெரிவிக்க வேண்டியதை உங்களிடம் தெரிவித்துவிட்டேன். மேற்கொண்டு நடந்து கொள்வது உங்கள் கையில் இருக்கிறது" என உத்தமத் திருநபி (ஸல்) உரைக்கலானார்கள்.

பெருமானாரின் பொன்மொழிகளனைத்தையும் செவி தாழ்த்திக் கேட்ட உத்பா, மனமாற்றமடைந்தவராக குறைஷிகளிடம் திரும்பி வந்து. "முஹம்மதுவின் வார்த்தைகளில் நான் எவ்வித மந்திர சூன்யத்தையும், செப்படி வித்தையுங் காணவில்லை. நான் சொல்கிறபடி நடந்தால் நமக்கு நன்மையுண்டு அவரை அவரது போக்கிலேயே விட்டுவிடுவோம். முஹம்மதுவின் போதனைகள் மற்ற இடங்களுக்கும் பரவத் தான் செய்யும். அதை நம்மால் தடுக்க முடியாது. முஹம்து வெற்றி பெற்றால் அது நமக்குப் பெருமையளிப்பதாகும். நாம் வளமுடன் வாழலாம். ஒருக்கால் அவர் தோல்வியுற நேர்ந்தால் அதில் அவர் மட்டுமே நசிந்து போவார். நம்மை ஒரு சிறிதும் பாதிக்காது என அறிவுரை பகர்ந்தார். இதனைச் செவிமடுத்த குறைஷிகள், "முஹம்மதுவின் பேச்சு வன்மை உத்பாவைக் கவர்ந்து ஆட்கொண்டுவிட்டது. அவர் அதில் மயங்கி மனம் மாறிவிட்டார் எனக் குத்தலாகக் கூறினார். அதற்கவர் "நான் கூற வேண்டியதைக் கூறி விட்டேன்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டும் அகன்றார். சிறிது காலம் சென்றது.

இறுதி முயற்சியாகப் பெருமானார் நேரில் அழைத்துப் பேசிப் பார்த்து விடுவது எனக் குறைஷிகளும் ஏனையக் கோத்திரத்தாரும் தீர்மானித்தனர். அதன்படி ஒருநாள் மாலை, பிரமுகர்கள் உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ, அபூசுப்யான் பின் ஹர்ப், நஸர் பின் ஹாரிஸ், கலதா, அபுல் பக்தரீ பின் ஹிஷாம், அப்துல்லா பன் அபீஉமையா, ஆஸ் பின்வைல் நபிய்யா, முனப்பஹ், உமையா பின் கலப் ஆகிய அனைவரும் க.்.பாவின் முற்றத்தில் வந்து கூடினர். அண்ணலாருக்கு ஆள் அனுப்பி அழைத்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குறைஷிகளுடன் மனம்விட்டுப் பேசி அவர்களைத் தம் வழிக்குத் திருப்பிவிடலாம் என்ற ஆவலுடன் பெருமானார் அங்கு விரைந்தார்கள். குறைஷிகள், முன்பு உத்பா பேசிய பாணியில் மண், பொண், மங்கை எனப் பேச்சைத் துவங்கிப் பேசினர். நபிகள் கோமான் அவற்றையெல்லாம் தாம் நாடவில்லையெனவும் அவர்களுக்கு இறைவனின் தூதை அறிவித்து அவர்களிடத்துள்ள மூடக் கொள்கைகளையும் அனாச்சாரங்களையும் கைவிடச் செய்து இறைவனின் வழியில் நடக்கத் தூண்டுவது தாம் தமது பணி எனவும் எடுத்துரைத்தார்கள்.

திருத்தூதரவர்களைத் தங்களின் வழிக்குத் திருப்ப இயலாதெனக் கண்ட குறைஷிகள், குதர்க்க வாதத்தில் இறங்கினர். வரண்ட அரபுநாட்டை வளமானதாக்கிச் செல்வம் கொழிக்கச் செய்யுமாறும், இல்லாவிடில் தமக்காகிலும் செல்வத்தையும், சுகபோகத்தையும் தம் இறைவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுரை கூற ஆரம்பித்தனர். "அல்லது இறைவனுக்கு நாங்கள் மாறு செய்கிறோமென்றால், இப்பொழுதே அவனது சாபத்தை எங்கள் மீது இறக்கி எங்களையெல்லாம் அழித்து

விடுவீர்” எனவும் கூறினர். அதற்கு எம்பெருமானாரவர்கள் “நீங்கள் கூறுபவற்றையெல்லாம் செய்து காண்பிப்பதற்காக நான் அனுப்பப்பட்டவில்லை. அது இறைவனின் நாட்டத்தைச் சார்ந்தது. அவனுடைய அறிவிப்புகளை உங்களுக்குத் தெரியப்படுத்தி, உங்களை நேர்வழியில் நடக்கச் செய்வதற்காகவே அவன் அடியானாகவும், தூதனாகவும் அனுப்பப்பட்டுள்ளேன். நான் சொல்வதை நம்பி நடந்தால் அதற்குரிய நற்பயனை அறுவடை செய்து கொள்வீர்கள். அல்லாவிடில், கசப்பான விளைவுகளை எதிர்நோக்குங்கள்” என அடக்கத்துடன் மறுமொழி பகர்ந்தார்கள். இப்போது, குறைஷிகள் சற்று ஆத்திரமடைந்தவர்களாய், “அவ்வாறாயின், நீர் கூறுவதை நாங்கள் ஏற்பதற்கில்லை. நீர் எங்களை அழித்தொழிக்கும் வரையிலோ அல்லது, நாங்கள் உம்மை இல்லாமலாக்கும் வரையிலோ போராட்டம் நடந்தே தீரும். உம்முடைய பேச்சில் நாங்கள் ஏமாற மாட்டோம் என முடிவாகக் கூறி விட்டனர். பெருமானார், பேச்சை மேலும் தொடர விரும்பாதவர்களாய் வருத்தத்துடன் அங்கிருந்து எழுந்து சென்றார்கள்.

குறைஷி நிராகரிப்போரின் குதர்க்கவாதம் எவ்வாறு இருந்தது என்பதனை இறைவன் தன் திருமறையில் பலவிடத்தும் எடுத்துக் காட்டி அவற்றிற்கு எம்பெருமானார் (ஸல்) யாது பதில் கூறிடல் வேண்டுமென்பதையும் விளக்கிக் காட்டுகிறான். அத்திருவசனங்களில் சிலவற்றைக் கீழே காண்போம்.

“பின்னும் அவர்கள் கூறுகின்றனர்: இந்த (அல்லாஹ்வின்) தூதரை வருத்துவது என்ன? அவர் (நம்மைப் போலவே) ஆகாரம் புசிக்கிறார். கடைத் தெருவுகளுக்கும் செல்கிறார் (இறைவன்) ஒரு மலக்கை இறக்கினால் இவருடன் இருந்து (அம்மலக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்து கொண்டிருப்பாரே”

“நபியே! நிச்சயமாக (உம்மைப்போல்) ஆகாரம் புசிப்பவர்களையும் கடைத்தெருக்களுக்குச் செல்பவர்களாயுமுள்ள தூதர்களையன்றி வேறு எவரையும் உமக்கு முன் நாம் அனுப்பியதில்லை.” – 25:20

மானிடருக்கு ஒரு நேரிய வழிபாட்டுதல் வந்தபொழுதெல்லாம் அவர்கள் “அல்லாஹ் ஒரு மனிதரையா தன்னுடைய தூதராக அனுப்பி வைத்தான்” என்று கூறுவதைத் தவிர, அவர்கள் விசுவாசங் கொள்வதற்குத் தடையாக வேறு எதுவும் இருந்ததில்லை.

“(அதற்கு) நீர் கூறும், பூமியில் (மனிதர்களுக்குப் பதிலாக) மலக்குகளே வசித்து அதில் அவர்கள் சாவதானமாக நடந்து திரிவதாயிருந்தால், நாமும் வானத்திலிருந்து (அவர்கள் இனத்தைச் சார்ந்த) ஒரு மலக்கையே (நம்முடைய) தூதராக அனுப்பியிருப்போம். (ஆகவே, மானிடப் பிறவிகளான அவர்களிடம் அவ்வினத்தைச் சார்ந்த உம்மை நம்முடைய தூதராக அனுப்பியதில் தவறேதுமில்லை” (17:94, 95)

(“அன்றி இவர் உண்மையான தூதர்தான்” என்று சாட்சி சொல்வதற்கு) அவருக்காக ஒரு மலக்கு அனுப்பப்பட வேண்டாமா?” என்று அவர்கள் கூறுகின்றனர்.

(அவர்கள் விரும்புவது போன்றே) நாம் ஒரு மலக்கை அனுப்பி வைத்திருந்தால், (அவர்களின்) காரியம் முடிவு பெற்றே போயிருக்கும். பிறகு (அதில்) அவர்கள் சிந்திப்பதற்கு அவகாசமே கிடைத்திராது. (அவர்கள் அழிந்து போயிருப்பர்).

“அல்லது, (நம்முடைய) தூதரை ஒரு மலக்காவே அனுப்புவதாயினும் (அவர்களுக்கு மலக்குகளைக் காணும் சக்தி இல்லாததினால்) அவரையும் ஒரு (வசனிக்கும்) மனித வடிவில் தான் நாம் அனுப்ப நேர்ந்திருக்கும். (அது சமயத்திலும்) இப்போதிருக்கும் சந்தேகத்தையே அவர்களுக்கு நாம் உண்டு பண்ணியதாகும்”. (6:8:9)

“(இவர்கள் கூறுகின்றவாறு) இவ்வேதத்தை ஷைத்தான்கள் கொண்டு வரவில்லை. அ∴து அவர்களின் தகுதிக்குடையதன்று! அதற்கான சக்தியும் அவர்களிடத்தில்லை. (26:210, 211)

“ஷைத்தான்கள் எவர்மீது இறங்கும் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கவா? பொய் சொல்லும் ஒவ்வொரு பாவியின் மீதும் இறங்குகின்றனர்.” (26:221, 222)

“(நபியே) இப்பூமியினின்றும் எங்களுக்காக ஊற்றுக் கண் ஒன்று பீறிட்டுக் கிளம்பினாலன்றி உம்மை விசுவாசிக்க மாட்டோம்”.

“அல்லது, மத்தியில் சதா நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் திராட்சை, பேரீச்சை மரங்களையுடைய சோலை ஒன்றினை நீர் பெற்றாலன்றி.

“அல்லது நீர் பயங்காட்டுவது போல் வானம் இடிந்து சிதறுண்டு எங்கள் மீது விழச் செய்தாலன்றி, அல்லது அல்லாஹ்வையும் மலக்குகளையும் நம்முன் பிரத்தியட்சமாக வரச் செய்தாலன்றி.

“அல்லது, (அழகிய) தங்க மாளிகை ஒன்று உமக்கு இருந்தாலன்றி, அல்லது நீர் வானத்திற்கு ஏறிச் சென்றபோதினும், நாம் ஓதக்கூடிய ஒரு வேத நூலை (நேராக) நீர் கொண்டு வந்தாலன்றி, நீர் வானத்தில் ஏறியதையும் நம்பமாட்டோம்” என்றும் கூறுகின்றனர் (அதற்கு) நீர் கூறும் எனது இறைவன் மிக்க மாட்சியமையுடையவன். நான் அவனின் தூதன் என்பதைத் தவிர (உங்களைப் போன்ற) மனிதப் பிறவியேயல்லாது வேறென்ன?” (என்பதாக) (17:90 – 93)

“வானத்தில் இவர்களுக்கென நாம் ஒரு வாசலைத் திறந்து விட்டு அதன் வழியே இவர்கள் ஏறிச் சென்று கொண்டிருந்த போதிலும் அப்போதுங் கூறுவர், எங்களின் கண் பார்வை கோளாறானது. நாங்கள் சூனியத்திற்குள்ளாகி விட்டோம் (என்று)” (15:14, 15)

“நிராகரிப்போர் கூறுகின்றனர். (திருக்குர்ஆனாகிய) இது, அவர் பொய்யாகப் புனைந்ததேயன்றி வேறில்லை. இதில் மற்றவர்கள் அவருக்கு உதவி புரிந்துள்ளனர்” (என்று), ஆகவே, இவ்வாறு (நிராகரிப்போர் கூறுவதின் காரணமாக) அவர்கள் களங்கத்தையும் பொய்யையுமே உருவாக்கியுள்ளனர்” (25:4)

(“நபியே!) குர்ஆன் (ஷரீப் என்னும் இவ்வேதம்) சர்வ லோகங்களுக்கும் எஜமானனாகிய இறைவனால்தான் அருளப்பெற்றது. அதனை நீர் (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, ரூஹுல் அமீன் (என்னும் வானவர் ஜிப்ரீல்) தெளிவான அரபிமொழியில் உமது இருதயத்தில் இறக்கிவைத்தார்.

“இது பற்றிய முன்னறிவிப்பு நிச்சயமாக முன்னுள்ள வேதங்களில் இருக்கவே செய்கிறது.

“இஸ்ராயீலின் சந்ததியிலுள்ள வேத பாராயணர்கள் இதனை அறிந்திருப்பதே அவர்களுக்குப் போதிய அத்தாட்சியல்லவா?”

“அரபிகளல்லாத (அஜமி) சமுதாயத்தினரைச் சார்ந்த ஒருவர் மீது (அவரது மொழியில்) இதனை நாம் இறக்கி வைத்து அவர் இவர்களுக்கு ஓதிக் காண்பித்திருந்தால, இவர்கள் அதில் நம்பிக்கைக் கொண்டிருக்கமாட்டார்கள்?” (26:192-199)

“வானங்களிலும் பூமியிலும் விசுவாசிகளுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. உங்களைப் படைத்திருப்பதிலும் (பூமியில்) பல மிருகாதிகளை அவன் (பல பாகங்களிலும்) பரப்பி வைத்திருப்பதிலும் (விசுவாசத்தில்) உறுதியுள்ள மக்களுக்குப் பல அத்தாட்சிகளுள்ளன.

“இரவு, பகல் மாற்றத்திலும், வானத்திலிருந்து அல்லாஹ் மழையை இறக்கி வைத்து அதனைக் கொண்டு (வறண்டு) இறந்து பட்டுக் கிடக்கும் தரையை விரைவில் உயிருண்டாவதிலும், காற்றுகளைப் (பல திசைகளில்) மாறி வீசச் செய்வதிலும் அறிவுடைய மக்களுக்குப் பல அத்தாட்சிகளுண்டு. (45:3-5)

“அவனே இறந்தவைகளிலிருந்து உயிருள்ளவைகளை வெளிக் கொணர்கிறான். அவனே உயிருள்ளவைகளிலிருந்து மரித்தவைகளை வெளியாக்குகிறான். அவனே இறந்து கிடக்கும் தரையைச் செழிப்படையச் செய்கிறான். இவ்வாறே (மரித்த) நீங்கள் (மறுமையில்) வெளிப்படுத்தப்படுவீர்கள்”. (30:19)

“வானங்களும் பூமியும் அவனது கட்டளையின்படி நிலை பெற்றிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். (நீங்கள் பூமியில் ஜீவித்து, மரித்து, அடக்கப்பட்டதின் பின்னரும்) அவன் உங்களை அழைக்கும்போது நிச்சயமாக நீங்கள் உடனே பூமியில் இருந்து வெளிப்படுவீர்கள்” (30:25)

“(மனிதர்களே! நீங்கள் அவனுடைய மகோன்னதத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு) உங்களைப் பற்றிய உபமானம் ஒன்றை அவன் எடுத்துக் கூறுகிறான். நாம் உங்களுக்கு அளித்துள்ள செல்வத்தையும், கண்ணியத்தையும், இன்னும் நீங்கள் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து நடந்து கொள்வது போன்றம், உங்கள் அடிமைகளில் எவருக்கேனும் பகிர்ந்தளித்து அவர்களையும் உங்களுடன் சம அந்தஸ்துள்ள பங்காளிகளாக ஆக்கி இருக்கின்றீர்களா? (இல்லையே! அவ்வாறிருக்க நமது படைப்பினங்களையே ஏன் நீங்கள் நமக்குச் சமமாக இணையாக்குகிறீர்கள்?) அறிவுடைய மக்களுக்கு நம்முடைய திருவசனங்களை இவ்வாறு நாம் விமர்சித்துக் காண்பிக்கின்றோம்.” (30:28)

இதனால் சீற்றங்கொண்ட அபூஜஹ்ல் நபிகள் பிரான் கஃபாவுக்கு வரும்போது கல்லால் அடித்துக் கொல்வதெனக் கருத்தில் கொண்டான். மறுநாள் அவன் கல்லுடன் வந்து அங்கு காத்திருந்தான். பெருமானார் வழக்கம் போல் கஃபாவுக்கு வந்து தொழுகையில் ஈடுபட்டார்கள். அபூஜஹ்ல் என்ன செய்வானோ எனக் குறைஷிகளான அவன் சகாக்கள் ஆவலுடன் நோக்கினர். கல்லை இரு கைகளாலும் தூக்கித் தலைக்கு மேல் பிடித்தவனாக அண்ணலாரை நெருங்கினான். சில அடிகள் தான் எடுத்து வைத்திருப்பான, சட்டெனப் பின்வாங்கி கல்லை எறிந்துவிட்டு உதறலும் நடுக்கமும் கொண்டவனாகக் குறைஷிகள் நின்ற இடத்தை நோக்கி ஓடிவந்தான். அனைவரும் என்ன நேர்ந்தது? என்ன காரணம்? எனப் பதற்றத்துடன் வினவினர். அதற்கு அபூஜஹ்ல், “நான் கல்லைத் தூக்கிக் கொண்டு முஹம்மதை நெருக்கினேன். என்னை நோக்கிப் பயங்கர உருவத்துடனும் குரூரப் பார்வையுடனும் கூடிய ஆண் ஒட்டகை ஒன்று வருவதைக் கண்டு பயந்து போனேன்” என அவர்களிடம் கூறினான்.

**அபிஸீனியாவில் அடைக்கலம்**

“இறைவனின் தூதே! குறைஷிகளின் கொடுமைகளின்றும் தற்காத்துக் கொள்ள எங்களை அனுமதிக்க மாட்டீர்களா!” என நபித்துவம் ஐந்தாம் ஆண்டு ஓர்நாள் முஸ்லிம்கள் பெருமானாரிடம் முறையிட்டனர். நபிகள் கோமான் மனங்கசிந்தவர்களாக இறைவனின் உத்தரவை எதிர்பார்த்து நின்றார்கள். அப்போது, “முன்னைய நபிமார்கள் இன்னல்களைச் சகித்துக் கொண்டதேபோல் நீங்களும் இருந்து வரக்கடவீர்” என்ற செய்திதான் கிடைத்தது. “இல்லாவிடில் மக்களைத் துறந்து வேறு எங்காவது செல்ல எங்களைப் பணியுங்கள்” என அடுத்துச் சிலர் கண்ணீர் சிந்தி வேண்டினர். அண்ணலாரும் தங்கள் கண்களில் நீர் மல்கியவர்களாக அபிஸீனியா நாட்டின் பக்கம் தங்கள் திருக்கரம் நீட்டிக் காண்பித்தவாறு, “இங்கு நிலைமை சரிப்பட்டு வரும் வரை அபீஸீனியா சென்று சிறிது காலம் தங்கியிருங்கள். அந்நாட்டு மன்னர் கிறிஸ்தவர், நற்குணமுடையவர் எனக் கேள்வியுற்றிருக்கிறேன். அவர் உங்களைக் கருணையுள்ளத்துடன் ஏற்றுக் கொள்வர்” என ஆறுதல்மொழி பகர்ந்தனர்.

அவ்வாறே, பதினொரு ஆண்களும் நான்கு பெண்களும் கொண்ட முஸ்லிம் கோஷ்டியொன்று நபித்துவம் ஐந்தாம் ஆண்டு ரஜப் மாதம் கி.பி. 615ல்

அபிஸீனியாவுக்கு இரகசியமாகப் பயணமானது. இதில் பெருமானாரின் அருமை மகள் ருக்கையாவும் அவரது அன்புக் கணவர் செல்வந்தர் உதுமானும் இருந்தனர். அவர்கள் ஷுஐபா என்னும் துறைமுகத்திலிருந்து கட்டணமாகத் தலைக்கு ஐந்து திர்ஹம் - ஒன்றே கால் ரூபாய் - செலுத்திக் கப்பலேறிச் சென்றனர். அப்போது அபிஸீனியாவை நஜ்ஜாஷீ அஸ்மஹும் இப்னு அப்ஹர் என்னும் மன்னர் ஆட்சி புரிந்து வந்தார். முஸ்லிம்களின் கோஷ்டியொன்று அபிஸீனியாவுக்குப் புறப்பட்ட விஷயம் எவ்வாறோ குறைஷிகளுக்குத் தெரியவந்தது. உடனே குதிரை வீரர்கள் சிலரை அனுப்பித் தேடச் சொன்னதில், அக்கோஷ்டி, ஷுஐபாவிலிருந்து கப்பலேறிச் சென்று விட்டதாகத் தகவல் கொண்டு வந்தார்கள். எனவே, அபிஸீனிய மன்னருக்கு தூதனுப்பி முஸ்லிம்களைத் தங்களிடம் ஒப்படைக்கக் கோருவதென முடிவு செய்தனர். விலை மதிப்புள்ள சாமான்களைக் காணிக்கையாகவும், வெகுமதிப் பொருட்களையும் சேகரித்துக் கொண்டு அம்ரிப்னுல் ஆஸ், அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆ ஆகிய இருவர் தலைமையில் குறைஷிகளின் தூதுக் கோஷ்டியொன்று அபிஸீனியாவுக்குக் கப்பலேறியது.

அம்ருவும், அப்துல்லாஹ்வும் அபிஸீனியாவின் தலைநகரான அக்சூம் போய்ச் சேர்ந்து அங்குள்ள அரசவையின் முக்கிய மந்திரிகளையும், பாதிரிகளையும் கண்டு நளினமாகவும், நயவஞ்சகமாகவும் பொய்களைப் புனைந்து கூறி, தாங்கள் கொண்டு சென்ற மனங்கவர் வெகுமதிகளை இலஞ்சமாக அளித்து, “எங்கள் நாட்டிலிருந்து சிலர் ஓடி வந்து இங்கு தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்கள் நாங்கள் பின்பற்றும் மார்க்கத்திற்கும் விரோதமான ஓர் புதிய மார்க்கத்தினைப் பின்பற்றுபவர்கள், அது உங்களுக்கும் எங்களுக்கும் கேடு பயப்பதாகவுள்ளது. நாளையத் தினம் அரசவையில் மன்னரிடம் இவ்விபரங்களை எடுத்துக் கூறி அத்துரோகிகளை எங்களிடம் ஒப்படைக்குமாறு கோரவிருக்கிறோம். அதற்கு நீங்கள் ஆதரவு நல்கிப் பரிந்துரை கூற வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டனர். அது போலவே, மறுநாள் அவ்விருவரும் அரசவை சென்று தாங்கள் கொண்டு வந்த காணிக்கைகளை மன்னரின் முன் சமர்ப்பித்து, விவரங்களைக் கூறி, தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம்களைத் தங்களிடம் ஒப்படைக்கக் கோரினர். அரசவையிலிருந்து மந்திரி, பிரதானி, பாதிரிகளும் அதற்கு “ஆம் பாடினர். மன்னர் நீதிவான் ஆனதால் எதிர் தரப்பாரது வாய்மொழி கேளாது எதுவும் செய்ய இயலாது. எனக்கூறி முஸ்லிம்களை அரசவைக்கு அழைத்து வருமாறு உத்தரவிட்டார். முஸ்லிம்கள் கிலேசத்துடன் அரசவைக்கு வந்தனர். மன்னர் அவர்களை விளித்து “ உங்கள் நாட்டை விட்டு நீங்கள் இங்கு வந்த காரணம் யாது?” நீங்கள் பின்பற்றும் மார்க்கம் என்ன போதிக்கின்றது? விபரமாகக் கூறுவீர்” என ஆக்ஞாபித்தார்.

முஸ்லிம்களில் பேச்சுத்திறன் மிக்கவரான அபூத்தாலிபின் மகனும் அலீயின் மூத்த சகோதரருமான ஜ.ஃபர் என்பவர் எழுந்து” பெருமதிப்பிற்குரிய அரசே! நாங்கள் நாகரிகமற்றவர்களாக வாழ்ந்தோம். விக்கிரகங்களை தெய்வமென வணங்கி வந்தோம். சூதாட்டத்திலும், குடியிலும் விபச்சாரத்திலும் மூழ்கிக் கிடந்தோம். அற்ப விஷயத்திற்கெல்லாம் நாங்கள் போரிலும், பூசலிலும், கொலையிலும் பழிவாங்குவதிலும் ஈடுபட்டோம். இவ்வித சுபாவங்களே எங்களிடம் மிகைத்து நின்றன. இந்நிலையில் எங்களிடையே முஹம்மது (ஸல்) என்னும் திருநாமம் பூண்டு ஒருவர் தோன்றினார். அவர் ஒழுக்க சீலராகவும், காருண்யம் மிக்கவராகவும் நற்குணங்கள்

அனைத்தும் ஒருவராய்த் திரண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார். அவர் தம் நாற்பதாம் வயதில் இறைவன் அவரைத் தன் திருத்தூதராக நியமித்து அவர் மூலம் ஃபுர்கான் என்ற திருவேதத்தை அருளிச் செய்து வருகிறான். அவ்வேதத்தின் அறப்போதத்தின்படி அவர், நாங்கள் அனுஷ்டித்து வந்த அனாச்சாரங்களைக் கைவிடச் செய்து நல்வழிப்படுத்தி வருகிறார். விக்கிரகங்களை வணங்காது ஏக நாயனை வணங்குமாறு கற்பித்துத் தந்தார். இறைவனுக்கன்றி மற்றெவருக்கும் சிரம் தாழ்த்தக் கூடாதெனப் பணித்துள்ளார். ஒழுக்கப் பண்பாடுடையவர்களாக எங்களை மாற்றியமைத்து வருகிறார். ஆனால், அத்திருநபியவர்களையும் அவர்களைப் பின்பற்றும் முஸ்லிம்களாகிய எங்களையும் மக்காவாசிகளான இந்த விக்கிரகத் தொழும்பர்கள் சென்ற ஐந்தாண்டு காலமாகப் படுத்தி வரும் இடுக்கணும் கொடுமையும் இயம்பவொண்ணாதன. எனவே தான், அம்மாநபி அவர்கள் எங்களைத் தங்களின் பாதுகாப்பில் அடைக்கலம் தேடிக் கொள்ளுமாறு இங்கு அனுப்பினார்கள். மன்னர் மகிபராகிய தங்களின் காருண்யத்தின் மீது முழு நம்பிக்கை வைத்தவர்களாக நாங்கள் இங்கு வந்துள்ளோம். இந்த அரபிக் குறைஷியருக்கு நாங்கள் அடிமைப் பட்டவர்களல்ல! பணத்தாலோ அல்லது இரத்தத்தாலோ அவர்களுக்கு கடன்பட்டவர்களுமல்ல” என மிக உருக்கமுடன் எடுத்துச் சொன்னார்.

ஜஃபரின் சொல்லாற்றலும், விஷய விளக்கமும் மன்னர் நஜ்ஜாஷியின் உள்ளத்தை மிகவாகக் கவர்ந்து விட்டன. அப்போது அவர், “உங்களின் நபிக்கு இறங்கிய வேத வசனங்களில் சிலவற்றை ஓதிக் காண்பியும்” எனப் பணித்தார். உடனே ஜஃபர் தமது குயிலினுமினிய குரலில் “சூரா மர்யம்” என்ற திருக்குர்ஆன் 19ம் அத்தியாயத்திலிருந்து சில திருவசனங்களை ஓதிக் காண்பித்தார். மன்னரும் அவையில் திருவசனங்களை ஓதிக் காண்பித்தார். மன்னரும் அவையில் இருந்தோரும் திருவசனங்களின் தெய்வீக நாதத்தால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் மனம் உருகிப் புளகாங்கிதம் அடைந்து கண்ணீர் உகுத்து நின்றனர். ஜஃபர் ஓதி முடித்ததும் அரசர் குறைஷித் தூதுவர்களை விளித்து “அடைக்கலம் புகுந்தோரைத் திருப்பியனுப்ப முடியாது! நீங்கள் நாடு திரும்பலாம்” எனக்கூறிக் காணிக்கைகளையும் ஏற்க மறுத்து விட்டார்.

மறுநாள் அம்ருப்னுல் ஆஸ் மன்னரிடம் சென்று “முஸ்லிம்கள் இயேசுவை சாதாரண மனிதப் பிறவி என்கின்றனர்” என துர்ப்போதனை செய்தார். பின்னர், ஜஃபரை மறுபடியும் அழைத்து அது பற்றி விசாரித்த போது, அவர் “எங்கள் நபிகள் பெருமானாருக்கு இறைவனால் அறிவிக்கப்பட்டதின் படி, நாங்கள் இயேசுவை இறைவனின் அடியார் என்றும் அவனின் திருத்தூதர் எனவும் பரிசுத்த ஆவியாகவும், அவனது வார்த்தையாகவும் கன்னி மர்யம் அவர்களின் கர்ப்பத்தில் இறை ஆணைப்படி இடம் பெற்றார் எனவும் நாங்கள் விசுவாசிக்கின்றோம்” எனக்கூறினார். உடனே, மன்னர் அருகில் தரையில் கிடந்த ஒரு சிறு குச்சியை எடுத்துக் காண்பித்து, இறைவன் மீது ஆணையாக, மர்யமுடைய மகன் ஈஸா, நீர் சொன்னதை விட இந்தக் குச்சியின் அளவு கூட அதிக மேன்மையுற்றவராக இருக்கவில்லை” எனக்கூறி, “சொல்லுங்கள், யார் எதைக் கருதினாலும், நீங்கள் என் நாட்டில் பாதுகாப்பப் பெற்றவர்களாக இருந்து

வருவீர்கள்" எனக்கூறியனுப்பினார். அம்ருவும், அப்துல்லாஹ்வும் தங்கள் தூதில் தோல்வியைக் கண்டவர்களாக மக்காவுக்குத் திரும்பிச் சென்றனர்.

நஜ்ஜாஷீ, பின்பு ஜஃபரை அடிக்கடி அரண்மனைக்கு அழைத்து உரையாடி, இஸ்லாத்தைப் பற்றியும், பெருமானார் அவர்களைப் பற்றியும் அதிகம் கேட்டறிந்தார். சிறிது காலத்திற்குப் பின்பு அவர் இஸ்லாத்தைத் தழுவி அரசபாரந் துறந்து அண்ணலாரை நேரில் தரிசித்து மரியாதை செலுத்தி வர ஹிஜ்ரி 9ம் ஆண்டு ரஜப் மாதம் மதீனாவுக்குப் பயணமானார். கப்பலில் வரும் போது புயலில் சிக்கி அவர் கடலில் மூழ்க நேர்ந்தது. இதனைத் தீர்க்க தரிசனத்தால் அறிந்த பெருமானார் (ஸல்) மறைவான பிரேத (காயிபு ஜனாஸா) தொழுகை நடத்தி அவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின் முஸ்லிம்கள் பகிரங்கமாகக் கஃபாவில் தொழுது வர ஆரம்பித்ததை அபிஸீனியாவில் குடியேறிய முஸ்லிம்கள் கேள்வியுற்று, இனி மக்காவில் அமைதியுடன் வாழலாம் என்ற நம்பிக்கையில் பலர் தாயகம் திரும்பினர். ஆனால் அவர்கள் எண்ணியதற்கு மாறாகக் குறைஷிகளின் கொடுமை முன்னிலும் அதிகமாக இருந்ததேயன்றி குறையவில்லை. எனவே, நபித்துவம் ஏழாம் ஆண்டுத் துவக்கத்தில் மற்றும் பல முஸ்லிம் குடும்பங்கள் அபிஸீனியா சென்று குடியேறின. குழந்தைகளன்னியில் இவர்கள் ஆண்களில் எண்பத்தி மூன்று பேரும் பெண்களில் பதினெட்டுப் பேருமாவர். இதனை இரண்டாம் ஹிஜ்ரத் என்பர். எமன் நாட்டிலிருந்தும் சில முஸ்லிம்கள் அபிஸீனியா சென்று குடியேறினர். அபூ மூஸா அஷ்அரியும் அவர்களில் ஒருவர். உதுமானும், ருக்கையாவும் சின்னாட்கள் கழித்து மக்கா திரும்பி விட்டனர். மற்றவர்கள் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு வரை சுமார் 15 ஆண்டு காலம் அபிஸீனியா நாட்டிலேயே தங்கி வாழ்ந்த பின் அங்கிருந்து நேரே மதீனா திரும்பினார்கள்.

**அர்க்கம் மாளிகை**

முதல் கோஷ்டியாக அபிஸீனியாவுக்குச் சென்று பதினைந்து பேர் நீங்கலாக, எஞ்சிய சுமார் இருபத்தி நாலு முஸ்லிம்கள் அன்று மக்காவில் தங்கி வசித்தனர். மக்காவுக்கு அருகேயுள்ள சபா குன்றின் மீது அழகிய மாளிகை யொன்றிருந்தது. இது அர்க்கம் என்பவருக்குச் சொந்தமானது இவர் கண்ணியமிக்க மக்ஜூம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பெரும் செல்வந்தர், இவர் குடும்பத்தாருக்கு மக்காவில் நல்ல மதிப்பும் செல்வாக்கும் உண்டு. இவருடைய கோத்திரத்தார். அபூஜஹுலும் இதைச் சேர்ந்தவனே நபிகள் பிரானின் தூதை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தனர். ஆனால், பதினெட்டு வயதே நிரம்பியவரான அர்க்கம், இஸ்லாத்தைத் தழுவி அண்ணலாருக்கு உற்ற துணையாக உறுதியுடன் இருந்து வந்தார். முஸ்லிம்களுக்குத் தம்மாலான உதவிகளையும் செய்து வரலானார்.

குறைஷிகளின் தொல்லையும் கொடுமையும் அதிகரிக்கவே, இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்வது சற்று கஷ்டமாக இருந்தது. எனவே, அர்க்கம் தமது மாளிகையைப் பெருமானாரின் பிரச்சாரப் பணிக்கென ஒப்படைத்து அதில் முஸ்லிம்களின் தொழுகைகளை நடத்தி வருவதற்கு வசதி செய்து கொடுத்தார். கி.பி. 615 முதல் 617 வரை சுமார் இரண்டாண்டு காலம் இஸ்லாமியப் பிரச்சாரம் இவ்வாறே

நடைபெற்று வந்தது. ஆகவேதான் இந்த மாளிகை, “தாருஸ்ஸலாம்” சாந்தி மாளிகை என இன்றும் சிறப்புடன் அழைக்கப்படுகிறது.

**உமருல் பாருக் (ரலி)**

இந்நிலையில் நபித்துவம் ஆறாம் ஆண்டு ஓர்நாள் காலை, நகர மன்றமான, “தாருல் நத்வா” மண்டபத்தில் கட்டிளங்காளையர் பலர் ஒன்று கூடுகின்றனர். அவர்களின் மத்தியில் அபூஜஹல் எழுந்து நின்று வெகு ஆக்ரோஷத்துடன் பேசுகிறான். அவன் தனது பேச்சின் இறுதியில், “யார் முஹம்மதின் தலையைக் கொய்து வருவாரோ அவருக்கு என் ஒட்டகைளில் நூறைச் சன்மானமாக அளித்து மகிழ்வேன்” என்றதொரு சவாலை எடுத்து வீடுகிறான். சிறிது நேரம் நிசப்தம் நிலவுகிறது. சட்டென ஒரு வாலிபர் எழுந்து நிற்கிறார். “உமது வாக்கைச் சரிவர நிறைவேற்றுவீர் என்பதற்கு அத்தாட்சி யாது? அதனை நீர் உரிய வைகயில் செய்து தந்தால் அக்காரியத்தை நானே செய்து முடிக்கிறேன்” என மார்தட்டி எதிர்ச்சவால் விடுகிறார். உடனே அபூஜஹல் அனைவரையும் க.்.பாவுக்கு அழைத்து சென்று அங்கிருந்த ‘ஹுபல்’ என்ற விக்கிரகத்தின் முன்நின்று தனது சொல்லை அணுப்பிசகாது காப்பதாக வாக்குத் தத்தம் செய்து கொடுக்கிறான். வாலிபர் திருப்தியடைகிறார். அடுத்த கணம், முப்பத்து மூன்று வயதினை எய்தியுள்ள அவ்விளவல் கையில் பளபளக்கும் வாளேந்தி சபா குன்றின் மீதுள்ள அர்க்கம் மாளிகையை நோக்கி வீறு நடைபோட்டுச் செல்கிறார். போகும் வழியில் அவ்வாலிபரை, நுஜம் பின் அப்துல்லாஹ் அல்நஹ்ஹாம் என்பவர் – சிலர் ஸஅத் பின் அபீ வக்காஸ் எனக்கூறுகின்றனர் – சந்திக்கிறார். “காளையரே!. கையில் வாளேந்திக் கடுகி நடக்கின்றீரே!. காரணமென்னவாம்” என வினவுகிறார். அதற்கு அவ்வாலிபரிடமிருந்து “முஹம்மதை இன்று நான் ஒழித்துக் கட்டச் சபதம் பூண்டு செல்கிறேன்” என்ற பதில். “அதிருக்கட்டும்!. உம் தங்கையும் மைத்துனரும் முஹம்மதுவின் மார்க்கத்தில் சேர்ந்துள்ளதை நீர் அறியீரோ? உமது வீட்டைச் சேர்ந்தவர்களைத் திருத்திச் செம்மைப்படுத்திய பிறகல்லவா நீர் முஹம்மதை ஒழித்துக் கட்ட முற்பட வேண்டும்”! என நுஜம் நயம்பட இடித்துரைக்கிறார். வாலிபரின் கால்கள் திசை மாறுகின்றன. அகப்பார்வை அர்க்கம் மாளிகையை விட்டுத் தங்கை வீட்டின் பக்கம் திரும்புகிறது. வாலிபரின் கண்கள் தீப்பொறிகளைச் சிந்த ஆரம்பிக்கின்றன.

தங்கையின் வீடு அது உள்ளே தாழிடப்பட்டுள்ளது. உள்ளிருந்த ஒருவர் ஏதோ ஒருவித இராகத்துடன் பாடுவது போன்ற இனிய நாதம் காற்றில் மிதந்து வந்து வாலிபரின் செவிகளில் பாய்கிறது. காது தாழ்த்திச் சற்று அதைக் கேட்கிறார். பின் பொறுமையற்றுக் கதவைப் படபடவெனத் தட்டுகிறார். உள்ளே நிசப்தம் நிலவுகிறது. கதவு மெதுவாகத்திறக்கிறது. வீட்டினுள் வாலிபர் சரேலெனப் பாய்கிறார். சுற்றிலும் கண்ணோட்டமிடுகிறார். தங்கை உம்மு ஜமீல் பாத்திமாவையும் மைத்துனர் ஸயீதுப்னு ஜைதையுந் தவிர மற்றெதுவும் அங்கே புலப்படவில்லை. கண்கள் கனலைக் கக்க தங்கையை நோக்கி, “ஏ பாத்திமா! இப்போது நீங்க்ள ஏதோ பாடுவது போன்ற சத்தம் கேட்டதே அது என்ன? என வினவுகிறார். மைத்துனர் ஸயீதும் மனைவியின் அருகில்

நின்று கொண்டிருக்கிறார். “ஒன்றுமில்லையே!” என்ற தங்கையின் பதில் கேட்டு வாலிபருக்கு ஆத்திரம் பொங்குகிறது. “நீங்கள் முஹம்மதுவின் மார்க்கத்தில் சேர்ந்துள்ளதை நான் அறியமாட்டேன் என்றே எண்ணுகிறீர்கள்” எனக் கர்ஜித்தவாறு மைத்துனர் மீது பாய்கிறார். அண்ணனுக்கும் கணவருக்கும் குறுக்கே விழுந்து பர்த்தாவைப் பாதுகாக்க முன்வருகிறார் பாத்திமா. வாலிபரின் வாள்முனை பாத்திமாவின் முகத்தில் பாய்ந்து இரத்தம் பீறிடுகிறது. குருதியைக் கண்டதும் வாலிபரின் ஆத்திரம் ஒருவாறு அடங்குகிறது. தங்கையை இரக்கத்துடன் நோக்குகிறார். பாத்திமாவுக்கு ஏதோ ஒருவித உத்வேகமும், உணர்ச்சியும், தைரியமும் பிறக்கிறது. அண்ணனை நோக்கி, “ஆம் அண்ணா! நபிகள் முஹம்மதுவின் மார்க்கமான இஸ்லாத்தைத்தான் தழுவியுள்ளோம். நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அதுபற்றி நாங்கள் கவலைப்படவில்லை” எனத் துணிவுடன் கூறுகிறார் பாத்திமா. என்றுமில்லாத் துணிவை இன்று தங்கையினிடம் கண்டு ஆச்சரியமுற்று அவ்வாலிபர் படிப்படியாகச் சாந்தமடைந்து தங்கையை அனுதாபத்துடன் நோக்கியவராய், “பாத்திமாவே, நீங்கள் இப்போது ஓதிக் கொண்டிருந்ததை எனக்குச் சற்று காண்பியுங்களேன்” எனப்பரிவுடன் கேட்கிறார். தங்கை சற்று தயங்குகிறார். அண்ணன், “நான் ஒன்றும் செய்யமாட்டேன், படித்துப் பார்த்துவிட்டுத் திரும்பத்தந்து விடுகிறேன்” எனக் கூறுகிறார். தங்கைக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது. தம் அண்ணனுக்குத் தண்ணீர் கொடுத்து முகம், கை, கால் சுத்தி செய்யச் சொல்லிப் பின் மண்டியிட்டுப் பணிவான முறையில் உட்கார்த்தி, திருக்குர்ஆன் 20ம் அத்தியாயமான “தாஹா”வின் பிரதியைக் கையில் கொடுக்கிறார். வாலிபர் அதனை ஆவலுடன் மரியாதையுடனும் பெற்று ஓத ஆரம்பிக்கிறார். அது அவரை ஆகர்ஷிக்கிறது. மீண்டும் ஓதுகிறார், மீண்டும் ஓதுகிறார், இராகத்துடன் அழகுபட ஓதுகிறார், ஓதி, ஓதி உளப் புளகாங்கிதமடைகிறார். உடல் நடுங்குகிறது. நயனங்கள் ஆனந்தக் கண்ணீரை வடிக்கின்றன. வாலிபருக்கு பயந்து அதுவரை அறையுள் ஒளிந்திருந்த கப்பாப் பின் அல் அரத் என்ற போதகாசிரியர் இப்போது அறையைவிட்டு வெளியே வருகிறார். அனைவரும் கூடி அளவளாவுகின்றனர். இதன்பின் வாலிபர் தங்கையின் வீட்டை விட்டு அர்க்கம் மாளிகை நோக்கி அடியெடுத்து வைக்கிறார். முற்றிலும் மனமாற்றமடைந்த ஒரு புது மனிதராக! புனிதராக!!

அன்று வெள்ளிக்கிழமை. அர்க்கம் மாளிகையில் அண்ணலார் வீற்றிருந்து தம் தோழர்களுக்கு அறப்போதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அபூஹஜல் “தாருன் நத்வா”வில் சவால் விடுத்ததையும் அதனை வாலிபர் ஒருவர் ஏற்று வாளேந்தி வந்து கொண்டிருப்பதையும் கேள்வியுறுகிறார்கள். ஆனாலும், நபிகள் நாதர் எவ்விதக் கிலேசமுமில்லாது சாந்த சொரூபியாகவே காட்சியளிக்கிறார்கள். அச்சமோ ஆதுரமோ எதுவும் அவர்களது திருவதனத்தில் கிஞ்சித்து பிரதிபலிக்கவில்லை. உடனிருந்த மற்றவர்கள் பயமுற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். சற்று நேரத்தில் தாழிட்ட கதவு தட்டப்படுகிறது. சாவித் துவாரத்தின் வழியே ஒருவர் பார்த்துவிட்டு அவ்வாலிபர் வந்துவிட்டாரெனத் தெரிவிக்கிறார். “நல்லெண்ணத்துடன் வந்திருந்தால் அவரை நன்கு உபசரிப்போம், தீய நோக்கோடு வந்திருந்தால் அவரை வாளாலேயே அவரைக் கொன்றொழிப்போம்”. இவ்வாறு பெருமானாரின் சிறிய தந்தை ஹம்ஸா அங்கிருந்தவர்களுக்குத் தைரியங் கூறுகிறார். கதவைத் திறக்குமாறு பெருமானார்

சமிக்ஞையால் பணிக்கிறார்கள். கதவு திறக்கப்படுகிறது. வாலிபர் நுழைந்ததும் நுழையாததுமாகப் பெருமானார் பாய்ந்து சென்று அவரின் தோள்களைத் தம் திருக்கரங்களால் பற்றி உலுக்கியவாறு, "கத்தாபின் மைந்தரே! இறைவனின் கோபத்திற்கு ஆளாகி அழிந்தொழியும் வரை கல்லுருவைத் தான் நீர் கடவுளாகக் கருதி வணங்கி வருவீரோ? அதனைக் கைவிட்டு ஏகனாகிய இறைவனைத் தொழ முன்வரமாட்டீரோ?" எனக் கனிவுடன் வினவுகிறார்கள். அதுகேட்ட வாலிபர். "நாயகமே! வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் ஒருவனே என்றும் தாங்கள் தான் அவனுடைய திருத்தூதர் என்பதையும் நான் ஏற்றுள்ளேன் எனும் விஷயத்தைத் தங்களிடம் தெரிவிப்பதற்கெனவே நான் இங்கு வந்துள்ளேன்" எனக் கத்தாபின் மைந்தர் உமர் சிரம் தாழ்த்தி அடக்கத்துடன் பதில் கூறுகிறார். அண்ணலார் உமரைக் கட்டியணைத் தவர்களாய், "அல்லாஹு அக்பர்" என மும்முறை முழங்குகிறார்கள். கூடியிருந்தோர் அனைவரும் பெருமானாரைப் பின்பற்றி மறு முழக்கம் செய்கின்றனர்.

அபூஜஹ்லையோ அல்லது உமரையோ தமக்கு உதவியாகத் தருமாறு முன் இரவு செய்த பிரார்த்தனையை ஏற்ற இறைவனுக்கு உளமார நன்றி செலுத்தியவர்களாக நபிகள் பிரான் உமரை அழைத்து வந்து தமது இருக்கையினருகில் அமரச் செய்கிறார்கள். உரையாடலும் உபதேசமும் தொடருகின்றன. ஹம்ஸா இஸ்லாத்தில் சேர்ந்து மூன்று தினங்கள் கழித்து உமர் இஸ்லாத்தில் இணைந்தார். இவ்விரண்டு நபித்துவம் ஆறாம் ஆண்டில் நிகழ்ந்தவையாகும்.

"பாரூக்" (பகுத்துக் காட்டுபவர்) என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஹலரத் உமர் இப்னு கத்தாப், மக்காவில் செல்வமிக்க அதீ குடும்பத்தைச் சேர்ந்தவர். அபூஜஹ்லின் சகோதரி ஹன்தமா பின்து ஹிஷாம் என்பவளின் புத்திரர் இஸ்லாத்தை தழுவமுன் பெருமானாரைத் தீவிரமாக எதிர்த்தவர் இவர், உடலுறுதியுள்ளவர். ஊக்கம் நிறைந்தவர். அஞ்சா நெஞ்சத்தினர். நெறி தவறாதவர். நேர்மை மிக்கவர்! ஆற்றலும் திறமையுங்கொண்டவர். எடுத்த காரியத்தை ஆர்வத்தோடும் அக்கறையோடும் செய்து முடிக்கும் சாமர்த்தியசாலி. இதனால், மக்கா வாலிபர்களிடையே ஹலரத் உமருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகமிருந்து வந்தன. இவ்விதப் பண்புகளால் ஹலரத் உமர் பெருமானார் காலத்திற்குப் பின் முஸ்லிம்களின் இரண்டாம் கலீ..ஃ.பாவாக தேர்ந்தெடுக்கப்பெற்று பத்தாண்டு காலம் அரசோச்சும் பாக்கியம் பெற்றார். இவரது காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் பதின்மடங்கு விரிவடைந்து ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா ஆகிய முக்கிய கண்டங்களிலும் பரவி நின்றது. "எனக்குப்பின் தீர்க்கதரிசி ஒருவர் வர வேண்டுமானால், உமர்தான் தகுதி பெற்றவர்" எனப் பெருமானார் அவர்களே பாராட்டியுள்ளார்கள். ஹலரத் அபூபக்கர் அவர்களைப் பற்றி அண்ணலார் இவ்வாறு மொழிந்ததாகவும் கூறப்படுகிறது. அன்றியும் "எனக்குப் புவியில் இரு மந்திரிகளிருக்கின்றனர். அன்றியும் ஜிப்ரீலும், மீக்காயிலும்" எனவும் பெருமானார் நவின்றுள்ளார்கள். முஸ்லிம் அல்லாதாருக்கு முஸ்லிம் அரசு விதிக்கக்கூடிய பாதுகாப்பு வரியான 'ஜிஸ்யா' அநீதமானது என அதிருப்தியுற்று பைரோஸ் என்ற கிறிஸ்தவன் ஹலரத் உமர் அவர்கள் தொழுகையிலிருக்கும் போது அவரைக் கட்டாரியால் தாக்கி விட்டான். அதன் காரணமாகத் தமது ஐம்பத்தி மூன்றாம் வயதில் அவர் உயிர் நீத்தார்.

உமர் இஸ்லாத்தில் சேர்ந்த செய்தி காட்டுத்தீபோல் மக்கா நகர் முழுவதும் பரவிவிட்டது. இதுநாள் வரை நபிகள் பெருமானாரைத் தவிர்த்து மற்ற முஸ்லிம்கள் க.:.பாவுக்குச் சென்று தொழுக முடியாத நிலையிலிருந்து வந்தனர். இஸ்லாத்தில் சேர்ந்த சின்னாட்களில் முஸ்லிம்களும் குறைஷிகளைப் போல் பகிரங்கமாகக் க.:.பாவுக்குச் சென்று இறைவனைத் தொழ வேண்டுமென ஹலரத் உமர் பெருமானாரிடம் முறையிட்டு வந்தார். எனவே ஒருநாள் நபிகள் நாதர் அவர்கள், ஹலரத் ஹம்ஸாவும் ஹலரத் உமரும் தம்வலமும் இடமுமாகக் கொண்டு மற்ற முஸ்லிம்களனைவரும் புடைசூழக் க.:.பாவுக்குச் சென்று இறைவனைத் தொழுது தவாபும் செய்து திரும்பினர். இதற்குப் பின் முஸ்லிம்கள் அச்சம் நீங்கிக் க.:.பாவுக்குச் சென்று தொழுது வரலாயினர்.

**சமூகப் பிரஷ்டம்**

ஹலரத் ஹம்ஸாவும், ஹலரத் உமரும் இஸ்லாத்தில் இணைந்துவிட்டதை எண்ணிக் குறைஷிகள் ஓரளவு அச்சங் கொண்டிருந்தாலும் இஸ்லாமியப் பிரச்சாரத்தால் அவர்களது சமயமும், பண்பாடும், பொருளாதாரமும், சமூகக் கட்டுக்கோப்பும் சிதைந்து வருவதைச் செவ்விதில் உணரலாயினர். செல்வத்திலும், செல்வாக்கிலும், அதிகாரத்திலும் புரண்டு வந்த குறைஷிப் பிரமுகர்களுக்கு இந்நிலை முன்னிலும் அதிகமாகப் பீதியை அளித்தது. இதை எவ்விதத்தாலும் தடுத்து நிறுத்த வழி காணுவதெனச் சங்கல்பம் பூண்டனர். இஸ்லாத்தை எதிர்த்துவந்த குறைஷிகள் அனைவரும் ஒன்று கூடினர்! ஒரு முடிவு கண்டனர். ஹாஷிம் குலத்தவரை பகிஷ்கரிப்பது — சமூகப் பிரஷ்டம் செய்வது என்பதுதான் அந்தக் கொடிய முடிவு. ஹாஷிம் என்பவர் பெருமானாரின் பாட்டனாரான அப்துல் முத்தலிபின் தந்தையாவார். இக்குலத்தாருடன் மற்றவர்கள் வாங்கல், கொடுக்கலை நிறுத்திவிடுவது, சம்பந்தம் சார்படி செய்வதில்லை. அவர்களுக்கு உணவு தண்ணீர் எதுவும் செல்ல அனுமதிப்பதில்லை. வேறு எந்விதத் தொடர்பும் அவர்களுடன் வைத்துக் கொள்வதில்லை. இவற்றைக் கடுமையாகக் கண்காணிப்பது ஆகியவை அம்முடிவின் ஷரத்துக்கள். இவற்றை பிசகின்றிப் பிரயோகித்தால் பனூ ஹாஷிம்களுக்குள்ளேயே பிளவேற்படும். அவர்களில் முஸ்லிம்கள் தனியாகவும் முஸ்லிமல்லாதார் பிரிந்து விடுவர். அதன் பயனாகப் பெருமானாருக்கு ஆதரவு குன்றி வலுக் குறைந்துவிடும். அதன்பின் முஸ்லிம்களை எளிதாகவும் விரைவாகவும் ஒழித்துக் கட்டிவிடலாம். இது விக்கிரகத் தொழும்பர்களின் தீர்க்கமான திட்டம்!

பகிஷ்கார நிபந்தனைகளை எழுத்தில் வடித்துச் சம்பந்தப்பட்ட தலைவர்களனைவரும் அதரில் கையெழுத்திட்டு அதற்குப் புனிதம் கற்பிக்கும் வகையில் க.:.பாவில் அதைத் தொங்க விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே, இக்ரிமாவின் புதல்வன் மன்சூர் அல் ஆமிரிப்னு ஹிஷாம் என்பவனைக் கொண்டு அவ்வறிக்கையினை எழுதி, அதில் குறைஷித் தலைவர்கள் நாற்பது பேர் கையெழுத்திட்டு நபித்துவம் 7ம் ஆண்டு முஹர்ரம் மாதம் முதல் நாளன்று கி.பி. 616 இறுதி க.:.பாவில் தொங்கவிட்டனர். பகிஷ்காரம் அமுலுக்கு வந்தது. ஒப்பந்தத்தை எழுதிய மன்சூரின் வலக்கரம் சின்னாட்களில் சூம்பிச் செயலற்று விட்டதாகக் கூறப்படுகிறது.

பகிஷ்காரம் விஷயம் அபூதாலிபுக்குத் தெரியவந்தது. ஹாஷிம் குலத்தார் மற்றும் அவர்களோடு நெருங்கிய உறவுள்ள குடும்பத்தார் அனைவரையும் ஒன்றுகூட்டி அவர்களிடம் தங்களின் குலப்பெருமையையும் குடும்பத்தின் கண்ணியத்தையும் எடுத்துரைத்து, குறைஷிகளின் இந்தப் பகிஷ்காரத்தை அனைவரும் ஒன்றுபட்டு நின்று முறியடிக்க வேண்டுமெனவும், தங்களின் குலக்கொழுந்தான முஹம்மதுவை எல்லாரும் காத்து நிற்க வேண்டுமெனவும், உருக்கத்துடன் எடுத்துச் சொன்னார். அபூலஹபையும், ஹாரிதின் மகன் அபூசுப்யானையும் தவிர்த்து, ஹாஷிம் குலத்தவரான முஸ்லிம், முஸ்லிமல்லாதார் அனைவரும் அபூதாலிபின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அண்ணலாருக்காகத் தங்கள் சுக சவுகரியங்கள் அனைத்தையும் தியாகம் செய்ய முன்வந்தனர்.

எனவே, ஹாஷிம் குலத்தாரும், அவர்களைச் சேர்ந்தவர்களும் தங்களிடமிருந்த உணவுப் பொருள் மற்றும் தேவையான சாமான்களை எடுத்துக் கொண்டு கிழக்கே மக்காவுக்கு அருகிலுள்ள தங்களுக்குச் சொந்தமான “ஷி∴பு அபீதாலிப்” என்ற பள்ளத்தாக்கில் போய்த் தங்கினர்.

பள்ளத்தாக்குச் சென்ற சிறிது காலத்தில் கைவசம் வந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. வெளியில் சென்று வாங்கலாமென்றாலும் விற்பதற்கு எவரும் முன்வரவில்லை. துணியவில்லை, கண்காணிப்போ மிகமிக இறுக்கமாக இருந்தது. அதனிடையில், ஹிஷாம் பின் அம்ர் அல் ஆமிரி மக்ஜூமி என்னும் நல்ல மனங்கொண்ட ஒரு அநுதாபி கணவாயிலிருந்தவர்கள் மீது அனுதாபங்கொண்டு, தம் ஒட்டகை ஒன்றில் உணவுப் பொருட்களை ஏற்றி, அந்தி சாய்ந்த நேரங்களில் இருட்டோம் அதைக் கணவாயின் பக்கம் ஓட்டிவிடுவார். அது கணவாய்க்குள் சென்றதும் அங்குள்ளவர்கள் அதன் மீதுள்ள பொருட்களை இறக்கிக் கொண்டு அதைத் திரும்ப மக்காவின் பக்கம் ஓட்டிவிடுவர். இவ்வாறு சில காலம் நடந்து வந்தது. ஆயினும், குறைஷிகளின் தீவிரக் கண்காணிப்பின் காரணமாக ஹிராம் தம்முடைய உதவியை நீடித்துச் செய்துவர இயலவில்லை.

பள்ளத்தாக்கிலிருந்த மக்கள் உணவுக்காகப் பட்டபாடு சொல்லுந்தரமன்று. இலை, தழை, கிழங்கு, காய் முதலிய கிடைத்த வஸ்துக்களையெல்லாம் சாப்பிட்டு வந்தனர். முடியவில்லை, போதவில்லை, ஒரே தட்டுப்பாடும் பசியும் பட்டினியுந்தான். ஸஅத் இப்னு அபீவக்காஸ் என்னுமொருவர் தம் பசியைப் போக்குவதற்குத் தரையில் கிடந்த தோல் துண்டு ஒன்றை எடுத்து வந்து அதைச் சுட்டுக் கருக்கித் தண்ணீரில் கரைத்துக் குடித்தாரென்றால், ஹாஷிம் குலத்தார் நபிகள் நாதரின் பொருட்டு அனுபவிக்கக்கூடிய துன்பம், செய்ய வேண்டிய தியாகம் - இதற்கு மேல் வேறென்ன இருக்கிறது? தங்கள் கண்ணின் மணியான ஏந்தலின் பொருட்டாக இதுமட்டுமென்ன, இதற்கு மேல் உயிரையும் அர்ப்பணிக்க அவர்கள் திடசித்தங்கொண்டிருந்தனர். மழலைகள் பசியால் வீறிட்டழுவதைக் காணப்பெறாத பெற்றோர், பாலின்றி, பண்டமின்றிப் பதைபதைத்து நைந்து உருகினர். இந்தப் பகிஷ்காரம் சில நாள், சில மாதங்களல்ல, தொடர்ந்து மூன்றாண்டுகள் வரை நீடித்தது. அந்நீண்டகால பகிஷ்காரத்தின் காரணமாக அபூதாலிப், கதீஜா நாச்சியார் இருவரின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது.

யாத்திரை மாதங்களில் மட்டும் பெருமானார் மக்காவுக்குள் வந்து யாத்ரிகர்களைக் கண்டு இறைவனின் தூதை எடுத்துச் சொல்லுவார்கள்.

இதையுங்கூடச் செய்யவிடாது அக்கொடியவன் அபூலஹப் எங்கணும் நிழல்போல் தொடர்ந்து இடையூறு செய்து வருவான். கூட்டம் கலைப்பான்.

ஷவ்வால், துல்க.்.தா மாதங்களில் மஜின்னா, துல்மஜாஸ் என்ற இடங்களில் சந்தை கூடி வியாபாரங்கள் கேளிக்கைகள் நடைபெறும் பொழுது அங்கும், துல்ஹஜ் மாதத்தில் யாத்திரிகர்கள் கூடும் இடங்களாகிய மினா, மௌக்கிப், அரபாத், முஸ்தலிபா ஆகிய இடங்களுக்கும் சென்று பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்து வந்தார்கள்.

இவ்வாறிருந்து வரும்போது, முன் கூறிய ஹிஷாம் மனந்தாளாதவராய் ஒருநாள், அபூதாலிபின் சகோதரி ஆத்திகாவின் மகன் ஸுஹைர் இப்னு அபீஉமையா என்பவரைக் கண்டு, "உம் தாய் வழி உறவின் முறையார் பள்ளத்தாக்கில் பசிக்கொடுமையால் வாடும்போது நீர்மட்டும் இங்கிருந்து கொண்டு உண்டு களிக்கின்றீரே! இது உமக்கு ஏற்குமா?" என இடித்துரைத்தார். அதற்கு ஸுஹைர், இது எனக்கு ஏற்புடையதல்ல என்பதை நன்கு அறிவேன். எனினும், நான் மட்டும் ஒண்டியாக என்ன செய்ய முடியும்? துணைக்கு யாருமற்றவனாய் நிற்கிறேனே! என உணர்ச்சி ததும்பக் கூறினார். "அவ்விதமாயின் இது விஷயத்தில் நான் உமக்குத் துணை நிற்கிறேன்" எனத் தைரியங் கூறினார் ஹிஷாம். இருவரும் க.்.பாவை நோக்கிப் புறப்பட்டனர். போகும் வழியில் முத்யிம் பின் அதீ என்பவரையும் உடனழைத்துக் கொண்டனர். இவர்களுடன் அபுல் பக்தரி பின் ஹிஷாம், ஜமாஅ பின் அல் அஸ்வத்தும் சேர்ந்தனர். ஐவரும் மற்றும் சில அனுதாபிகளும் சேர்ந்தனர்.

மறுநாள் காலையில் அனைவருமாகக் க.்.பா சென்றனர். ஸுஹைர், க.்.பாவை ஏழுமுறை இடம் வந்து பகிஷ்கார உடன்படிக்கையை கிழத்தெறியப் போவதாக அங்கு கூடியிருந்தோரிடம் எடுத்துரைத்தார். அப்போது அங்கு நின்றிருந்த அபூஜஹல் அவ்வாறு செய்யக்கூடாதெனத் தடுத்தான். அவனது வார்த்தைகளைப் பொருட்படுத்தாது, தொங்கிக் கொண்டிருந்த உடன்படிக்கையை முத்யிம் தாவிப் பற்றி இழுத்தார். அதை விரித்துப் பார்த்தபோது, "பிஸ்மிக்க அல்லாஹும்ம" - இறைவா! உன் திருநாமத்தால் என்ற வார்த்தைகள் தவிர மற்ற வாசகங்களையெல்லாம் கரையான் அரித்திருப்பது கண்டு, அபூஜஹ்ல் உள்பட அனைவரும் ஆச்சரியத்துள் மூழ்கினர். இவ்வுண்மை பெருமானாருக்கு கனவில் அறிவிக்கப்பெற்று அபூதாலிப் இடம் கூற, அவர் அதனைக் குறைஷிகளுக்கு எட்டச் செய்து, அவர்கள் உடன்படிக்கை எடுத்துப் பிரித்து பார்த்து, உண்மையைக் கண்டு, கட்டுப்பாட்டை கைவிட்டதாக மற்றொரு தகவல் கூறுகிறது. எவ்வாறாயினும், குறைஷிகள் செய்து கொண்ட உடன்படிக்கை தானாகவே செத்து மடிந்ததென்பது உண்மையே!. ஹாஷிம் குலத்தவர் இப்போது பள்ளத்தாக்கை விட்டும் வெளியேறி மக்காவுக்குள் வந்து என்றும் போல் வசிக்கலாயினர். இது நுபுவ்வத் 10ம் ஆண்டு துவக்கத்தில் கி.பி. 619ல் நிகழ்ந்தது.

**அபூதாலிப், கதீஜா நாயகி மரணம்**

சில மாதங்களாயின. இப்போது நபித்துவம் 10ம் ஆண்டு ஷ.்.பான் மாதம். முதுமை அடைந்து விட்ட அபூதாலிப் மீளா நோயுற்றார். தமக்கு மரணம் நெருங்குவதை உணர்ந்தார். தம் குடும்பத்தினரை அழைத்து அருகில் அமரச்

சொன்னார். தமது (மதுர) வாய் திறந்து, “மரணம் என்னை நெருங்கி விட்டது. நீங்களனைவரும் முஹம்மதுவிடம் அன்பு பூண்டு நடந்து கொள்ளுங்கள். அவர் நம் குடும்பத்தில் கண்ணியமிக்கவர், சத்திய வந்தர், அவர் கொண்டு வந்துள்ள மார்க்த்தை நல்லறிவும், நல்லெண்ணமும் கொண்ட யாரும் நிராகரக்க மாட்டார்” என்ற தம் இறுதி எண்ணத்தை – அபேட்சையை வெளியிட்டுக் காட்டினார். அருகிலிருந்த அண்ணலார், “பெரிய தந்தையே!. இத்தருணத்திலாகிலும் தாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்களேன்! “லாஇலாஹ இல்லல்லாஹு” என்ற கலிமாவை மட்டுமாவது உச்சரியுங்களேன்” என வேண்டினார்கள். அதற்கு அபூதாலிப், “எனதருமைத் தம்பி மகனே! உமது மார்க்கத்தை உண்மையென நான் மனதார ஒப்புக் கொண்ட போதிலும், இத்தருணத்தில் அதை வாய்விட்டுச் சொல்லி ஏற்றுக் கொள்வது உமக்கோ அல்லது எனக்கோ பெருமையளிக்காது. மரணத்தருவாயில் நான் அவ்விதம் செய்தால், நான் இறந்தபின், குறைஷிகள் என்னைப் பற்றி கேவலமாகப் பேசுவார்கள். அது நம் மூதாதையரின் நாணயத்தையும், கண்ணியத்தையும், குடும்ப கௌரவத்தையும் பாதித்து இழுக்கை ஏற்படுத்தும்” எனச் சமாதானம் கூறி விட்டார். அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்காது இறந்தது ஏந்தல் நபியவர்களுக்கு எப்போதும் மனப்புண்ணாகவே இருந்து வந்தது. அபூதாலிப் மரணமெய்திய போது அவருக்கு வயது 85 ஆக இருந்தது. பெருமானாருக்கு அப்போது 50 வயது.

பெரிய தந்தையின் மரணத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி, வேதனையிலிருந்து மீளாதிருக்கும் நிலையில் பொறுமையின் குன்றாம் பூமான் நபியவர்கள் மற்றுமொரு பேரிடிக்கு ஆளாக நேர்ந்தது. இமை கண்ணைக் காப்பது போல் இருபத்தாறு ஆண்டு காலம் தம்மை காத்து, கண்காணித்து, இணையற்ற வாழ்க்கைத் துணைவியாக இருந்த, தம் அபரிமிதமான செல்வமனைத்தையும், அக்கருணை வள்ளலின் காலடியில் காணிக்கை வைத்து, அன்னாரின் குற்றவேலுக்காக காத்து நின்று, அத்திருத்தூதர் கொண்டு வந்த தெய்வத் தூதை முதன் முதலில் ஒப்புக் கொண்டு, அவ்வேந்தலின் மனப்பாரம் குறைத்து, ஆறுதலும் தேறுதலும் கூறி, அன்பொழுக நடந்த ஆருயிர் நாயகி கதீஜா பிராட்டியாரைப் பெரிய தந்தை அபூதாலிப் மரணமாகி 35 நாட்கள் முற்றாகக் கழிவதற்குள் இழக்க நேரிட்டது. பெருமானாருக்கு அதிர்ச்சிக்கு மேல் பேரதிர்ச்சியாக ஆகி விட்டது. அவர்கள் ஆற்றொணாத் துக்கத்துள் ஆழ்ந்தனர். கதீஜா நாயகியின் பிரிவு அவர்களை நெடுகிலும் வாட்டிக் கொண்டிருந்தது என்பதை “பிர்அவ்னின் மனைவி ஆஸியாவும், ஈஸா நபியின் அன்னை மர்யமும் என் மனைவி கதீஜா நாச்சியாரும் எனது பாத்திமாவும் பெண்களின் பரிபூரணம் பெற்ற மாது சிரோண்மணிளாவர்” என அண்ணலார் அடிக்கடி கூறி வந்ததிலிருந்து தெரிந்து கொள்கிறோம். மரணத்தின் போது கதீஜா நாச்சியாரின் வயது 65 ஆக இருந்தது.

அன்புப் பெரிய தந்தையையும் அருமை மனைவியையும் இழந்த துக்கத்தில் அண்ணலார் சில நாட்கள் வரை சோர்வுற்றிருந்தனர். அண்ணலார் சில நாட்கள் வரை சோர்வுற்றிருந்தனர். வீடு வெறிச்சிட்டுக் காணப்பட்டது. அவ்விரு முக்கியஸ்தரின் மரணமும் அடுத்தடுத்து நேர்ந்துது குறைஷிகள் கும்மாளம் அடிப்பதற்கு ஏற்ற வாய்ப்பாக அமைந்தது. கதீஜா பெருமாட்டியார் மரணித்து இரண்டு வாரங்கள் கடப்பதற்குள் அவர்கள் நபிகள் கோமானை எள்ள நகையாடவும், எதிர்ப்பை

வலுப்படுத்தவும் தொடங்கினர். சாதாரணமானவன் கூட நபிகளாரை அலட்சியமாகப் பாவிக்க ஆரம்பித்தான். ஆட்டின் குடல் போன்ற அசுத்தப் பொருட்களையும் அவர்கள் மீது அள்ளி வீசத் தயங்கவில்லை அக்கொடு மாக்களான குறைஷிகள்.

ஒருநாள், ஒரு சாதாரண மனிதன் மண்ணைத் தன் கைகளில் அள்ளிப் பெருமானார் அவ்வழியே வரும்போது அவர்களின் புனித சிரத்தின் மேல் கொட்டி விட்டான். அக்கோலத்துடன் வீடு வந்த அண்ணலாரை அன்பு மகள் பாத்திமா கண்டதும் ஓவென வாய்விட்டு கதறியழுது “தந்தையே!. தாங்கள் எவருக்கும் எப்பொழுதும் யாதோர் இன்னலும் செய்ததில்லையே!. அவ்வாறிருக்கஈ அக்கொடியோன் தங்களின் திருச்சிரசின் மீது மண்ணை வாரிக் கொட்டி விட்டானே! இதுவா நமக்கிட்ட கதி!? என ஆறாத் துயரத்தோடு அழுது புலம்பியது. அதற்குக் கருணைக் கடலான காத்தமுந்நபி, “அழாதே என் கண்மணியே! உன் தந்தையை ஆண்டவன் ஒருக்காலும் கைவிட மாட்டான். அவன் எப்போதும் பாதுகாப்பளிப்பான். அதைரியப்படாதே!” என ஆறுதல் கூறி சமாதானப்படுத்தினார்கள்.

**கல்லால் அடித்தனர்.**

மக்காவுக்கு தென்கிழக்கே சுமார் 70 மைல் தொலைவில் தாயிப் என்னும் பட்டணமிருக்கிறது. அங்குள்ள மக்களும் குறைஷிகளைப் போல் விக்கிரகத் தொழும்பர்களேயாவர். சிறிய தந்தை அப்பாஸுக்கு அங்கு நில புலன்கள் உண்டு என்பது பெருமானாருக்குத் தெரியும். தாயிப் வாசிகளான தகீப் கோத்திரத்தாருக்கும் குறைஷிகளுக்குமிடையில் தெய்வங்களைக் கொண்டாடும் முறையிலும் வர்த்தகத் துறையிலும் நீண்ட காலப் போட்டியும் பகைமையும் இருந்து வருவதையும் அண்ணலார் அறிவார்கள். ஆகவே, தாயிப் சென்றாவது சில நாள் தங்கி அவ்வூர் மக்களிடம் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொல்லலாம். அவர்கள் ஆதரவு கிடைத்தால் குறைஷிகளின் இன்னல் இடையூறுகளிலிருந்தும் முஸ்லிம்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைக்குமே என எண்ணினார்கள். எனவே, தமது வளர்ப்பு மகன் ஜைதையும் உடனழைத்துக் கொண்டு நபித்துவம் 11ம் ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதத்தில் நடந்தே தாயிபுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அங்கு பனூதகீப் கோத்திரத்தைச் சேர்ந்த ஸாக்கிப் பிரிவினரின் தலைவர்களான அப்துய.்.லீல், மஸ்ஊது, ஹபீப் என்ற மூன்று சகோதரர்கள் மிக்க செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர். அண்ணலார் அன்னவர்களின் வீடு தேடிச் சென்று மூவரையுங் கண்டு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள். எல்லாவற்றையும் மூவரும் காது கொடுத்து கேட்டனர். ஆனால் அவர்கள் முதல் தரமான பெருமானாரின் விளக்கத்திற்குப்பின் அச்சகோரர்களில் மூத்தவன்இ “உம்மைத் தூதராக அனுப்பிய இறைவனுக்கு நீர் சவாரி செய்ய உமக்கொரு கோவேறு கழுதையைக் கூடவா கொடுக்க இயலாது போயிற்று?” என ஏளனம் பேசினான். இரண்டாமவன், “திருத்தூதராய் அனுப்புவதற்கு உம்மைத் தவிர வேறு ஆள் இறைவனுக்குக் கிடைக்கவில்லை போலும்!” என இடிந்துரைத்தான். மூன்றாமவன், “உண்மையில் நீர் இறைவனின் தூதராக இருப்பின் உம்முடன் உரையாட நான் அருகதையில்லாதவன்: ஆனால், நீர் பொய்யராக அருப்பின் என்னுடன் பேச உமக்கு அருகதை இல்லை”

எனச் சாதுர்யமொழி பேசினான். அக்குதர்க்கவாதிகளை விட்டகன்று வேறு பலரைக் கண்டு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள். எவரும் செவி சாய்ப்பதாக இல்லை. இவ்வாறு பத்து தினங்கள் வரை தாயிபில் தங்கி ஓரிருவரையாவது இஸ்லாத்தில் இணைத்துவிடலாம் எனப் பிரயத்தனப்பட்டார்கள். முழுத் தோல்வியே முடிவாகக் கண்ட பலன். மாறாக அம்மாக்கள் துஷ்டர்களையும், சிறுவர்களையும் ஏவிவிட்டுப் பெருமானார் தெருவில் செல்லும்போது, “பைத்தியம், பைத்தியம்” எனக் கைகொட்டி பரிகசிக்கச் செய்தனர். எண்ணி வந்தபடி தாயிபில் இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கு வாய்ப்பில்லை எனக் கண்டு பெருமானார் மக்கா திரும்ப எண்ணங் கொண்டார்கள்.

மூன்று சகோதரர்களும் மற்றவர்களும் முன்னேற்பாடாக நபிகள் கோமான் செல்லக்கூடிய வழி நெடுகிலும் சிறுவர்களையும், துஷ்டர்களையும் காத்து நின்று கல்லெறிய ஏற்பாடு செய்தனர். பதினோராம் நாள் காலையில் பெருமானரும் ஜைதும் தாயிபை விட்டுப் புறப்பட்டனர். அக்கொடுமாக்களின் ஏற்பாட்டின்படி பாதையின் இரு மருங்கிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தூர்த்தர்கள் விண்ணவரும் மண்ணவரும் போற்றும் அண்ணலம் பெருமானாரின் புனித மேனி மீது கல்மாரி பொழிந்த வண்ணம், “பைத்தியம் பைத்தியம்” எனக்கூச்சலிட்டனர். கல்லடியால் காத்தமுன்னநபியவர்களின் கவின்மிகு திருமேனி காயமுற்றது. மலர்ப்பாதங்களிரண்டும் குருதியில் தோய்ந்து காலணிகளை நனைத்தன. தாங்கொணா வேதனையால் சற்று தரிக்க முயன்றாலும் இருக்க விட்டார்களில்லை. கடந்து செல்வோமென்றாலும் கல்லெறியை நிறுத்தினார்களில்லை. அவ்வென்னஞ்சர்கள். இச்சம்பவம் பற்றிப் பின்னெருகால் பெருமானார் (ஸல்) கூறும்பொழுது, “நான் தாயிபிலிருந்து மூன்று கல் தூரம் ஓடி வந்தேன். மிகவும் காயமுற்று மயக்கமடைந்தவனாக ஓடி வந்ததால், எங்கிருந்து வருகிறேன் எங்கு செல்கிறேன் என்று என்னால் எண்ணிப்பார்க்கவும் அறிந்து கொள்ளவும் முடியாதவனாக இருந்தேன்” எனக் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வித நிலையில் ஓடி வந்த ஏந்தல் நபி எதிர்ப்பட்ட தோட்டமென்றால் புகுந்தார்கள். இத்தோட்டம் மக்காவாசிகளான உத்பா பின் ரபீஆவுக்கும் அவரது சகோதரர் ஷைபாவுக்கும் சொந்தமானது. இவர்கள் முஸ்லிம்களல்லர். துரத்தி வந்த துஷ்டர்கள் அத்தோடு தாயிப் திரும்பி விட்டனர். நிகழ்ந்தவற்றையெல்லாம் சற்று தூரத்திலிருந்து நோக்கிய அச்சகோதரர்கள் அண்ணலார் மீது அனுதாபம் கொண்டார்கள். அவர்கள் அதிகம் களைப்புற்றிருப்பதைக் கண்டு திராட்சைக் குலை ஒன்றைத் தட்டில் வைத்து தோட்டக்காரனான தங்கள் கிறிஸ்தவ அடிமை அத்தாஸ் என்பவனிடம் கொடுத்தனுப்பினர். அவ்விருவரும் அத்தாஸ் திராட்கைக் குலைத் தட்டுடன் அண்ணலார் அண்டை வந்த போது அவர்களது திருவதனத்திலும், மலர்ப்பாதங்களிலும் கல்லெறிபட்ட காயங்களில் வடிந்த இரத்தத்தை ஜைது துணியால் துடைத்துக் கொண்டிருந்தார்.

தோட்டத்தின் உரிமையாளர் கொடுத்தனுப்பிய பழம் என்பதறிந்த ஏந்தல் நபி, முதலில் அவர்களுக்கு நன்றி ஷுக்ரிா கூறிவிட்டு குலையினின்று ஒரு பழத்தைப் பிய்ந்து, “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” எனக் கூறியவாறு தங்கள் திருவாயில் வைத்தார்கள். அதுகண்டு அத்தாஸ் வியப்புற்றவராக, “பெரியாரே, நீங்கள் இப்போது என்ன கூறினீர்கள்?” என வினவினார். “வேறொன்றுமில்லை, இறைவனின் திருப்பெயரை உச்சரித்துப் பழத்தை உண்டேன்” எனக் கூறிப் பெருமானார் அதற்கு விளக்கம்

கொடுத்தார்கள். அப்போது அத்தாஸ் “நீங்கள் கூறும் விவரங்கள் இங்குள்ளவர்கள் அனுசரிக்கும் மார்க்கத்தைச் சார்ந்ததாயில்லாமல், எங்களுடைய கிறிஸ்தவ மார்க்கத்தைச் சார்ந்ததாயில்லாமல், எங்களுடைய கிறிஸ்தவ மார்க்கத்தை ஒட்டியதாகவன்றோ தோன்றுகிறது! அ∴தெப்படி?” என வினவினார். அதற்குப் பெருமானார், உம்முடைய நினேவா நாட்டில் தோன்றிய யூனுஸ் நபியைப் போன்று நானும் ஒரு தீர்க்கதரிசியாவேன், இறைவன் தனித்தவன், இணை துணை இல்லாதவன், அவன் யாரையும் பெறவில்லை, அவனை யாரும் பெறவில்லை என்று அவன் எனக்கு அறிவித்துள்ளான். இயேசுவும் என்போன்ற ஒரு தீர்க்கதரிசி ஆவார். அவர் தேவனின் குமாரருமல்லர், தேவனின் அவதாரமுமல்லர், இவைதான் நீர் பின்பற்றும் மார்க்கத்திற்கும் எனக்கு அருளப்பெற்ற மார்க்கத்திற்குமுள்ள வேறுபாடுகள்” என எடுத்துரைத்தார்கள். இதைக்கேட்ட அத்தாஸ் அண்ணலாரின் கைகளையும் கால்களையும் தொட்டு முத்தமிட்டுக் கலிமாச் சொல்லி இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமானார்.

கருணை நபியவர்கள் கல்லடிக் காயங்களால் வேதனை அடைவதைக் கண்டு மனங்கசிந்து ஆத்திரமுற்ற ஜைது “நாயகமே! தங்களை இவ்வளவு கொடுமைப்படுத்திய வன்னெஞ்சர்கள் நாசமடைய இறைவனைப் பிரார்த்தியுங்களேன்” என வேண்டினார். அதற்குக் காருண்யக்கடலாம் காத்தமுந் நபியவர்கள், “நான் மக்களிடம் அன்பு பாராட்டவும், அவர்களுக்கு நல்லுபதேசம் புரிந்து நேர்மைப் படுத்தவும் அனுப்பப்பட்டேனேயன்றி அவர்கள் மீது வேதனையை வரவழைப்பதற்காக அனுப்பப்படவில்லை. ஜைதே! இன்று தாயிப் மக்கள் நெர்வழிப்படாவிடினும் சிறிது காலங்கடந்தாவது அவர்கள் நேர்வழிப்படக் கூடும். அல்லது, இத்தலைமுறையினர் இஸ்லாத்தில் இணையாவிடினும் இவர் தம் மக்கள், வழித்தோன்றல்களாயினும் இச்சன்மார்க்கத்தை ஏற்கவே செய்வர்” எனச் சமாதானங் கூறி ஜைதின் ஆத்திரத்தை ஆற்றினார்கள். இறைவனின் கட்டளைப்படி வானவர் ஜிப்ரீல் தோன்றி பெருமானாரின் உள்ளக் கிடக்கையைச் சோதிக்கும் பொருட்டு மேற்கண்டவாறு வேண்டினர் எனவும் கூறுவர். அதன்பின் இறைவனிடம் இருகரமேந்தி, “இறைவனே! என்னுடைய பலவீனத்தைப் பற்றியும் வறிய நிலையைப் பற்றியும் மக்களின் கண்களில் நான் இழிவாகக் காணப்படுவதைப் பற்றியும் உன்னிடம் முறையிடுகின்றேன். ஏனெனில் இரக்க சிந்தனையாளர்களிலெல்லாம் மிகவும் இரக்க சிந்தனையாளன் நீ திக்கற்றவர்களுக்குத் துணையளிப்பவனும் ஆதரவற்றவர்களுக்கு அபயமளிப்பவனும் நீ. நீயே எனது பாதுகாவலன். நீ எவரிடம் என்னை ஒப்படைக்க நாடியுள்ளாய்? நீ என் மீது சினமுறாதிருப்பின் அதுவே எனக்குப் போதுமானது” என்று தமது இயலாத் தன்மையை எடுத்துக் கூறி, அவனது கருணையையும், உதவியையும், பாதுகாப்பையும் இறைஞ்சி மனமுருகிக் கண்ணீர் வடித்துப் பிரார்த்தித்தார்கள்.

சற்று நேரம் இளைப்பாறி ஓய்வுகொண்ட பின்னர் அண்ணலார் அத்தோட்டத்தைவிட்டும் அகன்று சிரமத்தோடும் மக்காவை நோக்கிப் பயணமானார்கள். தாயிபிலிருந்து மக்காவரும் வழியில் நக்லாவில் பெருமானார் (ஸல்) தஹஜ்ஜத் தொழுகையின் போது திருவசனங்கள் ஓதியதை நஸீபீனிலிருந்து வந்த ஏழு ஜின்கள் காது தாழ்த்திக் கேட்டுக் கலிமாச் செல்லி இஸ்லாத்தைத் தழுவிச் சென்று அதனைத் தம் ஜின் வர்க்கத்தாரிடம் பிரச்சாரம் செய்து இஸ்லாத்தில் சேர்த்து வந்தனர். வழியில்

நக்லா என்ற சிற்றூரில் சில நாள் தங்கி மீண்டும் பயணத்தைத் தொடர்ந்த ஹிரா குன்றை வந்தடைந்தார்கள். அதில் முன்னர் தாம் தவமிருந்த குகையில் சென்று தங்கியவர்களாய், தாயிபில் தங்களுக்கு நடந்த அவக்கேடுகள் மக்காவுக்கு எப்படியிருக்குமோ என எண்ணினார்கள்.

எனவே, ஜைதை முதலில் மக்காவுக்கு அனுப்பி அங்குள்ள நிலவரத்தை அறிந்துவரச் செய்வதுடன் அங்கு சென்றால் தமக்கு ஆதரவு நல்குவார் எவருமுண்டோவெனத் தெரிந்துவரச் செய்யலாம் எனவும் கருதினார்கள். அதன்படி ஜைது மக்கா சென்று நிலவரத்தை அறிந்து கொண்டு பலரைக் கண்டுப் பேசிப் பார்த்ததில் அனைவரும் சொல்லி வைத்தாற்போல், ருெமானாரைப் பொறுப்பேற்கவோ அல்லது அவர்களுக்கு ஆதரவு அளிக்கவோ சாத்தியப்படாதெனக் கைவிரித்தனர். இறுதியாக க.ஃபாவில் தொங்கவிடப்பட்டிருந்த பகிஷ்கார ஒப்பந்த முறிவைப் பிய்த்தெறிந்த முத்யிம் பின் அதீ என்பவர் அடைக்கலம் தர அன்பு கூர்ந்து முன் வந்தார். இவர் முஸ்லிமுமல்ல. நேரிய மனமும், இரக்க சிந்தனையும், அன்புள்ளமும்தான் அவரின் அரிய பண்புகள். பெருமானார் ஹிராவில் தங்கியுள்ளதை ஜைதிடமிருந்து அறிந்த முத்யிம் தம் இரு புதல்வர்களையும் ஆயுத பாணிகளாக்கித் தம்முடன் அழைத்துக் கொண்டு அங்கு சென்றார். அண்ணலாரைக் குகையிலிருந்து கீழே அழைத்து வந்து தம் ஒட்டகையின் மீது ஏற்றிக் கொண்டு நேரே க.ஃபாவுக்கு வந்தார். அங்கு உரத்த குரலில்"நான் முஹம்மதுவுக்கு அபயம் அளித்துள்ளேன். அவருக்கு இனி நானே பாதுகாவலன்" என அறிக்கை செய்தார். அதைக்கேட்ட குறைஷிகளின் நாவும் கைகளும் ஆற்றல் இழந்தன. நபிகள் கோமான் க.ஃபாவில் தொழுது கொண்டபின், அவர்களை முத்யிம் அழைத்துச் சென்று வீட்டில் விட்டார். அன்று முதல் முத்யிம் நாயகம் அவர்களுக்குப் பாதுகாப்பாகக் கூடவே திரிந்து வந்தார்.

முத்யிம் பாதுகாப்பளித்து வருவது குறைஷிகளுக்குப் பிடிக்கவில்லை. அவரை இழிந்துரைக்கவும் வசைபாடவும் தலைப்பட்டனர். அதைக் கண்டு மனந்தாளா அண்ணல் நபி குறைஷிகளை விளித்து, "சகோதரர்களே! இக்கணத்திலிருந்து, நான் இறைவனின் பாதுகாப்பைப் பெற்றுள்ளேன். அவன் பாதுகாப்பே எனக்குப் போதுமானது. இனி நீங்கள் முத்யிமை யாதொன்றுங் கறைகூற வேண்டாம்" எனக் கூறி அதினின்றும் சுழன்று கொண்டார்கள். அன்று முதன் முத்யிமைத் தங்களுடன் அழைத்துச் செல்வதை நிறுத்திக் கொண்டார்கள். தாயிப் பயணத்தின்போது அண்ணலாருக்கு ஏற்பட்ட இம்சையின் அனுபவம், மனமும் காயமும் கொடுமையைத் தாங்கும் மனிதனது சகிப்புத் தன்மையின் உச்சத்தை எட்டி முகடு முட்டி நின்றதெனவே கூற வேண்டும். இதற்கு ஆறுதல் அளிக்கும் வகையில்தான் பேரருளும் பேரன்புமுடைய இறைவன் தனது ஹபீபான (தோழரான) முஹம்மது (ஸல்) அவர்களைத் தன்னளவில் அழைத்துத் திருக்காட்சி வழங்கி உரையாடியுள்ளான் போலும்!

**பஞ்சடைத்த காது.**

பெருமானாரின் பிரச்சாரம் றாளுக்கு நாள் வலுவடைந்தது, சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் திருவிழா நடக்குமிடங்களுக்கும், சந்தை கூடுமிடங்களுக்கும் மக்கள் கூடும் தெரு முச்சந்திகளுக்கும் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து வந்தார்கள. குறைஷிகளும் எதிர்ப்பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அரபிகளுக்கு மட்டுமின்றி

யூதர், கிறிஸ்தவர்களிடத்தும் சென்று இறைவனின் தூதை எடுத்தியம்பியப் பெருமானார் தயங்கவில்லை தவறவுமில்லை.

இவ்வாறு இருந்து வரும்போது, எமன் மாகாணத்திலிருந்து ஒரு கோத்திரத்தாரின் தலைவரான, செல்வமும் செல்வாக்குடைய துபைல் பின் அம்ரு அலி தவ்ஸி என்பவர் ஒரு நாள் மக்காவுக்கு வந்தார். இவர் நல்ல புலமை மிக்க அறிவாளி. குறைஷித் தலைவர்கள் அவரை ஆடம்பரத்துடன் வரவேற்று உபசரித்தனர். அங்கு ஒரு விருந்துக்குப் பின் நடந்த உடையாடலின் போது நாயகம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் புதிய மார்க்கம் பற்றிய பேச்சும் எழுந்தது. அவ்வமயம் குறைஷிகள் பொய்யும் புனைச் சுருட்டுமாக உண்மையைத் திரித்துக் கூறி துபைல் இஸ்லாத்தையும் பெருமானாரையும் வெறுக்குமாறு செய்தனர். சத்தியத் திருநபியைச் சந்திக்காத வகையிலும் அன்னாரின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாத முறையிலும் துபைல் நடந்து கொள்வதாக அவர்களிடம் உறுதி கூறியிருந்தார். பெருமானாரின் பேச்சோ அல்லது அவர்களது திருவாயினின்று வெளிப்படும் திருவசனங்களோ தம் காதில் நுழைந்துவிடாது காத்துக் கொள்ள கைவசம் சிறிது பஞ்சையும் அவர் எப்போது கொண்டு திரிந்தார். இவ்வாறு மூன்று தினங்கள் முற்றாகக் கழிந்தன. நான்காம் நாள் துபைல் ஹரம் ஷரீபுக்குச் சென்றபோது ஆங்கு க.்.பாவின் ஓரத்தில் பெருமானார் தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் இனிய சத்தத்துடன் ஓதிய இறைவசனங்களின் நாதன் காற்றில் மிதந்து வந்து தூரத்தில் வந்துகொண்டிருந்த துபைலின் செவிகளில் புகுந்தது. மகுடி, நாகத்தை ஈர்ப்பதுபோல் அவர் பெருமானாரின் அண்டையில் வந்து சேர்ந்தார். சட்டெனப் பஞ்சை எடுத்துக் காதில் வைக்க முயன்றார். ஆனால், அதற்குள் திருவசனங்களில் சொல்லழகும், கருத்தாழமும், இனிய நாதமும் துபைலின் செவிகளில் தெளிவாகப் பட்டு மூளைக்கேறி மனதிற்குள் வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. கை செயலற்றுவிட்டது. பஞ்சும் வேலையற்றுக் கையிலிருந்தும் நழுவி விழுந்தது. துபைல் கற்சிலை போல் அசைவற்று நின்று பெருமானாரின் ஓதுதலையும் வணக்க முறைகளையும் கூர்ந்து கவனித்தார். இறைவனின் திருவசனங்களைக் காது குளிர மனம் இனிக்க லயித்து நின்று கேட்டார்.

துபைல் அங்கு நிற்பதை அறியாமல் திருத்தூதரவர்கள் தொழுகையை முடித்துக் கொண்டு இல்லம் ஏகினார்கள். சில நொடிகளில் கதவு தட்டப்பட்டது. பெருமானார் வந்த கதவைத் திறந்தார்கள். துபைல் நிலையருகில் தேம்பி அழுதவாறு நின்று கொண்டிருந்தார். அண்ணலாரைக் கண்டதும் அவர்களின் கரங்களைப் பற்றியவாறு துபைல், “நான் உங்கள் அடிமைஈ உங்களின் சீடன், என்னை நீங்கள்தாம் காப்பாற்றிக் கடைத்தேற்ற வேண்டும்” என இரந்து நின்றார். நபிகள் பிரான் துபைலை வீட்டினுள் அழைத்து வந்து உட்கார்த்தி உபசரித்து இஸ்லாத்தை பற்றி எடுத்துரைத்தார்கள். உடனே அவர் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் இணைந்தார். ஊர் திரும்பி துபைல் அண்ணலாரைப் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் தம் கோத்திரத்தாரிடம் எடுத்துரைத்து அனைவரையும் இஸ்லாத்தில் இணையச் செய்தார்.

இறைவனின் திருத்தூதர் இராக்காலங்களில் தொழுகையில் இறை வசனங்களை இனிமையாக ஓதுவதை மறைந்திருந்து கேட்டானந்திக்க, அபூசுப்யான், அபூஜஹல், அல்அக்னஸ் ஆகிய மூவரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் பெருமானாரின் வீட்டுச்சுவரோரங்களில் வந்து ஒட்டி நின்று காத்திருப்பர். அவ்வாறு அவர்கள் நின்றிருக்கும்போது சில சமயங்களில் பொழுதுகூடப் புலர்ந்துவிடும். அப்போது

அவர்கள் எதிர்பாராது சந்தித்துக் கொள்ள நேர்ந்தால் ஒருவரையொருவர் குறைகூறிக் கண்டிப்பர். எனினும், இவ்வழக்கத்தை அம்மூவரும் கைவிடவில்லை. இஸ்லாத்தையும் ஏற்கவில்லை. உண்மையை உணர்ந்தும் அதை ஒப்புக்கொள்ள மறுப்பது ஒருவித வக்ரபுத்தியும் வறட்டுப் பிடிவாதமும் ஆகுமன்றோ! சிலர் இந்நிகழ்ச்சி ஹலரத் அபூபக்கர் (ரலி) இல்லத்தண்டை நடந்ததாகவும் கூறுகின்றனர்.

### திருமணமும் மறுமணமும்

கதீஜா பிராட்டியாரின் மரணத்தால் அண்ணலார் அளப்பரிய துயரத்தில் மூழ்கிக் கிடந்தனர். இல்லத்தின் சுடர் விளக்கு அணைந்துவிட்ட காரணத்தால் அங்கு நுழையும் போதெல்லாம் அது அவர்களுக்கு வெறிச்சிட்டுக் காணப்பட்டது. அழகிலும், உயர் குலத்திலும், பணத்திலும் சிறந்த பெண்மணிகள் பலர் பெருமானாரின் கைப்பிடித்து இல்லக்கிழத்தியர் ஆவதற்கு போட்டியிட்டுக் கொண்டு முன்வந்தனர். எனினும் அவற்றைக் காதில் வாங்காமல் இஸ்லாத்தைப் பரப்புவதிலேயே அவர்குள் கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தனர். அண்ணல் நபியவர்கள் அரும் பணியாற்றி அகம் செல்லுங்காலை அவர்கள் ஆறுதல் பெற அன்பு மனைவி இல்லையே என்ற கவலை அத்யந்தத் தோழர் அபூபக்கர் (ரலி)யைச் சில நாட்களாக வாட்டிக் கொண்டிருந்தது. அதற்கொரு வகை காண முயன்றார். ஆழ்ந்த யோசனைக்குப் பின் ஒருவிதத் தீர்மானத்திற்கு வந்தார். அழகும் புத்தி சாதுர்யமுமிக்க தம் அன்புப் புதல்வி ஆயிஷாவையே பெருமானாருக்குத் திருமணம் செய்து கொடுத்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார். தமது உள்ளக்கிடக்கையை வெளியிட்டுக் காண்பித்தார். அபூபக்கர் (ரலி)யின் கோரிக்கையை அண்ணலார் அட்டியின்றி அங்கீகரித்தார்கள். இறைவனின் திருவருளால் நபித்துவம் 11ம் ஆண்டு ஷவ்வால் மாதம் அண்ணல் நபியவர்களுக்கு ஆயிஷா நாச்சியாரை 500 திர்ஹம் மஹருக்கு அழகிய முறையில் திருமணம் செய்விக்கப்பெற்றது. அது சமயம் ஆயிஷா நாச்சியார் பத்து வயதுச் சிறுமியாக இருந்தார். ஆறு வயதெனவும் சிலர் கூறுவர். சிறு பெண்ணாக இருந்ததால் அவர் தம் பெற்றோர் வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். மதீனா சென்றபின்னர்தான் நாயகம் அவர்களுடன் இல்லறம் நடத்துவதற்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆயிஷா நாயகி நுபுவ்வத் ஆண்டு பிறந்தவராகையால் மதீனாவில் அப்போது அவர் பதினான்கு வயதை எய்திய வராயிருந்தார்.

அபூபக்கர் (ரலி)யின் விருப்பத்திற்கிணங்க அண்ணலார் ஆயிஷா நாயகியைத் திருமணம் புரிந்து கொண்ட போதிலும் வீட்டையும் வீட்டுக் காரியாதிகளையும் கவனிப்பதற்கு வயது வந்த பெண்ணொருவர் அவசியம் தேவைப்பட்டது. அது சமயம் ஸௌதா பின்து ஜம்ஆ என்ற பெண்மணி விதவையாக இருந்தார். இவர்து ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தைத் தழுவியவர். ஸக்ரான் பின் அம்ரு என்பவருக்கு வாழ்க்கைப்பட்டிருந்து அவரையும் இஸ்லாத்தைத் தழுவுமாறு செய்தார். குறைஷிகளின் கொடுமைகளுக்கஞ்சி அபிஸீனியா சென்ற முஸ்லிம்களுடன் இத்தம்பதியரும் சென்றனர். அங்கு ஸௌதா தம் கணவரை இழந்து அப்துர்ரஹ்மான் என்ற கைக்குழந்தையுடன் மக்கா திரும்பினார். இவர் இஸ்லாத்தில் சேர்ந்ததனால் பெற்றோரும் உடன் பிறந்தாரும் ஆதரிக்க மறுத்து விட்டனர். நிராதரவாக நின்ற ஸௌதாவின் மீது பெருமானார் பரிவு காட்டி அவரை 400 திர்ஹம் மஹருக்கு மறுமணம் புரிந்து கொண்டார்கள். ஆயிஷா நாயகியின் திருமணத்தை அடுத்து அதே ஆண்டு அதே மாதம் தான் இம்மறுமணமும் நடந்தது. வீட்டைப் பற்றிய கவலையும் பெருமானாருக்கு ஒருவாறு நீங்கியது. இவ்விரு திருமணங்களையும் ஹாலா பின்து

ஹகீம் என்ற பெண்மணி, முன் நின்று பேசி முடித்தார். அது சமயம் கதீஜா நாச்சியார் காலமாகி ஓராண்டு கழிந்திருந்தது.

**யத்ரிப் வாசிகள்**

நபித்துவம் 10ம் ஆண்டு கி.பி. 620 மக்கா யாத்திரைக்கான ஹஜ் மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது. அரபு நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஹஜ்ஜுத்திருவிழாவுக்காக மக்கள் சாரிசாரியாக வந்து கூடினர். இவர்களில் மக்காவுக்கு வடக்கே சுமார் 270 மைல் தொலைவிலுள்ள யத்ரிப் என்னும் பட்டணத்திலிருந்து வந்த யாத்ரிகர்களும் இருந்தனர். யத்ரிப் ஒரு அரண் செய்யப்பெற்ற பட்டணமாகவும் பசுமையான தானிய வயல்களையும் பேரீச்சந் தோப்புக்களையும் பழத்தோட்டங்களையும் தெளிந்த நீரோடைகளையும் கொண்டும் விளங்கியது. கீழ்த்திசையினர் விரும்பும் சகல பாக்கியங்களையும் அது வழங்குவதாய்த் திகழ்ந்தது. யாத்திரைக்காக வெளியிலிருந்து வந்தவர்களனைவரும் மக்காவையொட்டி ஹிரா குன்றுக்கும் மினாவுக்கும் இடையிலுள்ள "அகபா" வெளியில் கூடாரங்களடித்துத் தங்கினர். பெருமானார் கூடாரந்தோறும் சென்று மக்களுக்கு இறைவனின் தூதை எடுத்தியம்பி இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள்.

யத்ரிபில் அரபியர் மட்டுமன்றி யூதர், கிறிஸ்தவர் மற்றும் பல இனத்தவர்களும் வசித்தனர். இவ்வாறு கலந்துறவாடிய முறையில் இறைவன், சமயம், தீர்க்கதரிசி, ஒழுக்கம் மற்ற விஷயங்களில் யத்ரிப் வாசிகள் மக்கா வாசிகளை விட அதிக விளக்கமுடையவர்களாக இருந்தனர்.

யத்ரிபில் அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரு முக்கிய அரபுக் கோத்திரத்தார் வசித்து வந்தனர். இவர்களுக்கிடையில் அடிக்கடி பிணக்கும், பூசலும், சண்டைகளும் ஏற்பட்டு வந்தன. இதன் காரணமாக அவர்கள் வலிமை குன்றி ஒரு நல்ல தலைவனோ அல்லது வழி காட்டியோ இல்லாது தத்தளித்துக் கொண்டிருந்தனர். யத்ரிபில் வசித்த யூத கோத்திரத்தர்களான அந்நுலைர், பனூ குறைலா ஆகிய இருவரும் அவ்ஸ் கோத்திரத்தாரையும் கைனுகா கோத்திரத்தார் கஸ்ரஜ் கோத்திரத்தாரையும் ஆதரித்து நின்று அவர்களைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நல்ல சுரண்டல் ஆதாயத்தை அடைந்து வந்தனர். தவிரவும், இந்த யூதர்கள் தங்களிடையே தீர்க்கதரிசி ஒருவர் அண்மையில் தோன்றவிருக்கிறார் எனவும் அவரின் உதவியால் அரபு நாடு முழுவதையும் வெற்றி கொண்டு தாங்கள் ஆளப் போவதாகவும் அச்சுறுத்தி பூச்சாண்டி காட்டி வந்தனர். இதனால் யத்ரிப் வாசிகள் அரபு நாட்டில் ஒரு தீர்க்கதரிசி தோன்றவிருக்கிறார் என்னும் விஷயத்தை ஏற்கனவே ஒருவாறு அறிந்திருந்தனர்.

ஹிரா குன்றுக்கும் மினாவுக்கும் நடுவிலுள்ள "அகபா" பகுதியில் பெருமானார் சென்று கொண்டிருக்கையில் சற்று தூரத்தில் யத்ரிப் வாசிகள் அறுவர் வீற்றிருப்பதைக் கண்டார்கள். இவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தாராவார். அண்ணலார் அவர்களை அண்மி, இஸ்லாத்தை எடுத்து விளக்கினார்கள். அவ்வறுவரும், " யூதர்கள் கூறி வரும் தீர்க்கதரிசி இவராகவே இருக்க வேண்டும். இவர் கூறுபவை அற்புதமானவையாயும் மிக்க நன்மை விளைவிப்பனவாயும் உள்ளன!. அனைவருக்கு முன்னர் நாம் இவரை ஏற்று நம்முடையவராக்கிக் கொள்ள வேண்டும்" எனக் கருதியவர்களாக அக்கணமே இஸ்லாத்தைத் தழுவினர். இவர்கள் அஸ்அத், அவ்பு, ரபீஆ, குத்பா, உக்பா, ஜாபிர் என்னும் பெயரினராகும். இவ்வறுவரும் யத்ரிப்

திரும்பியதும் தாங்கள் ஏற்றிருக்கும் புதிய மார்க்கத்தைப் பற்றிப் பிறருக்கும் எடுத்துரைத்து இஸ்லாத்தில் இணைந்து வந்தனர். கஸ்ரஜ்களைப் பார்த்து அவ்ஸ்களும் இஸ்லாத்தை ஏற்க முன் வந்தனர்.

**பிரச்சாரகர் முஸ்அப்**

மறு ஆண்டு கி.பி. 621 ஹஜ்ஜுத் திருநாளின் போது முன்பு வந்த அறுவருடன் மற்றுமறுவர் சேர்ந்து வந்தனர். இப்பன்னிருவரும் முன்புபோல் பெருமானாரை அகபாவில் சந்தித்து, புதிதாக அழைத்து வந்த அறுவரையும் இஸ்லாத்தைத் தழுவச் செய்தனர். இப்போது இவர்களைனவரும் அண்ணலாருக்குக் கீழ்க்காணும் உறுதிமொழியைச் செய்து கொடுத்தனர்.

1. இறைவனுக்கு இணை வைத்து எவ்வஸ்துவையும் வணங்குவதில்லை.
2. களவாடுவதோ, பிறர் பொருளைக் கவருவதோ இல்லை.
3. விபச்சாரம் செய்வதில்லை.
4. எவரையும் இழித்துரைப்பதோ, வீண் பழி சுமத்துவதோ இல்லை.
5. குழந்தைகளைக் கொல்லுவதில்லை.
6. நியாத விரோதமாக எக்காரியத்திலும் நடந்து கொள்வதில்லை.

இந்த உறுதிமொழிகளின் படி நடந்தால் அவர்களுக்குச் சுவனம் கிட்டுமென்றும், மீறினால் இறைவனின் முனிவுக்கும் தண்டனைக்கும் ஆளாக நேருமென்றும், மன்னிப்பதென்பது இறைவனைச் சார்ந்ததென்றும் நபிகள் கோமான் எச்சரித்தார்கள்.

இறைவணக்கம், மறு உலகை விரும்பல், இறையச்ச வாழ்க்கை, நீதி, அன்பு, சமத்துவம், தியாகம், மனத்தூய்மை, அனுதாப உணர்ச்சி முதலியன இந்தப் புத்துலக சமுதாயத்தின் சீரிய அம்சங்களாக அமைந்தன.

புதிய மார்க்கத்தை யத்ரிப் மக்களுக்கு எடுத்து விளக்கி அவர்களை இஸ்லாத்தில் இணைப்பதற்குத் தங்களுடன் ஒரு போதகரை அனுப்புமாறு அப்பன்னிருவரும் பெருமானாரிடம் முறையிட்டனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று முஸ்அப் பின் உமைர் பின் ஹாஷிம் என்பவரையும் உடன் அனுப்பினார்கள். முஸ்அப், யத்ரிப் சென்று அஸ்அத் பின் ஜுராராவின் இல்லத்தில் தங்கியிருந்து, தினமும் வீடு வீடாகச் சென்று புதிய மார்க்கத்தினை எடுத்து விளக்கி மக்களை இஸ்லாத்தில் சேர்த்து வந்தார். இவரது இதமான பேச்சும், கவர்ச்சியான விளக்கமும், இஸ்லாத்திலிருந்த ஈடுபாடும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. ஒரு சில குடும்பங்களைத் தவிர யத்ரிப் மக்களில் பெரும்பாலோர் முஸ்அபின் பிரச்சாரத்தால் இஸ்லாத்தில் இணைந்து விட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

**மந்திர சக்தி**

அங்கு ஸஅத் இப்னு மஆத் அல் நு.்.மான் என்பவர் அவ்ஸ் கோத்திரத்தில் பனூ அப்து அஷ்ஹல்களின் தலைவராக விளங்கினார். இவர் அஸ்அதுக்கு அத்தை மகன். சிலர் தாய்வழிச் சகோதரன் எனக்கூறுவர். ஸஅதுக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றும் அதில் ”மறக்” என்ற கிணறும் இருந்தன. போதகர் முஸ்அபும் மற்ற முஸ்லிம்களும் தினமும் இக்கிணற்றண்டை கூடி இஸ்லாத்தைப் பற்றிய

உபதேசங்கள், சர்ச்சைகளில் ஈடுபடுவது வழக்கம். இது சற்று ஸஅதுக்குப் பிடிக்கவில்லை. எனினும், அத்தை மகனிடம் அதை நேரில் சொல்லவும் துணிவில்லை.

ஒருநாள், உஸைத் பின் ஹுளைர் என்பவரிடம் முஸ்அபையும் மற்றவர்களையும் தோட்டத்தை விட்டும் வெளியேற்றுமாறு கூறியனுப்பினார். இதை அறிவிக்கச் சென்ற உஸைத், முஸ்அபின் கனிவான வரவேற்பைத் தட்ட மாட்டாதவராய் அக்கூட்டத்தினருடன் அமர்ந்தார். பிரச்சாரகரின் அழகிய போதனைகளையும், திருக்குர்ஆனின் இனிய திருவசனங்களையும், உஸைத் காதாரக் கேட்டு ஆனந்தித்தார். கவர்ச்சியுற்றார். கட்டுண்டார். இஸ்லாத்தை ஏற்று கலிமாவை மொழிந்தார். போதகர் முஸ்அப் பணித்தபடி அவ்விடத்திலேயே ஒலூச் செய்து இரண்டு ரக்அத் தொழுது கொண்டார். பின் ஸஅதிடம் திரும்பிச் சென்றார்.

உஸைர் மனம் மாறி வருகிறார் என்பதை அவரின் முகம், நடை, தோற்றத்தால் ஸஅத் தெரிந்து கொண்டார். உஸைதின் வாய்மொழியைக் கேட்டு விட்டு ஸஅத் "நீர் ஏமாந்து போனீர். இதோ பாரும் நான் சென்று காரியத்தைத் திறமையாக முடித்து வருகிறேன்" எனக் கூறியவராய் ஆத்திரத்துடன் கிளம்பிக் கிணற்றடிக்குச் சென்றார். முஸ்அப் அவருக்கு முகமன் கூறி இருக்க வைத்து இஸ்லாத்தை எடுத்துரைத்து, திருக்குர்ஆனின் திருவசனங்கள் சிலவற்றை அவருக்கு ஓதிக் காண்பித்தார். அவ்வளவு தான்!. ஸஅத், இஸ்லாத்தின் மந்திர சக்தியால் வசீகரிக்கப்பெற்று அக்கணமே கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றார். அம்மட்டோடன்றி, தம் இனத்தவரிடம் சென்று, இறுதி நபி தோன்றி விட்டார் என்றும், அவர் போதிக்கும் இஸ்லாம் இணையற்ற மார்க்கமெனவும், கூறித்தம் கூட்டத்தார் அனைவரையும் அதை ஏற்குமாறு உபதேசித்தார். அந்தி சாய்வதற்குள் அப்து அஷ்ஹல் கூட்டத்தார் அனைவரும் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர். இவ்விதமாக யத்ரிபிலுள்ள அரபிகளும், யூதர்களும், கிறிஸ்தவர்களும் திரள் திரளாக இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டிருந்தனர்.

அபூஜஹ்ல் ஒரு சமயம் உத்பா பின் ரபீஆ அல் அப்பாஸ் முதலிய சில பிரமுகர்களுடன், மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்று விட்ட பனூ ஜஹ்ஷ் கோத்திரத்தாரின் மக்காவிலுள்ள ஆளில்லா வீடுகள் இருந்த வீதியொன்றில் நடந்து சென்ற போது, மிக்க வருத்தத்துடன், "நம் சகோதரர் பெருமானார் (ஸல்) என்ன ஆதாயத்தை அடைந்து விட்டார்? அவர் நம் சமூகத்தை பிளவுபடுத்தினார். ஒற்றுமையை அழித்தார். மார்க்கத்தை இருகூராக்கினார். இதைத் தவிர அவர் வேறு எதைச் சாதித்தார்? என அங்கலாய்த்துக் கொண்டான். ஆனால் மக்காவில் பிளவுக்கும் ஒற்றுமைக் கேட்டுக்கும் காரணமாகக் காணப்பட்ட அந்த இயக்கம் (இஸ்லாம்) மதீனாவாசிகளால் ஓர் ஒப்பற்ற ஒற்றுமைச் சக்தியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை அவன் அறிந்தானில்லை. "எண்ணங்களின்படியே காரியங்கள் உருவாகின்றன" என்ற நபிமொழி எவ்வளவு பொருத்தமுடையதென்பதைக் காணுவீர்!.

**விண்ணுலக யாத்திரை**

அற்புதம் என்பது இயற்கைக்கும் இயற்கையின் சட்டங்களுக்கும் புறம்பாக நடக்கும் நிகழ்ச்சிகளைக் குறிக்கும். இவற்றை நபித்துவத்தின் அடையாளங்கள் அல்லது சான்றுகள் அல்லது விளக்கங்கள் எனக்கூறலாம். இவற்றை இறைவன் தனது நபிமார்களின் சத்திய சன்மார்க்கத்தை விளக்கவும், நிரூபிக்கவும் தனது சாதாரண

இயற்கைச் சட்டங்களை அகற்றி விட்டு – அவ்வஸ்துக்களின் இயக்கத்தை தடை செய்து நிறுத்தி வைத்து விட்டு தனது வல்லமையால் இந்த அற்புதங்களை அந்நபிமார்களின் வாயிலாக வெளியாக்கிக் காண்பிக்கின்றான். பொதுவாக எல்லா நபிமார்களும் அவரவர் காலத்தில் இருந்த மக்களுக்கு அற்புதங்களை நிகழ்த்திக் காண்பித்துள்ளனர். இவ்வற்புதங்களுக்கு ஆலத்தின் படைப்புகளும் கட்டுப்பட்டு அடங்கி இயக்கம் புரிந்துள்ளன.

ஆலம் என்பதில் கீழ்க்காணும் பிரிவுகளும் வஸ்துக்களும் அடங்கும்.

1) ஆலமே மஆனி - இது கலாம், இல்ம், நிறம், பணம் போன்றவற்றைக் குறிக்கும்.
2) ஆலமே மலாயிகா - இது ஒளியினால் படைக்கப்பட்ட மலக்குகள் என்னும் வானவர்களைக் குறிக்கும்.
3) ஆலமே ஜின் - இது நெருப்பினால் படைக்கப்பட்ட மனித வர்க்கத்தைக் குறிக்கும்.
4) ஆலமெ இன்ஸ் - இது மண்ணால் படைக்கப்பட்ட மனித வர்க்கத்தைக் குறிக்கும்.
5) ஆலமெ அலவி - இது சூரிய, சந்திர, வானம், நட்சத்திரம் போன்றவற்றைக் குறிக்கும்.
6) ஆலமெ பஸாயித் - இது பஞ்ச பூதங்களான நெருப்பு, காற்று, நீர், மண், ஆகாயம் என்பனவற்றைக் குறிக்கும். இவற்றை அர்ப அனாஸிர் எனவும் கூறுவர்.
7) ஆலமெ முரக்கபாத் - இது ஜமாஅத் என்னும் தாதுப் பொருட்கள், நபாதத் என்னும் தாவரங்கள், ஹைவானாத் என்னும் மிருகாதிகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

இந்த ஆலம்கள் அனைத்திலும் நபிபெருமான் (ஸல்) அவர்கள் அற்புதங்கள் நிகழ்த்திக் காண்பித்துள்ளனர். இவற்றுள் பெருமானாரின் விரல் அசைப்பினால் சந்திரன் இரண்டாகப் பிளந்து கிழக்கும் மேற்குமாகச் சென்று பின்னர் ஒன்றாக இணைந்ததும், இறைவனின் அருட்கொடையால் அண்ணலார், அவனின் திருச்சந்நிதான மேகி, அவனைத் தரிசித்து உரையாடல் புரிந்து மீண்ட நிகழ்ச்சிகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

நபித்துவம் 12ம் ஆண்டு கி.பி. 621 ஆண்டு பிப்ரவரி 22-23ல் ஹிஜ்ரத்துக்குச் சுமார் ஒன்றரை ஆண்டு முன்னதாக இணையற்ற இறைவனாம் அல்லாஹ் தன் திருத்தூதராம் நபிகள் கோமான் அவர்களுக்கு ஒப்பற்ற பெரும் பேறொன்றினை அருள்பாலித்தான். அவ்வாண்டு ரஜப் பிறை 26-27 திங்கள்கிழமை இரவு பெருமானார் கஃபாவிலுள்ள ஹிஜ்ர் என்னும் ஹதீமில் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது வானவர் ஜிப்ரீல் தோன்றி நபிகள் நாதரை எழுப்பி, இறைவன் தன் சந்நிதானத்திற்கு அவர்களை அழைத்திருப்பதாகக் கூறினார் அண்ணலார் அன்றிரவு தம் பெரிய தந்தை அபூதாலிபின் மகள் உம்முஹானி அம்மையார் இல்லத்தில் நித்திரை கொண்டிருந்த போது வானவர் ஜிப்ரீல் வந்து எழுப்பி கஃபாவுக்கு அழைத்துச் சென்றதாகவும், கஃபாவை ஏழு முறை இடம் வந்து தவாப் செய்து விட்டு அங்கிருந்து புறப்பட்டதாகவும் சில சரித்திர ஆசிரியர்கள் வரைந்துள்ளனர். பெருமானாருக்கு அப்போது வயது 49ம் நாலரை மாதமும் ஆகின்றது.

”தன் அடியாரை (பெருமானாரை) இரவின் போது மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து (க.ஃ.பா) தூரத்திலுள்ள நம்மால் ஆசீர்வதிக்கப் பெற்ற மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு (பைத்துல் முகத்தஸிலுள்ள பள்ளிவாயில்) தன்னுடைய அத்தாட்சிகளைக் காண்பிக்கும் பொருட்டு அழைத்துச் சென்ற அவன் (இறைவன்) மாட்சிமை பொருந்தியவனாகயிருக்கிறான் (17:1)

வானவர் ஜிப்ரீல் நபிகள் நாகயம் அவர்களைக் க.ஃ.பாவின் முற்றத்தில் அப்போது தயாராக நின்றிருந்த ”புராக்” இது மனிதத்தலையும் குதிரையின் உடலும் இறக்கைகளும் கொண்ட ஒளியினாலான வாகனம் எனக்கூறப்படுகிறது.

அருகில் அழைத்துச் சென்று அதில் ஏறிக்கொள்ள செய்தார். புராக் மின்னல் வேகத்தில் ஆகாயத்தில் பறந்து சென்று பைத்துல் முகத்திஸ் பள்ளியை அடைந்தது. நபிகள் நாதர் அதனின்றும் இறங்கி ஒலுச் செய்து கொண்டு அப்பள்ளியில் அந்நேரத்தில் கூடியிருந்த நபிமார்களின் ஜமாஅத்துக்கு இமாமாக நின்று இறைவனை இரண்டு ”ரக்அத்” தொழுதார்கள். பின் மீண்டும் புராக்கின் மீதே வானலோகஞ் சென்று இறைவன் திட்டப்படுத்தியிருந்த எல்லையை அடைந்தார்கள். இதனை ஆலிப்புலவர்

நாலாம் வானம் இலங்கும் ஞானரத்ன ம.ஃமூரில்
வாலாய மாய்வீற்ற வான்பரியை கோலத்தூண்
தான் துளைத்துக் கட்டியரோ தாஹாசென் றாரைத் தாம்
வானகத்தின் உள்ளே மகிழ்ந்து

எனத் தமது ”மி.ஃராஜ் மாலை” யில் பாடுகிறார்.

பெருமானார் அங்கு இறைவனின் கிருபா கடாட்சத்தால் பல அற்புதங்களைக் கண்டு அவனுடன் உரையாடினார்கள். முஸ்லிம்களுக்கான தொழுகையைத் தினம் ஐங்காலத்ததாக இறைவன் நிர்ணயித்துத் தந்ததும் இவ்விண்ணேற்றத்தின் போதேயாம்! சுவர்க்க நரகங்களின் நிலைகளையும் அவற்றில் நடப்பவற்றையும் பெருமானார் இது சமயந்தான் நேரில் கண்டு தெரிந்தார்கள். இறைவனின் சந்நிதானத்தில் அவர்கள் பார்க்க வேண்டியதைப் பார்த்து, கேட்க வேண்டியதைக் கேட்டு, பேச வேண்டியதைப் பேசி முடித்த பின் மீண்டும் புராக்கின் மீது அமர்ந்து பைத்துல் முகத்தஸ் வந்தடைந்தார்கள். பின் அங்கிருந்து அவ்வாகனத்திலேயே க.ஃ.பத்துல்லாஹ் வந்து சேர்ந்தார்கள். இது மிக சொற்ப நேரத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். படுக்கையிலிருந்த தமது உடற்சூடு மாறுவதற்குள் இச்சம்பவம் நிகழ்ந்ததெனப் பெருமானார் வர்ணித்துள்ளார்கள்.

”என்னுடைய ரப்பை என் கண்களாலும், கல்பாலும் (இதயம்) அவனுடைய சிறந்த தோற்றத்தில் கண்டேன். பிறகு அல்லாஹ் எனது இரு தோள்பட்டைகளுக்கும் மத்தியில் தன் கரத்தை வைத“தான். அதன் தன்மை (இதம்) என் இதயத்தில் படுவதை நான் உணர்ந்தேன். வானங்கள் பூமண்டலங்கள் யாவினும் உள்ளவற்றின் ஞானமும் எனக்கு அருளப்பட்டன. நடந்தது, நடக்க விருப்பது யாவையும் நான் அறிந்து கொண்டேன். அண்ட பகிரண்டத்தையெல்லாம் மிகவும் சிறிய அளவினதாக அல்லாஹுதஆலா என்முன் காட்டினான். ஒருவன் தன் உள்ளங்கையைப் பார்ப்பது

போல் உலகமனைத்தையும் நான் வெகு தெளிவாகக் கண்டு கொண்டேன். நியாயத் தீர்ப்பு நாள்வரை என்னென்ன நடக்கும் என்பதையெல்லாம் நான் அறிந்துகொண்டேன்." என அண்ணலார் அருளியதாக "திர்மிதி", "மிஷ்காத்" இவற்றில் கூறப்படுகிறது.

இதனையே திருக்குர் ஆன் இவ்வாறு எடுத்து இயம்புகின்றது:

(நபியுடைய) இருதயம், தான் உண்மையில் கண்டதை பற்றி பொய் கூறவில்லை. அவர் கண்டதைப் பற்றி நீங்கள் (சந்தேகித்து) அவருடன் தர்க்கின்றீர்களா? நிச்சயமாக அவர், மற்றொரு முறையும் (ஜிப்ரயீல் ஆகிய அவர் மிஃராஜில்) இறங்கக் கண்டிருக்கிறார். "ஸித்ரத்துல் முந்தஹா" (என்னும் இலந்தை) மரத்தின் எல்லையில் அதன் சமீபமாகத்தான் (நல்லடியார்கள்) தங்கும் சுவனபதி இருக்கின்றது. அந்த மரத்தைச் சூழ வேண்டியது அதனை (முற்றிலும்) சூழ்ந்து கொண்டது. (அதிலிருந்து) அவருடைய பார்வை விலகவுமில்லை, கடக்கவுமில்லை, அவர் தன் இறைவனின் மிகப் பெரிய அத்தாட்சிகளை (எல்லாம்) மெய்யாகவே கண்டார்"

மறுநாள் காலையில் இந்நிகழ்ச்சி பற்றிய விபரங்கள் சிலவற்றை அண்ணலார் தம் தோழர்கள் சிலரிடம் சொல்லிக் காண்பித்தார்கள். இச்செய்தி குறைஷிகளின் காதுகளுக்கு எட்டியதும் அவர்கள் முஸ்லிம்களை நோக்கி,"முன்பெல்லாம் உங்கள் நபி தமக்கு இறைவனிடமிருந்து வேதம் வருவதாக ம்டடும் கூறிக்கொண்டிருந்தார். இப்போது இறைவனிடமே அவர் நேரில் சென்று உரையாடி விட்டு வந்ததாகக் கூறத் துணிந்துவிட்டாரே! பார்த்தீர்களா, அவரது பொய் பேசுந்திறமையை!" எனக் கேலியும் கிண்டலுமாகப் பேசத் துவங்கிவிட்டனர். வெளியூர் சென்றிருந்த அபூபக்கர் (ரலி) இப்போது மக்கா வந்து சேர்ந்தார். பெருமானாருக்குத் தம் மகள் ஆயிஷா நாயகியைத் திருமணம் செய்து கொடுத்ததின் காரணமாக அவரை அண்ணலாரும் மக்களும் "அபூபக்கர்" கன்னியின் தந்தை என அன்புடன் அழைக்கலாயினர். வந்ததும் வராததுமாகக் குறைஷிகள் அபூபக்கர் (ரலி) யிடம் ஓடிச்டிசன்று பெருமானாரின் விண்ணேற்றம் பற்றிய விஷயத்தைச் சொல்லிக்காட்டி, "இவ்அபாண்டத்தை நீர் நம்புகிறீரா?" எனக" கேட்டனர். உடனே அபூபக்கர் அவர்கள், "இறைவனிடமிருந்து திருவசனங்களை ஜிப்ரீல் எத்தனையோ தடவைகளட பூமிக்கு எடுத்துவந்தார் என்பதை நான் நம்பும்போது, விண்ணுலக யாத்திரை (மிஃராஜ்) சென்று வந்ததாக நபிகள் பிரான் கூறினார்களென்றால் அதை நான் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறேன். இது இறைவனால் ஆகாத காரியமல்லவே!" எனக் கூறி அவர்களை வாயடைக்க செய்தார்கள். இதனை அறிந்த அண்ணலார் அதுமுதல் அபூபக்கர் அவர்களை "சித்தீக்" – அமள்பித்தவர்- என்ற சிறப்புச் சொல்ல அணைத்து "அபூபக்கர் சித்தீக்" என்ற அன்பு கனிய அழைத்து வந்தார்கள்.

**அகபா உடன்படிக்கை**

இந்நிலையில் நபித்துவம் 12ம் ஆண்டு இறுதியில் கிபி 622 அடுத்த ஹஜ்ஜுத் திருநாளும் வந்தது. யத்ரிப் வாசிகள் முஸ்அபுடன் கலந்து பேசி பெருமானாரைத் தங்கள் ஊரில் கொண்டு வந்து குடியேற்றம் நோக்கம் கொண்டனர். இதற்காக அவளா முற்கூட்டியே மக்கா சென்ற அண்ணல் நபிகளாரைக் கலந்து சில முன்னேற்பாடுகளைச் செய்து வைக்குமாறு அனுப்பி வைத்தனர். முஸ்அப் மக்கா வந்து நபிகள் பழரான் அவர்களைக் கண்டு, மதீனாவில் தாம் செய்து முடித்த சமயப்

பணிகள் பற்றிய விபரங்களை விரிவாக எடுத்துக் கூறி யத்ரிப் மக்களின் உள்ளடக் கிடக்கையும் அண்ணலாருக்கு அறிவித்தார்.

கும்மிருட்டு, விண்மீன்கள் மட்டுமே மினுக்மினுக்கெனப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன். நள்ளிரவு கடந்துவிட்டது. அகபா வெளியில் அயர்ந்த நித்திரையிலிருந்த அந்த எழுபத்தி ஐந்து யத்ரிப் வாசிகளும் திட்டப்படி ஒருவர், இரவராக விழித்தெழுந்து அருகிலிருந்த கணவாயில் ஒருவரின் வருகையை எதிர்பார்த்து நிற்பவர்களாகக் காணப்பட்டனர். சரித்திரப் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள புகழ்மிக்க இந்தச் சில வினாடிகள்தான், நன்மலர் மொட்டவிழ்த்து நறுமணம் பரப்புவது போல், இறைவனின் ஏகத்துவத்தைப் பறைஅறைந்து நிற்கும் இஸ்லாத்தை மாணிட வர்க்கத்திள் மத்தியில் சுடர்வீசிப் பிகாசிக்கத் துணைபுரிந்த பொன்னேரமாகும் எனக் கூறுதல் வேண்டும். அந்நேரத்தில் இரு உருவங்கள் அகபா வெளியில் அடிமேல் அடி எடுத்து வைத்தவாறு அப்பள்ளத்தாக்கை நோக்கி வந்தன் சமீபத்தில் வரும்போதுதான் அவ்வுருவங்கள் அண்ணல் நபிகளாரும் அவர்களின் சிறிய தந்தை அப்பாஸும் என்பது அங்குக் கூடி நின்றோருக்குத் தெரிய வந்தது. அப்பாஸ் இன்னும் இஸ்லாத்தில் இணையவில்லை. எனினும் தம் அண்ணன் மகனுக்கு அரும்பாதுகாப்பாக இருந்து வந்தார்.

முதன்முதலாக, அப்பாஸ் யத்ரிப் வாசிகளை நோக்கி ”அன்பர்களே! கண்ணின் மணியாம் என் அண்ணன் மகன் முஹம்மதுவை நாங்கள் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பட்டணத்தில் அவரை ஆதரிப்பவரம் இருக்கின்றனர். எதிர்ப்பவரும் இருக்கின்றனர். இந்நிலையில், நீங்கள் அவரை உங்கள் ஊருக்கு வருமாறு அழைக்கிறீகள். அவர் அங்கு வருவதானால் உங்களுக்கேற்படும் பெரும் பொறுப்பு, கடும் எதிர்ப்பு இவற்றை நீங்கள் சமாளிப்பீர்களா என்பதைச் சிந்தித்துக் கூறுவீர். முடியாதெனில், அவர் இங்கேயே தங்கி விடட்டும். வீணில் அவரைத் துன்பத்திற்கு ஆளாக்கி விடாதீர்கள்“ என எடுத்துக்காட்டினார். யத்ரிப் வாசிகளின் சார்பில் அல்பராஅ என்னும் பெரியார் வாய்திறந்து “துன்பம், துயரம், எதிர்ப்பு, இன்னல் இவையெல்லாம் ஏற்படுமென்பதை அறிந்தே நாங்கள் முடிவெடுத்து இங்கு வந்துள்ளோம். இது அவசரப்பட்ட முடிவல்ல. ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் உருவானதாகும்“ எனப் பதில் கூறினார். பின் அவர் பெருமானார் பக்கம் திரும்பி ”நாயகமே! தங்களின் திருவுளக் கருத்தைத் தெரிவித்தால் அதுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறோம்” என்றார். பெருமானார் தம் திருமுகத்தில் புன்முறுவல் தவழ, இறைவசனங்களில் சிலவற்றை ஓதியவர்களாய், ”அன்பர்களே! உங்கள் மனைவி, மக்களைக் காப்பது போல் என்னைக் காத்து நிற்பதாக உறுதியளித்தால், யத்ரிபுக்கு வந்து உங்களோடு வசிக்கச் சம்மதிக்கிறேன்” எனத் திருவாய் மொழிந்தார்கள். அந்நிபந்தனையை அனைவரும் ஒப்புக்கொள்வதாக உறுதியளித்தனர்.

அவர்களில் அபுல்ஹைதம் இப்னு தீஹான் என்பார், ”நாயகமே! உங்கள் பொருட்டு யூதர்களுக்கும் எங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ள நேருகிறதே! இறைவனின் அருளால் நீங்கள் வெற்றி வீரராகத் திகழுங்காலை, எங்களைப் புறக்கணித்துவிட்டு மக்காவுக்குத் திரும்பிச் சென்று விடுவீர்களோ என்ற அச்சம் ஏற்படுகிறதே, இதுபற்றித் தங்களது உள்ளக்கிடக்கையை வெளியிட்டுக் காட்டுவீர்களா?” என வினவினார். அதனைச் செவிமடுத்த நபிகள் நாதர், உணர்ச்சியும் உறுதியுங்கலந்த வார்தைகளில் ”நண்பரே! இனி நீங்கள் வேறு நான்

வேறு என்பது கிடையாது. இன்பத்திலும் துன்பத்திலும் நான் உங்களுடனேயே பங்கு கொண்டு இருக்கப்போகிறேன். அதனால் உங்களின் பகைவர் எனக்கும் பகைவராவார். உங்களின் நேசர்கள் எனக்கும் நேசர்களாவர். இதை நீங்கள் உறுதியாக நம்பலாம்!" எனக் கூறினார்கள். பின் அந்த 75 பேர்களிலிருந்து 12 நகீப்களை சீடர்களைப் பிரச்சாரம் பணிக்கெனத் தேர்ந்தெடுத்தார்கள்.

**பன்னிரு நகீப்களின் நாமங்கள் :**

1. அஸ்அத் பின் ஜுறாறா பனீ நஜ்ஜார் - கஸ்ரத்
2. ஸஅத் பின் ரபீ அ-பனீ மாலிக் - கஸ்ரத்
3. அப்துல்லாஹ் பின் ரவாஹா-பனீ உமர் – கஸ்ரத்
4. ராபிஅ பின் மாலிக் - பனீ ஜுரைக் - கஸ்ரத்
5. பராபின் ம.்.ரூர் – பனீ ஸலமா – கஸ்ரத்
6. அப்துல்லாஹ் பின் அம்ரு – பனீ ஸலமா - கஸ்ரத்
7. உப்பாதா பின் ஸாமித் - பனீ ஸலமா – கஸ்ரத்
8. ஸஅத் பின் உப்பாதா – பனீ ஸலமா – கஸ்ரத்
9. முன்திர் பின் அம்ரு – பனீ ஸலமா – கஸ்ரத்
10. உஸைத் பின் ஹுலைர் – பனீ அப்து அஷ்ஹல் அவ்ஸ்
11. அபுல் ஹைதம் - பனீ அப்து அஷ்ஹல் அவ்ஸ்
12. ஸஅத் பின் கைதமா – பனீ கஅப் அஷ்ஹல் அவ்ஸ்

இச் சந்தர்ப்பத்தில் அவர்களில் அஸ்அத் பின் ஜுராறா தமீமி என்ற முதியவர் யத்ரிப் வாசிகளை நோக்கி, "அவ்ஸ், கஸ்ரஜ் குலத்தவரே! நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் பொறுப்பின் தன்மையையும் அதன் சுமையையும் உணர்ந்தீர்களா? உங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தாக வேண்டிய ஒரு மாபெரும் பணியை நீங்கள் இப்போது மேற்கொள்ளுகிறீர்கள். வாக்குத் தத்தம் செய்து அதை மீறி நடந்தால் இம்மை, மறுமை இரண்டிலும் தீமை வந்து சாடுமென்பதை நினைவில் கொண்டு முடிவு செய்யுங்கள்" என எச்சரித்தனர். அனைவரும் சற்று தயக்கமுடன் சிந்திக்கத் துவங்கினர். அதிலொருவர், "நாயகமே! நாங்கள் விசுவாசத்துடன் நடந்து கொண்டால் அதனால் அடையும் பிரதிபலன் என்ன?" என வினவினார். "சுவர்க்கம்" என ஒரே சொல்லில் ரத்தினச் சுருக்கமாகப் பதிலிறுத்தார்கள். நபிகள் கோமான், அவ்வளவோடு பேச்சு முடிந்தது. பின் 73 ஆண்களும் ஒவ்வொருவராக, பெருமானாரிடத்தும் இஸ்லாத்திற்காகவும் உண்மை விசுவாசத்துடனும், உறுதியுடனும் நடந்து கொள்வதாக அண்ணலாரின் திருக்கரத்தின் மீது தம் கரத்தை வைத்து பைஅத் உறுதிமொழி விசுவாசப் பிரமாணம் - செய்து கொடுத்தனர். முதலில் அபுல் ஹைதமைத் தொடர்ந்து அவ்ஸ்கள் 3 பேரும் கஸ்ரஜ்கள் 9 பேரும் ஆக 12 நகீப்களும், அதன்பின் மற்றவர்களும் பைஅத் செய்தனர். பெணிகளிருவரும் வாய்மொழி பைஅத் செய்ததே போது கையடித்துத் தர வேண்டியதில்லை எனக் கூறித் தவிர்த்து விட்டார்கள். இதுவே "அகபா உடன்படிக்கை" அல்லது "பைஅத்துல் ஹர்ப்" என அமைக்கப்படுகிறது.

இவ்விரகசிய நிகழ்ச்சியை யாரோ ஒருவன் ஒளிந்திருந்து பார்த்துக் குறைஷிகளிடம் ஓடோடிச் சென்று கூறிவிட்டான். பொழுது புலர்ந்தவுடன் அவர்கள் ஆட்களை அனுப்பி யத்ரிப்வாசிகளை கண்டு உண்மையறிந்து வரச் சொன்னார்கள். இவ்வாட்கள் கண்டு கேட்ட முஸ்லிமல்லாத யத்ரிப் வாசிகள், உண்மையிலேயே உடன்படிக்கையைப் பற்றி அறியாதவர்கள். வந்தவர்களிடம் அவர்கள், இது வெறும் கட்டுக்கதை, அவ்வாறு ஏதும் திகழவில்லை" எனக் கூறியனுப்பினர். உடனே யத்ரிப்வாசிகளனைவரும் கூடிப்பேசி, இனி அகபாவிலிருப்பது ஆபத்தெனக் கண்டு, கூடாரங்களைச் சுருட்டிக் கொண்டு ஊருக்கு விரைந்தனர். எனினும் உடன்படிக்கை ஏற்பட்டது உண்மை என்பது குறைஷிகளுக்கு நிச்சயமாகிவிட்டது. இது துல்ஹஜ் பிறை 10ம் இரவில் நடந்த சம்பவமாகும்.

அகபா உடன்படிக்கைக்குப் பின் குறைஷிகளின் அதிகரித்த எதிர்ப்பு, இன்னல்களின் மத்தியில், முஸ்லிம்கள் உயிர் வாழ்வது மிக்க ஆபத்தாகிவிட்டது. இந்நிலையினைக் கண்ட பெருமானார் பெரிதும் வேதனையுற்றார்கள். அன்னாரது விருப்பத்திற்கும் ஆலோசனைக்கும் இணங்கச் சுமார் நூற்றி ஐம்பது குடும்பத்தினர் தங்கள் சொத்துப் பற்றுக்களை விற்றும் விற்காமலும் மூன்று மாத காலத்தில் சிறுகச் சிறுக மக்காவை விட்டு யத்ரிபுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். இவர்களுள் ஹலரத் உத்மான் இப்னு அ∴ப்பான் அவர்கள் மட்டுமே தங்கள் முழு ஆஸ்தியையும் உடன்கொண்டு செல்ல முடிந்தது. ஹலரத் உமர் ஒருவர் தாம் பட்டப்பகலில் பகிரங்கமாக யத்ரிபுக்குப் பிரயாணமானார். இப்போது மக்காவில் நபிகள் நாயகம் (ஸல்) அபூபக்கர் சித்தீக் ஆகிய இருவரும் அவர்களின் குடும்பங்களும் அலீ அவர்களுமே எஞ்சி இருந்து வந்தனர்.

மக்காவிலிருந்த முஸ்லிம்கள் அனைவரும் பத்திரமாக யத்ரிபு போய்ச் சேர்ந்த பின்னரும் தங்களின் பயணங் குறித்துப் பெருமானார் எதுவும் கூறாதிருப்பது அபூபக்கர் அவர்களுக்கு வியப்பை அளித்தது. எனவே, அவர் ஒருநாள் அண்ணலாரை அணுகி, "நாயகமே, முஸ்லிம்கள் அனைவரும் யத்ரிபுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள் என்பதை அறிந்த குறைஷிகள் குமுறிக் கொண்டிருக்கின்றனரே! நாமும் அங்கு செல்வது தலம் பயக்குமன்றோ! இதுபற்றித் தங்கள் கருத்தறிய ஆவலுறுகிறேன்" என்றனர். அபூபக்கர் அவர்களின் வார்த்தைகளைக் கேட்ட பெருமானார் அமைதியாக, "அவசரப்படாதீர், ஒரு வேளை நாம் இருவரும் சேர்ந்தே பிரயாணம் போக நேரிடலாம், இறைவனின் உத்தரவும் இன்னும் கிடைக்கவில்லை. அதை நான் எதிர்பார்த்தவனாக இருக்கிறேன்" எனச் சமாதானம் கூறினார்கள். அண்ணலாரின் கருத்திறிந்த அபூபக்கர் சித்தீக் அவர்கள், பயணம் எச்சமயத்திலும் திடீரென ஏற்படக் கூடுமென்பதை எண்ணியவராய்த் தம் பணியாள் ஆமிர் பின் புஹைராவிடம் வேகமாகச் செல்லக்கூடிய இருநல்ல ஒட்டகங்களை எண்ணூறு திர்ஹம்களுக்கு வாங்கிக் கொடுத்து கொழுமையாக வளர்த்து வருமாறு பணித்தார்கள்.

## கொலைத் திட்டம்

ஒருநாள் காலையில் மக்காவின் நகர மன்றமாகிய "தாருன் நத்வா"வில் குறைஷிகளின் முக்கிய தலைவர்கள் கூடினார்கள். அவர்களுள் குறைஷிகளின் பத்துக் கோத்திரங்களான ஹாஷிம், உமய்யா, நௌபல், ஜுஹ்ரா, அஸத், தமீம், அதீ, மக்ஜுமி, ஜுமா∴, சஹ்ம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்பா இப்னு ராபீஆ, ஷைபா இப்னு ராபீஆ, அபூ ஸுப்யான் இப்னு ஹர்ப், நுயைமா இப்னு அதீ,

ஜுபைரிப்னுமுத்இம், ஹாரிஸிப்னு ஆமிர், அந்நளீ ரிப்னு ஹாரிஸ், அபுல் புக்தா ரிப்னு ஹிஷாம், ஜமா:. இப்னுல் அஸ்வத், ஹக்கீ மிப்னு ஹிஷாம், அபூஜஹல் இப்னு ஹிஷாம், ஹஜ்ஜாஜின் இரு புதல்வர்களான நுபாயா, முனப்பஹ், உமையா இப்னு கலப் ஆகிய இரு பதினான்கு முக்கிய பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். அன்று சபர் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை அவர்கள், நாயகம் அவர்களின் புதிய மார்க்கம் கனவேகத்தில் பரவி வருவது குறித்தும், முஸ்லிம்கள் அனைவரும் மக்காவைக் காலி செய்து யத்ரிப் போய்ச் சேர்ந்துவிட்டது பற்றியும் பரிசீலிக்க ஆரம்பித்தனர். அது சமயம் சில உளவாளிகள் அங்கு வந்து, "முஹம்மது விரைவில் மக்காவைத் துறந்து வெளியேறி விடுவார்போல் தோன்றுகிறது" எனக் காதோடு காதாகக் கூறிச் சென்றனர். கூடியிருந்தவர்களுக்கிடையில் ஒருவிதப் பரப்பரப்பு ஏற்பட்டது. அனைவரும் தீவிரமான ஆலோசனையில் ஈடுபட்டனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதக் கருத்தை வெளியிட்டனர். "முஹம்மதுவைப் பிடித்து சிறை வைக்க வேண்டும்" என்றார் ஒருவர். "அவ்வாறு செய்தால் அவரைப் பின்பற்றுவோர் வந்து தம்மைத் தாக்கி மீட்டிச் சென்று விடுவர்" என மறுத்துரைத்தார் மற்றொருவர். "முஹம்மதுவை மக்காவைவிட்டு துரத்திவிடுவோம், அவர் எங்கேனும் தொலைந்து போகட்டும்" என்றார் இன்னொவர். "அவர் வாக்குவன்மை மிக்கவர், தமது பேச்சினால் மக்களை மயக்கிப் பெரும் ஆதரவு திரட்டிக் கொண்டு வந்து நம்மைத் தாக்கிச் சூறையாடிச் சென்று விடுவார்" என்றார் பிறிதொருவர். "எதற்கு இதெல்லாம், முஹம்மதைக் கொலை செய்துவிடுவதே மேல்" என்றார் வேறொருவர். "ஏன், பொதுக் காரியத்துக்காகக் கொலை செய்ய முன் வந்தவனைக் காட்டிக் கொடுத்து ஹாஷிம் குலத்தார் நம்மைப் பழிவாங்க அனுமதிக்க வேண்டும்?" எனக் கேட்டார் அடுத்திருந்தவர்.

கடைசியாக அபூஜஹல் எழுந்தான். "இது ஒருவரின் சொந்தக் காரியமல்லவே! அதனால் தனிப்பட்ட யாரும் எதுவும் செய்ய வேண்டியதில்லை. ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு வாலிபனை அனுப்பித் தரவேண்டும். எல்லா வாலிபர்களும் முஹம்மதுவின் வீட்டை முற்றுகையிட்டு இரவோடிரவாகக் காத்து நிற்க வேண்டும். அவர் எந்தச் சமயத்தில் வீட்டை விட்டு வெளியேறுகிறாரோ அக்கணமே அனைவரின் வாட்களும் ஒருமித்து அவர் மீது விழ வேண்டும். அவ்வாறு செய்தால் தான் ஹாஷிம் குலத்தவர் நம்மைப் பழிவாங்க இயலாது. காரியமும் "சுமூகமாக" முடிந்துவிடும் எனக் கூறி முடித்தான். அபூஜஹலின் சாதுர்யமும் சாமர்த்தியமும் படுயோசனையுங்கொண்ட வார்த்தைகள் கூடியிருந்தோர் முகங்களில் ஒருவித வெற்றிக் களிப்பை வரவழைத்துக் கொடுத்தன. அவன் கருத்தை அனைவரும் வாயிளித்து வரவேற்றனர். விவாதத்தை முடித்துக் குறைஷிகள் "தாருன் நத்வா"வை விட்டுக் கிளம்ப மாலைப் பொழுது சாய்ந்து மஞ்சள் வெய்யில் மங்க ஆரம்பித்துவிட்டது.

### ஹிஜ்ரத்

"அவர்கள் (குறைஷிக் காபிர்கள்) உம்மைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்யவோ அல்லது கொலை செய்யவோ அல்லது ஊரைவிட்டு வெளியேற்றவோ இரகசியத் திட்டம் தீட்டியபோது அல்லாஹ்வும் திட்டம் தீட்டினான். அவனது திட்டமே அனைத்திலும் சிரேஷ்ட மானதாகும்". (8:30) என்று குறைஷிகளின் கொலை திட்டத்தை வானவர் ஜிப்ரீல் வந்து அறிவித்து அன்றிரவே, அண்ணலார் யத்ரிப் புறப்பட வேண்டும் எனக் கூறிச் சென்றார். அப்பொழுதே அண்ணலார் அலீ அவர்களை

அழைத்து விபரத்தைக் கூறி, அமானிதங்களை மறுநாள், உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுமாறு பணித்து, அன்றிரவே அவரைத் தம் படுக்கையில் படுத்துத் தம் ஹள்ர மௌத் பச்சைப் போர்வை கொண்டு போர்த்திக் கொள்ளுமாறு சொல்லி வைத்தார்கள்.

நபித்துவம் 13ம் ஆண்டு சபர் மாதம் 26-27ம் நாள் வெள்ளிக்கிழமை இரவு (கி.பி 622 செப்டம்பர் 9) நபிகள் பெருமானாரின் இல்லம் தாழிடப்பட்டது. உள்ளே அண்ணலாரும் அவர்களின் மனைவி சௌதா பிராட்டியாரும், அலீ அவர்களும் புதல்வியர் பாத்திமா, உம்மு குல்தூம் இருவரும் இருந்தனர். பொழுது அடைந்ததிலிருந்து குறைஷி வாலிபர்கள் தத்தம் வாட்களுடன் வந்து சேர்ந்து பெருமானாரின் வீட்டைச் சுற்றிலும் முற்றுகையிட்டு நின்றனர். இருட்டியதன் பின் அயலார் வீட்டினுள் பிரவேசிக்கக் கூடாதென்பது அரபிகளின் மரபாக இருந்து வந்தது.

நள்ளிரவு இரண்டாம் சாமம் கடந்துவிட்டது. நபிகள் பிரான் ஓசைப்படாது கதவைத் திறந்தார்கள். வாசலின் முன் குறைஷி வாலிபர்கள் உருவிய வாட்களுடன் நின்றிருந்தனர். குனிந்த வாசற்படியண்டை கிடந்த மண்ணில் சிறிது அள்ளி அதில் இறைவனின் திருநாமத்தை உச்சரித்து "யாஸீன்" அத்தியாயத்தில் முதல் ஒன்பது திருவசனங்களை நாம் அவர்களைத் திரையிட்டு விட்டோம். அவர்களால் பார்க்க முடியாதவாறு வரை ஓதி உதி வெளியில் சுற்றி நின்றவர்கள் மீது வீசி எறிந்து விட்டு வீட்டை விட்டுக் கிளம்பினார்கள். குறைஷி வாலிபர்களால் பெருமானார் வெளியில் சென்றதைக் கண்டு கொள்ள முடியாது போயிற்று.

இல்லம் துறந்த பெருமானார் நேரே அபூபக்கர் அவர்களின் வீடு நோக்கிச் சென்றார்கள். கதவைத் தட்டி உள்ளே சென்று, மக்காவை விட்டு வெளியேறுமாறு இறைவனின் கட்டளை வந்துள்ளதைத் தெரிவித்துத் தம்முடன் வருமாறு அழைத்தார்கள். அபூபக்கர் அவர்கள் மட்டில்லா ஆனந்தமுற்றவராய் துள்ளி எழுந்து, வீட்டில் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விட்டு, இருந்த ரொக்கப் பணத்தையும் கையிலெடுத்துக் கொண்டு பின் சன்னல் (வாசல்) வழியாக வெளியேறி அண்ணலாரைப் பின் தொடர்ந்தார்கள். நடந்து செல்கையில் கஃபத்துல்லாஹ் நபிகளாரின் கண்களில் படவே, உள்ளங்கசிந்தவாறு, "ஏ ஹரம் ஷரீபே! உலகிலுள்ள எல்லாப் பொருட்களைக் காட்டிலும் உன் மீதே நான் அதிகப் பிரியம் வைத்திருக்கிறேன். ஆனால் உன் மக்கள் என்னை இங்கு இருக்க விடுகின்றாரில்லையே!. என் செய்வேன்! எனக்கூறிக் கண்ணீர் சொரிந்தவர்களாய் தெற்கு நோக்கிச் சென்றார்கள். யத்ரிப் மக்காவுக்கு வடக்கேயுள்ளது.

இந்த நபியை "அமீன் "சாதிக்" என்று அழைத்துக் கொண்டே இந்த நகரம் நபியின் நபித்துவத்தை நிராகரித்தது. அவ்வாறு நிராகரித்தோர் அவரிடமே தங்கள் பொருள்களை அடைக்கலமாக ஒப்படைத்திருந்தார்கள். ஏனென்றால், பெரும் பண்புகளில் அவரைவிடச் சிறந்தோர் அங்கு வேறு ஒருவருமில்லை. இந்த நகரில் தான் அவர் நடக்கு பாதைகளில் முட்கள் விரிக்கப்பட்டன. கூரைகளிலிருந்து அவர்மீது சாம்பலும் மண்ணும், குப்பையும் கொட்டப்பட்டது.

தெற்கே மூன்று மைல் தொலைவிலுள்ள "தௌர்" என்னும் குன்றை அடைந்து அதிலுள்ள பொதும்பு ஒன்றில் போய்த்தங்கினார்கள். அபூபக்கர் அவர்கள் அங்கு கிடந்த கல் கரடுகளை அப்புறப்படுத்தி துப்புரவு செய்து அங்கிருந்த பொந்துகளைத்

தம் அங்கவஸ்திரத்தைக் கிழித்து அத்துணிகளால் அடைத்தார்கள். காலில் செருப்பின்றிக் காலடித் தடங்களை எதிரிகள் கண்டு பின் தொடராதவாறு சந்து பொந்துகள் வழியே கரடு முரடான பாதைகளைக் கடந்து வந்ததால் நபிகள் நாதரின் கால்கள் வலியெடுத்தன. எதிரிகள் இனம் கண்டு விடக்கூடாது என்பதற்காக ஹலரத் அபூபக்கர், பெருமானாரின் பாதச்சுவடுகளின் மீதே கால் வைத்து நடந்து சென்றார்கள். எனவே, களைத்திருந்த திருத்தூதரவர்களை உயிர்த்தோழர் அபூபக்கர் அவர்கள் தம் மடி மீது தலை வைத்துப் படுக்கச் செய்து கண் விழித்திருந்தார்கள். பெருமானார் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

தமக்கு எதிரே பொந்தொன்று அடைபடாதிருப்பதை அப்போது தான் அபூபக்கர் (ரலி) கவனித்தார்கள். அதில் விஷ ஜந்து எதுவும் இருக்கக்கூடுமென எண்ணியவராய்த் தம் கால் படத்தால் அப்பொந்தை அடைத்தார்கள். சந்தேகித்தவாறே அதிலிருந்த நச்சவரம் அவர்களின் குதியில் தீண்டி விட்டது. வினாடிக்கு வினாடி விஷம் ஏறிக் கொண்டிருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு தாங்கியும் வேதனையைப் பொறுக்க முடியவில்லை. அசைந்தால் அண்ணலாரின் நித்திரை கலைந்து விடுமே என்ற அச்சம் வேறு என்ன செய்வார்கள்? தாளாத வேதனையால் அபூபக்கர் அவர்களின் கண்கள் கண்ணீரை உகுத்தன. அதினின்று வழிந்த துளிகளில் இரண்டொன்று பெருமானாரின் திருவதனத்தின் மீது விழுந்து விட்டன. சட்டென்று விழித்தெழுந்த வித்தகத் திருநபிகளார் விஷயத்தை அறிந்தார்கள். உடனே தங்கள் திருவாயினின்று உமிழ்நீர் தொட்டுக் கடிவாயில் வைத்தார்கள். அபூபக்கர் அவர்கள் விஷம் நீங்கிச் சுகம் பெற்றார்கள்.

வைகறைப் போது, பெருமானார் வீட்டின் கதவு இலேசாகத் திறந்திருப்பதைக் கண்டு சந்தேகமுற்ற குறைஷி வாலிபர்களில் சிலர் சரேலென வீட்டினுள் பாய்ந்தனர். சுற்றுமுற்றும் நோட்டமிட்டனர். பெருமானார் படுத்திருக்கக்கூடிய கட்டிலின் மீது பச்சைப் போர்வையால் போர்த்தியவாறு ஒருவர் படுத்திருக்கக் கண்டனர். திருத்தூதரே தூங்குகின்றார்கள் என்ற களிப்பில் சட்டெனப் போர்வையை நீக்கினர். என்ன ஆச்சரியம்!. அலீ (ரலி) எழுந்து நெட்டி முறித்துக் கண்களைத் துடைத்துக் கட்டிலில் அமர்ந்தார்கள். வந்த வாலிபர்கள் குழப்பமடைந்தவர்களாக ”முஹம்மது எங்கே! என வினவினர். ”இறைவனின் தூதரைப் பற்றிய செய்தி இறைவனுக்கல்லவோ தெரியும். நீங்கள் தானே வெளியில் காவல் காத்து நின்றீர்கள். அவர்கள் வெளியில் சென்றிருந்தால் உங்களுக்குத் தானே தெரிந்திருக்க வேண்டும்” எனச் சாவதானமாகவும் குத்தலாகவும் அலீ பதில் கூறினார்கள். முயற்சியில் தோல்வி கண்டு முகங்களில் ஈயாடதவர்களாய் வாலிபரனைவரும் அவ்விடம் விட்டகன்றனர். இதனை ”தன் உயிரைப் பணயம் வைத்து, உங்களில் அல்லாஹ்வின் பிரீதியை விலைக்கு வாங்குபவர் யார்? அல்லாஹ் (இத்தகைய) தன் அடியார் மீது மிகவும் கருணையுள்ளவன்” என இறைவன் தன் திருமறையில் 2:207 திருவசனத்தின் மூலம் ஹலரத் அலீ (ரலி) அவர்களைப் புகழ்கிறான்.

பெருமானார் அவர்கள் வீட்டிலில்லை என்பதைத் தெரிந்த அபூஜஹ்ல் அடங்காத ஆத்திரம் கொண்டான். அபூபக்கர் அவர்கள் இல்லம் சென்று பார்த்தான். அவரும் அங்கு இல்லை. அவர் தம் புதல்வி அஸ்மாவை நோக்கி, ”முஹம்மது இங்கே வந்தாரா? உன் தந்தை எங்கே?” என அதட்டினான். ”எனக்குத் தெரியாது” என்ற அமைதியான பதிலைக் கேட்ட அபூஜஹல் ஆத்திரம் மேலிட்டவனாய் அஸ்மாவின்

கன்னத்தில் பளாரென அறைந்தான். அதனால், அஸ்மாவின் காதணி ஒன்று தெறித்து அப்பால் போய் விழுந்தது.

அஸ்மாவும் அப்துல்லாஹ்வும் அபூபக்கர் அவர்களின் மூத்த தாரமான கதீஜாவுக்குப் பிறந்தவர்கள். ஆயிஷா நாயகியும் அப்துர் ரஹ்மானும் அவரின் மற்றொரு தாரமான உம்மு ரும்மான் என்ற ஜைனபுக்குப் பிறந்தவர்கள். அஸ்மா, ஆயிஷா நாயகிக்குப் பத்தாண்டு மூத்தவர். இவர் நாயகத் தோழர்களில் பிற்காலத்தில் மிக்க செல்வம் படைத்தவரான ஜுபைர் இப்னு அவ்வாம் என்பவருக்கு மணமுடிக்கப் பெற்று ஒரு நூறு ஆண்டுகள் வாழ்ந்து ஹிஜ்ரி 73ல் மரணமானார்.

அண்ணலாரை அபூபக்கரவர்கள் வீட்டிலும் காணாதலால் அபூஜஹல், குறைஷிகளை குதிரை, ஒட்டகைகளில் சென்று நாலா திசைகளிலும் தேடச் சொன்னான். மக்க மாநகர் அமளி துமளிப்பட்டது. எல்லாரது வாயிலும், "முஹம்மது எங்கு சென்றார்" என்ற பேச்சாகவே இருந்தது. குறைஷிகளிடம் காணப்பட்ட பரபரப்பையும் ஏமாற்றத்தையும், அலங்கோலத்தையும் கண்ட அலீ அவர்கள் தமக்குள் புன்னகை பூத்திருந்தார்கள். அண்ணல் நபிகளாரைக் கண்டுபிடித்துக் கொண்டு வருபவருக்கு நூறு பெண் ஒட்டகைகளைச் சன்மானம் தருவதாகக் குறைஷித் தலைவர்கள் தங்களுக்குள் கூடிப்பேசி பறை அறிவித்தனர்.

**நாம் மூவர்**

பெருமானாரைத் தேடிப் பார்க்க வடக்கே சென்றவருள் ஒரு கோஷ்டியினர் தெற்கே தௌர் மலையை வந்தடைந்தனர். அவர்கள் அங்குள்ள பொதும்புகள் அனைத்தையும் துருவிப் பார்த்து விட்டு இறுதியாக அண்ணலாரும் அபூபக்கரும் பதுங்கியிருந்த பொதும்பின் வாயிலை வந்தடைந்தனர். அங்கு அவர்கள் நின்று கொண்டு உள்ளே நுழைந்து பார்க்கலாமா வேண்டாமா என்பது பற்றிய விவாதத்திலிறங்கி வார்த்தையாடி நின்றனர். அவர்கள் பேசுவது உள்ளே இருந்த இருவருக்கும் தெளிவாகக் கேட்டது. ஒரு வேளை குறைஷிகள் உள்ளே நுழைந்து விடுவார்களோ என்ற பயத்தில் அபூபக்கர், நாயகம் அவர்களை நோக்கி "என் செய்வோம்? நாம் இருவர் தாமே இங்கிருக்கின்றோம்" என மெய்சிலிர்க்க ஏக்கத்துடன் கூறினர். மலை பெயரினும் நிலை குலையா மாமேருவாக வீற்றிருந்த அமைதியின் திருவுறு அண்ணல் நபிகளார்," இல்லை நாம் மூவர் இங்கு இருக்கிறோம். நம்மோடு அல்லாஹ்வும் இருக்கிறான். அஞ்சற்க" என மறுமொழி பகர்ந்தார்கள். அதனைக் கேட்ட அபூபக்கர் ஆறுதலும் தைரியமும் கொண்டு இறைவனின் பாதுகாப்பில் பெருமானார் கொண்டிருந்த அசையா நம்பிக்கையைக் கண்டு பேராச்சரியமுற்றார்கள்.

ஒன்னலரோ பற்பலர்நா மோவிருவர் உற்றடந்தா
லென்ன செய்வ தென்ற முங்க இல்லையில்லை யாமூவர்
பன்னரிய யீசனும்நம் பக்கமுளன் அஞ்சலீ ரென்
றுன்னரிய வாய்மை சொற்ற வூக்கநிலை நோக்கமோ
ஓகை நபி நாயகமே! வூக்கநிலை நோக்கமோ

என சதாவதானி சேகுத்தம்பி பாவலர் பாடியுள்ளார்.

சற்று முன்னர் அங்கொரு அதிசயம் நிகழ்ந்தது. தௌர் குகையின் வாயிலை அடைக்கும் வண்ணம் சிலந்தி பூச்சியைக் கொண்டு வலை ஒன்று பின்னி முடிக்குமாறு செய்தான் இறைவன். அதையும், அதே நேரத்தில் இரு புறாக்கள் அப்பொதும்பினின்று வெளிப்பறந்து செல்வதையும் அக்குறைஷிகள் கண்டனர். இவற்றை உமய்யதிப்னு கலபி என்ற ஒருவன் சுட்டிக் காட்டி குகையுள் மனித நடமாட்டமில்லையெனச் சாமாதானங் கூறினான். எனவே, வந்தவர்களனைவரும் அங்கிருந்து அகன்றனர். அண்ணலாரும் அபூபக்கரும் ஆறுதல் பெருமூச்சு விட்டவர்களாய் ஆண்டவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இதனை, ”சிலந்தி நூற்ற வலையாலும், புறா கட்டிய கூட்டினாலும்) அல்லாஹ் உண்டாக்கிய பாதுகாவல், உருக்குச் சட்டைகளையும், உயர் கோட்டைகளையுமே தேவையற்றதாக்கி விட்டது” என இமாம் பூஸிரி தங்கள் புர்தா ஷரீபில் அழகுறக் கருத்தாழத்துடன் பாடியுள்ளார்கள்.

பெருமானாரும் அபூபக்கரும் தௌர் குகைக்குள் மூன்று பகல் மூன்று இரவு தங்கியிருந்தனர். அந்நாட்களில் ஒவ்வோர் மாலையிலும் அபூபக்கர் அவர்களின் மூத்த புதல்வர் அப்துல்லாஹ் தம் சகோதரி அஸ்மா சமைத்தளிக்கும் உணவுகளை அங்கெடுத்து வந்து கொடுத்து மக்காவின் நிலவரங்களையும் அறிவித்து விட்டு இராத்தங்கி மறுநாள் அதிகாலையில் வீடு திரும்புவார். அபூபக்கர் அவர்களின் பணியாள் ஆமிர் பின் ஃபுஹைரா காலை நேரங்களில் ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிப் போவது போல் தௌர் மலைக்குச் சென்று இருவருக்கும் தேவையான பாலைக் கரந்து கொடுத்து விட்டுத் திரும்புவார்.

**யத்ரிபை நோக்கி**

மக்காவில் இப்போது கொந்தளிப்பு அடங்கிப் பெருமானாரைத் தேடும முயற்சி கைவிடப்பட்டதென அப்துல்லாஹ்வின் மூலம் அறிந்த அண்ணலார் தம் உயிர்த்தோழர் அபூபக்கர் அவர்களுடன் வடக்கே சுமார் 270 மைல் தூரத்திலுள்ள யத்ரிப் நோக்கிப் பயணம் மேற்கொள்ளச் சித்தமானார்கள். அப்துல்லாஹ்விடம் சொல்லியனுப்பியவாறு, மறுநாள் அப்துல்லாஹ் பின் உறைகித் என்னும் வழிகாட்டி, அபூபக்கர் அவர்கள் இப்பிரயாணத்திற்கென வாங்கி வளர்த்த இரு ஒட்டகைகளையும் ஓட்டிக் கொண்டு வந்து தௌர் மலைச் சாரலில் மேய்த்துக் கொண்டிருந்தார். இவர் முஸ்லிம் அல்லாதவர். மக்காவிலிருந்து யத்ரிப் செல்லும் எல்லாப் பாட்டைகளையும் இவர் நன்கறிவார். மாலை மசங்கிய போது அஸ்மா பிரயாணத்திற்கான சில உணவுகளைத் தயாரித்துக் கொண்டு அவற்றை தௌர் குகைக்கு எடுத்து வந்தார். நள்ளிரவில் ஒட்டகங்களிரண்டும் குகையருகே கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. கஸ்வா என்ற ஒட்டகத்தின் மீது அண்ணலாரும் அபூபக்கரும் ஏறி அமர்ந்து கொண்டார்கள். மற்றொரு ஒட்டகத்தின் மீது அப்துல்லாஹ் பின் உறைகித்தும் ஆமிர் பின் ஃபுஹைராவும் ஏறிக் கொண்டார்கள். அபூபக்கர் அவர்கள் ஒட்டகங்களை வாங்கிய சமயம் கஸ்வாவைப் பெருமானாருக்கு அன்பளிப்புச் செய்ய முன் வந்த போது அன உரிய கிரயத்தை ஏற்றுக் கொண்டாலன்றி ஏற்க முடியாதெனக் கூறி விட்டார்கள். வேறு வழியின்றி அபூபக்கர் அவர்கள் அதன் கிரயத்தை ஏற்க நேர்ந்தது. இப்பயணத்தின் போது அபூபக்கர் அவர்கள் தம்மோடு ஆறாயிரம் திர்ஹங்களை எடுத்துச் சென்றார்கள். வீட்டில் ரொக்கப் பணம் எதுவும் விட்டு வரவில்லை.

கி.பி. 622ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் தேதி – ரபீயுல் அவ்வல் முதலாம் நாள் - திங்கள் இரவு நபிகள் கோமான் தௌர் குகையை விட்டும் யத்ரிபு நோக்கித் தம் சரித்திர பிரசித்தி பெற்ற "ஹிஜ்ரத்" பயணத்தைத் துவங்கினார்கள். பிரயாணிகள் வழக்கமாகச் செல்லும் பாட்டையில் அழைத்துச் செல்லாது, இப்னு உறைகித் இவர்களை மற்றவர்கள் கண்ணுக்குத் தென்படாத கடற்கரைப் பக்கமாகச் செல்லும் புதியதொரு பாட்டையில் இட்டுச் சென்றார். பின், உஸ்வான் என்ற இடத்திற்கு அருகில் திசை மாறி அமஜ் என்ற பகுதியை அடைந்தனர். பிரயாண காலமோ தகிக்கும் கோடையாக இருந்தது. நண்பகலில் பிரயாணம் செய்வது சிரமமெனக் கருதியதால், விடிந்த மறுநாள் காலையில் நால்வரும் ஒட்டகங்களுடன் நிழலான ஓர் இடத்தில் தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொண்டனர். அன்று மதியம் அவ்வழியே ஆடுகளை ஓட்டிச் சென்ற ஓர் இடையனை அழைத்துப் பால் கரந்து கேட்டு வாங்கிப் பருகிக் களை தீர்த்துக் கொண்டார்கள். பொழுது தணிந்ததும் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். புதிய பாட்டையில் ஒரு நாள் பயணத்தைக் கடந்து விட்டதால் மக்காவாசிகளால் இனி ஆபத்தில்லை எனக்கருதி வழக்கமான பாட்டையில் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். அதனால் அபூபக்கர் அவர்களின் பணியாள் ஆமிர் பின் ∴புஹைராவை மக்காவுக்கு அனுப்பி விட்டு அண்ணல் நபியவர்கள் கஸ்வாவின் மீதும் அபூபக்கர் அவர்களும் வழிகாட்டியும் மற்றொரு ஒட்டகையிலும் பிரயாணம் செய்தார்கள்.

**சுறாகா**

சுறாகா பின் மாலிக் ஜு∴ஷம் என்பவனும் மற்றும் சிலரும் ஓரிடத்தில் உட்கார்ந்து பெருமானார் குறைஷிகளிடம் சிக்காமல் தப்பித்துச் சென்று விட்டது குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அந்நேரம் வழியே வந்த வழிப்போக்கன் ஒருவன் இவர்களின் பேச்சை நின்று கவனித்தான். அவன் அக்குறைஷிகளை விளித்து," நீங்கள் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்களோ அவரும் மற்றவரும் இரண்டு ஒட்டகைகளின் யத்ரிப் நோக்கிச் சென்று கொண்டிருப்பதை நான் இப்போது தான் பார்த்தேன்." எனக் கூறினான். சுய நலமும் பேராசையும் கொண்ட சுறாகா, குறைஷிகள் வாக்களித்துள்ள நூறு பெண் ஒட்டகைகளையும் தானே அடைந்து விடக் கருதியவனாய், குயுக்தியும் சாமர்த்தியமுமாக, நானும் தான் சிறிது நேரத்திற்கு முன் அவர்களைப் பார்த்தேன். அவர்கள் காணாமல் போன தங்கள் ஒட்டகையை அல்லவோ தேடிச் செல்கின்றனர். நாங்கள் இப்போது பேசிக் கொண்டிருப்பது அவர்களைப் பற்றி அல்லவே! எனச் சட்டென அடித்துப் பேசி வழிப்போக்கனின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காதவாறு திசை திருப்பினான். சற்று நேரத்தில் சுறாகா, தனக்கு வீட்டில் வேலையிருப்பதாகக் கூறி அங்கிருந்து அகன்றான்.

வீடு சென்ற சுறாகா தனது துடியான குதிரையொன்றுக்குச் சேணமிட்டு ஆயுதபாணியாக அதன்மீது தாவியமர்ந்து மின்னல் வேகத்தில் பறந்தான். அவன் பெருமானாரைப் பின்தொடர்ந்து செல்லும்போது குதிரை, வழியில் இரு தடவை தடுமாறி விழுந்தது. அச்சந்தர்ப்பங்களில் அவன் தனது அம்பறாத் தூணிலிருந்த குறி சொல்லும் அம்புகளை எடுத்து வானில் எய்து பார்த்தான். இரு தடவைகளிலும் "முன்னேறாதே" என்ற எச்சரிக்கையை மீறித் தன் குதிரையை எதிர்நோக்கிச் செலுத்தினான். சுறாகா தங்களைத் துரத்தி வருகிறானென.பதை அபூபக்கர் அவர்களின் கூரிய கண்கள் கண்டுவிட்டன. விஷயத்தை அண்ணலாருக்குத்

தெரியப்படுத்தினார்கள். எதிரி வாயு வேகத்தில் தன் பரியைச் செலுத்தி அண்டி விட்டான் என்பதைக் கண்ட நபிகளார் இறைவனிடம் இரு கரமேந்திப் பிரார்த்தித்து விட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தார்களா. அவர்கள் கண்டதென்ன? சுறாகாவினுடைய குதிரையின் முன்னங்பால்களிரண்டும் "மார்புவரை மணலுக்குள் புதைந்து தலைக்குப்புற நிற்பதையும், அவன் வானில் தூக்கி எறியப்பட்டுக் கீழே வந்த விழுவதையும் கண்டார்கள். அவ்வளவுதான், சுறாகாவைத் திகிலும் நடுக்கமும் பற்றிக் கொண்டன. அவன் நபிகள் நாதரைக் கூப்பாடிட்டு அழைத்தவாறு, "நபிகள் பெருமானே! என் பெயர் சுறாகாவாகும், என்னைக் காப்பாற்றுங்கள், கொன்று விடாதீர்கள். நான் திரும்பிச் நெல்ல யாரிடத்தும் எதுவும் கூறமாட்டேன். இது உறுதி, சத்தியம்" என உயிர்ப்பிச்சை கேட்டவனாகப் பெருமானார் முன் ஓடிவந்து நின்றான். கருணை நபியவர்கள் சுறாகாவுக்கு நல்லுரை கூறி மக்கா திரும்ப அனுமதித்தார்கள். அத்துடன் பாரசீக மன்னின் அரண்மணையிலுள்ள இரத்தினங்கள் இழைத்த தங்கக் காப்புகள் அவன் கைகளில் பூட்டப்படுமெனவும் தீர்க்கதரிசனம் கூறினார்கள். அவ்வாறே சுறாகா பின்னர் இஸ்லாத்தில் சேர்ந்து ஹலரத் உமர் அவர்கள் காலத்தில் பாரசீகத்தை வெற்றிக் கொண்ட போது, அந்த யுத்தத்தில் முக்கிய பங்கு கொண்ட சுறாகாவின் கரங்களில் குஸ்ரூ மன்னின் தங்கக் காப்புகளைப் பூட்டிப் பெருமானரின் தீர்க்க தரிசனைத்தை மெய்ப்பித்தார்கள். பெருமானாரை விட்டுப் பிரிந்த சுறாகா, வழியில் எதிர்பட்ட குறைஷிகள், மற்றவர்களிடம் அண்ணலாரைத் தான் வெகுதூரம் அலைந்து தேடியும் காண முடியவில்லையெனக் கூறி மக்காவுக்குத் திரும்பி அழைத்துச் சென்றான்.

பெருமானாரின் பயணம் தொடர்ந்தது. வழிகாட்டி இப்னு உறைகித், இப்போது அவர்களை வாணிபக் கூட்டத்தார் செல்லும் செங்கடல் ஓரமான பாட்டையில் செலுத்திச் சென்றார். மூன்றாம் நாள் காலையில் அவர்களுக்கு வாணிபக் கூட்டம் ஒன்று எதிர்பட்டது. அது அபூபக்கர் அவர்களின் மருமகன் தல்ஹாவினுடையதாக இருந்தது. அபூபக்கர் அவர்களும் தல்ஹாவும் ஒருவரையொருவர் சந்தித்த மகிழ்ச்சியில் கட்டித் தழுவி முகமன் கூறிக்கொண்டனர். தல்ஹா, அபூபக்கர் அவர்களின் புதல்வி உம்மு குல்தூமை மணமுடித்திருந்தார். இந்த வியாபாரக் கூட்டத்தில் பெருமானாரின் அத்தை சபியாவுக்கும் கதீஜா நாயகியின் சகோதரர் அவ்வாமுக்கும் பிறந்த ஜுபைரும் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஜுபைர், அபூபக்கர் அவர்களின் புதல்வி அஸ்மாவின் கணவர். பிரயாணத்தால் பெருமானார், அபூபக்கர் இருவரின் ஆடைகளும் அழுக்கேறி இருந்ததால், தல்ஹா தாம் சிரியாவிலிருந்து வாங்கி வந்த உயர்ந்த வெண்ணிற ஆடைகளில் இரண்டைக் கொடுத்து அணியச் செய்தார். மற்றுமொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும், அவர்களிடம் தல்ஹா தெரிவித்தார் அண்ணலாரின் வருகையை யத்ரிப் மக்கள் ஆவலுடன் எதிர் நோக்கியவாறு இருந்து வருகின்றனர் என்பதாகும் அது.

அங்கிருந்து பயணம் மீண்டும் தொடர்ந்தது. யத்ரிபுக்கு இரண்டு நாள் பயணத்தில் அல்அர்ஜ் என்னுமிடத்தில் கருணை நபியவர்களின் கஸ்வா என்னும் ஒட்டகை மேற்கொண்டு நடக்க இயலாமல் களைப்புற்றுச் சோர்ந்து விட்டது. இதைக் கவனித்த அஸ்லம் கோத்திரத்தாரின் தலைவர் ஔஸ் இப்னு ஹிஜ்ர், தமது இப்னல் ரிதா என்னும் ஒட்டகையை பெருமானாரின் சவாரிக்காகத் தந்து வழிகாட்டி மஸ்ஊது பின் ஹுனைகாவையும் உடன் அனுப்பி வைத்தார். கஸ்வாவுக்குக் களைப்புத் தீர்ந்தபின் இப்னு உறைகித் அதைக் குபா கொண்டு வந்து சேர்த்தார்.

**பட்டண (மதீனா)ப் பிரவேசம்**

மகத்துவமிக்க நபிகள் கோமான் மக்காவைவிட்டுப் புறப்பட்ட செய்தி யத்ரிப் மக்களின் காதுகளுக்கு எட்டியதிலிருந்து அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியவர்களாக அண்ணலாரின் வருகைக்காக ஆவலுடன் காத்து நின்றனர். புறப்பட்ட கணக்குப்படி அவர்கள் யத்ரிபு வந்து சேர வேண்டிய நாள் நெருங்கியது. பட்டணத்து மக்களெல்லாம் நகருக்கு வெளியேயுள்ள வெட்ட வெளியில் வந்து கூடி நபிகள் பிரான் வரக்கூடிய பாட்டையைக் கண்ணுக் கெட்டிய தூரம் வரை நோக்கி நின்றனர். காலையில் காத்திருந்தனர். கடும் பகலில் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தனர். மாலை வெளிச்சம் மங்கும் வரை எதிர் நோக்கினர் வரவில்லை. வந்தார்களில்லை. ஏமாற்றமுற்று இல்லந்திரும்பினர். இவ்வாறாக இரண்டு தினங்கள் கழிந்தன. மூன்றாம் நாள் நண்பகலுக்குப் பின் யத்ரிபின் கோட்டை மதிலில் மீது யூதன் ஒருவன் நின்று கொண்டு, மக்கா பாட்டையின் அடிவானத்தை இமைகொட்டாது கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான். திடீரென அவன் “ஏ, பனூ கைலாக்களே! உங்களுடைய அதிஷ்டம் வந்து விட்டது. ஏதோ ஒரு ஒட்டகங்களின் மீது வெண்துகிலணிந்த மூவர் வருகின்றனர்” எனக் குரலெழுப்பி ஆனந்தக் கூத்தாடி நின்றான். அனைவரும் அவனருகில் ஓடி வந்து அவன் காட்டிய திசையை நோக்கினர். அவர்களும் அதைக் கண்டனர். மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர். அவ்ஸ், கஸ்ரஜ் இரு சகோதரர்களது தாயாரின் பெயர் கைலா என்பதாகும். எனவே, யத்ரிபிலுள்ள இரு கோத்திரத்தாரையும் அங்குள்ள யூதர்கள் பனூ கைலாவெனப் பொதுப் பெயரிட்டே அழைத்து வந்தனர்.

ஒட்டகங்களிரண்டும் அர்ஜிலிருந்து ரகூபாவின் வலது பாரிசமாக தனிய்யத்துல் ஆபிர், ரியிம் பள்ளத்தாக்கைக் கடந்து பிரயாணம் துவங்கிய எட்டாம் நாள் நண்பகல் யத்ரிபுக்கு மூன்று மைல் தொலைவிலுள்ள குபா என்னும் சிற்றூரை வந்தடைந்தன. அங்கு வசித்த ஆமிர் குலத்தாரின் தலைவர் குல்தூம் பின் ஹிதம் என்பார். அண்ணலவர்களையும், அருமைத்தோழர் அபூபக்கர் அவர்களையும் அன்புடன் வரவேற்று, ஒட்டகங்களிலிருந்து இறக்கி தமது தோட்டத்திலுள்ள விடுதிக்கு அழைத்து போய் உபசரிப்புகள் செய்து கௌரவித்தார். ஒட்டகைகள் குபாவோடு நின்று விட்டதைக் கண்ட யத்ரிப் மக்கள் விழுந்தடித்து அங்கு ஓடி வந்தார்கள். விடுதியில் அறிமுகமில்லாத இருவர் வீற்றிருந்ததில் பெருமானார் யார் என்பதை அறியமாட்டாதவர்களாய் இருவர் மீதும் மருண்டு மருண்டு, மாறி மாறிப் பார்வையைச் செலுத்தி நின்றனர். இதனைப் புரிந்து கொண்ட அபூபக்கர் அவர்கள் எழுந்து நின்று தம் போர்வையை எடுத்து நபிகள் கோமான் மீது போர்த்தினார்கள். அனைவரும் ஐயம் தெளிந்து ஆனந்தமுற்று அமைதி கொண்டனர்.

இதற்கிடையில் அலீ அவர்கள், பெருமானார் தம்மிடம் ஒப்படைத்து வந்த அமானிதங்களை எல்லாம் உரியவர்களிடம் சரிவரச் சேர்ப்பித்துவிட்டு, மூன்று தினங்கள் கழித்து, குறைஷிகளின் கொந்தளிப்பு ஒடுங்கியதன் பின்னர், மக்காவைத் துறந்து யத்ரிப் நோக்கி பிரயாணமானார். ஆனால், ஒட்டகம் ஒன்றை அமர்த்திப் பிரயாணம் செய்து வர அவர்கள் கையில் பணமில்லை. எனவே, பகலெல்லாம் பதுங்கியும், இரவெல்லாம் கண்விழித்தும் நடந்தே பிரயாணம் செய்து குபாவை வந்தடைந்தார்கள். அலீ அவர்கள் குபாவுக்கு வந்துள்ள செய்தியைக் கேள்வியுற்ற அண்ணலார். அவரைத் தம்மிடம் அழைத்து வருமாறு ஆள் அனுப்பினார்கள். ஆனால், நெடும் பயணத்தை நடந்தே கடந்து வந்ததின் காரணமாக பாதங்கள் வீக்கங்கண்டு மேற்கொண்டு ஓர் அடியேனும் எடுத்து வைக்க முடியாத நிலையிலிருப்பதை அறிந்த

பெருமானார், தாங்களே நேரில் சென்று அலீ அவர்களைக் கட்டித் தழுவி அளவளால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

புது ஊரில் தமக்கு எத்தகைய வரவேற்புக் காத்திருக்கிற தென்பதையும், தம்மை ஆதரிப்பதற்கு யத்ரிப் வாசிகள் எவ்வாறு போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றனர் என்பதையும் பெருமானார் தெரிந்தார்கள். எனவே குபாவில் அதிக நாள் தாமதிக்காது யத்ரிப் செல்ல எண்ணங் கொண்டார்கள் கி.பி.622 செப்டம்பர் 20 ரபீயுல் அவ்வல் பிறை 8 திங்கட்கிழமை குபா வந்து சேர்ந்த அவர்கள் வெள்ளிக்கிழமையே யத்ரிப் செல்ல ஆயத்தமானார்கள். சில சரித்திர ஆசிரியர்கள் பெருமானார் இரண்டு வார காலம் குபாவில் தங்கியிருந்ததாக வரைந்துள்ளனர். நபிகள் பிரான் குபாவில் குல்தூம் பின் ஹிதம் என்பவரின் இல்லத்தில் தங்கியிருந்ததாகவும் அபூபக்கர் அருகாமையிலுள்ள சுன்ஹ் என்னுமிடத்தில் காரிஜா பின் ஜைத் என்பவரின் இல்லத்தில் தங்கியதாகவும் கூறப்படுகிறது. பின்னர் அபூபக்கர் அவர்கள் காரிஜாவின் புதல்வியைத் திருமணம் செய்து கொண்டார்கள். பெருமானார் குபாவை அடைந்தவுடன் அங்குள்ள மக்களைத் திரட்டி அங்கொரு பள்ளிவாசல் கட்டும் பணியைத் துவக்கினார்கள். கட்டிட நிர்மாணப் பணியில் அவர்களும் பங்கு பற்றிக் கல், மண் சுமந்தார்கள். தாங்கள் யத்ரிப் புறப்பட்டபோது பள்ளியைப் பூர்த்தி செய்யும் பணியை அம்மார் பின் யாஸிர் என்ற தோழரிடம் ஒப்படைத்தார்கள். இது முஸ்லிம்களின் தொழுகைக்காகக் கட்டப்பட்ட முதல் பள்ளியாகும்.

குபாவுக்கு வந்த ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமைக் காலையில் அண்ணல் நபிகளார் கஸ்வாவின் மீதமர்ந்து மக்கள் புடைசூழ யத்ரிபுக்குப் புறப்பட்டார்கள். இடையில் ஸாலிம் கோத்திரத்தார் வாழும் வாதியுர் ரானூனா என்ற பள்ளத்தாக்கை அடைந்ததும் அங்கு பெருமானார் குத்பா ஓதி அனைவரும் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டனர். இதுவே முதன் முதலாக நிகழ்ந்த முஸ்லிம்களின் ஜும்ஆத் தொழுகையாகும். இத்தொழுகையில் நூறு பேர் வரை கலந்து கொண்டனர்.

பின், காரணத் திருநபியவர்கள் கஸ்வாவின் மீதும் மற்றவர்கள் நடந்தும் அங்கிருந்து புறப்பட்டு யத்ரிபை அடைந்த போது, பட்டணத்தின் பிரதான வாயிலில் ஆடவரும் பெண்டிரும் சிறார்களுமாக அனைத்து வகுப்பாரும் கோத்திரத்தாரும் கூடி நின்று ஆரவாரத்துடன் பாட்டுப்பாடி ஆனந்தத்தோடு வரவேற்றனர். அதனைக்கண்ட அண்ணலார் உள்ளம் நெகிழ்ந்து இறைவனைப் போற்றி உவகை பூத்தனர்.

யத்ரிபில் ஒவ்வொரு குடும்பத் தலைவரும் ஒவ்வொரு கோத்திரத்தின் தலைவரும் மாநபி அவர்களைத் தங்களுடன் வந்து வசிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், நபிகள் கோமான் எவருக்கும் ஏமாற்றமளிக்க விரும்பாதவர்களாய்ச் சற்று சிந்தனையிலாழ்ந்தார்கள். பின்னர், ஒட்டகத்தின் மீது அமர்ந்தவாறு அங்கு ஆவலுற்று நின்றவர்களை நோக்கி, “அன்பர்களே! நான் யாருடைய இல்லத்தில் தங்க வேண்டும் என்பது என் வசத்திலில்லை. அது ஆண்டவனின் திருவுளத்தைச் சார்ந்தது. நான் வீற்றிருக்கும் இவ்வொட்டகத்தை அதன் போக்கில் விட்டு விடுகிறேன். அது எங்கு போய் நிற்குமோ அதையே நான் தங்குவதற்கு இறைவன் நிர்ணயித்துள்ள இடமாகக் கொண்டு அங்கு தங்கிக் கொள்கிறேன்” எனக் கூறியவர்களாய் ஒட்டகத்தின் மூக்கணாங் கயிற்றைக் கையினின்றும் நழுவவிட்டு அதன் போக்கில் செல்லவிட்டார்கள். கஸ்வா தானாகவே ஊரின் பெரும் பகுதியைக் கடந்து சென்று

நஜ்ஜார் கோத்திரத்தார் வசித்த பகுதியை வந்தடைந்தது. இக்கோத்திரத்தைச் சார்ந்தவர்தாம் ஹாஷிமின் மனைவியும் அப்துல் முத்தலிபின் தாயுமான ஸல்மா என்னும் பெண்ணழகி அங்கு ஈச்ச மரங்கள் சிலவற்றுடன் கூடிய விசாலமான முற்றவெளி ஒன்றிருந்தது. ஏற்கனவே முஸ்லிம்களால் அங்கொரு கூரையில்லாப் பள்ளி கட்டப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவ்விடத்தை வந்தடைந்தவுடன் கஸ்வா தன்னை மூன்று சுற்றுச் சுற்றிக்கொண்டு மண்டியிட்டுப் படுத்துக்கொண்டது.

முற்றவெளிக்கு எதிரே அபூ ஐயூப் அன்ஸாரி என்பவரின் வீடு இருந்தது. இவர் நஜ்ஜார் வமிசத்தைச் சார்ந்தவரும் பெருமானாருக்குத் தாய்வழிப் பாட்டனார் வகையில் உறவினருமாவார். இவரது முழுப் பெயர் காலித் பின் ஜைத் அபூஐயூப் அல் அன்ஸாரி. நபிகள் கோமான் அவர்கள் ஒட்டகத்தினின்றும் இறங்கினார்கள். அவர்களைக் கண்டதும் அபூஐயூப் வீட்டினின்றும் ஓடிவந்து முகமன் கூறி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தார். அன்று கி.பி. 622 செப்டம்பர் 24ம் நாள் நபித்துவம் 13ம் ஆண்டு ஹிஜ்ரி 1, ரபீஉல் அவ்வல் பிறை 12. இந்நாளிலிருந்து தான் ஹிஜ்ரி ஆண்டு கணக்கிடப்பட்டு வந்தது. பின்னர் கலீபா உமர் அவர்கள் அரபு வருடப் பிறப்பான முஹர்ரம் மாதத்திலிருந்தே ஹிஜ்ரி ஆண்டின் கணக்கை நிர்ணயம் செய்தார்கள். அதுவே இன்று நடைமுறையிலிருந்து வருகிறது.

நபிகள் நாதர் தங்கள் ஊரில் வந்து குடியேறியதின் நினைவாக, யத்ரிப் மக்கள் அன்று முதல் தங்கள் ஊரின் பெயரை “மதீனத்துந்நபி” – நபிகளாரின் பட்டணம் எனச் சிறப்புடன் அழைக்கலானார்கள். அதுவே இன்று சுருங்கி “மதீனா” என வழங்கி வருகிறது.

# மதீனா வாழ்க்கை – 1

### பள்ளி நிர்மாணம் அகதிகள் பிரச்சனையும்

பெருமானார் தங்கியிருந்த அபூஐயூப் அன்ஸாரியின் வீட்டின் முன்பாகமுள்ள, கஸ்வா போய் நின்ற இடமான, முற்ற வெளியை விலை கொடுத்து வாங்கி அதில் ஒரு பள்ளிவாசலை நிர்மாணிக்கக் கருதினார்கள். காத்தமுந் நபிகளார், அபூஐயூப்பிடம் அந்த முற்றவெளி யாருக்குச் சொந்தமானது என்பதனை விசாரித்தார்கள். அது ரபீ இப்னு அபூ அம்ரு என்பவரின் புதல்வர்களான ஸஹ்ல், ஸுஹைல் என்னும் இரு அநாதைச் சிறுவர்களுக்குச் சொந்தமானது. அவர்கள் அஸ்அத் பின் ஜுராரா நஜ்ஜாரி என்பவரின் பாதுகாப்பில் இருந்து வருகின்றனர் என்ற விவரங்களை முஆத்பின் அப்ரா வாயிலாக அறிந்தார்கள். உடனே அஸ்அத்தையும் அச்சிறுவர்களிருவரையும் அழைத்து வரச் சொல்லி அம்முற்றவெளியை விலைக்குத் தருமாறு கேட்டார்கள். சிறுவர்களிருவரும் தங்களுக்குப் பணம் ஏதும் வேண்டாமெனக் கூறி இனாமாகத் தர முன் வந்தனர். ஆனால், அண்ணலார் அதை அவ்வாறு ஏற்க மனமில்லாதவர்களாய் கிரயமாய் பத்து தீனார்களை (பொற்காசுகள்) நிர்ணயித்து அதை அபூபக்கர் அவர்களைக் கொடுக்கப் பணித்தார்கள். சில சரித்திர ஆசிரியர்கள் அக்கிரயத்தை அபூஐயூப் கொடுத்ததாகக் கூறுகின்றனர்.

முதன் முதலாக அந்த இடத்தில் பள்ளிவாசல் நிர்மாணிக்கும் வேலையை ஆரம்பித்தார்கள். அங்கிருந்த பட்ட ஈச்சமரங்களை வெட்டிச் சாய்த்தும், முட்புதர்களை அகற்றியும், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் கொட்டி நிரப்பியும் நிலத்தைச் செப்பனிட்டுச் சமப்படுத்தினார்கள். செங்கல்லும், கட்டிடச் சாமான்களும் சேகரிக்கப்பெற்றன. கட்டுமான வேலை ஹிஜ்ரி 1ம் ஆண்டு, ரபியுல் அவ்வல் மாதம் ஆரம்பமாயிற்று. அன்ஸாரி (மதீனாவாசி)களும் முஹாஜிரீன் (மக்காவாசி)களும் கட்டிடப் பணியில் உற்சாகத்துடன் பங்கு பற்றி வேலை செய்தனர். அவர்களுடன் நபிகள் நாதரும் சேர்ந்து செங்கல் எடுத்து வந்து கொடுத்தும், மண் சுமந்தும், தண்ணீர் அள்ளியும் தங்களுக்கான பணியைச் செம்மையாகச் செய்தார்கள். சூளையிடாத பச்சைச் செங்கல்லை சுவராகவும், ஈச்சமரத்தைத் தூணாகவும், ஈச்சங்கிடுகைக் கூரையாகவும் கொண்ட 67க்கு 54 முழ சதுரமுள்ள இப்பள்ளியைக் கட்டி முடிக்க மாதங்கள் ஏழாயின.

பள்ளிவாசல் கட்டுமான வேலை நடந்துவரும் போது இரு ஒட்டகைகளும் ஜைத் இப்னு ஹாரிதா, அபூர.ஃபீ ஆகிய இருவரையும் மக்காவுக்கு அனுப்பி அண்ணலார், தங்கள் குடும்பத்தை அழைத்து வரச் செய்தார்கள். அபூபக்கர் அவர்கள் அப்துல்லாஹ் பின் உறைகித்தை 500 திர்ஹம் பணத்துடன் அனுப்பித் தங்கள் குடும்பத்தையும் அழைத்து வரச் செய்தார்கள்.

ஆயிழை சௌதா அபூபக்கர் மனைவி
 தன்னொடு மாயிஷா அலிய்ன
றாயெனும் வரிசைப் பாத்திமா நயினார்
 தரும்புதல் வியர்கணால் வரையுஞ்
சேயினு மினிய வடிமைக ளிருவர்
 திருந்தலர் நோக்கிலா வண்ணம்
நாயகத் பதியென் றோதிய மதீனா
 நகரினி லழைத்துந் தனவரால்

- சீறா

பள்ளி கட்டிப் பூர்த்தியாகும் வரை பெருமானாரின் குடும்பம் அபூஐயூப் அன்ஸாரி இல்லத்தில் இருந்து வந்தது. பள்ளியின் கீழ்ப் பாரிசத்தில் தாழ்வாரம் ஒன்று இறக்கி அதில் பத்து முழ நீளம் ஆறுமுழ அகலத்தில் இரு அறைகள் தடுக்கப்பெற்றன. அவற்றில் ஒன்றில் சௌதா நாச்சி யாரும் மற்றொன்றில் ஆயிஷா நாயகியும் வசித்துவந்தனர். பெருமானார் பள்ளிக்கு வரப்போக வசதியாக அவற்றில் உள்வாசல் இரண்டும் வைக்கப்பெற்றன. அலீ அவர்கள் வழக்கம் போல் நபிகளாருடன் வசித்து வந்தார்கள்.

பள்ளி கட்டும் வேலை முடிந்தவுடன் பெருமானாரின் கவனம் அகதிகள் பிரச்சினையில் திரும்பியது. அவர்களின் மறுவாழ்வு குறித்துச் சிந்திக்கலானார்கள். மக்காவில் செல்வம், செல்வாக்குடன் இருந்தவர்கள் மதீனாவுக்குக் குடிபெயர்ந்து வந்து குந்துவதற்குக் குச்சின்றியும் அணிவதற்கு மாற்றாடையின்றியும் பஞ்சப்பராரிகளாய்த் தெருத்தெருவாய் அலைந்து திரவது கருணை நபியவர்களின் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்து கண்ணீர் உகுக்கச் செய்தது. மதீனாவின் பொருளாதாரமும் அதன் விளைபொருட்களும் அங்குள்ள மக்கள் எண்ணிக்கைக்கொப்பக் கட்டுத் திட்டத்துடன் கூடியதாக இருந்தது. இதில்

மக்காவிலிருந்து குடிபெயர்ந்து வந்த மஹாஜிர்கள் ஒரு பாரமாக அமைந்தனர். இயக்க ஊழியர்களில் பெரும்பாலோர் போஷாக்குக் குறைவாலும் பட்டினியாலும் அவதியுற்றனர். பெருமானார் அவர்களின் மனைவியர், மக்களும் இதற்கு விலக்கானவர்களாக இருக்கவில்லை. அன்றியும் மதீனாவின் தட்ப வெப்பநிலை புதிதாகக் குடியெர்ந்து வந்த மக்கா வாசிகளுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் பலர் காய்ச்சல் மற்ற நோய்களால் அவதிப்பட நேரிட்டது. தங்கள் ஜீவனோபாயத்திற்கான வேலைகளைக் கூடச் செய்ய இயலாதிருந்தனர். எனவே, நூற்றுக்கதிகமான முஹாஜிர்களைக் குடியமர்த்துவதென்பது பெருமானார் அவர்களுக்கு ஓர் பெரும் பொறுப்பாக – பிரச்சனையாக – சோதனையாக - சவாலாக – அமைந்துவிட்டது. இவ்விதப் பல திறப்பட்ட சிக்கல்களை அவர்கள் தனிமையாக நின்று சுமூகமாக தீர்த்து முடித்தது ஒப்பற்ற ஓர் சாதனையாகும். சரித்திரத்தில் இவ்வாறான – அவர்கள் சாதித்ததைப் போன்றதொரு முன்மாதிரியே கிடையாது!

ஆழ்ந்து சிந்தித்த பின் அண்ணலார், அன்சாரிகளையும் முஹாஜிரீன்களையும் புதிதாகக் கட்டப்பட்ட பள்ளியில் ஒன்று கூட்டினார்கள். அனைவரும் வந்து சேர்ந்தபின் அவர்களின் முன் நின்று உருக்கமான சிறியதொரு உரையை நிகழ்த்தினார்கள். “அன்பர்களே!. ஆண்டவன் வழிகாட்டும் மார்க்கப்படி நடப்பவர்கள் நாம். ஒருவருக்கொருவர் தீமை செய்யாமல் வாழ்க்கை நடத்த நாம் ஆண்டவனிடம் தஞ்சம் புகுவோம். அனைத்தும் ஆண்டவனின் திருவுளப்படியே நடைபெறும். ஆகவே நாம் இன்று ஒரு கடமையை மேற்கொள்வோம். ஒவ்வொரு அன்சாரியும் ஒவ்வொரு முஹாஜிரை (அகதி) தன் உடன்பிறந்த சகோதரனாகப் பாவிக்கட்டும். அதே போல் ஒவ்வொரு அகதியும் ஒவ்வொரு அன்ஸாரியைத் தன் சகோதரன் போல் பாவிக்கட்டும். அன்ஸாரிகளும் முஹாஜிரீன்களும் இன்ப துன்பங்களைப் பொதுவானதாக ஆக்கிப் பகிர்ந்து கொள்ளட்டும்”. எனக்கூறி முடித்தார்கள். உடனே மதீனா முஸ்லிம்கள் அனைவரும் அவ்வாறே நடந்து கொள்வதாக ஒருமித்து ஒப்புக் கொண்டனர். இதனைக் கண்டு பெருமானாரின் திருமுகம் மலர்ந்து பிரகாசித்தது. அக்கணவே ஒவ்வொரு அன்ஸாரியும் தம்முடன் ஒரு முஹாஜிரை ஏற்று அவருக்குத் தம் சொத்து, சுதந்திரம், ஏன் மனைவியரையுங் கூட ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியுடையோர் ஒருத்தியை விவாக விடுதலை செய்து பகிர்ந்தளிக்க முன் வந்தனர். தாய் வழியில் பார்க்கும் போது தாங்களும் ஒரு அன்ஸாரியாக இருப்பதால் அலீ அவர்களைத் தங்களிடம் வைத்துக் கொள்ளப் போவதாக அண்ணலவர்கள் கூறியதும் மதீனாவாசிகள் மட்டற்ற மகிழ்ச்சியுற்றனர். இவ்வாறாக, 47 ஆதரவாளர்கள் தங்களுடன் 47 அகதிகளை அணைத்து அவர்களைத் தங்களின் உற்ற சகோதரர்களாகப் பிணைத்துக் கொண்டனர்.

வேளாண்மைத் தொழில் முஹாஜிர்களுக்குப் பழக்கமில்லா ஒன்றாகையால் அவர்களுக்கு அளித்த தோட்டம் வயல்களில் அன்ஸாரிகளே பயிர் செய்து மகசூலில் பாதியைப் பகிர்ந்தளித்து வந்தனர். ஒரு முஹாஜிர், அன்ஸாரி ஒருவர் தமக்குச் சொத்தும் பொருளும் இரு மனைவியருள் ஒருவரையும் அளிக்க முன் வந்ததை ஏற்க மறுத்து, கடைத்தெரு செல்லும் பாதையை மட்டும் காண்பிக்கக் கோரினார். அவ்விதமே அவர் கைனுகா கடை வீதிக்குச் சென்று வாணிபம் செய்து பெரும் பணக்காரர் ஆனார். அவருக்கு ஒவ்வொரு சமயத்திலும் வெளிநாடுகளிலிருந்து எழுநூறு ஒட்டகங்களில் சரக்குகள் வந்து இறங்கின. “நான் மண்ணைத் தொட்டாலும்

இறைவனின் அருளால் அது பொன்னாகி விடுகிறது" என அடிக்கடி கூறிக் கொள்வார். ஒரு சமயம் அவர் ஆயிரம் ஒட்டகங்களை வாங்கி உடனே இவற்றை இலாபமின்றி அசல் விலைக்கே ஒருவருக்கு விற்றார். அருகில் நின்றவர் " ஏன் இந்த வீண்பேரம். இதில் உமக்கு என் இலாபம்" என வினவினார். அதற்கவர் "ஒட்டகங்களில் கழுத்திலுள்ள தும்புக் கயிறுகள் ஆயிரத்திலும் ஆயிரம் திர்ஹஙங்கள் (நான்கணா மதிப்புள்ள வெள்ளி நாணயம்) கிடைக்கின்றன. ஒட்டகங்களுக்குப் போட வேண்டிய ஒரு நாள் தீனிச் செலவு மிச்சப்பட்டுள்ளது. இந்த லாபம் போதாதா?" என எதிர் வினா விடுத்தார். இந்தத் தொழில் மேதை தான் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் என்னும் ஆரம்பத் தோழராவார். உத்தமத் திருநபியவர்களின் உற்ற தோழர்களான ஹலரத் அபூபக்கர், உமர், உத்மான், ஆகியோர் மக்காவில் வாணிபம் செய்ததைப் போல் மதீனாவிலும் சிறந்த வணிகர்களாகத் திகழ்ந்தனர். வாணிபம் செய்யும் ஆக்கமும் ஆற்றலுமில்லாத முஸ்லிம்கள் சம்பளத்திற்கிருந்தும், கூலி வேலை செய்தும், விறகு வெட்டி விற்றும், கைவினைத் தொழில்கள் செய்தும் ஜீவியம் நடத்தி வந்தனர்.

பின்பொருகால், யூதர்கள் பெருமானாருடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு விரோதமாகத் துரோகம் இழைத்ததற்காக மதீனாவை விட்டும் வெளியேற்றப்பட்டு ஏராளமான சொத்துக்கள் கைக்கு வந்தபோது, அவற்றை அகதிகளுக்களித்து, அன்ஸாரிகள் கொடுத்தவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கூறிய போது "நாங்கள் அளித்தவை அவர்களிடமே இருக்கட்டும் யூதர்களிடம் கிடைத்தவற்றையும் அவர்களுக்கே கொடுத்து விடுங்கள்" என அன்ஸாரிகள் மனநிறைவுடன் ஒருமித்துக் கூறி விட்டனர். அதன்பின், பஹ்ரைன் வெற்றியில் கிடைத்த பொருட்களனைத்தையும் அன்ஸாரிகளுக்கு கொடுக்க முன் வந்தபோது, "முஹாஜிர்களுக்கும் எங்களுக்கும் பங்கிட்டுத் தந்தால் தான் அவற்றை ஏற்றுக் கொள்வோம்" என மறுத்து விட்டனர். ஆஹா எத்தகைய சகோதரத்துவம்" எவ்விதப் பெருந்தன்மை!! எவ்வளவு ஆழிய அன்பு

**திண்ணைத் திருத்தோழர்கள்**

மதீனாப்பள்ளியின் மேல் பாரிசத்தில் ஒரு தாழ்வாரம் இறக்கப் பெற்று திண்டை போடப்பட்டிருந்தது. அதில் அகதிகளாகவும் பெருமானாரின் பிரச்சாரத் தொண்டர்களாகவும் சில தோழர்கள் வசித்து வந்தனர். இவர்கள் "அஸ்ஹாபுஸ் ஹுப்பா" — திண்ணைத் திருத்தோழர்கள் - என அழைக்கப்பட்டனர். இவர்களின் எண்ணிக்கை எழுபது எனச் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு மனைவி, மக்கள் இல்லை. இத்திருக்கூட்டத்தினர் தங்கள் நேரத்தைத் தொழுகையிலும், திருக்குர்ஆனை மனனம் செய்வதிலும், நபிகள் நாதரின் உபதேசங்களைச் செவிமடுத்து அவற்றை நினைவில் கொள்வதிலும், மார்க்கத்தை மக்களிடம் சென்று பிரச்சாரம் செய்வதிலும், அவர்களுக்கு எழுத்தறிவிப்பதிலும் செலவிட்டு வந்தனர். இந்த இறைநேசச் செல்வர்களைப் பெருமானார் தங்கள் சொந்தப் பொறுப்பில் வைத்துப் பராமரித்து வந்தார்கள். இவர்களிலும் பலர் கூலி வேலை செய்தும், விறகு வெட்டி விற்றும், வீதியோரக் கடைவிரித்தும், தெருவில் கூவி விற்றும், சின்னஞ்சிறு வியாபாரங்கள் செய்தும் ஜீவித்துக் காலம் போக்கி வந்தனர். இத்திருக் கூட்டத்தினரின் வாழ்க்கை மிக மிக ஏழ்மையானதாகவே இருந்து வந்தது. ஆனால் அவர்களது இலட்சியமும்,

பணியும், சேவையும் மிக மிக உயர்வானவை மாற்று உடை இன்றியும், பல வேளைகளுக்கு ஆகாரமில்லாமலும் இவர்கள் காலந்தள்ளினர். சில சந்தர்ப்பங்களில் பசியின் கொடுமையால் தொழுகையின் போது மயங்கி விழவும் செய்வர். தாழ்வாரத்தில் கீழ் எழுப்பப்பட்ட திண்ணையில் வாழ்ந்த காரணத்தால் இவர்கள் “அஸ்ஹாபுஸ் ஸுப்பா” திண்ணைத் திருத்தோழர்கள் என அழைக்கப்படலாயினர். மிக அதிகமாக நாயக வாக்கியங்களை நினைவில் கொண்டிருந்த அபூஹுரைரா, அபூதர் கி∴பாரீ, அம்மார் பின் யாஸிர், ஸல்மான் பார்ஸீ, ஸுஹைர் ரூமி, கப்பாப் பின் அறத், பிலால் ஹபஷீ, ஹுதைபாபின் அல்யமான், அபூஸயீத்குத்ரீ, பஷீர் பின் அக்கஸாஸா ஆகியோர் இத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். பிற்காலத்தில் நடந்த யுத்தங்களில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த பொருளைக் கொண்டும், “பைத்துல்மால்” தேசிய நிதி ஏற்படுத்தப்பட்டதின் காரணமாகவும் இந்நல்லடியார்களின் வாழ்க்கை ஒருவாறு வளமுற்று விளங்கியது.

## ‘‘பாங்கு’’ என்னும் தொழுகை அழைப்பு

இஸ்லாத்தைத் தழுவிய மக்களின் எண்ணிக்கை இப்போது அதிகரித்து விட்டதால் தொழுகையை “ஜமாஅத்”தாக - கூட்டாகச் சேர்ந்து – தொழுவதற்கு நேரங்களை மக்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடு ஒன்றைச் செய்ய வேண்டுமெனப் பெருமானார் கருதினார்கள். இந்த அழைப்பு முறை யூதர்களும், கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் கையாளுகின்ற மணி அடிப்பது, எக்காளம் ஊதுவது, பறையறைவது, தீப்பந்தம் காட்டுவது போன்றில்லாது நவீனமானதும், செவியின்பமுடையதும் உள்ளக்கிளர்ச்சி ஊட்டுவதுமாய் அமைய வேண்டுமெனவும் விரும்பினார்கள். எனவே முக்கியமான தோழர்களைக் கூட்டி ஆலோசனை கலந்தார்கள். பலரும் பலவிதக் கருத்துக்களைக் கூறினர். முதல் நாள் முடிவொன்றும் ஏற்படவில்லை. மறுநாளும் ஆலோசனை தொடர்ந்தது. ஹலரத் உமர் அவர்கள், முந்திய இரவில் நாம் கனவு ஒன்று கண்டதாகவும் அதில் ஒருவர் உயரமான ஓர் இடத்தில் நின்று உரத்த சப்தமிட்டு மக்களைத் தொழுகைக்கு அழைப்பது போன்றதொரு கனவை ஹாரிதின் தம்பி அப்துல்லாஹ் பின் ஜைத் அன்ஸாரி என்பவரும் கண்டதாகப் பெருமானாரிடம் வந்து கூறினார். இருவர் கண்ட கனவுகளின் சாரமும் ஒரேவிதமாக இருந்தது. இது பெருமானாருக்கு மிகப் பிடித்தமாகவும் அதுவே இறைவனின் நாட்டமெனவும் தோன்றியது. ஆழிய இனியதொனியும் கணீரென ஒலிக்கும் வெண்கலக் குரலையும் பெற்றிருந்த ஹலரத் பிலால் அவர்களை அழைத்து “பாங்கு” சொல்ல வேண்டிய பாங்கை அவருக்கு விளக்கிக் காட்டி பள்ளிக்கு அருகாமையிலிருந்த பனூ நஜ்ஜார் இனப் பெண்மணிக்குச் சொந்தமான அவரது உயர்ந்த வீட்டின் மேல் தளத்தில் மீதேறி நின்று மக்களை நண்பகல் (லுஹர்) தொழுகைக்கு அழைக்குமாறு பணித்தார்கள். ஹலரத் பிலால் அவர்கள் அதில் ஏறி நின்று நெஞ்சின் அடித்தளத்திலிருந்து தம்மை மறந்தவராக உருக்கமுடன் எழுப்பிய அந்த பாங்கொலி சுற்றிலும் வசித்த மதீனாவாசிகளின் செவிகளில் இன்பநாதமாகப் பாய்ந்தது. மந்திரக்கோல் கொண்டு தட்டி எழுப்பப்பட்டவர்களைப் போல் அவர்கள் பள்ளியை நோக்கி விரைந்தோடி வந்தனர். அன்று முழங்க ஆரம்பித்த இந்த பாங்கின் சங்கநாதம் இன்றுவரை முஸ்லிம் உலகம் முழுவதும் அல்லுபகல் அறுபது நாழிகையும் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கிறது. வல்லோனை வணங்க வருமாறு மக்களை அழைத்துக் கொண்டே இருக்கிறது. உலகம் உள்ளளவும் அவ்வாறு ஒலித்துக்கொண்டேதான் இருக்கும்!

**யூதர்களின் உடன்படிக்கை**

மதீனாவில் யூதர்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வகுப்பாராக கட்டுக்கோப்புடன் வாழ்ந்து வந்தனர். செல்வந்தர்களாகவும், முயற்சியுடையோர்களாகவும், சட்டதிட்ட வரம்புடன் கூடிய சமயத்தைப் பின்பற்றும் ஒரு சமுதாயத்தினராகவும் இருந்து வந்தார்கள். அண்ணலார் மதீனா வந்த போது யஹூதிகள் அவர்கள் மீது நல்லெண்ணம் கொண்டிருந்தார்கள். தங்களின் வேதத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசி வந்துவிட்டார் இவர் இஸ்ரவேலர் அரசாங்கத்தை அரேபியாவில் ஸ்தாபிக்க உதவுவார் எனக்கனவு கண்டிருந்தனர். அதன் காரணமாக, மதீனா வாழ் முஸ்லிம்களுடன் சேர்ந்து பெருமானாருக்கு மகத்தான வரவேற்பும் அளித்தனர். அண்ணலவர்கள் யூதர்களின் தௌராத் வேதத்தையும், இப்ராஹீம், இஸ்ஹாக், ய∴கூபு, யூசுப், மூஸா ஆகிய அவர்களின் நபிமார்களையும் உறுதிப்படுத்திப் பேசியதும், பைத்துல் முகத்திஸை (ஜெரூஸலம்) கிப்லாவாக – தொழுகையில் முன்நோக்கும் திசையாகக் கொண்டு தொழுது வருவதும் ஆகிய இதுபோன்ற பல யூத-முஸ்லிம் ஒற்றுமைகளைக் கண்டு அவர்கள் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் - கொண்டு நபிகள் பிரான் மீது அன்பும் முஸ்லிம்களிடம் நேசமும் பாராட்டினர். இத்தருணத்தை அரிய வாய்ப்பாகக் கருதிய அண்ணல் நபியவர்கள் யஹூதிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார்கள். யூதர்களும் உளப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதனை நிறைவேற்றிக் கொண்டனர்.

இந்த உடன்பாட்டின்படி: (1) முஸ்லிம்களும் யூதாகளும் அவரவர் சமயத்தை அவரவரும் பின்பற்றி வருவதென்றும் (2) இருவரில் எவருடனாவது வெளியார் போருக்கு வந்தால் அவருக்கு மற்றவர் உதவி புரிவதென்றும் (3) மதீனாப் பட்டணத்தை எதிரி யாரும் தாக்க முனைந்தால் இரு சமயத்தினரும் ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போரிடுவதென்றும் (4) பொது எதிரியுடன் போர் செய்வதாயினும் அல்லது உடன்பாடு காணுவதாயினும் இருவரும் கலந்து முடிவெடுத்துத்தான் செய்து கொள்ள வேண்டுமென்றும் (5) யூதர்களையும் அவர்கள் ஆதரவிலிருப்பவர்களையும் முஸ்லிம்கள் பாதுகாப்பதென்றும் (6) மக்கா குறைஷிகளுக்கு யூதர்கள் உதவி செய்யக்கூடாதென்றும், குற்றமிழைப்பவர்களைத் தக்க முறையில் தண்டிப்பதென்றும் (7) உடன்பாட்டு விதிகளைச் செயல்படுத்துவதில் சிக்கல், கருத்து வேறுபாடு ஏற்பட்டால் பெருமானாரின் தீர்ப்பையே இரு தரப்பாரும் பேணி நடப்பதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மதீனாவின் சூழலில் வாழ்ந்த மற்ற யூத வகுப்பாரையும் இவ்வுடன்படிக்கையில் கட்டுப்படுத்திக் கையெழுத்துக்கள் பெற்றார்கள் மாநபியவர்கள். மதீனாவுக்கு வந்து ஒன்பது மாதங்களில் இவ்வுடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் 100 சதுர மைல் விஸ்தீரணத்தையும் 2500 யூதர்கள் 500 முஸ்லிம்கள் 2000 முஸ்லிமல்லாதார் ஆகிய 5000 குடிமக்களையும் கொண்ட ஆட்சிபீடமான மதீனாவில் முதல் அரசியல் சாசனம், 53 பிரிவுகளைக் கொண்டதாக அண்ணலார் அவர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்டதாகும்.

இந்த அரசியல் உடன்படிக்கை மதீனாவில் இஸ்லாமிய அரசு ஸ்தாபிதமாவதற்கு அடிப்படை அமைத்தது அன்னியில், மக்களின் வாழ்க்கை முறை இஸ்லாமிய நெறியில் அமையவும் வகை செய்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மற்ற உடன்படிக்கைகளையும் அபிவிருத்திகளையும் நாம் நோக்குங்கால், பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய ஒப்பற்ற அரசியல் தூரதிருஷ்டியும் இணங்க வைக்கும் சாதுர்யமும் உடையவர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் வெறும் மார்க்கப் பெரியாராகவும் தபோதனராகவும் இல்லாமல் உலக விவகாரங்களனைத்தையும் ஒப்பற்ற திறமையுடன் நிர்வகிக்கும் அறிவும் ஆற்றலுமுடையவர்களாயிருந்தார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

**நயவஞ்சகர்கள்**

யத்ரிபிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஆரம்பத்தில் குடியேறி வசித்தவர்கள் யூதர்கயாவர். இவர்கள் பனூ கைனுகா, பனூ நுலைர், பனூ குறைலா என்ற மூன்று கோத்திரத்தார். பின்பு யமன் நாட்டில் ஒரு சமயம் பெரு வெள்ளம் ஏற்பட்டதில், கஹ்தான் என்னும் கோத்திரத்தைச் சேர்ந்த அரபியர்கள் அங்கிருந்து யத்ரிபில் வந்து குடியேறி வசிக்கத் தொடங்கினர். இக்கோத்திரத்தில் அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரு சகோதரர்கள் இருந்தனர், அவர்களின் வமிசா வழியினர் தான் பெருமானார் காலத்தில் அவ்ஸ் கோத்திரத்தார் என்னும் கஸ்ரஜ் கோத்தரத்தார் என்றும் அழைக்கப்பட்டனர்.

யத்ரிபில் புதிதாக குடியேறிய இவ்விரு கோத்திரத்தாரும் ஏற்கனவே அங்கு வசித்துவந்த யூதர்களுடன் ஒற்றுமையாகச் சில காலம் வாழ்ந்து வந்தனர். இதனால் அரபுக் குடும்பங்கள் பெருகி வளரத் தொடங்கின. இதைக் கவனித்த யூதர்கள், இவ்விராபியர்களால் தங்களுக்கு ஆபத்து நேரிடுமோவென அஞ்சி அவர்களுக்குள் சில்லரைச் சண்டைகளைக் கிளப்பிவிட்டனர். இச்சச்சரவுகள் பெரிதாகிக் கோத்திரச் சண்டைகளாக மூண்டன. அராபியர்களின் வழக்கத்தின்படி மூண்ட சண்டைகள் ஓய்வின்றி நீண்ட காலத்திற்கு நீடித்தன. அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தாருக்கிடையே நடந்த இறுதிச் சண்டை மதீனாவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள புஆத் என்னும் இடத்திலாகும். இங்கு பனூ குரைலா யூதர்களுக்குச் சொந்தமான கோட்டை இருந்தது. அவ்ஸ், கஸ்ரஜ் சண்டை 120 வருடங்களாக நீடித்து வந்த ஒன்றாகும். இதில் புஆத் யுத்தம் கி.பி. 616ல் நடைபெற்றது. இவ்விதப் பகைமையின் காரணமாக இரு கோத்திரத்தாரும் நலிந்தும், மெலிந்தும் பலவீனப்பட்டு போயினர். “ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்ற முறையிலும் “ஆட்டுக்கிடாய்ச் சண்டையினூடே நரி இரத்தம் குடித்த” கதைபோலும் யூதர்கள் இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு பொருளாதார ஆதாயமடைந்து முன்னேறிச் செல்வமும் செழிப்புமாக வாழ வகை செய்து கொண்டனர்.

அரபு நாட்டுச் செல்வமனைத்தும் ஹிஜாஸ் மாகாண யஹுூதிகளிடம் போய்க் குவிந்துவிட்டன. இவர்கள் கடுமையான நிபந்தனைகளின் மீது தகாத வட்டி வாங்கி அரபு மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தனர். ஈடு என்ற பெயரில் அவர்களின் பெண்டு பிள்ளைகளையும் கூட அடிமைப்படுத்தி வந்தனர்.

நலிந்து, மெலிந்து, நொந்து போயிருந்த அவ்ஸ், கஸ்ரஜ் கூட்டத்தார் இப்போது மனம் திருந்தியவர்களாக ஒற்றுமையுடன் வாழ எண்ணங்கொண்டனர். அது சமயம்,

அப்துல்லாஹ் இப்னு உபை என்பவன் மதீனாவில் மிகுந்த செல்வாக்குடையவனாய் வாழ்ந்து வந்தான். இவனைத் தலைவனாக ஆக்கி, அவன் சொற்கேட்டு நடந்தால் தங்களுக்கு நன்மை விளையும் என்று இரு கோத்திரத்தாரும் கருதினர். எனவே, அப்துல்லாஹ் இப்னு உபையை மதீனாவின் தலைவனாக ஆக்குவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன.

நிலைமை அங்கு இவ்வாறு இருந்துவரும் போதுதான் நபிகள் கோமான் மதீனா வந்து சேர்ந்தார்கள். அவர்களின் வருகையால் மதீனாவின் காற்று மாறி வீசத் தலைப்பட்டு விட்டது. மக்களின் கவனமெல்லாம் மாநபி அவர்கள் மீது திரும்பிவிட்டன. இரத்தினங்கள் பதித்த மணிமகுடம் சூட்டி இப்னு உபையை அரசனாக்கும் பட்டாபிஷேக வைபவமும் தள்ளி வைக்கப்பெற்றது. பின்னர் கைவிடவும்பட்டது. இதனைக் கண்டு அவன் உள்ளங் குமுறிப் பெருமூச் செறிந்தான். தனக்குக் கிடைக்கவிருந்த ஒப்பற்ற பாக்கியத்தை மக்காவிலிருந்து அகதியாக வந்த ஒருவர் கெடுத்து மண்ணாக்கிவிட்டாரே என உள்ளங்குமைந்தான். அந்தக் குமைதன் “எதிரியை உறவாடிக்கெடு” என்ற எண்ணய் வார்க்கப்பெற்று, நயவஞ்சகமென்னும் கனல் கக்கும் நெருப்புக்குண்டமாக மாறிவிட்டது. ஆனாலும் அறிவாற்றல் படைத்த அப்துல்லாஹ் சூழ்நிலையை அனுசரித்துச் சாதுர்யமாகவும் இதம்பதமாகவும் செயலாற்றத் திடங்கொண்டான். இதற்காக அவன் முதலில் இஸ்லாத்தைத் தழுவி - இது பத்ருப் போருக்குப் பின்னர் எனக் கூறப்படுகிறது. உண்மை முஸ்லிமைப் போல் நடிக்க ஆரம்பித்தான். ஆனால் இஸ்லாத்தை வேரறுத்துக் கல்வி வீசியெறிய வேண்டுமென்பதுதான் அப்துல்லாஹ்வின் அந்தரங்கக் குறிக்கோளாக இருந்து வந்தது.

**வேவு பார்த்தல்**

மாநபியவர்கள் மதீனா வந்த ஒன்பது மாதங்களில் தங்களைப் பலப்படுத்திக கொண்டார்கள். ஹிஜ்ரத் ஆரம்பத்தில் மக்கா குறைஷிகள் சிறிது பரபரப்படைந்தவராயினும், வர வர வேகம் தணிந்து தங்கள் வியாபாரங்களில் கவனம் செலுத்தலாயினர். ஆனாலும், வாணிபத்திற்காகச் செல்லுமிடங்களில் பெருமானாரையும் இஸ்லாத்தையும் பழித்துரைத்துப் பிரச்சாரம் புரிவதை நிறுத்தினார்களில்லை. நிலைமையை இவ்வாறு நீடிக்கவிட்டால் மக்கா குறைஷிகளின் கை மேலோங்கிவிடும். அது இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு இடும்பையாக ஆகிவிடக் கூடும் எனப் பெருமானாரும் முஸ்லிம்களும் கருதினர். எனவே, குறைஷிகளின் நடமாட்டங்களையும், அவர்களின் வியாபார நிலவரங்களையும் தெரிந்து கொள்வதற்கான வேவுப் பணியைத் துவக்கி எண் திசையிலும் ஒற்றர்களை அனுப்பி உளவறிந்து வரச் சொன்னார்கள்.

மதீனாவின் அமைதியைக் கெடுக்கக் குறைஷிகள் முனைந்தால் முஸ்லிம்கள் அதனைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் மதீனாப் பாட்டையின் வழியாகத் தங்களின் வியாபாரக் காரவான்களை நடத்திச் செல்வது இயலாததாகிவிடும் என்பதனை குறைஷிகளுக்கு உணர்த்தும் பான்மையதாக இந்நடவடிக்கை இருந்தது.

பெருமானார் மதீனாவுக்கு வந்து ஒன்பது மாதங்கள் கழித்து உளவு பார்க்கும் கோஷ்டிகளை அனுப்பினார்கள். இதில் முதல் வேவு கோஷ்டி ஸபர் மாதம் பெருமானார் தலைமையில் வந்தான் (அல் அப்வா) வரை சென்று பனூதமராக்களுடன் உடன்படிக்கை செய்து வந்தது.

இரண்டாவதாக, உபைதா பின் அல் ஹாரிது தலைமையில் முஹாஜிரீன்களில் 60 பேர் கொண்ட கோஷ்டி தனியத்துல் மர்ராவுக்குக் கீழே ஹிஜாஸின் நீர்நிலைப் பகுதிவரை சென்று குறைஷிகளைச் சந்தித்தும், சண்டையிடாது திரும்பி வந்தது.

மூன்றாவதாக, ஹலரத் ஹம்ஸா தலைமையில் ஜுஹைனா எல்லையில் கடற்கரை ஓரத்திலுள்ள அல்ஈஸ் வரை முஹாஜிரீன்களின் 30 குதிரை வீரர்களுடன் சென்ற கோஷ்டி அப்பக்கமாக 300 குறைஷிக் குதிரை வீரர்களுடன் மக்காவிலிருந்து வந்த அபூஜஹலைச் சந்தித்தது. இரு கோஷ்டியாருக்கிடையிலும் மோதல் ஏற்படாமல் மஜ்தீ பின் அம்ரல் ஜுஹனீ என்ற அப்பிரதேசத்தலைவர் சமாதானப் படுத்தி மக்காவுக்கும் மதீனாவுக்கும் அனுப்பிவைத்தார்.

நான்காவதாக, ரதுவாவுக்கு அருகாமையிலுள்ள பவாத் என்னுமிடத்திற்குப் பெருமானார் சென்று எவரையும் சந்திக்காது திரும்பினார்கள்.

ஐந்தாவதாக, பெருமானார் பனூதினார் எல்லை வழியாக தாத்துல் சாக் பள்ளத்தாக்கைக் கடந்து மல்லல் சமபூமியைத் தாண்டி யன்பூ பள்ளத்தாக்கிலுள்ள அல்உஷைரா என்னுமிடத்தை அடைந்து யுத்தம் செய்யாது பனு முத்லிஜ் பனூதம்ரா வர்க்கத்தாருடன் உடன்படிக்கைகள் கண்டு மதீனா திரும்பினார்கள்

இந்த உடன்படிக்கையில் குறைஷிகளின் வாணிபத்துக்குக் குந்தகம் விளையக்கூடிய சாத்தியக்கூறுகள் இடம் பெற்றிருந்தன. தோற்றத்தில் இவை சாதாரணமான உடன் படிக்கைகளைப் போன்றிருப்பினும் நடைமுறையில் மிக்க பயனளிப்பவையாய் இருந்தன. இவற்றால் எதிரிகளின் பலம் குறைந்து முஸ்லிம்களின் நிலை வலுவடைய வகை பிறந்தது.

பிறகு, ஸஅத் பின் அபீவக்காஸ் தலைமையில் 8 முஹாஜிரீன்களை அனுப்பினார்கள். அவர்கள் ஹிஜாஸிலுள்ள அல்கர்ரார் வரை சென்று யுத்தம் செய்யாது திரும்பினர். இத்தருணத்தில் குர்ஸ் பின் ஜாபிர் என்னும் மக்காத் தலைவன் ஒருவன் சில குறைஷிகளுடன் வந்து மதீனாவுக்கு அருகில் மேய்ந்து கொண்டிருந்த கால்நடைகளில் சிலதைக் கவர்ந்து சென்றான். சில நாட்களுக்குப் பின், இவர் வலியவந்து இஸ்லாத்தைத் தழுவி மதீனாவின் எல்லைக்குள் கொள்ளைகள் ஏதும் நடக்காதவாறு கண்காணித்து வந்தார்.

**ஹல்ரமீயீன் கொலை**

கி.பி. 624ம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் தங்கள் அத்தை மகன் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் தலைமையில் ஆறு ஒட்டகங்களில் பன்னிரண்டு பேர் கொண்ட ஓர் ஒற்றர் குழுவை மதீனாவின் கிழக்குப் பக்கமாக நஜ்தை நோக்கிச் செல்லுமாறு அண்ணலார் அனுப்பினார்கள். அப்போது, அப்துல்லாஹ்விடம் மூடிய மடல் ஒன்றைக் கொடுத்து, இரண்டு நாள் பயணத்திற்குப் பின் மவ்லல் என்னும் பள்ளத்தாக்கை அடைந்ததும் அதைப் பிரித்துப் பார்த்து, அதில் கூறப்பட்டதுபோல் நடந்துகொள்ளுமாறு பணிந்திருந்தார்கள். இரண்டு நாள் பயணத்திற்குப் பின் அப்துல்லாஹ் கடிதத்தைத் திறந்து பார்த்தபோது, அதில் நக்லா பள்ளத்தாக்கை நோக்கிச் செல்லுமாறும், அப் பள்ளத்தாக்கு மக்காவுக்கும் தாயிபுக்கும் மத்தியில் இருப்பதாகவும், அங்கே இருந்து கொண்டு குறைஷிகளின் நடவடிக்கைகளைக்

கவனித்து உடனுக்குடன் மதீனாவுக்குத் தகவல் தெரிவிக்குமாறும், உளவு கோஷ்டியினரில் தம்மைப் பின்தொடர்பவர்களை மாத்திரம் உடனழைத்துச் செல்லுமாறும் யாரையும் வற்புறுத்த வேண்டாமெனவும் ஆணையிடப் பெற்றிருந்தது. அதன்படி அக்கோஷ்டியினர் அனைவரும் நக்லாவை நோக்கிச் சென்றனர். பஹ்ரைன் என்ற இடத்தை அடைந்ததும் ஸஅத் பின் அபீவக்காஸ், உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரில் ஒட்டகங்கள் மேய்ந்து கொண்டிருந்தபோது காணாமல் போனதால் அவற்றைத் தேடி அவ்விருவரும் சென்றனர். இவர்களை மக்காவாசிகள் சிலர் சிறைபிடித்துச் சென்றுவிட்டனர். மற்றவர்கள் நக்லா பள்ளத்தாக்குச் சென்று உளவறியக் காத்திருந்தனர்.

இச்சமயம் அம்ரு பின் ஹல்ரமீ என்பவரிகன் தலைமையில் குறைஷிகளின் வர்த்தகக் கூட்டம் ஒன்று சரக்குகளுடன் தாயிபிலிருந்து வந்தது. அது புனித ரஜப் மாதம், இம்மாதத்தில் போர் செய்வதில்லை என்பது அரபு நாட்டுச் சம்பிரதாயம். உளவு பார்க்க வந்த முஸ்லிம்கள் இம்மாதத்தில் தாக்குதல் செய்யக்கூடாதே என முதலில் தயங்கினர். பின்னர் தங்களுக்குள் கலந்தாலோசித்து ரஜப் மறுநாள் தான் பிறக்கிறது. ஆனதால் சந்தர்ப்பத்தை நழுவவிடுவது சரியல்லவென்ற முடிவுக்கு வந்தவர்களாய் ஹல்ரமீயின் வர்த்தகக் கூட்டத்தைத் தாக்கினர். இதில் வாகித் பின் அப்துல்லாஹ்வின் அம்பு ஒன்று ஹல்ரமீயின் மார்பில் பாய்ந்து அவரது உயிரைக் குடித்தது. இவர் மக்காவில் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அல்ஹகம், உஸ்மான் ஆகிய இருவரும் சிறை பிடிக்கப்பட்டனர். நௌபல் என்ற மற்றொருவன் தப்பி ஓடிவிட்டான்.

வர்த்தகக் கூட்டத்தின் சரக்குகளைக் கைப்பற்றிக் கொண்டும் இருவரைச் சிறைபிடித்துக் கொண்டும் அப்துல்லாஹ் வெற்றிக் களிப்புடன் மதீனா வந்தார். நடந்தவற்றை நபிகள் பிரான் அவர்களிடம் எடுத்துரைத்து கைப்பற்றி வந்த பொருட்களையும் கைதிகளையும் அவர்கள் முன் சமர்ப்பித்தார். அதுகேட்ட அண்ணலார், “புனித மாதத்தில் இவ்வாறு சண்டை செய்ய உங்களுக்கு நான் உத்திரவிடவில்லையே!” எனக்கடிந்தார்கள். சிறைப் பொருட்களையும் தொடாது ஒறுத்தொதுக்கிவிட்டார்கள். மதீனாவிலுள்ள மற்றையோரும் இச்சம்பவம் பற்றி பெருமானார் மீது குறை கூறத் தலைப்பட்டனர். அது குறித்தும் அவர்கள் வேதனையுற்றிருந்தார்கள். இந்நேரத்தில் “இறைவனை நிராகரிப்பதும் அவனது மார்க்கத்தில் மக்களைச் சேர விடாது தடுப்பதுமான பாவங்களைக் காட்டினும் புனித மாதத்தில் போரிடுவது பெரும்பாவமன்றே!” என்ற திருக்குர்ஆனின் 2:217 திருவசனம் வெளியானது. அது கண்டு அனைவரும் ஐயம் நீங்கி ஆறுதல் அடைந்தனர். பெருமானாரும் பேருவகையுற்றார்கள்.

**முக்கூட்டுச் சதித்திட்டம்**

முஸ்லிம்கள் மீது படையெடுப்பதற்கும் நெடுந்தூரத்திலுள்ள மதீனாவைச் சென்று தாக்குவதற்கும் அதிகமான பொருள் தேவை என்பதை ஆலோசித்து, மிகத் திறமை வாய்ந்த வியாபாரியான அபூசுப்யான் பின்ஹர்ப் என்பவரை சிரியா சென்று வியாபாரம் செய்து வருமாறு மக்காவிலுள்ள ஆண், பெண் குறைஷிகள் அனைவரும் பணங்கொடுத்து அனுப்பிவைத்தார்கள். நக்லா சம்பவத்திற்கு முன்னதாகவே அபூசுப்யான் சிரியா சென்றுவிட்டார். அங்கு அவர் வியாபாரம் செய்துவிட்டு எழுநூறு

ஒட்டகங்களில் ஐம்பதினாயிரம் தீனார் (பொற்காசு) மதிப்புள்ள சரக்குகளுடன் எழுபது சிப்பந்திகளுடனும் மக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வரும் வழியில் ஹல்ரமீயின் கொலை பற்றிக் கேள்வியுள்று முஸ்லிம்கள் குறைஷிகளின் வர்த்தகக் கூட்டங்களைத் தாக்குவதில் ஈடுபட்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொண்டார்.

இப்போது பெரிய வாணிபக் கூட்டமொன்று சிரியாவிலிருந்து மதீனா வழியாகச் செல்லும் பாட்டையில் மக்காவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் பெருமானாருக்கு எட்டியது. அது அபூசுப்யான் தலைமையில் வருகின்றது என்ற துப்பும் கிடைத்தது. அவர் கொண்டு வரும் பொருள்களனைத்தும் பத்திரமாக மக்கா போய்ச் சேர்ந்தால் அதனால் முஸ்லிம்களுக்குக் குறைஷிகளால் நேரக்கூடிய தாக்குதல் தீங்கையும், ஹல்ரமீயின் கொலை எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்து நிற்கும் தன்மையையும் அண்ணலார் தங்கள் அகத்திரையில் படமிட்டுப் பார்த்தார்கள்.

எனவே, தல்ஹா, ஜைத் என்ற இரு முஹாஜிர்களை மதீனாவுக்கு மேற்கே நூறு மைல் தொலைவில் கடற்கரை ஓரமாயுள்ள ஹவ்ரான் என்னும் இடத்திற்குச் சென்று அபூசுப்யானுடைய வர்த்தகக் கூட்டம் பற்றிய தகவலை அறிந்து வருமாறு பணித்தார்கள். இவர்கள் அங்கு சென்று திரும்புவதற்குள் சிறிய படையுடன் பெருமானார் அவர்கள் பத்ரு பள்ளத்தாக்கை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள்.

தம் தலைமையில் வரும் வர்த்தகக் கூட்டத்தை முஸ்லிம்கள் வழிமறிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்ற தகவல் அபூசுப்யானுக்குத் தெரியவந்தது. எனவே அவர் முன்னெச்சரிக்கையாக, லம்லம் பின் அம்ர் அல்கிபாரி என்பவனை மக்காவிரைந்து சென்ற உதவிக்கு ஆள் திரட்டி அனுப்புமாறு குறைஷிகளிடம் தெரிவிக்கச் சொல்லி அனுப்பினார்.

இது இவ்வாறிருக்க, மக்கா குறைஷிகளிடமிருந்து அப்துல்லாஹ் இப்னு உபைக்கு இரகசியக் கடிதம் ஒன்று வந்தது. அதில் பெருமானார் அவர்களைக் கொன்றுவிட வேண்டும். அல்லது அவர்களை மதீனாவை விட்டும் துரத்தி விடவேண்டும். அவ்விதம் செய்யாவிடில், தாங்கள் மதீனா மீது படையெடுத்து வந்து அனைவரையும் அழித்துவிடப் போவதாக எழுதப்பட்டிருந்தது. இதனைத் தனக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகக் கருதிய இப்னு உபை, உடனே மதீனா மக்களின் பேரவையைக் கூட்டி, அவர்களிடம் மக்காவிலிருந்து வந்து மடலை வாசித்துக் காண்பித்தான். இச்செய்தி அண்ணலவர்களுக்குத் தெரியவந்ததும், நேரே அக்கூட்டத்திற்குச் சென்று அங்கு குழுமியிருந்த மக்களை நோக்கிஇ”மதீனா வாசிகளே! இது மக்காக் குறைஷிகளின் சூழ்ச்சியாகும். நீங்கள் அவர்களின் பயமுறுத்தலுக்குப் பணிந்தால், மதீனாவில் வாழும் முஸ்லிம்களாகிய உங்கள் உறவழனர்களையே நீங்கள் பலமற்றுப் போவீர்கள். இதைப் பயன்படுத்தி மக்காவாசிகள் உங்கள்மீத படையெடுத்து வந்து உங்கள் சொத்துக்களைச் சூறையாடிப் பெண்டு பிள்ளைகளையும் சிறைபிடித்துச் சென்றுவிடுவா. நாம் யூதர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளோம். ஆகவே, எதிரிகளை நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று எதிர்த்து முறியடிப்போம். எனவே,’குறைஷிகளின் பயமுறுத்தலுக்கு நாங்கள் அஞ்சவில்லை’ என அழுத்தமாகக் கூறி விடுங்கள்” என வீர உரை நிகழ்த்தினார்கள். கூடியிருந்த அனைவரும் உள்ளங்களில் புத்துணர்ச்சியும், புதிய சக்தியும் பாய்ச்சப் பெற்றவர்களாகி அப்துல்லாஹ் இப்னு உபையின் முகத்தில்

கரியைப் பூசிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்றனர். அவன் திகைத்து, வியர்த்து, மெய்சோர்ந்து, வாயடைத்து நின்றான்.

இது சமயம், யூதர்களும் பெருமானாருடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மாற்றமாக நடக்கத் தலைப்பட்டனர். ஈஸா நபியவர்களைப் பெருமானார் புகழ்ந்து பேசுவதும், அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை என மறுப்பதும், யூதர்களில் பலர் இஸ்லாத்தைத் தழுவியதும், நபிகள் பிரான் உதவியால் யூத அரசாங்கத்தை நிறுவ எண்ணியிருந்த கனவு கானல் நீரானதும், தொழுந்திசையை வட மேற்கேயுள்ள பைத்துல் முகத்திஸை விட்டும் தெற்கேயுள்ள க.்.பாவின் பக்கமாகத் திரும்பச் சொல்லி இறைவனின் கட்டளை பிறந்ததும் - இது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ஷ.்.பான் மாதம் பதினைந்தாம் நாள் திங்கள்கிழமை லுஹர் தொழுகையின் போது நேர்ந்தது, - சிலர் அஸர் ஜமாத்தின்போது என்பர் – ஆகிய எல்லாம் சேர்ந்து யஹூதிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தி விட்டன. அதுமேயுமன்றி, மதீனாவில் வாழ்ந்த கைனுகா யஹூதிகளில் மூன்று முக்கிய பிரமுகர்கள் இஸ்லாத்தில் இணைந்துவிட்டது. அச்சமூகத்தின் கட்டுக்கோப்பென்னும் கோட்டையில் விரிசலை உண்டுபண்ணிவிட்டது. அதனால் அவர்கள் நிலைதடுமாறினர். பெருமானார் அவர்கள் மாற்றமாக முஸ்லிம்களுக்கு இன்னல் விளைவிப்பதில் முனைந்து செயல்படத் துவங்கியுள்ளனர். இவர்களைப் பெருமானார் அவர்கள் கொடுமையில் குறைஷிகளினும் மிகைத்தவர்களாகக் கண்டார்கள். இக்காரணங்களால் யஹூதிகள் இஸ்லாத்திற்கும் அதன் திருநபியவர்களுக்கும் எதிரான காரியங்களில் ஈடுபடத் துணிந்துவிட்டனர்.

நாவில் நயமும், நெஞ்சில் நஞ்சும் கொண்டு அவர்கள் பேசவும் செயல்படவும்

தலைப்பட்டனர். பைத்துல் முகத்திஸ், முந்திய நபிமார்களின் தலைமைப்பீடமாக இருந்து வந்தால் மக்கா, மதீனாவில் வாழ்வதைவிட அங்கு சென்று வசிப்பது பெருமானாருக்குப் பெருமையளிக்கும் என ‘யோசனை’ கூறினர். மக்கா குறைஷிகளுடன் தொடர்பு கொண்டு மதீனாவில் நடப்பவற்றை உடனுக்குடன் தெரிவித்துக் கொண்டிருந்தனர். குறைஷிகள் படையெடுத்து வந்தால் அவர்களுக்கு எல்லாவித உதவிகளும் புரிவதாக இரகசியத் தூதனுப்பினர்.

யூதர், அப்துல்லாஹ் இப்னு உபை, இவர்களின் கபட நாடகமனைத்தும் நபிகள் நாதருக்குப் பளிங்குபோல் விளங்கியிருந்தன. இப்போது மக்காக் குறைஷிகள், யூதர்கள், முனாபிகீன்கள் இவர்களின் கபட நாடகமனைத்தும் நபிகள் நாதருக்குப் பளிங்குபோல் விளங்கியிருந்தன. இப்போது மக்காக் குறைஷிகள், யூதர்கள், முனாபிகீன்கள் ஆகிய மூவகைப் பகைவர்களையும் சமாளித்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கடைத்தேற்ற வேண்டிய மகத்தான பொறுப்பு பெருமானாருக்கு ஏற்பட்டுவிட்டது.

அன்றியும், மதீனாவாசியான ஸஅத் இப்னு முஆத் என்பவர் மக்கா சென்றிருந்தபோது அபூஜஹலைக் காண நேர்ந்தது. பேச்சுவாக்கில் அவன் அவரிடம், “இனி மதீனாவாசிகளை நாங்கள் மக்காவுக்குள் அனுமதிக்கமாட்டோம், ஏனெனில், நீங்கள் எங்களின் எதிரிகளுக்கு அடைக்கலம் அளித்துள்ளீர்கள்” எனக்கூறினான். அதற்கு ஸஅத், “அப்படியானால் நாங்கள் மதீனா வழியே உங்கள் வாணிபக்

கூட்டங்கள் செல்ல வழிவிடமாட்டோம்” எனச் சுடச்சுடப் பதில் கொடுத்தார். இதனால் குறைஷிகள் கொண்டுள்ள அழுக்காற்றின் தன்மையைப் பெருமானார் தெற்றெனத் தெரிந்து கொண்டார்கள்.

**புதிய திருப்பம்**

இப்போது, நபிகள் கோமான் அவர்கள் மதீனா வந்தபின், பதின்மூன்றாண்டு காலமாக மக்காவில் அனுஷ்டித்து வந்த முற்றிலும் சாத்வீகத் தன்மை வாய்ந்த அஹிம்சை வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாய கட்டம் ஏற்பட்டுவிட்டது. மக்காவிலிருந்த போது வாளேந்தி சண்டை செய்ய அவர்களுக்கு அனுமதி தர இறைவன் மறுத்துவிட்டான். இப்னு கல்தூன் என்னும் வரலாற்றாசிரியர் கருத்துப்படி, உத்தமத் திருநபியவர்களின் உயிரைக் குடிக்க குறைஷி வாலிபர்கள் வாளேந்தி வாயிலில் காத்து நின்றபோது அவர்கள் மக்காவைத் துறந்து வெளியேறிய சந்தர்ப்பத்தில்தான், ‘அவர்களின் இம்சைகள் நீங்கி, மார்க்கம் முற்றிலும், இறைவனுடையது என்றாகும்வரை போரிடுவீர்’ என்ற 8:39 திருவசனத்தின் மூலம் போரிடும் உத்தரவு கிடைக்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது. 2:190-194 திருவசனங்களும் இதை வலியுறுத்துகின்றன.

“இஸ்லாம் அரசியலையும், சமயத்தையும் தொடர்புபடுத்தியே ஆரம்ப காலத்திலிருந்து உலகில் பரவத் தொடங்கியது என்பது சரித்திரங்கண்ட உண்மை அரசியலைப் புறக்கணித்து ஒரு மனிதன் ஒருபோதும் வாழமுடியாது. அதேபோல் சமயத்தைப் புறக்கணித்துவிட்டும் மனிதனால் வாழ முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை என்னும் ஓர் உண்மையை இஸ்லாமிய வரலாற்றிலிருந்து – நபிகள் பிரான் வாழ்க்கையிலிருந்து – மக்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்” என அ.லெ.நடராஜன் தமது “நபிகள் நாயகம்” என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

மத போதகர் என்ற நிலையுடன், ‘அரசியல், ஆட்சிப் பொறுப்பு, பொருளாதாரம், ராஜதந்திரம் என்பவற்றையும் பிணைத்துச் செயலாற்ற வேண்டிய சூழ்நிலை இப்போது உருவாகிவிட்டது. அதற்குத் தேவையான அஞ்சா நெஞ்சம், வீரம், உறுதி, தூரதிருஷ்டி, பலம், யுக்தி அனைத்தும் இதுபோழ்து பெருமானார் அவர்களிடம் ஒப்பற்ற வகையில் பரிணமித்து விளங்க ஆரம்பித்துவிட்டன. அருளுருவாய்த் திகழ்ந்த அண்ணலவர்கள், கண்டோர் குலை நடுங்கும் வீரத் தளபதியாகக் காட்சியளித்தார்கள். உளவு பார்க்கும் ஒற்றர்களை நாளா திசைகளுக்கும் விரைந்தனுப்பி எதிரிகளின் இரகசிய நடவடிக்கைகளை அறிந்து வரச் செய்து, எதிரிகள், வஞ்சகர்கள் துரோகிகளின் சூழ்ச்சி, நடவடிக்கை, உள்ளக்கிடக்கை அனைத்தையும் விளங்கினார்கள். சிரியா நாட்டுடன் குறைஷிகள் செய்துவரும் வாணிபம் பொன்னைக் கொழித்து வருவதையும் பற்றாக்குறைக்கு க.்.பத்துல்லாஹ்வைத் தங்கள் ஊரில் பெற்றிருப்பதினால் தங்களுக்கேற்பட்டுள்ள பெருமை, செல்வாக்கு இவற்றால் மமதை தலைக்கேறி செருக்கி நிற்பதையும் பெருமானார் நன்கு அறிந்திருந்தார்கள். இக்காரணங்களால், குறைஷி வன்னெஞ்சர்கள் எக்கணத்திலும் மதீனாவின் மீது படையெடுத்து வருவர் என்பதை நிச்சயமாக எதிர்பார்த்தார்கள். அதன் நிமித்தமாக இரவு பகல் பாராது கண் விழித்தார்கள். காவலை மேற்கொண்டார்கள்.

## பத்ரு நோக்கி

அபூசுப்யான் அனுப்பிய லம்லம் என்பவன் தன்னைத் தலைவிரி கோலமாக ஆக்கிக்கொண்டு மக்காவுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக “அபூசுப்யானுக்கும் அவரது வர்த்தகக் கூட்டத்துக்கும் ஆபத்து வந்துவிட்டது முஹம்மதும் அவர் ஆட்களும் நம் வணிகக் கூட்டத்தைத் தாக்க வருகின்றனர் எல்லோரும் படை திரட்டிப் புறப்படுங்கள்” எனக் கூக்குரலிட்டுக் கொண்டு குறைஷித் தலைவர்களிடம் ஓடினான். அபூஜஹல் உடனே அனைவரையும் ஒன்று கூட்டி குறைஷிகளில் யுத்தம் செய்யக் கூடிய ஆயிரம் வீராகளை ஒன்று சேர்த்தான். அவர்களுக்கான 700 ஒட்டகங்களையும், 100 குதிரைகளையும், 600 கவசங்கள் ஆயுதம், உணவுப் பொருட்களையும் சேகரித்தான். படையினருக்கு உற்சாகமூட்ட வட்டப்பறையடித்துப் பாட்டு பாடும் பெண்கள் சிலரும் கிளம்பினர். குறைஷிகளின் படை ஆர்ப்பாட்டத்துடன் மதீனாவை நோக்கிப் புறப்பட்டது.

சிரியாவிலிருந்து வரும் வியாபாரக் கூட்டத்தாரும் சரி, மக்காவிலிருந்து செல்லும் வர்த்தகக் கூட்டத்தாரும் சரி, பத்ரு என்னும் பள்ளத்தாக்கில் சந்தித்துக் கொள்வது வழக்கம். மதீனாவுக்குத் தென்மேற்கில் எழுபதாவது மைலில் சிரியாவுக்குச் செல்லும் பாட்டையில் அமைந்துள்ள பத்ரு அக்காலத்தில் பெரும் சந்தை கூடும் இடமாகத்திகழ்ந்தது. இந்த இடத்தில் அபூசுப்யானின் வர்த்தக் கூட்டத்தை வழிமறித்துத் தாக்குவது என்ற நோக்கத்துடன் தான் பெருமானார் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள்.

ஹிஜ்ரி 2ம் ஆண்டு ரமலான் மாதம் 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கி.பி.624 மார்ச் 11ம் தேதி பெருமானார் அவர்களின் தலைமையில் 86 முஹாஜிரீன் 227 அன்ஸார்கள் அடங்கிய சிறிய படையொன்று புறப்பட்டது. மதீனாவிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள புயூத்துஸ் ஸுக்யா என்ற இடத்தை அடைந்ததும் அண்ணலார் தங்கள் சிறிய படையின் அணியைப் பார்வையிட்டார்கள். அது 313 வீரர்களையும் 6 கவசங்களையும் (எ.்.குச் சட்டைகள்) எட்டு வாட்களையும் எழுபது ஒட்டகங்களையும் ஐந்து குதிரைகளையும் கொண்டதாய் இருந்தது. மற்றும் சில வில், அம்புகளும் இருந்தன. பெருமானார் மதீனாவிலில்லாத நேரத்தில் அதன் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அமருப்னு உம்மி மக்தூம் என்பவரை நியமித்து வந்தார்கள். தங்களின் அன்பு மகளார் ருகையா அது சமயம் கடு நோயுற்றிருந்ததால் அவரின் அன்புக் கணவர், ஹலரத் உத்மான் அவர்களை மதீனாவில் இருந்து கொள்ளுமாறு பெருமானார் பணித்துவிட்டார்கள்.

முஸ்லிம்களின் படை பத்ரு பள்ளத்தாக்கை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் போதே சப்ரா என்னுமிடத்தை அடைந்ததும், அபூசுப்யானது வியாபாரக் கூட்டத்தின் நடமாட்டம் பற்றித் துப்புத் துலக்கி வர பஸ்பஸ் பின் அம்ரு, அதீ பின் அபீஜக்பா என்னும் இரு ஒற்றர்களையும் முற்கூட்டி அனுப்பிவைத்தார்கள். ஒற்றர்கள் பத்ரை அடைந்து அருகாமையில் உள்ள கிணறு ஒன்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த இரு பெண்களின் உரையாடலைச் செவிமடுத்தனர். அவ்விருவரின் பேச்சிலிருந்து குறைஷிகளின் வாணிபக் கூட்டம் அடுத்த நாள் அங்கு வரவிருப்பதாக அறிந்தனர். இத்தகவலை உடனே பெருமானாரிடம் வந்து தெரிவித்தார்கள். அதனைக் கேள்வியுற்ற

அண்ணலார் தம் படையுடன் பத்ரை நோக்கி விரைந்தார்கள். செவ்வாய்க்கிழமை இரவு ரம்லா என்ற பள்ளத்தாக்கை அடைந்து அங்குள்ள கிணற்றில் அனைவரும் தாக சாந்தி செய்து கொண்டு இரவைக் கழித்தனர்.

மறுநாள் புதன்கிழமைக் காலையில் பயணம் தொடர்ந்தது. வாதியுஜ் ஜக்ரான் என்ற இடத்தை அடைந்தும் மக்காவிலிருந்து குறைஷிப் பெரும் பெடையொன்று தங்களை எதிர்நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. எதிர்பாராதவிதமாகக் குறைஷிகளுடன் பொருத நேரிட்டிருப்பது பற்றித் தோழர்களுடன் ஆலோசனை கலக்க முற்பட்டார்கள். உற்ற தோழர்களான ஹலரத் அபூபக்கர், உமர் முதலியவர்களையம் ஆதரவாளர்களான அன்ஸாரிகளையும் ஒன்று கூட்டி அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். தாமதமின்றி முன்னேறிச் சென்று அபூசுப்யானின் தலைமையில் வரும் சரக்குகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற யோசனையை ஹலரத் அபூபக்கர், உமர் இவர்கள் தெரிவித்தனர்.

அகபா உடன்படிக்கையில், மதீனாவை எதிரிகள் தாக்க வந்தால் தாங்கள் வாளேந்துவதாக அன்ஸாரிகள் வாக்களித்திருந்தனர். ஆனால், இந்தப் போர் மதீனாவுக்கு வெளியே நடக்கக் கூடியதாயிருக்கிறது. இதில் அன்ஸாரிகளின் மனப்பாங்கு என்வென்பதை அறிய ஆவலுற்றவர்களாய் அண்ணலார் அவர்களின் பக்கம் திரும்பினார்கள்.

உடனே கஸ்ரஜ் கூட்டத்தாரின் தலைவரான ஸஅத் பின் முஆத் எழுந்து “நாயகமே! தாங்கள் இடும் கட்டளைப்படி இது சமயம் நாங்க்ள நடக்கச் சித்தமாயிருக்கிறோம். கடலில் விழுந்து உயிரை விடுவதற்கும் நாங்கள் தயங்கமாட்டோம். இது உறுதி என வீறு கொண்டு உரைத்தார். அவரையடுத்து மிக்தாத் என்பவர் எழுந்து “அண்ணலே! மூஸா நபியவர்களைச் சேர்ந்தவர்கள் அவரைக் கைவிட்டதுபோல், தங்களை நாங்கள் ஒருபோதும் கைவிடமாட்டோம். நாங்கள் போரிட்டு உரமேறியவர்கள். எனவே நிச்சயமாகத் தங்கள் வலமும், இடமும், முன்னும், பின்னும் நின்று போரிட்டு மடிய நாங்கள் தயங்கமாட்டோம். இது சத்தியம் என ஆக்ரோஷத்துடன் கூறினார்கள்.

முஹாஜிர், அன்ஸார் ஆகிய இரு சாராரின் வாக்குறுதிகளால் உற்சாகமுற்ற பெருமானார் தம் தோழர்களிடம், அபூசுப்யான், அபூஜஹல் ஆகிய இருவர் தலைமையில் வரும் கூட்டத்தாரின் ஒருவர் மீது தமக்கு வெற்றியளிப்பதாக இறைவன் வாக்குறுதி அளித்திருப்பதாகவும், ஆனதல், அபூஜஹல் திரட்டி வந்திருக்கும் பெரும் படையுடன் போர் புரிந்து வெற்றியை ஈட்டிக் கொள்வது தான் இஸ்லாத்திற்குப் பெருமையளிக்குமென்ற தங்களின் கருத்தை வெளியிட்டுக் காட்டினார்கள். திருவசனம் 8:7 பார்க்கவும்.

முகிற்பரப்பிய நிழல்வரு முகம்மது தமக்குப்
பகுப்ப தற்கிட மில்லெனும் பரம்பொரு ளருளா
லிகற்ப டும்பகை யிரண்டிலொன் றமதுகை யிடத்தி
ளகப்ப டுத்தின னெனுமொழி யிறங்கிய தன்றே

\- சீறா

அனைவரும் இதனை உற்சாகத்துடன் வரவேற்றனர். எனவே, அபூஜஹ்லின் படையுடன் பொருதத் தீர்மானித்தவர்களாய், அண்ணலார், தங்கள் படையை பத்ரு நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள்.

வியாழக்கிழமை மதியானம் முஸ்லிம்களின் படைவாதி யுஜ்ஜக்ரான் என்னுமிடத்தை விட்டுப் புறப்பட்டு அன்று மாலை பத்ரு பள்ளத்தாக்கைச் சென்றடைந்தது. படை பாளையமிறங்கிய இடத்தில் தண்ணீர் வசதி குறைவாக இருந்தது. அப்பகுதி மணற்பாங்காயிருந்ததால் ஒட்டகங்கள் நடந்து செல்லச் சிரமப்பட்டன. இதைக் கவனித்த ஹுபாப் பின் முன்திர் என்பவர் தண்ணீர் வசதியுள்ள இடம் கண்டு முன்னதாகச் சென்று, கிணறு நீர் நிலைகளைக் கைப்பற்றிக் கொண்டால் தண்ணீர்க் கவலையற்று போரில் மும்முரமாக ஈடுபட ஏதுவாக இருக்கும் என ஆலோசனை கூறினார். இதனை நேர்த்தியான யோசனையாகப் பெருமானார் ஏற்று அவ்வாறே தண்ணீர் வசதியுள்ள இடங்களைத் தங்கள் வசத்திலாக்கிக் கொண்டார்கள். எனினும், குறைஷியருக்கும் ஜலம் கொடுத்து உதவினார்கள்.

பத்ருப் பள்ளத்தாக்கு ஐந்து மைல் நீளமும் நான்கு மைல் அகலமுங்கொண்ட ஒரு சமவெளி. அதன் வடக்கிலும் கிழக்கிலும் செங்குத்தான குன்றுகள் சிகரம் நீட்டி நிற்கின்றன. தெற்கே கற்பாங்கான தரை, மேற்கே மணற்பாங்கான சிறு சிறு குன்றுகள் மலையில் உற்பத்தியாகிப் பள்ளத்தாக்கில் வந்து விழுந்து ஓடும் சிற்றாறு ஒன்றும் அங்குள்ளது. அதனால் நீருற்றுக் கண்கள் பலவும் அங்குண்டு. அவற்றில் குழிகள் தோண்டி தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்துவது பிரயாணிகளின் பழக்கம். அவற்றுள் முக்கியமான ஊற்றுக்கள் இப்போது முஸ்லிம்களின் கைக்கு வந்துவிட்டன.

**அபூசுப்யான்**

லம்லம் மக்கா சென்று தகவல் சொல்லுமாறு அனுப்பிய பின் அபூசுப்யான், மிகுந்த எச்சரிக்கையுடன் வந்து கொண்டிருந்தார். மதீனாவைச் சமீபத்த போது அவர், தமது வர்த்தகப் பரிவாரத்தை வேகமாகச் செலுத்தி பத்தை நோக்கிக் கொண்டிருந்தார். பத்ரு வந்து சேருவதற்கு முன் அங்குள்ள நிலைமையைத் தெரிந்து கொள்ளக் கருதியவராய் அபூசுப்யான், தம் பரிவாரத்தை ஓரிடத்தில் தாமதிக்கச் சொல்லி விட்டு தாம் மட்டும் அங்கு சென்றார்.

பத்ரு அருகே வந்ததும் பக்கத்திலிருந்த கூட்டத் தலைவனான மஜ்து இப்னு அம்ரு என்பவனைச் சந்தித்து, அந்நியர் யாரும் அப்பக்கமாக வந்து சென்றனரா என வினவினார். இரண்டு பேர் ஒட்டகங்களில் வந்து அங்குள்ள கிணற்றருகே தண்ணீர் பருகி இளைப்பாறிவிட்டுத் திரும்பியதாக அத்தலைவன் சொன்னான். மதிநுட்ப மிக்க அபூசுப்யான் கிணற்றருகே சென்று பார்த்துவிட்டு ஒட்டகங்கள் அங்கே புதிதாகச் சாணம் போட்டிருப்பதைக் கண்டார். அச்சாணத்தை கிளறிப் பார்த்துவிட்டு அதில் மதீனாவில் விளையும் பேரீத்தங்கனியின் சிறிய வகைக் கொட்டைகள் கலந்திருப்பதைக் கண்டு, வந்த இரு ஆட்களும் பெருமானார் அனுப்பிய ஒற்றர்கள் தாம், தம்மைப் பற்றி உளவறிய அங்கு வந்து சென்றுள்ளனர் என்பதைத் திடனாக அறிந்துகொண்டார்.

உடனே அபூசுப்யான் தமது வியாபாரக் கூட்டம் நிற்கும் இடத்திற்கு விரைந்தார். சிறிதும் தாமதியாது அங்கிருந்து புறப்பட்டு இடது பக்கம் செல்லும் வழக்கமான பாட்டையை விடுத்து வலது பக்கம் கடற்கரை ஓடமாகச் செல்லும் வழியைத் தொடர்ந்தார். இரவு பகலாகப் பிரயாணம் செய்து பகைவர் கையில் சிக்காது பாதுகாப்பான இடத்தை வந்தடைந்தார்.

தமக்கு உதவிபுரியும் பொருட்டுப் பெருவாரியான குறைஷிகள் போர்ச் சாதனங்களுடன் மக்காவிலிருந்து கிளம்பி வந்துகொண்டிருக்கின்றனர் என்பதை அறிந்த அபூசுப்யான், கைஸ் பின் இம்ரஉல் கைஸ் என்பவனை ஒட்டகத்தில் விரைந்து சென்று, தாம் அபாய எல்லையைக் கடந்து பத்திரமான இடம் வந்து சேர்ந்துவிட்டதாகவும் வந்தவர்களைத் திரும்ப மக்காவுக்கு அழைத்துச் செல்லுமாறு அபூஜஹலிடம் கூறுமாறும் செய்தி அனுப்பினார்.

குறைஷிகளின் படை பத்ரை நெருங்கிக் கொண்டிருக்கும் போது அல்ஜுஃஹ்பா என்னுமிடத்தில் கைஸ், அபூஜஹலைச் சந்தித்து அபூசுப்யானின் செய்தியைச் சொன்னான். அதைக் கேட்ட சிலர் மக்கா திரும்ப எண்ணங்கொண்டனர். ஆனால் அபூஜஹல் அதற்குச் சம்மதிக்கவில்லை. "நாம் இவ்வளவு தூரம் இத்தனை படை பண்டாரத்துடனும் இவ்வித ஆர்ப்பாட்டத்துடனும் வந்துவிட்டு வெறுமனே திரும்பிச் செல்வது சரியில்லை, பத்ரை அடைந்து, அங்கு மூன்று நாள் தங்கி, களியாட்டங்கள் நடத்திப் பொழுது போக்கி விட்டுத்தான் நாம் மக்கா திரும்பவேண்டும்! நம்முடைய ஆரவாரங்களைக் கண்டபின் மற்றவர்கள் நம்மைப் பார்த்து அஞ்ச வேண்டும். அவ்வாறு நாம் செய்யத் தவறினால் மக்காவாசிகளுக்கு மதிப்பற்றும் போகும்" என ஆர்ப்பாரித்தான். தனது அழிவு அங்குதான் நேரவிருக்கிறது என்பதை அபூஜஹல் அப்போது அறியாதிருந்தான். இதனையே, "சதி வரவறியாச் சிந்தை அபூஜஹல்தானும்" எனப் புலவர் பெருமகனார் உமறு தமது இன்பச் 'சீறா'வில் எழிலுற எடுத்துக்காட்டுகிறார். இறைவன் நாட்டத்தை அவனால் எப்படி அறியமுடியும்?

"அபூசுப்யான் கொண்டு வரும் சரக்குகளையும் பரிவாரத்தையும் பாதுகாப்பதற்காகவே நாம் இங்கு புறப்பட்டு வந்தோம். அக்காரியம் சுமுகமாக முடிந்துவிட்டது. இனி நாம் பத்ரு செல்ல வேண்டிய அவசியமில்லை. ஊர் திரும்ப வேண்டியதுதான்" எனக் கூறியவர்களாய்ப் பனூஜுஃஹ்ராக்கள் உட்படப் பலர் படையிலிருந்து பிரிந்து மக்கா திரும்பினர். அபூதாலிபின் மகன் தாலிப் என்பவரும் குறைஷிகளின் படையில் வந்திருந்தார். குறைஷியொருவன் அவரை நோக்கி, "ஹாஷிம் குலத்தவரே! நீர் படையில் சேர்ந்து வந்திருப்பது உண்மைதான், ஆயினும் உமது உள்ளம் முஹம்மதின் மீதே அன்பு பூண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை" எனக் குத்தலாகச் சொன்னான். இதனைக் கேட்ட தாலிபும் அவரைச் சேர்ந்தவர்களும் மனங்கசந்து மக்கா திரும்பிவிட்டனர். எஞ்சியவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று பத்ருப் பள்ளத்தாக்கை அடைந்து அதன்பின் புறத்து மலையடிவாரத்தில் பாளையமிறங்கினர்.

பத்ருப் பள்ளத்தாக்கில் ஒருபுறமாக முஸ்லிம் படை பாளையமிறங்கி இருந்தது. அதன் மறுபுறம் அல் அகன்கல் குன்றுக்குப் பின்பக்கத்தில் குறைஷிப்படை பாளையமிறங்கி இருந்தது. இருட்டியதும் பெருமானார், அலீ, ஜுபைர் பின்

அவ்வாம், ஸஅத் பின் அபீவக்காஸ் மூவரையும் அனுப்பி அபூசுப்யானைப் பற்றியும் மக்காக் குறைஷிகளைப் பற்றியும் உளவறிந்து வரச் சொன்னார்கள். அவர்கள் நீர் நிலையொன்றின் அருகே சென்றபோது எதிரிகளின் ஆட்களில் மூவர் துருத்திகளில் தண்ணீர் நிரப்பிக் கொண்டிருப்பதைக் கண்டனர். உடனே அவர்களைத் தாவிப் பிடித்தனர். ஒருவன் தப்பி ஓடிவிட்டான். அஸ்லம் அரீத், அபூயஸார் ஆகிய மற்றிருவரையும் பெருமானாரிடம் கொண்டு வந்தார்கள். அண்ணலார் அப்போது தொழுது கொண்டிருந்தார்கள். தொழுகையை முடித்துவிட்டு வந்து அவ்விருவரிடமும் பல கேள்விகளைக் கேட்டு குறைஷிகளின் நிலைமை பற்றி விசாரித்தார்கள். அவர்களின் பதில்களிலிருந்து குறைஷிகள் மலையின் மறுபுறத்தில் பாளையமிறங்கி இருப்பதும், அவர்களில் உத்பா, ஷைபா (இவர்களின் தோட்டத்தினுள் புகுந்துதான் தாயிபிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பெருமானார் (ஸல்) பாதுகாப்புத் தேடிக்கொண்டார்கள்) அபூஜஹல், நௌபல், உமையா, கஹைல், அபுல் பக்தரீ போன்ற பதினாறு முக்கிய பிரமுகர்கள் வந்திருப்பதும், அங்கு ஒரு நாளைக்கு ஒன்பது ஒட்டகங்கள் அறுத்துக் கறி சமைக்கப்படுவதால் அடிப்படையில் சுமார் ஆயிரம் பேர் வந்திருக்க வேண்டுமென்பதும் தெரியவந்தது.

சூரியன் அஸ்தமனம் ஆகி இரவு வந்து கொண்டிருந்த போது பத்ரு மலைச் சாரலில் சற்று உயரமான இடத்தில் பள்ளத்தாக்கை நோக்கியவாறு ஈச்சல் ஓலைகளால் குடில் ஒன்று அமைக்கப்பெற்று அதில் அண்ணலாரும் அவர்களுக்குத் துணையாக ஹலரத் அபூபக்கர் அவர்களும் தங்கினர். அஸத் இப்னு முஆத் உருவிய வாளுடன் குடிலின் வாயிலில் இரவு முழுவதும் காவல் காத்து நின்றார்.

நபிகள் நாதர், அனைவரையும் நித்திரை கொள்ளச் சொல்லிவிட்டுக் குடிசையினுள் இருந்து இறைவனை பிரார்த்திப்பதில் ஈடுபட்டார்கள். தொழுது, தொழுது “இறைவனே! பெருமையும் அகந்தையும் கொண்ட குறைஷிகள் உன்னைப் பழிக்கிறார்கள், வாக்களித்தப்படி நீ எங்களுக்கு உதவி புரிந்து வெற்றியைத் தந்தருள்வாய்” எனக் கண்ணீர் சொரிந்து பிரார்த்தித்தார்கள்.

பொழுது புலர்ந்த. வைகறைத் தொழுகைக்குத் தம் தோழர்களை எழுப்பி எல்லோரும் தொழுது முடிந்தபின், இறைவனுக்காக அறப்போர் செய்வதினால் அடையப் பெறும் அருமை பெருமைகளையும், அளப்பரிய பாக்கியத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அளறியும், காட்டு மிராண்டித்தனமாகக் கூச்சலிட்டுக் கொண்டு போர் புரியாமல் அமைதியாகவும் அணி குலையாத ஒழுங்குடனும் நின்று போரிடுமாறும் எச்சரித்தார்கள்.

**கேடு வரும் பின்னே...**

பத்ருப் பள்ளத்தாக்கில் அன்று இரவு பெருமழை பெய்தது. குறைஷிகள் பாளையம் இறங்கியிருந்த பகுதி தாழ்வாக இருந்ததால் தண்ணீர் தேங்கி அதைச் சேறாக்கிவிட்டது. முஸ்லிம்கள் பாளையமிறங்கிய பக்கம் மேடாக இருந்ததால் அம்மணற்பாங்கான பகுதியை மழை நன்கு இறுக்கிக் கெட்டிப்படுத்திவிட்டது. இது அவர்களுக்கு மிகச் சாதகமான நிலையாக அமைந்துவிட்டது. தவிரவும், குறைஷிகள் அன்று இரவு முழுவதும் குடித்துக் கும்மாளமடித்துக் கழித்தனர். ஒருவரேனும் கண்ணயரவில்லை.

விடிந்ததின் பின்னர் குன்றுகளினூடே குறைஷிகள் பள்ளத்தாக்கை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பெருமானார் பார்த்தார்கள். அபூசுப்யான் பத்திரமாக மக்கா திரும்பிவிட்டதால் இனி வீண் போர் எதற்கு என்ற எண்ணம் ஹகீம் இப்னு ஹிஷாம் என்பாருக்குச் சிந்தனையின் பட்டது. குறைஷிப் படைக்குத் தலைமை தாங்கி வந்துள்ளவர்களில் அபூஜஹ்லுக்கு அடுத்தப்படியாக உள்ளவர் உத்பா பின் ரபீஅ. விபரமும் செல்வாக்கும் மிகுந்த அனுபவமும் உடையவர். நக்லா பள்ளத்தாக்கில் கொல்லப்பட்ட ஹல்ரமீயின் குடும்பத்தாருக்கு மிக நெருக்கமானவர். அவரைக் கொண்டு ஹல்ரமீயின் கொலைக்கு நஷ்டஈடு கொடுத்துவிட்டால் இப்போரைத் தவிர்த்துப் பெரும் உயிர்ச் சேதத்தைத் தடுத்துவிடலாம் என்பது ஹகீமின் கருத்து. அவர் உத்பாவை நெருங்கித் தம் கருத்தைப் பதமாக எடுத்துச் சொன்னார். உத்பா அதை மகிழ்ச்சியுடன் ஏற்றார். எனினும், “இதற்கு அபூஜஹ்லின் அங்கீகாரம் வேண்டுமே” என்றார்.

ஹகீம், அபூஜஹ்லிடம் சென்று விஷயத்தைக் கூறி இதற்கு உத்பா சம்மதிப்பதையும் எடுத்துச் சொன்னார். அது கேட்ட அபூஜஹ்ல், “எதிரிகளின் படையைக் கண்டு நுரையீரல் பெருத்த உத்பாவுக்கு நடுக்கம் கண்டுவிட்டது போலும்!” என இடித்துரைத்தான். உத்பாவின் புதல்வர் அபூஹுதைபா இஸ்லாத்தைத் தழுவி ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றவர் இப்போது முஸ்லிம் படையில் வந்திருந்தார். உத்பா இச்சுடுசொல்லைப் பொறுப்பாரா?” எனக்கா நடுக்கம் கண்டுவிட்டது? யாருக்கு வீரம் இல்லை என்பதைப் போர்க்களத்தில் பார்க்கலாம்!” என ஆத்திரங்கொண்டவராய் ஆயுதபாணியாகிப் போர்க்களத்தில் குதித்தார்.

இப்பொழுது குறைஷிகளும் போருக்குக் கிளம்பிவிட்டனர். முஸ்லிம்களும் அணிவகுத்து நின்றனர். மணற் குன்றுகளுக்கு அப்பாலிருந்து பள்ளத்தாக்கை நோக்கிக் குறைஷிகள் வந்தனர். பள்ளத்தாக்கில் இருந்து முஸ்லிம்கள் சற்று முன்னேறிச் சென்று பெருமானார் கோடிட்டுக் காட்டிய இடத்தில் அணிவகுத்து நின்றனர்.

முஸ்லிம்களின் படையைக் காட்டிலும் குறைஷிகளின் படை மும்மடங்கு பெரிதாயிருப்பதையும் தங்களிடம் ஏராளமான குதிரை, ஒட்டகை, ஆயுதங்களிருப்பதையும் கண்ட அபூஜஹ்ல் ஏளனச் சிரிப்புச் சிரித்தான். முஹம்மதுவும் அவர் ஆட்களும் இன்று தன்னிடம் வசமாக வந்து மாட்டிக் கொண்டார்கள். இஸ்லாம் இன்றோடு அழியப் போகிறது. இனித் தப்ப வழியில்லை என எண்ணி இறுமாந்தான். அவ்வாறிருப்பினும், குறைஷிகளுக்குச் சில இடையூறுகளும் இருக்கவே செய்தன. அவற்றை அபூஜஹ்லின் அகந்தை நிரம்பிய காமாலைக் கண்களால் அப்போது காண முடியவில்லை. மழை அதிகம் பெய்த காரணத்தால் குறைஷிகள் முன்னேறிச் செல்வது பெருங்கஷ்டமாக இருந்தது. வீரர்களின் கால்களும் வாகனங்களின் கால்களும் சேற்றில் புதைந்து அடியெடுத்து வைக்க இயலாதவாறு சிரமங்கொடுத்தன. எதிர்வெய்யில் வேறு காய்ந்ததால் அவர்கள் விரைவில் சோர்வடைந்தனர். அன்றியும், அவர்களிடை ஒருமனப்பட்ட போக்கும் கட்டுப்பாடும் நிலவ வழியில்லாதிருந்தது. இரவு கண் விழித்துக் கும்மாளமடித்த சோர்வு வேறு.

**வணங்க ஆள் இராது**

எதிர்பாராத விதமாக குறைஷிகளுடன் மோத நேர்ந்திருப்பது குறித்து, எதிரிகளின் படை தங்கள் படையை விட எண்ணிக்கையால் மிக அதிகமாக இருப்பது குறித்தும் பெருமானாரும் அபூபக்கர் அவர்களும் இது சமயம் சற்று கவலை கொண்டார்கள். போர் செய்து தோற்றாலும் அவமானம், பின்னடைந்து திரும்பிச் சென்றாலும் அவமானம், ஆகவே, என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் தோய்ந்தார்கள். சட்டென அண்ணலார் குடிசையுள் புகுந்தார்கள். இறைவனைத் தொழுது ஸஜ்தா (சென்னியைத் தரையில் வைத்தல்)வில் கிடந்தவாறு, “எல்லாம் வல்ல இறைவா! என்னிடம் நீ வாக்குறுதியளித்ததை நிறைவேற்றித் தந்தருள்வாய்!. மனம் நொந்து வாடும் உன் அன்பர்களுக்கு உதவி புரிவாய்!. இன்று இங்குள்ள இந்தச் சிறிய முஸ்லிம் படை எதிரிகளால் அழிவுற நேருமாயின், பிறகு தூய உள்ளத்தோடும் அன்போடும் உன்னை வணங்குவதற்கு இத்தரணியில் எவருமில்லாது போய்விடும்” எனக் கண்ணீர் வடித்து இறைஞ்சினார்கள். இந்த நிலையில் கிடக்கும்போது அவர்களைச் சிற்றுறக்கம் ஆட்கொண்டது. அத்தூக்கத்தினூடே இறைவனின் மறுமொழி அவர்களுக்கு கிடைத்து விட்டது. புன்முறுவல் பூத்தவர்களாய் ஸஜ்தாவினின்றும் எழுந்தார்கள். அருகினில் நின்ற அபூபக்கர் அவர்கள் “ ஆண்டவனின் திருத்தூதே! தாங்கள் இடையறாது இறைவனை வேண்டுவதால் அவன் நிச்சயம் தன் வாக்குறுதியை நிறைவேற்றுவான். கவலை கொள்ள வேண்டாம்” என ஆறுதல் மொழி பகர்ந்தார்கள்.

மின்னொளி நிகர்த்த உற்சாகத்துடன் வெளியேறிய மாநபியவர்கள்,” இறைவனின் அருளால் குறைஷிகள் அதிவிரைவில் முறியடிக்கப்பட்டு புறமுதுகு காட்டி ஓடவிருக்கிறார்கள்” என மொழிந்தவர்களாய் அணிவகுத்து நின்ற முஸ்லிம் படையை நோக்கி விரைந்தார்கள். அணியில் நின்ற வீரர்களை விளித்து, யாருடைய கையில் முஹம்மதின் ஆன்மா இருக்கின்றதோ அவன் மீது ஆணையாகக் கூறுகிறேன்? இன்று உங்களில் யார் புறமுதுகு காட்டி ஓடாது வீரப்போர் செய்கின்றாரோ, யார் போர் செய்து மடிகின்றாரோ, அன்னவர்கள் நிச்சயமாக இன்ப சுவர்க்கத்தை வெகுமதியாகப் பெற்றுக் கொள்வர்” என முழங்கினார்கள். இதை செவியேற்றதும் முஸ்லிம் வீரர்கள் தங்கள் சரீரம் முழுவதும் ஒரு வித மின்சாரம் பாய்ந்து பரவுவதை உணர்ந்தனர். ஒவ்வொருவரும் பத்து ஆட்களின் பலத்தை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

போர் ஆரம்பித்தது. முஸ்லிம்கள் இறைவன் தங்களுக்கு வெற்றியை அளிக்கவிருக்கிறான் என்பதில் பூரண உறுதி பூண்டு தங்களை முற்றிலும் மறத்து ஆவேசத்துடன் போரிட்டபோது இடமும் காலமும் அர்த்த மற்றவைகளாகவும், இறைவனின் அமரர்கள் அவர்களுக்கு மேலே வட்டமிட்டு உற்சாகமூட்டி முன்னேறச் செய்வதாகவும் இருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் பதின்மரின் பலத்தைப் பெற்றவர்களாக தரையில் கால்படாத முறையில் துள்ளிக் குதித்து தங்களை வாட்களை ஆகாயத்தில் வீசி எதிரிகபளின் கழுத்துகளுக்குக் கொண்டு செல்வதைக் காணும்பொழுது அவர்கள் சாதரண மனித சக்தியாலின்றி அசாத்தியமான தெய்வசக்தியால் இயக்கப்படுவதாகக் காட்சியளித்தனர். முஸ்லிம்களுடைய இருதயங்கள் அதுசமயம் இறைவனுடைய உயிர் மூச்சால் நிரப்பப்பட்டிருந்தன. அன்று வெள்ளிக்கிழமை ரமலான் பிறை 17. அக்காலத்திய அராபியர், வாளையும், கல்லையும், கேடயத்தையும், வில்லையையும், அம்பையும், கவண்களாகக் கொண்டு போர் புரிந்தனர். ஒவ்வொரு படையிலிருந்தும் முதலில் ஒரு வீரன் வெளிவரவான்.

இவன் தனது வீர, தீர, மகிழமப் பிரதபாங்களை எடுத்துக் கூறி, தனக்கு ஈடான ஜோடியை எதிரிப் படையிலிருந்து அனுப்புமாறு அறைகூவி அழைப்பான். அவனை எதிர்க்க முன்வந்துள்ளவன் அவனுக்கு ஈடான ஜோடி என்பதை அறிந்ததும் இருவீரர்களும் பொருத ஆரம்பிப்பர். இருவரில் ஒருவன் மாண்டால் இறந்தவனின் படையிலிருந்து மற்றொரு வீரனை அனுப்பி எதிரியுடன் போரிடச் செய்வர். இவ்வாறு இரண்டு மூன்று பேர் சண்டை செய்தபின், இரு படைகளும் ஒன்றோடொன்று மோதிப் பொது யுத்தம் நிகழும்.

இம்முறையை அனுசரித்து, முதலில் குறைஷிகளின் பக்கமிருந்து, கொலையுண்ட ஹல்ரமீயின் தம்பி ஆமிர் போர்க்களத்தில் புகுந்தான். இவனுடன் முஸ்லிம்களின் ஹலரத் உமர் அவர்களின் அடிமை மிஹ்ஜா என்பவர் எதிர்த்துப் போரிட்டு மாண்டான். பின்னர் உத்பாவும் அவர் தம்பி ஷைபாவும் உத்பாவின் புதல்வர் வலீதும் குறைஷிகளின் தரப்பிலிருந்து போரிட வந்தனர். இவர்களை மோத, முஸ்லிம்களில் அன்ஸாரிகளான ஹாரிதுடைய மக்கள், (தாய் அப்ரா) அவ்ப் முஅவ்வித் இருவரும் அப்துல்லா பின் ரவாஹாவும் முன் வந்தனர். இவர்களைக் குறைஷிகள் ஏற்காததால், முறையே உபைதா பின் ஹாரிது, ஹம்ஸா, அலீ ஆகிய மூவரும் எதிர்த்தனர். ஷைபாவும், வலீதும் இதில் மடிந்தனர். உத்பாவில் கையால் உபைதா காயமுற்றுப் பத்ரிலிருந்து மதீனா திரும்பும் வழியில், ஸ∴ப்ரா என்னுமிடத்தில் காலமாகி விட்டார். பின் ஹம்ஸா அவர்களின் வாளுக்கு உத்பா இரையானார். இதன் பின் பொது யுத்தம் நிகழ்ந்தது.

**அபூஜஹ்லின் அழிவு**

இஸ்லாத்தின் பரம விரோதியான அபூஜஹ்லை யுத்தகளத்தில் கொல்வதற்கென முஅவ்விது, முஆத் என்ற இரு அன்ஸாரி வாலிபர்கள் அவனைப் போர்க்களத்தில் தேடிக் கொண்டு வரும் போது அப்துர்ரஹ்மான் இப்னு அவ்∴பைக் கண்டு அடையாளங் காட்டுமாறு வேண்டினர். சற்று நேரத்தில் அபுஜஹ்ல் இரட்டைக் கவசமணிந்தவனாக, ஒட்டகை மீது அங்கு வருவதைக் கண்ட அப்துர்ரஹ்மான் சாடையால் அவ்வாலிபர்களுக்கு அவனைச் சுட்டிக் காட்டினார். உடனே முஆத் பின் அம்ர் அல்ஜமூஹ் பாய்ந்து சென்று கொடியோன் அபூஜஹலைத் தம் வாளால் வெட்டினார். அவன் ஒட்டகை மீதிருந்து நெடுமரம் போல் கீழே சாய்ந்தான். அந்நேரத்தில் அங்குற்ற அபூஜஹலின் மகன் இக்ரிமா, முஅதைத் தன் வாளால் வெட்டினார். அதனால் அவரது ஒரு கை துண்டிக்கப் பெற்று தோள் பட்டையிலிருந்து தொங்கியது. முஆத் இக்ரிமாவைத் தாக்கப் பின் தொடர்ந்தார். ஆனால் அவர் தப்பித்துப் படையுடன் புகுந்து மறைந்தார். முஆத் சளைக்காது தொடர்ந்து போரிட்டார். வெட்டுண்ட கை தொங்கிக் கொண்டிருப்பது இடைஞ்சலாகத் தோன்றியதால் குனிந்து அதன் மீது தம் காலை வைத்து மிதித்து துண்டித்து எறிந்து விட்டு மீண்டும் உற்சாகத்துடன் போரிட்டார்.

சண்டை ஓய்ந்தபின் அபூஜஹலின் கதி யாதாயிற்றென நபிகள் பிரான் வினவினார்கள். படைக்களத்தின் உள்ளே அப்துல்லாஹ் பின் மஸ்ஊது என்பவர் சென்று பார்த்த போது அப்பாதகன் குற்றுயிராய்க் கிடப்பதைக் கண்டார். உயிர் நீங்கிய பின் அவனது தலையைக் கொய்து வந்து பெருமானர் முன்னிலையில் வைத்தபோது “லாயிலாஹ இல்லல்லாஹ்” வணக்கத்திற்குரியவன் இறைவனையன்றி வேறெவருமில்லை என மொழிந்தவர்களாய் “இம்மனிதன் குறைஷிகளின் பிர்அவ்னாக

இருந்தான், ஏன் அவனைவிட இறைவனின் மார்க்கத்தை நிராகரிப்பதில் கடியவனாக இருந்தான். அல்லாஹ்வின் பகைவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்க வேண்டுமோ அது இவனுக்குக் கிடைத்திருக்கிறது" எனக் கூறினார்கள்.

குறைஷிகளில் அபுல் பக்தரீ என்ற ஒருவரும் வந்திருந்தார். அண்ணலார் மக்காவில் இருந்தபோது அவர்களைக் கண்ணியமாகப் பாவித்தவர். அவதூறாக ஏதும் பேசாதவர். ஹாஷிம் குலத்தவரைக் குறைஷிகள் பகிஷ்கரித்தபோது அதை நீக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர். இத்தியாதி காரணங்களால், "முஸ்லீம்கள் பக்தரீயைச் சந்தித்தால் அவருக்குத் தீங்கேதும் செய்ய வேண்டாம்" எனத் தடை விதித்திருந்தார்கள். அல்முஜத்தர் பின்தியாத் என்ற முஸ்லிம் வீரர் பக்தரீயை போர்க்களத்தில் சந்தித்தார். "அன்பரே! உமக்குத் தீங்கேதும் செய்யலாகாதெனப் பெருமானார் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். ஆதலின், நீவிர், அச்சமின்றிச் செல்லலாம்" என அல் முஜத்தர் கூறினார். அதற்கு அபுல்பக்தரீ, நல்லது எனக்குப் பின்னால் ஒட்டகை மீதிருக்கும் என் நண்பர் ஜுனாதா பின் முலைஹாவை விட்டுவிடுவீர்களா?" என வினவினார். "அவரை நாங்கள் விடுவதற்கில்லை", என அங்கிருந்த முஸ்லிம்கள் பதிலிறுத்தனர். "அவ்வாறாயின் நான் உங்களுடன் போர் செய்தே ஆக வேண்டும் நண்பனைக் காட்டிக் கொடுத்தவன் எனக் கூறி மக்காவிலுள்ள பெண்கள் என்னை எப்போதும் பழிப்பார்கள். அதைவிட மரணமே மேலானது" எனக்கூறிய பக்தரி போர் புரிந்தே அங்கு உயிர் துறந்தார்.

**ஆயிரத்தை முன்னூறு வென்றது!**

அண்ணலவர்கள் போர்க்களத்தில் முஸ்லிம் வீரர்களுக்கு விர உரைகள் பகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் கண்களிலிருந்து வீர ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஐம்பத்தைந்து வயதை அடைந்திருந்தாலும் அவர்களின் அங்கங்களில் எல்லாம் வாலிப இரத்தம் பாய்ந்தோடியது. "அல்லாஹ் நம்முடன் இருக்கிறான், அவன் வானவர்களும் நம் அணியிலே நின்று போரிடுகிறார்கள். ஊக்கமுடனும் உத்வேகத்துடனும் போர் புரியுங்கள். வெற்றி நம்முடையதாகவே இருக்கும்! என முழங்கிய வண்ணமிருந்தார்கள்.

தங்களுடைய அரும்பெரும் பிரமுகர்களின் தலைகளெல்லாம் புழுதியில் புரளுவதைக் கண்டதும் குறைஷிகளின் அணியில் பெருங்குழப்பம் ஏற்பட்டு விட்டது. அவர்களின் நெஞ்சுறுதி தளர்ந்து போயிற்று. இதைத் தொடர்ந்து சூறாவளியொன்றும் சுழன்று வீசியது. போதாக்குறைக்கு பெருமானார் அவர்களும் ஒரு பிடி மண்ணை அள்ளி, "உங்களின் கண்களை இருள் மூடிக் கொள்ளட்டும்!" எனக் கூறியவர்களாய்க் குறைஷிகளின் அணியிலே வீசியெறிந்தார்கள். அவ்வளவுதான், கொண்டு வந்த ஆயுதங்கள் பொருட்களையெல்லாம் போட்டுவிட்டுக் குறைஷிகள் நிலை பெயர்ந்து ஓடதலைப்பட்டனர்.

இந்தப் போரில் உற்றார் உறவினர்களே ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. மகன் தந்தையையும், மாமனார் மருமகனையும், தம்பி அண்ணனையும் எதிர்த்து வாள் வீசிக் கொண்டனர். அம்புகள் எய்யப்பட்டன.

அபூபக்கர் தம் மகன் அப்துர் ரஹ்மானை எதிர்த்தார்கள். உமர் தம் மாமனார் அல்ஆஸ் இப்னு முகைராவை எதிர்த்தார்கள்.

கி.பி.624 மார்ச்சு மாதம் 16ம் தேதி நடைபெற்ற இந்தப் போரில், பெரும் படையுடனும் ஏராளமான போர்ச் சாதனங்களுடனும் வந்திருந்த குறைஷிகள் தோல்வியையே கண்டனர். சிறிய படையைக் கொண்ட முஸ்லிம்கள் மகத்தான வெற்றியை அடைந்தனர். படை பலம், பணபலம், அறிவுப்பலம், குலப்பெருமை ஆகிய அனைத்தும் இறைவனது ஆற்றலின் முன் எதிர்த்து நிற்க முடியாது என்பதை பத்ருப் போர் மக்களுக்குச் சந்தேகமறக் கண்கூடாகக் காட்டிவிட்டது.

இப்போரில் முஸ்லிம்கள் தரப்பில் ஆறு முஹாஜிர்களும் எட்டு அன்சாரிகளும் ஆகப் பதினான்கு பேர் ஆவி துறந்தனர். குறைஷிகளின் சார்பில் எழுபதுபேர் கொல்லப்பட்டு எழுபது பேர் சிறைபிடிக்கப்பட்டனர். பத்ருப் போருக்குப் பலி கொடுக்காத குடும்பமே மக்காவில் இல்லையென்று தான் சொல்லவேண்டும். கைதானவர்களில் இருவர் முஸ்லிம்களுக்குப் பெரிதும் தீங்கிழைத்தனர் என்ற காரணத்திற்காகச் சிரத்சேதம் செய்யப்பட்டனர். இருவரில் ஹலரத் பிலால் அவர்களின் பழைய எஜமானனான உமையா பின் கலப் என்பவனும் ஒருவன் மற்ற கைதிகள் மதீனாவுக்கு அழைத்து வரப்பட்டனர் அவர்களில் ஹலரத் அலி அவர்களின் தம்பி அகீலும், அண்ணலாரின் மருகர் அபுல்ஆஸும், சிறிய தந்தை அப்பாஸும் இருந்தனர்.

குறைஷிகள் தங்கள் படையில் இறந்தவர்களின் பிணங்களைப் போர்க் களத்திலேயே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். எனவே, முஸ்லிம்கள்தான் அவர்களை எடுத்துப் புதைக்க நேரிட்டது. ஹலரத் அபூபக்கர் அவர்கள் குறைஷித் தலைவர்கள் இருபத்தி நால்வரின் பிணங்கள் ஒவ்வொன்றையும் உத்பா ஷைபா, உமையா, அபூஜஹல் என உரக்கப் பெயர் கூறியதும், அவை வரிசைச் கிரமமாகக் குழியில் கிடத்தப்பட்டன. இறுதியாக, அப்பெருங் குழியுள் மண் தள்ளி மூடப்பட்டது. இந்நிகழ்ச்சியினை அண்ணலார் அருகில் நின்று மவுனமாகப் பார்த்தார்கள்.

பத்ருப் போரில் குறைஷிகளிடமிருந்து முஸ்லிம்களுக்கு நூற்றில் பதினைந்து ஒட்டகங்கள், பதினாலு குதிரைகள் மற்றும் சமுக்காரங்கள், போர்க்கவசங்கள், ஆயுதங்கள், தளவாடங்கள் ஆகியவை கிடைத்தன. இவற்றைப் பங்கீடு செய்வது பற்றிய 8:41 இறைவசனம், பத்ருப் போர்க்களதத்திலிருந்து புறப்பட்டு மறுநாள் அல்சுப்ரா கணவாயைக் கடந்து ஸயர் என்ற இடத்தை அடைந்ததும் வெளியானது. அங்கு பங்கீடு செய்வதில், அண்ணல் நபியவர்களுக்கு (பொது நிதிக்கு) ஐந்தில் ஒரு பங்கு போக, மீதி நாலு பங்கை, குதிரை வீரர்களுக்கு இரண்டு, மற்றவர்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இதில் அபூஜஹலுடைய சிவப்பு ஒட்டகமும் துல்பிகார் என்ற வாளும் பெருமானாருக்குக் கிடைத்தன. இந்த வாளைப் பின்னர் ஹலரத் அலீ அவர்களுக்கும் அபூஜஹலின் கவசத்தை அவனது தலையைக் கொய்து வந்த அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதுக்கும் கொடுத்து விட்டார்கள்.

**போர்க் கைதிகள் :**

பத்ரிலிருந்து வெற்றிவாகை சூடி மதீனா வந்து சேர்ந்த பெருமானார் தங்கள் புதல்வியும் ஹலரத் உத்மான் அவர்களின் மனைவியுமான ருகையா நாச்சியார் மரணமடைந்த துக்கச் செய்தியைக் கேள்வியுற்று ஆற்றொணாத் துயர் அடைந்தார்கள்.

அங்கு முதல் வேலையாக போர்க்கைதிகளை எவ்வாறு நடத்துவது என்பது பற்றித் தம் தோழர்களுடன் ஆலோசனை கலந்தார்கள். எல்லாரையும் சிரச்சேதம் செய்துவிட வேண்டுமென ஹலரத் உமர் கருத்துத் தெரிவித்தார்கள். அபூபக்கர் அவர்கள் கைதிகளுக்கு மீட்புப் பணம் (பிதியா) பெற்றுக்கொண்டு விடுதலை செய்துவிடலாமென அபிப்பிராயம் கூறினார்கள். ஹலரத் அபூபக்கர் அவர்களின் ஆலோசனையை அனைவரும் ஏற்று, மீட்புத் தொகை நபர் ஒன்றுக்கு நாலாயிரம் திர்ஹம் (ஆயிரம் ரூபாய்) என நிர்ணயித்தார்கள். அகபா உடன்படிக்கையின்போது பெருமானாருக்குத் துணையாகச் சென்ற சிறிய தந்தை அப்பாஸ் அவர்களிடமிருந்தும் நாலாயிரம் திர்ஹங்கள் பெற்ற பின்னர் தான் அவர் விடுதலை செய்யப்பட்டார். பத்ருப் போரின் மீது அவர் வீட்டை விட்டுப் புறப்பட்ட போது தம் திரண்ட பண்டங்களைத் தம் மனைவி உம்முல் பலுல் பின்து அல்ஹாரிது வசம் ஒப்படைத்து இரகசியமாக வஸீயத் (இறுதிக் கோரிக்கை) செய்து வந்த விபரத்தை நபிகள் கோமான் வெளியிட்டுக் காட்டியபோது, அப்பாஸ் பேராச்சரியமுற்றார். மீட்புப் பணமாக வசூலானது மட்டும் ஒரு லட்சம் திர்ஹங்களுக்கு அதிலம் சிலர் இரண்டரை லட்சம் எனவும் கூறுவர்.

அதன் பின் போர்க் கைதிகளைத் தம் தோழர்களிடம் ஒருவர், இருவர், மூவராகப் பகிர்ந்தளித்து அவர்களை அன்புடன் பராமரித்து வருமாறு உபதேசித்தார்கள். அன்சாரிகளும், முஹாஜிர்களும் தம்மிடம் ஒப்படைக்கப் பெற்ற கைதிகளை நடத்திய விதமும், காட்டிய அன்பும், பரிவும் அவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. அதன் காரணமாகக் கைதிகளில் பலர் வலிந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வாராயினர். கைதிகளை விடுவித்துச் செல்ல மீட்புத் தொகையுடன் மக்காவிலிருந்து வந்த உறவினர்களில் பலர், தங்களைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்துள்ளதைக் கண்டு வியப்புற்றனர். அன்னவர்கள் மீட்புத் தொகை ஏதும் செலுத்தாமலே விடுதலை செய்யப்பட்டனர்.

அன்சாரி ஒருவர் தம் பாதுகாப்பில் இருந்து முஸ்அப் பின் உமைரின் சகோதரர் அபூஅஜீஸ் என்ற கைதிக்கு ரொட்டியை கொடுத்துவிட்டு அவரும் விட்டிலுள்ளவர்களும் பேரீச்சம் பழத்தைப் புசித்து வந்தனர். வெளியில் செல்ல நெருங்காலங்களில் கைதியை வாகனத்தில் ஏறிக்கொள்ளச் செய்து இவர் நடந்து செல்வாராம்.

மீட்புத் தொகை செலுத்தி மீட்சி பெற இயலாத படித்த கைதி ஒவ்வொருவரும் பத்து முஸ்லிம் சிறுவர், பெரியவர்களுக்கு எழுத்தறிவு கற்பித்துக் கொடுத்தபின் விடுதலை பெற்றுச் சென்றனர். சிலர் இஸ்லாத்திற்கு விரோதமாக இனிவாலேந்துவதில்லை என்ற உறுதி மொழியை அளித்து விட்டும் விடுதலை பெற்றர். அபூ இஸ்ஸத் அம்ர் இப்னு அப்துல்லாஹ் அல்ஜுமஹி என்ற புலவரொருவர் தமக்கு ஐந்து பெண்மக்கள் இருப்பதாகக் கூறிப் பெருமானாரின் அனுதாபத்தைப் பெற்று விடுதலையடைந்து சென்றார்.

அண்ணலாரையும் இஸ்லாத்தையும் அவதூறாகப் பேசி இழிவுபடுத்தி வந்த ஸுஹைல் இப்னு அம்ரு என்ற பேச்சாளர் ஒருவர் அக்கைதிகளில் இருந்தார். இவரது

முன்பற்கள் இரண்டையும் உடைத்தெறிந்து நாக்கையும் அறுத்தெறிய வேண்டுமென ஹலரத் உமர் வெகுண்டெழுந்தார்கள். கருணை நபியவர்கள் கையமர்த்தி, "இவருடைய எந்த உறுப்பையும் சேதப்படுத்த நான் முற்படுவேனாயின், எனது உறுப்பு எதையும் சேதப்படுத்த இறைவன் தயங்க மாட்டான். நான் ஒரு தீர்க்கதரிசி என்பதையும் பொருட்படுத்தமாட்டான்" என இறையச்சத்துடன் கூறினார்கள்.

பெருமானாரின் மூத்த புதல்வி ஜைனபின் கணவர் அபுல் ஆஸ் பின் ரபீஅ. இவர் கதீதா நாயகியின் சகோதரி ஹாலாவின் மகன். தம்மை மீட்கப் பணமில்லா திருப்பதாகக் கூறினார். அவ்வாறாயின் அவருக்கு விடுதலை கிடைக்காதெனக் கண்டிப்பாகக் கூறப்பட்டது. அபுல் ஆஸ் இதுபற்றித் தம் மனைவிக்குத் தகவல் அனுப்பினார். உடனே ஜைனப் தம் தாயார் கதீதா நாச்சியார் அளித்திருந்த தங்கக் கண்டசரத்தை மீட்புத் தொகைக்காகக் கொடுத்தனுப்பினார். இதை அபுல் ஆஸ் அண்ணலார் முன்பு கொண்டுபோய் வைத்ததும், தம் அருமைப் பிராட்டியாரின் நினைவுகள் மனதில் தோன்றி, உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்தினார்கள். பின்னர் கண்ட சரத்தைப் பெற்றுக் கொள்ளாமலே, அபுல் ஆஸை விடுவிக்கத் தோழர்களின் இசைவைப் பெற்று, மக்கா சென்றதும் ஜைனபைத் தம்மிடம் அனுப்பி வைக்க வேண்டுமென்ற நிபந்தனையின் மீது மருகருக்கு விடுதலை கொடுத்தனுப்பினார்கள். அபுல் ஆஸும் தமது வாக்குறுதிப்படி ஜைனபை, ஜைதிப்னு ஹாரிதாவின் பாதுகாப்பில் மதீனாவுக்கு அனுப்பி விட்டார்.

**காற்று மாறியது**

குறைஷிகள் முஸ்லிம்களிடம் தோற்றுத் திரும்புகிறார்கள் என்ற செய்தியை ஹைஸமான் பின் அப்துல்லாஹ்அல்குஸாயீ கொண்டு வந்த போது மக்காவாசிகள் முதலில் நம்பவேயில்லை. தீர்க்கமாக விசாரித்து உண்மை தெரிய வந்ததும், நகர் முழுவதும் ஒரே கலக்கமும், பீதியும், ஒப்பாரியுமாக ஆகி விட்டது. அதிலும் தங்களின் தலை சிறந்த பிரமுகர்களில் பதினொரு பேர் மடிந்ததைக் கேள்வியுற்றதும் பேரிடி விழுந்தது போன்ற அதிர்ச்சியை அம்மக்கள் அடைந்தனர்.

மரணப்படுக்கையில் கிடந்த பெருமானாரின் பெரிய தந்தையான கொடியோன் அபூலஹப் தோல்விச் செய்தியையும் பெருந்தலைவர்கள் மடிந்ததையும் கேள்வியுற்று உள்ளம் ஒடிந்தான். சில தினங்களில் அவனது ஆவியும் பிரிந்தது. செத்து மூன்று நாட்களாக நாதியற்ற பிணமாகக் கிடந்து, அழுகி, நாற்றமெடுத்து, நீக்ரோ அடிமைகள் தூக்கிக் கொண்டு போய்ப் புதைக்கும் விதியும் கதியும் அடைந்தான். செல்வமும் செருக்கும் பெற்றிருந்த அந்தச் சீரழிந்த சீமான்.

பத்ருப் போரில் தோற்றதால் குறைஷிகள் அதிர்ச்சியடைந்தனர். முஸ்லிம்களுக்கு மதிப்பும் செல்வாக்கும் அதிகரித்தன. நபிகள் கோமானை இறை தூதராக நம்ப மறுத்தவர்கள் இப்போது நம்பத் தலைப்பட்டனர். அன்றியும் இஸ்லாத்தைத் தழுவினால் இறைவனின் உதவியும் போரில் வெற்றியும் கிடைக்கும். அதனால், சீரும் சிறப்புமாக வாழலாம் என்ற எண்ணம் பாலைவன அராபியருக்கிடையிலும் மதீனாவாசிகளுக்கிடையிலும் துளிர்க்க ஆரம்பித்தது. எனவே மக்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் வந்து சேர்ந்து கொண்டிருந்தனர். நபிகள் நாதர் சொற் கேட்டு நடந்தால், இம்மை, மறுமை ஈருலகிலும் நலம் பெறுவோம் என முழுக்க

முழுக்க நம்பினார்கள். ஆதலால் இஸ்லாம், வேகமாகப் பரவுவதற்கு பத்ரு வெற்றி நல்லதொரு வாய்ப்பாக அமைந்ததாகவே கூற வேண்டும்.

இவ்வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்தி முஸ்லிம்கள், தங்களைப் போர்த்திறன் மிக்கவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென இறைவனும் அறிவுறுத்தினான். அண்ணலாரும் அதன் அவசியத்தை நன்கு உணர்ந்தார்கள். காரணம் தோல்வி கண்ட குறைஷிகள் வாளாவிருக்க மாட்டார்கள். முஸ்லிம்களையும் தம்மையும் இல்லாமலாக்கக் கங்கணங்கட்டவே செய்வர் என்பதை எம்பிரான் (ஸல்) அவர்கள் கணித்தறியத் தவறவில்லை.

இப்போது குறைஷிகளின் தனிப் பெருந்தலைவராக அபூசுப்யான் பின் ஹர்ப் விளங்கா நின்றார். மக்களுக்கு அவர் ஆறுதல் கூறி, பழி வாங்கும் பிரயத்தனங்களில் அவர்களது கவனத்தைத் திருப்பி விட்டார். இந்தத் தமது சபதம் நிறைவேறும் வரை மாதரை மருவுவதில்லை என அவரும், “தலைக்கு எண்ணெய் இட்டுக் கொள்ள மாட்டேன், கணவருடன் கலவி செய்யமாட்டேன் என அவரது மனைவி ஹிந்தாவும் பிரதிக்கினை செய்து கொண்டனர். மக்காவாசிகளும் மறுபோருக்குரிய ஆயத்தங்களில் ஈடுபட்டனர். அபூசுப்யான் சிரியா சென்றுவந்த வியாபாரத்தில் கிடைத்த இலாபம் அனைத்தையும் (உஹுத்) இரண்டாம் போருக்கான ஆயத்தங்களுக்குச் செலவிடுவதென முடிவெடுத்து அவற்றில் முனைந்தனர்.

**நச்சு வாளும் நச்சுக் கவிதையும்**

பத்ருச் சண்டையைப் பற்றி உமைர் பின் வஹ்ப், ஸ∴ப்வான் பின் உமையா ஆகிய இருவரும் ஹிஜ்ரில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது உமைர் ஸ∴ப்வானை நோக்கி, என் மனைவி மக்களைக் கவனித்துக் கொள்வதற்கு யாராகிலும் பொறுப்பேற்றுக் கொண்டால் நான் மதீனா சென்று, என் கையிலிருக்கும் இந்த நஞ்சு துவைக்கப்பட்ட வாளால் காதோடு காதாகச் சொன்னான். அது கேட்ட ஸ∴ப்வான், அப்பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறினான். உடனே உமைர் மதீனா புறப்பட்டுச் சென்றான். அங்கு அவனை ஒற்றன் எனச் சந்தேகித்துக் கைது செய்து திருத்தூதர் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். வந்த காரணத்தை விசாரித்தபோது “என் மகன் தங்களிடம் சிறைப்பட்டுள்ளான்! அவனை மீட்டுச் செல்வதற்காக வந்தேன்” எனத் தழுதழுத்த குரலில் பதிலலித்தான் அது கேட்ட அண்ணலவர்கள் “இல்லை, நீர் நம்மைக் கொல்லும் நோக்கில் வந்துள்ளீர், உமது இந்த வாள் நஞ்சு தோய்க்கப்பட்டுள்ளது அல்லவா?” என வினவியவர்களாய் உமைருக்கும் சப்வானுக்கும் இடையில் நடந்த உரையாடலை முற்றாக விவரித்தார்கள். உமைர் திக்பிரமையடைந்தவராக அக்கணமே இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமானார். பின்னர் உமைரின் முயற்சியால் மக்காவில் வாழ்ந்த ஒரு தனிக்கூட்டத்தினர் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர்.

இது சமயம் அவ்ஸ் கோத்திரத்தாரில் பெருமானாரை எதிர்ப்பவர்களில் ஒருவரான மர்வான் என்னும் பிரமுகருக்க அஸ்மா என்றொரு புத்திரி இருந்தாள். இவள் கவிதைகள் புனைவதில் கெட்டிக்காரி, மதீனாவாசிகள் மதி கெட்ட தனமாக அறிமுகமில்லா அந்நியர் ஒருவரின் பேச்சில் மயங்கித் தங்களின் பிரமுகர்களைப் பத்ருப் போரில் காவு கொடுத்து விட்டனர் எனத் தூஷணிப்பாகக் கவிதை பாடினாள். அதை மக்கள் பலர் பாடக்கேட்ட முஸ்லிம் ஒருவர் ஆத்திரமுற்றவராய் ஒரு நள்ளிரவு

அஸ்மாவின் வீட்டினுள் நுழைந்து அவளைக் கொலை செய்து விட்டார். இதன்பின் இஸ்லாத்தையும் இறை தூதர் அவர்களையும் நிந்தித்துப் பாடுவது நின்று விட்டது. எதிர்ப்பிரச்சாரத்தை முளையிலே கிள்ளி எறிய வேண்டுமென்பதை ஏந்தல் நபியவர்கள் நன்கறிந்திருந்தார்கள்.

மதீனாவில் நாடோடி அராபியனுக்கும் யூதப் பெண்ணுக்கும் பிறந்த கஅப் பின் அஷ்ரப் என்னும் பெயர் பெற்ற கவிஞன் ஒருவன் இருந்தான். ஆனால் தொழும் திசையைக் க.்.பாவாக மாற்றிய போது யூத சம்பிரதாயத்தைப் பெருமானார் கை நழுவ விட்டதாக கஅப் காழ்ப்புக் கொண்டான். பத்ரு வெற்றி அவனுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது. எனவே, அவன் மக்கா சென்று முஸ்லிம்களுக்கு விரோதமான கவிதைகள் புனைந்து குறைஷிகளைப் போருக்குச் செல்லுமாறு தூண்டினான். இவனுக்கு எதிர்ப்பாட்டுக்கள் புனையுமாறு ஹஸ்ஸான் இப்னு தாபித் என்பாருக்குப் பெருமானார் கட்டளையிட்டார்கள். அதன்படி ஹஸ்ஸான் குறைஷிகளையும், கஅபையும் கிண்டல் செய்து கவிதைகள் புனைந்து பிரசித்தப்படுத்தினார். இவரது கவிதைகள் குறைஷிகளின் மனதைப் பெரிதும் புண்படுத்தியதால் கஅப் மக்காவிலிருக்க மனமில்லாது மதீனாவுக்குத் திரும்பினான். இங்கும் அவன் முன்போல் விஷமத்தனமான கவிதைகளைப் புனைந்து தள்ளினான். இதனால் ஆத்திரங்கொண்ட முஹம்மத் பின் மஸ்லமாவும் ஸில்கான் பின் ஸலமாவும் மற்றும் மூவரும் சென்று ஓரிரவில் அவனைக் கொலை செய்து விட்டனர்.

**பனூ கைனுகா யூதர்கள்**

மதீனா வாழ் யூதர்கள் பனூ கைனுகா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அருகாமையில் பலமான கோட்டைகள் கட்டிக் கொண்டு அவற்றில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆற்றல் மிக்கவராயும் வீரம் செறிந்தவர்களாயும் விளங்கினர். போர்த்தளவாடங்களும் இவர்களிடம் அதிகமிருந்தன. பத்ரு வெற்றிக்குப் பின் பெருமானார் இக்கோத்திரத்தார் வசிக்குமிடம் சென்று தலைவர்களை அணுகி அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். ஆனால் பெருமானாரை அவர்கள் அலட்சியப்படுத்தி நடந்து கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் மதீனாவில் இருந்த கைனுகா யூதர்கள் வியாபாரம் செய்யும் கடை வீதிக்கு முஸ்லிம் இளம்பெண் ஒருத்தி சாமான் வாங்கச் சென்றாள். அங்கொரு கடையில் அவள் நாற்காலியின் மீது உட்கார்ந்திருந்த போது குறும்புக்கார யூதன் அப்பெண்ணின் அங்கியின் (கவுன்) பின்புற விளிம்பை அவள் அறியா வண்ணம் மேலே தூக்கித் தோள் பட்டையருகே ஊசியால் குத்தி வைத்து விட்டான். வந்த வேலையை முடித்துக் கொண்டு அப்பெண் புறப்பட எழுந்தபோது அவளது ஆடை அலங்கோலமாய் இருப்பதைக் கண்டு அருகில் நின்ற யூதர்கள் கேலிச் சிரிப்புச் சிரித்தனர். விஷயமறிந்து அம்மங்கை நாணம் மேலிட்டவளாய் வீறிட்டுக் கத்தினாள். இப்பொழுது முஸ்லிம்களின் கைவலுப்பெற்றிருப்பதால், மற்றவர் தங்களைக்

குத்தலாகப் பேசுவதையோ, கேலி கிண்டல் செய்வதையோ அவர்கள் முன்போல் பொறுத்துக் கொள்ளத் தயாராயில்லை. எனவே, இச்சமயம் அவ்வழியே சென்ற முஸ்லிம் ஒருவர் விஷயமறிந்து, குறும்பு செய்த அந்த யூதனைத் தாக்கியதில் அவன் இறந்து விட்டான். அதைப் பார்த்த அந்த யூதனின் சகோதரர்களும் மற்ற யூதர்களும் சேர்ந்து பதிலுக்கு அந்த முஸ்லிமைத் தாக்கிக் கொன்று விட்டனர்.

இந்நிகழ்ச்சி பற்றி கேள்வியுற்ற எம்பெருமான் நபிகள் திலகம் அவர்கள் யூதர்களை எச்சரித்து வருமாறு ஆளனுப்பினார்கள். அங்கு சென்றவரிடம் யூதர்கள், மாநபியவர்களை மதிப்பற்ற முறையில் பேசி, பெருமானாருடன் செய்து கொண்ட உடன்பாட்டை இனிப் பேணி நடக்க முடியாதென்றும், சண்டை செய்யத் தயாராயிருப்பதாகவும் திமிராகப் பதில் கொடுத்தனுப்பினர். இதனால், கைனுகா யூதர்களைக் கட்டுப்படுத்தி ஆக வேண்டிய ஓர் கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது. ஆதலால், பெருமானார் முஸ்லிம் வீரர்களை அழைத்துக் கொண்டு ஹிஜ்ரி 2, ஷவ்வால் மத்தியில் கைனுகா யூதர்கள் வசித்த கோட்டையைச் சென்று முற்றுகையிட்டார்கள். முற்றுகை பதினைந்து நாட்கள் நீடித்தது. நயவஞ்சகன் அப்துல்லாஹ் இப்னு உபையோ அல்லது மற்றவர்களோ வாக்களித்தபடி யஹூதிகளுக்கு உதவ முன்வரவில்லை. இறுதியில் அவர்கள் மனமொடிந்து போய்ச் சரணடைந்தனர். மதீனாவைக் காலி செய்து கொண்டு வெளியேறி விட வேண்டுமென்னும் நிபந்தனையின் மீது யஹூதிகளின் கோரிக்கை அங்கீகரிக்கப் பெற்றது. அவ்வாறே அவர்கள் காலி செய்து சிரியா எல்லைக்கு அருகாமையில் போய்க் குடியேறினார்கள். இவர்கள் மொத்தம் 700 பேர் எனச் சொல்லப்படுகிறது. இதன் பயனாக முஸ்லிம்களுக்குக் கோட்டையும் பல வீடு வாசல்களும், ஆயுதங்களும் கிடைத்தன. இதனால் அகதிகளான முஹாஜிரீன்களுக்குச் சில வசதிகளும் பொருட்களும் கிடைக்கலாயின. இது பத்ருப் போருக்குப் பின் ஒரு மாத காலத்திற்குள் முஸ்லிம்களுக்குக் கிடைத்த மற்றொரு மகத்தான வெற்றியாகும்.

**மாவுச் சண்டை**

இதற்குப் பின் சுமார் இரண்டு மாதங்கள் வரை மதீனாவில் கொந்தளிப்புகள் அடங்கி மக்கள் சற்று நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். இப்போது அபூசுப்யான், தாம் எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்றவும் தம் மனைவி ஹிந்தாவின் ஓயாத நச்சரிப்பிலிருந்து விடுபடவும், மக்கா குறைஷிகளுக்கு நம்பிக்கையூட்டும் பொருட்டும், இரு நூறு குறைஷி வீரர்களை அழைத்துக் கொண்டு மதீனாவுக்குச் சமீபமாக வந்து ஆங்கு பனூ நதீர் கோத்திரத்தைச் சேர்ந்த தலைவன் ஒருவனைச் சந்தித்தார். இவனது பெயர் ஸல்லாம் பின் மிஷ்கம் என்பதாகும். அபூசுப்யான், இவன் மூலம் மதீனாவின் நிலவரங்களைப் பற்றி விசாரித்தார். அவற்றிலிருந்து தாம் நினைத்து வந்திருக்கும் காரியத்தை நிறைவேற்ற முடியாதெனக் கண்டு மக்காவுக்குத் திரும்பி செல்ல முடிவு செய்தார். எனவே, இரவை அவ்விடத்தில் கழித்து விட்டு அதிகாலையில் எழுந்து, மதீனாவுக்கு வடகிழக்கில் அல்உறைது என்னும் இடத்திலிருந்த தானிய வயல்களில் இரண்டொன்றுக்கு நெருப்பு வைத்தார். விவசாயிகளின் வீடுகள் இரண்டு, மூன்றைத் தீக்கிரையாக்கினார். இரு அன்ஸார் விவசாயிகளை வெட்டிக் கொன்றார். இவ்வளவையும் நடத்தி விட்டு மக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

இது விவரங்கள் பெருமானாருக்குத் தெரிய வந்தன. 200 முஸ்லிம் வீரர்களை அழைத்துக் கொண்டு கர்கரத்துல் குத்ர் வரை அபூசுப்யானைத் துரத்தி பின் தொடர்ந்தார்கள். முஸ்லிம்கள் பின் தொடர்ந்து விரட்டி வருகிறார்களென்பதை அறிந்த அபூசுப்யானும் அவர் ஆட்களும் தங்களின் குதிரைகளை கண வேகத்தில் செலுத்திப் பறந்தனர். குதிரைகளின் வேகத்தைத் துரதப்படுத்துவான் வேண்டி அவற்றின் மீதிருந்த சுமைகளைக் கீழே தள்ளி விட்டுச் சென்றனர். அச்சுமைகளில் முக்கியமாக

உணவுக்குக் கொண்டு வந்திருந்த கோதுமையும் கடலையும் சேர்த்து வறுத்தரைத்த மாவு மூட்டைகளிலிருந்தன. பின் தொடர்ந்த முஸ்லிம்கள் அவற்றைக் கைப்பற்றிக் கொண்டு ஐந்து தினங்களுக்குப் பின் மதீனா திரும்பினார்கள். எனவே, தான் முஸ்லிம்கள், இச்சம்பவத்தை “கஸ்வா அஸ்ஸவீக்” (மாவுச் சண்டை) என அழைக்கலாயினர். இது ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு நிகழ்ந்தது.

முஸ்லிம்களால் இப்படி அடிக்கடி நேரும் தாக்குதல்களால் மக்கா குறைஷிகளின் வியாபாரங்கள் மந்தமடைந்து விட்டன. மக்காவிலிருந்து சிரியாவுக்கு கடற்கரை ஓரமாக வியாபாரத்திற்குச் செல்வது இப்போது முன் போல் எளிதானதாயில்லை. அந்த வழி நெடுகிலும் அண்ணலார் அவர்களுடன் தொடர்பு உள்ள, உடன்படிக்கைகள் செய்து கொண்டுள்ள, அவர்களுக்கு கட்டுப்பட்ட நாடோடி அராபியர்கள் வசித்து வந்தனர். எனவே, இதற்கென்ன செய்யலாம் என்பது பற்றி குறைஷிகள் ஆலோசித்தனர். முஸ்லிம்களின் தாக்குதல்களுக்கு இலக்காகாது தவிர்ந்து கொள்வதாயின், கடற்கரைப் பாட்டையை கைவிட்டு கிழக்குப் பக்கமாக இராக் செல்லும் பாதையில் சரக்குகளை அனுப்புவதே பாதுகாப்பானது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்த யோசனைக் கிணங்க சரக்குகளைச் சேகரம் செய்து கொண்டு சப்வான் என்பவரின் தலைமையில் குறைஷிகளின் வர்த்தகக்கூட்டம் ஒன்று புறப்பட்டது. இதில் வெள்ளிக்கட்டிகளையும் உலோகத்தாலான பாத்திரங்களையும் மிகுதமாகக் கொண்டு சென்றனர். முஸ்லிம்களின் பிடியில் சிக்காத பாட்டையொன்றில் பத்திரமாக நடத்திச் செல்வதாக உறுதி கூறி பனூ பக்கர் வகை புராத் பின் ஹய்யான் என்ற வழிகாட்டி ஒருவர் அவர்களை அழைத்துச் சென்றான்.

இவ்வர்த்தகக் கூட்டம் செல்வதை மதீனாவுக்கு வந்த யூதன் ஒருவன் நபிகளாரிடம் வந்து தெரிவித்தான். உடனே ஜைது பின் ஹாரிதா தலைமையில் நூறு வீரர்களை அனுப்பி அக்கூட்டத்தை வழி மறிக்கச் சொன்னார்கள். அவர்கள் அல்சுரதா என்ற இடத்தில் குறைஷிகாரவானை வளைத்துப் பிடித்தனர். அவர்களிடமிருந்து ஜைது ஒரு லட்சம் திர்ஹங்கள் மதிப்புள்ள பொருள்களைக் கைப்பற்றி இருவரைச் சிறை பிடித்துக் கொண்டு மதீனா வந்து சேர்ந்தார். மற்றவர்கள் தப்பியோடி விட்டனர்.

பாத்திமா, ஹப்ஸா, உம்மு குல்தூம் திருமணங்கள் பத்ருப் போருக்கும் இனி நடக்கவிருக்கும் உஹதுப் போருக்கும் இடையில் மூன்று முக்கிய திருமணங்கள் மதீனாவில் நடைபெற்றன.

அபூதலிபின் புதல்வர் அலீ அவர்கள் பெருமானாருக்குப் பெரிய தந்தையின் மகன் என்ற முறையில் தம்பியாவார். அலீ அவர்களுக்கு இப்போது 24 வயதாகிறது. பாத்திமா நாச்சியார் நபிகள் பிரானின் கடைசிப் புதல்வி, அவருக்கு 19வயது நடைபெறுகிறது. அலீ அவர்கள் ஹலரத் அபூபக்கர், உமர் இருவரையும் அணுகிப் பாத்திமாவைத் தமக்கு மணமுடித்துத் தருமாறு பெருமானாரிடம் பெண் கேட்கச் சொன்னார்கள். இருவரும் அண்ணலாரை அணுகிக் கேட்ட போது இறைவனின் நாட்டத்தை எதிர்பார்த்தவர்களாக “யோசிப்போம்” எனக் கூறியனுப்பினார்கள்.

சில தினங்களுக்குப் பின் ஒரு நாள் பெருமானார் ஹலரத் அபூபக்கர், உமர் உதுமான், அலீ இவர்களை அழைத்து இறைவனின் நாட்டத்திலும் அலீ-பாத்திமா திருமணம் நிகழவேண்டுமென்றிருப்பதாக அறிவித்து, மஹராக அலீ எவ்வளவு தரவிருக்கிறார் என வினவினார்கள். அதற்கு அலீ தம்மிடம் ஒரு குதிரையும், ஒரு வாளும், இரு கவசங்களும், ஆட்டுத்தோல் ஒன்றும் போர்வை ஒன்றும் இருப்பதாகக் கூறினார். மற்றப் பொருட்களெல்லாம் அலீ அவர்களுக்கு அத்தியாவசியமானவை எனக் கருதிய ஹலரத் உத்மான் அவர்கள் அவரது இரு கவசங்களில் ஒன்றைத் தாம் எடுத்துக்கொண்டு அதன் கிரயமாக 500 திர்ஹங்களைக் கொடுத்தார்கள். உண்மையில் அதன் பெறுமதி 50 திர்ஹங்களேயாகும். பெருமானார் அப்பணத்தைப் பெற்று ஹலரத் பிலாலிடம் கொடுத்து ஒரு பாதிக்கு மணவிருந்துக்கான சாமான்களும் மறுபாதிக்குக் குடித்தனத்துக்கான சீர் வரிசைப் பொருட்களும் வாங்கி வருமாறு பணித்தார்கள். அவ்வாறே ஹலரத் பிலால் கடைத்தெருவுக்குச் சென்று விருந்துக்கான சாமான்களும் சீர்வரிசைப் பொருட்களாக மூங்கில் கட்டில் ஒன்றும், திரிகை ஒன்றும், மண்குடங்கள் இரண்டும் வாங்கி வந்தார். திருமணம் மிக்க எளிய இனிய முறையில் நபிகள் கோமான் அவர்களால் நடத்தி வைக்கப் பெற்றது.

இன்றைய இஸ்லாமியத் திருமணங்கள் பல, ஐயாயிரம், பதினாயிரம், இருபதினாயிரம், ஐம்பதினாயிரம் என ஆண் மஹர் (சீதனம்) கொடுத்து மிக்க ஆடம்பரமாக நடத்தப்படுகின்றன. இது இஸ்லாத்தின் எளிய ஆடம்பரமற்ற தன்மைக்கு முற்றிலும் முரணானது - ஹராமானது – என்பதை ஏனோ நம் முஸ்லிம் சகோதரர்கள் உணர்கிறார்களில்லை! இது பற்றி நமது “மனோகரமான மணவாழ்க்கை” நூலில் விரிவாக வரைந்துள்ளோம்.

பாத்திமா நாச்சியாரின் திருமணம் ஹிஜ்ரி 2ம் ஆண்டு துல்ஹஜ் பிறையில் கி.பி. 624 ஜூன் மாதம் நடைபெற்றது. ஓராண்டு கழித்து, ஹிஜ்ரி 3ம் ஆண்டு ரமளான் 15ம் நாள் பெருமானாரின் முதல் பேரராக இமாம் ஹஸன் (ரலி) பிறந்தார்கள். ஹிஜ்ரி 5ம் ஆண்டு ஷஃபான் பிறை 5ல் இமாம் ஹுஸைன் (ரலி) பிறந்தார்கள்.

ஹலரத் உமர் அவர்களின் புத்திரி ஹப்ஸாவின் கணவர் குனைஸ் பின் ஹுத்ஃபா, பத்ருப் போரில் காயமடைந்து சில தினங்களில் உயிர் நீத்ததின் காரணமாக அவ்வம்மை யார் விதவையானார். ஹப்ஸாவுக்கு அப்போது இருபத்தி இரண்டு வயது. இளம் வயதினரான தம் மகளுக்கு ஹலரத் உமர் மறுமணம் செய்விக்க விருப்பங்கொண்டார். ஹலரத் உதுமான், அபூபக்கர் இருவரையும் அணுகித் தம் மகளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார்கள். தந்தையைப் போல் மகளும் முன்கோபி என்ற காரணத்தால் ஹலரத் உதுமான் முதலில் “யோசிப்போம்” எனக் கூறிப் பின் மறுத்துவிட்டார்கள். ஹலரத் அபூபக்கர் எதுவும் கூறாது மௌனம் சாதித்துவிட்டார்கள். இது ஹலரத் உமர் அவர்களுக்கு அளவிலா வருத்தத்தைக் கொடுத்தது. விஷயம் தெரிந்து அண்ணலார் ஹலரத் உமர் அவர்களை அழைத்து, “உமரே! உம் மகளுக்கு உதுமானைப் பார்க்கிலும் நல்ல மாப்பிள்ளை ஒருவரைப் பார்க்க வேண்டும். அதுபோல், உதுமானுக்கும் உம் மகளைவிடச் சிறந்த பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும்” என்று ஆறுதல் மொழி பகர்ந்தார்கள். ஹலரத் உமர் அதன் உட் பொருளை விளங்காது திகைத்து நின்றார்கள். அப்போது திருத்தூதர் அவர்கள், ஹப்ஸாவைத் தாங்களே மண முடித்துக் கொள்வதாகவும்,

உதுமான் அவர்களுக்குத் தங்களின் மகள் உம்மு குல்தூமை மணமுடிக்க இருப்பதாகவும் விளக்கம் செய்தார்கள். ஹலரத் உமர் அதனை மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஏற்றார்கள். இரு திருமணங்களும் இனிதே நடந்தேறின. பெருமானாரின் இந்நன்னோக்கமறிந்தே தாம் மவுனம் சாதித்ததாக ஹலரத் அபூபக்கர் அவர்கள் பின்னர் அவர்களுக்கு விளக்கினார்கள். இத்திருமணங்கள் பாத்திமா நாச்சியாரின் திருமணத்திற்குப் பின் ஐந்து மாதங்கள் கழித்து கி.பி. 624 நவம்பரில் நடைபெற்றன.

## குறைஷிகளின் மறு ஆயத்தம்

சப்வான் தலைமையில் சென்ற வர்த்தகப் பொருட்களை ஜைதுவிடம் பறிகொடுத்த குறைஷிகள், இனி முஸ்லிம்களை முறியடித்தாலல்லாது தங்கள் வியாபாரத்தைச் சீர்படுத்த முடியாதென்பதை நன்கு உணரலாயினர். தற்பெருமையும் தன்மானமும் கொண்ட குறைஷிகள் பத்ருப் போர்க்களத்தில் தோற்றுவிட்டதால் இனி அவர்கள் கையைக் கட்டிக் கொண்டு வாளாவிருக்கமாட்டார்கள் என்பதைப் பெருமானாரும் முஸ்லிம்களும் நன்கறிந்திருந்தனர். எனவே இரு தரப்பிலும் போருக்கான ஆயத்தங்கள் நடைபெறலாயின.

குறைஷிகள் மதீனாவைத் தாக்க வருகிறார்களென்ற வதந்திகள் அடிக்கடி நபிகள் பிரானுக்கு எட்டிக் கொண்டிருந்தன. இது சமயம் பெருமானாரின் சிறிய தந்தை அப்பாஸ் இஸ்லாத்தை தழுவி மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் மக்கா நிலவரத்தை அடிக்கடி ஆட்கள் மூலம் அண்ணலாருக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். கி.பி. 625 ஜனவரியில் குறைஷிகள் மதீனாவைத் தாக்குவதற்கு உறுதியான ஏற்பாடுகள் செய்வது அப்பாஸ் அவர்களுக்குத் தெரிய வந்தது. உடனே குதிரை வீரன் ஒருவனிடம் முத்திரையிட்ட மடல் ஒன்றைப் பெருமானாரிடம் சேர்ப்பிக்குமாறு கொடுத்தனுப்பினார். அந்தக் குதிரை வீரன் பெருமானாரை மதீனாவில் காணாது குபாவுக்குத் திரும்பி அங்கு அவர்களைப் பள்ளியின் முன்பு சந்தித்து மடலைக் கொடுத்தான். கடிதத்தை உபை இப்னு கஅப் என்பவரிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னபோது அவர் “மூவாயிரம் குறைஷிகள் மதீனாவைத் தாக்க வருகிறார்கள்” என்ற விபரத்தை உரக்கப் படித்து விட்டார். “இந்தச் செய்தி இரகசியமாக இருக்கட்டும்” எனத் திருத்தூதரவர்கள் தம்மைச் சுற்றி இருந்தவர்களிடம் கூறியிருந்தும் விஷயம் எப்படியோ யஹூதிகளுக்கும் மற்றவர்களுக்கும் தெரிந்து விட்டது.

குறைஷிப்படையில் கவசம் தரித்த வீரர்கள் 800 பேர் குதிரை வீரர்கள் 200 பேர், ஒட்டகை, காலாட் படையினர் 2000 பேர் ஆக மொத்தம் 3000 பேர் இருந்தனர். இதன்னியில் வட்டப்பறை முழக்கி பாட்டுப்பாடி வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கென அபூசுப்யானின் மனைவியர் இருவரும் மற்றும் பதின்மூன்று பெண்களும் குதிரைப் படையுடன் வந்திருந்தனர். பத்ருப் போரில் தன் தந்தை உத்பாவைக் கொன்ற ஹலரத் ஹம்ஸா அவர்களைப் பழி வாங்கும் எண்ணத்தில் ஹிந்தா வந்திருந்தார். மதீனாவுக்கு வடக்கே ஐந்து மைல் தொலைவிலுள்ள உஹத் மலைச் சாரலிலுள்ள வாதியுல்பதன் என்னும் பள்ளத்தாக்கில் குறைஷிகள் வந்து கி.பி. 625 மார்ச் 21ம் தேதி வியாழக்கிழமை பாளையம் இறங்கினார்கள்.

## கனவும் கருத்துப் பரிமாற்றமும்

உளவு அறியச் சென்ற முஸ்லிம் ஒற்றர்கள் திரும்பி வந்து குறைஷிகள் உஹுதில் பாளையமிறங்கி இருப்பதையும், வீரர்களின் எண்ணிக்கை விபரங்களையும் பெருமானாரிடம் கூறினர். அவ்ஸ், கஸ்ரஜ் தலைவர்களும் முஹாஜிர் தோழர்களும் உருவிய வாட்களுடன் நின்று பெருமானாரைக் காவல் புரிந்தனர். அன்றிரவு அண்ணலாருக்குச் சரியான தூக்கமில்லை. பலவிதக் கனவுகள் கண்டார்கள்.

பொழுது விடிந்தது. பள்ளியின் முற்றத்தில் முஸ்லிம் பிரமுகர்களையும் யஹூதிகளையும் ஒன்று கூட்டி குறைஷிகளை எவ்வாறு எதிர்க்கலாம் என்பது பற்றி ஆலோசனை நடத்தினார்கள். கடந்த இரவு தாங்கள் கண்ட கனவின்படி, தங்கள் திருமேனியில் சிறியதொரு இழப்பும், காயங்களும் ஏற்படலாமென்றும், வீரர்களில் பலர் வீர மரணம் எய்தக் கூடுமென்றும் பகைவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் எனவும், வியாக்யானித்து மதீனாவுக்குள் இருந்து கொண்டே போர் செய்தால், நன்மை விளையுமெனவும், ஆகவே, பெண்களையும் குழந்தைகளையும் பக்கத்திலுள்ள கோட்டைகளில் கொண்டு போய் வைத்துப் பாதுகாப்புச் செய்து விட்டுப் பகைவர்களை மதீனாவுக்குள் புகவிட்டுத் தாக்கினால் வெற்றி இலகுவில் கிட்டுமென்பது தமது கருத்தாகுமெனவும் எடுத்தக் காட்டினார்கள். அங்கிருந்த அனுபவம் முதிர்ந்த பெரியவர்களும் அப்துல்லாஹ் இப்னு உபையும் தங்களின் பழைய அனுபவங்களை ஆதாரமாக எடுத்துக் கூறி பெருமானாரின் கருத்தை முற்றாக ஆதரித்தனர்.

ஆனால், பத்ருப் போரில் பங்கு பெறும் பெரு வாய்ப்புப் பெறா அன்சாரி வாலிபர்கள், அப்துல்லாஹ் இப்னு உபையின் வார்தைகளில் ஏமாந்து, இந்நற்றருணத்தைக் கை நழுவவிட மனமில்லாதவர்களாய், மதீனாவுக்கு வெளியே சென்று யுத்தம் செய்வதற்கு மனந்துடித்தனர். அன்றியும் மதீனாவுக்குள் இருந்து கொண்டு போர் செய்வது கோழைத்தனம் எனக் கருதினர். எனவே, அவ்வாலிபர்கள் பெருமானாரவர்களிடம் “நாயகமே! மதீனா நகருக்குள் நாம் பதுங்கிச் சண்டை செய்தால், எதிரிகள் நம்மை கோழைகளெனப் பழிப்பார்கள். நம் தோட்டந்துரவுகளைப் பகைவர் அழிப்பதை நாம் நகருக்குள்ளிருந்து பார்த்துக் கொண்டிருப்பது நமக்குப் பெருமை அளிக்காதன்றோ! அதனால், மதீனாவைவிட்டும் வெளியே சென்று, பகைவருடன் போரிட்டு அவர்களை அழிப்போம். பத்ரில் நமக்கு வெற்றியைத் தந்த இறைவன் நிச்சயமாக உஹுதிலும் நமக்கு வெற்றியை அளிப்பான்” என உணர்ச்சி ததும்பக் கூறினர். முஹாஜிரீன்களில் சிலருக்கு மதீனாவுக்கு வெளியே சென்று போர் செய்வதுதான் கௌரவமானது என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

“(நபியே!) அல்லாஹ்வின் அருள் காரணமாகவே நீர் அவர்களிடம் தயவாக நடந்து கொள்கிறீர். நீர் கடினமும் கடுகடுப்புமான உள்ளம் படைத்தவராயிருப்பின் உம்மைச் சூழ்ந்து இருக்காது அவர்கள் கலைந்து சென்றிருப்பர். எனவே, அவர்களின் குறைகளைப் பொறுத்துக் கொள்வதுடன் அவர்களுக்காக (இறைவனிடம்) பிழை பொறுக்க வேணடுவீராக! அன்றியும், காரியங்கள் செய்வதில் அவர்களுடன் ஆலோசனை கலப்பீராக! நீர் ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானித்துவிட்டால், அதன் முழுப் பொறுப்பையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவீராக. நிச்சயமாக இறைவன் தன்னை நம்புவோரை நேசிக்கிறான். (3:159)

**பெருமானாரின் போர்க் கோலம்**

மதீனாவுக்கு வெளியே போர் புரியப் பலர் ஆசைப்படுவதைக் கண்டு அண்ணலாரும் அதற்கு இணங்கினார்கள். ஹிஜ்ரி 3ம் ஆண்டு ஷவ்வால் பிறை 5 வெள்ளிக்கிழமை கி.பி. 625 மார்ச் 22ம் தேதி ஜும்ஆத் தொழுகைக்குப் பின் நபிகள் பிரான் தங்கள் இல்லம் சென்று கவசமணிந்து ஆயுத பாணியாக வெளிவந்தார்கள். பெருமானார் போர்க் கோலம் பூண்டு வந்ததைக்கண்டு மதீனாவுக்கு வெளியே போர் செய்யவேண்டுமெனக் கருதியவர்கள், "திருத்தூதரவர்களே! தங்களின் கருத்துக்கு மாற்றமாக நடக்க நாங்கள் விரும்பவில்லையாதலால், மதீனாவுக்குள் இருந்து கொண்டே நாங்கள் போர் புரியச் சித்தமாயிருக்கிறோம்" என வேண்டினர். அதற்கு அண்ணலார் "உங்கள் கருத்தை நீங்கள் மாற்றிக் கொண்டாலும் சரி, மாற்றிக் கொள்ளாவிடினும் சரி, கவச மணிந்து ஆயுதபாணியாக வெளிவந்த பின்னர் எதிரிகளைப் போர்க்களத்தில் சந்திக்காது, அதைக் கழற்றுவதென்பது ஒரு தீர்க்கதரிசிக்கு ஏற்றதல்ல," எனக்கூறி மறுத்துவிட்டார்கள்.

இவ்வாறு கூறியவர்களாய்த் தங்களுடன் ஓராயிரம் போர் வீரர்களையும் அழைத்துக் கொண்டு சத்தியத் திரு நபியவர்கள் தங்களது 'ஸ்காப்' என்னும் அசுவத்தின் மீதமர்ந்து உஹுது நோக்கிப் போர்மீது சென்றார்கள். சிறிது தூரத்தைக் கடந்த பின் ஷய்கான் என்னுமிடத்தில் தங்கள் சேனையின் அணிவகுப்பைப் பார்வையிட்டார்கள். ரபீஆ இப்னு கதீஜ், ஸம்ரா இப்னு ஜுன்துப் என்ற பதினைந்து வயதே அடைந்துள்ள சிறுவர்கள் போரிடத் தகுதியில்லா இளவல்களாய் இருந்ததால் அவ்விருவரையும் மதீனா திரும்புமாறு பணித்தார்கள். ஆனால் அவர்களோ தாங்கள் தகுதி படைத்தவர்கள் எனவும், மற்றவர்களுக்கு ஈடாகப் போரிடும் உடலுறுதி தங்களுக்கு இருப்பதாகவும் ஆர்வங்காட்டி, வாதாடி, மன்றாடியதின் பேரில் அவர்களைப் படையில் வர அனுமதித்தார்கள். அதுபோல கைதமா அபூஅஸத் என்ற முதியவரும், பத்ருப் போரில் பங்குகொண்டு வீர சுவர்க்கம்

அடைந்த தம் புத்திரருக்குக் கிடைத்த பாக்கியம் தமக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமெனக் கோரி அவரும் படையில் வர அனுமதிக்கப்பட்டார். உஸாமா பின ஜைத், அப்துல்லா பின் உமர் அல்கத்தாப் மற்றும் சிலர் 15க்கும் குறைந்த வயது டையோராயிருந்தால் அவர்கள் போரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் பின் அகழ்ச் சண்டையில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்களின் படை மதீனாவுக்கும் உஹுத் பள்ளத் தாக்குக்கும் இடையிலுள்ள ஷவ்த் என்னும் இடத்தை அடைந்தபோது, நயவஞ்சகன் அப்துல்லாஹ் இப்னு உபை "பெருமானார், தங்களின் கருத்துப்படி நடவாமல் சிறுவர்கள் சிலரின் வெற்று உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து என்னையும் மற்ற பிரமுகர்களையும் பொருட்படுத்தவில்லை, இதற்காக நீங்கள் ஏன் வீணில் சென்று மடிய வேண்டும்" என்ற நொண்டிச் சமாதானத்தைக் கூறிக்கொண்டு தான் கூட்டி வந்த முந்நூறு பேரையும் படையிலிருந்து பிரித்து மதீனாவுக்குத் திரும்ப அழைத்துச் சென்று விட்டான். இப்னு உபை காலை வாரி விட்டது குறித்து எஞ்சிய எழுநூறு வீரர்களும் சிஞ்சிற்றும் கவலைப்படவோ அல்லது அதைரியமடையவோ இல்லை. மாறாக, அவர்களின் வீரமும் உற்சாகமும் அதிகரித்து நின்றதே தவிரக் குறையவில்லை. முஸ்லிம்களின்

இப்படையில், கவசமணிந்த வீரர்கள் நூறுபேர் இருந்தனர். படை ஷவ்த்தை விட்டுப் புறப்பட்டு வெள்ளிக்கிழமை மாலை உஹதுப் பள்ளத்தாக்கை அடைந்தது.

**படைகளின் அணிவகுப்பு**

இரவு கழித்து மறுநாள் சனிக்கிழமை காலை பஜ்ருத் தொழுகைக்குப் பின் நபிகள் நாதர் அவர்கள் மூவாயிரம் குறைஷி வீர்களை எதிர்த்துப் போர் புரிய வந்துள்ள எழுநூறு வீரர்களைக் கொண்ட தமது சிறிய படையை குன்றை முதுகுப்புறமாக வைத்து அணி வகுத்தார்கள். முஸ்அப் இப்னு உமைர் என்ற வீரரிடம் முஸ்லிம்களின் கொடியைக் கொடுத்துத் தாங்கிப் பிடிக்கச் செய்தார்கள். மற்றும் ஜுபைர் பின் அவ்வாமை குதிரைப் படைத் தலைவராகவும், ஹலரத் ஹம்ஸா அவர்களை கவசமணியாத காலாட் படைக்குத் தலைவராகவும் நியமித்தார்கள். அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் தலைமையில் ஐம்பது வில் வீரர்களை ஒப்படைத்து உஹத் ஐனைன் குன்றிலுள்ள சிறு கணவாய் ஒன்றைச் சுட்டிக்காட்டி, “போரின் வெற்றி தோல்வி ஆகிய எந்நிலையிலும் இந்த ஐம்பது வில் வீரர்களும் அவ்விடத்தை விட்டும் இம்மியும் அசையாது நின்று கண்வாயைக் காக்க வேண்டும்” எனக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார்கள்.

உஹத் பள்ளத்தாக்கின் எதிர்மருங்கில், அரைவட்டமாகக் குறைஷிகளின் பெரும்படை அணிவகுத்து நின்றது. வலீதின் புதல்வர் காலித், சேனையின் வலது பாரிச அணிக்கும் தலைமை தாங்கி நின்றனர். மத்திய பாகத்தில் நின்ற குதிரைப் படைக்கு சப்வான் பின் உமையா தலைமை தாங்கினார். குறைஷிப் படையின் மகா தளபதியாக அபூசுப்யான் விளங்கி நின்றார். ரிசர்வ் படையாக வில் வீரர்கள் சிலரையும் குதிரை வீரர்கள் 200 பேரையும் ஒதுக்கி வைத்தனர்.

அபூசுப்யானின் மனைவி ஹிந்தாவின் தலைமையில் வந்திருந்த பெண்கள் தம்பூரி, வட்டப்பறை முழக்கிக் கொண்டும், ஆடிப்பாடி வீரர்களுக்கு உற்சாகமூட்டிக் கொண்டும் போர்க்களத்தில் இறங்கினார்கள். “அப்துத்தாரின் மக்களே! வீரத்துடன் போர் புரிந்து எதிரிகளைக் கொன்று குவியுங்கள். பெண்களின் காவலர்களே! தைரியத்துடன் போராடுங்கள், எதிரிகளை வெட்டி வீழ்த்துங்கள். அவர்களின் பிணங்களை மலைபோல் குவியுங்கள். விடிவெள்ளியின் மகளிர் நாங்கள். எங்களின் பாதங்கள் பட்டுப் போன்ற கம்பளங்களின் மீது நர்த்தனம் புரிபவையாகும். நீங்கள் வீரதீரத்துடன் போர் புரிந்தால் நறுமணக் கூந்தலையும் பவளமணிக் கழுத்தினையும் உடைய நாங்கள், உங்களை எங்களின் மார்போடணைத்து இன்பம் நல்குவோம் இல்லையேல், உங்களைத் துரும்பாகக் கருதித் தூக்கி எறிவோம்” எனப் பாடி வந்தனர்.

**போர் மூண்டது**

முதன் முதலாக, குறைஷிகள் சார்பில் அபூ ஆமிர் ராஹிப் என்பவர் போர்க்களத்தில் தோன்றினார். இவர் ஒரு கிறிஸ்தவத் துறவி. மதீனாவில் கௌரவத்துடனும் செல்வாக்குடனுமிருந்து வந்தார். அங்கு பெருமானாருக்கு ஏற்பட்ட மேதை மரியாதைகளைக் கண்டு பொறாமையுற்று அங்கிருக்க மனமில்லாதவராய்

மக்காவுக்கு வந்து குறைஷிகளைப் போர் செய்யத் தூண்டிவந்தார். போர்க்களத்தில் தம்மைக் கண்டதும் மதீனாவாசிகள் மாநபியவர்களைக் கைவிட்டுத் தம் பக்கம் வந்து சேர்ந்து விடுவர் எனத் தப்புக் கணக்குப் போட்டு மனப்பால் குடித்தவராய், “என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? நான் தான் அபூ ஆமிர்” என உரத்த சப்தமிட்டுப் பெருமையுடன் மார்த்தட்டி நின்றார். அதற்கு முஸ்லிம் வீரர்கள் “ஆம் ஆம் நீ ஒரு துரோகி என்பதை நாங்கள் நன்றாக அறிவோம்” என ஒரே குரலுடன் கூறினர். இச்சுடு சொற்களைக் கேட்கச் சகியாதவராய் அபூ ஆமிர் வெட்கமடைந்து பின் வாங்கி விட்டார்.

அதன்பின் அபூ ஸஅத் பின் அபூ தல்ஹா என்பவன் குறைஷிகளின் கொடியைத் தாங்கியவனாக முன் வந்தான். அவன் முஸ்லிம்களை நோக்கி,” முஸ்லிம்களே!. என்னைச் சீக்கிரமாக நரகத்திற்கு அனுப்பக் கூடியவரோ, அல்லது என் கையால் சொர்க்கம் புகக்கூடியவரோ உங்களில் யாராவது உண்டோ” எனச் சவால் விடுத்தான். உடனே அலீ அவர்கள் பாய்ந்து அவனை ஒரே வெட்டில் வீழ்த்தினார்கள். அடுத்து, தல்ஹாவின் சகோதரன் உத்மான், முன்னே பாய்ந்து தல்ஹாவின் கொடியைத் தாங்கிப் பிடித்தான். அவனை ஹலரத் ஹம்ஸா அவர்கள் வாளால் வீசி எறிந்தார்கள். அதனைக் கண்ட தல்ஹாவின் மகன் அபூ ஸைது என்பான் தாழும் கொடியை வீழாது காக்க முன் வந்தான். அவனும் ஸஅத் இப்னு அபீ வக்காஸின் வாளுக்கு இரையானான். இவ்வாறு குறைஷிகளின் கொடி வீழ்ந்து மண்ணைக் கவ்வாது காக்க முன் வந்த வகையில் தல்ஹாவின் குடும்பத்தாரில் இரு சகோதரர்களும் ஐந்து புதல்வர்களுமாக மொத்தம் ஏழு பேர் முஸ்லிம்களின் வாளுக்குப் பலியானார்கள். இறுதியாகக் குறைஷிகளின் கொடியை அம்ரா பின்து அல்கமா என்ற பெண் தாங்கி நின்றதாகக் கூறப்படுகிறது.

இப்போது ஒருவருடன் ஒருவர் தனித்து நின்று மோதுவது மாறி இரு பக்கத்து அணிகளும் பொதுப்போரில் ஈடுபட்டன. ஹலரத் அலி, ஹம்ஸா, அபூதுஜானா, ஸீமாக் பின் கரஷா ஆகிய மூவரும் குறைஷி அணிகளின் ஊடே புகுந்து எதிரிகளை வெட்டி வீழ்த்திய வண்ணமிருந்தனர். அபூதுஜானா ஒரு மல்வீரராகப் புகழ் பெற்றவர். ஆற்றலும் துணிச்சலும் மிக்கப் பராக்கிரமசாலி. போர் துவங்குமுன் அண்ணலார், தங்கள் அழகிய வாளின் பெருமையைக் காப்பாற்றக் கூடியவர் யாராகிலும் உண்டா என அறை கூவி அழைத்த போது, நான், நீ எனப் பலர் போட்டியிட்டுக் கொண்டு முன் வந்தனர். ஆனால் பெருமானாரின் அனுக்கிரகம் பெற்ற அந்த “துல்∴பிகார்” வாள் இறுதியில் அபூதுஜானாவின் கைக்கே போய்ச் சேர்ந்தது.

போர்க்களம் இப்போது அமளி துமளிப்பட்டுக் காட்சி அளித்தது. சண்டை மிக உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. பெருமானார் பத்ருப் போர்க்களத்தில் நடந்து கொண்டது போல் பின்னணியில் நில்லாமல், இப்போது குதிரையின் மீதமர்ந்து மின்னல் வேகத்தில் அங்குமிங்கும் பாய்ந்து சென்றார்கள். எங்கு பார்த்தாலும் அண்ணலவர்கள் நிற்பதாகவே வீரர்களின் கண்களுக்குக் காட்சியளித்தார்கள். படைத்தளபதிகளுக்கு நிமிடத்திற்கு நிமிடம் போரின் போக்கை அறிந்து உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹலரத் ஹம்ஸா அவர்களை நேருக்கு நேர் சந்தித்த குறைஷிகள் அனைவரும் மண்ணில் சாய்ந்து மாண்டனரேயல்லாது மீண்டவர் யாருமில்லை. அவர்கள் இரு கரங்களிலும் வாளேந்திப் போரிட்டார்கள். அது போலவே அலி அவர்களும் உற்றார் உறவினர் எனப்பாராது அவ்விக்கிரகத் தொழும்பர்களின் சிரங்களை அரிந்து தள்ளினார்கள். குறைஷிகளின் கொடியைத் தாங்கிப் பிடிக்க முன் வந்தவர்களெல்லாம் முஸ்லிம்களின் வீர வாளுக்கு இரையானார்கள். அக்கொடியும் இப்போது மண்ணில் கிடந்து துவண்டது. அவர்களின் அணியும் சீர்குலைந்து சிதறுண்டது. ஒயிலான பாட்டுகள் வெளிப்பட்ட பெண்களின் வாய்களிலிருந்து இப்போது ஓலமும் ஒப்பாரியும் வெளியாயின. நடனம் புரிந்த கால்கள் இப்போது வெலவெலத்து ஓட்டமெடுத்தன.

**ஆசை அளித்த அபராதம்**

இந்நேரத்தில் முஸ்லிம் வீரர்கள், குறைஷிகளின் அல்லோலகல்லோலத் திற்கிடையே ஊடுருவிச் சென்று அவர்களின் கூடாரங்களுக்குள் புகுந்து சிறைப் பொருட்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டனர். கணவாயைக் காத்து நின்ற முஸ்லிம் வில்வீரர்கள் இதைக் கண்டவுடன் ஆசையால் அறிவை இழந்தனர். குறைஷிகள் தோல்வியடைந்து விட்டதால் இனிக்கணவாயைக் காக்க வேண்டியதில்லை எனக்கருதி விட்டனர். இவர்களின் தலைவரான அப்துல்லா, பெருமானாரின் கட்டளையை அவர்களுக்கு ஞாபகமூட்டி எவ்வளவோ கதறியழைத்தும் அதைக் காதில் வாங்காது, சிலரைத் தவிர மற்றனைவரும், கணவாய்க் காவலைக் கைவிட்டுக் குறைஷிகளின் கூடாரங்களுக்குள் புகுந்து சிறைப்பொருட்களை வாரிக்கட்டத் தலைபட்டனர். கணவாய் காப்பாரற்றுக் கிடக்கிறதென்பதை யுத்த தந்திரமும் நுண்ணறிவும் படைத்த குறைஷிகளின் சேனைப் படைத் தலைவரான காலித் இப்னு வலீதின் கூரிய கண்கள் இமைப் பொழுதில் கவனித்து விட்டன. அவ்வளவு தான், ஒரு வினாடியும் தாமதிக்காது நூறு குதிரை வீரர்களுடன் முஸ்லிம் படையின் இடது அணியைப் பாய்ந்து தாக்கிப் படு வேகமாக முன்னேறிச் சென்று கணவாயை அடைந்தார். அங்கு எஞ்சி நின்ற பத்து முஸ்லிம் வில் வீரர்களையும் வெட்டிச் சாய்த்தார். ஒரு நொடியில் போர்க் காற்று முஸ்லிம்களுக்குப் பாதகமாய் மாறியடிக்கத் தலைப்பட்டு விட்டது.

காலித், முஸ்லிம்களைக் கணவாய்ப் பக்கத்திலிருந்து தாக்குகிறார் என்பதைக் கண்ட குறைஷிகள் ஊக்கமடைந்தவர்களாய் முன்பக்கத்திலிருந்து உக்கிரமாகத் தாக்க முனைந்து விட்டனர். இந்த இருமுனைத் தாக்குதலினால் முஸ்லிம்கள், இடுக்கியுள் அகப்பட்ட எலி போலும் ஆகி விட்டனர். தன் படையுந்தெரியாது மாற்றான் படையும் தெரியாது தத்தளித்தனர். இதன் காரணமாக முஸ்லிம்களின் கையாலேயே சில முஸ்லிம்கள் வெட்டுண்டு கொல்லப்பட்டனர். இக்கொடுமையைப் பின்னர் கேள்வியுள்ள பெருமானார் மட்டற்ற வியாகுலமடைந்தார்கள்.

முஸ்லிம்களின் கொடியைத் தாங்கி நின்ற முஸ்அப் இப்னு உமைர் இப்போது வெட்டுண்டு வீழந்தார். இவர் அண்ணலா அவர்களின் முகச்சாயலுள்ளவர். அப்துல்லாஹ் இப்னு கமீஆ அல் லைத்தி என்ற குறைஷி தான் இவரை வெட்டியவன். முஸ்அப் கீழே சாய்ந்ததும் கமீஆ, தான் பெருமானாரைக் கொன்று விட்டதாக வெற்றிக் களிப்புடன் கூச்சலிட ஆரம்பித்தான். கமீஆவின் கூச்சல் முஸ்லிம்களின் செவிகளில் பட்டவுடன் அவர்கள் குழப்பமும், அதைரியமுங் கொண்டு அங்குமிங்கும் சிதறி ஓடினர். பகைவர்கள் பெருமானாரை நெருங்கினர்.

இச்சந்தடியில் ஹலரத் ஹம்ஸா அவர்களைக் குறி வைத்துத் திரிந்த வஹ்ஷீ என்ற நீக்ரோ அடிமை, ஹிந்தா தனக்கு விடுதலை பெற்றுத் தருவதாகக்கூறிய வார்த்தையில் மயங்கியவனாய் எதிரே வந்த ஹம்ஸா அவர்களைக் குறி பார்த்துத் தன் ஈட்டியை எறிந்தான். எறிந்த ஈட்டி ஹம்ஸா அவர்களின் கொப்புளில் பாய்ந்து முதுகுப்புறமாக வெளி நீட்டியது. வயிற்றில் பாய்ந்த ஈட்டியுடன் வஹ்ஷீயைத் துரத்தினார்கள். ஆனால் அவன் கும்பலில் புகுந்து மறைந்து விட்டான். சிறிது நேரத்தில் ஹலரத் ஹம்ஸா அவர்கள் தங்களின் வீரம் மிக்க இன்னுயிரை இஸ்லாத்திற்காக அர்ப்பணித்து ஏற்றமிகு சுவர்க்கப்பதி புகுந்தார்கள்.

மெல்ல நின்றுநின் றசைந்தசைந்
துணர்வுமே லாட
முளத்தினி லிருத்திக்
கல்லு நன்மொழி வாக்கினி
லடிக்கடி கலிமாச்
சொல்லி வீழ்ந்தனர் போயின
ருறைந்தனர் கவனம்.

\- சீறா

**மானிட அரண்**

முஸ்லிம்கள் அல்லோல கல்லோலப்பட்டு ஓடுவதைக் கண்ணுற்ற அண்ணலவர்கள் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று கொண்டு, "முஸ்லிம்களே! சிதறி ஓடாதீர்கள். அல்லாஹ்வின் தூதன் முஹம்மது இதோ இருக்கிறேன். இங்கே ஓடி வாருங்கள்! இங்கே வாருங்கள்! வீரத்துடன் நின்று போர் புரியுங்கள். வெற்றி அல்லாஹ்வினுடையதாக இருக்கும்", எனக் கூவி அழைத்துக் கொண்டிருந்தார்கள். கஅப் இப்னுமாலிக் என்ற அன்சாரியும் கவசம் அணிந்திருந்த பெருமானார் அவர்களை இனம் தெரிந்து அவர்களருகில் வந்து நின்று கொண்டு சிதறியோடிய முஸ்லிம் வீரர்களைக் கூவியழைத்தார். இவரது கூப்பாட்டையும் கேட்ட முஸ்லிம்கள் பெருமானார் நின்ற இடம் நோக்கித் திரும்பவும் ஓடி வந்தனர். குறைஷிகளும் தங்கள் தாக்குதலை அப்பக்கமாகத் திருப்பித் திருத்தூதரவர்களை அணுக முயன்றனர். ஆயினும், முஸ்லிம் வீரர்கள் மாநபி அவர்களைச் சுற்றிலும் மானிட அரணாக நின்று குறைஷிகளின் தாக்குதலைத் தங்கள் முதுகுகளில் தாங்கிக் கொண்டிருந்தனர். இது எப்படியிருந்ததெனின், ஒருவர் தாக்குண்டு கீழே சாய்ந்தால் உடனே அவ்விடத்தில் மற்றொரு வீரா நின்று அரணைப் பூர்த்தி செய்து விடுவார். இதனைக் கண்டு வியப்புற்ற எம்பிரான் அவர்கள் "இறைவனே! என்னுடைய இனத்தவரை மன்னித்தருள்வாயாக," என உள்ளமுருகி பிரார்த்தித்தார்கள். குறைஷிகளும் முஸ்லிம்களின் ஒப்பற்ற நபி பக்தியைக் கண்டு ஆச்சரியத்துடன் ஆழ்ந்தனர்.

முஸ்லிம்களின் கொடியைத் தாங்கி நின்ற முஸ்அபை வெட்டி வீழ்த்திய அப்துல்லாஹ்அப்னு கமீஅ என்பவனும் அவனது ஆட்களும்தான் இப்போது அண்ணலார் நின்ற இடத்தருகில் வந்து நின்று தாக்கியவர்கள். இவர்கள் அம்பு, வாள், கவண் கற்களைக் கொண்டு தாக்கினர். அதில் உத்பா பின் அபீவக்காஸ் வீசிய ஒரு கல் பெருமானாரின் கீழுதட்டில் பட்டு முன் பல் ஒன்றை சிலர் இரண்டு பற்கள் எனவும் கூறுவர் – உதிர்ந்து விட்டது. இப்னு கமீஅ வீசிய வாள் தாஹா நபியவர்களின்

தலை கவசத்தில் பட்டு அது உடைந்து இரு வளையங்கள் அவர்களின் திருக்கன்னத்தில் பதிந்து கொண்டன. அப்துல்லா இப்னு ஷிஹாப் அல்ஜுஹ்ரி என்பவன் எறிந்த கல் ஒன்று அவர்களது திருநெற்றியைக் காணப்படுத்தி விட்டது. அத்துடன் நில்லாது, இப்னு கமீஅ திருத்தூதரவர்களைக் குறி வைத்துத் தனது வாளையும் வீசி எறிந்தான். இதை அபூதல்ஹா தமது வெறுங்கையால் தடுத்ததில் அவர்கள் விரல்கள் படுகாயமுற்றன.

உம்மு ஸஅத் பின்து ஸஅத் பின் அல் ரபீ என்ற வீராங்கனை கூறுகிறார்: "முஸ்லிம்கள் தோல்வி கண்ட சமயம் நான் பெருமானார் இருந்த இடத்தில் வந்து நின்று கொண்டு எனது வாளாலும் வில்லாலும் மற்ற தோழர்களுடன் அவர்களைக் காத்து நின்றேன். அதில் எனக்கு இப்னு கமீஆவினால் பல காயங்கள் ஏற்பட்டன. நானும் முஸ்அப் பின் உமைரும் அலனைப் பல தடவை தாக்கினோம். எனினும் அந்த அல்லாஹ்வின் எதிரி இரு கவசங்களை அணிந்தவனாக நின்று கொண்டிருந்தான் ."

இத்தருணத்தில் முஸ்லிம்கள் வீரத்துடன் தாக்கி கமீஅவையும் அவனது குறைஷி வீரர்களையும் பின்னடையச் செய்தனர். காயங்களின் அதிர்ச்சியாலும், வேதனையாலும் நபிகள் நாதர் மூர்ச்சித்துக் கீழே சாய்ந்தார்கள். உடனிருந்த அலீயும் தல்ஹா பின் உபைதுல்லாவும் அவர்களைத் தாங்கிப் பிடித்துக் கணவாய்க்கு அருகிலிருந்த பத்திரமான ஒரு உயர்ந்த இடத்தில் கொண்டுபோய்ச் சேர்ந்தனர். அண்ணலார் உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை எனத் தெரிந்த முஸ்லிம்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். இந்நற்செய்தியை ஒருவர் உரக்கக் கூவி மற்ற முஸ்லிம்களுக்குத் தெரியப்படுத்த முயன்றார். ஆனால் நபிகளார் அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தடுத்து விட்டார்கள்.

**அண்ணல் எங்கள் ஆருயிர்**

அண்ணலவர்கள் போர்க்களத்தில் உயிர் நீத்தார்கள் என்ற வதந்தி மதீனாவுக்கும் எட்டிவிட்டது. அது கேட்ட ஆடவரும் பெண்டிரும் பதை பதைத்துக் கொண்டு உஹுது நோக்கி விரைந்தோடி வந்தனர். பெருமானாரின் பிரிய நாயகி ஆயிஷா நாச்சியாரும், பாசத்திருமகள் பாத்திமா நாச்சியாரும், அன்பு அத்தை ஸப்பியாவும் மற்றும் பலரும் கண்ணீருங் கம்பலையுமாகப் போர்க்களம் வந்து சேர்ந்தனர். நபிகள் நாதர் உயிருடனிருப்பதைக் கண்ணால் கண்டு களிபேருவனை எய்தினர். வந்த பெண்களும் மற்றவர்களும் காயமுற்றுக் கிடந்தவர்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தனர். சிகிச்சைகளும் செய்தனர். தைரியமும் உடலுறுதியுங் கொண்ட சில பெண்கள் போர்க் களத்திலிறங்கி யுத்தமும் செய்தனர்.

நபிகள் நாதர் மீது மதீனாவாழ் மக்கள் எத்தகைய பற்றும் பாசமும் கொண்டு விளங்கினார்களெனின், ஒரு பெண், பெருமானார் 'இறந்த' செய்தியைக் கேள்வியுற்றப் போர்க்களம் நோக்கி விரைகிறாள். வழியில், அங்கிருந்து திரும்பும் சிலரைச் சந்திக்கிறாள். அவர்கள் அடுத்தடுத்து அவளது தந்தை, சகோதரன், கணவன், இவர்களின் திகைப்பூட்டும் வேதனையான மரணச் செய்திகளை அவளிடம் கூறுகின்றகர். எனினும், அவள், அவை எதையும் காதில் வாங்கவில்லை. "நபிபிரான் எவ்வாறிருக்கிறார்கள்?" என்ற ஒரே கேள்வியைத் தான் களம் நோக்கி நடந்து

கொண்டே அவர்களிடம் கேட்கிறாள். "நலமுடன் இருக்கிறார்கள்" என்ற பதில் கிடைத்த பின்னர்தான் அவள் மன நிம்மதியடைகிறாள். அதுவரை அவள் தன் தந்தை, சகோதரன், கணவன் இவர்களைப் பற்றிக் கிஞ்சிற்றும் மனதில் இடமளிக்கவில்லை. அண்ணலவர்கள் மட்டுமே அவளின் ஆருயிராய் விளங்குகிறார்கள். அப்பூமானைக் கண்ணால் கண்டுகளித்த பின்னரே அவள் தன் உற்றார் மூவரையும் பற்றி எண்ணத் துவங்குகிறாள். அவர்களின் மரணத்துக்காக அழுகிறாள்.

**எறி ஈட்டியும், கொடு நீலியும்**

முன்னர், பத்ருப் போரில் கைதாகி, மீட்புப் பணம் செலுத்தி விடுதலையான உபையில் கலப் என்பான், மக்கா திரும்புங்காலை, அண்ணலாரிடம் தன்னிடம் அரீத் என்னும் சாதிக் குதிரையொன்று இருப்பதாகவும் அதன் மீது வந்து அவர்களின் உயிரை குடிக்கப் போவதாகவும் சபதமிட்டுச் சென்றான். அதற்குப் பெருமானார், "இறைவன் நாடினால் நீ எனது கரத்தால் கொல்லப்படலாம்" என அமைதியாகப் பதிலிறுத்தார்கள். இப்போது உபை உஹதுப் போரின் மீது வந்திருந்தான். அவன் தன் பரியிலேறி பெருமானாரை நோக்கித் தன் சபதத்தை நிறைவேற்ற வந்தான். முஸ்லிம் வீரர்கள் அவனைக் கொன்றொழிக்கப் பாய்ந்தனர். திருத்தூதரவர்கள், "நீங்கள் அமைதியாக இருங்கள் அவன் என் பால்வரட்டும்" எனத் தடுத்து விட்டார்கள். உபை, பெருமானாரை நெருங்கியதும், அருகில் நின்ற ஹாரிது பின் ஸம்ஆ என்பவரிடமிருந்த ஈட்டியை வாங்கி அவன்மீது எறிந்தார்கள். அந்த ஈட்டி அவனது கழுத்தில் பட்டு சிறியதொரு காயத்தை ஏற்படுத்திவிட்டது. அவ்வளவுதான் உபை, "நான் சாகிறேன்" நான் சாகிறேன், எனக் கூக்குரலிட்டுக் கொண்டு, குறைஷிகள் நின்ற பக்கம் தன் குதிரையை விரட்டிச் சென்றான். அவன் படும் வேதனையைக் கண்ட குறைஷிகள், "ஏனப்பா இச்சிறு காயத்திற்காக இவ்வாறு அலறுகிறாய்?" எனக் கேட்டனர். அதற்கவன், "நான் படும் வேதனை உங்களுக்கென்ன தெரியும்? அதை உங்கள் அனைவருக்கும் பகிர்ந்தளித்தாலும் நீங்கள் தாங்க இயலாது மாண்டு போவீர்களே! முஹம்மது ஈட்டியை எறியாது என் மீது எச்சிலைத் துப்பியிருந்தால் கூட நான் உயிர் பிழைக்க மாட்டேன் என நினைக்கிறேன்" எனக் கூறியவளாய் மீண்டும் துடிதுடித்து அலற ஆரம்பித்தான். உஹதுப் போர்க்களத்தில் மக்கா திரும்பும் வழியில் ஸர்ப் என்னுமிடத்தில் உபை காலமானான். அதன்பின் நாயகம் உஹதுக் குன்றிலுள்ள குகையொன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு நிழலில் படுக்க வைத்து அவர்களின் தலைக் கவசத்தை அகற்றினார்கள். கன்னத்தில் ஆழப்பதிந்திருந்த வளையங்களிரண்டையும் அபூஉபைதா பின் ஜர்ராஹ் மிக்கப் பிரயாசையுடன் தமது பற்களால் கடித்துப் பிடுங்கி எடுத்தார். அதனால் அவரது முன் பற்களில் இரண்டு உடைந்து விட்டன. காயங்களினின்றும் இரத்தம் பெருக்கெடுத்தது. அதை அபூஸயீத் அல் குத்ரீயின் தந்தை மாலிக் பின் ஸினாம் சப்பி விழுங்கினார். அது கண்ட அண்ணல், "யாருடைய இரத்தத்துடன் எனது இரத்தம் கலக்கின்றதோ அவரை நரக நெருப்புத் தீண்டாது" எனக் கூறினார்கள். உடனே அலி அவர்கள் தமது கேடயத்தில் தண்ணீர் கொண்டுவர, பாத்திமா நாச்சியார் காயங்களைக் கழுவி துடைத்தார்கள். எனினும் இரத்தக் கசிவு நிற்காத தால் ஈச்சம் பாய்த்துண்டு ஒன்றை எரித்து அதன் சாம்பலைக் காயத்தின் மீது அழுத்தி ஒட்ட வைத்த பின்னரே, கசிவு நின்றது. சிறிது ஓய்வு கொண்டபின் பெருமானார் எழுந்து போர்க்களத்தைப் பார்வையிட்டார்கள்.

குறைஷிக் கொடு நீலிகளோ, இறக்க முஸ்லிம் வீரர்களின் சடலங்களைச் சிதைப்பதுதான் பெண்களின் வீரம் எனக் கருதியவர்களாய்ப் போர்க்களத்தில் புகுந்து வீரர்களின் கண், காது, மூக்கு போன்ற உறுப்புகளைத் துண்டித்து மாலையாகக் கோர்த்துக் கழுத்தில் அணிந்து கொண்டு பேய்க்கூத்தாடி மகிழ்ந்தனர். அபூ சுப்யானின் மனைவி ஹிந்தா என்பவள் தன் தந்தை உத்பாவையும் சகோதரன் வலீதையும் ஹலரத் ஹம்ஸா அவர்கள் பத்ரில் கொன்றதின் காழ்ப்பினை வஞ்சந் தீர்க்கும் வகையில் அவரின் பிரேதத்தைத் தேடிப்பிடித்து வயிற்றைப் பிளந்து ஈரலைப் பிய்த்தெடுத்து வாயால் கடித்துத் துப்பி ஆனந்த ஆர்ப்பரிப்புச் செய்தாள். பெண்ணுருப் பெற்ற பேய்களான இவர்களின் மிருகத்தனமான வெறியாட்டம் குறித்துச் செப்புவதற்குச் சிலேடை காண்கிலேம்!

ஸபிய்யா, தம் சகோதரர் ஹம்ஸா அவர்களின் சிதையுண்ட உடலை அவசியம் பார்த்தாக வேண்டுமெனத் தன் மகன் ஜுபைர் பின் அவ்வாமிடம் சொல்லிப் பெருமானாரின் அனுமதி கோரினார். அவர்கள் மனவேதனையுற்றவர்களாய்த் தயக்கத்துடன் அனுமதி வழங்கினார்கள். ஸபிய்யா சின்னாபின்னப்படுத்தப்பட்ட தன் சகோதரின் உடலைக் கண்ணுற்றதும் உள்ளந் துணுக்குற்றுத் துக்கந்தாளாது வாய்விட்டுக் கதறியழுதார்! அதன் அருகிலமர்ந்து விம்மிப் பொருமினார். அதனைப் பார்த்த அண்ணலவர்களும் மனங் கசிந்து கண்ணீருகுத்தார்கள். சுற்றி நின்றவர்களும் நேத்திரங்களில் நீரைப் பெருக்கினர்.

முஸ்லிம்கள் எத்தகைய வீரத்தோடும் ஆவேசத்துடனும் உஹத் களத்தில் நின்று போரிட்டார்களெனில், அனஸ் பின் நல்ர் என்னும் வீரர் தம்மீது எண்பதுக்கும் அதிகமான காயங்களைப் பெற்று அவரது உருவமே அடையாளந் தெரியாத அளவு சின்னாபின்னப்பட்டும் கீழே சாயாது உறுதியுடன் நின்று போரிட்டிருக்கிறார். இவர் ஒருவர் மாத்திரந்தான் இத்தகைய ஷஹாதத்தை (தியாகம்) பெற்றுக் கொண்டாரென்பதில்லை. இவர் போன்றே இன்னும் பல முஸ்லிம் வீரர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் போரிட்டுத் தங்களின் சரீரங்களில் கணக்கற்ற காயங்களைப் பெற்றுத் தியாகச் செம்மல்களாக மரணித்துள்ளனர். தல்ஹா (ரலி) அவர்களின் உடம்பிலும் 80க்கும் அதிகமான காயங்கள் ஏற்பட்டிருந்தன.

**“மீண்டும் சந்திப்போம்”**

இப்னு கமீயாவின் வீண் புரளியை நம்பிக்கொண்டு அபூசுப்யானும் மற்ற குறைஷிகளும் போர்க்களத்தில் புகுந்து திருத்தூதரின் திருமேனியைத் தேடினர் காணவில்லை. அதனால் “முஹம்மது உயிருடன் இருக்கிறார்!” என்ற முடிவுக்கு வந்தவராய் அபூசுப்யான், பெருமானார் அமர்ந்திருந்த குன்றுக்கு எதிரேயுள்ள குன்றொன்றில் ஏறிநின்று, “உங்களுடன் முஹம்மது இருக்கிறாரா? எனச் சத்தம் கொடுத்தார். மறுமொழி கூறவேண்டாம் எனப் பெருமானார் தோழர்களுக்குச் சாடை காட்டினார்கள். அபூசுப்யானின் கூவலுக்கு முஸ்லிம்களிடமிருந்து எவ்விதப் பதிலும் கிடைக்க வில்லை. பின்னர் அவர், “அல் கத்தாபின் மகன் (உமர்) இருக்கிறாரா?” என அடுத்தடுத்து வினவினர். இவற்றிற்கும் எவ்வித மறுமொழியும் கிடைக்காததால், “சரி, எல்லோரும் மாண்டொழிந்தார்கள் போலும்! உயிருடன் இருந்தால் தான் பதில்

வந்திருக்குமே!" என உரக்கக் கூவினார். ஹலரத் உமர் இவ்வார்த்தைகளைக் கேட்கப் பொறாதவராய், "ஏ, இறைவனின் பகைவனே! உன்னையும், உன்போன்றோரையும் கேவலத்துக்குள்ளாக்கவே நாங்கள் இன்னும் உயிருடன் இருந்து வருகிறோம்" என ஆத்திரத்துடன் பதில் கூறினார். உமர் அவர்களின் இடியோசையைக் கேட்ட அபூசுப்யானுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "பத்ருப் போருக்குப் பழி வாங்கவே இங்கு வந்தோம், அக்காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. ஹுபலே! நீயே பெரியவன், உஸ்ஸாவே! நீயே பெரியவன்" எனக் கூறித் தம்விக்கிரக தெய்வங்களைப் பெருமைப் படுத்தியது அண்ணலவர்களுக்கு வேதனையளித்ததால் "இறைவனே மேலானவன்! எல்லா புகழும் புகழ்ச்சியும் அவனுக்கே உரியன!" எனக் கூறுமாறு உமர் அவர்களைப் பணித்தார்கள். உமர் அவ்வாறே உரத்த குரலெடுத்து ஓசையிட்டார்கள். அது உஹது மலையில் பட்டு எதிரொலித்தது. அதனைச் செவியேற்ற அபூசுப்யான் "நல்லது, அடுத்த ஆண்டே மீண்டும் பத்ருப் போர்க்களத்தில் சந்திப்போம்" என்றார். "ஆகட்டும் அவ்வாறே சந்தித்துக் கொள்வோம்" என ஹலரத் உமரும் பதில் கூறினார்கள்.

பகைவர்கள் போர்க்களத்தை விட்டுச் சென்றபின், நபிகள் நாதரும் மற்ற முஸ்லிம்களும் அங்கு பிரவேசித்துப் பார்வையிட்டனர். தங்கள் தரப்பில் பெருத்த சேதமேற்பட்டிருப்பதைக் கண்டு பெருமானார்மிகுந்த வருத்தமுற்றார்கள். முஹாஜிர்களில், ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிப், முஸ்அப் இப்னு உமர், உத்மான், இப்னு ஷிஹாப், அப்துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் ஆகிய நான்கு பெரும் மாண்டு கிடக்கக் கண்டனர். நாற்பது முஸ்லிம்கள் காயமுற்றனர். குறைஷிகளில் முப்பது பேர் மாண்டொழிந்தனர். ஹலரத் ஹம்ஸா அவர்களின் சடலம் அலங்கோலப்படுத்தப்பட்டுக் கிடப்பதைக் கண்ட அண்ணலவர்கள் உள்ளம் துணுக்குற்றார்கள். பின்னர், வீரமரணம் எய்திய முஸ்லிம்களின் பிரேதங்களை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவற்றை முறைப்படி குளிப்பாட்டி கபன் செய்து பெருமையுடன் அடக்கம் செய்யும் வசதி யுத்தக்களத்தில் எப்படி கிடைக்கும்? அதனால், அப்படியப்படியே துணியால் சுற்றி இரண்டிரண்டு பேராக ஒரு குழியில் வைத்து அடக்கம் செய்தார்கள். மரியாதையின் பொருட்டுத் திருக்குர்ஆனைப் பாராயணம் செய்திருந்தவர்களை முதலிலும் மற்றவர்களை அதன் பின்னும் அடக்கம் செய்யப்பட்டது. அடக்க வேலையை முடித்துக் கொண்டு எல்லோரும் மதீனாவை நோக்கிப் பயணமானார்கள். இரு தரப்பாரும் கலக்கமுற்ற நிலையிலேயே மக்காவுக்கும் மதீனாவுக்கும் திரும்பிச் சென்றனர்.

**அபூசுப்யானின் ஏமாற்றம்**

மக்கா திரும்பிக் கொண்டிருந்த அபூசுப்யானுக்கு ரவிஹான் என்னுமிடத்தை அடைந்த போது, போரில் நாம் உண்மையான வெற்றி எதுவும் அடையவில்லையே முஸ்லிம்களை வெற்றி கொண்டதற்கு அடையாளமாக ஒருவரைக் கூடச் சிறைப் பிடிக்கவில்லையே தவிர போக்களத்தையும் இறந்த நம்மவர்களையும் பகைவர்களிடம் தானே விட்டு வந்திருக்கிறோம். மதீனாவுக்குள் புகுந்து கை வரிசையைக் காட்டி, எதிரிகளை மிரட்டவும் தவறி விட்டோமே!. ஆகவே, சேனையை மதீனாவின் பக்கம் திருப்பி மீண்டும் தாக்கினாலல்லவோ நமக்குப் பெருமையாயிருக்கும்! என்ற

எண்ணங்கள் மனதில் புகுந்து உறுத்தின. அபூசுப்யானின் இந்தக் கருத்தைக் குறைஷிகள் பலர், முக்கியமாக சப்வான் பின் உமய்யா விரும்பவில்லை. ஆதலால், அபூசுப்யானை அலட்சியம் செய்து விட்டு அவர்கள் தங்கள் ஒட்டகங்களையும் குதிரைகளையும் மக்கா நோக்கிச் செலுத்திச் சென்றனர்.

முஸ்லிம்கள் உஹுத் குன்றைக் கடந்து மதீனாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது "குறைஷிகள் மறுபடியும் திரும்பி மதீனாவுக்குள் புகுந்து மாதர்களையும் மற்றவர்களையும் தாக்குவார்களோ?" பகைவரின் மனப் போக்கு எப்படியிருக்கிறதோ? என்ற எண்ணங்கள் பெருமானாருக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்டு அச்சுறுத்தின. எனவே, நிலைமையை அறிந்து வர ஒற்றர் ஒருவரை ஹலரத் அலீ எனச் சிலரும் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் எனச் சிலரும் கூறுவர். குறைஷிகளைப் பின்தொடர்ந்து செல்லுமாறு அண்ணலார் அனுப்பி வைத்தார்கள். அந்த ஒற்றர் திரும்பி வந்து, "பகைவர்கள் நிச்சயமாக பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்" என்னும் தகவலைக் கொடுத்தார். அதற்கு அடையாளமாகப் பெருமானார் கூறிய வண்ணம் ஒட்டகைகள் முன்னும் குதிரைகள் பின்னுமாக அணி வகுத்துச் செல்வதை அந்த ஒற்றர் கண்டு வந்ததேயாம்.

அத்தகவலைக் கேட்டு அனைவரும் மன அமைதி கொண்டவர்களாய் மதீனாவை நோக்கிப் பயணமானார்கள். சிறிது தூரத்தில் நீர் நிலையொன்றை அடைந்து அங்கு சற்று தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொண்டனர். ஆண்களும் பெண்களும் தனித்தனியாகப் பிரிந்து சென்று இறைவனைத் தொழுது இறந்தவர்கள் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்தனை புரிந்தனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுப் பொழுதடைய மதீனாவிற்குள் பிரவேசித்தனர்.

உஹுதுப் போர் இரு தரப்பாரும் வெற்றி பெறவுமில்லை தோல்வி பெறவுமில்லை. சமமாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் போரினால் முஸ்லிம்களுக்கு ஆட்சேதமும் பொருடசேதமும் அதிகம். ஆனால், ஆன்ம இலாபமான நல்ல படிப்பினை கிடைத்தது. நயவஞ்சகர்கள் விஷயத்தில் இந்தச் சண்டை தங்கத்தையும் மாசையும் பிரிய வைத்த சோதனைக் கலமாக அமைந்தது. குறைஷிகளும் தாங்கள் எண்ணி வந்த காரியம் எதுவும் நிறைவேறாமல் வெறுமனே வீடு திரும்பினர்.

## யுக்தி பலித்தது

அன்றிரவு மதீனாவில் பெண்களின் அழுகுரலும் ஒப்பாரியும் மிகுதியாக இருந்தது. பெருமானார் அவர்களும் சரிவர நித்திரை கொள்ளவில்லை. பள்ளியில் வைகறைத் தொழுகை முடிந்து பொழுது புலர்ந்ததும், முன்னேற்பாடாக, மதீனாவை அரணிப்பதற்குரிய கட்டளைகளைப் பிறப்பித்தார்கள். அதன்பின், குறைஷிகளைத் தூரத்திச் செல்லவேண்டுமெனவும் இல்லாவிடில் தாங்கள் தோற்கவில்லை என்ற எண்ணத்தில் அவர்கள் இருப்பர் எனவும் கருதினார்கள். உடனே ஹலரத் பிலாலை நகருக்குள் அனுப்பி உஹுப் போரில் கலந்து கொண்டவர்களை மட்டும் அழைத்து வரச் சொன்னார்கள். அனைவரும் வந்தவுடன், "நேற்று நமக்குக் குறைஷிகளால் விளைந்த சேதம் பெரிது என்றே சொல்ல வேண்டும். அந்த அளவு இனி அவர்களால் சேதம் விளைவிக்க முடியாது. எனினும், மக்காவை நாம் கைப்பற்றாதவரை அவர்கள்

நமக்குச் சேதம் விளைத்துக் கொண்டே இருப்பர்" என எம்பிரான் எடுத்துக் காட்டினார்கள்.

ஷவ்வால் 7 ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு வெள்ளைக் கொடியை காயமுற்றும் களைப்படைந்துமிகுந்த ஹலரத் அபூபக்களது கையில் கொடுத்துக் குதிரை மீது முன் செல்லுமாறு கூறி, பெருமானாரும் எழுபது முஸ்லிம் வீரர்களும் பின் தொடர்ந்தார்கள். அன்று பகல் முழுவதும் பிராயணம் செய்து இருட்டியபின் மதீனாவுக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள ஹம்ரஉல் அஸத் என்ற மேடான இடத்தில் கூடாரங்கள் அடித்துத் தங்கினார்கள். அருகாமையில் கிடைத்த கள்ளிகளையும் கப்பிகளையும் பொறுக்கி வந்து பல்வேறு இடங்களிலும் 500க்கு மேற்பட்ட நெருப்புக்களை உண்டாக்கினார்கள். இதைக் கண்ணுற்ற அபூசுப்யானின் ஒற்றர்கள் அவரிடம் திரும்பிப் போய் முஸ்லிம்கள் ஏராளமான பேர் தங்களைப் பின் தொடர்ந்து வந்திருப்பதாகத் தகவல் கூறினர். அப்பொழுதே அவர் குறைஷிகளை அழைத்துக் கொண்டு மக்காவுக்கு விரைந்தார். அண்ணலார் அவ்விடத்தில் மூன்று நாட்கள் தங்கிவிட்டுத் தங்களின் போர்த் தந்திரம் பலித்ததாக மனந்தேர்ந்து மதீனா திரும்பினார்கள்.

நபிகள் பிரான் முகாமிட்டிருந்த இடத்தில் ஒரேயொரு சம்பவம் நிகழ்ந்தது. முன்பு பத்ருப் போரில் கைதாகி, தனக்கு ஐந்து பெண் மக்கள் இருப்பதாகக் கூறி, இனி முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிடுவதில்லை என வாக்களித்து, மீட்புப் பணம் செலுத்தாது மன்னிப்புப் பெற்று விடுதலையாகிச் சென்ற அபூ இஸ்ஸத்தீ அம்ர் இப்னு அப்துல்லாஹ் என்னும் புலவன், இப்பொழுது வாக்குமாற், உஹதுப் போரிலும் வந்து கலந்து கொண்டான். இவன் குறைஷிகள் பின் வாங்கிச் சென்ற போது அவர்களுடன் செல்லாமல் போர்க்களத்தில் சுற்றி எதுவும் விட்டுச் சென்ற பொருட்கள் கிடைக்காதா என்ற ஆசையில் தேடிக்கொண்டிருந்தான். அவனை முஸ்லிம் வீரர்கள் கைது செய்து பெருமானார் முன் கொண்டுபோய் நிறுத்தினர். அவன் அங்குற்ற காரணத்தை வினவியபோது பொருத்த மற்ற சமாதானங்களைக் கூறி மீண்டும் தன்மீது இரக்கங்காட்டுமாறு மன்றாடினான். அதற்கு அண்ணலார், "இத்தடவையும் உனக்கு மன்னிப்பளித்தால் மக்கா திரும்பியதும், முஹம்மதை இரண்டாவதாகவும் ஏமாற்றி வந்து விட்டேன் என்றல்லவா பெருமையடித்துத் திரிவாய். அதற்கு நான் இடந்தரப்போவதில்லை. உன்போன்ற கொடிய துரோகிக்கு இரக்கங்காட்டக்கூடாது." எனக் கூறியவர்களாய் அருகில் நின்ற ஆஸம் பின் தாபித்திடம் அப்புலவனை ஒப்படைத்தார்கள். அவர் அப்புலவனை அப்பால் இழுத்துச் சென்று உரிய தண்டனை அளித்தார்.

## நேர்மையின் சிகரம்

உஹதுப் போருக்குச் சில ஆண்டுகள் முன்னதாக மதீனாவில் ஸுவைத் என்னும் கஸ்ரஜ் குலத்தலைவர் ஒருவரை முஜத்தர் என்பவர் வெட்டிக் கொன்றார். ஸுவைதின் புதல்வர் ஹாரித் இக்கொலைக்குப் பழிவாங்கும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தார். அதற்கு மதீனாவில் அவருக்குச் சரியான வாய்ப்புக்கிட்டவில்லை. முஜத்தரும் ஹாரிதும் முஸ்லிம்களாகி முஸ்லிம்களின் அணியில் சேர்ந்து உஹதுச் சண்டையில் கலந்துகொள்ள நேரிட்டது. போர்க்களத்தில் முஸ்லிம்களின் அணியில் குழப்ப மேற்பட்டபோது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த ஹாரிதுக்கு வஞ்சந் தீர்த்தக் கொள்ள வாய்ப்புக்கிடைத்தது. குழப்பத்தினூடே முஜத்தரை ஹாரித் வாளால் வெட்டிக்

கொன்றார். இதனைக் கண்ணால் கண்ட ஒருவர் மதீனா திரும்பிய பின் பெருமானாரிடம் நடந்ததைக் கூறினார். திருத்தூதரவர்கள் விசாரித்துப் பார்த்தபோது இது உண்மையென்பது புலனாயிற்று.

எனவே, அண்ணலார் தங்கள் கோவேறு கழுதையில் சென்று குபா பள்ளிவாசலை அடைந்தார்கள். சுற்றுப் புறங்களிலுள்ளவர்கள் பெருமானாரை வந்து கண்டு முகமன் கூறினர். விஷயம் புரியாத ஹாரிதும் நபிகள் நாதரைக் காண வந்தார். அப்போது அருகாமையிலிருந்த அவ்ஸ் குலத்தலைவர் உவைம் என்பவரை அழைத்து, "உஹத் போர்க்களத்தில் முஜத்தரை இந்த ஹாரித் காரணமின்றி வேண்டுமென்றே கொலை செய்து விட்டார். எனவே, இவரைப் பள்ளிவாசலுக்கு வெளியே கொண்டுபோய் உரிய தண்டனை அளித்து விடும்" எனப்பணித்தார்கள். பெருமானார் கூறும் எப்பரிகாரத்தையும் தான் ஏற்றுக் கொள்வதாயும் தன்னை மன்னித்தருளுமாறும் ஹாரித் பெரிதும் வேண்டினார். எனினும் "பொதுக் காரியத்தில் சொந்தக் குரோதத்தைப் புகுத்துவதும் அதற்காகப் பழிவாங்குவதும் பெருங்குற்றம். இது மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்" எனக்கூறி அவரது வேண்டுகோளைப் பெருமானார் (ஸல்) நிராகரித்து விட்டார்கள்.

### சொத்துரிமையும் துட்டநிக்கிரமும்

கஸ்ரஜ் கூட்டத்தைச் சேர்ந்த பிரமுகர் ரபீஅ என்பவரின் புதல்வர் ஸஅத் என்பவர் உஹத் போரில் உயிர் நீத்தார். இவருக்கு ஒரு மனைவியும் இரு புதல்விகளும் இருந்தனர். அரபிகளின் அன்னைய வழக்கத்தின்படி ஸஅதின் சொத்துக்கள் அனைத்தும் அவர் சகோதரரின் ஆதிக்கத்தில் போய்ச் சேர்ந்தன. இதனால் ஸஅதின் மனைவி மக்கள் தங்களுக்கு எதுவும் கிடைக்காமல் பெரிதும் சிரமப்பட்டனர்.

ஸஅதின் மனைவி சாமர்த்தியமிக்க கெட்டிக்காரி. அவள் ஓர் உபாயம் செய்தாள். அண்ணலாரை அணுகி, தான் ஏற்பாடு செய்திருக்கும் விருந்தொன்றுக்கு தங்கள் தோழர்கள் சிலருடன் வருகை தந்து தன் வீட்டில் உணவருந்திச் செல்லுமாறு வேண்டினாள். பெருமானாரும் அவளின் பெருவிருப்பத்திற்கு இசைந்தார்கள். குறிப்பிட்ட தினத்தில் அனைவரும் சென்று விருந்துண்டபின் அங்கமர்ந்து சந்து அளவளாவினர். அதில் ஸஅதின் நற்பண்பு, மார்க்க உறுதி, போர்த்திறன், தியாகம் பற்றிய பேச்சுக்கள் எழுந்தன. ஸஅதின் மனைவி அதனையொரு அரிய வாய்ப்பாகக் கொண்டு நபிகளாரின் முன் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாகத் தோன்றி, ஸஅதின் சொத்துக்கள் அனைத்தும் கொழுந்தன் கையில் போய்ச் சிக்கி விட்டதால் தானும் தன் புதல்விகளும் அடைந்துள்ள சிரமத்தையும் நிர்க்கதியையும் பற்றி உருக்கமுடன் எடுத்துச் சொன்னாள். அவள் கூறியவற்றை அனுதாபத்துடனும் மன நெகிழ்ச்சியுடனும் செவிமடுத்த செம்மல் நபியவர்கள். "பெண்மணியே! சொத்துரிமை பற்றி இறைவனிடமிருந்து இதுவரை எனக்கு எவ்வித அறிவிப்பும் கிடைக்கவில்லையே! அவனது உத்தரவு கிடைத்த பின்னர் அதுபற்றி நான் உமக்குத் தெரிவிக்கிறேன். அதுவரை பொறுமையுடனிருந்து வருவீர்!. எனக்கூறியவர்களாய் விடை பெற்றுத் திரும்பினார்கள்.

அதன் பின் சில தினங்களில் - வீடு திரும்பிய அதே தினம் எனவும் சிலர் கூறுகின்றனர். இறைவனிமிருந்து சொத்துரிமை பற்றிய அறிவிப்புக் கிடைத்து விட்டது. அதில் யார் யாருடைய சொத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாத்தியதை என்ற விவரங்கள் வெளியாயின. இதிரு வசனங்கள் வெளியானதும் ஸஅதின் மனைவியையும் அவர் சகோதரரையும் அழைத்து ஸஅதின் சொத்துக்களில் எட்டில் ஒரு பாகத்தை மனைவியும், மீதியில் இரு பங்கை இரு புதல்விகளும் ஒரு பங்கை ஸ அதின் சகோதரரும் அடைந்து கொள்ளுமாறு கூறி அனுப்பினார்கள். ஸஅதின் மனைவி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தவளாய் இறைவனைப் போற்றி புகழந்து தோத்திரம் செய்தாள்.

ரமலான் மாதத்தில் நோன்பிருக்க வேண்டுமென்பதும் இப்போது கடமையாக்கப்பட்டு விட்டது.

இது வரை முஸ்லிம்களுக்கு அஞ்சி நடந்து வந்த யூதர்களும் நாடோடி அரபிகளும் உஹுத் போருக்குப் பின் அச்சந் தெளிந்தவர்களாய் நடக்கத் துணிவு கொண்டனர். குறைஷிகளும் இதற்குத் தூபமிட்டனர். அண்ணலாரும் இதை அறிந்து முன் எச்சரிக்கையாக ஒற்றர்களை அனுப்பி, அவர்களின் நடமாட்டங்களை அறிந்து வரச் செய்தார்கள்.

துப்புக் கிடைத்ததன் பேரில் கதன் என்னுமிடத்தில் வசித்த பனூ அஸத் என்ற நாடோடி அரபுக் கூட்டத்தாரைத் தாக்குவதற்கு அபூஸலமா என்பவர் தலைமையில் நூற்றைம்பது வீரர்களை அனுப்பினார்கள். அவர் சென்ற பதினொரு நாட்களுக்குப் பின் ஏராளமான ஒட்டகங்களையும் ஆடுகளையும் கைப்பற்றிக் கொண்டு வந்தார்.

அது போலவே முஸ்லிம்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்த மக்காவுக்கும் தாயிபுக்கும் இடையில் வசித்த பனூ லிஹ்யான் என்னும் நாடோடி அரபுக்கூட்டத்தாரையும், அப்துல்லாஹ் பின் உவைஸ் என்பவரின் தலைமையில் படையனுப்பித் தாக்கிச் சிதைந்தோடச் செய்தார்கள்.

**வஞ்சகக் கொலைகள்**

பனூலிஹ்யான் கூட்டத்தினரில் ஒரு பிரிவினரான பனூஹுஃதைல் வம்சத்தினர் முஸ்லிம்களை வஞ்சந் தீர்க்கும் எண்ணத்தை மனதில் கொண்டிருந்தனர். ஒரு நாள் இவர்களின் தூதுக் குழுவொன்று பெருமானாரிடம் வந்து தங்கள் கூட்டத்தார் அனைவரும் இஸ்லாத்தில் சேர முடிவு செய்து விட்டதாகவும், எனவே இஸ்லாத்தைப் பற்றிப் போதிப்பதற்காகச் சில போதகர்களைத் தங்களுடன் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொண்டனர். அதற்கிசைந்த பெருமானாரவர்கள் ஆஸிம் பின் தாபித் தலைமையில் மர்தத், காலித், குபைப், ஜைது, அப்துல்லாஹ் பின் தாரிக் ஆகிய அறுவரை அக்குழுவினருடன் ஹிஜ்ரி 3 இறுதியில் அனுப்பி வைத்தார்கள். ராஜிஃ என்ற இடத்தை அடைந்ததும் முன்னேற்பாடு செய்து வைத்திருந்த மற்றொரு கூட்டத்தார், இந்த அறுவரையும் தாக்கி அதில் நால்வரைக் கொன்று விட்டனர். மீதமுள்ள குபைப், ஜைத் ஆகிய இருவரையும் சிறை பிடித்து மக்காவுக்குக் கொண்டுபோய்க் குறைஷிகளுக்கு விற்றுவிட்டனர். குபைபை ஹுஜைர் பின் அபூ இஸாப் அலதமீமியும், ஜைதை ஸப்வான்பின் உமய்யாவும் வாங்கினர். குறைஷிகள்

அவ்விருவரையும் மக்காவுக்கு வெளியே கொண்டுபோய்க் கோரக் கொடுமையாக கொலை செய்துவிட்டனர்.

இதைத் தொடர்ந்து சில மாதங்கள் கழித்து இதனிலும் கொடுமையான இழப்பு ஒன்றும் முஸ்லிம் மத போதகர்களுக்கு நேர்ந்தது. நஜ்துப் பிரதேசத்தில் அடுத்தடுத்து ஹவாஸின் வர்க்கத்தினரான பனூஆமிர் பனூசுலைம் என்ற இரு கூட்டத்தார் வசித்தனர். பனூஆமிர்களுக்கு அபூபாரா பின் மாலிக் என்பவன் தலைவனாக இருந்தான். மற்றொரு சுலைம் கூட்டத்தாருக்கு ஆமிர் பின் துபைல் என்பவன் தலைவனாக இருந்தான்.

ஓர் நாள், அபூபரா, பெருமானாரை அண்மி இரு ஒட்டகைகளையும், இரு குதிரைகளையும் காணிக்கையாகச் சமர்ப்பித்தான். அபூபரா இஸ்லாத்தில் சேருவதனால் தான் அந்தக் காணிக்கைகளை ஏற்கமுடியுமென அண்ணலார் அறைந்தார்கள். தான் மட்டும் இஸ்லாத்தை ஏற்பது பெருமை அளிக்காதென்றும், தன்னுடன் போதிய பிரச்சாரகர்களை அனுப்பி வைத்தால் தனது கூட்டத்தார், நஜ்து மக்கள் அனைவரையும் இஸ்லாத்தில் சேர்க்க உதவியாயிருக்குமென்றும் எடுத்துரைத்தான். அதற்குப் பெருமானார் அவர்கள், அப்பகுதியில் இஸ்லாத்தின் கொடிய விரோதிகள் வாழ்வதால் பிரச்சாரகர்களை அனுப்பித் தர இயலாதெனவும், அது மனதிற்குச் சமாதானம் அளிக்கவில்லை எனவும் மறுத்துரைத்தார்கள். அதற்கு அபூபரா, “தாங்கள் அப்படியொன்றும் நினைக்க வேண்டாம். நானே அவர்களின் உயிருக்குப் பொறுப்பாளி” என உறுதி அளித்தான். அவனது உறுதிமொழியை நம்பிய அண்ணலார், முன்திர் பின் அம்ர் தலைமையில் எழுபது பிரச்சாரகர்களை சிலர் நாற்பது எனவும் கூறுவர் — அனுப்பி வைத்தார்கள். இவர்களில், ஹாரித் பின் அல்ஸிம்மா, ஹராம் பின் மில்ஹான், உர்வா பின் அஸ்மா, அல்ஸல்த் அல்ஸுலமி, நாபி பின் புதைல், ஆமிர் பின் புஹைரா குறிப்பிடத்தக்கவர்கள். முன்திர் இடம், பனூ சுலைம் கூட்டத்தாரையும் இஸ்லாத்தின் பால் அழைத்து அவர்களின் தலைவர் ஆமிர் பின் துபைலுக்கும் மடலொன்று கொடுத்தனுப்பினார்கள்.

எழுபது பிரச்சாரகர்களும் ஹிஜிரி 4ம் ஆண்டு ஸபர் மாதம் - கி.பி. 625 ஆகஸ்டு — நான்கு நாட்கள் இரவு பகலாகப் பிரயாணம் செய்து அவ்விரு கூட்டத்தாரும் வசிக்கும் ஊர்களுக்கு இடையிலுள்ள பிர்மஊனா என்னும் நீர் ஊற்றுக்கள் உள்ள இடத்தை அடைந்தனர். அங்கிருந்து கொண்டு, முன்திர், பெருமானாரின் மடலை இப்னு துபைலிடம் சேர்ப்பிக்குமாறு பிரச்சாரகர் ஹராம் பின் மல்ஹான் என்பவரிடம் கொடுத்தனுப்பினார். கடிதத்தைப் பெற்றுப் படித்த அக்கொடியோன், வந்த பிரச்சாரகரைப் படுகொலை புரிந்தான். போதாக்குறைக்குத் தன் கூட்டத்தாரையும் பக்கத்திலிருந்து உஸையா, ரிஃல், தக்வான் கூட்டத்தாரையும் தூண்டி விட்டு அனைவருமாகச் சென்று, பிர்மஊனாவில் தங்கியிருந்த பிரச்சாரகர்களைத் தாக்கிப் படுகொலைப் புரியச் செய்தான். இதில் பனூ ஆமிர்கள் கலந்து கொள்ள மறுத்து விட்டனர். கொலையுண்டவர்களில் ஹலரத் அபூபக்கர் அவர்களின் மேய்ப்பாளரான ஆமிர் பின் புஹைராவும் ஒருவர். அம்ருப்னு உமையாவைத் தவிர மற்ற அனைவரும் தாக்குண்டு வீழ்ந்தனர். “என் அன்னை அடிமை ஒருவனுக்கு விடுதலை அளிப்பதாக நேர்ச்சை செய்திருந்தாள். அக்கடன் கழிய வேண்டுமென்பதற்காகவே உன்னை நான் உயிர் பிழைக்க விடுகிறேன்.” என அக்கொடியோன் இப்னு துபைல், இப்னு

உமையாவிடம் கூறி, அவரை ஓடி விடுமாறு கூறினான். அக்கொலைப் பாதகக் கூட்டத்தினர் அங்கிருந்து அகன்றபின், காயமுற்று மூர்ச்சித்துக் கிடந்த க.்.ப் இப்னு ஜைத் மூர்ச்சை தெளிந்து மதீனா சென்று நடந்தவற்றை நபிகளாரிடம் எடுத்துரைத்தார். அது கேட்ட அண்ணலார் அதிர்ச்சியடைந்து ஆறாத் துயரத்துள் மூழ்கினார்கள்.

அம்ருப்னு உமையா, மதீனா திரும்பும் வழியில் தம்மைத் தாக்கிய கூட்டத்தாரில் இருவரைச் சந்தித்தார். தமக்கிருந்த ஆத்திரத்தில் அவர் அவ்விருவரையும் தாக்கிக் கொலை செய்து விட்டு மதீனா சென்றார். அவ்விருவருக்கும் பெருமானார் அபயமுறி எழுதிக் கொடுத்திருந்தார்கள். விஷயமறிந்ததும், அம்ருவின் அறியாமைக்கு வருத்தமுற்றவர்களாய் அவ்விருவரது குடும்பத்தாருக்கும் உயிரீட்டுப் பணம் கொடுத்துச் சாந்தப்படுத்தினார்கள். செம்மல் நபிகளாரின் சொல்லுறியும், கனிவும், பெருந்தன்மையும் எவ்வாறிருந்தன என்பதை நாம் சற்றே சிந்திப்போம்.

**பனூ நுலைர் யூதர்கள்**

அம்ருப்னு உமையா கொலை செய்த பனூ ஆமிர் கூட்டத்தாரைச் சார்ந்த இருவருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கான பணம் தேவைப்பட்டதால் குபாவுக்கு அருகில் மூன்று மைல் தூரத்தில் வசித்த பனூ நுலைர் கோத்திரத்தாரான யூதர்களிடம் அவர்கள் வாக்களித்த பணத்தைப் பெறுவதற்குத் தோழர்களான ஹலரத் அபூபக்கர், உமர், அலீ முதலியோரை அழைத்துக் கொண்டு அங்கு அண்ணலார் சென்றார்கள். அவ்வஞ்சக யூதர்கள், முன்னேற்பாட்டின் படி பெருமானாரையும், தோழர்களையும் வரவேற்று ஒரு மாடி வீட்டின் சுவரருகே குறிப்பிட்ட ஒரு இடத்தின் நிழலில் அமரச் செய்தனர். பின்னர் பணம் சேகரித்துத் தருவதாகக் கூறி, அவர்கள் அனைவரும் ஒரு பக்கமாகச் சென்று தனித்து உரையாடிக் கொண்ருக்கும்போது, அவர்களில் ஒருவனான அம்ரிப்னு ஜஹ்ஷீ பின் கஅப் என்பான் அவசரமாக அம்மாடி வீட்டினுள் நுழைந்தான். எச்சமயத்திலும் தங்கள் கண்களையும் காதுகளையும் உஷார் நிலையில் வைத்திருக்கும் ஏந்தல் நபியவர்கள் அந்த யூதனின் போக்கில் சந்தேகமுற்றவர்களாய் தோழர்களிடம் ஏதும் சொல்லிக் கொள்ளாது எழுந்து அங்கிருந்து கால்நடையாக நடந்து மதீனா வந்தடைந்தார்கள். தோழர்கள் நீண்ட நேரம் காத்திருந்தும் பெருமானார் திரும்பாததால் அவர்களும் அங்கிருந்து புறப்பட்டு மதீனா வந்து சேர்ந்தனர். வந்த தோழர்களிடம், யூதர்கள் அவ்வீட்டின் மாடியிலிருந்து பாராங்கல் ஒன்றைத் தம் மீது உருட்டிவிடச் சதி செய்திருந்த விவரத்தை திருத்தூதர் அவர்கள் வெளியிட்டுக் காட்டிய போது அனைவரும் பிரமிப்படைந்து கொதித்தெழுந்தனர்.

அதன் காரணமாக பனூ நுலைர் கூட்டத்தாரனைவரும் பத்து தினங்களில் அக்கிராமத்தை காலி செய்து வெளியேறி விட வேண்டுமென, நபிகள் பிரான், முஹம்மத் பின் மஸ்லமா என்ற தோழர் மூலம் எச்சரித்தார்கள். இதனை அறிந்த நயவஞ்சகன் அப்துல்லா இப்னு உபை, யூதர்களுக்கு உதவியாக இரண்டாயிரம் வீரர்களை அனுப்பித் தந்து தாக்குதலை முறியடிப்பதாகவும், இதன்றியும் பனூ குறைலாக்களும் பனூ கத்தபான்களும் அவர்களுக்குத் துணை நிற்பர் எனவும், முஸ்லிம்களின் தாக்குதலுக்குப் பயந்து ஊரை விட்டு வெளியேற வேண்டாமெனவும் தைரியங் கூறிச் செய்தியனுப்பினான். இப்னு உபையின் வார்த்தைகளால் மதிமயக்கமுற்ற அந்த யூதர்கள் தவணை முடிந்ததும் வெளியேறாது இறுமாப்புடன் இருந்தனர். அண்ணலவர்கள் ஆளனுப்பிக் கேட்டபோது, “உங்கள் மிரட்டல்களுக்கு

நாங்கள் பயப்படமாட்டோம், எங்களின் கோட்டை கொத்தளங்களையும், அரண் மனையையொத்த வீடுகளையும், காய்த்துக் குலுங்கும் தோப்புத் துரவுகளையும் கைவிட்டு வெளியேற மாட்டோம் வேண்டுமானால் முஹம்மது தெரிந்ததைச் செய்து கொள்ளட்டும்" எனத் திமிராகப் பதில் கூறி அனுப்பினர். அதன்பேரில் ஹிஜ்ரி 4ம் ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதம் பெருமானார் அவர்கள் தங்கள் வீரர்களுடன் சென்று பனூ நூலைர் யூதர்களின் கிராமத்தை முற்றுகையிட்டார்கள். இது பனூ நுலைர்களையும், பனூ குறைலாக்களையும் துண்டிக்கும் பகுதியாக அமைந்திருந்தது.

முற்றுகை பதினைந்து முதல் இருபது தினங்கள் வரை நீடித்தும் அப்துல்லாஹ் இப்னு உபை வாக்களித்த உதவிகள் எதுவும் வந்து சேரவில்லை. பனூ நுலைர்கள் ஏமாற்றம் அடைந்து மனம் தளர்ந்தனர். இனியும் தாக்குப்பிடிக்க இயலாது எனக் கண்டதும், அண்ணலார் அவர்களுக்கு ஆளனுப்பி தாங்கள் ஊரைக் காலி செய்து கொண்டு வெளியேறி விடுவதாகத் தகவல் தெரிவித்தார்கள். யூதர்களின் கோரிக்கையைப் பெருமானார் பெருந்தன்மையுடன் ஏற்று ஆயுதங்களைத் தவிர மற்றவையனைத்தையும் எடுத்துச் செல்ல அனுமதித்தார்கள். தங்களுக்குரிய தண்டனையைப் பெற்றுக் கொண்ட பனூ நுலைர்கள் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களுடன் வீடு வாசல்களிலிருந்த நிலை, கதவு, ஜன்னல்களையும் பெயர்த்தெடுத்து, அறு நூறு ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு மேள தாளத்துடனும், மகிழ்ச்சி ஆரவாரத்துடனும் அக்கிராமத்தைக் காலிசெய்து கொண்டு சிரியாவை நோக்கிப் பிரயாணமானார்கள். இவர்கள் 3000 பேர்களெனச் சொல்லப்படுகிறது.

வெளியேறியவர்களில் சில குடும்பங்கள் மதீனாவுக்கு வடக்கே 100 மைல் தொலைவிலுள்ள கைபர் பள்ளத்தாக்கில் சென்று குடியேறினர். இவர்களில் ஸ ல்லாம்பின் அபுல் ஹுகைக், கினானா பின் அல்ரபீ பின் அபுல் ஹுகைக், ஹுயை பின் அக்தப் குறிப்பிடத்தக்கவர்கள். யாமின் பின் உமைர் ஜிஹாஷ், அபூஸஅத் பின் வஹ்ப் என்ற இரு யூதர்கள் மட்டும் இஸ்லாத்தைத் தழுவித் தங்கள் சொந்த இடத்திலேயே தங்கிச் சொத்துப் பற்றுக்களுடன் வாழ்ந்து வந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் இறுதித் தூதரவர்களுக்கு வீரர்களின் தேவையைப் போன்று எழுத்தர்களின் தேவையும் அதிகமுக்கியமாகக் காணப்பட்டது. ஹீப்ரு, சிரிய மொழிகளில் பல கூட்டத்தினரின் தலைவர்களுக்கு மடல்கள் தீட்டவும் அம்மொழிகளில் வரும் லிகிதங்களை அரபியில் மொழி பெயர்த்துச் சொல்லவும், முஸ்லிமல்லாதாரை பெரும்பாலும் யூதர்களை நம்புவது தவறாகவும் பலவீனமாகவும் தோன்றியது. எனவே பெருமானார், கூரிய அறிவும் மனன சக்தியுமிக்க பதினாறு வயதுடைய தங்களின் தோழர் ஜைது இப்னு தாபித் என்பவரை அவ்விரு மொழிகளையும் விரைவில் கற்றுத் தேறுமாறு பணித்தார்கள். அவரும் அவ்வாறே இருவாரங்களில் அவற்றைக் கற்றுத் தேர்ந்தார். அத்துடன் அவர் கிரேக்க, பாரஸீக, கிப்தி, அபிசீனியப் பன் மொழிகளையும் கற்று நபிகள் நாதரின் சிறந்த மொழி பெயர்ப்பாளராக விளங்கினார். பெருமானாரின் (வஹி) பதிவு செய்து கொள்வதற்கான எழுத்தர்கள் இவருள்பட 40 பேர்வரை இருந்தனர்.

**உயிர்காப்பவன் இறைவன்**

கத்.ஃ.பான் என்னும் பாலைவன அரபுக்கூட்டத்தினர் தொடர்ந்து முஸ்லிம்களுக்குத் தொல்லைகள் விளைவித்துக் கொண்டிருந்தனர். இவர்களை அடக்குவதற்குப்

பெருமானார் சுமார் 500 வீரர்களுடன் ஹிஜ்ரி 4, ஜமாதில் அவ்வலில் தாத்துர் ரிகா∴ என்னுமிடத்திற்குப் போர் மேல் சென்றார்கள். பெருமானாரின் போர்க்கோலங்கண்டு அஞ்சியவர்களாய் அக்கூட்டத்தார், எதிர்க்கத் துணிவற்று, அருகிலிருந்த குன்றுகளில் ஓடிப்போய்ப் பதுங்கிக் கொண்டனர். இப்போரிலிருந்து திரும்பி வரும்போது வழியில் பெருமழை பெய்ததால் அனைவரும் நனைந்து தொப்பலாடினர். மழை நின்றதும் அவர்கள் ஓரிடத்தில் தாமதித்துச் சிரம பரிகாரம் செய்துகொண்டு ஆடைகளையும் உலர்த்திக் கொண்டனர். அவ்விடத்தில் மாநபியவர்கள் தனிமையாக ஒரு மரத்தடியில் தங்கள் வாளை அருகில் வைத்துவிட்டு – மரத்தில் தொங்கவிட்டு வைத்ததாகவும் கூறுவர் – சிறுது நித்திரை கொண்டார்கள்.

அது சமயம், அப்பக்கமாக பனு முஹாரிப் வர்க்கத்தைச் சேர்ந்த கவ்ரத் என்பார் திடுமெனக் குதிரை மீது வந்து சேர்ந்தார். பெருமானார் படுத்திருப்பதையும் பக்கத்தில் வாள் கிடப்பதையும் கவனித்து விட்டார். கவ்ரத் சட்டெனக் குதிரையை விட்டிறங்கி, மெதுவாக வந்து, வாளைக் கையிலெடுத்துக் கொண்டார். அப்போது பெருமானாரும் விழித்துக் கொண்டார்கள். தங்களின் வாள் கவ்ரத்தின் கையிலிருப்பதைக் கண்டார்கள். அவர் அண்ணலார் மீது கவ்வடித்து நின்றவராக, “இந்த வாளுக்கு உம்மை நான் இரையாக்க முனைந்தால் யார் உம்மைக் காப்பாற்றுவார்?” என வினவினார். “இறைவன்” என்ற வார்த்தை அமைதியாக அவர்களின் திருவாயினின்று வெளிவந்தது. சற்றும் எதிர்பாராத இம்மந்திரச் சொல் அவர் செவியில் பட்டதுதான் தாமதம், கவ்ரத்தின் உள்ளமும் உடலும் ஒரு சேர நடுங்கி வெலவெலத்தன, அவரது கையிலிருந்த வள் தானே நழுவி விழுந்தது. சட்டெனத் தாவி வாளைக் கையிலெடுத்த நபிகள் கோமான், “ஏ மனிதனே! இப்போது உம்மை காப்பாற்றுவது யார்?” என வினவினார்கள். அவர் யாதும் வகையறியாது, “நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்” எனப் பரிதாபத்துடன் மன்றாடி நின்றார். அவரை நோக்கிக் கருணையங் கடலாம் காத்தமுந் நபியவர்கள், “இல்லை இல்லை, உம்மையும் இறைவனே காப்பாற்றினான், உம்மை நான் எதுவும் செய்யப் போவதில்லை, நீர் சுகமாகச் செல்லலாம்” எனக் கூறினார்கள். கன்னல் நபிகளாரின் கனிவினைக் கண்ட கவ்ரத் மனந்திருந்தியவராக அக்கணமே கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார். பின்னர், தம் கூட்டத்தாரையும் இஸ்லாத்தை ஏற்குமாறு செய்தார்.

## மிரட்டல் தந்திரம்

பனூ நுலைர்களை நாடு கடத்தியபின் சுமார் ஓராண்டு காலம் மதீனாவில் அமைதி நிலவியது. இப்போது உமர் அவர்களிடம் முன் சூளுரைத்தபடி அபூசுப்யான், பத்ருப் போர்க்களத்தில் முஸ்லிம்களை மீண்டும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானார். இரண்டாயிரம் வீரர்களோடும் ஐம்பது குதிரைகளோடும் அவர் பத்ரு நோக்கிப் புறப்பட்டார். இரண்டு நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்து உஸ்பான் (மஜன்னா) என்னும் இடத்தை அடைந்தனர். அவ்வருடம் மழையில்லாமல் கடும் பஞ்சமேற்பட்டிருந்தால் வழியில் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் போதிய உணவும் தண்ணீரும் கிடைக்கவில்லை ஆனதால், வந்தவர்கள் சந்தர்ப்பம் சரியில்லை எனக் கருதியவர்களாய் மக்கா திரும்பினர்.

தம் முயற்சியில் பின்னடைந்த அபூசுப்யான், “குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை” என்ற முறையில் ஒரு மிரட்டல் தந்திரத்தைக் கையாண்டார். நயீம் என்ற ஒரு சாதுர்யமான பேச்சாளரைத் தேர்ந்தெடுத்து, அவர் மதீனா சென்று அங்குள்ள மக்களிடையே குறைஷிகள் உஹுதைவிடப் பெரும்போர் ஒன்றுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்துப் புறப்படும் தருவாயிலிருப்பதாக வதந்தி பரப்பச் சொன்னார். நயீம் மதீனா வந்து மிக்கத் திறமையுடன் இச்செய்தியைப் பரப்பி முஸ்லிம்களைப் பீதியடையச் செய்தார். இது போல் அடிக்கடி எழுந்த போர் வதந்திகளால் மதீனாவாசிகள் போர் மீது செல்வதில் ஆர்வமற்றவர்களாய்த் தங்கள் விவசாயத்தில் நோக்கங் கொண்டனர்.

இதனையறிந்த இறைவனின் திருத்தூதர் முஸ்லிம்களின் அசிரத்தையில் வருத்தமுற்றவர்களாய் “யார் வந்தாலும் வராவிட்டாலும் நான் மட்டும் தனியாகப் பத்ருப் போர்க்களம் சென்று குறைஷிகளைச் சந்திப்பேன்” என வீர கர்ஜனை செய்தார்கள். அண்ணலவர்களின் இவ்வாக்ரோஷ வார்த்தைகள் அசந்திருந்த முஸ்லிம்களை ஆர்த்தெழச் செய்தன.

பத்ரு, பெரியதொரு சந்தை கூடுமிடமானதால், வியாபாரத்திற்கான சரக்குகளுடனும் ஆயிரத்தி ஐந்நூறு வீரர்களுடனும் ஹிஜ்ரி 4 ஷ.்.பானில் பெருமானார் அதனை நோக்கிப் புறப்பட்டார்கள். பத்ருப் பள்ளத்தாக்கை அடைந்து எட்டு தினங்கள் வரை தாமதித்துக் குறைஷிகளின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். நயீம் பரப்பிய வதந்தி பொய்யானதென்று கண்டார்கள். எனவே, தாங்கள் கொண்டு சென்ற வியாபாரப் பொருட்களை சந்தையில் நல்ல இலாபத்திற்கு விற்பனை செய்து கொண்டு அனைவரும் மதீனா திரும்பினார்கள். இதையே இஸ்லாமியச் சரித்திராசிரியர்கள் “இரண்டாவது பத்ருப் போர்” என குறிப்பிடுகின்றனர்.

**திருமணங்களும் மது விலக்கும்**

ஹிஜ்ரி 3ம் ஆண்டு இறுதியில் பெருமானார் அவர்கள் ஜைனப் பின்து குஸைமா என்னும் விதவையை மறுமணம் செய்து கொண்டார்கள். இவ்வம்மையாரின் கணவர் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உஹுதுப்போரில் மரணமாகி விட்டார்.

திருமணமாகிச் சுமார் எட்டு மாதங்களில் இவர் காலமாகி விட்டார். ஹிஜ்ரி 4ம் ஆண்டு ஷவ்வால் மாதம் பெருமானார் உம்மு ஸல்மா என்னும் மற்றொரு விதவையையும் திருமணம் செய்து கொண்டார்கள். இவருடைய கணவர் அப்துல்லாஹ் பின் அஸது என்பவரும் உஹுதுப் போரில் உயிர் நீத்தனர். குழந்தை குட்டிகளுடன் விதவையாகி விட்ட இவ்வம்மையாரைப் பாதுகாக்கும் பொருட்டுத் திருநபியவர்கள் இத்திருமணத்தைச் செய்து கொண்டார்கள்.

ஹிஜ்ரி 5ம் ஆண்டு மத்தியில் அண்ணலார் தங்கள் வளர்ப்பு மகன் ஜைது மணவிடுதலை அளித்த தங்களது அத்தை உமைமாவின் மகள் ஜைனப் பின்து ஜஹ்ஷையும் மறுமணம் செய் கொண்டார்கள். ஒரு ஹபஷீ அடிமையை மணந்த காரணத்திற்காக மகிக் அழகுடைய இவரை நீண்ட காலமாகக் குறைஷிகளில் யாரும் மறுமணம் புரிய மனங்கொள்ளாததால் பெருமானாரே முன் வந்து இம்மாதரசியை

மணம் புரிந்து இவரின் வாழ்க்கையை மலரச் செய்தார்கள். அப்போது ஜைனப் நாச்சியார் 35 வயதை அடைந்திருந்தார்.

இவ்வாண்டில் தான் விக்கிரக வணக்கம் புரியும் பெண்களை முஸ்லிம்கள் விவாகம் செய்யக் கூடாதென்றும், அத்தகைய ஆண்களை முஸ்லிம் பெண்கள் கணவராகக் கொள்ளக்கூடாதென்றும் இறைக்கட்டளை பிறந்தது. மேலும், பெண்கள் தங்கள் அழகை வெளிக்காட்டும் வண்ணம் ஆடையலங்காரம் செய்து கொண்டு வெளிச்செல்லலாகாதென்றும், உடலை நன்கு மூடியவர்களாய் புர்கா அணிந்து செல்ல வேண்டுமெனவும், வேற்று ஆண்களுடன் நேர்முகமாயல்லாது திரைக்குப் பின் மறைவிலிருந்து தான் உரையாட வேண்டுமெனவும் திருவசனங்கள் வெளியாயின.

மதுவிலக்குப் பற்றிய கட்டளையும் இத் தருணத்தில் தான் வெளியாயிற்று. மது அருந்தக்கூடாதென்று இறைக்கட்டளை மதீனாவெங்கும் பிரகடனம் செய்யப்பட்டதைக் கேள்வியுற்றதும் தாங்கள் வருடக் கணக்காக சேமித்து வைத்திருந்த பழம்பட்ட மதுவையும், அழகிய மதுப்பாத்திரங்கள், மதுக்கிண்ணங்களையும், வீதிகளில் கொண்டு வந்து கொட்டி உடைத்தெறிந்தனர். வீதிகளெங்கும் மதுபானம் வெள்ளமாகப் புரண்டோடியது. இக்கட்டளை வெளியான அந்த வினாடியிலிருந்து மதுவை எவருக்கும் விற்பதோ அல்லது விற்ற பணத்தை எக்காரியத்திற்கும் பயன்படுத்துவதோ ஆகாதென்றாகி விட்டது. இத்தகையதொரு அற்புத சாதனையை அல்லது அதிலொரு சிறிய அளவைக் கூட இன்று நாகரிக அரசுகளெனக் கூறிக் கொள்ளும் பேரரசுகள் கூட சாதிக்க இயலாது திண்டாடித் தோல்வியுற்று நிற்கின்றன. ஆனால், இஸ்லாம், இதை இணையற்ற வகையில் சாதித்துக் காட்டி உலகின் கால்வாசி மக்களை, மதிகெடுக்கும் மது அரக்கனின் கொடும் பிடியிலிருந்தும் காப்பாற்றி, ஈடேற்றியுள்ளது. என்னே, அதன் ஒப்பற்ற சாதனை!.

**பனூ முஸ்தலிக்**

இதே ஹிஜ்ரி 5ம் ஆண்டு ஷஃபான் மாதம், (கி.பி. 627 டிசம்பர்) மதீனாவுக்கு மேற்கேயுள்ள முரைஸிஃ என்னுமிடத்தில் வசித்த பனூ முஸ்தலிக் கூட்டத்தார் குறைஷிகளுடன் சேர்ந்து மதீனாவைத் தாக்குவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்ற தகவல் முஸ்லிம் ஒற்றவர்கள் மூலம் பெருமானார் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிய வந்தது. எனவே, பெரும்படையொன்னைத் திரட்டிக் கொண்டு எட்டு நாட்கள் பிரயாணம் செய்து, கடற்கரையை அடுத்துள்ள முரையிஃ கிணறுகள் இருக்கும் இடத்தை அடைந்தார்கள். முஸ்தலிக்குகளுக்கு உதவி செய்ய யாரும் முன் வரவில்லை. ஆனதால், அவர்களின் தலைவன் ஹாரிது பின் ஜிராரும் அவனது சேனை வீரர்களும் ஊரை விட்டு ஓடிவிட்டனர். ஊர் மக்கள் தாங்களாக ஒன்று திரண்டு முஸ்லிம்களை எதிர்த்தனர். ஆனால் முஸ்லிம்கள் அவர்களைச் சுற்றி வளைத்து 200 குடும்பத்தாரைச் சேர்ந்த 600 பேரைச் சிறைபிடித்தனர்.

சிறைப்பட்டவர்களில் ஹாரிதின் மகளான ஜுவைரியாவும் ஒருவர். இவரது கணவர் முஸ்அப் பின் ஸப்வான், இப்போரில் இறந்துவிட்டார். இவர் விதவையாகி விட்டார். ஹாரிது பெருமானாரை அண்மி, தம் குடும்ப அந்தஸஸதைக் கரதியாவது தம் மக்களுக்கு விடுதலை அளிக்குமாறு வேண்டினார். அதற்கு பெருமானார், அவ்வம்மையார் தம் தந்தையுடன் செல்ல இசைந்ததால் விடுதலை அளித்து அனுப்பி விடுவதாகக் கூறினார்கள். தந்தை தம் புதல்வியை அணுகி விஷயத்தை

எடுத்துரைத்தார். அதற்கு ஜுவைரியா, "நான் அண்ணலவர்களின் ஊழியத்தில் இருந்து கொள்ளவே விரும்புகிறேன்," எனக் கூறி உடன் செல்ல மறுத்து விட்டார். ஜுவைரியாவின் விருப்பந் தெரிந்து 300 திர்ஹம் மஹர் கொடுத்து அண்ணலார் அவரைத் திருமணம் புரிந்து கொண்டார்கள். அவருக்கும் அவரின் கூட்டத்தார் அனைவருக்கும் தோழர்களின் சம்மதம் பெற்று விடுதலை வழங்கி விட்டார்கள். அவர்களெல்லாரும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர்.

**களங்கம் கற்பித்தனர்**

பனூ முஸ்தலிக் கூட்டத்தாரைக் கட்டுபடுத்தி விட்டு முஸ்லிம்கள் மதீனா திரும்பும் வழியில் பொழுது சாங்ந்து விட்டதால், அனைவரும் ஓரிடத்தில் பாளையமிறங்கினார்கள். பெருமானார் போர் மேல் சென்றாலும் அல்லது வெளியூர் சென்றாலும் திருவுளச் சீட்டுக் குலுக்கித் தங்கள் துணைவியருள் ஒருவரை உடனழைத்துச் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. இப்பயணத்தின் போது ஆயிஷா நாச்சியாரை அழைத்துச் செல்ல நேரிட்டது. பாளையமிறங்கி இடத்தில் ஆயிஷா நாச்சியார் ஒதுக்குப்புறம் செல்ல நேர்ந்தது. அங்கிருந்து திரும்பியபோது தம் கழுத்தில் அணிந்திருந்த கண்டசரம் நழுவி விட்டதை அறிந்தார். உடனே தாம் சென்று வந்த பாதை வழியே அதைத் தேடிச் சென்று கண்டெடுத்து வருவதற்குள், பெருமானாரின் உத்தரவுக் கிணங்க பாளையம் புறப்பட்டு விட்டது. ஆயிஷா நாச்சியார் பின் தங்கிவிட்ட விஷயம் யாருக்கும் தெரியாது. அவரது ஒட்டகமோட்டியும் கவனிக்கவில்லை.

இந்த முஸ்தலிக் நடவடிக்கைக்குச் சில தினங்கள் முன்னர்தான் பெண்கள் புர்கா அணிந்து வெளிச் செல்ல வேண்டுமென்ற இறைகட்டளை வெளியானது. அதற்கொப்ப, ஆயிஷா நாச்சியாரும் புர்கா அணிந்து மூடுபல்லக்கில் ஒட்டகையின் மீது பிரயாணம் செய்தார். ஒட்டகப் பாகன் ஆயிஷா நாச்சியார் பல்லக்கில் இல்லாததைக் கவனிக்கவில்லை. பாளையம் புறப்படும்போது அவர் பல்லக்கினுள் இருப்பதாகக் கருதிக்கொண்டு அவன் ஒட்டகத்தை ஓட்டிச் சென்றுவிட்டான்.

ஆயிஷா நாச்சியார் மாலையைக் கண்டெடுத்துக் கொண்டு பாளையமிறங்கிய இடத்தை அடைந்த போது அது வெறும் பொட்டலாகக் கிடந்ததைக் கண்டு திக்பிரமையும் திகிலும் அடைந்தார். செய்வதின்னதென்று அறியாது கிரங்கினார். ஒரு வேளை தம் ஒட்டகமோட்டி தம்மைத் தேடி அங்கு வரக்கூடுமென எண்ணியவராய்க் கவலை தோய்ந்து அங்கு காத்து நின்றார். வெகு நேரத்திற்குப் பின் படையினரின் தவறவிட்ட பொருட்களைக் கண்டெடுத்து வருவதற்காக நியமிக்கப்பட்ட சப்வான் பின் முஅத்தல் அல்ஸுலமி என்ற முஹாஜிர் இளைஞர் தமது ஒட்டகத்துடன் அங்கு வந்து சேர்ந்தார். இருட்டில் நின்ற உருவத்தை நெருங்கிப் பார்த்த போது அவர் பெருமானாரின் பிராட்டியார் ஆயிஷா நாயகி என்பதை அறிந்ததும் விதிர்ப்படைந்தார். விஷயத்தை யூகித்தறிந்த வாலிபர் அவரைத் தம் ஒட்டகத்தின் மீது ஏறிக் கொள்ளச் செய்து அதைத் துரிதமாகச் செலுத்திக் கொண்டு மதீனா வந்து சேர்ந்தார். அதற்கு சற்று முன்னதாகத் தான் பாளையம் மதீனாவை அடைந்தது.

முஸ்லிம்களைச் சிறுமைப்படுத்திக் காட்டுவதிலும் பழித்துரைப்பதிலும் முன்னுரிமை காட்டி வந்த அப்துல்லாஹ் இப்னு உபைக்கு இவ்விஷயம் காதுக்கு எட்டியது. வெறும் வாயை மெல்லுபவனுக்கு சிறிது அவல் கிடைத்தால் விடுவானா?

உடனே இப்னு உபை அதற்குக் கண், காது மூக்கெல்லாம் வைத்து ஆயிஷா நாச்சியார் மீது களங்கம் கற்பிக்க ஆரம்பித்து விட்டான். "கலைப்பார் கலைந்தால் முலைப்பாலும் நஞ்சு" என்பது போல் இப்னு உபை, மிஸ்தா பின் அதாதா, கவிஞர் ஹஸ்ஸான் பின் தாபித், ஜைனபின் சகோதரி ஹம்னா பின்து ஜஹ்ஷ் - இவள் முஸ்அப் பின் உமைரின் மனைவி - இவர்களின் களங்கப் பிரச்சாரம் மாநபியவர்களின் காதுக்கெட்டி அவர்களை மனம் குன்றச் செய்து விட்டது. ஆயிஷா நாச்சியாரும் உள்ளம் ஒடிந்து நோயுற்றார். ஆனதால் அவர் அண்ணலாரின் அனுமதியுடன் தந்தை அபூபக்கர் அவர்களின் இல்லம் சென்றார். ஒரு மாத காலம் வரை இந்த அபாண்ட அவதூறு ஓங்கி நின்றதே தவிர ஓயவில்லை. ஒடுங்கவில்லை.

ஒரு நாள் அண்ணலாரவர்கள் ஹலரத் அபூபக்கர் அவர்களின் இல்லம் வந்தார்கள். ஆயிஷா நாயகியிடம், இறைவன் பால் மன்னிப்புக் கோருமாறும் அவன் தன் அடியாரின் இறைஞ்சுதலை ஏற்பவன் எனவும் அறிவுரை பகர்ந்தார்கள். பெற்றோர், பெருமானாருக்குச் சமாதானங் கூறுவர் என்றெதிர்பார்த்து சிறிது நேரம் மவுனமாக இருந்தார் ஆயிஷா நாச்சியார். ஆனால் அவர்கள் வாயடைத்துப் போய் ஏதுங் கூறாதிருப்பதைக் கண்டு மனம் நொந்து, கண்ணீர் மடைதிறந்தவராய், "ஆண்டவன் மீது ஆணையாக நான் குற்றமற்றவள். நாதியற்றவள், நான் ற்றம்செய்தேன் எனக்கூறினால் அதை இறைவன் ஏற்க மாட்டான் நான் குற்றம் செய்யவில்லை என்றாலோ அதை மற்றவர் நம்ப மாட்டார்கள். அதனால் நான் பொறுமையைக் கடைப் பிடித்துள்ளேன். நிச்சயமாக இறைவன் எனக்கு உதவி புரிவான் எனக்கூறி முடித்தார்.

எல்லோரும் மௌனமாக அமர்ந்திருந்தனர், சற்று நேரத்தில் திருத்தூதரவர்களுக்கு நடுக்கம் காண ஆரம்பித்து வஹி வருவதன் அறிகுறிகள் காணப்பட்டன. அவர்களைப் படுக்க வைத்துப் போர்த்தினார்கள். அப்போது அவர்களுக்கு திருமறையின் 24:11,12 மற்ற திருவசனங்கள் இறங்கின. வஹீ நின்றதும் நாயகத் திருமேனி வியர்வை கொட்ட எழுந்து உட்கார்ந்து சுற்றி இருந்தவர்களிடம், வெளியான திருவசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். அவற்றில் ஆயிஷா நாச்சியாரின் களங்கமற்ற பரிசுத்தத் தன்மையை இறைவன் வெளிப்படுத்தியிருந்தான். அவற்றைச் செவியேற்ற ஆயிஷா நாச்சியார் "இறைவனே மிக மேலானவன், சர்வ புகழும் அவனுக்கே உரியன, என நன்றி கூறி மனந்தேறினார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹீ வந்ததனால் தான் ஆயிஷா நாச்சியாரின் களங்கம் நீங்கியதெனவும் அவர்களுக்கு எழுந்து நின்று நன்றி கூறுமாறும் ஆயிஷா நாச்சியாருக்கு அவரின் அன்னை எடுத்துக் காட்டிய போது " நான் அண்ணலார் அவர்களுக்கோ, உங்களுக்கோ அல்லது என் தந்தையாருக்கோ யாருக்கும் நன்றி கூற மாட்டேன். எனது ஒப்பற்ற இறைவனுக்கு மட்டிலுமே நான் நன்றி கூறுவேன். அவன் தான் தன் திருவசனத்தின் மூலம் எனது ஒழுக்கத்தின் பரிசுத்தத் தன்மையை வெளிப்படுத்திக் காண்பித்தான். உங்களில் எவரும் என் மீதான களங்கத்தை மறுத்து ஒரு வார்த்தையேனும் உதிர்க்கவில்லை. உதிர்க்கத் துணியவில்லை" என்ற பதிலை கம்பீரத்துடன் கணீரெனக் கூறினார் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா.

ஆயிஷா நாச்சியாரின் அறிவுத் திறனைக் கண்டு அண்ணலார் அகம் பூரித்தார்கள். இந்த அவதூறில் சம்பந்தப்படுத்தப்பட்ட சப்வான் பின் முஅத்தல்

ஆண்மையற்ற நபும்சகன் என்பது பின்னால் தெரியவந்தது. இப்னு உபையும் மற்றவர்களும் அவமானமுற்றனர்.

விபச்சாரத்திற்குரிய தண்டனை இன்னதென விளக்கியும் தண்ணீர் கிடைக்காத போதும் நோயுறும் காலங்களிலும் தயம்மம் செய்து கொண்டு தொழுகையை நிறைவேற்றலாமென்ற சலுகையளித்தும் திருவசனங்கள் இச்சந்தர்ப்பத்தில் வெளியாயின.

**அகழ் ஒரு புதுமை**

நாடு கடத்தப்பட்டு கைபர் சென்று குடியேறிய நுலைர் வம்சத்து யூதர்கள், நாயகம் அவர்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் வன்மம் பூண்டிருந்தனர். இஸ்லாத்தை அடியோடு கல்லி எறிவதற்குத் திட்டம் தீட்டினர். இவர்களைப் போன்றே நாடோடி அரபிகளும், குறைஷிகளும், முஸ்லிம்களை ஒழித்துக் கட்டுவதற்கு வழி காண முயன்றனர். இந்த ஏற்பாட்டில் நுலைர் வமிச யூதர்கள் மக்கா குறைஷிகளிடம் சென்று, முஸ்லிம்களுக்கு விரோதமான சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பெரும் படை திரட்டிச் சென்று மதீனா மீது தாக்குதல் நடத்தினால் நிச்சயம் வெற்றி கிடைக்குமென ஆலோசனை கூறினர். இத்திட்டம் குறைஷிகளுக்கு மிக்க நம்பிக்கை ஊட்டியது. ஆகவே, குறைஷிகளும், யூதர்களும், பாலைவன அராபியர்களும் ஒன்று சேர்ந்து பெரும் படையொன்றைத் திரட்டிப் பெரியதொரு முஸ்தீபைச் செய்தனர். இத்தாக்குதலுக்கென 10,000 காலாட்படை வீரர்களும் சிலர் 24,000 என்பர் – 300 குதிரை வீரர்களும், 1,500 ஒட்டகைப் படையினரும், போதிய கவசங்கள், ஆயுதங்களும் திரட்டப்பட்டன. இம்முக்கூட்டுப் படைக்கு அபூசுப்யானே மகா தளபதியாக விளங்கினார். படையும், மூன்றாகப் பிரிந்து, மூன்று திசைகளில் மதீனாவை நோக்கிப் புறப்பட்டது.

குறைஷியங் குழுவு மளவில்க னானாக்
கூட்டமும் ஹபஷிவெம் படையு
மிறுதியில் வேகத் துரகதம் பதினா
யிரமுமீண் டிடவரை கிடந்த
திறலரி யேய்ந்த இக்கிரி மாவுந்
தீரன பாசுபி யானு
முறையொடும் றூமா வென்னுமத் தலத்தி
லிறங்கினர் முனைப்பதி யமைத்தார்.

குறைஷிகளின் பெரும்படை புறப்பட்டு விட்ட செய்தியை முஸ்லிம்களுக்கு அனுசரணையான கூட்டத்தார் அண்ணலாருக்கு முற்கூட்டியே ஆளனுப்பித் தெரியப்படுத்தினர். உடனே பெருமானார் தங்கள் தோழர்களைக் கூட்டி ஆலோசனை கலந்தார்கள். பாரஸீக நாட்டைச் சேர்ந்த சல்மான் பார்ஸீ என்ற முதுபெருந் தோழர் - இவர் ஹிஜ்ரி 2ம் ஆண்டு மதீனா வந்து இஸ்லாத்தைத் தழுவினார். – எழுந்து "பெருமானே! குறைஷிகளின் படை எண்ணிக்கையால் அதிகமிருப்பதால், அவர்களுடன் சமதரையில் நேருக்கு நேர் நின்று சண்டை செய்வது பலனளிக்காது அவர்க்ள மதீனாவுக்குள் பிரவேசிக்கா வண்ணம் தடுத்து நிறுத்தும் விதமாகப் பட்டணத்தைச் சுற்றி அகலமும் ஆழமும் கொண்ட அகழ் உண்டாக்கி அதை நமக்கு அரணாக

வைத்து எதிரிகளை எதிர்த்தால் வெற்றி கிட்டும்” என யோசனை கூறினார். அகழ் தோண்டி போரிடும் முறை பாரஸீகத்தில் வழக்கிலிருந்து வருவதை அவர் அறிவார். ஆனால் அரபு நாட்டுக்கு அது ஒரு புதுமையான யுத்த முறையாகும். சல்மான் பார்ஸீ அவர்களின் இந்த யோசனை அண்ணலாரவர்களுக்கும் அங்கிருந்த தோழர்களுக்கு முற்றிலும் பிடித்தமானதாக இருந்தது. எனவே, உடனடியாக அகழ் தோண்டும் பணியினை ஆரம்பித்தார்கள்.

மதீனாவின் மூன்று பக்கங்களில் கட்டிடச் சுவர்களும், சிறு குன்றுகளும், கோட்டை, கொத்தளங்களும் நிறைந்தது அதை அரண் செய்தன. சிரியா செல்லும் பாட்டை அமைந்துள்ள வடமேற்குப் பகுதி மட்டும் திறவையாகக் கிடந்தது. இப்பகுதியில் தான் அகழ் தோண்டிப் பாதுகாப்புச் செய்ய வேண்டியிருந்தது. இதுவே எதிரிகளின் ஊடுருவலுக்கு இலக்காகக் கூடிய பலஹீனமான பகுதியாகவும் இருந்தது. நபிகள் கோமான் தங்களின் திருத்தோழர்களில் 3000 பேரைத் திரட்டிக் கொண்டு வந்து இங்கு அகழ் தோண்டும் பணியை ஆரம்பித்தார்கள். பத்துப் பத்துப் பேர் கொண்ட கோஷ்டியும் 20 முழச் சதுரமும் 10 முழ ஆழமுங் கொண்ட அகழைத் தோண்டுவதற்கு, அதிகப்படியாகத் தேவைப்பட்ட மண்வெட்டி, கடப்பாறை, கூடை, குந்தாலிகளை மக்கத்தில் வசித்த ஒப்பந்தக் காரர்களான பனூ குறைலா யூதர்களிமிருந்தும் இரவல் பெற்றுக் கொண்டார்கள். அகழின் மொத்த நீளம் சுமார் (மூன்றரை மைல்) ஐந்தரை கிலோ மீட்டராக இருந்தது.

### முப்பெரும் வெற்றியின் முன்னறிவிப்பு

அகழ் தோண்டும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது, மற்ற தோழர்களைப் போலவே மாநபியவர்களும் மண் வெட்டினார்கள். கல் சுமந்தார்கள். வேலைச் சிரமம் தோன்றாதிருக்கவும், வேலையில் உற்சாகமூட்டவும் ஏற்ற வகையில் இறைவனின் புகழ்பாடி அருள் கூறும் பண்களை இசைத்தவர்களாய் அனைவரும் பணியைத் தொடர்ந்தனர்.

இந்நிலையில் அகழிப்பகுதியின் ஓரிடத்தில் பாறை ஒன்று குறுக்கிட்டது. அதைப் பிளக்கப் பலர் முயன்றும் அசையாது உறுதியுடன் நின்றது. தோழர்கள், இதனை நபிகள் கோமானின் கவனத்திற்கு எட்டி வைத்தனர். நபி பெருமானார் அவ்விடத்திற்கு வந்தார்கள். பாறையைப் பார்வையிட்டார்கள். தோழர் ஒருவரின் இவர் ஸல்மான் பார்ஸி எனக்கூறப்படுகிறது. கையிலிருந்த குந்தாலியை வாங்கி அப்பாறையை ஓங்கி வெட்டினார்கள். பாறை வெடிப்புக் கண்டதுடன் அதிலிருந்து ஒரு சுடரும் வீசியது. இதைக் கண்ட அண்ணலார் “அல்லாஹு அக்பர்” என முழங்கினார். சுற்றி நின்றவர்களும் அவ்வாறே முழக்கம் செய்தனர். இரண்டு, மூன்றாம் முறை வெட்டியபோதும் அவ்வாறே நிகழ்ந்தது. பாறை இப்போது நன்றாகப் பிளந்து அகழை ஆழப்படுத்த வழி கொடுத்தது.

இந்நிகழ்ச்சி பற்றி நபிகள் அங்கு நின்ற தோழர்களிடம் விரித்துரைக்கையில் முதல் அடியின் போது வெளிப்பட்ட சுடரில் சிரியாவிலுள்ள ரோமனிய மன்னரின் சிவப்பு அரண்மனையும், இண்டாவது அடியின் போது வெளிப் பட்ட சுடரில் மதாயின் நகரிலுள்ள பாரசீக மன்னரின் வெள்ளை அரண்மனையும் மணி மகுடமும், மூன்றாவது அடியின் போது வெளிப்பட்ட சுடரில் எமன் நாட்டுத் தலைநகரான ஸன்ஆவின்

நுழைவாயிலும், கொலு மண்டமும் தமக்குக் காட்சியளித்தன என்றும், அது போழ்து வானவர் தோன்றி இவை மூன்றும் விரைவிலே முஸ்லிம்களின் கைவசத்திலாகுமென நன்மாராயங் கூறிச் சென்றதாகவும் வியாக்யானித்தார்கள். இச்சுபச் செய்தியினைக் கேள்வியுற்ற முஸ்லிம்கள் பெருவகையும், பெருமகிழ்ச்சியும் கொண்டனர்.

இரவு பகலாக வேலை செய்து முஸ்லிம்கள் இந்த அகழை ஆறு தினங்களில் சிலர் 20 தினங்களெனவும் கூறுகின்றனர். வெட்டி முடித்தார்கள். பின்னர், பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பான கோட்டைகளில் கொண்டு போய் வைத்தனர். மதீனாவுக்குள் ஊர்ப் பாதுகாப்புக்கென உஷார் படையொன்றும் நிறுவப் பெற்றது. எல்லாவித முஸ்தீபுகளையும் செய்து விட்டு, ஹிஜ்ரி 5ம் ஆண்டு துல்க..்தா மாதம் மத்தியில் (கி.பி. 627 மார்ச்) முஸ்லிம்கள் எதிரிகளின் பெரும் படையை எதிர்க்கும் போருக்குத் தயாராயினர்.

எதிரிகள் இப்போது உஹதுப் பள்ளத்தாக்கைக் கடந்து உத்வேகத்துடன் வந்து கொண்டிருக்கும் தகவல் பெருமானார் அவர்களுக்கு கிடைத்தது. உடனே, தங்களின் 3000 வீரர்களையும் வில், அம்பு, வாள், ஈட்டி, கேடயங்களுடன் ஸல் குன்றை முதுகுப்புறமாக வைத்து அகழை முகப்படுததி அதன் நெடுகிலும் நிறுத்தினார்கள். திடீரென தூரத்தில் அடிவானம் கறுத்துப் புழுதிப் படலங்கள் பரவின. அவற்றினூடே படைக்கடல் ஒன்று வந்து கொண்டிருப்பது முஸ்லிம்களின் கண்களுக்குத் தெரிந்தது. ”பதினாயிரம் பேர் இருக்கும்” இல்லை இருபதினாயிரம் பேர் இருப்பர்” என அவர்களுக்குள் பேசி நிதானிக்கலாயினர்.

உஹதுப் பள்ளத்தாக்கில் முஸ்லிம் வீரர்களைக் காணாதவராய் ”ஏது முஹம்மதுவுக்கு இன்று நம்முடன் போரிடத் துணிவு பிறக்கவில்லை போலும்” என்று எண்ணிய அபூசுப்யான் தமது படையை மதீனாவை நோக்கித் துரிதமாகச் செலுத்தினான். தூரத்திலிருந்து பார்க்கும் போது மதீனா பாதுகாப்பற்றுத் திறந்து கிடக்கும் நகரம் போல் எதிரிகளுக்குத் தோற்றமளித்தது. அது ஒரு வகையில் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. அதனால், குதிரைப்படை, ஒட்டகப்படை, காலாட்படை, ஆகிய முப்படைகளும் அணியணியாகப் பாய்ந்து பறந்து வந்தன. முன்னால் வந்த குதிரைப் படையானது அகழை நெருங்கியதும் மேற்கொண்டு முன்னேற முடியாது சட்டென நின்று விட்டது. வாய் பிளந்தவாறு புதிதாகத் தோன்றி நிற்கும் அகழைக் கடந்து தான் மதீனாவுக்குள் நுழைய வேண்டுமென்பதைக் கண்டதும் எதிரிகள் திக்பிரமையடைந்து விட்டனர். அவர்கள் போட்டு வந்த கணக்கு தப்பாகப் போய் விட்டது. இவ்வித அகழை அவர்கள் அரபு நாடெங்கிலும் கண்டதே இல்லை. வந்த வேகத்தில் முனை மழுக்கப்பட்டு நெஞ்சைப் பிடித்துத் தள்ளியது போலிருந்தது. அகழ்க்கரையிலிருந்து எதிரிகளின் குதிரைப் படை சற்று பின்வாங்கியது. ஒட்டகை, காலாட்படைகளும் அப்படியே!.

எதிரிகளுக்கு முஸ்லிம்களுடன் நேருக்கு நேர் நின்று போரிடும் வாய்ப்பு அற்றுப் போனதால் அகழிகள் எதிர் கரையில் நின்று கொண்டு முஸ்லிம்களின் மீது அம்பு மழை பொழியத் துவங்கினர். முஸ்லிம்களும் பதிலுக்கு எதிரிகளை நோக்கி அம்புகளை ஏவினர். ஒரு நாளில் போரை முடித்துக் கொண்டு வெற்றி வாகை சூடி வீடு திரும்புவதென திட்டமிட்டு வந்த முக்கூட்டு முப்படையினரும் தங்களின் மனக் கோட்டை மணல் கோட்டையாகச் சரிந்தது கண்டு மனக்கலக்கம் அடைந்தனர். இரண்டு வாரங்கள் முற்றுகையிட்டும் பலன் எதுவும் கண்டிலர். தங்களுடன் கொண்டு

வந்த ஆகாரங்களும் தீனிகளும் தின்று தீர்ந்து விட்டன. எனவே, அவர்கள் நம்பிக்கையிழந்தனர். ஊக்கங் குன்றினர். பலர் நழுவிச் சென்றனர். தலைவர்களென்போர் திகைப்படைந்தனர்.

**பனூ குறைலா யூதர்களின் துரோகம்**

கைபரில் குடியேறிய பனூ நுலைர் வம்சத்து யூதர்கள் குறைஷிகளுடன் கூட்டுச் சேர்ந்து போர் மீது வந்திருப்பதால் அவர்கள் முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்து கூடை, மண் வெட்டிகள் கொடுத்துதவியுள்ள பனூ குறைலா யூதர்களைக் கலைக்க முற்படக்கூடும் என்ற சந்தேகம் நபிகள் நாயகம் அவர்களுக்கு உதித்தது. எனவே ஜுபைர் இப்னு அவ்வாம் இவர் ஆயிஷா நாச்சியாரின் தமக்கை அஸ்மாவின் கணவர், பெருமானாருக்கும் அத்தை மகன் மற்றும் சில ஒற்றர்களை உளவறிந்து வரச் செய்ததில் அவர்களின் தகவலும் இதை உறுதிப்படுத்தியது. மாநபியவர்கள் மதீனாவுக்கு வருமுன்பே ஸஅத் இப்னு முஆத், ஸஅத் இப்னு உப்பாதா ஆகிய இரு அன்சாரிகளும் பனூ குரைலாக்களின் பெரு மதிப்பிற்குரியவர்களாய் இருந்து வந்தனர். இவ்விருவரிடமும் அண்ணலவர்கள், "நீங்களிருவரும் குறைலாக்களிடம் சென்று அவர்களின் உண்மை நிலையை அறிந்து வாருங்கள் அதனை என்னிடம் மட்டுமே இரகசியமாகத் தெரிவியுங்கள்" எனக்கூறி அனுப்பினார்கள். அன்சாரிகளிருவரும் சென்று குறைலாக்களின் தலைவர் கஅப் பின் அஸதையும் மற்றவர்களையும் கண்டு பேசியதில், பெருமானார் எண்ணியபடியே பனூ நுலைர் தலைவர்களில் சிலர் பனூ குறைலாக்களை அணுகி, முஸ்லிம்களின் ஆதிக்கம் வலுத்ததால் யூத வர்க்கமே அழிக்கப்பட்டுப் போகும் எனப் பயங்காட்டி ஒப்பந்தத்திற்கு மாற்றமாக அவர்களைக் குறைஷிகளுக்கு ஒத்தாசை புரிய ஏற்பாடு செய்துள்ளனர் என்ற உண்மையைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டனர். இதனை அறிந்த அன்சாரிகளிருவரும் குறைலாக்களிடம் பலவிதக் காரணங்களையும், சமாதானங்களையும் எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்த முயன்றனர். ஆனால் அவர்கள் ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளாதவர்களைப் போன்றும் பெருமானார் அவர்களைக் கண்ணியக் குறைவாகவும் பேசத் தலைப்பட்டனர். இருவரும் திரும்பி வந்து நபிகள் நாதரிடம் நடந்த விபரங்களைச் சொன்னார்கள். அன்சாரிகளின் வாய்மொழிக் கேட்டறிந்த அண்ணலார் மனதில் எதையோ எண்ணியவர்களாக மௌனித்து விட்டார்கள். உடனே குறைலாக்கள் வசித்த பக்கத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தினார்கள்.

**கல் ஒன்றல்ல இரண்டு**

பகைவர்களின் முற்றுகையால் வெளிப் போக்குவரத்தில்லாமல் மதீனாவுக்குள் அடைபட்டுக் கிடந்த மக்களும் வீரர்களும் பட்ட கஷ்டம் சொல்லுந் தரமன்று.

உணவுத் தட்டுப்பாட்டுடன் எதிரிகள் பட்டணத்திற்குள் ஊடுருவல் செய்து நுழைந்து விடா வண்ணம் இரவு பகல் விழித்திருந்து காவல் புரிய வேண்டியதும் ஏற்பட்டது. போதாக்குறைக்கு நயவஞ்சகன் அப்துல்லாஹ் இப்னு உபை தன் ஆட்களைக் கலைத்து போ அணியிலிருந்து நழுவி வீடு செல்லுமாறும் பண்ணிக் கழுத்தறுத்தான். எஃகு நிகர் நெஞ்சத்தினரான உண்மை முஸ்லிம்கள் பசியையும், பட்டினியையும், பனிக்கொடுமையையும் பாராட்டாது உறுதியுடன் நின்று போராடினர். நபிகள் கோமான் அவர்களிடம் ஹலரத் அபூ தல்ஹா அன்ஸாரி என்ற தோழர் தம் மேலங்கியை நீக்கி வயிற்றைக் காட்டிய போது அதில் ஒரு கல் வைத்துக்

கட்டப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த இறைவனின் இறுதித்தூதர், நபிமார்களின் மணிமகுடம், எம்பிரான் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களின் மணி வயிற்றைத் திறந்து காட்டிய போது அதில் இரண்டு கற்கள் வைத்துக் கட்டப்பட்டிருப்பதை அத்தோழர் கண்டு பேராச்சரியமடைந்தார். அண்ணலாரின் இணையற்ற பரித்தியாகத்தினை எண்ணி அவர் கண்கள் செந்நீர் வடித்தன. எனவே தான், இறைவன் தன் திருத்தூதரவர்களை மனிதர்களுக்கோர் சிறந்த முன் மாதிரி எனப் போற்றிப் புகழ்ந்துள்ளான்.

முற்றுகை மேலும் நீடித்தது. இதற்கிடையில் குறைஷிகளில் 90 வயதினரும் ஆஜானுபாகுவும் பராக்கிரமசாலியுமான அம்ருப்னு அப்தூத், மற்றும் நால்வருடன், அகழின் ஆழக்குறைவான பகுதியில் இறங்கி நின்று, தன்னுடன் பொருதுவதற்கு யாராகிலும் முன் வருவாரா என அடுத்தடுத்து அறை கூவல் விடுத்தான். ஹலரத் அலீ அவர்கள் அவனது சவாலை ஏற்று, பெருமானாரின் ஆசியைப் பெற்று, அகழிக்குள் இறங்கிப் போரிட்டு ஒரே வீச்சில் அவனைத் தங்களின் வாளுக்கிரையாக்கினார்கள். இப்னு அப்தூதின் அழிவு குறைஷிகளுக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

பெண்களின் நிலை யாதாயிற்றென்பதை இப்போது அறிந்து வருவோம். முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கோட்டையின் காவலாளியாக புலவர் ஹஸ்ஸான் இப்னு தாபித் என்பவரை நியமித்திருந்தார்கள். அவர் யுத்தப் பயிற்சி இல்லாதவர். அதிலும் சாதுவானவர். அக்கோட்டையின் அருகில் யூதர்களின் ஒற்றன் ஒருவர் சுற்றித் திரிந்து வேவு பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மீது சந்தேகமுற்ற அண்ணலாரின் அத்தை ஸபிய்யா அம்மையார் புலவர் ஹஸ்ஸானை ஏவி அவனைத் தாக்கச் சொன்னார். அதற்கவர் நாம் ஒரு புலவரென்றும், பாடத் தெரியுமன்றி படைக்களம் புகுந்ததில்லை. எழுதுகோல் பிடித்ததன்றி எ.்.கு வாள் ஏந்தியதில்லை எனக்கூறி யூதனைத் தாக்க மறுத்து விட்டார். உண்மையில் அவர் பாட்டு இசைப்பவரே அன்றி வாள் அசைத்தவரல்ல. உடனே ஸபிய்யா அம்மையார் அந்த யூத ஒற்றன் பின்னால் சென்று கழியொன்றால் அவனது மண்டையிலடித்துக் கீழே சாய்த்தார். மீண்டும் புலவரை ஏவி அவனின் தலையைக் கொய்து வரச் சொன்னார். அதற்கும் முடியாதென அவர் மறுத்து விட்டார். அதனால் ஸபிய்யா அம்மையாரே அவனது தலையைத் துண்டித்து கோட்டைச் சுவருக்கு வெளியே எறிந்து விட்டார். என்னே இப்பெண்மணியின் வீரமும் துணிவும்.

முற்றுகை இருபத்திரண்டு நாட்கள் - சிலர் இருபத்தி ஏழு நாட்கள் எனவும் கூறுவர் – நீடித்தும் குறைஷிகள் எந்த விதமான வெற்றிப் பலனையும் காண முடியவில்லை. ஒரு புதன்கிழமை மாலை, பெருமானாரின் பலநாள் பிரார்த்தனை அன்று இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படலாயின. இயற்கை இப்போது குறைஷிகளையும் அவர்களின் கூட்டாளிகளான யூதர்களையும், நாடோடி அராபியர்களையும் எதிர்த்துச் சதி செய்யத் துவங்கியது. கடுங்குளிருடன் கொடுங்காற்றும் சேர்ந்து கொண்டது. இவற்றின் குரூரத்தினாலும் கைவசம் தீனியற்ற நிலையிலும் குதிரைகளும் ஒட்டகங்களும் செத்து மடியலாயின.

கொண்டல் வேகமீக் கொண்டென முனைப்பதி குறுகிச்
சண்ட மாருதம் போல்விசைத் தடிக்கடி தாவிக்
கண்ட திக்கினும் பரந்துவெங் குளிரொடுங் காண

வண்ட மும்பெரும் பூமியு நடுங்கிட வடித்த
திசைக டோறுமொண்டெறிந்தகார்க் குறுந்துளித்திவலை
விசையி னோடும்வந் தடித்தலுங் குளிரினான்மெலிந்து
குசைகொள் வாம்பரி யொட்டக மெருதொடு கொடுகி
நகைகொள் பாசறை யிடந்தொறு மடிக்கடி நடுங்கும் - சீறா

ஒரு தடவை, கைபரின் யூதத் தலைவன் ஹுயை இப்னு அக்தப் இவர்களுக்கு 20 ஒட்டகைகளில் உணவுப் பொருளும் பழங்களும் அனுப்பி வைத்தான். காவல் புரிந்த முஸ்லிம் வீரர்கள் அவற்றைக் கைப்பற்றி மதீனாவுக்குள் கொண்டு சென்று விட்டனர். போதாக்குறைக்கு வானம் வேறு பொத்துக் கொண்டு மழையைக் கொட்டியது. எதிரிகளின் கூடாரங்கள் காற்றில் பிய்த்தெறியப்பட்டுப் பட்டங்களாகப் பறந்தன் அவர்களின் உடலும் உடையும் ஒருங்குற நனைந்து தொப்பலாடின.

**நயீம் செய்த நல்லுதவி**

இந்நிலையில், கத்தபான் கூட்டத்தாரைச் சேர்ந்த பிரமுகர் நயீம் அப்னு மஸ்ஊத் என்பவர் எதிரிகளின் கூடாரத்தினின்றும் நழுவி வந்து, அண்ணலாரை அண்மி, தாம் இரகசியமாக இஸ்லாத்தில் இணைந்துவிட்டதாகவும், அவர்களின் திருக்கட்டளையைச் சிரமேற்கொண்டு சேவையாற்றக் காத்திருப்பதாகவும் கூறிச் சரண் புகுந்தார். அவர் அகப் பரிசுத்தத்தோடு பேசுகிறார் என்பதைக் கண்டறிந்த அண்ணல் நபி (ஸல்) நயீமை நோக்கி “எதிரிகளின் மத்தியில் பிரிவினை வித்தைத் தூவுவதைத் தவிரத்தனி மனிதனால் வேறு என்ன உதவி செய்ய இயலும்?” என நயமாகப் பதிலிறுத்தார்கள். இவ்வார்த்தைகள் பளிச்சென நயீமின் மூளைக்கேறிக் கணவேகத்தில் வேலை செய்யத் துவங்கின. அதிலிருந்து புது யுக்தியொன்று பிறந்தது.

அந்த காற்று மழையோடு நயீம் முதலில் குறைலாக்களின் தலைவர்களை அணுகினார். அவர்களிடம், “நீங்கள் முஸ்லிம்களுடன் ஒன்றாக இருந்து வாழ வேண்டியவர்கள், குறைஷிகள் இன்னும் சில தினங்களில் இங்கிருந்து சென்று விடுவர். அதற்கப்புறம் உங்கள்பாடு திண்டாட்டமாகிவிடும். குறைஷிகளுடன் சேர்ந்து நீங்கள் போரைத் தொடர்ந்து நடத்தி வெற்றி காண விரும்பினால், அவர்கள் உங்களைக் கைவிட்டுச் சென்றுவடாதவாறு அவர்களின் தலைவர்களில் சிலரை உங்களிடம் ஈடாக ஒப்படைக்குமாறு கேளுங்கள். அதற்கவர்கள் நிச்சயமாக நம்பிக்கை மோசம் செய்து உங்களை நட்டாற்றில் விட்டுச் செல்வர் என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுடன் சேர மறுத்த விடுங்கள்,” என யுக்தி சொல்லி அதற்கொரு சோதனைத் தந்திரத்தையும் கூறிச் சென்றார்.

குறைலாக்களின் பகுதியை விட்டு நயீம் இப்போது குறைஷிகளின் கூடாரப் பகுதிக்கு வந்தார். அபூசுப்யான் மற்றும் முஸ்லிம்களுக்குப் பயந்து முஹம்மதுவுக்கு ஓர் இரகசியத் தூது அனுப்பியுள்ளனர். அவர்கள் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட உடன்பாட்டை முறித்த தவற்றுக்கு ஈடு கட்டவும் முஹம்மதுவுக்கு நம்பிக்கையூட்டவும் குறைஷித் தலைவர்களில் சிலரைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்து விடுவதாக உறுதி கூறியுள்ளனர் என்ற விதையை அவர்களிடைத் தூவி விட்டுத் திரும்பினார்.

நயீமிடமிருந்து இந்த “இரகசியத்” தகவலை அறிந்த குறைஷிகளின் பனு நுலைர் யூதர்களும் தங்களுக்குள் கலந்தாலோசித்து அபூஜஹலின் புதல்வர் இக்ரிமாவின்

தலைமையில் குறைலாக்களிடம் தூதொன்று அனுப்பினர். அவர் சென்று, குறைஷிகள், யூதர்கள், நாடோடி அரபிகள் மூவரும் ஒன்று சேர்ந்து முஸ்லிம்கள் மீது பெரியதொரு தாக்குதலை நடத்திப் போரை விரைவில் முடித்து வெற்றி வாகை சூடுவதற்குக் குறைலாக்களின் ஒத்துழைப்பைக் கோரினார். அதற்கவர்கள் குறைஷிகள் தங்களை முஸ்லிம்களிடம் நிர்க்கதியாக விட்டுச் செல்லாதிருக்க அவர்களின் தலைவர்களில் சிலரைத் தங்களிடம் பிணை வைத்தாலொழியத் தாங்கள் ஒத்துழைக்க இயலாதெனக் கடித்த வாய் துடைத்தாற்போல்" கூறி விட்டனர். இது நயீம் வெளியிட்ட இரகசியத்தை உண்மைப்படுத்துவதாக ஆகி விட்டது. அவர் தூவிய அந்த நச்சு விதை மேற்கொண்ட யுக்தி முளைத்துப் பயிராகிக் காய்த்து அறுவடைக்கு வந்து விட்டது. எதிரிகள் இஸ்லாத்தையும் நபிகள் நாதரையும் அழித்தொழிக்கத் தீட்டிய இறுதித் திட்டம், மேற்கொண்ட உபாயம், கருவில் சிதைந்தொழிந்தது, முக்கூட்டு அச்சும் முறிந்து சிதறியது. இறைவன் "சூழ்ச்சிக்காரர்களுக்கெல்லாம் மேலான சூழ்ச்சிக்காரன்" என்பதை இந்த இணைவைப்போர் எங்கே அறியக் கிடக்கிறது.

கங்கு தப்பிய கத்துபான் குழுவுங் கனானாச்
சங்க மும்பெரும் படைக்கடலசத்தெனுஞ் சவையும்
பங்க மெய்திடும் பனீகுறை லாவெனும் படையு
மங்கி ருத்தில சிதறின வோடின வன்றே.

\- சீறா

பொழுது புலர்ந்தது. வெய்யோன் தன் வெங்கதிரை விரிவுலகின் மீது அள்ளி வீசியவனாக கீழ்த்திசையினின்றும் ஆங்காரத்தோடும் வெளிக் கிளம்பினான். குறைஷிகள், யூதர்கள், பாலைவன அராபியர்கள் ஆகியோர் தம் எஞ்சிய படைகள், பிராணிகளுடன் தலைகுனியப் புறமுதுகிட்டவர்களாய்த் தென் திசையில் செல்வதை மதீனாவின் மகிமை பெற்ற மக்கள் தங்களின் அகலவிரித்த கண்களால் அள்ளிப்பருகி ஆனந்தப் பரவமுற்றனர். ஆறுதல் பெருமூச்சு விட்டு நின்றனர். மகா தளபதி அபூசுப்யான் தமது பெருமுயற்சியால் படுதோல்வியுற்றவராய்ச் சிரம்தாழ தமது பெருமுயற்சியில் படுதோல்வியுற்றவராய்ச் சிரம்தாழ ஒட்டகையின் மீது அமர்ந்து அசைந்தாடிச் செல்வதை அம்மக்கள் கண்மறையும் தூரம் வரை காத்து நின்றுபார்த்து களித்தனர்.

இந்த அகழ்ப்போருக்கு பின் குறைஷிகள் மனம் தளர்ந்து போயினர். சிரியா சென்று வாணிபம் செய்யும் வழியும் இப்போது அவர்களுக்கு அடைப்பட்டுப் போனது. எனவே, மணங்குழம்பிச் சோர்வுற்றவர்களாய் அவர்கள் மக்கா திரும்பினர். "முஹம்மதுடன் சண்டைக் கொள்ளாமல் சமாதானமாகி இஸ்லாத்தைத் தழுவிகொண்டால் இந்தத் தொல்லையும் இராது. வியாபாரமும் நன்கு நடைபெற வழியேற்படும்," என்ற வண்ணம் சில குறைஷித் தலைவர்களின் உள்ளங்களில் முளையிட்டன். இப்போரில் அன்ஸாரிகளில் அறுவரும் குறைஷிகளில் மூவரும் உயிர் நீத்தனர்.

### துரோகத்தின் தண்டனை

அகழ்ச் சண்டையின் போதான இக்கட்டு மிக்க நேரத்தில் உடன்படிக்கைக்கு மாற்றாகச் சதியிலிறங்கித் துரோகம் செய்த பனூ குறைலா யூதர்களை விட்டு வைப்பது மேலும் ஆபத்தானது என்றெண்ணிய பெருமானார், சிறிதும் தாமதியாது

வீரர்களை அழைத்துக் கொண்டு மதீனாவுக்குத் தென்கிழக்கே மூன்று மைல் தூரத்தில் குறைலாக்கள் வாழ்ந்த கோட்டையைப் போய் ஹிஜ்ரி 5 துல்ஹஜ் மாதம் முற்றுகையிட்டார்கள். முற்றுகை சுமார் ஒரு மாதம் நீடித்தது. முஸ்லிம்களுக்கு உணவாக, ஸஅத் இப்னு உப்பாதா என்பவர் இனிய பேரீச்சங் கனிகளை ஒட்டகைகளில் அனுப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தார். குறைலாக்களால் முற்றுகையைச் சமாளித்துத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே, தங்களின் நீண்ட நாளைய நண்பராகையால் ஓரளவு சலுகையுடன் தீர்ப்பு வழங்குவார் என அவர்கள் பெரிதும் எண்ணினர். சத்தியத் திரு நபியவர்ளும் சஅதை நடுவராகவும் அவரது தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாகவும் ஏற்றுக் கொண்டார்கள்.

சஅத், அவ்ஸ் கோத்திரத்தாரின் தலைவர். நேர்மையாளர். முஸ்லிம்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர். அகழ்ச் சண்டையின் போது குறைலாக்களின் அந்தரங்க சுத்தியை அறிந்து வர இவரையும் அத்இப்னு உப்பாதாவையுந்தான் பெருமானார் தூதனுப்பினார்கள். அகழ்ப் போரின் போது இவர் படுகாணமடைந்து விட்டார். காயம் சரிவர ஆறாதிருந்த நிலையில் இருதரப்பாரின் கோரிக்கையை நிராகரிக்க மாட்டாதவராய் கோவேறு கழுதையொன்றின் மீதேறித் திருத்தூதவர்களும் யூதர்களும் கூடியிருந்த இடத்துக்குச் சிரமத்துடன் வந்து சேர்ந்தார்.

தம்முடைய தீர்ப்புக்கு இருதரப்பாரும் மறுப்பின்றி மதிப்பளித்து நடக்க வேண்டும் என்ற உறுதி அமாழியைப் பெற்றுக் கொண்டவராய், சஅத் அனைவர் முன்னிலையில் “இஸ்ரவேலர்களின் வேத கட்டளைப்படி துரோகத்திற்கான தண்டனை மரணமேயாகும். போா புரியும் உடல் வலிமையுள்ள அனைவரும் மரணத்தை அணைத்துக் கொள்ள வேண்டியது. பெண்களும், குழந்தைகளும் அடிமைகளாக்கப் பட்டு விற்பனை செய்யப் படவேண்டும்”. எனக் கூறிவிட்டு இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். தீர்ப்பைக் கேட்டவுடன் யூதர்கள் அனைவரும் கோவெனக் கதறி அழுது புலம்பினர். அவர்களின் தலைவன் கஅப் பின் அஸத், தம் மக்களை நோக்கி, “நாம் செய்த துரோகத்தக்கு இது இறைவனால் நம்மீது விதிக்கப்பட்ட தண்டனையாகும். இறைவனின் கட்டளையை ஏற்பதற்கு நாம் கவலைப்பட வேண்டியதில்லை,” என ஆறுதல் மொழி கூறினான்.

இத்தீர்ப்பின் படி திடகாத்திரமான 400 யூதர்கள் சிரத்சேதம் செய்யப்பட்டனர். கோட்டை மீதிருந்த பெருங்கல்லைத் தள்ளிவிட்டு முஸ்லிம் வீரர் ஒருவரைக் கொன்ற பனானா என்ற யூதப்பெண் ஒருத்தியும் சிரச்சேதம் செய்யப் பட்டான்.

இல்லம் சென்ற அன்சாரி சஅத் அவர்களுக்குக் காயத்தின் ரணவேதனை அதிகமாகியது. சில தினங்களில் அவர் இறைவனடி சேர்ந்தார். மரணப் படுக்கையிலிரந்த சஅத் அவர்களை அண்ணலார் சென்று பார்த்து அவரை ஆரத்தழுவி, ஆறுதல் கூறி, அவரது தலையைத் தூக்கித் தங்கள் மடிமீது வைத்துக் கொண்டார்கள். அந்த நிலையிலேயே அவரது ஆவியும் பிரிந்தது. பிரேத அடக்கத்தின் போது பெருமானாரும் அதில் கலந்து கொண்டார்கள்.

பனூ குறைலா யூதர்கள் மீது நடவடிக்கை எடுத்தபின் இஸ்லாத்தைத் தழுவுவதாக முன்பு ஏமாற்றி ஆறு பிரச்சாரகர்களை அழைத்துச் சென்று கொலை செய்த பனூ லிஹ்யான் கூட்டத்தாரைத் தண்டிக்கும் பொருட்டுப் பெருமானார் (ஸல்)

வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். முஸ்லிம்கள் தாக்க வருகிறார்களென்ற தகவல் தெரிந்தவுடன், அக்கூட்டத்தார் அருகாமையிலுள்ள மலையில் சென்று பதுங்கிக் கொண்டனர். முஸ்லிம்கள் பலவாறு தேடியும் அவர்களைக் காணமுடியாததால் தங்களின் முயற்சியைக் கைவிட்டு மதீனா திரும்பினர். வரும் வழியில் பிரச்சாரகர்கள் கொலை செய்யப்பட்ட ரஜுஃ என்னும் இடத்தில் தாமதித்து இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிராத்தனை செய்தார்கள்.

## அபுல் ஆஸ்

ஹிஜ்ரி 6ம் ஆண்டு மக்கா குறைஷிகள், சிரியாவில் வியாபாரம் செய்து வரும் பொருட்டு பெருமானாரின் மூத்த புதல்வி ஜைனபின் கணவரான அபுல் ஆஸுடைய தலைமையில் வெள்ளிக்கட்டிகள் உள்பட ஏராளமான சரக்குகளைச் சேகரித்து வர்த்தகக் கூட்டம் ஒன்றை அனுப்பி வைத்தனர். அவர் சிரியா சென்று வாணிபஞ் செய்துவிட்டு மக்கா திரும்பிக் கொண்டிருந்தார். முஸ்லிம்கள் உளவறிந்து இந்த வியாபாரக் கூட்டத்தைத் தாக்கி, சிரியாவிலிருந்து வாங்கி வந்த சரக்குகள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டு, ஆட்களையும் கைது செய்து வந்து அண்ணலார் முன் நிறுத்தினர்.

நபித்துவத்திற்கு முன் அபுல் ஆஸுக்குத் திருமணம் செய்விக்கப் பெற்ற பெருமானாரின் மூத்த புதல்வி ஜைனப் நபித்துவம் ஏற்பட்டதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்பதும், ஆனால் அபுல் ஆஸ் இஸ்லாத்தை ஏற்காது விக்கிரகத் தொழும்பராகவே இருந்து வந்தார் என்பதும், இவர் பத்ருப் போருக்குக் குறைஷிகளின் படையில் சேர்ந்து வந்து கைதானார் என்பதும், கணவரை மீட்பதற்காக ஜைனப் தம் தாயார் கதீஜா நாச்சியார் அளித்த கண்டசர ஆபரணத்தை அனுப்பி வைத்தார் என்பதும், ஆனால் பெருமானாரின் பரிந்துரையால் மீட்புப் பணமின்றி அபுல் ஆஸ் மீட்சி பெற்றாரென்பதும், அது போழ்து அண்ணலாரின் ஆணைக்கிணங்கத் தம் மனைவி ஜைனபை மதீனாவுக்கு அனுப்பி வைத்தாரென்பதும் நாம் ஏற்கனவே அறிந்தவை.

இந்நிகழ்ச்சிகளுக்குச் சுமார் நான்கு ஆண்டுகட்குப் பின்னர் அபுல்ஆஸ், இப்போது மீண்டும் சிறை பிடிக்கப்பட்டுள்ளார். இத்தருணம் ஜைனப் கருணைக் கடலாம் தம் தந்தை நபிகள் கோமானை அண்மித் தம் கணவருக்கும் மற்றவர்களுக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்து கைப்பற்றப் பட்ட வாணிபச் சரக்குகள், பணங்களையும் அரும்பு குறையாமல் திரும்பக் கிடைக்கச் செய்தார். அபுல் ஆஸ் சரக்குகளுடன் தம் ஆட்களுடனும் மக்கா திரும்பினார். தமது வாணிபக் கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் குறைவறக் கொடுத்து, வாங்கி முடித்தார். திருத்தூதரவர்கள் தம்மை நடத்திய மாண்பும் தம் மனைவி ஜைனப் தம் மீது கொண்டிருந்த அன்பும், கனிவும், பற்றும் பாசமும் அபுல் ஆஸின் உள்ளத்தைக் கவ்வி இழுத்தன. எனவே, அவர் இனியும் மக்காவில் தாமதிக்க மனங் கொள்ளாதவராய் இஸ்லாத்தை தழுவி மதீனா சென்று தம் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து வரலானார்.

## மக்கா செல்லும் நாட்டம்

நிலைமை இவ்வாறாக இருந்து வரும்போது துல்கஃதா மாதத்தின் ஓர் இரவில் பெருமானார் கனவு ஒன்று கண்டார்கள். அதில், தாங்கள் அமைதியான முறையில்

மக்கா சென்று க.்.பத்துல்லாஹ்வை இடம் சுற்றி ஹஜ்ஜுக்குரிய கிரியைகளை நிறைவேற்றுவது-உம்ராச் செய்வது போலவும், ஒட்டகங்களைக் குர்பானீ கொடுப்பது (பலியிடுவது) போலவும் கண்டார்கள். விடிந்தபின் அக்கனவில் கண்ட விபரங்களைத் தங்கள் தோழர்களிடம் சொல்லிக் காட்டி, இறைவன் தங்களை மக்கா சென்று வருமாறு கட்டளையிட்டுள்ளதாகப் பொருள் விரித்தார்கள்.

தங்களின் மனைவி, மக்கள், வீடு, வாசல், உற்றார், உறவினர்களைப் பிரிந்து நீண்ட காலமாக மதீனாவில் தங்கி ஏக்க முற்று நின்ற மக்காவாசிகளான முஹாஜிர்களுக்கு இக்கனவு நனவாகி விடாதா என்ற அவா மேலோங்கத் இக்கனவு நனவாகி விடாதா என்ற அவா மேலோங்கத் தலைப்பட்டது. மதீனாவாசிகளான அன்சாரிகளும் மக்கா சென்று இறைவனின் இல்லத்தைத் தரிசித்து வர ஆவல் கொண்டு நின்றனர். எனவே, அண்ணலார் அவர்களும் மக்கா சென்று வரலாம் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டார்கள். ”திருக்குர்ஆனை உமக்குச் சட்டமாக அளித்த இறைவன் நிச்சயமாக உமது சொந்த இடத்துக்கு (மக்காவுக்கு) மீண்டும் கொண்டு சேர்ப்பான்” என்ற 28:85 திருவசனம் ஹிஜ்ரத்தின்போது தங்களுக்கு வெளியானதையும் இதுபொழுது நினைவு கூர்ந்தார்கள்.

துல்க.்.தா மாதமும் அதை ஒட்டிய இரண்டு மாதங்களையும் அரபு மக்கள் போர் செய்யக் கூடாத புனித மாதங்களாகப் போற்றி வந்ததால் அம்மாதத்தில் போர்க் கருவிகளின்றி பிரயாணத்தின் போது எடுத்துச் செல்லும் உடை, வாள், வில், அம்பு இவற்றை மாத்திரம் எடுத்துச் சென்றால் இந்தப் புனித யாத்திரையை இடையூறின்றி நிறைவேற்றித் திரும்பலாம் எனப் பெருமானாரும் மற்றவர்களும் எண்ணினார்கள். அதுவேயுமன்றி, அண்மையில் மக்காவில் கடும் பஞ்சம் ஏற்பட்டுக் குறைஷிகள் பெருமானாரை அண்மி உதவி கோரியதில், அவர்கள், சமீபத்தில் இஸ்லாத்தில் சேர்ந்த நஜ்துப் பிராந்திய யமாமா பகுதியிலுள்ள பனூ ஹனிபாக்களின் தலைவரான துமாமா பின் உதால் மூலம் குறைஷிகளுக்கு மீண்டும் உணவுப் பொருள் தடங்களில்லாது அனுப்பிக் கொடுக்க வகை செய்து தாமும் 500 தங்கக் காசுகளும் அனுப்பிக் கொடுத்த தங்கள் மீதும் முஸ்லிம்கள் பாலும் குறைஷிகள் அன்பும் நல்லெண்ணமும் கொண்டிருப்பர் எனவும் நம்பினார்கள். இவ்வாறான எண்ணங்களுடன் யாத்திரைக்கான ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்தார்கள்.

இந்த யாத்திரையை முக்கியப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற விருப்பம் அனைவருக்கும் ஏற்பட்டது. ஆனதால் அக்கம் பக்கத்தில் வாழ்ந்த முஸ்லிம்களையும் தங்களுடன் இப்புனித யாத்திரையில் பங்கு கொள்ளுமாறு மதீனாவாசிகள் அழைத்தனர். எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்த பின், நுமைலா இப்னு அப்துல்லா அல்லைஸியை மதீனா நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தி விட்டு துல்க.்.தா மாதத் தொடக்கத்தில் ஒரு நாள், நபிகள் நாதர் 1400 தோழர்களுடன் தாங்கள் பிரியமுடன் வளர்ந்த கஸ்வாவின் மீதமர்ந்து மக்காவை நோக்கிப் பயணமானார்கள். துல் ஹுலைபா என்ற இடத்தை அடைந்ததும், அனைவரும் ”இஹ்ராம்” கட்டிக் கொண்டார்கள். இது தையலில்லா இரு வெண்துகில்களில், ஒன்றை இடுப்பிலும் மற்றொன்றை உடம்பைச் சுற்றியும் கட்டிக் கொள்வதாகும். இந்த யாத்திரையில் பெருமானார் தங்கள் மனைவி உம்மு ஸல்மாவை உடனழைத்துச் சென்றார்கள். குர்பானிக்கென எழுபது ஒட்டகங்களும் ஓட்டிச் செல்லப்பட்டன.

மாநபியவர்கள் மக்காவை நாடி வருகிறார்கள் என்ற செய்தி குறைஷிகளுக்கு எட்டிவிட்டது. அவர்கள் பீதி கொண்டனர். அப்பொழுது அபூசுப்யான் மக்காவிலில்லை. வெளியூர் சென்றிருந்தார். யாத்திரிகர்களைப் போல் வந்து எங்கே தங்களைத் தாக்குவார்களோ எனக் குறைஷிகள் அஞ்சினர். சந்தேகித்தனர் எனினும், அண்ணலவர்கள் ஒரு போதும் இப்புனித மாதத்தில் இரத்தம் சிந்த இடமளிக்கவும் மாட்டார்கள். சொன்ன சொல்லுக்கு மாற்றமாக நடந்து கொள்ளவுமாட்டார்கள் என்றெண்ணிய குறைஷிகள் ஓரளவு ஆறுதல் கொண்டனர். ஆனாலும் அவர்களின் வரட்டுக் கௌரவமும் அகந்தையும் அவர்களை விட்டு விடை பெற்று அகன்றதாக இல்லை. ஆகவே, பெருமானாரையும் உடன் வந்திருப்பவர்களையும் மக்காவுக்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தும் பொருட்டு காலித், இக்ரிமா தலைமையில் 200 குதிரை வீரர்களை முஸ்லிம்கள் வரும் பாட்டையில் சென்று சந்திக்குமாறு அனுப்பி வைத்தனர்.

**ஹுதைபிய்யாவில்....**

மக்காவுக்கு அருகில் இரண்டாவது மன்ஸிலில் உள்ள உஸ்பான் என்கிற கிராமத்தின் பாட்டைக் காவல் தலைவர் பிஷர் பின் சுப்யான் அல் க.ஃ.பி என்பவர் பெருமானாரை வழியில் சந்தித்து குறைஷிகளின் நடவடிக்கைகளைப் பற்றியும் அவர்கள் முஸ்லிம்களை மக்காவுக்குள் நுழைய விடாது தடுக்க முனைந்துள்ளனர் என்பதையும் எடுத்துரைத்தார். சிறிது நேரத்தில் குறைஷிகளின் குதிரைப்படை வருவதையும் நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்தார்கள். குறைஷிகளை எதிர் நோக்கிச் சென்றால் மோதல் ஏற்படும். அதனால், விரும்பி வந்த காரியத்தை சமாதானத்துடன் நிறைவேற்ற இயலாது வீணாகி விடக்கூடும் என்றெண்ணிய பெருமானார் (ஸல்) குறைஷி குதிரை வீரர்களுக்கு எதிர் படாது வேறு பாதையில் செல்லத் தீர்மானித்தார்கள். எனவே, ஹம்ஸத் இப்னு அம்ரு என்பவரின் வழி காட்டுதலின் மீது நேர் பாட்டையை விடுத்து வேறொரு பாதையில் சென்றார்கள். அந்த வழி ஒடுக்கமானதாகவும், கரடு முரடானதாகவும் அமைந்திருந்தது. முஸ்லிம்கள் அனைவரும் மிகுந்த சிரமத்துடனும் அதைக் கடந்து சென்று ஹுதைபிய்யா என்னும் இடத்தை அடைந்தார்கள். காலிதும் இக்ரிமாவும் நபிகள் நாதரையும் மற்ற முஸ்லிம்களையும் சந்திக்க இயலாமல் மக்கா திரும்பினர்.

ஹுதைபிய்யா மக்காவிலிருந்து ஜித்தா பாட்டையில் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. ஷம்ஸிய்யா எனவும் இதை அழைப்பர். அங்குள்ள ஒரு கிணற்றின் பெயரைக் கொண்டு அந்த இடம் ஹுதைபிய்யா என வழங்கப் பெற்று வருகிறது, பெருமானார் (ஸல்) ஏறி வந்த ஒட்டகம் அவ்விடத்தை அடைந்ததும் மேலே செல்ல மறுத்து விட்டது. அது நீண்ட பிரயாணம் செய்ததால் களைத்து விட்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள். ஆனால், அது இறைவனின் நாட்டப்படி அங்கு நின்று விட்டதாக அண்ணலார் கூறி அதினின்றும் இறங்கி விட்டார்கள். உடன் வந்த முஸ்லிம்கள் அனைவரையும் அவ்விடத்திலேயே கூடாரங்களடித்துத் தங்குமாறும் கட்டளையிட்டார்கள். அங்கிருந்த கிணறு நீரற்று வரண்டு கிடப்பதைக் கண்ட தோழர்கள், “தண்ணீருக்கென செய்வோம் “ என முறையிட்டனர். பெருமானார் வில்லும் அம்பும் கொண்டு வரச் சொல்லி நாஜியா பின் ஜந்துப் இடம் கொடுத்து அம்பை அக்கிணற்றினுள் எய்தார்கள், உடனே அதன் ஊற்றுக் கண் திறந்து தண்ணீர் குமிழியிட்டுக் கொண்டு வெளி வந்தது. அனைவரும் குறை நீங்கி மன நிறைவு கொண்டனர்.

கொடுக்கும் வள்ளியோர் மனையினிற் செறிநிதிக் குவைபோல்
வடுப் படாதனற் நெனறியுறு தீன்வளர் வதுபோ
லடுக்கு மன்பருக் குதவிசெய் நபிமனத் தருள்போற்
றடுக்க லாத்துறைப் பெருக்கெனப் பெருகின தாங்கல் - சீறா

நபிகள் நாதரின் தங்களின் நற்றோழர் 1400 போகள் சகிதம் ஹுதைபிய்யாவில் வந்து கூடாரங்கள் அடித்துள்ளார்கள் என்பதைக் கேள்வியுற்ற மக்கத்துக்குறைஷிகள் மனம் பதறினர். நகரைப் பாதுகாப்பதற்கான காரியங்களைத் துரிதமுடன் செய்ய ஆரம்பித்தனர்.

பனூ குஸாஅ கூட்டத்தாரின் தலைவர் புதைல் பின் வர்கா அல் குஸாயி என்பார் குறைஷிகளுடன் முஸ்லிம்களுடனும் நட்புறவு கொண்டிருந்தார். எனவே, இருவருக்குமிடையே போர் மூளாது தடுக்க எண்ணியவராய்ப் பெருமானாரிடம் போர் மூளாது தடுக்க எண்ணியவராய்ப் பெருமானாரிடம் வந்து குறைஷிகள் ஆத்திரத்துடன் இருப்பதாகவும், முஸ்லிம்களை மக்காவுக்குள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும், அதனால், மதீனா திரும்பிச் செல்வதே உத்தமம் எனவும் எடுத்துச் சொன்னார். அதற்கு அண்ணலார் தாங்கள் சமாதானமாக உம்ராவை இது ஹஜ் அல்லாத காலங்களில் மக்கா வந்து க.்.பாவைத் தரிசித்துக் கிரியைகளை நிறைவேற்றிச் செல்வதாகும். நிறைவேற்றிச் செல்லும் நோக்கத்தில் வந்திருப்பதாகவும் போரிடும் எண்ணம் கிஞ்சித்தும் கிடையாதென்றும், எனவே உம்ராவை மட்டிலும் நிறைவேற்றிச் செல்வதற்கு அனுமதித்தால் போதுமென்றும் புதைலிடம் சமாதானங் கூறினார்கள். புதைல் குறைஷிகளிடம் சென்று இவ்விவரங்களை எடுத்துச் சொன்ன போது அவர்கள் பெருமானாரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு ஓரளவு நிம்மதியடைந்த போதிலும், தங்களின் பரம்பரை வறட்டுக் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனங்கொள்ளவில்லை. இரண்டாவதாக, குறைஷிகள் பனூ ஆமிர் பின் லுஅய் வர்க்கத்தாரைச் சேர்ந்த மிக்ரா பின் ஹப்ஸ் என்பவரை அனுப்பி வைத்தனர்.

மூன்றாவதாக, குறைஷிகள், கினானா வமிசத்தைச் சேர்ந்த அஹாபீஷ் பதவிகளின் தலைவரான அல் ஹுலைஸ் பின் அல்கமா என்பவரை நபிகள் பிரான்பால் மீண்டும் தூதனுப்பினார்கள். அத்தலைவரிடம், “இவ்வாண்டு ஹுதைபிய்யாவிலிருந்தபடியே முஹம்மதுவும் அவருடன் வந்திருக்கும் முஸ்லிம்களும் மதீனா திரும்பட்டும், அடுத்த ஆண்டு மக்கா வந்து புனித யாத்திரையை அவர்கள் நிறைவேற்றிக் கொள்ளட்டும்” எனக் கூறியனுப்பினர். அந்த பதாவித் தலைவர் பெருமானார் அவர்களைக் கண்டு பேசிய பின் குறைஷிகளிடம் சென்று “முஸ்லிம்கள் உம்ராவை நிறைவேற்றிச் செல்ல வந்தார்களேயன்றி வேறு எதற்காகவும் அவர்கள் மக்காவுக்கு வரவில்லை. அதைச் செய்து திரும்ப அவர்களை அனுமதிப்பதால் தவறேதுமில்லை.” எனச் சற்று அழுத்தமாக எடுத்துச் சொன்னார். அதற்கவர்கள், நீர் விஷயம் புரியாதவர், அதனால் தான் அவர்களை நீர் வெள்ளையாக நினைத்துப் பேசகிறீர் எனக் குத்தலாக கூறினார். குறைஷிகளின் இவ்வார்த்தைகளால் அல்ஹுலைஸ் சீற்றம் கொண்டவராய் முஹம்மதையும் அவருடன் வந்திருப்பவர்களையும் நீங்கள் க.்.பாவை தரிசிக்க அனுமதிக்காவிட்டால் நானும் என்னைச் சார்ந்தவர்களும் உங்களை விட்டும் விலகிக் கொள்வோம் எனக்கூறி அவர்

அவர்களை விட்டகன்றார். அவர் வார்த்தைகளைக் கேட்ட குறைஷிகள் பயந்து போய் உண்மையான சமரசம் காணுவதில் முனைந்தனர்.

நான்காவதாக, தாயிபிலுள்ள பனூ கதீப் வர்க்கத்தாரின் பிரமுகர்களில் ஒருவரான உர்வா பின் மஸ்உத் என்பவரை குறைஷிகள் பெருமானாரின் சமூகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவர், சென்று மிக்க சாதுர்யத்துடன் வாக்குவாதம் புரிந்து முழு விபரங்களையும் தெரிந்து கொண்டு குறைஷிகளிடம் திரும்பி வந்து, "முஹம்மதுவும் அவர் தோழர்களும் 'உம்ரா' வினிமித்தமாகவே இங்கு வந்துள்ளனர். அவர் தோழர்கள் அவரைப் பெரிதும் போற்றிக் கொண்டாடுகிறார்கள். இது போன்ற மேதை, மரியாதை, பக்தி, விசுவாசத்தை நான் ரோமானியக் கெய்ஸர், பாரசீகக் கிஸ்ரா மன்னர்களின் அரசவைகளிலுங் கூடக் கண்டதில்லை. அவர்கள் கஃபாவை வந்து தரிசித்து 'உம்ரா'வைச் செய்து விட்:டுச் சென்றனர் என அரபு நாடு முழுவதும் அவமானமாகப் பேசும், அதைத் தங்களால் சகிக்க இயலாது. அதனால் தங்களின் பெருமை மங்கி விடுமே எனவும், அவ்வாறு அனுமதிக்காவிடில் சண்டை ஏற்பட்டு அதனால் தங்களுக்குத் தீங்கு நேரிடக் கூடுமே என்றும் எண்ணி தங்களுக்குத் தீங்கு நேரிடக் கூடுமே என்றும் எண்ணி குறைஷிகள் இருதலைக் கொள்ளி எறும்பாயினர்.

பேச்சு வார்த்தை நடத்துவதற்காக முதலில், பெருமனார் அவர்கள் தங்கள் தோழரில் ஒருவரான கிராஷ் பின் உமையா என்பரை அல் தஃலப் என்னும் ஒட்டகையின் மீது அனுப்பி வைத்தார்கள். குறைஷிகள், அவர் ஏறிச. சென்ற ஒட்டகத்தின் கால்களை வெட்டி ஊனப்படுத்தியதோடு அவரையும் கொலை செய்ய முற்பட்டனர். ஆனால், சிலரின் தலையீட்டால் அத்தோழர் உயிர் தப்பி வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர் பெருமானாரைச் சிறைபிடித்து வருமாறு குறைஷிகளில் 80 பேரை அனுப்பி வைத்தனர். ஆனால், வந்த குறைஷிகளை முஸ்லிம்கள் கைது செய்து பெருமானார் முன்பு கொண்டு கோய் நிறுத்தினர். கைதானவர்கள் மன்னிப்புக் கோரியதின் பேரில் அண்ணலார் அனைவரையும் விடுதலை செய்தார்கள்.

அடுத்து, குறைஷிகளிடம் தூது செல்லப் பொருத்தமானவராக ஹலரத் உதுமான் அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள். ஹலரத் உதுமான் அவர்கள் சென்று குறைஸித் தலைவர்களைச் சந்தித்துப் பெருமானாரும் மற்றவர்களும் 'உம்ரா'வை நிறைவேற்றச் செல்லவே வந்திருப்பதாகவும், அதற்கு அனுமதி வழங்குமாறும் எடுத்துரைத்தார்கள். ஆனால், அது செவிடன் காதில் உதிய சங்காயிற்று. அனைத்தையும் கேட்டு விட்டு அக்குறைஷித்தலைவர்கள், "உதுமானே! விரும்பினால் நீர் மாத்திரம் வந்து கஃபாவை தரிசித்து "உம்ரா"வை நிறைவேற்றிச் செல்லும். முஹம்மதை இந்த ஆண்டு மக்காவுக்குள் நுழைய நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" எனக் கண்டிப்பாக கூறினர். அதற்கு உத்தமத் திருநபியவர்களின் உற்ற தோழரும் மருமருமான ஹலரத் உதுமான் அவர்கள் "அண்ணலாரை அனுமதிக்காத நிலையில் அந்த "உம்ராவை நான் மட்டும் நிறைவேற்ற ஆசைப்படவில்லை. அது எனக்குத் தேவையில்லை" எனக்கூறி விட்டு ஹுதைபிய்யா திரும்பினார்கள்.

இதற்கிடையில் ஹலரத் உதுமான் அவர்களைக் குறைஷிகள் சிறைப்படுத்திக் கொன்று விட்டார்களாம் என்ற வதந்தியொன்று ஹுதைபிய்யாவுக்கு எட்டியது. அது கேட்ட முஸ்லிம்கள் போருக்காகத் துடித்தனர். இவ்வதந்தியைப் பெருமானாரும் நம்பி

விட்டார்கள். காரணம், குறைஷிகளின் பேச்சுக்களும் செயல்களும் கரஷ் பின் உமையாவைக் கொல்ல முனைந்ததும் அவ்வாறாகவே இருந்து வந்தன. உடனே தங்களுடன் வந்திருந்த முஸ்லிம்கள் அனைவரையும் ஒரு வேலமரத்தின் அடியில் ஒன்று கூட்டினார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும், "எனது உடலில் உயிர் இருக்கும் வரை குறைஷிகளை எதிர்த்துப் போராடுவேன்" என்ற உறுதிமொழியைக் கையடித்து (உறுதிப்பாடு செய்து) வாங்கிக் கொண்டு போருக்கு ஆயத்தமானார்கள். அதற்குள் ஹலரத் உதுமான் அவர்கள் தீங்கேதுமின்றிச் சுகமாக ஹுதைபிய்யா வந்து சேர்ந்தார்கள். இஸ்லாமியச் சரித்திரத்தில் இவ்வுறுதிப் பிரமாணச் சம்பவத்தை "பைஅத்துர் ரிள்வான்" அல்லது "இறைவனின் பிரமாணம்" எனக் குறிப்பிடுகின்றனர்.

இறுதியாக, குறைஷிகள் தங்கள் தலைவர்களில் பேச்சுத் திறன் மிக்கவரான சுஹைல் பின் அம்ரு என்பவரைப் பெருமானாரிடம் சென்று எவ்வாற்றானும் ஒரு முடிவு கண்டு வருமாறு சொல்லியனுப்பினர். அவரை அண்ணலார் கண்டதுமே "குறைஷிகள் ஒருவித உடன்பாட்டுக்கு வரத் தீர்மானித்து விட்டதாகத் தோன்றுகிறது" எனக்கூறினார்கள். இருவரும் முழு மூச்சாக விவாதத்தில் ஈடுபட்டனர். நீணட் நேரம் பேசிய பின் ஒருவித உடன்பாட்டுக்கு வந்தனர். பெருமானார் ஹலரத் அலீ அவர்களை அழைத்து உடன்படிக்கையை எழுதுமாறு பணித்து, வாசகத்தைக் கூறத் துவங்கினார்கள். ஆரம்ப வாக்கியமாக, "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்பதனைக் கூறினார்கள். உடனே சுஹைல், அதை மாற்றி அரபுகளின் பழக்கத்திலிருந்த "பிஸ்மிக்க அல்லாஹும்ம" என எழுதுமாறு கூறினார். அவ்வாறே எழுதப்பட்டது. அடுத்து, "இறைவனின் தூதரான முஹம்மதுவும் அம்ருவின் புதல்வரான சுஹைலும் எழுதிக் கொண்ட உடன்படிக்கை" எனத் திருத்தூதரவர்கள் எழுதச் சொன்னார்கள். அதற்கு, "உம்மை நாங்கள் இறைவனின் தூதராக ஏற்றுக் கொள்வதில், தாமே நமக்கிடையே வேறுபாடு முளைத்துள்ளது. அஃதொன்று மட்டும் இல்லாவிடில் நமக்குள் பிணக்கு, பூசல், போர் இவையெல்லாம் ஏற்படக் காரணமில்லையே! அதனால் அப்துல்லாஹ்வின் புதல்வர் முஹம்மதுவும், அம்ருவின் புதல்வர் சுஹைலும் செய்து கொண்ட "உடன்படிக்கை" என்று தான் எழுதப்பட வேண்டும். இல்லாவிடில் நான் இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது" எனக் கண்டிப்புடன் சொன்னார். சுஹைல் கூறியபடியே எழுதுமாறு அண்ணலார் அலீ அவர்களையும் பணித்தார்கள். "ரசூலுல்லாஹ்" (இறைவனின் தூதர்) என்ற வார்த்தை ஏற்கனவே எழுதப்பட்டு விட்டபடியால் அதைத் தமது கரத்தால் அடித்து எழுத முடியாதென அலீ அவர்கள் மறுக்கவே, நபிகள் கோமான் பேனாவைப் பெற்று "ரசூலுல்லாஹ்" என்னும் அவ்வார்த்தைகளைக் காண்பிக்கச் சொல்லித் தங்களின் திருக்கரத்தால் அடித்துவிட்டுத் தொடர்ந்து எழுதச் சொன்னார்கள்.

மகத்துவமிக்க ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகள் வருமாறு :

1. இவ்வுடன்படிக்கை செய்து கொண்ட பின் பத்து ஆண்டுகள் வரை இரு தரப்பாரும் ஒருவர் மீது மற்றவர் தாக்குதல் புரியாது அமைதி காத்து வாழ்ந்து கொள்ள வேண்டும்.
2. இரு தரப்பாரும் தங்களுக்கு விருப்பமான அரபுக் கூட்டத்தார்களுடன் உடன்படிக்கை காண உரிமையுண்டு. ஒரு தரப்பாரின் ஆதரவாளர்களுக்கு எதிராக மற்ற தரப்பினர் ஆயுதந் தாங்கி போர் செய்யக்கூடாது.
3. இந்த ஆண்டு "முஸ்லிம்கள் மக்காவுக்குள் பிரவேசிக்காது மதீனாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

4. அடுத்து ஆண்டு முஸ்லிம்கள் மக்காவுக்கு வந்து மூன்று தினங்கள் வரை தங்கிக் க.்.பாவைத் தரிசித்துச் செல்லலாம். அது சமயம் தங்களுடன் உடைவாளைத் தவிர வேறு எவ்வித ஆயுதமும் எடுத்து வரக்கூடாது. உடைவாளும் உருவப்படாமல் உறையினுள்ளே தான் இருக்க வேண்டும்.
5. ஏற்கனவே மக்காவில் தங்கியுள்ள முஸ்லிம்களை மதீனாவுக்கு அழைத்துக் கொள்ளக் கூடாது. அன்றியும் மக்காவில் தங்கி வசிக்க விரும்பும் முஸ்லிம்களை வெளியேற்றவும் கூடாது.
6. மக்காவிலிருந்து மதீனாவுக்கு முஸ்லிம் அல்லது முஸ்லிமல்லாதார் யார் வந்தாலும் அவரை அங்கு தங்க வைக்காமல் மக்காவுக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டும். முஸ்லிம்களில் யாராவது மதீனாவிலிருந்து மக்காவுக்கு வந்தால் அவரைத் திருப்பி அனுப்புமாறு கேட்கக் கூடாது.

**வாய்மைக்கோர் வழிகாட்டி**

இந்த உடன்படிக்கையை நபிகள் நாதர் அந்த நிமிடமே மெய்ப்பித்துக் காட்டிய உள்ளத்தை உருக்கும் சம்பவம் ஒன்று அவ்விடத்தில் நிகழ்ந்தது. சுஹைலின் புதல்வர் அபூ ஜந்தல் இஸ்லாத்தைத் தழுவி மக்காவில் இருந்து வந்தார். குறைஷிகள் அவரை மிகவும் கொடுமைப்படுத்தியதுடன், விலங்கிட்டும் வைத்தனர். அவர் அண்ணல் அவர்கள் ஹுதைபிய்யாவில் வந்திருப்பதைக் கேள்வியுற்று, ஒரு வகையாக விலங்கைத் தறித்துக் கொண்டு, அவ்விலங்குடன் அங்கு ஓடி வந்து அடக்கலம் புகுந்தார். அவர் வந்த நேரமும் உடன்படிக்கை கையெழுத்தாகும் நேரமும் ஒத்திருந்தன. சுஹைல் உடன்படிக்கையின் விதிப்படி தம் மைந்தரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வாதாடினார். அதற்குப் பெருமானார் (ஸல்), ”அதற்குள் அதை எப்படி அமல் செய்வது” என எடுத்துக் காட்டினார்கள். அதற்கு சுஹைல், ”அவ்வாறாயின், நான் இவ்வுடன்படிக்கையை அங்கீகரிக்க இயலாது போய் விடும்” எனப் பிடிவாதம் செய்தார். சற்று நேர சிந்தனைக்குப் பின், குறைஷிகளை எப்படியும் கட்டுப்படுத்தி இஸ்லாத்தையும், தம்மையும் மதிக்க செய்ய வேண்டும். அவர்களின் வாயையும், கையையும் கட்டி வைக்க வேண்டும். தருணத்தை தவறவிடக்கூடாது என்ற எண்ணத்தில் நபிகள் திலகம், சுஹைலின் கோரிக்கைக்கு ஒருவாறு இணங்கினார்கள். உடன்படிக்கை கையெழுத்தானது. அதன் நகலை சுஹைல் பெற்றுக் கொண்டது தான் தாமதம். அடுத்த கணமே அவர் தம் மகன் மீது பாய்ந்து அவரைப் பற்றிப் பிடித்து, அடித்து இழுத்துச் சென்றார்.

அபூஜந்தல் அழுது கதறியவாறு, ”இஸ்லாத்தைத் தழுவிய என்னை இந்த விக்கிர வணக்கக் காரர்களிடமா ஒப்படைக்கிறீர்கள்” எனப் பரிதாபத்துடன் கேட்டார். சுற்றியிருந்த முஸ்லிம்கள் வாய் புதை ஊமையாகி நின்றனர். அண்ணலார் கழிவிரக்கத்துடன் அபூஜந்தலை நோக்கியவர்களாய், ”ஏ! அபூஜந்தல்! நீர் பொறுமையாய் இரும், உமக்கும், உம் நிலையிலுள்ள முஸ்லிம்களுக்கும் ஆண்டவன் விரைவில் வழி திறப்பான். உடன்படிக்கைக்கு மாறு செய்வது முஸ்லிமுக்கு அழகல்ல!” என ஆறுதல் மொழி பகர்ந்தார்கள்.

அபூஜந்தலைக் குறைஷகளிடம் ஒப்படைத்தது பற்றி ஹலரத் உமர், பெருமானாரவர்களிடம், ”இது முஸ்லிம்களுக்கு மிக இழிவானதாகும்.” எனக் கடுமையாக ஆட்சேபித்தார்கள். அதற்கு அண்ணலார், ”நான் அல்லாஹ்வின் திருத்தூதன். அவனது கட்டளைப்படி செயலாற்றுவதே என் கடமை, அவன் என்னை

ஒரு போதும் இழிவுக்கு ஆளாக்க மாட்டான், என்னை அவன் காத்தருள்வான்!, எனச் சமாதானங் கூறினார்கள் இதனையறிந்த ஹலரத் அபூபக்கர், "திருத்தூதரவர்கள் செய்வதனைத்தையும் இறைவனது வழிகாட்டுதலின்படியே நடைபெறுவதாயிருக்கும். அதனை நாம் ஆட்சேபிப்பது அழகல்ல", என உமர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். இவ்வாறு நபிகள் நாதருடன் வாதாடியதற்காக ஹலரத் உமர் தம் வாழ்நாள் முழுவதும் வருத்தினார்கள். ஹுதைபிய்யாவில் நடந்த உறுதிப் பிரமாணம், உடன்படிக்கை இவற்றைக் குறித்து இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்.

"நிச்சயமாக நாம் உமக்கு ஒப்பற்ற வெற்றியை அளித்துள்ளோம்".

"நிச்சயமாக உம்மிடம் உறுதிப் பிரமாணம் செய்பவர்கள் இறைவனிடம் உறுதிப் பிரமாணம் செய்பவர்களாவர். அது போழ்து, இறைவனின் திருக்கரம் அவர்களின் கரங்களுக்கு மேலாக இருக்கிறது. எனவே, பிரமாணத்தை எவர் தகர்க்கின்றாரோ, அவர் தம் ஆன்மாவுக்கே தீங்கிழைத்துக் கொள்கிறார். எவர் இறைவனுடன் செய்து கொண்ட பிரமாணத்தைக் காக்கின்றாரோ, அப்போது அவன் அவர்மீது அளவற்ற சன்மானத்தைச் சொரிகிறான்.

"அந்த மரத்தின் கீழ் உம்மிடம் அந்த நம்பிக்கையாளர்கள் உறுதிப் பிரமாணம் செய்தபோது, அல்லாஹ் அதனை மிகவும் உவந்து கொண்டான. அவர்களின் இதயங்களில் உள்ளவை என்னவென்பதை அவன் அறிந்திருந்தான். மேலும், நம்பிக்கையளிக்கும் சாந்தியை அவர்கள் மீது சொரிந்து, உறுதியான வெற்றியையும் சன்மானித்தான்". (48:1,10,18)

உடன்படிக்கையை கி.பி.628 மார்ச்சில் முடித்துக் கொண்டு நபிகள் பிரானும் உடன் வந்திருந்தவர்களும் ஹுதைபிய்யாவில் மூன்று தினங்கள் தங்கி மொட்டையடித்தும் ஒட்டகங்களைக் குர்பானி செய்தும் உம்ராவுக்குரிய வணக்கங்களைச் செய்து கொண்டார்கள். அதன்பின் நம்பிக்கையாளர்களின் ஒட்டகக் கூட்டம் அங்கிருந்து மதீனாவை நோக்கிப் பிரயாணமானது.

மதீனா திரும்பியபின் சில தோழர்கள் பெருமானாரிடம், "யாரசூல்லாஹ்! நீங்கள் பத்திரமாக மக்காவினுள் பிரவேசிப்போம் எனக் கூறவில்லையா?" என வினவிய போது, "உண்மைதான், ஆனால் அது இந்த ஆண்டில் நிகழுமென்றோ சொன்னேன்?" என்றார்கள். கேட்டவர்கள், "இல்லை" என்றபோது அண்ணலார், "ஜிப்ரீல் என்னிடம் கூறியதைத் தான் நான் உங்களிடம் சொன்னேன்", என்றார்கள்.

ஹிஜ்ரி 6ம் ஆண்டு துல்க.்.தா மாதம், கி.பி.627ல் ஏற்பட்ட இவ்வுடன்படிக்கைக்குப்பின் குறைஷிகள் மதீனாவுக்கு உறவு முறையிலும், வாணிபத்திற்காகவும் அதிகமாக வந்து போகத் துவங்கினர். அவர்களை விட்டும் இப்போது அழுக்காறு அகன்றதின் காரணமாக, இஸ்லாத்தின் சிறப்புக்களை நன்கு தெரிந்து, சிந்தித்து, கூட்டங்கூட்டமாக அதன் அரவணைப்பில் வந்து சேர்ந்தனர். இப்னு ஹிஷாம், இப்னு கல்தூன் போன் சரித்திராசிரியர்களின் கணிப்புப்படி, ஹுதைபிய்யா

உடன்படிக்கைக்குப்பின் இரண்டாண்டு காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களின் எண்ணிக்கை அதற்கு முன் சுமார் 20 ஆண்டு காலத்தில் அதில் சேர்ந்தவர்களின் தொகையை விட அதிகமாகவே இருந்ததெனலாம்!

வரைநிகர் மாட மோங்கு மக்கமா புரத்துள் ளோர்கள்
கரையிலா வளமை சேருங் கடிநகர் மதீனத் தெய்தத்
தரைநெறி மறாத தீனன் ஸாரிகண் மக்கத் தேகப்
புரையறவுள்ள மொன்றாய்ப் பொருந்தின ருறவதாகி

\- சீறா.

இவ்வுடன்படிக்கையால் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவும் சமய ரீதியாகவும் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள ஏதுவாயிருந்து மறு ஆண்டு மக்கா சென்ற போது ஈராயிரம் யாத்திரிகர்களைத் தங்களுடன் அழைத்துச் செல்லும் பெருவாய்ப்பினை இவ்வுடன்படிக்கை பெருமானாருக்கு நல்கியது. வாசகத்தால் அது முஸ்லிம்களுக்குப் பாதகமானதாகத் தோன்றினும் செயல்பாட்டால் அபரிமிதமான நன்மைகளை அது அளித்துள்ளது. குறைஷிகள் க.்.பாவின் மீது செலுத்தி வந்த தனி உரிமையும் ஆதிக்கமும் தகர்ந்து, முஸ்லிம்களுக்கும் அதில் சம உரிமையுண்டு என்ற பட்டயத்தை இவ்வுடன்படிக்கை பரிந்தளித்துள்ளது. குறைஷிகளுடன் முஸ்லிம்களும் சரிநிகர்சமானர், அவர்களுடன் சமதையாக உட்கார்ந்து உடன்படிக்கை செய்து கொள்ளும் தகுதி படைத்தவர்கள் என்பதை உறுதி செய்துள்ளது. மக்காவை மையமாகக் கொண்டு தான் இஸ்லாம் இயங்கப் போகிறது என்பதையும், அதனால் குறைஷிகளுக்கு அளவற்ற வருவாயும் செல்வாக்கும் காலக்கிரமத்தில் ஏற்படவிருக்கிறது என்பதையும் இவ்வுடன்படிக்கை உணர்த்தியது. எனவே, அதனையொரு கரித்துணியில் முடிந்த மாணிக்கமெனவே கூறுதல் வேண்டும்.

**தன் வினைத் தன்னைச் சுடும்**

மாநபியவர்களும் மற்றவர்களும் மதீனா வந்து சேர்ந்தனர். மக்காவிலிருந்து மதீனாவுக்குத் தப்பியோடி வரும் முஸ்லிம்களைத் திரும்பப் பிடித்து வர ஹுதைபிய்யா உடன்படிக்கை குறைஷிகளுக்கு அதிகாரமளித்திருந்ததால், மக்காவில் முஸ்லிம்களுக்கு இம்சைகள் அதிகரிக்கத் தொடங்கின. குறைஷிகளின் கொடுமை தாங்காது அபூ பஸீர் பின் ஜாரியா என்ற வாலிபர் மதீனாவுக்குத் தப்பியோடி வந்து விட்டார். தகவலறிந்த குறைஷிகள் பெருமானருக்க மடல் ஒன்று தீட்டி ஆட்கள் இருவரிடம் கொடுத்தனுப்பினர். மடலைப் படிக்கக் கேட்ட பெருமானார், அபூபஸீரை அவ்விருவரிடம் ஒப்படைத்து மக்கா திரும்புமாறு கட்டளையிட்டார்கள். அவ்வாலிபர் உடன் செல்ல மறுத்த போது, அபூஜந்தலுக்குக் கூறியது போல், “ஆண்டவன் வழி திறப்பான், நீர் தைரியமாகச் செல்லும்” என்ற ஆறுதல் மொழி கூறி அனுப்பி வைத்தார்கள். அபூ பஸீரும் இரு குறைஷிகளும் மக்கா நோக்கிச் செல்லும் போது, துல் ஹுலைபா என்னுமிடத்தில் அம்மூவரும் உணவு கொண்டனர். குறைஷிகளில் ஒருவன் தன் உடைவாளை உருவிக் காண்பித்து அதன் மகிமையைப் பற்றியும் தான் கோரிவந்த காரியம் கை கூடியது குறித்தும் பெருமையடித்தான். அபூபஸீர் உள்ளூர ஆத்திரம் தாங்காதவராய், அவ்வாளைச் சற்றுப் பார்த்து விட்டுத் தருவதாக

நளினமாகக் கூறி அவனிடமிருந்து அதனை வாங்கினார். பெற்றது தான் தாமதம். ஒரே வீச்சில் மறு வினாடியே அவன் தலை மணலில் உருண்டோடச் செய்தார். இதனைக் கண்ட அவன் கூட்டாளி திகில் கொண்டவனாய்த் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள மதீனாவின் பக்கமாக ஓட்டமெடுத்தான். அங்கு பெருமானாரைக் கண்டு நடந்த விபரத்தைச் சொல்லி முறையிட்டான்.

இந்தச் சமயத்தில் அபூபஸீரும் அண்ணலாரின் திருச்சமூகம் வந்து சேர்ந்தார். பெருமானார் அவரைக் கடுகடுக்கப் பார்த்தார்கள். எனினும், அபூபஸீர் ஒருவாறு தைரியத்தை வருவித்துக் கொண்டு, "யாரஸுலல்லாஹ்!. உடன்படிக்கையின் படி, தாங்கள் என்னைக் குறைஷிகளிடம் ஒப்படைத்து மக்காவுக்கு அனுப்பி விட்டீர்கள். என்னைப் பற்றிய பொறுப்பு அத்துடன் தங்களுக்கு நீங்கி விட்டது. அதற்கு மேற்பட்ட விஷயங்கள் எனக்கும் அவர்களுக்கும் மட்டிலும் சம்பந்தப்பட்டவை. தங்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது எனக்கூறியவாறு அவ்விடத்தை விட்டும் அகன்றார்.

# மதீனா வாழ்க்கை – 2

## அரசருக்குத் திருமுகங்கள்

குறைஷிகளும், யூதர்களும், பாலைவன அராபியரும் அளித்து வந்த எதிர்ப்புகளும் தொல்லைகளும் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின் ஒருவாறு அடங்கி விட்டதால், இஸ்லாத்தை அரேபியாவுக்கு வெளியிலும் பரவச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இப்போது பெருமானாருக்கு ஏற்பட்டது. திருத்தூதர் என்னும் அரும்பெரும் பொறுப்பினை இறைவன் அருள் கூர்ந்து தம்மீது சுமத்தியிருப்பதால் அம்மேலோனின் தூய அறத்தூதினை அரபு நாட்டோடு மட்டுமின்றி பிறநாட்டுப் பேரரசர்களுக்கும் எட்டச் செய்து அவர்களையும் இஸ்லாத்தின்பால் அழைப்பது தங்களின் தலையாய கடமை எனக் கருதினார்கள். அப்பிரச்சாரப் பணியில் தங்களின் திருத்தோழர்களும் பங்கு பெற வேண்டுமென ஆசைப்பட்டார்கள். அறிவுரை பகர்ந்தார்கள். இந்நோக்கத்துடன், ரோமனியப் பேரரசர் ஹெராக்ளியஸ் கெய்ஸருக்கும், பாரசீக மாமன்னன் குஸ்ரூ பர்வேஸுக்கும், அபிசீனியச் சக்ரவர்த்தி நஜ்ஜாஷீக்கும், எகிப்து நாட்டரசன் முகெகிஸுக்கும் திருமுகங்கள் வரைந்து முத்திரையிட்டுத் தனித்தனித் தூதர் மூலம் அனுப்பி வைத்தார்கள். அத்திருமுகங்களில் அம்மன்னர்களையும், அவர்களின் பிரஜைகளையும் இஸ்லாத்தில் சேர்த்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்கள். திருமுகங்கள் அம்மார் பின் யாஸிர், ஸல்மான் பார்ஸீ, அபூதர் கிப்பாரி இவர்களால் தோலில் அழகாக எழுதப் பெற்று, முத்திரைக் கணையாழி கொண்டு பெருமானாரின் திருக்கரத்தால் முத்திரையிட்டு ஹிஜ்ரி 6ம் ஆண்டு துல்ஹஜ் மாத இறுதியில் அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாறான திருமுகங்கள் சுமார் 300 வரை பல நாடுகளின் தலைவர்களுக்கும் அனுப்பட்டதெனச் சொல்லப்படுகிறது.

இத்திருமுகங்களனைத்தும் தங்கள் தலைப்பு வாக்கியமாக, "இறைவனின் மார்க்கமாகிய இஸ்லாத்தை ஏற்று ஈடேற்றம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்பதைத் தான் ஏந்திச் சென்றன. ஒவ்வொரு கடிதமும் அந்தந்த நாட்டு விசேஷ நிலைமைகளையும், மதாச்சாரப் போக்குகளையும் மனதில் கொண்டு தனிப்பட்ட

முறையில் தயாரித்து அனுப்பப்பட்டது. ஒரே வித வாசக அமைப்புடையதாயிருக்கவில்லை. அன்றியும் இந்நாடுகளுக்குத் திருமுகங்களை எடுத்துச் சென்ற தூதர் ஒவ்வொருவரும் அந்தந்த நாட்டு மொழி, பழக்க வழக்கங்களை நன்கு தெரிந்தவராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார்.

**ஹெராக்ளியஸ்**

நீண்ட காலமாகவே ரோமானிய சாம்ராஜ்யத்திற்கும், பாரசீகப் பேரரசுக்கும் இடையே போர்கள் நடந்து வந்தன. சில சமயம் ரோமானியர் வெற்றி பெறுவர். சில சமயம் பாரசீகர் வெற்றி பெறுவர். இது சமயம் கி.பி.628-ல் நடந்து முடிந்த போரில் ரோமானியர் வெற்றி பெற்றனர். அவ்வெற்றி விழாவிற்காக இறைவனுக்கு நன்றி செலுத்து முகத்தான் ரோமானியச் சக்கரவர்த்தி ஹெராக்ளியஸ் சிரியா நாட்டின் ஹிம்ஸ் பட்டணத்திலிருந்து பாலஸ்தீனத் தலைநகரான ஏலியா என்ற பைத்துல் முகத்திஸுக்கு ஜெருஸலம்-கால்நடையாக விஜயம் செய்திருந்தார். பெருமானாரின் திருமுகத்தைத் தூதர் திஹ்யதுல் கல்பி கொண்டு வந்து கெய்ஸரின் அரசவையில் மன்னரிடம் சேர்ப்பித்தார். கடிதத்தைப் படிக்கக் கேட்ட மன்னர், வாணிபத்திநிமித்தம் அரபு நாட்டிலிருந்து யாராகிலும் வந்திருந்தால் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அரசரின் சேவகர்கள் சில அராபியப் பிரமுகர்களை அழைத்துப் போய் அரசர் முன் நிறுத்தினார்கள். அவர்களில் பெருமானாருக்கு நெருங்கிய உறவினர் யாரும் உண்டா என அரசர் வினவினார். “நான் அவருக்கு நெருங்கிய உறவினன்” எனக் கூறியவராய் ஆபூசுப்யான் முன்னால் வந்து நின்றார். அரசர் மற்ற அரபிகளைப் பார்த்து நான் இவரிடம் கேட்கப் போகும் கேள்விகளுக்கு இவர் அளிக்கும் பதில்களில் பொய் கலந்திருந்தால் இவரின் பின்னால் நின்று அதனை நீங்கள் எனக்குச் சாடையால் அறிவிக்க வேண்டும்” என எச்சரித்தவராய்த் தம் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கேட்டார். அவற்றிற்கான உண்மைத் தகவல்களை அபூசுப்யான் அறிவித்துக் கொண்டு வந்தார்.

ரோமானியச் சக்ரவர்த்தி கெய்ஸர் விடுத்த வினாக்களும் அவற்றிற்கு அபூசுப்யான் அளித்த பதில்களும் :

கெய்ஸர் : தம்மை இறைவனின் தூதராகக் கூறி கொள்பவரின் குடும்ப கவுரமும் அந்தஸ்தும் எவ்வாறானது?

அபூசுப்யான் : அவர் அராபியரின் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர்.

கெய் : இதற்கு முன் அவர் குடும்பத்தினர் எவரும் தம்மை நபியாக அறிவித்திருக்கிறாரா?

அபூ : இல்லை.

கெய் : அவரைப் பின்பற்றுவோர் ஏழைகளா அல்லது செல்வந்தர்களா?

அபூ : அவர்கள் பெரும்பாலும் ஏழைகளே இளம் அடிமைகளும், பெண்களும் கூட அவரது அணியில் சேர்ந்துள்ளனர். பிரபுக்களும், முதியோரும் அதிலில்லை.

கெய் : அவரைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றதா அல்லது குறைகின்றதா?

அபூ : அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

கெய் : அவர் எப்போதாகிலும் பொய் புகன்றது உண்டா?

அபூ : இல்லை ஒரு சமயம் அவர் இங்குள்ள சுலைமான் நபி பள்ளிக்கு இரவில் வந்து திரும்பியதாகக் கூறியுள்ளார். அது ஒன்று தான் எங்களின் புல்லறிவுக்குப் புரியாத புதிராயிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில அங்கு வீற்றிருந்த அப்பள்ளியின் மத குரு துள்ளி எழுந்து, “சக்கரவர்த்திப் பெருமானே! நான் சொல்வதைச் சற்று செவிமடுத்துக் கேளுங்கள். அவர் கூறுவது உண்மையாயிருக்கலாம். எவ்வாறெனின், நான் தினமும் இரவு படுக்கைக்குச் செல்லுமுன் அப்பள்ளியின் எல்லாக் கதவுகளையும் சாத்தித் தாழிட்டு விட்டுச் செல்வது வழக்கம். ஓரிரவு, அக்கதவுகளில் ஒன்று அடைக்க வராது போயிற்று. தச்சர்களை அழைத்துக் கதவைச் சரிப்படுத்தச் சொன்னேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டு நிலையும் சுவரும் கதவை நெருக்கி இறுக்கமுறச் செய்திருப்பதால் அது அடைபடாது எனக் கூறிச் சென்றனர். அந்நிலையில் விட்டு விட்டு படுக்கச் சென்றேன். மறுநாள் விடிவெள்ளி கிளம்பிய நேரத்தில் நான் அவ்விடத்திற்கு வந்து பார்த்தேன். அங்கு மூலையில் வைக்கப்பட்ட கல்லொன்றில் துவார மிடப்பட்டு மிருகமொன்று கட்டப்பட்டிருந்த அறிகுறிகள் தென்பட்டன. என்னைச் சுற்றி நின்றிருந்தவர்களிடம், யாரோ ஒரு தீர்க்கதரிசி இப்பள்ளியில் வந்து பிரார்த்தனை புரிந்துவிட்டுச் சென்றிருக்கிறார், அதனால்தான் அக்கதவு சாத்த முடியாமல் திறந்து கிடக்க வேண்டி நேரிட்டது என விபரங்கள் கூறினேன்” என்று விளக்கினார்.

கெய் : அவர் எப்போதாகிலும் தம் வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறினாரா?

அபூ : இது வரையிலும் இல்லை. ஆனால், இப்பொழுது நாங்கள் அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். அதை அவர் உளப்பூர்வமாகப் பேணி நடப்பாரா, இல்லையா என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.

கெய் : உங்களுக்கும் அவருக்குமிடையில் சண்டைகளேதும் நடைபெற்றதுண்டா?

அபூ : ஆம், நடைபெற்றுள்ளன.

கெய் : அதன் முடிவு என்ன?

அபூ : அது குடுகுடுப் போட்டி போன்றது. சில சமயங்களில் அவர் வெற்றி பெறுவார். சில சந்தர்ப்பங்களில் நாங்கள் வெற்றி பெறுவோம்.

கெய் : அவர் போதிப்பது என்ன?

அபூ : நாங்கள் ஒரே இறைவனை வணக்க வேண்டுமென்றும், அவனுடன் எதையும் இணை சேர்க்கக் கூடாதென்றும், பாவமற்ற நல்ல செயல்கள் புரியுமாறும், உண்மையே உரைக்குமாறும், உறவினர் மீது குரோதம் பாராட்டத்திருக்குமாறும் உபதேசம் புரிகிறார்.

அபூசுப்யானின் பதில்களில் மன்னர் மிக்க திருப்தியுற்றவராக அரசவையில் கூடியிருந்தவர்களை விளித்து, “தீர்க்க தரிசிகள் அனைவரும் இதுநாள் வரை உயர் குடியில் தான் பிறந்துள்ளனர். முஹம்மதுடைய குடும்பத்தில் முன்பு யாரும் தம்மை நபியாக வாதாடவில்லை, அவர்களில் யாரும் அரசராகவும் இருந்ததில்லை. ஆகையால், முஹம்மது இப்போது அவற்றின் மீது பாத்தியங் கொண்டாடுகிறார். அல்லது, பொய் வேடம் பூண்டுள்ளார் என நினைப்பதற்கில்லை. அவர் ஒருபோதும் பொய்யுரைத்ததில்லை என்பதால் இறைவனைப் பற்றிய விஷயத்திலும் அவர் பொய்யுரைக்க மாட்டார் என்றாகிறது. இறைவனின் திருத்தூதர்களைப் பின்பற்றுவோர் ஆரம்பத்தில் ஏழைகளாக இருந்து வந்திருக்கின்றனர். இறைவனின் திருத்தூதர்கள் ஒருபோதும் சொன்னவார்த்தைகளுக்கோ அல்லது செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கோ மாற்றமாக நடக்க மாட்டார்களாதலால், முஹம்மதுவும் எச்சந்தர்ப்பத்திலும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. போரில் வெற்றியும் தோல்வியும் மாறி, மாறி காட்சியளிக்கச் செய்வது இறைவனின் சோதனையைச் சார்ந்ததாகும். இது நபிமார்கள் விஷயத்திலும் நடைபெறுவதுண்டு. முஹம்மது கூறுகின்ற அறவுரைகள் முழுக்க முழுக்க மக்கள் பின்பற்றத்தக்கனவாய் அமைந்துள்ளனவேயன்றித் தீயனவாயில்லை. இத்தியாதி காரணங்களால் முஹம்மது, மாசு மறுவற்ற பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகவே பிரகாசித்து நிற்கிறார். எனவே, யூத கிறிஸ்தவ வேதங்களில் கூறப்பட்டுள்ள இறுதித் தீர்க்கதரிசி இவராகத் தான் இருக்க வேண்டுமென்பது ஐயத்துக்கிடமின்றிப் புலனாகிறது” எனக்கூறி முடித்தார்.

அப்போது ஆங்கிருந்த பாதிரிகள், மந்திரி, பிரதானிகளுக்குமிடையே ஒருவிதச் சலசலப்பும் எதிர்ப்பு உணர்ச்சியும் தோன்றின. அவற்றைக் கண்ட கெய்ஸர் தம் அரச பதவிக்கு ஆபத்து நேருமோ என அஞ்சியவராய், “நீங்கள் நம் கிறிஸ்தவ மதத்தில் ஆழிய பற்று வைத்திருக்கின்றீர்களா அல்லவா என்பதை அறிந்து கொள்வதற்காகவே நான் இவ்வாறு கூறினேன். உங்களின் மதப்பற்றை நான் மெச்சுகிறேன். போற்றுகிறேன்” எனக்கூறி அவர்களைச் சமாதானப்படுத்தினார். அவர் இஸ்லாத்தை ஏற்கத் துணியவில்லை. இஸ்லாத்தையும் பெருமானாரையும் புகழ்ந்து பதில் எழுதிக் கொடுத்தனுப்பினார்.

பாரசீக மன்னன் குஸ்ரு-பர்வேஸுக்கு இவரை சாஸ்ரோஸ் எனவும் கூறுகின்றனர் – பெருமானார், அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா அஸ் ஸஹ்மி அப்துல்லாஹ் பின் ரவாஹா எனவும் கூறுகின்றனர். என்ற தூதர் மூலம் திருமுகம் அனுப்பினார்கள். அதைப் பார்த்த மன்னன், தன்னைப் புகழ்ந்து ஒரு வார்த்தை கூட எழுதாமல் தன் பெயருக்கு மேல் இறைவனின் திருநாமமும் பெருமானாரின் திருப்பெயரும் வரையப்பட்டிருப்பதைக் கண்டு சீற்றங் கொண்டு அத்திருமுகத்தைத் தூதுவர் முன்பாகவே கிழித்தெறிந்தான். இதனைக் கேள்வியுற்ற ஏந்தல் நபியவர்கள், “இறைவனும், அவனது ஆட்சியையும் அரசையும் அதைப் போலவே சிதைத்து விடுவான்.” என மொழிந்தார்கள். அன்றியும் அவ்வரசன், அண்ணலாரைச் சிறைப்

பிடித்துத் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு தனது யமன் மாகாண கவர்னருக்கு கட்டளையனுப்பினான். பாதான் என்னும் பெயருடைய அக்கவர்னர், பாபவய்ஹ், கர்கஸ்ரா ஆகிய இருவரையும் அனுப்பிப் பெருமானாரைப் பிடித்து வருமாறு கூறினான். வந்த இருவரின் வாய்மொழி கேட்ட வளமார் நபிகளார், மறுநாள் வந்து தங்களைக் காணுமாறு கூறியனுப்பினார்கள். அன்றிரவு அவர்கள் ஆண்டவனைத் தொழுது தங்களுக்கு நேர்ந்துள்ள இக்கட்டினின்றும் காத்தருளுமாறு இறைஞ்சினார்கள். இறைவன் அருள்பாலித்தான். அவனது இனிய பதிலும் கிடைத்தது. அடுத்த நாள் காலையில் அத்தூதர்களிருவரையும் அழைத்து வரச் சொல்லி அவர்களிடம் "நேற்றிரவு உங்கள் அரசரை அவரது புதல்வர் கொன்று விட்டார்" நீங்கள் இப்போது ஊர் திரும்பலாம்" எனக்கூறி அனுப்பினார்கள். இருவரும் அதிர்ச்சியுற்று ஆங்கிருந்து சென்றனர். இக்கொலை ஹிஜ்ரி 7ம் ஆண்டு ஜமாதுல் அவ்வல் 10ம் நாள் திங்களிரவு நடந்ததாக் கூறப்படுகிறது. பாரசீகத் தூதர்கள் சென்ற பின் சில தினங்களில், மன்னனைக் கொலை செய்து விட்டு அவனது மகன் ஷீரவய்ஹ் என்பவன் சிம்மாசனமேறிய தகவல் ஸன்ஆவிலிருந்து யமன் கவர்னருக்கு தெரிய வந்து ஆச்சரியமுற்றார். மதீனாவிலிருந்து திரும்பிய தூதுவர்களும் பெருமானாரின் மகத்துவத்தையும் அவர்கள் கூறிய முன்னறிவிப்பையும் பாதானுக்கு எடுத்து விளக்கினார்கள். அண்ணலவர்களை உண்மை நபி என நம்பிக்கை கொண்டு கவர்னரும் அவரது குடிகளும் இஸ்லாத்தைத் தழுவி மதீனாவுக்கு தகவலறிவித்தார்கள்.

## முகௌகிஸ்

எகிப்து அரசன் ஜரீ பின் மதீ முகௌகிஸுக்குப் பெருமானார் ஹாத்திப் இப்ன அபீ பல்தஅ மூலம் அனுப்பிய கடிதத்தை அம்மன்னன் மரியாதையோடு வாங்கிப் படித்துப் பார்த்தார். அவர் ஒரு கிறிஸ்தவரானால், இறுதித் தீர்க்கதரிசி ஒருவர் தோன்றவிருக்கிறார். அநேகமாக அவர் சிரியா நாட்டில்தான் பிறக்கக்கூடும் என்ற நம்பிக்கையோடு இருந்து வந்தார். அண்ணலவர்களின் திருமுகம் அவருக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது. யானைத் தந்தத்தாலான அழகிய பெட்டியொன்றில் அதனை வைத்து முத்திரையிட்டுப் பத்திரமாகக் காத்து வந்தார். எகிப்திலுள்ள கிறிஸ்தவ மடாலயம் ஒன்றில் இம்மடல் 1858ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டு, தற்போது இஸ்தம்பூலிலுள்ள அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளது.

முகௌகிஸ், பெருமானாருக்கு அன்பளிப்பாக எகிப்து நாட்டவர் மிகவும் மதித்துக் கொண்டாடிய அழகுச் சகோதரிகளான இரு வனிதையரையும், சிறந்த ஆடைகள் சிலவற்றையும், உயர்தரமான வெள்ளைக் கோவேறு கழுதை ஒன்றையும், நூறு தங்க நாணயங்கள், உயரிய தேன், ஒரு பிரபலமான மருத்துவர் ஆகியோரையும் அனுப்பி வைத்தார். இரு சகோதரிகளில் மாரியா கிப்தியாவை பெருமானார் மணமுடித்துக் கொண்டார்கள். ஸீரின் என்பவரை ஹஸ்ஸான் என்னும் புலவருக்கு மணமுடித்து வைத்தார்கள். துல்துல் என்ற வெள்ளைக் கோவேறு கழுதையை தங்கள் சவாரிக்கென வைத்துக் கொண்டார்கள். வெள்ளைக் கோவேறு கழுதை அரேபியாவில் ஓர் அரிதான பிராணி. அதன் மீது அண்ணலார் (ஸல்) அடிக்கடி சவாரி செய்வது வழக்கம்.

## நஜ்ஜாஷீ

அபிசீனியாவின் மன்னர் அல் அஸ்ஹம் பின் அப்ஜா நஜ்ஜாஷீக்கு, அம்ரு பின் உமையா அல் தம்ரீ எடுத்துச் சென்ற திருமுகத்தைப் பெற்று அண்ணலவர்களை இறைவனின் இறுதித்தூதர் என மனமார ஏற்றுக் கொண்டார். மடலுக்குப் பதிலொன்று வரைந்தளித்து அன்பளிப்புகள் பலவும் கொடுத்தனுப்பினார். அதனிடையில் தன் மகன் அர்ஹாவையும் அறுபது அபிசீனியர்களையும் பெருமானாரிடம் அனுப்பி வைத்தார். இவருக்கு முந்திய மன்னர் தான் ஜ.ஃபர் இப்னு அபீதாலிப் மூலம் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டார் எனவும், அவர் மதீனாவுக்கு வந்த கப்பல்கள் தான் நடுக்கடலில் மூழ்கிவிட்டதென்றும், இதனையறிந்த பெருமானார் அவருக்காக காயிபான ஜனாஸாத் தொழுகை நடத்தி துஆச் செய்தார்களெனவும் கூறப்படுகிறது. அர்ஹா வந்த கப்பல்கள் தான் நடுக்கடலில் மூழ்கியது எனவும் சரித்திராசிரியர் சிலர் கூறுவர்.

சிரியா நாட்டு மாகாணமான புஸ்ராவின் (போஸ்த்ரா) சிற்றரசன் ஷிர்ஜீல் பின் அபீ ஷம்ரு அம் கஸ்ஸானீ என்பவன் பெருமானாரின் மடலைக் கண்ணுற்றதும், “இம்மடலுக்கான மறுமொழியை நானே மதீனா கொண்டு வருகிறேன்” எனக் கண் சிவக்கக் கூறியவனாய், போருக்கான ஆயத்தங்கள் செய்யுமாறு தளபதிக்கு உத்தரவிட்டான். ஆனால், அவன் போர் மீது செல்லவில்லை. திருமுகம் கொண்டு சென்ற தூதர் ஷுஜா இப்னு வஹ்பு அல் அஸ்தீஹாரிஸ் அஜ்தி பின் உமைர் எனவும் கூறுகின்றனர். என்பவரையும் கொலை செய்து விட்டான். மூத்தா போர் இதன் காரணமாக மூண்டதாகும்.

ஈரான் மன்னனின் கீழ் பஹ்ரைனின் அதிபதியாக முன்திர் பின் சாவீ என்பவர் இருந்து வந்தார். அவரை இஸ்லாத்தில் அழைத்துப் பெருமானார் (ஸல்) அவர்கள் அல் அலா பின் ஹல்ரமி என்பவரிடம் திருமுகம் கொடுத்து அனுப்பினார்கள். அதனை ஏற்று, அவரும், அவரைச் சார்ந்த பலரும் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர்.

திருமுகம் பெற்ற சிற்றரசர்களில், துல்கிலாப், ஹுமரி என்பவர் ஒருவர். இவர் அதனை கண்ணியத்தோடும், நன்றியுணர்வோடும் பெற்று, இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டார். 18,000 அடிமைகளுக்கு உரிமையளித்தார். ஹலரத் உமர் அவர்களின் கிலாபத்தின் போது அரசு துறந்து மதீனா சென்று தங்கித் தமது எஞ்சிய வாழ்நாளை வணக்கத்திலும், தியானத்திலும் கழித்தார்.

**கைபர் சண்டை**

கைபர் பள்ளத்தாக்கு மதினாவுக்கு வடக்கில் சுமார் 100 மைல் தொலைவிலுள்ள ஒரு செழிப்பான பகுதியாகும். பெருமானார் மீது மாடியிலிருந்து பாறாங்கல்லை உருட்டி விட எத்தனம் செய்த பனூநுலைர் வமிச யூதர்களில் ஒரு பகுதியினர் கைபரில் போய்க் குடியேறி வாழ்ந்து வந்தனர் என்பதை ஏற்கெனவே கூறியுள்ளோம். இவர்களும் மற்ற யூதர்களும் அங்கு பலமான கோட்டைகள் கட்டிக் கொண்டு வளமாக வாழ்ந்து வந்தனர். முஸ்லிம்களின் ஆதிக்கமும், செல்வாக்கும் நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்டு அழுக்காறு கொண்ட இவர்கள், முஸ்லிம்களை முறியடிக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டினர். பக்கத்தில் செல்வாக்குடனிருந்து வந்த கத்தபான் நாடோடி அரபிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டு மதீனாவைத்

தாக்குவதற்குரிய முஸ்தீபுகளைச் செய்தனர். அக்கம் பக்கத்திலிருந்தவர்களையும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டனர்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையை முடித்துக் கொண்டு மதீனா திரும்பிய பின், ஹிஜ்ரி 7ம் ஆண்டு முஹர்ரம் மாதம் கி.பி.628 ஏப்ரல் மாதம் - பனூ நுலைர் யூதர்களின் போர் நடவடிக்கை விபரம் பெருமானாருக்குத் தெரிய வந்தது. எனவே, அவர்களைத் தாக்கி முறியடிப்பதற்குரிய ஏற்பாடுகளை இரகசியமாகவும், துரிதமாகவும் செய்தார்கள். முந்திய போர்களுக்கு அழைத்ததுபோல் முஸ்லிம்கள் அனைவரையும் திரண்டு வருமாறு அழைக்கவில்லை. இறைவனின் பாதையில் தியாகம் புரிய விருப்பமுள்ளவர்கள் இதில் கலந்து கொள்ளலாமென்று மட்டுமே அறிக்கை செய்தார்கள். இப்படையில் 1600 பேர் வந்து சேர்ந்தனர். இவர்களில் 200 பேர் குதிரை வீரர்கள். பெருமானார் தங்கள் பிராட்டியார் உம்முசல்மாவுடன் வீரர்களை அழைத்துக் கொண்டு முஹர்ரம் ஏழாம் நாள் வரை கைபரை நோக்கிப் புறப்பட்டார்கள். மதீனாவின் நிர்வாகத்தை ஸபாஅ பின் அர்பத்தாவிடம் விட்டுச் சென்றார்கள்.

படையினருக்கு உற்சாகமூட்டும் போர்ப்பரணி ஒன்றைப் புனையுமாறு ஆமிர் இப்னு அல்கமா என்பவரைப் பணித்தார்கள். அவர் புனைந்த பாடலை முஸ்லிம்கள் வழிநெடுகிலும் பாடிக் கொண்டும், “அல்லாஹு அக்பர்” எனப் பெரு முழக்கம் செய்து கொண்டும் வழி நடந்தார்கள். இதைக் கவனித்த நபிகள் நாதர் “போர் முழக்கத்தை மெதுவான தொனியில் செய்யுங்கள், தூரத்திலிருக்கும் ஒருவனையோ அல்லது காதுகேளாத ஒருவனையோ நீங்கள் உதவிக்கு அழைக்கவில்லையே, நீங்கள் அழைக்கும் அவ்விறைவன் உங்கள் அருகில்தானே இருக்கிறான்” என அறிவுறுத்தினார்கள்.

முஸ்லிம் படை ஸஹ்ஹா என்ற இடத்தை அடைந்த போது, அண்ணலார், ஆபாத் பின் பஷீர் என்பவரை அனுப்பி யூதரின் நிலைமையைக் கண்டு வரச் சொன்னார்கள். ஆபாத், கைபர் சென்று யூதர்களின் உளவாளி ஒருவனைக் கைது செய்து வந்து பெருமானார் முன் நிறுத்தினார். அவன் மூலம் எதிரிகளின் படை, ஆயுத பலம், யுத்த முஸ்தீபு, அருகாமையிலுள்ள கத்தபான், பஸாரா கோத்திரத்தார் கைபர் யூதர்களின் உதவிக்கு வரவிருப்பது ஆகியவற்றை விசாரித்து அறிந்து கொண்டார்கள்.

உடனே, கத்தபான் பஸாரா கோத்திரத்தாரைக் கைபருக்கு வராமல் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், முஸ்லிம் படையை அவர்கள் வசிக்கும் திசையில் செலுத்தினார்கள். இதை அறிந்ததும் கைபர் யூதர்களின் உதவிக்காக ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டு வந்த கத்தபான், பஸாரா கோத்திரத்தார் தங்கள் வீடு, வாசல், பெண்டு, பிள்ளைகளைக் காத்துக் கொள்வதற்காக திருப்பியடித்துத் தங்கள் இருப்பிடங்களுக்கு ஓடிச் சென்றனர்.

முஸ்லிம் படை அங்கிருந்து திரும்பி கைபருக்கு அருகாமையில் ரஜீஃ என்னுமிடத்திற்கு வந்தபோது இருட்டிவிட்டது. அதனால், இரவில் தாக்குதல் நடத்துவது நேர்மையற்றது. யுத்த மரபல்ல எனக் கருதிய நீதர் நபி (ஸல்) ரஜீஃயில் பாளைய மிறங்கினார்கள். இரவு உணவாக வறுத்த கோதுமை, கடலை இவற்றால் தயாரித்த சவீக்மாவைக் கரைத்துக் குடித்து அனைவரும் பசி தீர்த்தனர்.

**கமூஸ் கோட்டையின் வீழ்ச்சி**

வைகறையின் போது முஸ்லிம்களின் அணி கைபர் கோட்டைகளை நெருங்கியது. அங்கு ஆறு பலமான கோட்டைகள் இருந்தன. அவற்றில் இருபதாயிரம் யூத வீரர்கள் ஆயுதபாணிகளாய் நின்று கொண்டிருந்தனர். இவர்களில் பல வீராங்கனைகளுமிருந்தனர். பராக்கிரமசாலியான மர்ஹப் அல்ஹிம்யர் என்ற யூதன் அவர்களுக்குத் தலைமை தாங்கி நின்றான். அவன் முஹம்மத் பின் மஸ்லமாவுடன் போரிட்டு மடிந்தான். அவனது சகோதரனை ஜுபைர் பின் அவ்வாம் வெட்டிக் கொன்றார்.

முஸ்லிம்கள் தாக்குதலை ஆரம்பித்தார்கள். நபிகள் நாதர் தங்களின் மந்திர சக்தி வாய்ந்த போர்க் குரலால் முஸ்லிம் வீரர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். யூதர்களின் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக முஸ்லிம்கள் வசமாயின. முற்றுகை இருபது நாட்கள் நீடித்தும் பனூஅபுல் ஹுகைக் வம்சத்தினர் வசித்த கமூஸ் என்ற கோட்டை மட்டும் வீழாது பாலமாக எதிர்த்து நின்றது. அதை வெற்றி கொள்ளுமாறு முதலில் அபூபக்கர் (ரலி) அவர்களையும் பின்னர் உமர் (ரலி) அவர்களையும் அனுப்பினார்கள். இருவராலுமே அக்கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. அண்ணலார் ஆழ்ந்து சிந்தித்தார்கள். தோழர்களையும் கலந்தாலோசித்தார்கள். வழி ஏதும் புலனாகவில்லை. அன்றிரவு முழுவதும் அயராப் பிரார்த்தனையில் ஆழ்ந்தார்கள்.

பொழுது புலர்ந்தது. "அலி எங்கே? என வினவினார்கள். அலீ அவர்கள் அப்போது கடுங்கண்ணோயால் அவதிப்பட்டார்கள். எனினும் பெருமானாரின் கட்டளைக்கிணங்க அலீ அவர்களை அண்ணலாரின் திருச்சமுகம் அழைத்து வந்தனர். நபிகள் நாதர் தங்கள் எச்சிலைத் தொட்டு அலீ அவர்களின் இரு கண்களிலும் தடவினார்கள். நோய் நீங்கி நயனப் பிரகாசம் பெற்ற அலீ அவர்களின் கையில் முஸ்லிம்களின் போர்க் கொடியைத் தங்களின் திருக்கரத்தால் எடுத்துக் கொடுத்து அந்த அசையாத கமூஸ் கோட்டையை ஆட்கொண்டு மீளுமாறு ஆசீர்வதித்து அனுப்பினார்கள்.

ஹலரத் அலீ அவர்களின் துல்∴புகார் வாளுக்கு ஏராளமான யூதர்கள் இரையாயினர். அவர்களின் தலைகள் மண்ணில் உருண்டோடின. அவர்கள் இடையனில்லாக்கிடை போன்று ஊக்கங் குன்றி உற்சாகமுற்று, எதிர்க்கத் திறனின்றிக் கமூஸ் கோட்டையை கை விட்டனர். ஒரு யூதன் தாக்கியதில் அலீ அவர்களின் கேடயம் கையிலிருந்தும் தவறி விழந்து விட்டது. உடனே அவர்கள் கோட்டையின் அருகில் கிடந்த கதவு ஒன்றைத் தூக்கி அதைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அது எண்மர் சேர்ந்து தூக்க முடியாத அளவு கனமுடையதாயிருந்தது.

சரணடைந்த யூதர்கள் கைபரின் விளைபொருட்களில் பாதியை ஆண்டுதோறும் முஸ்லிம்களுக்கு கப்பம் செலுத்துவதாகவும், தங்களைக் கைபரில் அமைதியுடன் வாழ்ந்துவர அனுமதிக்க வேண்டுமெனவும் அண்ணலாரிடம் குறையிரந்தனர். கருணையுருவாம் காருண்யத் திருத்தூதரவர்கள் யூதர்களின் வேண்டுகோளை, முஸ்லிம்கள் விரும்பும் போது அவர்கள் வெளியேற்றும் உரிமையுடன் ஏற்றுக் கொண்டார்கள். இது கைபரிலுள்ள நிலங்களை யூதர்களைக் கொண்டும் விவசாயம்

செய்வதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. இப்போரில் யூதர்களில் தொண்ணூற்று மூன்று பேரும் முஸ்லிம்களில் இருபது பேரும் உயிர் நீத்தனர். முற்றுகை மொத்தம் 37 நாட்கள் நீடித்தது.

இந்த யுத்தத்தின்போதுதான் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பெருமானார் குதிரை மாமிசத்தைத் தின்ன அனுமதித்தார்கள். பின்னர் அல் ஸஅப் இப்னு முஆத் கோட்டை கைப்பற்றப்பட்டு ஏராளமான உணவுப் பொருள்கள் கிடைத்தன.

பெருமானாரின் முன் அனுமதி பெறாது, ஆர்வத்தால் உந்தப் பெற்றவர்களாக முஸ்லிம் பெண்மணிகள் வீராங்களைகள் - பலர் பிரயாணத்தின் நடுவில் படையில் வந்து சேர்ந்து கொண்டனர். இவர்கள் சண்டையின் போது போர்க்களத்தில் வீழும் எதிரிகளின் அம்புகளைப் பொறுக்கி முஸ்லிம்களின் கைகளில் கொடுத்தும், காயமடைந்தவர்களுக்கு மருந்துகள் வைத்துக் கட்டியும், உணவு, தண்ணீர் இவற்றை வினியோகித்தும் உதவிகள் பல புரிந்தனர். பெருமானார் இதனை மிகவும் மெச்சிப் போற்றினார்கள். இவர்களுக்கு சண்டையில் கிடைத்த பொருட்கள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன.

போர் ஓய்ந்த பின் ஹலரத் பிலால், கணவனை இழந்த இரு யூதப் பெண்களைப் பெருமானாரிடம் அழைத்து வந்தார். அவ்விருவரில் ஸபிய்யா உயர் குடிப்பிறந்தவர். அவரின் தந்தை ஹுயை பின் அக்தப் கைபரின் தலைவர், இவர் ஹாரூன் நபி பரம்பரையில் உதித்தவர். ஸபிய்யாவின் கணவர் கினானா பின் அல் ரபீ, நுலைர் கூட்டத்தாரின் தலைவர். பிதா, பதி இருவரும் இந்தப் போரில் மாண்டு போயினர். இந்தப் பெண்மணிக்கு வாழ்வளிக்கப் பெருமானார் விருப்பங் கொண்டார்கள். அன்றியும், அவரைத் திருமணம் செய்து கொண்டால், கைபரிலுள்ள யூதர்களுக்கும்-முஸ்லிம்களுக்கும் இடையிலுள்ள பகைமை நீங்கி நட்பு அரும்பக் கூடும் எனவும் எண்ணினார்கள். அதற்கிசைய அத்திரு மகளைத் திருமணம் புரிந்து கொண்டார்கள். ஸபிய்யாவும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் பனூ சலீம் பிரதேசத்திலுள்ள கரங்கங்களின் உரிமையாளராயிருந்த ஹஜ்ஜாஜ் பின் இலகத் அல்சுலமி என்ற தனவந்தர் இஸ்லாத்தைத் தழுவி, மக்கா சென்று தம் மனைவி மக்களையும், அங்கு கடன் கொடுத்திருந்த திரண்ட செல்வத்தையும், பெருமானார் கைபரில் தோற்றுவிட்டதாகக் கூறி வசூலித்துக் கொண்டு வந்து வைத்து வாழ்ந்து வரலானார். ஆனால், அல் அப்பாஸ் அவர்களிடம் உண்மையைக் கூறி, கைபர் வந்து சேரும்வரை அதைக் காக்குமாறு கூறி வைத்தார்.

**விஷ உணவு**

கைபர் சண்டை வெற்றிகரமாக முடிந்தும், அங்கு நிலவும் சீர்கேடுகளைச் சீர்திருத்திச் செப்பனிடுவதற்காகப் பெருமானார் சில நாட்கள் தாமதித்தார்கள். எனினும் யூதர்களின் நெஞ்சங்களில் வஞ்சம் நிரம்பி வழிந்தோடியதேயன்றி வற்றவுமில்லை, குறையவுமில்லை. இவர்கள் ஜைனபு பின்து ஹாரித் என்னும் ஒரு யூத மாதைக் கொண்டு பெருமானாருக்கும் அவர்களின் உற்ற தோழர் சிலருக்கும் அறுசுவை விருந்தொன்றளிக்க ஏற்பாடு செய்தனர். இவள் ஸல்லாம் பின் மிஷ்கமின் மனைவி. அப்பெண்ணின் அழைப்பை ஏற்று அனைவரும் விருந்துண்ண அவளின் வீடு சென்றனர், விருந்தில் ஆட்டிறைச்சி பரிமாறப் பெற்றது. இறைச்சி நிறைந்த வட்டில்கள் அனைவர்

முன்பும் கொண்டு வந்து வைக்கப்பட்டன. விருந்தை ஆரம்பித்து வைக்கும் முறையில், “பிஸ்மில்லாஹ்” கூறியவர்களாய் பெருமானார் இறைச்சித் துண்டொன்றை எடுத்துத் தங்கள் திருவாயில் வைத்தார்கள். அருவருப்புடன் சட்டென அதைக் கீழே துப்பிவிட்டு, இறைச்சியில் நஞ்சிட்டிருப்பதால் எவரும் சாப்பிட வேண்டாம் எனத் தடுத்து விட்டார்கள். பிஷ்ர் இப்னு பராபின் ம.ஃரூர் என்ற தோழர் மட்டும் அவசரப்பட்டுச் சிறிது இறைச்சியை விழுங்கி விட்டார். இறைச்சியில் கடும் விஷம் ஏறியிருந்ததால், நொடிப் பொழுதில் அது அவரின் உயிரைக் காவு கொண்டு விட்டது.

விருந்தளித்த அந்தப் பெண்ணை அழைத்து விபரங்கேட்டபோது, “உண்மையில் நீங்கள் நபிதான் என்பதைச் சோதிப்பதற்காகவே இவ்வேற்பாட்டைச் செய்தோம். நீங்கள் உண்மை நபியாக இல்லாதிருந்தால், இந்த விஷம் தங்களைக் கொன்றிருக்கும், நாங்களும் உங்களை விட்டு மீட்சியடைந்திருப்போம்” என இவளும், மற்ற யூதர்களும் வஞ்சம் பூண்ட அழுக்காற்றுடன் கூறினர். ஆனாலும், அகிலத்திற்கோர் அருட்கொடையாய் வந்த அண்ணல் நபிகளார் அந்த யூதர்களை யாதொன்றும் செய்யாது மன்னித்து விட்டார்கள்.

கைபர் போரில் முஸ்லிம்களுக்கு ஏராளமான நகைகள் கிடைத்தன. அவற்றில் அழகிய வேலைப்பாடுள்ள முத்து மாலை ஒன்றை, பொருட்களைப் பங்கீடு செய்யுமுன்னர் பெருமானார் அவர்கள் தங்கள் பிரிய நாயகி ஆயிஷா பிராட்டியாருக்குக் கொடுத்து விட்டார்கள். தங்களுக்குச் சேர வேண்டிய பங்குக்கும் அதிகமாக இந்த முத்து மாலையை எடுத்தது இறைத்தூதர் அவர்களின் மனதை அன்று இரவு முழுவதும் இரம்பம் போட்டு அறுத்துக் கொண்டே இருந்தது. விடிந்ததும், விடியாமலும் எழுந்து, முத்து மாலையை பைத்துல் மாலுக்குப் பொது-நிதி சேர்த்து விட எண்ணி ஆயிஷா நாச்சியாரிடம் அதனைக் கேட்டார்கள். “முத்துக்களை ஏழை, எளியவர்களுக்குத் தானம் செய்து விட்டேனே!. என் கையில் இப்போது ஒன்றுமில்லையே!” என்ற பதிலைக் கேட்டதும், “அல்ஹம்துலில்லாஹ்” எனக்கூறி அகங்குளிர்ந்தவர்களாய், ஆயிஷா நாச்சியாரின் உதாரண குணத்தைப் பெரிதும் வியந்து போற்றினார்கள்.

**அபிசீனியா சென்றவர் திரும்பினர்**

குறைஷிகள் இழைத்த கொடுமைகளைத் தாங்க இயலாது சுமார் 15 ஆண்டுகட்கு முன் முஸ்லிம்களில் சிலர் மக்காவைத் துறந்து அபிசீனியாவில் சென்று குடியேறினர் அல்லவா? இப்போது இஸ்லாம் அபிவிருத்தி அடைந்து முஸ்லிம்கள் மதீனாவில் ஸ்திரம் பெற்று விட்டதால், குடிபெயர்ந்தவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதில் திருத்தூதரவர்கள் கருத்துக் கொண்டார்கள். அம் முஹாஜிர்களைத் தங்களிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டு மன்னர் நஜ்ஜாஷீக்கு மடல் ஒன்று வரைந்து அம்ருப்னு உமய்யா அல் தம்ரீ இடம் கொடுத்தனுப்பினார்கள். பெருமானாரின் விருப்பத்திற்கொப்ப மன்னரும், ஆடவரை இரு மரக்கலங்களிலும் பெண்டிரை இரு மரக்கலங்களிலும் ஏற்ற மதீனாவுக்குச் சமீபத்திலுள்ள துறைமுகமான யம்புவுக்கு அனுப்பி வைத்தார். இவர்களுடன் இஸ்லாத்தைப் பற்றியும் இறைத் தூதரவர்களைப் பற்றியும் அபிசீனிய அரசவையில் மிக அழகிய முறையில் விளக்கம் செய்து திருக்குர்ஆனின் திருவசனங்களை இனிமையுற ஓதிக் காண்பித்த ஹலரத் அலீ

அவர்களின் அண்ணன் ஹலரத் ஜ∴பர் அவர்களும் மதீனா வந்து சேர்ந்தார்கள். கைபரிலிருந்து அப்போதுதான் திரும்பிய பெருமானார், ஜ∴பர் அவர்கள் வந்திருப்பதைக் கேள்வியுற்றதும், விரைந்து சென்று அவரைக் கட்டித் தழுவி 'இப்பொழுது எனக் கேற்பட்டிருப்பது கைபரின் வெற்றிப் பெருமகிழ்ச்சியா? அல்லது, ஜ∴பரை கண்ட தாலேற்பட்டுள்ள ஆனந்தக் களிப்பா? எதுவென விளங்கவில்லையே!" எனக் கூறி உள்ளம் பூரித்தார்கள்.

அபிசீனியாவிலிருந்து மதீனா திரும்பியவர்களில் அபூசுப்யானின் புதல்வி உம்மு ஹபீபாவும் ஒருவர். இவரது உண்மைப் பெயர் ரம்லா. இவர் தம் கணவர் உபைதும் லாஹ்பின் ஜஹ்ஷ் என்பவருடன் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றார். உபைதுல்லாஹ் அங்கு இஸ்லாத்தைக் கைவிட்டுக் குடித்துக் கெட்டு கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டார். அதனால், அவரின் திருமண பந்தத்திலிருந்து உம்மு ஹபீபா தம்மைத் தறித்துக் கொண்டார். இதை அறிந்த அண்ணலார் உம்மு ஹபீபாவைத் தாங்கள் மணமுடிக்க விரும்புவதாகத் தெரிவித்து, அபிசீனிய மன்னருக்கு அம்ரு பின் உமையா அல்தம்ரீ மூலம் மடலொன்று வரைந்தனுப்பினார்கள். மன்னர், நுஷா என்னும் தம் அரண்மனைத் தாதி மூலம் உம்மு ஹபீபாவின் சம்மதம் பெற்றுத் திருமணப் பதிவு செய்து கொண்டு பெருமானாருக்கு தகவல் தெரிவித்தார். உம்மு ஹபீபாவுக்கு மஹராக மன்னர் தம் சொந்தப் பணத்திலிருந்து 400 தீனார்களும் (தங்க நாணயங்கள்) நல்ல பொருள்களும் அன்பளிப்புச் செய்து சிறப்பாக விருந்தொன்றும் நடத்தினார். விருந்துக்கு வந்தவர்களுக்கும் ஆளுக்கொரு தீனார் வீதம் அன்பளிப்புச் செய்தாராம். இந்தத் திருமண வலீமா விருந்தை உம்மு ஹபீபா மதீனா திரும்பியதன் பின்னர் பெருமானார் மதீனாவில் நடத்தினார்கள். இது ஹிஜ்ரி 7ம் ஆண்டு நிகழ்ந்தது.

கைபர் தாக்குதலின் காரணமாக இப்போது யூதர்களின் செல்வாக்கு மங்கி, அவர்களின் தொல்லையும் அடியோடு குறைந்துவிட்டது. அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் யூதர்களின் நிலை மிகவும் சரிந்து விட்டதால், இஸ்லாத்தைப் பழிக்கவோ அல்லது முஸ்லிம்களை தாக்கவோ அவாகள் இப்போது சக்தியற்றவர்களாகி விட்டனர். இனி கிறிஸ்தவர்களையும் மக்காக் குறைஷிகளையும் இதமாகப் பேசி இஸ்லாத்தின் பால் அழைக்க வேண்டும், இல்லாவிடில், அவர்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் இஸ்லாம் அரபு நாடு முழுவதும் பரவ வழி பிறக்கும் என நபிகள் பிரான் (ஸல்) கருதினார்கள். எனவே, அந்த வழியில் கவனத்தைச் செலுத்தத் துவங்கினார்கள்.

**புனிதப் பயணம்**

ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்டுக் கிட்டத்தட்ட ஒருவருடம் ஆகிவிட்டது. அதன்படி இவ்வாண்டு மக்கா சென்று க∴பாவைத் தரிசித்துப் புனிதக் கடன்களை நிறைவேற்றி வரப் பெருமானார் தீர்மானித்து 2000 முஸ்லிம்களுடன் ஹிஜ்ரி 7ம் ஆண்டு துல்க∴தா மாதம் கி.பி. 629 பிப்ரவரி மாதம் மதீனாவை விட்டுப் புறப்பட்டார்கள். மதீனாவின் ஆட்சிப் பொறுப்பை உவைப் பின் அல் அர்வத் அல் தீபியிடம் ஒப்படைத்து விட்டுக் குர்பானி செய்வதற்காக 60 ஒட்டகங்களையும் ஓட்டிச் சென்றார்கள். ஒருக்கால், குறைஷிகள் பதுங்கியிருந்து தாக்கும் திட்டம் ஏதும் உண்டோ என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு குதிரை வீரர்கள் சிலரை முற்கூட்டி அனுப்பி உளவறிந்து வரச்சொன்னார்கள். அவர்கள் திரும்பி வந்து

எதிர்ப்பின் அறிகுறி எதுவுமில்லை எனக் கூறினர். புனித திருக்கூட்டம் முன்னேறிச் சென்று மக்காவுக்குப் பத்து மைல் தொலைவிலுள்ள மர்ருஸ் ஸஹ்ரான் என்னும் இடத்தை அடைந்து அங்கு தாமதித்தது. உடைவாளை உறையில் போட்டுச் செல்வதைத் தவிர வேறு எந்த ஆயுதமும் உடனெடுத்துச் செல்லலாகாதென்ற ஹுதைபிய்யா ஒப்பந்த விதிக்கு இணங்க, கொண்டு வந்த ஆயுதங்களை அவ்விடத்தில் கழற்றி வைத்து, அதற்குக் காவலாக 200 வீரர்களையும் நிறுத்திவிட்டு, மற்றவர்கள், உறையிலிட்ட உடை வாட்களுடன் புறப்பட்டுச் சென்று மக்காவை அடைந்தனர். நபிகள் நாதர் 2000 தோழர்கள் சகிதம் புனித யாத்திரைக்காக வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்த மக்கா குறைஷிகள், தம் மனைவி மக்களுடன் நகரைக் காலி செய்து அருகாமையிலுள்ள குன்றுகளில் போய்த் தங்கினர், அங்கிருந்த வண்ணம் பெருமானாரின் பிரவேசத்தையும், அவர்களாற்றும் வணக்க முறைச் சடங்குகளையும் ஆவலும் ஆச்சரியமும் கலக்கப் பார்த்து நின்றனர்.

ஏழு வருடங்கள் கழித்து அன்றுதான் நபிகள் கோமான் மக்காவுக்குள் பிரவேசிக்கிறார்கள். கம்பீரமாகக் கஸ்வாவின் மீது ஆரோகணித்தவர்களாய்த் தங்களின் திருத்தோழர்கள் புடைசூழ, முன்னும் பின்னும் குதிரை, ஒட்டகை வீரர்கள் அணிவகுத்துச் செல்ல வடக்கிலிருந்து வந்து அப்புனித நகருக்குள் நுழைந்தது, குறைஷிகளுக்கு ஒரு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இக்காட்சியினைக் கண்டோர் மெய் சிலிர்த்து, வாய் புதைத்து நின்றனர்.

கன்னல் நபியவர்கள் க.்.பாவைக் கண்ணுற்றதும் உளம் மகிழ்ந்து உடல் பூரித்தவர்களாய், “லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்”, என இரைத்து கூறினார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து வந்திருந்தோர் அனைவரும் அதுபோல் உற்சாகம் பொங்க மறு முழக்கம் செய்தனர். சுற்றிலுமிருந்த குன்றுகள் இப்பேரொலியை எதிர் முழக்கம் செய்தன.

ஒட்டகத்தின் மீதமர்ந்தபடியே இறைவனின் இல்லமாம் க.்.பத்துல்லாஹ்வை நெருங்கி அதில் பதிக்கப் பெற்றிருந்த “ஹஜருல் அஸ்வதை” மிக்க மரியாதையோடும் அன்போடும் தங்கள் கைத்தடியால் தொட்டார்கள். அதன்பின் அங்கிருந்து துவங்கி க.்.பாவை ஏழு முறை இடம் வந்தபின் தவாப் செய்தல் - ஒட்டகத்தினின்றும் கீழிறங்கி விட்டார்கள். பெருமானாரின் உத்தரவுக்கிணங்க மற்ற யாத்திரிகர்களும் க.்.பாவைத் தவாபு செய்து கொண்டனர், குறைஷிகள் எள்ளி நகையாடியதுபோல் முஸ்லிம்கள் மதீனாவில் உணவின்றி மெலிந்து நலித்துவிடவில்லை, திடகாத்திரமாகவே இருந்து வருகின்றனர் எனக் காட்டும் பொருட்டு அவர்களை விரைவாகவும் தொங்கலோட்டமாகவும் இடம் சுற்றுமாறு பெருமானர் கட்டளையிட்டார்கள். தாங்களும் அவ்வாறே தவாப் செய்தார்கள். பின்னர், அண்ணலாரின் தலைமையில் அனைத்து முஸ்லிம்களும் இறைவனின் இல்லத்தில் முன் அணி வகுத்து நின்று தொழுது அவனுக்கு நன்றிக் கடனாற்றினர்.

க.்.பாவில் இப்ராஹீம் நபியவர்களின் ஆசார முறைப்படிச் செய்யவேண்டிய மற்ற வணக்கங்களையும் கிரியைகளையும் நிறைவேற்றிவிட்டு, பெருமானாரும் மற்றையோரும் “மர்வா” என்னும் குன்றுக்குச் சென்று குர்பானிக்காகக் கொண்டு வந்த ஒட்டகங்களைப் பலியிட்டனர். அதன்பின் அனைவரும் தலைகளை மொட்டை அடித்துக் கொண்டனர்.

பின்னர், மர்ருஸ் ஸஹ்ரானில் ஆயுதங்களைக் காவல் புரிந்த தோழர்களையும் வரவழைத்து “உம்ரா”வை நிறைவேற்றச் செய்தார்கள்.

மறுநாள் காலையில் நபிகள் பிரான் அவர்கள் க.்.பாவுக்கு வந்து நண்பகல் வரை அங்கு தங்கினார்கள். நண்பகல் (லுஹர்) தொழுகை நேரம் வந்ததும் ஹலரத் பிலால் அவர்களை பாங்கு சொல்லி மக்களை தொழுகைக்கு அழைக்குமாறு பணித்தார்கள். அவர் உயரமானதோர் இடத்தில் ஏறி நின்று தமக்கே உரித்தான இனிய கணீர்த் தொனியில் பாங்கைச் சங்கநாதம் செய்தார். அநடத பக்திப் பரவசமிக்க இன்ப கீதத்தை அதன் எதிரொலியை மக்கா நகரிலிருந்த மக்கள் மட்டுமின்றிச் சுற்றிலுமுள்ள குன்றுகளில் கூடியிருந்த குறைஷியரும் மற்றையோரும் செவிமடுத்தனர். வியப்புற்றனர். விதிர்ப்படைந்தனர். பாங்கொலி கேட்டதும் முஸ்லிம்களனைவரும் க.்.பாவை நோக்கி விரைந்தோடி வந்தனர். மதீனாப்பள்ளிவாசலில் நடைபெறுவதைப் போன்ற ஜமாஅத் (கூட்டுத்) தொழுகையை இங்கும் நபிகள் பிரான் முன்னின்று நடத்தி வைத்தார்கள். இதையும் குன்றுகளிலிருந்து குறைஷிகள் பார்த்து வியப்புக் கடலில் மூழ்கினர். இத்தகைய புதுமை காட்சிகளை அவர்கள் இதற்கு முன் எப்போதும் கண்டதில்லையல்லவா? உலக வரலாற்றிலேயே இஸ்லாம் ஓர் உன்னத நிலையை அடையவிருக்கிறது. ஓர் அழகிய முன் மாதிரியாக அமையவிருக்கிறது – என்பதனை அவர்கள் அப்போது எவ்வாறு அறிய முடியும் ? இறைவனின் திருவுளச் சித்தம் இவ்வாறாகத் தானே செயல்படுகின்றது!.

இதன்பின் பெருமானார், குறைஷிகளை இஸ்லாத்தின் பால் ஈர்ப்பதற்கான முயற்சியில் பல பிரமுகர்களுடன் நயம்படக் கருத்துப் பரிமாற்றங்கள் புரிந்தார்கள். இந்நோக்கத்தோடு தான் அண்ணலார் தம் சிறிய தந்தை ஹலரத் அப்பாஸ் அவர்களின் கொழுந்தியாரான மைமூனா பின்து அல் ஹாரித் என்ற இளம் விதவையையும் திருமணம் புரிந்தார்கள். மைமூனாவுக்கு மஹராகப் பெருமானாரின் சார்பில் 400 திர்ஹங்களை அல் அப்பாஸ் அவர்களே கொடுத்தார்கள். அதன் காரணமாக அப்பெண்மணியின் நெருங்கிய உறவினர் சிலரும் இஸ்லாத்தில் இணைந்தனர். பெருமானாருக்கு இதுவே கடைசித் திருமணமாகும்.

**பெருமானாரின் பிராட்டியர்**

பெருமானார், கதீஜா பின்து குவைலித் பின் அஸது ஆயிஷா பின்து அபூபக்கர், ஸௌதா பின்து ஜமஅ பின் கைஸ், உம்மு ஸலமா பின்து அபூ உமய்யா அல்மக்ஜுமி, ஜைனப் பின்து ஜஹ்ஷ், ஹப்ஸா பின்து உமர், உம்மு ஹபீபா பின்து அபூசுப்யான், ஜுவைரியா பின்து அல்ஹாரிது அல்குஸாயீ, ஸபீயா பின்து ஹுயை பின் அக்தப், மாரியா கிப்தியா, மைமூனா பின்து அல்ஹாரிது அல் ஸ.்.ஸ.்.அ, ஜைனப் பின்து குஸைமா, அஸ்மா பின்து அல் நு.்.மான் அல் கிந்தி ஆக பதிமூன்று மனைவியரைத் திருமணம் புரிந்து கொண்டதாகத் தெரிய வருகிறது. இம்மனைவியர் அனைவரும் பெண்களிடையே இஸ்லாத்தைப் பரப்புவதற்கும் பெண்களுக்குப் பெண்களே விளக்கம் சொல்ல வேண்டிய விஷயங்களுக்கும் மிக்க உதவியாக இருந்தனர். அகில உலக ரீதியில் சமாதானத்தையும், நீதியையும் நிலை நிறுத்தும் குறிக்கோளையுடைய ஓர் இயக்கம் பல தாரத்தின் மூலம் அதைச் சாதிக்க முனைவதில் தவறேதுமில்லை. உண்மையில் அது பெருமானார் (ஸல்) புரிந்த பெருந்தியாகமேயாகும்.

ஏக தாரமாகக் கதீஜா பிராட்டியாருடன் 25 ஆண்டு காலம் அண்ணலார் அவர்கள் இனிய முறையில் இல்லறம் நடத்திக் காட்டிய விதம் இஸ்லாத்தின் ஏகதாரக் கொள்கைக்கு இணையற்ற முன் மாதிரியாகும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "தங்கள் கட்டிளங்காளைப் பருவத்தை ஒரு கன்னியை மணந்து காலங்கழிப்பதை விடுத்து, பொருளாசை கொண்டு முன்பு இருவரை மணந்து, பல குழந்தைகளைப் பெற்று, விதவையாகி நாற்பது வயதினை அடைந்திருந்த தம்மினும் பதினைந்து வயது மூத்தவரான, கதீஜா நாயகியாரை மணக்க முன் வந்தார்களெனச்" சில மேலை நாட்டு ஆசிரியர்கள் குற்றம் கூறுகின்றனர். இத்தகையோர் அனைத்தையும் அறிந்த ஏகபராபரனாகிய அல்லாஹு தஆலா எதிர்காலத்தில் என்ன நடக்க வேண்டும் என்பதை எவ்வாறு திட்டமிட்டு வகுத்துள்ளான் எனச் சிந்தித்து உணரத் தவறி விட்டனர் என்றே கூற வேண்டும்.

பெருமானார் (ஸல்) தங்கள் காளைப் பருவத்தில், தாம் இறைவனின் தூதராக ஆக்கப்படுவோம் என்றோ, வானவர் ஜிப்ரீல் இறைவனின் வேத வசனங்களைக் கொண்டு தம் முன் தோன்றுவார் என்றோ, கனவிலும் கருதியவர்களல்லர், நபித்துவத்திற்கு முன்னர் பல தடவைகளிலும் ஹிராக் குகையிலும் அவர் தோன்றிய போதும் கற்களும், மரங்களும், கால்நடைகளும் நபிகள் நாதர் நடக்கும் பாதைகளில் அசரீரியாக ஸலாமும் வாழ்த்தும் கூறிய போதும் அவர்கள் எவ்வித அச்சமும், அதிர்ச்சியும், கிலேசமும், நடுக்கமும் கொண்டார்கள் என்பதை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம்.

இந்நிலையில் அவர்களுக்கு ஆறுதல் கூறி தைரியமூட்டித் தங்கள் தூதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுமாறு செய்ய ஒரு பண்பட்ட அறிவுப்பூர்வமான, மனத்திடமுள்ள ஒரு மனைவி ஒருவர் – வாழ்க்கைத் துணைவி - இல்லக் கிழத்தியாக வாய்த்தால் தானே நபித்துவத்தை செம்மையுற நடத்திச் செல்ல முடியும்!. இதற்கு, இல்லறம் என்றால் என்ன, எப்படி என்பது பற்றி எதுவும் அறியாத, கணவனின் உள்ளத்தை உய்த்தறிய இயலாத, உலக இயல்பு தெரியாத, நலலு பேருடன் பேசிப் புழங்கிப் பழக்கமில்லாத, பதற்றமும் பயமும், சங்கோசமும், நிரம்பிய மனநிலையுள்ள, பிறந்த வீட்டையும் பெற்றோரையும் மறக்காது சதா மனதிலே இடம் கொண்டுள்ள, பதினைந்து அல்லது இருபது வயதினையுடைய ஒரு கன்னிப்பெண், ஒட்டகமே வஹீயின் பளுவைத் தாங்காது மண்டியிடும் அளவு வன்மை பெற்ற இறை வசனங்களைப் பெறும் நபிகள் கோமான் அவர்களின் இல்லாளாக, வாழ்க்கைத் துணைவியாகச் சேவையாற்றவும், தைரியங் கூறவும், பக்கபலமாக இருந்து கொள்ளவும் முடியுமா என்பதைச் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாறாக, கதீஜா நாச்சியாரின் பண்புகளையும் குண நலன்களையும் நாம் சற்று கவனித்துப் பார்ப்போம். அவ்வம்மையாரின் தந்தை முதுமையடைந்து வலிமை குன்றிய போது தம் மகளை அழைத்து அருகிருத்தி, "மகளே நான் தள்ளாமை நிலையை அடைந்து விட்டதால், நம் வணிகத் தொழிலை என் ஏகபுத்திரியாகிய நீ தொடர்ந்து நடத்தி வருவாயா? பெண்ணாகப் பிறந்த உன்னால் அதைத் திறம்பட நிர்வகித்து வர

இயலுமா? என வினவிய போது, அறிவுக் கூர்மையும், நிதான புத்தியும், திறமையும் மிக்க அப்பெண்கள் நாயகியார், மனந்தளராமல் வெகு தைரியத்துடன், “தந்தையே!. அப்படியே ஆகட்டும். நான் நம் வியாபாரத்தை தொடர்ந்து நடத்தி வருவேன். நீங்கள் நிம்மதியடையுங்கள். எனக்கு அவ்வப்பொழுது அவசியமான ஆலோசனைகளை மட்டும் தாங்கள் கூறி வந்தால் போதும்” என ஆதரவுடன் கூடிய ஆறுதல் மொழி பகர்ந்தார்.

அவ்வாறே அவர் ஓர் ஆண்மகனைப் போன்று தம் தந்தையின் தொழிலை ஏற்றுப் பல அரபியர்களையும், யூதர்களையும் தம் செயலர். பணியாட்களாக நியமித்துக் கொண்டு திறம்பட நிர்வாகம் புரிந்து குவடு முட்டிய செல்வச் சீமாட்டியாக உயர்ந்து விட்டார். பெருமானார் (ஸல்) அவர்களைத் தம் காரியஸ்தராக நியமித்து சிரியா சென்று வாணிபம் செய்து வருமாறு அனுப்பி போது மக்காவிலிருந்து புறப்பட்ட வணிகக் “காரவானில்” சரக்குடன் கூடிய ஒட்டகைக் கூட்டத்தில் - பாதிக்கு மேல் கதீஜா நாச்சியாருக்குச் சொந்தமான வைகளாயிருந்தன எனச் சரித்திரம் சான்று பகர்கின்றது.

இந்த விதமான திடசித்தமும் முதிர்ச்சியடைந்த மனோபக்குவமும் பெற்றிருந்ததின் காரணமாக கதீஜா நாயகியார் பெருமானாரின் நாற்பதாம் வயது வரை அவர்களின் இறை வேட்கை முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து அவ்வப்போதும் அவர்களுக்கு ஏற்பட்டு வந்த கிலேசம். அதிர்ச்சி, ஐயப்பாடுகளுக்கு ஆறுதல் மொழி கூறி தைரியமும் தெம்பும் ஊட்டி வந்தார்.

இருவரின் தூய்மையான எண்ணம், களங்கமற்ற கருத்தொற்றுமை, புனிதமான கொள்கை, ஆத்மீகத் துறையின் அடிப்படையிலேயே இல்லற வாழ்க்கை நடத்தும் ஆசை, எஞ்ஞான்றும் காதலரிருவரும் கருத்தொருமி ஆதரவு பட்டு இறைவனது பணியில் ஈடுபடும் ஆர்வம் ஆகியவைகளே இருவரையும் கணவன் மனைவியாக ஒன்றுபடுத்தியதே அல்லாது, பெருமானாரின் கட்டிளமைக்காக கதீஜா நாச்சியாரையோ, கதீஜா நாச்சியாரின் திரண்ட செல்வத்திற்காக பெருமானாரையோ காதலுறச் செய்யவில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். கதீஜா நாச்சியாரின் குவடு முட்டிய செல்வமனைத்தும் ஏழை, எளியோர், நலிந்தோர், நோயுற்றோருக்கு வாரி, வழங்கி இன்பங் காணுவதில் செலவழித்தேயன்றிப் பெருமானாரின் சுகபோகத்திற்காகக் கிஞ்சித்தும் அது வீண் விரயம் செய்யப்படவில்லை என்பதையும் நாம் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும். எனவே இவ்விதத் தூய்மைகள் பெற்ற இருவரைத் தம்பதிகளாக இணைத்துப் பரிபக்குவப்படுத்திய பின்னரே தனது வானவர்கோனைக் கொண்டு தன் வேதத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கியருள வேண்டுமென்பது அத்தூயோனின் திருப்பொருத்தமாக இருந்திருக்கிறது என்ற அகமியத்தை மேற்காட்டிய நியாய விளக்கங்களிலிருந்து நாம் கண்டு தெளிவோமாக!

“(நபியே) நீர் இரவு வேளைகளில் மூன்றில் இரு பகுதிகளை அல்லது பாதியை அல்லது மூன்றிலொரு பகுதியை விழித்திருந்து இறை வணக்கத்தில் கழிக்கின்றீர் என்பதை உமது நாயன் நிச்சயமாக அறிவான்”, (73:20) என தன் திருவசனத்தில் கூறும் போது, உடலிச்சைக்காக அவர்கள் பல மனைவியரைத் திருமணம் செய்தார்கள் எனக் குறைகற்பிக்க முயல்வது பொருத்தாதது, அபாண்டமானது.

“நபியே! உமது மனைவியரிடம் கூறுவீராக! இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரங்களையும் - வசதிகளையும் விரும்புவீர்களாயின், வாருங்கள்! உங்களைத் திருப்தி செய்து நல்ல முறையில் (திருமண) விடுதலை செய்து அனுப்பி வைக்கிறேன்”, (33:28) என இறைவன் தன் திருமறையில் கூறியுள்ளான். மனைவியரின் விருப்பத்திற்கு இசையாது அவர்கள் அனைவரையும் மண விடுதலை அளித்து வீட்டுக் கனுப்பச் சித்தம் பூண்ட நன்னபியவர்களை உடலிச்சைக்காகப் பல தாரங் கொண்டதாக எவரே வாய் கூசாது கூற முற்படுவர்?

பெருமானார் மதீனா சென்றதிலிருந்து ஏழு வருட காலமாக ஐம்பத்தி நான்காம் வயதிலிருந்து அறுபதாம் வயதுவரை இஸ்லாத்தை வலுப்படுத்துவதிலும், அதைப் பரப்புவதிலும், ஓயாத எதிர்ப்புகளையும், இன்னல்களையும், போர்களையும் சமாளித்து நிற்க வேண்டியதேற்பட்டது. இவ்வித நெருக்கடியான கால கட்டத்தில் அவர்கள் உடல் இச்சையைப் பற்றியும், சுகத்தைப் பற்றியும், மனைவி மக்களைப் பற்றியும் கருதிப் பார்க்க எங்கே நேரமிருந்தது?

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்குவோமாயின், ஆதரவற்று நின்ற அருமைத் தோழர்களின் விதவையருக்கு வாழ்வளிக்கவும், இஸ்லாத்தின் பால் விரோதம் பாராட்டிய கூட்டத்தார்களின் நேசத்தைப் பெற்று அவர்களை இஸ்லாத்தில் இணைக்கவும், தங்களின் இல்லறத்தால் தாய்க்குலத்திற்கே உரித்தான விஷயங்கள், பிரச்சனைகள், சிக்கல்களைத் தெளிவுப்படுத்தவுமே எம் பெருமானார் அவர்கள் பலதாரமணங்களை மேற்கொண்டார்களென்பதை ஐயமற அறிந்து கொள்ளலாம். பெருமானாரவர்கள் உடலின்பத்திற்காகவே பல தாரங்களைக் கொள்வதாயின் 35 வயதைக் கடந்து நின்ற விதவைகளையும் விவாக விலக்கானவர்களையும் மணமுடிக்கத் தேவையில்லையே!

அண்ணலார் அதிகமாகத் திருமணங்கள் புரிந்து கொண்ட காலம் அவர்களின் 55 முதல் 59 வயதுக்கிடையிலாகும். அம்மனைவியரில் இருவரைத்தவிர ஏனையவர் 36 முதல் 50 வயதினை அடைந்தவராயிருந்தனர். இந்நிலையில் பெருமானார் உடலிச்சை காரணமாகத் திருமணங்கள் புரிந்து கொண்டதாக எப்படிக் குற்றம் கூறுவது?

இப்போது, முஸ்லிம்கள் மக்காவில் தங்குவதற்கு ஹுதைபிய்யா உடன்படிக்கையில் அனுமதிக்கப்பட்ட மூன்று தினங்கள் முடியும் தருணம் நெருங்கிவிட்டது. முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேற வேண்டுமென குறைஷிப் பிரமுகர்களான சுஹைல் பின் அம்ருவும் ஹுவய்திப் இப்னு அப்துல் உஸ்ஸாவும் பெருமானாரிடம் வந்து கூறினர். அதற்கு அண்ணலார், “நான் இப்போ திங்கு மைமூனாவைத் திருமணம் செய்துள்ளதால், உங்களுக்கெல்லாம் வலீமா (திருமண) விருந்தொன்றை நடத்தி விட்டுச் செல்ல எண்ணியுள்ளேன், நீங்கள் அன்பு கூர்ந்து அவ்விருந்தில் கலந்து சிறப்பிக்க வேண்டும்”, என்று அழைத்தார்கள். அதனைக் கேட்ட சுஹைல், “நீர் தரவிருக்கும் விருந்தினை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் நீர் கெடுவுபடி இங்கிருந்து அகலுவதையே நாங்கள் பெரிதும் விரும்புகின்றோம்”, எனச் சிறிது கடுகடுப்பாக பதில் கூறிவிட்டு ஆங்கிருந்து அகன்றார். மாநபியவர்கள் மைமூனாவையும் மற்ற தோழர்களையும் அழைத்துக் கொண்டு அன்றிரவே மக்காவை

விட்டும் வெளியேறி மதீனா பிரயாணமானார்கள். சில நாள் ஸரிப் என்னும் இடத்தில் தங்கி, பின் துல்ஹஜ்ஜில் மதீனாவை அடைந்தார்கள்.

## காலிதிப்னு வலீதும் அம்ரிப்னு ஆஸும்

பெருமானாரும் மற்ற முஸ்லிம்களும் மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றதன் பின் குன்றுகளில் தங்கியிருந்த குறைஷிகள் நகருக்குத் திரும்பினர். வள்ளல் நபிகளார் க..ஃபா இடம் சுற்றியது, வணக்கம் புரிந்தது, முஸ்லிம்கள் அவர்களிடம் நடந்து கொண்ட அடக்க ஒடுக்கம், காட்டிய மேதை மரியாதை ஆகியவற்றைக் கண்டு மக்காவாசிகள் ஆச்சரியமுற்றனர். அன்றியும், முஸ்லிம்களிடம் காணப்பட்ட கட்டுப்பாடு, ஒழுக்கம், பக்தி ஆகியவை அவர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து தூங்கிக் கிடந்த பகுத்தறிவைத் தட்டி எழுப்பிச் சிந்திக்க வைத்தன. "உயர் தன்மைகள் படைத்த இந்த மகானுபாவர் மீது நாம் ஏன் வீணாகப் பகைமை பாராட்ட வேண்டும்?" என அவர்கள் எண்ணத் தொடங்கினர். அதன் பயனாக முக்கியப் பிரமுகர்களில் பலர் மனமாற்றமடைந்து இஸ்லாத்தைத் தழுவ முன் வந்தனர்.

இவர்களில் ஹலரத் அலீ அவர்களுக்கு ஒப்பானவராக விளங்கிய வீரத் தளபதி காலிதிப்னு வலீதும், அபிசீனிய மன்னரிடம் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூது சென்ற அம்ரிப்னு ஆஸும் குறிப்பிடத்தக்கவர்கள். காலித் அவர்களைப் பெருமானார் (ஸல்) "ஸைபுல்லாஹ்" அல்லாஹ்வின் வாள் எனப் பாராட்டியுள்ளார்கள். அம்ரு குறைஷிகளில் சிறந்தவொரு கவிஞர், இராஜ தந்திரி ஆட்சியாளர், பிற்காலத்தில் ஷாமும் (சிரியா) மிஸ்ரும் (எகிப்து) இவ்விருவரின் வீர தீர பராக்கிரமத்தினால்தான் வெற்றி கொள்ளப்பட்டன. இவ்விருவரும் ஹிஜ்ரி 7ம் ஆண்டு துல்ஹஜ் மாதம் மதீனா சென்று நபிகள் நாதர் (ஸல்) முன்னிலையில் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்தனர். இவர்களின் மனமாற்றம் இஸ்லாத்திற்கு இணையற்ற வெற்றியையும், நற்பயனையும் ஈட்டித் தந்தது. இவர்களைப் பார்த்து நடுத்தர, அடிமட்ட நிலையிலிருந்த குறைஷிகளும் பாலைவன அராபியரும் இஸ்லாத்தைத் தழுவினர். இவ்வாறாக இப்புனித யாத்திரைக்குப் பின், மக்காவையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்த மக்கள் கூட்டங் கூட்டமாக இஸ்லாத்தில் அணி திரண்டனர்.

## மூத்தாப் போர்

ஹிஜ்ரி 8ம் ஆண்டு ஜமாதில் அவ்வல் மாதம் கி.பி. 629 துவக்கம் ரோமானியச் சக்கரவர்த்தியின் கீழிருந்த சிரியா நாட்டிலுள்ள புஸ்ரா மாகாணத்தின் சிற்றரசனான ஷிர்ஜீல், நபிகள் பிரானின் திருமுகத்தைக் கொண்டு சென்ற தூதரைக் கொலை செய்த விபரம் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. இப்போது அச்சிற்றரசன் மீது போர் மேல்ச் செல்லுமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மூவாயிரம் வீரர்களைக் கொண்ட படையொன்றை ஜைது பின் ஹாரிதா தலைமையில் மூத்தாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இப்போரில் ஜைது உயிர் நீத்தால் ஜ..ஃபர் பின் அபூதாலிப் தலைமை தாங்கிப் போரிட வேண்டுமென்றும், அவரும் உயிர் துறந்தால், அப்துல்லாஹ் பின் ரவாஹா தளபதியாக வேண்டுமென்றும் இம்மூவருக்குப் பின் படையினரே தங்களுக்குள் தகுதியும் திறமையும் வாய்ந்த ஒருவரைத் தளபதியாத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சளைக்காது வீரத்துடன் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டுமெனவும் உபதேசித்தார்கள். படையினரை வழியனுப்பும் முறையில் "தனிய்யத்துல்வ..ஃதா"

என்னும் “பிரியா விடைக்கணவாய்” வரை கால்நடையாகச் சென்று, படைத் தலைவருக்குரிய ஆலோசனைகளையும் கூறி ஆசீர் வதித்து விட்டு திரும்பினார்கள்.

காருண்யக் கடலாம் காத்தமுந் நபியவர்கள் இப்படையில் சென்றவர்களுக்குச் செய்த உபதேசங்களில், மக்களைக் கொள்ளையிடக் கூடாது, எதிரிப்படை விட்டுச் செல்லும் பொருள்களை மட்டுமே கைப்பற்ற வேண்டும். மடாலயங்கள் வணக்கத்தலங்களில் அடைக்கலம் புகுந்தவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும், வயோதிகர்களையும் ஊரை விட்டு வெளியேறிச் செல்பவர்களையும் இம்சிக்கவோ, கொடுமைப்படுத்தவோ கூடாது. எதிர்ப்புக் காட்டாதவர்கள், ஏழைகளுடைய வீடு, குடிசைகளை நாசம் செய்யக் கூடாது. பலன் தரக்கூடிய தோட்டந் துரவுகளை அழிக்கவோ வெட்டவோ கூடாது என்பவை முக்கியமானவையாகும்.

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக, ரோமானியப் பேரரசை எதிர்த்து ஓர் அரபு மன்னர், இல்லை, அரபு நாட்டின் ஏழைப்பாலைவன மக்களின் தலைவர் ஒருவர் படையனுப்பியது இதுவேயாகும். பெருமானார் படையனுப்பும் செய்தி ரோமானிய ஒற்றர்கள் மூலம் சக்கரவர்த்திக்குத் தெரிய வந்து அதைச் சந்திப்பதற்கு அவரும் பலத்த முஸ்தீபுகளைச் செய்யலானார்.

முஸ்லிம் படை மதீனாவுக்கு வடக்கே சுமார் 250 மைல் தொலைவிலுள்ள மூத்தாவுக்குப் பயணமாகி பல்காவில் மஆன் என்னும் இடத்தை அடைந்தபோது ரோமானியர்களின் எண்ணிக்கை முஸ்லிம் படை பலத்தை விடப் பன்மடங்கு இது ஒரு லட்சம் எனக் கூறப்படுகிறது. அதிகமாக இருப்பதாகக் கேள்வியுற்றது. பைஸாந்திய (ரோமானிய)ப் படை பல்காவிலுள்ள மஷாரி.ஃப் என்ற கிராமத்தில் முகாமிட்டிருந்தது. அது தாக்க முற்பட்டபோது முஸ்லிம் படை கேந்திர வசதியான மு.ஃத்தா கிராமத்துக்குப் பின் வாங்கிச் சென்று தன் நிலையை அரண் செய்து கொண்டது. முஸ்லிம் படையில் வலது அணியை குத்பா பின் கத்தாதா தலைமையிலும், இடது அணியை அன்ஸாரி உபாதா பின் மாலிக் தலைமையிலும் வைத்து ஜைது பின் ஹாரிதா பெருமானாரின் கொடியைத் தாங்கி நின்று எதிரியுடன் போரிட்டனர். போர் துவங்கியது. முஸ்லிம்கள் அஞ்சா நெஞ்சத்துடன் சண்டை செய்தனர். பெருமானார் நியமனம் செய்தனுப்பிய தளபதிகள் மூவரும் ஒருவர் பின் ஒருவராக வீழ்ந்து தியாக மூர்த்திகளாயினர். ஹலரத் ஜ.ஃபர் அவர்கள் உடம்பில் 90 காயங்கள் ஏற்பட்டிருந்தாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இறக்கும் போது அவருக்கு வயது 33. நாலாவதாக காலித் பின் வலீத் அவர்களை முஸ்லிம் வீரர்கள் தங்களின் தளபதியாகத் தேர்ந்தெடுத்தனர். காலித் அன்றும் அதற்கு மறு நாளும் வீரப்போர் புரிந்தார். அவரது கையில் எட்டு வாட்கள் ஒன்பது என்றும் கூறுவர் – முறிந்தோடின. அவ்வீர வாட்களுக்கு எதிரிகளின் எண்ணற்ற தலைகள் வெட்டுண்டு உருண்டோடின.

மறுநாள் முஸ்லிம் வீரர்களை எந்த வகையில் அணி வகுத்து நிறுத்துவது என்பது பற்றி ஹலரத் காலித் முந்திய இரவு முழுவதும் சிந்தித்தார். ஒரு வகையாகத் திட்டம் செய்தார். அதிகாலையில் எழுந்ததும் படையணிகளைப் பல பகுதிகளாகப் பிரித்து எதிரிகளைச் சூழ்ந்து வளைக்கும் பாணியில் வியூகம் இட்டு அணிவகுத்து நிறுத்தியிருந்தார். பொழுது புலர்ந்ததும் ரோமானியர்களின் தளபதி, மன்னர் ஹெராக்லியஸின் சகோதரன் தியோடோரஸ், முஸ்லிம்களின் அணிவகுப்பை

ஏறிட்டுப் பார்த்தான். அவ்வளவு தான், அவன் கண்கள் மிரண்டு சுழல ஆரம்பித்தன. கடந்த இரவு முஸ்லிம்களுக்கு ஏராளமான உதவிப்படையும், உணவும் வந்திருப்பதாக அவன் எண்ணினான். கதி கலங்கினான். தன் படையை விரைவில் பின் வாங்குமாறு உத்தரவிட்டான். ரோமானியர்கள், கொண்டு வந்த தளவாடங்களையும், உணவுப் பொருட்களையும் அப்படியப்படியேப் போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். அவர்களைப் பின் தொடர்ந்தால் நன்மைக்கு மாறாகத் தீமையாக முடியக் கூடும் என அஞ்சிய வீரத் தளபதி காலித், கிடைத்த சிறைப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு வீரர்களையும் அழைத்துக் கொண்டு விரைந்து மதீனா வந்து சேர்ந்தார். இப்போரில் மரித்த முஸ்லிம் வீரர் பன்னிருவரின் சடலங்களும் மதீனா கொண்டு வரப்பட்டு ஜன்னத்துல் பகீ∴யில் நல்லடக்கம் செய்யப்பட்டன. எதிரிகளில் பல நூறு பேர் மடிந்தனர்.

தம்முடன் வாழ்விலும் தாழ்விலும் இணை பிரியாது இருந்து வந்த வளர்ப்பு மகன் ஜைத் அவர்களும், இஸ்லாத்தையும் தம்மையும் பற்றி அபிசீனிய மன்னரிடம் இணையில்லா வகையில் எடுத்து விளக்கிய சகோதரர் ஜ∴பர் அவர்களும் உயிர் நீத்தது குறித்துப் பெருமானார் பெரிதும் துயர் அடைந்தார்கள்.

மூத்தாவில் நிகழ்ந்தவையனைத்தையும் அண்ணலார் ஞான திருஷ்டியால் கண்டு தோழர்களிடம் விவரித்தார்கள். போரின் முடிவை முற்கூட்டி அறிவிக்க வந்த தூதரை நோக்கி, "போர் நிகழ்ச்சிகளை நீர் விவரிக்கின்றீரா? அல்லது நான் கூறவா?" என வினவியதிலிருந்து இவ்வுண்மை தெளிவாகிறது.

இச்சமயத்தில் ரோமானிய ஆட்சியின் கீழ் சிரியாவில் மஆன் மாகாண கவர்னராயிருந்த ∴பர்வா இப்னு அம்ர் அல் ஜுதமி என்பவர் இஸ்லாத்தின் அழகிய அறப்போதங்களால் ஈர்க்கப்பட்டு முஸ்லிமாயினர். இதனையறிந்த ரோமானிய அரசன் இவருக்கு உயர் பதவிகள் அளிப்பதாகக் கூறி ஆசை காட்டினான். எனினும், அவர் இஸ்லாத்தைக் கைவிட இசையவில்லை. அதனால் அவரைச் சிலுவையிலறைந்து கொல்ல உத்தரவிட்டான். அக்கொடியோன் அவர் அப்ராவில் அவ்வாறே கொல்லப்பட்டார்.

**முடிசூடா மன்னர்**

ஹிஜ்ரி 8ம் ஆண்டு நடைபெறுகிறது. இப்போது மக்கா வாழ் குறைஷிகளையும், சில பதாவிய அரபுக் கூட்டத்தாரையும், ஒரு சில யூத, கிறிஸ்தவர்களையும் தவிர்த்து அரேபியாவிலுள்ள மக்களில் பெரும்பாலோர் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டனர். சில கூட்டத்தார் தாமே வலிய வந்து இஸ்லாத்தைத் தழுவினர். மற்றும் சிலர் அரசியல் காரணங்களுக்காகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் இஸ்லாத்தில் இணைந்தனர். வேறு சிலர் அச்சத்தின் காரணமாகவும் இஸ்லாத்தில் இணைந்தனர். இந்த வகையில் பார்க்கும் போது நபிகள் கோமான், இப்பொழுது அரேபியாவின் முடிசூடா மன்னராக விளங்கினார்கள் எனக்கூறின் அது மிகையாகாது.

எளிமை, நாவண்மை, நேர்மை, எச்சரிக்கையுடனிருத்தல், பெருந்தன்மை, தன்னலமின்மை, பிறருக்கு உதவும் பண்பு, உறுதி, ஊக்கம், சோர்வின்மை, நட்பு, நன்றி, மறவாமை, ஆண்டவனுடைய ஆற்றலிலும் கருணையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை, இத்தியாதி பண்புகளனைத்தும் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்றும்

குறைவில்லாமல் இருந்திருக்கின்றன. நபிகள் நாதர் மேன்மையும் புகழும் அடைய இவையே ஊன்றுகோலாய் இருந்து உதவியிருக்கின்றன.

ஏக தெய்வ வணக்கத்துக்காக இப்பூவுலகில் எழுப்பப்பட்ட முதல் ஆலயம் மக்காவிலுள்ள கஃபாவாகும் (3:96) அந்த ஆலயத்தை கேந்திரமாகவும், மையமாகவும் கொண்டு தான் இஸ்லாத்தைப் பரத்தவும், பலப்படுத்தவும், நாயகம் (ஸல்) அவர்கள் எண்ணினார்கள். எனவே, மக்காவைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரும் வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அதுவும், போர் நிகழ்த்தி, மக்காவுக்கு நாசம் விளைவிக்காத வகையில் அதைக் கைப்பற்றுவது அவசியமானது, கண்ணியமானது எனவும் கருதினார்கள்.

## அரிய வாய்ப்பு

அத்தகையதொரு வாய்ப்பு இப்போது அண்ணலார் அவர்களுக்குக் கிட்டியது. முஸ்லிம்களும் குறைஷிகளும் செய்து கொண்ட ஹுதைபிய்யா உடன்படிக்கையின்படி ஒருவருடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள கூட்டத்தாரை மற்றவர் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கக்கூடாது என்பது ஒரு நிபந்தனையாகும். பனூ குஸாஅ என்னும் அரபுக் கூட்டத்தாருக்கும் பனூ பக்கர் கூட்டத்தாருக்குமிடையில் நீண்ட நாளாகப் பகைமை இருந்து வந்தது. இவர்களில் குஸாஅ கூட்டத்தார், பெருமானார் (ஸல்) அப்துல் முத்தலிபின் உறவினர் என்ற முறையில் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள். இது அவ்விரு கூட்டத்தாருக்கிடையில் பகைமையை வளர்த்ததே தவிரக் குறைக்கவில்லை. இப்பொழுது பனூ பக்கர் கூட்டத்தார், தங்கள் வகுப்பைச் சேர்ந்த அஸ்வத் என்பவன் ஒப்பந்தத்திற்கு சில தினங்களுக்கு முன் கொலை செய்யப்பட்டதின் காரணமாக, பனூ குஸாஅ கூட்டத்தாரைத் தாக்க நடவடிக்கை எடுத்து, குறைஷிகளின் உதவியைக் கோரினர். குறைஷிகள் அவர்களுக்கு மறைமுகமாக உதவ முன் வந்தனர்.

ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்டு ஒன்றரை ஆண்டு ஆயிற்று. ஹிஜ்ரி 8 ரஜப் மாதம் ஒருநாள் இரவில் பனூபக்கர் கூட்டத்தாரில் துபைல் பின்முஆவியா என்பவன் தன் ஆட்கள் சிலருடன் சென்று பனூ குஸாஅ கூட்டத்தார் வசிக்கும் வத்தீர் என்னும் பகுதியில் புகுந்து அவர்களைத் தாக்கிப் பலரைக் கொன்று குவித்தான். இவர்களுடன் இக்ரிமா பின் அபூஜஹல், சப்வான் இப்னு உமையா, சுஹைல் இப்னு அம்ரு போன்ற குறைஷிப் பிரமுகர்களும் மாறுவேடம் பூண்டு மறைந்து நின்று குஸாஅக்களைத் தாக்கினர். கஃபாவுக்குள் தஞ்சம் புகுந்தவர்களை இம்சிக்கக் கூடாதென்பது அரபு நாட்டு மரபு. ஆனால் அதை மீறி கஃபாவுக்குள் அடைக்கலம் புகுந்த குஸா அக்களில் இருபது பேரை பனூபக்கர்கள் அப்புனித ஸ் தலத்தினுள்ளேயே வெட்டிக் கொலை செய்தார்கள். குறைஷிகளும் இக்கோரக் காட்சியைப் பார்த்துக் கொண்டு, கண்டுங் காணாதவர் போல் வாளாயிருந்தனர்.

இவ்வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குஸாஅக்கள், புதைல் பின் வரகா தலைமையில் ஒரு தூது கோஷ்டியைப் பெருமானாரிடம் அனுப்பிக் குறையிரந்து நின்றனர். இவர்களுக்குப் பின்னால், அம்ரு பின்ஸாலிம் அல்குஸாஅ தலைமையிலும் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பி நடந்தவற்றை எடுத்துக் கூறி உதவி கோரினர். அவசியம் உதவி புரிவதாக அண்ணலவர்கள் ஆறுதல் மொழி பகர்ந்து, வந்தவர்களைத் திரும்ப மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பின், பெருமானார்

(ஸல்) அவர்கள் இரகசியமாக ஒரு தூதரை மக்காக் குறைஷிகளிடம் அனுப்பி, கொல்லப்பட்ட குஸாஅக்களுக்கான இரத்த நஷ்டயீட்டுப் பணத்துக்கு அவர்கள் ஏற்பாடு செய்துதரவேண்டும், அல்லது பனூபக்கர்களுடன் செய்துள்ள ஒப்பந்தத்திலிருந்து நீங்கிக் கொள்ள வேண்டும், அல்லது ஹுதைபிய்யா ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதாக அறிவித்துப் பதிலறிந்து வரச் சொன்னார்கள். குறைஷிகள் மூன்றாவது நிபந்தனையான ஹுதைபிய்யா உடன்படிக்கையை ரத்து செய்து கொண்டதாகப் பதில் கூறி அனுப்பினர். இது விபரம் முதலில் அபூசுப்யானுக்குத் தெரியாது. பின்னர் அவருக்கு அறிவிக்கப்பட்டதும், குறைஷிகள் வினையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டதாகவும், அதனால் விளையவிருக்கும் விபரீதங்களையும் கெடுதிகளையும் விளக்கிக் காண்பித்தபோது அவர்கள் தங்களின் தலைகளில் தாங்களே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டதை அறிந்து மனம் பதறினார். எனவே, அபூசுப்யானையே மதீனா சென்று நபிகள் நாதரைச் சமாதானப்படுத்தி சமரசங்கண்டு வருமாறு அனுப்பி வைத்தனர்.

அபூசுப்யான் மதீனா வந்ததும் முதலில் தம் புதல்வியும் பெருமானாரின் பிராட்டியாருமான உம்மு ஹபீபா நாச்சியாரிடம் சென்றார். சென்றவர் அங்கு விரித்திருந்த அண்ணலாரின் விரிப்பில் அமர முற்பட்டார். இதைக் கண்ட உம்மு ஹபீபா நாச்சியார் சட்டென அவ்விரிப்பைச் சுருட்டி வேறு பக்கத்தில் கொண்டு போய் வைத்து விட்டார். “ஏன் அவ்வாறு செய்தாய்?” என அபூசுப்யான் சற்று ஆத்திரத்தோடு தம் மகளைக் கேட்டபோது, அவ்வம்மையார், அண்ணலவர்கள் அமரும் இப்புனித மிக்க விரிப்பில் விக்கிரக வணக்கத்தவரான நீங்கள் உட்காருவது கிஞ்சித்தும் தகாது” என முகம் களித்தவராய்ப் படீரெனக் கூறினார். அன்றியும் தம் தந்தையின் வினாக்களுக்குப் பதிலளிக்கவும் மறுத்துவிட்டார்.

பின், அபூசுப்யான் பெருமானாரைச் சென்று கண்டார். குறைஷிகள் அண்மையில் உடன்படிக்கையை மதித்து நடக்கவில்லை. முஸ்லிம்களுடன் இணக்கமாக இருந்துவர விரும்பவில்லை என்பதை ஐயமறத் தெரிந்து கொண்ட அண்ணல் நபியவர்கள், வந்த அபூசுப்யானை வரவேற்கவுமில்லை, முகங்கொடுத்து பேசவுமில்லை. அங்கிருந்து புறப்பட்டு ஹலரத் அபூபக்கர், உமர், அலீ, பாத்திமா இவர்களையும் சென்று கண்டார். அவர்களும் அபூசுப்யானை அலட்சியப்படுத்திவிட்டனர். பெருமானாரிடம் தங்களால் ஏதும் பரிந்துரைக்க இயலாதென வெள்ளையாகக் கூறிவிட்டனர். தமது தூதில் தோல்வி கண்ட குறைஷிகளின் தனிப் பெருந்தலைவரான அபூசுப்யான் வெறுமனே மக்கா திரும்பினார்.

**மங்கை மறைத்துச் சென்ற மடல்**

அபூசுப்யான் திரும்பிச் சென்றதன் பின், மக்காவைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளை இறைவனின் திருத்தூதர் இரகசியமாகச் செய்ய ஆரம்பித்தார்கள். அதனால், வெளியார் மதீனாவுக்குள் வந்து செல்வதை மிகவும் கண்காணித்தார்கள் படை எங்கே செல்கிறது. எதற்காகச் செல்கிறது என்பது யாருக்கும் தெரியாது. தங்கள் உற்றதோழரான அபூபக்கர் அவர்களிடங் கூடச் சொல்லவில்லை. சுற்றுப் பகுதிகளிலும் மக்காப் பாட்டையிலுமுள்ள அராபியத் தலைவர்களுக்கு வீரர்களைத் திரட்டித் தயார் நிலையில் வைத்திருக்குமாறு மட்டும் செய்திகள் விடுத்தார்கள்.

ஹாத்திப் பின் அபீ பல்தஅ என்பவர் மட்டும் படையெடுப்பு மக்கா தாக்குதலுக்கான முஸ்தீபு என்பதை ஒருவாறு யூகித்துக் கொண்டார். இவருடைய உற்றார் உறவினர் மக்காவில் நிறையப் பேரிருந்தனர். தாக்குதலின் போது அவர்களுக்குத் தீங்கேதும் நேரிடாதிருக்கும் பொருட்டு மடல் ஒன்று தீட்டி அதை இரகசியமாக ஸாரா என்னும் மங்கையிடம் கொடுத்தனுப்பினார். இஹ்யாவில் இவளின் பெயர் லயீனா எனவும் மற்றொரு சரித்திரக் குறிப்பில் முஸைமா எனவும் குறிப்பிடப்படுகிறது. இவளொரு பாடகி எனவும் இஸ்லாத்திற்கு விரோதமான கொச்சையான பாடல்களைப் பாடிப் பிழைப்பு நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. மக்கா வெற்றிக்குப் பின் இவள் கொலை செய்யப்பட்டதாக ஒரு சாராரும் இல்லை, அவள் இஸ்லாத்தில் சேர்ந்து ஹலரத் அபூபக்கர் அவர்களின் கிலாபத்துக் காலம் வரை உயிர் வாழ்ந்திருந்தாள் என்பதாக மற்றொரு சாராரும் கூறுவர்.

ஸாரா மடல் கொண்டு செல்கிறாள் என்ற இரகசியம் பெருமானாருக்கு ஞான திருஷ்டியால் தெரிய வந்தது. உடனே, ஹலரத் அலீ, ஜுபைர். மிக்தாத் ஆகிய மூவரையும் குதிரைகளில் சென்று அம்மங்கையிடத்திலுள்ள மடலைக் கைப்பற்றி வருமாறு பணித்தார்கள். மூவரும் கண வேகத்தில் சென்று குலைக்கா என்னுமிடத்தில் அவளை வழி மறித்துச் சோதித்ததில் சென்று கடிதத்தைக் காணாது ஏமாற்றமடைந்தனர். எனினும் பெருமானாரின் திருவாக்கில் பிழை இருக்கக் காரணமில்லை என உறுதியாகக் கருதிய ஹலரத் அலீ அவர்கள் அக்கன்னியை ஆடை களைந்து சோதனையிடப் போவதாகவும் சவுக்கால் அடிப்பதாகவும் மிரட்டினார்கள். தப்பிக்க வழியில்லையெனக் கண்ட அத்தையல்தன் கூந்தலுக்குள் செருகி வைத்திருந்த ஹாத்திபின் கடிதத்தை எடுத்து மரியாதையாக ஹலரத் அலீ அவர்களிடம் கொடுத்து விட்டாள்.

ஹலரத் அலீ அவர்கள் மடலைக் கொண்டு வந்து மாநபியவர்களின் திருக்கரத்தில் கொடுத்தார்கள். அதனைப் பெற்றுப் படிக்கக் கேட்ட பெருமானார் ஹாத்திபை அழைத்து, “ஏ ஹாத்திபே! ஏன் இவ்வாறான துரோகச் செயலில் ஈடுபட்டீர்” என வினவினார்கள். அதற்கு ஹாத்திப், “ஏந்தல் நபியே! என்னை மன்னித்தருள வேண்டும். என் மகனும் உறவினரும் மக்காவிலிருப்பதால், குடும்ப பாசத்தால் நான் மதிகெட்டுப் போனேன்”, எனக் கூறி மன்றாடினார். அருகிலிருந்த தோழர்கள் அனைவரும் கொதித்தெழுந்தனர். அவர்களை அண்ணலார் சமாதானப்படுத்தி,”ஹாத்திப் ஓர் உண்மை முஸ்லிம். ஏதோ அறியாத்தனமாக இரத்த பாசத்தால் தவறு செய்து விட்டார். அதை நானும் மன்னித்து விட்டேன். நீங்களும் மன்னித்து விடுங்கள். பத்ருப் போரில் ஈடுபட்டவர்கள் செய்த பாவங்களை இறைவனும் மன்னித்து விட்டான்”, என மொழிந்தார்கள்.

**அடுப்புகள் பதினாயிரம்**

ஹிஜ்ரி 8ம் ஆண்டு ரமலான் பிறை 13 புதன்கிழமை க.பி.630 ஜனவரி 3ம் நாள் நோன்பு நோற்றவர்களாய் நானிலந்தழைக்கத்தோன்றிய நபிகள் கோமான், மதீனாவின் ஆட்சிப் பெறுப்பை அபூ ருஹ்ம் குல்தூம் பின் ஹுஸைன் அல் கிபாரியிடம் ஒப்படைத்து விட்டு, வீரர் பதினாயிரவருடன் வீறு கொண்டெழுந்து, மக்காவை வெற்றி கொள்ளப் புறப்பட்டு விட்டார்கள். பிரதம அணி பீடுநடை போட்டுச் செல்கிறது. அதில்

மதீனாவிலிருந்து மக்கா வரையுள்ள நேசக் கூட்டத்தார் ஒவ்வொருவரும் அண்ணலாரின் ஆணைப்படி ஆயிரம், ஐந்நூறு என்று ஆயுதபாணிகளான வீரர்களுடன் வந்து சேர்ந்து கொள்கின்றனர். முன்னணிப் படை 200 தேர்ந்த வுரர்களுடன் ஜுபைர் தலைமையில் முன்னே செல்கின்றது.

இப்படையெடுப்பின் போது பெருமானார் தங்கள் பிராட்டியான உம்மு ஸல்மா, ஜைனப் ஆகிய இருவரையும் உடனழைத்துச் சென்றார்கள். வழியில் நீக்கும் உகாப் என்ற இடத்தில் அண்ணலவர்களின் பெரிய தந்தை ஹாரிதின் மகன் அபூசுப்யானும், உம்மு ஸல்மா நாச்சியாரின் சகோதரர் அப்துல்லாஹ் பின் அபூ உமய்யாவுமட தங்களின் பழைய குரோதச் செயல்களை மன்னித்து இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளுமாறு வந்து மன்றாடுகின்றனர். கரணை வடிவான காரணத் திரு நபியவர்கள் அவ்விருவரையும் பிராட்டியாரின் பரிந்துரையின் மீது கனிவுடன் ஏற்றுக் கொள்கிறார்கள். அல் அப்பாஸ் (ரலி) தம் குடும்பத்தாருடன் அல்ஜுஹ்ஃபா என்ற இடத்தில் பெருமானாரைச் சந்தித்து இஸ்லாத்தை தழுவிக் கொண்டார்.

நேர்பாட்டையை விட்டு விட்டுச் சுற்றுப் பாதையில் ஏழெட்டு நாள் பிரயாணம் செய்தபின், படை மக்காவுக்கு 4 மைல் தொலைவிலுள்ள மஸ்அருல் ஸஹ்ரான் என்ற மேட்டுப்பாங்கான அடத்தை அடைந்து அங்கு பாளையமிறங்கியது. அம்மேட்டு வெளியில் அன்றிரவு வீரர்களனைவரும் தனித்தனியாக அடுப்பு மூட்டவேண்டுமென அண்ணலார் கட்டளையிட்டார்கள். அவ்வாறே பொழுதடைந்தபின் அங்கு பதினாயிரம் அடுப்புகள் எரியத் தலைப்பட்டன. அதனால், அப்பிரதேசம் ஒரே ஒளிமயமாகக் காட்சியளித்தது.

மஸ்அருல் ஸஹ்ரான் மேட்டில் பாளையம் இறங்கிப் பதினாயிரம் அடுப்புகள் திடுமெனத் தோன்றும் வரை, முஸ்லிம்கள் படையெடுத்து வரும் தகவல் வழக்கமான பாட்டையில் வந்திருந்தால்தானே அவர்களால் தெரிய முடியும்! ஹலரத் அப்பாஸ் அவர்களுக்கு மட்டும் தகவல் தெரிந்து, அவர்கள் முன்னதாகக் கிளம்பி வந்து வழியில் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டார்கள். திடுதிப்பென மஸ்அருல் ஸஹ்ரான் மேட்டில் ஆயிரக்கணக்கான அடுப்புகள் எரிவதைக் கண்ட குறைஷிகள் ஆச்சரியமும், திகிலும் கொண்டனர். விவரம் தெரிந்து வர அவர்கள், அபூசுப்யானையும் அவருடன் புதைல் இப்னு வரகா, ஹகீம் இப்னு ஹிஷாம் ஆகிய இருவரையும் அனுப்பினார்கள்.

மக்கா நகரத்திற்கு அழிவு நேரச் கூடாதென்ற பெருநோக்கம் கொண்ட ஹலரத் அப்பாஸ், எவ்வாற்றானும் முஸ்லிம்களுக்கும் குறைஷிகளுக்குமிடையில் சமரசங்காண வேண்டுமென்னும் எண்ணத்தில் பெருமானாரின் வெள்ளைக் போவேறு கழுதையான துல்துலின் மீதேறி மக்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்தா. பாதி வழியில் அல் அராச்கை அடைந்த போது மக்காவின் திசையிலிருந்து மூவா வழி நெடுகப் பேசிக் கொண்டு வரும் சப்தம் அவ்விருட்டில் ஹலரத் அப்பாஸ் அவர்களின் செவிகளில் பட்டது. சப்தத்தைச் சரியாகக் கவனித்த போது, அவர்களில் ஒருவர் அபூசுப்யான் என்பதும், மற்றிருவர் பதைல் இப்னு வரகா, ஹக்கீம் இப்னு ஹிஷாம் என்பதும் நிச்சயமாயிற்று. உடனே ஹலரத் அப்பாஸ், சத்தங் கொடுத்து, அபூசுப்யானை அழைத்தார்கள். அழைத்தவர் அப்பாஸ்தான் என்பதை அவரின் குரலால் அறிந்த அபூசுப்யான், மேட்டில் தெரியும் நெருப்புகள் என்ன என்பது பற்றி வினவினார். அதற்கு பெருமானார் பதினாயிரம் வீரர்களுடன் இணங்கிப் போவதுதான் உத்தமானது", என ஹலரத் அப்பாஸ், அபூசுப்யானுக்குத் தாது விழுந்தது போல் ஆகிவிட்டது.

அபூசுப்யானை அப்பாஸ் தம்மோடு கோவேறு கழுவதையிலேற்றிக் கொண்டு அண்ணலாரின் கூடாரத்தை அடைந்தார்கள். அவருடன் வந்த மற்றிருவரும் மக்கா திரும்பினர்.

அபூசுப்யானைக் கண்டதும் ஹலரத் உமரும், மற்ற முஸ்லிம்களும் கொதித்தெழுந்தனர். அவரது தலையைக் கொய்ய சித்தமானார்கள். இதைக் கவனித்த அண்ணலவர்கள், அபூசுப்யானை மறுநாள் காலையில் அழைத்து வருமாறு சிறிய தந்தை அப்பாஸ் அவர்களிடம் கூறியனுப்பினார்கள்.

**அணியில் அபூசுப்யான்**

அடுத்த நாள் காலையில் அபூசுப்யானை அழைத்து வந்தபோது அண்ணலார் அவரை நோக்கி, “அபூசுப்ாயனே! வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை என்பதை இப்பொழுதாவது புரிந்து கொண்டீரா? என வினவினார்கள். “ஆம்”, புரிந்து கொண்டேன். அல்லாஹ்வை தவிர வேறொரு கடவுள் உண்டுமாயின், அவன் எங்களுக்கு உதவி புரிய முன் வந்திருப்பானே!” என அபூசப்யான் மறுமொழி பகர்ந்தார். “அப்படியானால், அவனது ஏகத்துவத்தை நிலைநாட்ட வந்துள்ள நான் இறைவனின் தூதன் என்பதை இப்பொழுதாவது நீர் ஒப்புக்கொள்கிறீரா?” என மீண்டும் வினவினார்கள். “அந்த ஒரு விஷயத்தில் நான் இன்னும் சிறிது சந்தேகம் கொண்டுள்ளேன்!’ என்றார் அபூசுப்யான். அருகில் நின்ற அப்பாஸ் அவர்கள், “நீர் இனியும் வீணில் வறட்டுப் பிடிவாதம் காட்ம வேண்டாம். அந்தக் காலம் மலையேறி விட்டது. அநேக அத்தாட்சிகளை நீர் நேரில் கண்டுள்ளீர். முஹம்மது இறைவனின் தூதுர் என்பதை ஒப்புக் கொண்டு இஸ்லாத்தில் இணைந்துவிடும். இல்லையேல், நீர் நஷ்டத்தைத் தான் அடைந்து கொள்வீர்”, என அறிவுறுத்தினார்கள். அபூசுப்யான் தமது இறுமாப்பை மூட்டை கட்டி முதுகுக்குப் பின் தூக்கி ஏறிந்துவிட்டுக் கலிமாச் சொல்லி முஸ்லிமானார். இந்நாள்வரை இஸ்லாத்தின் பரம விரோதியாகவும் முஸ்லிம்களின் ஜன்மசத்ருவாகவும் இருந்து வந்த அபூசுப்யான் இன்று இஸ்லாத்தைத் தமது நேர்வழி மார்க்கமாகவும், இரசூல் நாயகம் (ஸல்) அவர்களைத் தம் ஒப்பற்ற தலைவராகவும், உயரிய வழிகாட்டியாகவும் எற்றுக் கொண்டது ஓர் இணையற்ற நிகழ்ச்சியும் ஒப்பற்ற சாதனையுமாகும்.

ஹலரத் அப்பாஸ், அண்ணல் அவர்களைத் தனிமையில் கண்டு,”அபூசுப்யான் பதவியிலும், கௌரவத்திலும் ஆசைமிக்கவர். எனவே, அவருக்கு ஏதாவதொரு விதத் தனி மதிப்பளித்துப் பெருமைப்படுத்தினால் நல்லது,” என வேண்டினார்கள். அப்பாஸ் அவர்களின் கோரிக்கை பெருமானாருக்குப் பிடித்தமானதாக இருந்தால், அதை ஏற்று,”க.்.பாவுக்குள் தஞ்சம் புகுந்தவர்களும், அபூசப்யான் இல்லத்தில் அடைக்கலம் புகுந்தவர்களும், தங்களின் வீடுகளுக்குள் தாளிட்டு இருந்து கொள்பவர்களும், ஆயுதங்களைக் கையில் ஏந்தாதவர்களும் அபயம் பெறுவர், முஸ்லிம்களின் கைகளால் தீங்கிழைக்கப்படமாட்டார்கள்,” எனப்பிரகடனம் செய்தார்கள். அபயமளிப்பதில் தமது வீட்டை க.்.பாவுக்குச் சமதையாக்கிப் பெருமானார் தம்மை

கௌரவித்திருப்பதைக் காண அபூசுப்யானுக்கு மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும் ஏற்பட்டது. நபிகளார் (ஸல்) மீது அவர் நன்றியுணர்வு கொண்டார்.

அதன் பின்னர் மஸ்அருல் ஸஹ்ரானை விட்டு செல்ல குதிரைப்படை, ஒட்டகப்படை, கவசப்படை, காலாட்படை, வில்லம்புபடை, கவண்படை என இனவாரியாக அப்பாஸ் அவர்கள் அழைத்து சென்று அபூசுப்யானுக்குக் காண்பித்தார்கள். அவற்றைக் கண்டு அவர் திக்பிரம்மையடைந்தார். இறுதியாக, கரும் பச்சைக் கவசம் தரித்துக் கையில் ஈட்டியுடன் வந்த சிறிய அணி அண்ணலாரின் மெய்க்காவல் படை என்பதை அறிந்ததும் அபூசுப்யான் வியப்பு மேலிட்டவராய் அப்பாஸ் அவர்களை நோக்கி, "ஏது உங்கள் அண்ணன் மகனாருக்கு ஏற்பட்டு இருக்கும் பெருமதிப்பும் பேராதிக்கமும் மகத்துவம் பொருந்தியவையாக வன்றோ இருக்கின்றன!" எனக் கூறி வாயாரப் புகழ்ந்தார். அதற்கு அப்பாஸ் அவர்கள், "நபித்துவம் அவர்களிடம் இருப்பதுதான் இவ்விதப் பெருமைக்கும் மகிமைக்கும் காரணமாகும். இதை நீர் குறைஷிகளுக்கு நன்கு எடுத்துரைப்பீர்" என நினைவூட்டினார்கள்.

நபிகள் நாதர் (ஸல்) ஹலரத் அப்பாஸ் இவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, அபூசுப்யான் மக்கா திரும்பினார். அங்கு குறைஷிப் பிரமுகர்களையும் மற்றவர்களையும் கண்டு பெருமானார் பெரும்படை திரட்டி மக்காவைத் தாக்கி வெற்றி கொள்ள வந்திருக்கும் விஷயத்தைக் கூறி மக்காவாசிகளுக்கு அபயமும், பாதுகாப்பும் எவ்வாறு கிடைக்குமெனப் பெருமானார் கூறினார்களென்பதையும் அவர்களுக்கு விளக்கினார். அன்றியும், இப்போது அவர் முஸ்லிமாகிவிட்ட விஷயத்தையும் வெளிப்படுத்தினார். அபூசுப்யானிடத்திலிருந்து அதிர்ச்சி தரும் தகவல்களைக் கேட்ட மக்கள் முஸ்லிம்களின் படைகள் மக்காவை நோக்கி முன்னேறி வருகின்றன என்பதை அறிந்ததும், கிலிபிடித்தவர்களாய் நாற்புறமும் சிதறி ஓடினர். அபூசுப்யானின் மனைவி ஹிந்தா, அவர் மீது பாய்ந்து அவரது தாடியைப் பற்றி இழுத்து, "இந்தக் கிழவருக்குப் புத்தி தடுமாறி விட்டது. இவர் பிதற்றலுக்கு யாரும் செவி சாய்க்காதீர்கள்" என வெறி பிடித்தவள் போல் பேயாக அலறினாள்.

**மக்கா வெற்றி :**

அபூசுப்யான் சென்றதன்பின், நபிகள் நாதர் நீராடி உடை மாற்றிக் கொண்டு, கஸ்வா ஒட்டகத்தின் மீதமர்ந்து மக்காவை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார்கள். தூத்துவா என்ற இடத்தை அடைந்தபோது அவர்கள் யமனீ துணியாலான சிவப்பு நிறத் தலைப்பாகை அணிந்து கொண்டார்கள். வெள்ளி தங்க வேலைப்பாடமைந்த வாள் ஒன்றும் அவர்களது இடையினின்றுந் தொங்கிக் கொண்டிருந்தது. அவர்களின் திருவாய், திருக்குர்ஆனின் சூரா "பத்தாஹ்"விலுள்ள திருவசனங்களைப் பஜித்துக் கொண்டிருந்தது. பதினாயிரம் வீரர்களும் புடைசூழ மக்காவுக்கு வெளிப்புறத்தேயுள்ள சமவெளியை அடைந்தார்கள். எதிர்ப்புக்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை. அங்கிருந்தவாறு படைகளை நான்கு அணிகளாகப் பிரித்து நாற்புறமும் ஒரே சமயத்தில் மக்காவினுள் பிரவேசிக்குமாறு உத்தரவிட்டார்கள். அந்த அணிகளுக்கு மக்காவாசியையே முஹாஜிர்களை தலைமை தாங்க ஏற்பாடு செய்தார்கள். வடபுற அணிக்கு ஹலரத் ஜுபைர் பின் அவ்வாமையும், தென்புற அணிக்கு ஹலரத் காலித் பின் வலீதையும் மேற்புற அணிக்கு ஸஅத் பின் உபாதாவையும், கீழ்ப்புற அணிக்கு

அபூ உபைதாவையும் தலைமை தாங்கச் சொல்லி உருவிய வாட்களுடன் எவரும் சொல்லலாகாதெனவும், வலுவில் யாரையும் தாக்கலாகாதெனவும் ஆக்ஞாபித்தார்கள்.

ஹலரத் அலீ அவர்கள் குதிரை மீதமர்ந்து, இஸ்லாமியக் கொடியைத் தாங்கி முன்னே செல்லவும், ஹலரத் அபூபக்கர் அவர்கள் வலப்புறத்திலும், ஹலரத் உஸைத் இடப்புறத்திலும் ஒட்டகை மீதமர்ந்து வரவும், ஹலரத் ஜைது அவர்களின் உஸாமா குதிரை மீதமர்ந்து பின்னே வரவும், நபிகள் நாதர் நடுநாயகமாக ஒட்டகை மீதமர்ந்தபடியே இறைவனுக்கு நன்றியுடன் தம் திருத்தாடி, சேணத்தில் படும் விதமாகச் சிரம் பணிந்தவர்களாகக் கீழ்ப் புறத்தில், ஜபலுஹிந்து குன்றைச் சுற்றிச் செல்லும் குறுக்குப் பாதை வழியாக ஹிஜ்ரி 8ம் ஆண்டு ரமலான் மாதம் 22ம் நாள் (கி.பி. 630 ஜனவரி 12) வெள்ளிக்கிழமை இறைவனின் பரிசுத்த ஆலயமான க.ஃபாவைத் தன்னகத்தே கொண்ட புனித நகரமாம் மக்காவினுள் பிரவேசித்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து கவசந்தரித்த மெய்க்காவல் படை சென்றது. இவ்வேற்பாடுகளை எல்லாம் ஒரு தலை சிறந்த யுத்தத் தளபதியைப் போலும், அதே சமயம் மக்காப் பிரவேசம் இரத்தம் சிந்தாத சாத்வீகத்துடன் அமைதியாக நடைபெறுவதற்கு ஆன தீர்க்கசிந்தனையுடைய ஒரு பழுத்த இராஜதந்திரியைப் போன்றும் செம்மல் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் சிறப்புறச் செய்து முடித்தார்கள்.

காலித் (ரலி) அவர்களின் அணி தெற்கில் பிரவேசித்த பொழுது சுந்தமா என்ற இடத்தில் அபூஜஹலின் மகன் இக்ரிமா, சுஹைல், ஸப்வான் மற்றும் சில குறைஷிகளைச் சேர்த்துக் கொண்டு எதிர்ப்புக் காட்டினார். அதனால் சிறிய கைகலப்பொன்று நிகழ்ந்தது. அதில் பதிமூன்று குறைஷிகளும் சிலர் இருபத்தெட்டு எனக்கூறுவர். இரண்டு முஸ்லிம்களும் உயிர் துறந்தனர். இந்த மோதல் நடந்ததைப் பெருமானார் அவர்கள் அபூதாலிப், கதீஜா நாயகி இவர்களின் கல்லறைகளுக்கு அருகே ஜபலு ஹிந்தின் உயரமான பாதை ஒன்றின் மீது சென்று கொண்டிருந்த போது கண்ணுற்றார்கள். வாட்கள் ஒன்றொடொன்று உராய்ந்து ஒளி வீசுவதைக் கண்ட அண்ணலார், ”தாக்குதல் ஏதும் நடக்கலாகாதென நான் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தும் ஏன் இந்த அசம்பாவிதம்?” எனச் சினந்து கேட்டார்கள். ஆனால் இது குறைஷிகளின் வன்முறையால் ஏற்பட்டதெனத் தெரிய வந்ததும் அமைதிகொண்டு ”இறைவனின் நாட்டம் எதுவோ அது மேலானதாகவே இருக்கும்” எனக் கூறி ஆறுதலடைந்தார்கள்.

## அசத்தியம் அழிந்தது

மக்காவினுள் முஸ்லிம்களின் படை பிரவேசித்த பொழுது அந்நகர் மனித நடமாட்டமில்லாது வெறிச்சோடிக் கிடந்தது. தெருக்களில் ஓரிருவரின் நடமாட்டத்தைத்தான் காண முடிந்தது. மக்களெல்லாம் க.ஃபாவினுள்ளும், அபூசுப்யான் இல்லத்திலும், தங்கள் வீடுகளில் தாளிட்டுக் கொண்டும் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தனர். கஸ்வா, கருணை நபிகளாரைச் சுமந்து சென்று நகரின் வடக்குப் பகுதியை அடைந்தது. அங்கே ஜன்னத்துல் முஅல்லா பகுதியிலுள்ள ஹஜூன் என்னுமிடத்தில் தோல் கூடாரமொன்று அடிக்கச் சொல்லி அதில் தங்கிச் சிறிது ஓய்வு கொண்டார்கள். கூடாரத்திற்கு எதிரில் நீண்ட கம்பமொன்று நட்டு அதில் இஸ்லாத்தின் வெள்ளைக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

பிறகு, அண்ணலவர்களின் திருத்தோழர்கள் பதினாயிர வரும் புடைசூழ அங்கிருந்து கஸ்வாவின் மீது புறப்பட்டுக் க.ஃபாவின் முற்றத்திற்கு வந்து அதை ஏழுமுறை இடம் சுற்றினார்கள். ஒவ்வொரு சுற்றின் போதும், ஹஜருல் அஸ்வத் கல்லைத் தங்களின் கைத் தடியால் மரியாதையுடன் தொட்டார்கள். அதன்பின், அருகிலுள்ள மக்காமு இப்ராஹீமில் அமர்ந்து கொண்டு க.ஃபாவின் பாதுகாப்பாளர் (சதானா) உஸ்மான் பின் தல்ஹாவை அதன் சாவியுடன் அழைத்துவரச் சொன்னார்கள். அவர் வந்ததும் சாவியைப் பெற்று க.ஃபாவைத் திறந்து உள்ளே சென்று எட்டு ரகஅத் தொழுது கொண்டார்கள். அதன்பின் அந்நாள் வரை க.ஃபாவை ஆபாசப்படுத்திக் கொண்டிருந்த 360 விக்கிரகங்களையும், ”சத்தியம் உதயமாகி விட்டது, அசத்தியம் அழிந்துபட்டது, நிச்சயமாக, அசத்தியம் அழியக் கூடியதாகவே இருக்கிறது” என்ற 17:81 திருவசனத்தை ஓதியவர்களாக அவற்றைத் தங்களின் கைத்தடியால் தொட்டுத் தொட்டுச் சுட்டிக் காண்பித்து கீழே வீழ்த்தி நொறுங்கச் செய்தார்கள். எம்பெருமான் (ஸல்) இத்திருவசனத்தைக் கூறி, தங்கள் கைத்தடியை விக்கிரகங்களின் எதிரே காட்டியபோது அவை மல்லாந்து சாய்ந்தன. வென்றும், அவற்றின் முதுகுப் புறமாகக் காட்டியபோது குப்புறச் சாய்ந்தன எனவும் சில சரித்திராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆக்கவும-அழிக்கவும் வல்லமையுடைய தெய்வமாகக் கருதப்பட்டு வந்த “ஹுபல்“ என்ற பெரிய தலைமை விக்கிரகம் க.ஃபாவினுள் உயரமானதொரு பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. பெருமானாரின் கட்டளைக்கிணங்க ஹலரத் அலீ அவர்கள் அதில் ஏறி அவ்விக்கிரகத்தைக் கீழே தள்ளி நொறுங்கச் செய்தார்கள். க.ஃபாவின் உள்ளும் வெளிச் சுவர்களின் மீதும் வரையப்பட்டிருந்த இப்ராஹீம் நபி, இஸ்மாயீல் நபி, வானவர்கள் மற்றும் சித்திரங்களனைத்தையும் ஜம்ஜம் கிணற்று நீரைக் கொண்டு அழித்துவிடுமாறும் ஆக்ஞாபித்தார்கள். இவையெல்லாம் முடிந்தபின், இறைவனின் திருத்தூதரவர்கள், க.ஃபாவைத் தங்களின் திருக்கரத்தால் பூட்டிவிட்டு அதன் சாவியைத் திரும்பவும் உதுமான் பின் தல்ஹாவிடமே ஒப்படைத்தவர்களாய், ”இறைவனின் கட்டளைப்படி இது ஊழுழிகால மட்டும் உம்மிடமும், உம் சந்ததியினரிடமுமே இருந்துவரட்டும்” எனக்கூறி, முன் பொருகால், சுமார் 15 ஆண்டு கட்குமுன், க.ஃபாவின் திறவுகோலை உதுமானைத் தரவிடாது தடுத்தபோது அது உங்கள் கைக்கு வரும் நாள் ஒன்று உண்டு என அவரிடம் கூறியதை அவருக்கு நினைவுப்படுத்தினார்கள். அத்திறவுகோல் இன்றுவரை உதுமான் வழித்தோன்றல்களின் பொறுப்பில் அவர்களின் கைவசத்திலேயே இருந்து வருகிறது, இனி என்றும் இறைவனின் நாட்டப்படி அவ்வாறே இருந்துவரும், நபிகள் நாதரின் அற்புத நீதியையும் நேர்மையையுங் கண்டு வியப்புற்ற உதுமான், இந்தச் சந்தர்ப்பத்தில் இறைவனை தம் வணக்கத்திற்குரிய ஏகனாகவும், அண்ணலாரை அவனுடைய இறுதி திருத்தூதராகவும் ஏற்றுக் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள்.

இதே நேரத்தில் யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் வழங்கும் (ஸகாயா) திருப்பணியையும், ஜம்ஜம் கிணற்றின் பராமரிப்புப் பொறுப்பையும், அந்தக் கிணற்றைக் கண்டு பிடித்துத் தோண்டிப் புதுப்பித்த பெருமானாரின் பாட்டனார் அப்துல் முத்தலிபின் வழித்தோன்றலும், தங்களின் சிறிய தந்தையுமான ஹலரத் அப்பாஸ் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இன்றளவும் அது அப்பாஸ் அவர்களின் சந்ததியாரிடமே இருந்து வருகிறது. இறைவனின் நாட்டப்படி இனி என்றும் அவ்வாறே இருந்து வரும்.

**வெற்றி பிரகடனம்**

க.ஃபாவைச் சுத்தப்படுத்தியதன் பின்னர், நபிகள் நாதர் (ஸல்) ஹலரத் பிலால் அவர்களைப் பாங்கு சொல்லி மக்களைத் தொழுகைக்கு அழைக்குமாறு பணித்தார்கள். அதற்கிணங்க, அவர் க.ஃபாவின் மீது ஏறி நின்று பாங்கொலி முழங்கினார். முஸ்லிம்கள் அனைவரும் வந்து தொழுகையில் கலந்து கொண்டனர். தொழுகை முடிந்தபின், நபிகள் கோமான் அங்கு குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தை விளித்து, ”குறைஷிகளே! வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனேயாவான். அவனுக்கு இணையான வஸ்து எதுவுமே இல்லை. அவன் தன் அடியாருக்கு உதவினான், அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினான். கூட்டங்கூட்டமாகச் சேர்ந்திருந்த எதிரிகளை எல்லாம் அவன் சின்னாபின்னமாக்கிச் சிதைத்தான். க.ஃபாவின் நிர்வாகமும் யாத்திரிகர்களுக்கு நீர் வழங்குவதுந் தவிர, மற்ற அதிகாரங்களனைத்தும் இப்பொழுது என் கைவசத்திலாகி விட்டன. நீங்கள் அறியாமையில் மூழ்கியிருந்த காலத்தில் கொண்டிருந்த குலப் பெருமையும் ஆணவமும் இன்று எனது காலடியின் கீழ் போட்டு மிதிக்கப்பட்டு விட்டன. மக்கள் அனைவரும் ஆதமுடைய சந்ததியினராவர். ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்” என்ற சமத்துவ சாசனத்தை வெற்றிப் பிரகடனம் செய்தார்கள்.

இவ்வாறு கூறி முடித்த பின், கருணையங்கடலான நபிகள் பூமான் அங்கிருந்தவர்களை நோக்கி, ”குறைஷிகளே! உங்களை நான் எவ்வாறு நடத்த வேண்டுமென விரும்புகிறீர்கள்?” என்று வினவினார்கள். அதற்கு அனைவரும் ஒரு குரலில், ”அருளிதயம் படைத்த எங்களின் உடன் பிறந்தாரே! கருணைக் கண்கொண்டு எங்களை மன்னித்துக் கடைத் தேற்றும் தங்களின் பேரன்பையே யாங்கள் பெரிதும் வேண்டி நிற்கிறோம்” எனக் கூறினர். இவர்களில், பெருமானார் (ஸல்) மக்காவில் வாழ்ந்த காலை, பல்லாண்டுகளாக இயம்பவொண்ணா இன்னல்கள் இழைத்தவர்கள். ஏசிப் பேசி நையாண்டி செய்தவர்கள். அவர்களின் பரிசுத்தப் பொன்மேனி மீது அசுத்தமிக்க பொருட்களை அள்ளி வீசியவர்கள், அவர்கள் நடந்து செல்லும் பாதையில் முட்களைப் பரப்பி வைத்தவர்கள், குப்பைகளை அவர்களின் திருச்சிரசின் மீது கொட்டியவர்கள், அவர்களையும் அவர்களின் ஹாஷிம் குடும்பத்தாரையும் சமூக பகிஷ்காரம் செய்து பள்ளத்தாக்கில் பட்டினி போட்டு அஞ்ஞாதவாசம் புரியச் செய்தவர்கள். அவர்களின் உயிருக்கு உலை வைத்தவர்கள், அவர்களை ஊரைவிட்டுத் துரத்தியவர்கள், அவர்களை அடைக்கலப் பூமிசென்றும் அழித்தொழிக்க வாளேந்தியவர்கள், அவர்களின் சிறிய தந்தையாருடையவும், சன்மார்க்கத்திற்கு இன்னுயிர் ஈந்த சற்குணருடையவும் சடலங்களைச் சிதைத்து சின்னா பின்னப்படுத்தியவர்கள் ஆகிய அனைத்துவித அக்கிரமங்கள் புரிந்தவர்களும் இருந்தனர். அப்பொது பெருமானாரவர்கள், “இன்று உங்கள் மீது நிந்தையொன்றுமில்லை, அல்லாஹ் உங்கள் குற்றங்களை மன்னித்தருள்வானாக! அவன் கருணையாளர்களில் எல்லாம் மகா கருணையாளன்” என்ற 12:982 திருவசனத்தை ஓதி “இன்று உங்களையெல்லாம் யூசுப் நபி தம் சகோதரர்களை மன்னித்ததே போல் யானும் பூரணமாக மன்னித்து விட்டேன். நீங்கள் பூரிப்படைந்தவர்களாய், புனிதம் பெற்றவர்களாக இல்லம் திரும்புங்கள்” என்று பகர்ந்தார்கள். இவ்வித அன்பும், அமுதுங் கலந்த இன்ப மொழிகள் இறுதித் திருத்தூதராம் எம்பெருமான் (ஸல்) அவர்களின் கஸ்தூரி வாசங் கமழும்

கனிவாயினின்றும் வெளி வந்ததும், மக்களின் வதனங்களில் மகிழ்ச்சி, களி நடனம் புரிந்தது.

இது சமயம் ஹலரத் அபூபக்கர் அவர்கள் கண் தெரியாத தமது வயது முதிர்ந்த தந்தை அபூ குஹாபாவைப் பெருமானாரிடம் அழைத்து வந்தார்கள். அவரைக் கண்டதும் அண்ணலார், "இந்தப் பெரியவரை என்னிடத்துக்கு அழைத்து வரலாமா? நான் சென்று அவரைக் காணுவதல்லவா முறை" எனக்கூறி அவரை அன்புடன் அருகில் அமரச் செய்து அவரது நெஞ்சைத் தடவிக் கொடுத்து, இஸ்லாத்தை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அபூ குஹாபாவும் அவ்வாறே, கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார். இவர் தமது 97ம் வயதில் தம் மகனாரது கிலாபத்தின் போது மரணமானார்.

**அணியில் அனைவரும்**

மறுநாள் நபிகள் கோமான் அவர்கள், ஸபா குன்றின் மீது போயிருந்து கொண்டு, இஸ்லாத்தின் அணியில் சேர வந்த மக்களை வரவேற்றுக் 'கலிமா' மொழியைச் செய்து கொண்டிருந்தார்கள். இதுவரை இஸ்லாத்தை தழுவாமல் பெருமானாருக்கும் முஸ்லிம்களுக்கும் சொல்லொணாக் கொடுமைகள் இழைத்தவர்களில் அநேகர் இதுசமயம் மக்காவிலிருந்தனர்! பலர் உயிருக்குப் பயந்து ஊரைவிட்டே ஓடிவிட்டனர். இன்னவர்களெல்லாம் கூட்டங் கூட்டமாக அண்ணல் அவர்களிடம் வந்து மன்னிப்புக்கோரி இஸ்லாத்தில் சேர்ந்தனர்.

நபிகள் நாதரின் மூத்த புதல்வி ஜைனபை அவர் கணவர் அபுல் ஆஸ் மதீனாவுக்கு அனுப்பி வைத்தபோது, துரத்திச் சென்று அவரின் ஒட்டகையை ஈட்டியால் தாக்கி வெறிக்கச் செய்து, அதனால் ஜைனபுக்கு அதிர்ச்சியேற்பட்டுக் கருச்சிதைவு ஏற்படக் காரணமாயிருந்த ஹப்பாரையும், ஹலரத் ஹம்ஸா அவர்களின் வயிற்றில் ஈட்டியை எறிந்து கொலை செய்த வஹ்ஷியையும் அவர்கள் மன்னித்தார்கள்.

பெண்ணுருவில் பேயாக வந்து, பெருமானாருக்கு ஆண்களினும் பன்மடங்குத் தீமை செய்தவள் அபூ சுப்யானின் மனைவியும், ஹலரத் முஆவியாவின் தாயுமான ஹிந்தாவாகும். உஹத் போர்க்களத்தில் ஹலரத் ஹம்சா அவர்களின் ஈரல் குலையைப் பிய்த்தெடுத்து, அதை வாயில் வைத்துக் கடித்து ஆனந்தக் கூத்தாடிய பைசாசம் இவளேயாகும். திருத்தூதர் அவர்களின் திருமுகத்தில் விழிக்க அச்சமும், வெட்கமுங் கொண்டு, இவள் தன் முகத்தை மூடியவளாகத் தோன்றி, தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறி அண்ணலாரிடம் மன்னிப்புக்கோரி நின்றாள். கருணையின் திருவுருவம் காத்த முந் தபியவர்கள் இக்கொடு நீலியையுங் கூட மன்னிக்கவே செய்தார்கள். இது சமயம் ஹலரத் முஆவியாவும் தம் தாயாரைப் பின்பற்றி இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.

அபூஜஹலின் மகன் இக்ரிமாவின் மனைவி உம்மு ஹகீம் இவளை உம்மு ஹானீ எனவும் கூறுகின்றனர். பெருமானாரிடம் வந்து, தம் கணவருக்காக மன்னிப்புக்கோரி நின்றாள். இரக்கம் நிறைந்த திருத்தூதரவர்கள் நேற்றுவரை இஸ்லாத்தின் வைரியாக இருந்து வந்த இக்ரிமாவையும் மன்னித்து விட்டதாகக்

கனிவுடன் மொழிந்தார்கள். ஊரை விட்டு ஓடிவிட்ட தம் கணவனைத் தேடி அலைந்து இறுதியில் யமனில் கப்பலேறத் தயாராக இருந்த நேரத்தில் கண்டுபிடித்து, அண்ணல் அவர்கள் மன்னிப்பளித்துள்ள விபரத்தைக் கூறி மதீனாவுக்கு அழைத்து வந்து இஸ்லாத்தைத் தழுவச் செய்தாள். இக்ரிமாவின் மன மாற்றத்தைக் கண்டு இறைவனின் திருத்தூதர் மகிழ்வெய்தினார்கள். இக்ரிமா பெருமானாரை நெருங்கிய போது எழுந்து சென்று தங்களின் பரிசுத்தப் போர்வையை அவர் மீது போர்த்தி வரவேற்றார்கள். இதுபோன்ற மனமாற்றச் சம்பவங்கள் எத்தனை யெத்தனையோ நிகழ்வுற்றன.

அரபு நாட்டில் எத்தனையோ கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்து, குறைஷிகள் என்ன செய்கிறார்கள் என்பதை அவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தன. மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாம் மார்க்கம் வெகு இலகுவாகப் பரவியது. அதுவரை அரபு நாடு முழுமைக்கும் தலைமைத்தனம் பூண்டிருந்த மக்கா குறைஷிகளின் பொருளாதார உதவியை நாடியோ அல்லது அவர்களுக்கு அஞ்சியோ இஸ்லாத்தில் சேராமல் தயங்கிக் கொண்டிருந்த கோத்திரங்களெல்லாம் இப்போது இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டன.

தலைமைக்கு அத்தியாவசியமானவை, இறை நம்பிக்கையும் பயபக்தியுமாகும். அதனுடைய அனுபவ சாத்தியமான அறிவு, திறைமை, கௌரவம், செல்வாக்கு, வசீகரிக்கும் சக்தி, ஆட்சியும் அதிகாரமும் செலுத்தும் அனுபவம், சமயத்திற் கேற்ற சாமர்த்தியம், ஏனையோரைக் கீழ்ப்படிந்து பணியாற்றும்படி செய்யும் திறன், மனித உள்ளங்களின் தன்மையை அறியும் ஆற்றல் முதலியனவும் தலைமைக்கு அவசியமானவையாகும். அன்றியும் அத்தலைமைத் தனத்தின் கீழ் முன்னரே பொதுமக்கள் இருந்து, அனுபவித்து கீழ்படிந்து பழக்கப்பட்டிருத்தலும் அவசியமாகும். இத்தகைய பண்புகள் அனைத்தும் மக்கத்துக் குறைஷிகளிடம் ஒரு சேர அமைந்திருந்தன. எனவே, மக்களுக்குத் தலைவர்களாக இருக்கவும் ஒரு பெரிய இயக்கத்திற்காகப் பணியாற்றவும் குறைஷிகளே தகுந்தவர்கள் என்பதையும் - அரபு நாட்டின் வேறெந்தக் கோத்திரத்தாலும் அதைச் சாதிக்க முடியாது என்பதையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர். அஞ்ஞான காலத்தின் அனாச்சார அக்கிரம அட்டூழியங்களனைத்திற்கும் அக்குறைஷிகளே தலைமை தாங்கி ஆர்ப்பரித்து நின்றனர். இவ்வாறு சிலநாள், சிலமாதம், சிலவருடமல்ல, பல்லாண்டு காலம் இரவு, பகலாக அவற்றைச் சலியாது பிரயோகிப்பதில் முழு மூச்சாக முனைந்து நின்றனர். அத்தகைய வர்க்கத்தாரே உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்து இஸ்லாத்தைக் காத்து முழு மூச்சுடன் பரவச் செய்வர் என்பதை உத்தமத் திருநபியவர்கள் உறுதியாக நம்பினார்கள். அவர்களின் இந்நினைவு நனவாகியதேயன்றிக் கனவாகி விடவில்லை என்பதற்குச் சரித்திரம் சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு சமுதாயத்தை பலவந்தத்தால் வென்று தடியடியால் கீழ்ப்படியுமாறு செய்ய முடியாது, செய்யக்கூடாது என்பதைப் பெருமானார் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். எனவே, அவர்கள் முற்றிலும் விரும்பியது மக்களுடைய மனமாற்றமே! அந்த மாற்றத்தை அவர்கள் அன்பாலும், தயாள குணத்தாலும், மன்னிக்கும் தன்மையாலுமே பெற்றார்கள்.

இதை அடுத்துப் பெருமானாரின் ஆணைக்கிணங்க மக்காவிலுள்ள வீடுகள் அனைத்திலும் பன்னூறாண்டு காலமாகப் போற்றி வணங்கி வந்த விக்கிரகங்கள் எல்லாம் வீதியில் தூக்கி எறியப்பட்டு மக்களின் காலடிகளில் கிடந்து மிதிபடலாயின. பக்கத்து ஊர்களில் இருந்த விக்கிரகங்களை காலித் பில் வலீத் (ரலி), அம்ரிப்னுல் ஆஸ் (ரலி) முதலிய உற்ற தோழர்களை அனுப்பி அழித்தொழிக்கச் செய்தார்கள்.

ஹிஜ்ரி 8, ரமளான் 25ம் நாள், மக்காவிற்குத் தெற்கே ஒரு நாள் பயணத்தில் வசித்த பனூ ஜதீமா கூட்டத்தாரை இஸ்லாத்தின் பால் அழைக்குமாறு பெருமானார் காலித் இப்னு வலீத் அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர் அங்கு சென்ற போது அக்கூட்டத்தார் காலிதின் உத்தரவுக்குப் பணிந்து இஸ்லாத்தை ஏற்றுத் தங்களிடமிருந்த ஆயுதத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டனர். ஆனால், காலிதின் குடும்பத்தாருக்கும் இக்கூட்டத்தாருக்குமிடையே நீண்ட நாள் பகைமை இருந்து வந்தது. அதனால், இச்சந்தர்ப்பத்தை ஒரு வஞ்சந் தீர்க்கும் வாய்ப்பாகக் கொண்டு காலித் அக்கூட்டத்தாரில் சிலரைத் தம் வீரர்களை ஏவி கொன்று விட்டார். இவ்வுண்மை அண்ணலார் அவர்களுக்குத் தெரிய வந்து பெரிதும் மன வேதனையுற்றவர்களாய், ஹலரத் அலீ அவர்களை அக்கூட்டத்தாரிடம் அனுப்பி அவர்களைச் சமாதானப்படுத்தி வெட்டுண்டவர்களின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடும் கொடுத்து வரச் செய்தார்கள்.

நபிகள் நாதர் மக்காவில் பதினைந்து தினங்கள் வரை தங்கியிருந்து மக்களுக்குச் சன்மார்க்கத்தைப் போதிப்பதற்கு முஆத் பின் ஜபல் என்பவரையும், அபூசுப்யானின் உமய்யா கோத்திரத்தைச் சார்ந்த பதினெட்டு வயதினரான (முப்பதுக்கு சற்றுக் குறைந்த வயதினர் என்றும் குறிப்பிடப்படுகிறது) ஆத்திப் பின் ஆஸீத் (அத்தாபின் உஸைத்) என்பவரை மக்காவின் கவர்னராகவும் நியமித்து அதன் பரிபாலனத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவருக்கு உபகாரச் சம்பளமாக தினம் ஒரு திர்ஹம் (நான்கணா) மாதம் முப்பது திர்ஹம் எனவும் நிர்ணயித்தார்கள். இவர் மக்காவின் வெற்றிக்குப் பின்னர் தான் இஸ்லாத்தைத் தழுவினார். அபூஜஹலின் புதல்வி ஜுவைரியாவதைத் திருமணம் செய்திருந்தார். இவர் மிகவும் புத்திக்கூர்மையுள்ளவர்.

**ஹுனைன் யுத்தம்**

இப்போது மக்காவுக்குச் சமீபமாக தென்கிழக்கே ஹவாஸின் என்ற பதாவிய அரபுக்கூட்டத்தார் வசித்து வந்தனர். இவர்களைச் சேர்ந்தவர்கள் தாம் பெருமானாரின் பால்குடித் தாயான ஹலீமா. இவர்கள் விக்கிரக வணக்கத்தில் பிடிவாதமாக இருந்து வந்தனர். மக்காவின் ஆதிக்கம் நபிகள் பிரான் கைக்கு வந்து விட்டதை அறிந்த இவர்கள் இஸ்லாத்தின் மீது முன்னிலும் பன்மடங்கு வெறுப்புக் கொண்டனர். முஸ்லிம்கள் தங்கள் மீது படையெடுக்கலாம் என கருதியவர்களாய், முன் எச்சரிக்கையாகப் போர் ஆயுதங்களைச் செய்வதில் முனைந்தனர். இது விஷயம் பெருமானார் அவர்களுக்குத் தெரிய வந்ததும், அப்துல்லாஹ் பின் அபூஹத்ரத் அல் அஸ்லமி என்பவரைத் துப்பு துலக்கி வரச் சொன்னார்கள். அவர் சென்று ஹவாஸின்கள், முஸ்லிம்களைத் தாக்கச் செய்து வரும் ஏற்பாடுகளை விவரமாக அறிந்து வந்து சொன்னார். எனவே, பெருமானாரும் ஹவாஸின்களைப் போர்க்களத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலுற்றார்கள்.

மதீனாவிலிருந்து தம்முடன் வந்திருந்த பதினாயிரம் வீரர்களுடன், மக்காவில் முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதாருமான இரண்டாயிரம் வீரர்களையும் சேர்த்து மொத்தம் பன்னிரண்டாயிரம் வீரர்களைக் கொண்ட படையொன்றைத் திரட்டினார்கள். சப்வான் இப்னு உமய்யா என்ற குறைஷி ஒருவரிடம் ஆயுதங்களும் நூறு கவசங்களும் ஏழு வாகனங்களும் இருந்தன. இவர் இஸ்லாத்தைத் தழுவாதிருப்பினும் முஸ்லிம்களுக்கு அவற்றைக் கடனாகத் தந்துதவ முன் வந்தார். இதன்னியில் இவரின் ஒன்று விட்ட சகோதரரான நௌபல் பின் ஹாரித் என்பவர் மூவாயிரம் ஈட்டியும், அப்துல்லாஹ் இப்னு ரபீஆ என்பவர் அறுபதாயிரம் திர்ஹமும் கடனாகத் தந்துதவ முன்வந்தனர்.

முஸ்லிம்களின் பெரும்படை 8 ஷவ்வால் 10ம் நாள் புறப்பட்டது. சேனை பிரம்மாண்டமானதாக இருந்ததைக் கண்ட பனூ பக்கர் வீரர் ஒருவர், வெற்றி நிச்சயம் தங்களுக்கே எனப் பெருமிதத்துடன் வாய் விட்டுக் கூறி விட்டார். இதையறிந்த அண்ணலார், அவரை வன்மையாகக் கண்டித்தார்கள், பொதுவாக முஸ்லிம்கள் அனைவரின் உள்ளங்களிலும் இது போன்ற வெற்றிக்களிப்பு எண்ணம் ஏற்பட்டதாகவே தெரிகிறது. முஸ்லிம் படை மக்காவிற்கும் தாயிபுக்கும் மத்தியிலுள்ள ஹுனைன் பள்ளத்தாக்கை நெருங்கு முன்னரே, ஹவாஸின்கள் தங்களின் இளந் தலைவன் மாலிக் இப்னு அவ்ப் அல் நஸ்ரி என்பவனுடன் வந்து வசதியும் பாதுகாப்புமான அவ்தாஸ் என்னும் பகுதியில் பாளையமிறங்கிக் கொண்டனர். எனினும், போர்த் திறன் மிக்க கஅப், கிலாப் என்னும் இரு கூட்டத்தார் முஸ்லிம்களுக்கு எதிராக ஹவாஸின்களுடன் சேர மறுத்து விட்டனர். ஆனால் தக்கீப்களும், நஸ்ரிகளும், ஜுஷம்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

**“எங்கே ஓடுகிறீர்கள்”**

பொழுது புலரும் நேரம் முஸ்லிம்களின் சேனை சாவதானமாகப் பள்ளத்தாக்கை நெருங்கிக் கொண்டிருந்தது. “துல்துல்” என்ற தங்கள் வெள்ளைக் கோவேறு கழுதையின் மீதமர்ந்து படையின் பின் அணியில் பெருமானார் வந்து கொண்டிருந்தார்கள். காலித் இப்னு வலீத் தலைமையில் சரியான ஆயுதபாணிகளாயில்லாத வாலிபர்களைக் கொண்ட அணி முன்னேறிச் சென்றது. செங்குத்தாகவும் ஒடுக்கமாகவும் உள்ள அவ்தாஸ் கணவாய் இறக்கத்தில் முஸ்லிம்கள் சென்று கொண்டிருந்தபோது, ஹவாஸின்கள் சாலிம் குன்றுகள் மீதும் ஊடுபாதைகளிலும் குறுகலான இடங்களிலும் பக்கத் தடங்களிலும் மறைந்திருக்தது. அம்புமாரி பொழிந்து கற்களைக் கொண்டும் தாக்கினர். எதிர்பாராத இந்தத்தாக்குதலைச் சமாளிக்க இயலாது முஸ்லிம் வீரர்கள் திணறினர், செய்வதின்னதென்று அறியாது திகைத்து வின்வாங்கினர். சேனையில் குழப்பமேற்பட்டது. வீரர்கள் சிதறியோடினர்.

இந்நேரத்தில், அண்ணலார், அசையாது, மனங்கலங்காது அச்சமேதுமின்றி ஓர் இடத்தில் நின்றிருந்தார்கள். தங்களைக் கடந்தோடும் முஸ்லிம்களை விளித்து, “வீரர்களே எங்கே ஓடுகிறீர்கள்? இறைவனின் தூதன், அப்துல்லாவின் மகன், இதோ இங்கே நிற்கிறேன், இங்கே வாருங்கள், இவ்விடம் வாருங்கள்!” எனக் கூவியழைத்தார்கள். இந்தக் இக்கட்டான நேரத்திலும் அபூபக்கர், உமர், அலீ, அப்பாஸ், அவர் மகன் பலுல், அபூசுப்யான் இப்னு ஹாரித், அவர் மகன் ஜ.்.பர்,

ஜைது, உம்மு அய்மனின் மக்களான உஸாமா, போன்ற தோழர்கள் பெருமானாரைச் சுற்றிப் பாதுகாப்பாக நின்று கொண்டனர்.

இது சமயம் சண்டையின் போக்கு முஸ்லிம்களுக்கு மிகச் சோதனையான கட்டமாகக் காணப்பட்டது. உறுதி மிக்க ஹலரத் உமர் அவர்களுங்கூட மனந்தளர்ந்த நிலையில், பதினெட்டாண்டு கால உழைப்பு, வியர்வை, இரத்தம், கண்ணீர் இவற்றைக் கொண்டு நிர்மானிக்கப்பட்ட இஸ்லாம் என்னும் கோட்டை நொடிப்பொழுதில் எங்கே இடிந்து நொறுங்கி விடுமோ என ஒரு கணம் எண்ணி ஏங்கினார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் க..பாவின் திறவுகோலைப் பெற்றிருந்த உத்மான் இப்னு அபூதல்ஹாவின் மகன் ஷைபா என்பவர் இஸ்லாத்தைத் தழுவியிருந்தும் மனக்குரோதம் மாறாதவராக இருந்தார், அவர் கெட்ட எண்ணத்தோடும் பெருமானாரை நெருங்கியபோது அந்த இன்சொல் ஏந்தல் தங்களின் முழுமதித் திருவதனத்தில் புன்முறுவல் தவழ, அவரை அருகிலழைத்து, அவரது அழுக்காற்று நெஞ்சின் மீது தங்களின் திருக்கரம் பதித்துப் பிரார்த்தித்தார்கள். அக்கணமே ஷைபா குரோதம் நீங்கியவராக இஸ்லாத்தின் அணியில் உறுதியுடன் நின்று போரிட்டார்.

சந்தடியும், கூச்சலும், குழப்பமும் மிகுதியாக இருந்ததால், அண்ணலவர்கள் கூவிழைத்ததை ஒருவரும் காதில் வாங்கவில்லை. அதனால், தம்மைவிட உரத்த குரல் படைத்த அப்பாஸ் அவர்களிடம் முஸ்லிம்களைக் கூவியழைக்குமாறு சொன்னார்கள். அப்பாஸ் அவர்களின் வெண்கலக் குரலினைக் கேட்ட வீரர்கள் நூறுபேர் அண்ணலார் நின்ற இடம் நோக்கி அலறியடித்து ஓடிவந்தனர். குதிரைகளின் மீதிருந்த வீரர்கள், விரைவில் திரும்ப மறுத்துச் சண்டித்தனம் செய்த தங்கள் குதிரைகளை விட்டும் குதித்தோடி அங்கு வந்தனர். இப்போது பெருமானார் அவர்கள், “நான் தான் முஹம்மது, இறைவனின் தூதன் நானேயாம், அப்துல் முத்தலிபின் பேரன் நான் தான்” என முழங்கியவாறு முன்னேறிச் சென்றார்கள்.

இச்சமயத்தில் எதிரிகளும் பள்ளத்தாக்கை நோக்கி கீழிறங்கி வந்தனர். நபிகள் கோமான் வார்த்தைகளால் புத்துணர்ச்சியும் புதிய ஊக்கமும் பெற்ற முஸ்லிம் வீரர்கள் ஆவேசமும் ஆக்ரோஷமும் கொண்டு எதிரிகளின் அணியைத் தாக்கினர். ஹவாஸின்கள் உறுதி குலைந்து ஓட்டம் பிடித்தனர். அவர்களின் கொடியைத் தாங்கி நின்றவன் ஹலரத் அலீ அவர்களின் கையால் வெட்டுண்டு கீழே சாய்ந்தான். எதிரிகள் தங்களுடன் அழைத்து வந்திருந்த பெண்டு பிள்ளைகளையும், கால்நடைகளையும், கொண்டு வந்த பணங்களையும் கைவிட்டு அலங்கோலமாக ஓடத் தலைப்பட்டனர்.

**தாயிப் முற்றுகை**

போரில் கிடைத்த கைதிகளையும், கால்நடைகளையும், சிறைப் பொருட்களையும் அல்ஜி..ரானா பள்ளத்தாக்கில் கொண்டு போய் வைத்துக் காவல் புரியுமாறு உத்தரவு செய்து விட்டு பெருமானார் (ஸல்) ”ஆயிரம் வீரர்களுடன் முதலில் அவ்த்தாஸுக்குச் சென்று அங்கு ஹுனைனிலிருந்து தப்பியோடி வந்த எதிரிகளைத் தாக்கினார்கள் அவர்கள் விரண்டோடி அக்கம் பக்கத்திலுள்ள குன்றுகளில் பதுங்கிக் கொண்டனர். பின்னர், தாயிபுக்குள் சென்று தஞ்சம் புகுந்த மற்றொரு பகுதி ஹவாஸின்களை ஷவ்வால் மாத இறுதியில் முற்றுகையிட்டார்கள்.

தாயிப், வளம் கொழிக்கும் பட்டணமாக மட்டுமின்றி அரண்களால் நன்கு சூழப்பெற்றுப் பலப்படுத்தப்பட்டதாகவுமிருந்தது. அங்கு வசித்தவர்கள் தகீப் என்னும் கூட்டத்தாராவர். அவர்களிடம் பல மாதங்களுக்குத் தாக்குப் பிடிக்கப் போதுமான உணவுப் பொருள்களும் தண்ணீர் வசதியும் இருந்தன. ஹவாஸின்களுடன் போர்த்திறன் மிக்க தாயிப் வாசிகளும் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களின் முற்றுகையை முறியடிக்க முற்பட்டனர். அவர்கள் உயர்ந்த கோட்டைகளிலிருந்து கொண்டு முஸ்லிம் வீரர்களின் மீது அவர்கள் விஷமிக்க அம்புமழை பொழிந்ததுடன், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளையும் வீசியெறிந்தனர். கவண் கற்களை வீசினர். தாயிப் முற்றுகையின் போது ஸல்மான் பார்ஸீ (ரலி) யோசனையின் படி ”மஞ்சனீக்” (Mangomel) உண்டி வில்லும் கோட்டைச் சுவர்களை இடித்துத் துவாரம் செய்யும் ”தப்பாபா” (Dabbabah) என்னும் எந்திரங்களும் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டன. அகழ் வெட்டியதைப் போன்று இவையும் இந்நாட்டுக்குப் புதுமையானவையாகும். முற்றுகை இருபது நாட்கள் வரை நீடித்தும் பலனொன்றுங் காணவில்லை. தாயிபு வீழ்வதாகவும் தோன்றவில்லை. எனவே, அண்ணலார் தங்கள் தோழர்களுடன் கலந்தாலோசித்தார்கள். நௌபல் இப்னு முஆவியாவின் கருத்துக்கிணங்க முற்றுகையை மேலும் நீடிப்பது பயனளிக்காது என்ற முடிவுக்கு வந்தவர்களாய் அதனைக் கைவிட்டு வீரர்களுடன் அல்ஜி∴ரானாவுக்குத் திரும்பினார்கள். தாயிபில் ஹவாஸின் கூட்டத்தாரைத் தாக்கச் சென்றதில் முஸ்லிம்களுக்கு ஆட்சேதம் அதிகமேயாகும். மொத்தம் பன்னிரண்டுபேர் கொல்லப்பட்டார்கள். அநேகர் காயமுற்றனர். இவர்களில் பெருமானாருடன் நெருக்கமாக இருந்து வந்த தோழர்கள் ஐவராவர்.

தாயிப் முற்றுகையின் போது பெருமானார், ஹலரத் அலீ, அபுல் ஆஸ் பின் ரபீஉ மற்றும் சில தோழர்களை சுற்றுப் புறங்களுக்குச் சென்று விக்கிரகங்களை நிக்கிரகம் செய்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். அவ்விதமே அவர்களும் சென்று பல இடங்களிலும் காணப்பட்ட விக்ரகங்களை அழித்தொழித்து விட்டுத் திரும்பினர். தாயிபிலிருந்து தஹ்னா வழியாக ஜி∴ரானாவுக்குத் திரும்புங்காலை ஹிஜ்ரத்தின்போது அண்ணலவர்களைத் துரத்திச் சென்ற சுறாகா எதிர் கொண்டு வந்து கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்.

## ஹலீமாவின் புதல்வி

அல்ஜி∴ரானா வந்து சேர்ந்தும் கால்நடைகளை வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்த பின், கைதிகளை அவர் தம் உறவினர் வந்து மீட்புப் பணம் செலுத்தி அழைத்துச் செல்வர் அல்லது பெருந்தன்மை காட்டி உரியவர்களிடம் ஒப்படைத்தால் அக்கூட்டத்தார் முஸ்லிம்கள் மீது அன்பு கொள்வர். அதனால், அவர்களை இஸ்லாத்தில் இணையச் செய்வது எளிதாக இருக்கும் என அண்ணலார் எண்ணினார்கள். சிறைப்பட்டவர்களில் பெருமானாரின் பால்குடித்தாய் ஹலீமாவின் புதல்வி ஹு“தாபா என்ற ஷைமாவும் ஒருவர். இவர் பெருமானாரின் குழந்தைப் பருவத்தில் அவர்களைத் தூக்கி எடுத்து வளர்த்தவர். அப்பெண்மணியைப் பார்த்ததும் நபிகள் நாதர் அன்பு மேலீட்டால், தங்களின் மேலாடையை விரித்து அதன்மீது தங்களருகே அமரச் செய்தார்கள். அவரைத் தங்களுடன் வந்து மதீனாவில் தங்கியிருக்குமாறு அழைத்தார்கள். எனினும், ஷைமா ஊர் திரும்பவே விருப்பம் கொண்டார். அதுபோல், அவருக்கு ஒட்டகைகளையும், ஆடுகளையும், ஆண், பெண்

அடிமைகள் இருவரையும் அன்பளிப்புச் செய்து பாதுகாப்புடன் அவரது ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். போரில் கைதான மற்றவர்களை மீட்டு செல்ல அவர்களின் உறவினர் வருவர் எனச் சில நாட்கள் எதிர் பார்த்தும் எவரும் வரவில்லை. எனவே, கைதிகளை வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்.

ஷைமா விடுதலையாகி வந்த விஷயம் ஊரிலுள்ள மற்றவர்களுக்கும் தெரியவந்தது. அவர்கள் ஜுஹைர் பின் ஸர்து தலைமையில் உத்தமத் திருநபி அவர்குளிடம் வந்து "நாங்கள் ஹலீமாவின் கூட்டத்தினரானதால் அவ்வம்மையாரின் பொருட்டாவது எங்கள் மீது கருணை காட்டி கைதான எம்மனைவி மக்களுக்கு விடுதலையளிக்க வேண்டும்" என வேண்டி நின்றனர். அவர்களை நோக்கி அண்ணலார் (ஸல்) "இது வரை உங்கள் எதிர்பார்த்தும் எவரும் வராததால், கைதிகள் அனைவரையும் வீரர்களுக்குப் பங்கீடு செய்தாகிபிட்டதே. நீங்கள் காலந்தாழ்த்தி வந்திருக்கிறீர்களே, என் செய்வது? வேண்டுமானால் என் குடும்பத்தாருக்குக் கிடைத்த கைதிகளை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். மற்ற கைதிகளையும் பெற விரும்பினால் நண்பகல் தொழுகையின் போது வந்த மற்றவர்களிடமும் விண்ணப்பித்துக் கொள்ளுங்கள்" எனத் திருவாய் மொழிந்தார்கள். அவ்வாறே தொழுகை முடியுந்தருவாயில் ஹவாஸின்களும் வந்து சேர்ந்தனர். அனைவர் முன்னிலையில் நபிகள் நாதர், "எனக்கும், அபூதாலிபின் குடும்பத்தாருக்கும் கிடைத்த கைதிகளுக்கு நான் இப்போது விடுதலை அளித்து விட்டேன்", என அறிவித்தார்கள். பெருமானாரைப் பின்பற்றி மற்றவர்களும் தங்கள், தங்கள் பங்குக்குக் கிடைத்த கைதிகளை விடுவித்துவிட்டதாகக் கூறினர். உடனே, ஆறாயிரம் கைதிகளும் ஈட்டுத் தொகை எதுவும் கொடாமல் விடுதலையாகித் தங்களின் சுற்றத்தாரோடு மகிழ்ச்சித் தாண்டவத்துடன் ஊர் திரும்பினர்.

கைதிகளை விடுவித்துச் செல்ல வந்தவர்களிடம், அவர்களின் தலைவர் மாலிக் எங்கிருக்கிறார் எனப் பெருமானார் விசாரித்தபோது அவர் தாயிபில் தகீப் கூட்டத்தாருடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது கேட்ட அண்ணலார், "அவர் வந்து இஸ்லாத்தைத் தழுவினால் அவர் மனைவி மக்களை மீட்டுச் செல்லலாம். நூறு ஒட்டகங்களும் அவருக்கு அன்பளிப்புச் செய்யப்படும். இத்தகவலை அவருக்குச் சொல்லுங்கள்" எனக்கூறி அனுப்பினார்கள். இந்த விபரம் தெரியவந்ததும், மாலிக் தகீப்களுக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்து, இருட்டிய பின் தாயிபை விட்டும் சிறிது தூரம் குதிரை மீது சென்று, அதன்பின் ஒட்டகை மீது அல்ஜி∴ரானாவை வந்தடைந்தார். அங்கு நபிகள் நாதரைக் கண்டு கலிமாச் சொல்லி இஸ்லாமத்தில் சேர்ந்து கொண்டார். வாக்களிக்கப்பட்ட நூறு ஒட்டகங்களைப் பெற்று மனைவி மக்களையும் அழைத்துக் கொண்டு, மாலிக் ஊர் திரும்பினார். பெருமானாரின் பெருந்தன்மையைக் கண்டு அவர் வியந்து மனம் பூரித்து நின்றார். பிற்காலத்தில் மாலிக் ஒரு சிறந்த முஸ்லிமாகத் திகழ்ந்தார்.

**முணுமுணுப்பு**

ஹுனைன் போரில் கிடைத்த பொருட்களையும், கால்நடைகளையும் பங்கிடும்போது, புதிதாக இஸ்லாத்தைத் தழுவிப் போரில் கலந்து கொண்ட குறைஷிகளுக்கும் அபூசுப்யான், அவரது புதல்வர்களான யஜீது, முஆவியா மற்றும்

சப்வான், இக்ரிமா போன்றவர்களுக்கும், பதாவியத் தலைவர்களுக்கும் இஸ்லாத்தில் நிலையான பிடிப்பு ஏற்படவும், இனியும் சண்டை சச்சரவுகள் தொடர்ந்து நேராமல் தடுக்கவும், விகிதாச்சாரத்திற்கும் சிறிது அதிகமாகக் கொடுத்தார்கள். அத்துடன் தங்களது ஐந்திலொரு பங்குகளையும் அவர்களுக்கே அண்ணலார் அளித்தார்கள்.

அது சமயம் அப்பாஸ் இப்னு மிர்தாஸ் என்ற கவிஞருக்கும் சில ஒட்டகைகள் கொடுக்கப்பட்டன. தமக்குக் கிடைத்ததில் திருப்தியுறா அப்புலவர், பெருமானார் அவர்கள் மீது குறைபட்டு ஒரு பாட்டிசைத்தார். அதைச் செவியுற்ற நபிகள் நாதர், தங்களிடம் கவிஞர் வந்தபோது, ”இவ்வாறான பாட்டிசைத்தவர் நீர்தானா” எனக் கேட்டறிந்து தங்கள் தோழர்களிடம் அவரின் நாக்கைத் துண்டிக்குமாறு கட்டளையிட்டார்கள். ஹலரத் உமர் உண்மையிலேயே அந்தக் கவிஞரின் நாக்கைத் துண்டிக்க ஆயத்தமானார்கள். ஆனால் “அறிவின் தலைவாயில்” என அண்ணலாரவர்களால் சிறப்பிக்கப் பெற்ற ஹலரத் அலீ, அவ்வார்த்தைகளின் உட்பொருளை நாக்கைத் துண்டித்தல் என்பது அவதூறு பேசாதாக்குதல் என்பதை உணர்ந்தவர்களாக அப்புலவரை அழைத்துச் சென்று, யுத்தப் பொருட்களில் அவருக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார்கள். கவிஞர் ஆச்சரியமுற்றவராய் தமக்கு எதுவும் வேண்டாமென மறுத்து விட்டார் எனினும், அவருக்கு அறுபது ஒட்டகங்கள் கொடுக்கப்பட்டன.

போரில் கிடைத்த பொருட்களைக் குறைஷிகளுக்கும் பதாவிகளுக்கும் அதிகமாகப் பங்கிட்டுக் கொடுப்பதை கவனித்த அன்சாரி வாலிபர்களில் சிலர், தங்களுக்குள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். பெருமானார் தங்கள் இனத்ததவரான குறைஷிகளுக்கும், மக்காவாசிகளுக்கும் சலுகை காட்டி நடப்பதாகவும், மதீனா வாசிகளைக் கை நழுவ விடுவதாகவும் கருத்தலைப்பட்டனர். கஸ்ரத் கோத்திரத்தைச் சேர்ந்த ஸஅத் இப்னு உபாதா மூலம் இவ்விஷயம் நபிகள் கோமானுக்குத் தெரிய வந்தது. அன்சாரிகளை ஓர் இடத்தில் கூடச் செய்து, தங்களுடன் சில முஹாஜிர்களையும் அங்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்களைச் சந்தித்து, இறைவனைப் போற்றி நன்றி கூறிய பின், “அன்சார் நண்பர்களே! நீங்கள் என் மீது குறை காணுவதாகக் கேள்விப்பட்டேன். வழி தவறி இருந்த உங்களை இறைவன் என் மூலம் நேர்வழிப்படுத்தினான். ஏழைகளாய் இருந்த உங்களுக்கு என் மூலம் வளமான வாழ்வளித்தான். பகைமை பூண்டு பிளவு பட்டுக் கிடந்த உங்களை என் மூலம் ஒற்றுமைப் படுத்தினான். இவை உண்மை தானா? எனப் பெருமானார் கேட்டார்கள். “ஆம் உண்மை தான். இறைவனும், அவன் திருத்தூதரும் எங்கள் மீது அளவற்ற அன்பு காட்டி அருள் பாலித்தனர்.” என அன்சாரிகளனைவரும் ஒருமித்துக் கூறினர். அண்ணலவர்கள் தொடர்ந்தார்கள். அன்சாரித் தோழர்களே!. நீங்கள் வேறு விதமாக இதற்கு மறுப்புக் கூறவும் உங்களுக்கு உரிமையுண்டு. “உம் இனத்தவர் உம்மைப் பொய்யராக்கிப் புறக்கணித்து ஊரைவிட்டுத் துரத்திய போது நாங்கள் உம்மை மெய்யராக்கி அபயமளித்து, ஆதரவு தந்தோம். உமது இனத்தவர் உம்மை அழித்தொழிக்கப் படை திரட்டி வந்தபோது, நாங்கள் உமக்காக அனைத்தையும் தியாகம் செய்து, எதிர்த்துப் போராடி வெற்றியை ஈட்டித் தந்தோம்.” என்று நீங்கள் எனக்கு மறுமொழி கூறலாம்.

“நான் எந்த நோக்கத்தோடு இவ்வாறு அவர்களுக்குச் சலுகை காட்டி நடந்து கொண்டேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். குறைஷிகள் இப்பொழுது தான் புதிதாக இஸ்லாத்தில் இணைந்துள்ளனர். அன்றியும், அவர்களின் வியாபாரத்திற்கு நம்மால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளாலும், நம்முடன் பல போர்களை நடத்திச் சேதமுற்றதாலும், பொருளாதாரத்தில் அவர்கள் மிகவும் நலிவுற்றிருக்கின்றனர். இப்போது தான் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுள்ள அவர்களுக்குச் சிறிது ஆதரவு கொடுத்து ஆறுதல் அளிப்பதற்காகவே அற்ப உலகப் பொருட்களான சிலவற்றை அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க முன் வந்தேன்.

“அறிந்து கொள்ளுங்கள், பரிசுத்த மார்க்கமான இஸ்லாத்தை நான் உங்களிடம் ஒப்படைத்து இருக்கிறேன். அவர்களோ ஆட்டையும், ஒட்டகங்களையும் தங்களுடன் கொண்டு செல்கின்றனர். ஆனால் நீங்களோ, இறைவனின் தூதரை உங்களுடன் அழைத்துச் செல்கிறீர்கள். இதில் யார் மிக்கப் பேறு பெற்றவர்கள். அதிக மகிழ்ச்சியடைய வேண்டியவர்கள் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இறைவன் மீது ஆணையாக, நான் ஒரு போதும் உங்களைக் கைவிட மாட்டேன். நாடு பெயர்ந்து மட்டும் வந்திராவிடில் ஹிஜ்ரத் தில்லாதிருப்பின் நான் அன்சாரிகளில் ஒருவனாக இருந்திருப்பேன். அன்சாரிகள் ஒரு பாதையையும், மற்றவர்கள் வேறு பாதையையும் தேர்ந்து கொள்வார்களாயின், நிச்சயமான நான் அன்சாரிகள் தேர்ந்தெடுக்கும் வழியையே பின்பற்றுவேன். நீங்கள் எனது சரீரத்தில் படிந்துள்ள உள் சட்டையாகவும் மற்றவர்கள் அதன் மேல் போர்த்தியுள்ள போர்வையாகவும் இருக்கின்றீர்கள். இறைவா! அன்சாரிகள் மீதும், அவர் தம் சந்ததியினர் மீதும் உன்னுடைய கருணாமாரியை என்றென்றும் பொழிந்தருள்வாயாக” என உணர்ச்சி ததும்ப உருக்கமுடன் கூறி முடித்தார்கள்.

“நபியே, நீர் அவர்களிடையே இருக்கும் வரையில் அல்லாஹ் அவர்களைத் தண்டிக்க மாட்டான்” (8:33) என்ற இறைவசனப்படி, தாஹா நபியவர்கள் மக்காவில் வசித்த காலம் வரையில் குறைஷிகளுக்குத் தண்டனைகளெதுவும் இறங்காதிருந்து வந்தது. ஆனால், எம்பெருமான் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறியதன் பின்னர் ஹிஜ்ரத்துக்குப் பின் அந்நகர மக்கள் எத்தனையோ விதமான பிணிகளுக்கும், பஞ்சங்களுக்கும், சோதனைகளுக்கும் ஆளாயினர். பத்ரு, உஹத், அகழ், கைபர் முதலிய சண்டைகளிலும் அவர்கள் படுதோல்வியையேன்றி வெற்றியைக் கண்டதில்லை.

நபிகள் நாதரின் இச்சிற்றுரையைச் செவிமடுத்த அன்சாரிகள் உள்ளம் நெகிழ்ந்து, மனங்கசிந்து, தாடிகள் நனையக் கண்ணீர் சொரிந்தவாறு, நாங்கள் இறைவனின் திருத்தூதருடன் இருப்பதைத்தான் யாவற்றினும் மேலான பாக்கியமாகக் கருதுகின்றோம். அதுவே எங்களுக்குப் பரமதிருப்தியும், பரமானந்தமும் அளிப்பதாகும். மற்றெப் பொருளும் எங்களுக்குத் தேவையில்லை. என ஒரு குரலெடுத்துக் கூறினர். அது கேட்ட நபிமணி அவர்கள் முகமலர்ச்சியடைந்தார்கள். அல்ஜி.்ரானாவில் மூன்று நாட்கள் தங்கிய பின் மக்காவாசிகளைத் தவிர மற்றவர்கள் மதீனா நோக்கிப் பயணமானார்கள். பெருமானார் மட்டும் மக்கா சென்று உம்ராவை நிறைவேற்றிக் கொண்டு ஆத்திபையே கவர்னராக உறுதி செய்துவிட்டு, முஆத்பின் ஜபலை மார்க்கம் போதிக்க நியமித்துவிட்டுத் திரும்பி வந்து மதீனா வாசிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். இது சமயம் தான் உர்வா பின் மஸ்ஊது தாயிபிலிருந்து வந்து,

பெருமானாரைச் சந்தித்துக் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்து, அவர்களுடன் மதீனா வந்து தங்கிக் கொண்டார்.

முஸ்லிம்களுடன், முஸ்லிமல்லாத குறைஷிகளும் சேர்ந்து ஹவாஸின் கூட்டத்தாரைத் தாக்கச் சென்ற காரணம் என்ன? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. ஆரம்ப கால முதல் மக்கா வாசிகளுக்கும், தாயிப் வாசிகளான ஹவாஸின், பனூ தகீப் கூட்டத்தாருக்குமிடையே கடும் வியாபாரப் போட்டி இருந்து வந்தது. இதன் காரணமாக இருசாராருக்குமிடையே நெடுகிலும் மாச்சரியமும், பூசலும், போரும் இருந்து கொண்டே வந்தன. குறைஷிகள் தொடர்ச்சியாகப் பல போர்களில் ஈடுபட்டு, இச்சமயம் நலிந்து போயிருக்கின்றார்கள். புதிய சமயத்தினரான முஸ்லிம்களும் அது போலவே இருப்பார்கள். எனவே, இச்சமயம் இவ்விருபிரிவினரையும் தாக்கி மக்காவைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடவேண்டும் எனச் செல்வமும் செல்வாக்குடனும் இருந்த ஹவாஸின்கள் எண்ணினர்.

முஸ்லிமல்லாத குறைஷிகளோவெனில், இச்சந்தர்ப்பத்தை தங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக கொண்டு, முஸ்லிம்களுடன் சேர்ந்து ஹவாஸின்களைத் தாக்கினால், தங்கள் கைகளை இலகுவில் பலப்படுத்தி, மேலோங்கச் செய்து கொள்ளலாம் எனக் கருதினர். இதுவே, முஸ்லிமல்லாத குறைஷிகள் முஸ்லிம் படையில் வந்து சேரவும், சப்வான் பின் உமையா தம்மிடத்திருந்த ஆயுதங்களையும், வாகனங்களையும் மகிழ்வுடன் கொடுத்து உதவவும் முன் வந்த காரணங்கள் எனச் சரித்திராசிரியர்கள் சாற்றுகின்றனர். சப்வான் கொடுத்து உதவிய ஆயுதங்களில் சில யுத்த களத்தில் சேதாரமாகி விட்டதால், அவற்றிற்கான பணத்தைக் கொடுத்துவிடப் பெருமானார் முன் வந்த போது, அவர்தாம் முஸ்லிமாகி விட்டதால் வேண்டாமெனக் கூறி வாங்க மறுத்து விட்டார்.

### கிலி பிடித்த கெய்ஸர்

அரேபியாவிலுள்ள பெரும்பான்மை மக்கள், இப்போது இஸ்லாத்தில் அரசும் கண வேகத்தில் பெருகி வலுவடைந்து வருவதைக் கண்ட அரபு நாட்டைச் சுற்றியுள்ள ஏனைய அரசுகள் அச்சமும், பீதியும் அடைந்ததில் வியப்பில்லை. குறிப்பாக, ரோமானியப் பேரரசைச் சேர்ந்த சிரியாவுடன் அரபுகள் பெருமளவில் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்ததால் இஸ்லாத்தின் ஆதிக்கத்தைப் பற்றி அதிகமான தகவல்கள் அவ்வரசுக்கு அவ்வப்போது தொடர்ந்து கிடைத்து வந்தன. ஆகவே இஸ்லாத்தை மேலும் வளர விட்டால் பேராபத்தாக வந்து முடியும் எனத் தீர்மானித்த ரோமானியச் சக்ரவர்த்தி அதைத் தடுத்து நிறுத்தவும், மதீனாவைத் தாக்கவும் எண்ணங்கொண்டு படையெடுப்பொன்றுக்கு ஆயத்தமாகுமாறு உத்தரவிட்டார்.

சிரியாவின் திமிஷ்க் கவர்னர் முன்திர் பின் அல் ஹாரிது கஸ்ஸானி, அதன் எல்லைகளிலுள்ள அரபுக் கூட்டத்தாரையெல்லாம் படை திரட்டுமாறு செய்தியனுப்பினான். ரோமானிய அரசு மதீனாவைத் தாக்கத் துரித ஏற்பாடுகள் செய்வதாக சிரியா சென்றுவந்த வணிகர்கள் மிகைப்படுத்திக் கூறியதுடன், முதல் அணி பல்காவை வந்தடைந்து விட்டதாகவும் வதந்தியைக் கிளப்பி விட்டனர்.

எதிரிகள் வந்து மதீனாவைத் தாக்க இடமளித்து விடக் கூடாதெனக் கருதிய நபிகள் நாதர், ரோமானியரை முன்னேறிச் சென்று தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தார்கள். முஸ்லிம்களுக்கு அனுசரணையான கூட்டத்தாரையெல்லாம் படை திரட்டி மதீனா வருமாறு செய்தியனுப்பினார்கள்.

அப்போது அரேபியாவில் கடும் பஞ்சமாகவும், கொடிய வெய்யில் காலமாகவும் இருந்தது. அரபிகளின் பிரதான உணவுப் பொருளான பேரீச்சங்கனி அறுவடை நேரமாகவுமிருந்தது. படையில் சேர்ந்து செல்லப் பலரும் தயங்கினர். போதாக்குறைக்கு, மக்களின் மனத்திடத்தைக் கலைப்பதற்கு முனாபீக்கீன்களின் தலைவன் அப்துல்லாஹ் இப்னு உபையும், யூதன் சுவைலிமும் தங்கள் தங்களின் நயவஞ்சக வேலையைச் செய்யத் தவறவில்லை. எனினும், முஸ்லிம் படையில் முப்பதினாயிரம் வீரர்கள் திரண்டு விட்டனர்.

முஸ்லிம்களுக்கும் இப்போது வல்லமை மிக்கதோர் பேரரசை எதிர்க்கும் அவசியம் நேர்ந்துள்ளது. அதிலும், எதிரிகளை வெகு தொலைவில் சென்று சந்திக்க வேண்டிய கட்டாய நிலையும் ஏற்பட்டுள்ளது. இவை அவர்களின் போர்ச் செலவை அதிகமாக்கி விட்டன. எனவே, இப்படையெடுப்புக்காக முஸ்லிம்கள் அனைவரும் ஏராளமாகப் பணமும், பொருளும் தந்துதவுமாறு அண்ணலார் விண்ணப்பம் விடுத்தார்கள்.

ஹலரத் உதுமான் அவர்கள் தொள்ளாயிரம் ஒட்டகங்களும் பதினாயிரம் திர்ஹங்களும் கொடுத்துதவினார்கள். சிலர் போர்ச்சாதனங்களுடன் கூடிய முன்னூறு ஒட்டகைகளும் நூறு குதிரைகளும் ஆயிரம் தங்க நாணயங்களும் எனவும் கூறுகின்றனர். ஹலரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் நாற்பதினாயிரம் திர்ஹங்கள் அளிக்க முன் வந்தர்கள். ஹலரத் உமர். தங்கள் செல்வத்தில் பாதியைக் கொண்டு வந்து சமர்ப்பித்தார்கள். ஹலரத் அபூபக்கர் அவர்களோவெனில் அல்லாஹ்வையும் அவன் திருத்தூதரையும் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் போதுமாக்கிக் கொண்டு வீட்டில் இருந்தவை அனைத்தையும் கொண்டு வந்து மாநபியின் மலரடிகளில் காணிக்கை வைத்து நின்றார்கள்.

இது மட்டுமா? கூலி வேலை செய்பவர் தங்களுக்கு கிடைத்த நான்கு சேர் பேரீத்தம்பழத்தில் இரண்டு சேரைக் கொண்டு வந்து யுத்த நிதிக்காகக் கொடுத்தனர். பெண்களும் ஆண்களுக்குச் சளைத்தவர்களாயில்லை. பணம் பொருள், மட்டுமின்றி அணிந்திருந்த ஆபரணங்களையும் கூடக் கழற்றித் தரமுன் வந்தனர். இவ்வாறு ஒவ்வொரு ஆணும், பெண்ணும் போட்டியிட்டுக் கொண்டு தத்தம் மனத்தயாளத்திற்கேற்பப் பணம், பொருள், அணிகலன் முதலியவற்றைக் கொண்டு வந்து கொடுத்துச் சென்றனர்.

**தபூக் நோக்கி**

படை புறப்படுவதற்கான ஏற்பாடுகளனைத்தையும் செய்து முடித்த பின் அண்ணலார் அவர்கள், முஹம்மது இப்னு மஸ்லமாவை மதீனாவின் கவர்னராகவும் ஹலரத் அலீ அவர்களைத் தங்கள் குடும்பக் காப்பாளராகவும் நியமித்து விட்டு முப்பதினாயிரம் வீரர்கள், தளவாடங்கள் சகிதம் ஹிஜ்ரி 9ம் ஆண்டு ரஜப் மாதம் கி.பி. 630 அக்டோபர் இறுதி – ஓர் வியாழக்கிழமையன்று சிரியாவை நோக்கிப் படையெடுத்தார்கள். இதில் பதினாயிரம் வீரர்களைக் கொண்ட பிரத்தியேகக் குதிரைப் படையொன்றும் இச்சேனைக்கு உதவியாகச் சென்றது. பாலைவன அரேபியாவில் இது போன்றதொரு படையெடுப்பு என்றும் நிகழ்ந்ததில்லை எனச் சரித்திர ஏடுகள் ஒருமித்துக் கூறுகின்றன.

மதீனாவுக்கு வெளியே தனியத்துல் வதா∴ என்னுமிடத்தை அடைந்ததும், பெருமானார் படையைப் பார்வையிட்டு, அணிபிரித்து, அதற்கும் தலைவர்களை நியமித்து, அவரவர்களுக்குரிய கொடிகளையும் ஒப்படைத்தார்கள். காலித் இப்னு வலீத், படையின் முன்னணிக்கு தலைமை தாங்கிச் சென்றார். அபூஜந்த தல்ஹாவும், அப்துர் ரஹ்மானிப்னு அவ்பும் முறையே வலது இடது அணிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றனர்.

படை சென்ற பாதையில் சாலிஹ் நபியும், அன்னாரின் கூட்டத்தாரும் வசித்த அல்ஹிஜ்ர் என்னும் மதாயின் ஸாலிஹ் என்ற ஊர் எதிர்ப்பட்டது. அங்கு எவரும் தங்கவோ, தாமிதிக்கவோ கூடாதென்றும், தண்ணீரைக் கூட அருந்தவோ, ஒலுச்செய்யவோ, மாவு பிசையவோ பயன்படுத்தக் கூடாதென்றும் கட்டளையிட்டவர்களாய்ப் பெருமானார், படையை விரைவாகச் செலுத்திக் கொண்டு, அவ்விடத்தைக் கடந்து சென்றார்கள். பிரயாணக் கஷ்டத்தைத் தாங்கிக் கொள்ள மனமில்லாமல் கோழைகளும் துரோகிகளுமான சிலர், படையிலிருந்து நழுவிச் சென்றதைக் கேள்வியுற்ற நபிகள் நாதர் (ஸல்) “அவர்கள் போகட்டும். நமக்கு அவர்கள் பயன்படுவதாயின், ஆண்டவன் நம்மிடமே அவர்களைத் திரும்பி வரச்செய்வான், இல்லாவிடில் நம்மை விட்டும் அவர்களை வெளியேற்றி, நமக்கு அருள் பாலித்திருக்கிறான் என்றே சொல்ல வேண்டும்” என மற்றவர்களுக்கு ஆறுதலும், தைரியமும் கூறி அறிவுறுத்தினார்கள்.

இதற்கிடையில் ஒருநாள், யாவரும் அதிசயிக்கும் விதமாக பெருமானார் (ஸல்) அவர்கள் உள்பட, படையில் சென்ற அனைவரும் கடுந்தூக்கத்தில் ஆழ்ந்து விட்டதின் காரணமாக வைகறை (பஜ்ரு)த் தொழுகையை நேரத்தோடு நிறைவேற்றத் தவறி சூரியோதயத்திற்குப் பின்னரே விழித்தெழுந்தனர். உடனே பெருமானார் தங்களிடத்திருந்த தண்ணீரைக் கொண்டு ஒலுச் செய்து ஜமாஅத் நடத்தி பஜ்ருத் தொழுகையை நிறைவேற்றினார்கள். இதைக் கண்ட தோழர்கள் சிலர் இது சரிதானா அல்லவா எனத் தங்களுக்குள் குசுகுசுத்தனர். இதனையறிந்த அண்ணல் நபியவர்கள் “நான் உங்களுக்கோர் முன் மாதிரியாவேன் அல்லவா?” உண்மையில் நாம் வேண்டுமெனத் தூங்கிப் பஜ்ருத் தொழுகையைத் தவறவிடவில்லை. இத்தூக்கம் நம்மை மீறி ஏற்பட்டதால், எழுந்ததும் தொழுது கொள்வது காலந்தாளாத (களா அல்லாத) முறையான (வக்து) தொழுகையைச் சார்ந்ததேயாகும்.” எனக்கூறி தோழர்களின் சந்தேகத்தை நிவர்த்தித்து தொழுகை மஸ்அலா (விதி)வில் புதியதொரு தத்துவ விளக்கத்தினைப் புகுத்தினார்கள். இது கைபர் போரின் போது நிகழ்ந்ததாகவும் கூறுவர்.

பிரயாணத்தின் போது அபூதர்ரின் ஒட்டகை பின் தங்கியதாய் வந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட பெருமானார், “இறைவன் அபூதர் மீது கருணை காட்டட்டும். அவர் தனியாகவே நடக்கிறார். அவா தனியாகவே இறந்து, தனியனாகவே எழுப்பப்படுவார்” எனக்கூறினார்கள். அது போலவே, உதுமான் (ரலி) ஆட்சிக் காலத்தில் அவர். ரபதாவில் தம் மனைவி, பணியாளுடன் வசித்த போது மரணமெய்தினார். அவரது கட்டளைப்படி அவ்விருவரும் அவரைக் குளிப்பாட்டிக் கபனிட்டுச் சாலையின் மருங்கில் கொண்டு வந்து வைத்திருந்த போது, இராக்கிலிருந்து ஹஜ் யாத்திரைக்காக வந்த அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி)

அவர்களும் அவருடன் வந்தவர்களும் பணியாளின் வேண்டுகோளின் படி அபூதரை எடுத்து நல்லடக்கம் செய்தனர். அது சமயம் அப்துல்லாஹ் இந்தத் தபூக் சம்பவத்தை எடுத்துக் கூறியவராய்க் கதறி அழுதார்.

பத்து தினங்கள் படை நடப்புச் செய்து மதீனாவுக்கு 350 மைல் தொலைவிலுள்ள தபூக் என்னும் சிறு நகரை அடைந்தார்கள். இது ஷாம் (சிரியா) மாகாண எல்லைக்கு அருகிலுள்ள பட்டணமாகும். இங்கு பெருமானார் (ஸல்) தங்கள் படையைப் பாளையமிறக்கினார்கள். முஸ்லிம்களின் பெரும்படை வருவதையறிந்த சிரியாவின் கவர்னரான ஹாரிஸ் கஸ்ஸானீ தனது படையைத் திருப்பியழைத்துச் சென்று விட்டதாக ஒற்றவர்கள் மூலம் தெரியவந்தது. தலைநகரில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக பைஸான்தியப் படையெடுப்பு கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும், தபூக்கில் இருபது நாட்கள் தங்கி ரோமானியப் படையை எதிர்பார்த்ததில் அது வரவில்லை.

அண்ணலார் தபூக்கில் தங்கிய நாட்களில், காலத்தை வீணாக்காது காலித் இப்னு வலீத் போன்ற தளபதிகளின் தலைமையில் வீரர்களைப் பல பாகங்களுக்கும் அனுப்பி பல சிற்றரசர்களையும் கோத்திரத் தலைவர்களையும் இஸ்லாத்தின்பால் அழைத்தும் அல்லது இஸ்லாமிய ஆட்சியை அங்கீகரிக்க முன் வருமாறும் கூறியனுப்பினார்கள். அதற்கொப்பப் பலர் இஸ்லாத்தை ஏற்றனர். பல யூத, கிறிஸ்தவச் சிற்றரசர்கள் இஸ்லாமிய ஆட்சிக்குக் கட்டுப்பாடு கப்பம் செலுத்தி வருவதாக ஒப்புக்கொண்டு உடன்படிக்கைகள் செய்து கொண்டனர். இவர்களில் ஐலா (அக்ரபா)வின் சிற்றரசன் யூஸன்னா இப்னு ருபாவும், து.்.மத்துல் ஜந்தல் கவர்கனர் உகைதிருவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

முற்காலத்தில் ஐலாவின் மக்கள் இறைவனுடன் மேற்கொண்ட உடன்பாட்டுக்கு விரோதமாகப் பேராசைப்பட்டு ‘சபாத்’ (சனிக்கிழமை ஓய்வு) நாளில் மீன் பிடித்ததின் காரணமாகப் பன்றிகளாகவும், குரங்குகளாகவும் உருமாற்றப்பட்டு மாண்டொழிந்ததாகக் குர்ஆன் 2:65-ல் கூறப்படுகிறது.

து.்.மத்துல் ஜந்தலின் ஆட்சியாளன் உகைதிர் பின் அப்துல்மலிக் அல் கிந்தீ ஒரு கிறிஸ்தவன். பெருமானார் காலிது (ரலி)க்குக் கொடுத்த குறிப்பின்படி, அவன் கோடை கால இரவின்போது தன் மனைவியுடன் நிலாவொளியில் அரண்மனையில் உப்பரிக்கையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது காட்டுப் பசுக்கள் வந்து கோட்டைச் சுவரைத் தங்கள் கொம்புகளால் குத்தி உரசிக் கொண்டிருந்தன. மனைவியின் சொற்கேட்டு அப்பசுக்களை விரட்டுவதற்காக உகைதிர் தனது பரியின் மீதேறி கோட்டைக்கு வெளியில் வந்து அவற்றைத் துரத்திச் சென்றான். அது சமயம் காலித் (ரலி) தம் குதிரை வீரர்களுடன் போய் அவனை வளைத்துப் பிடித்துப் பெருமானாரிடம் கொண்டு வந்தார்கள். உகைதிர் கப்பங்கட்டி வர ஒப்புக் கொண்டு விடுதலை பெற்றுச் சென்றான். பின்னர் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.

திருத்தூதரவர்கள் தபூக்கைக் கடந்து சிரியா எல்லைக்குள் சென்று தாக்கத் தேவையில்லை என்ற ஹலரத் உமர் அவர்களின் ஆலோசனையை ஏற்றுப் படையை அழைத்துக் கொண்டு மதீனா திரும்பினார்கள். இப்போர் நடவடிக்கையில் சுமார் 40

தினங்கள் கழிந்தன. இது பற்றித் திருக்குர்ஆன் 9வது அத்தியாயம் 6,7வது பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாதர் (ஸல்) தபூக்கிலிருந்து மதீனா வந்து சேர்ந்ததும், எப்போதும் போல் நேரே பள்ளிக்குச் சென்று இரண்டு ரகஅத் நபில் தொழுதுவிட்டு அங்கு வந்திருந்தோருக்குப் பேட்டி அளித்தார்கள். அப்போது யுத்தத்திற்குச் செல்லாது வேண்டுமென்றே மதீனாவில் தங்கிக் கொண்ட சுமார் 80 முனாபிக்குகள் நபிகள் நாதரிடம் வந்து பலவித நொண்டிச் சமாதனங்களைக் கூறினர். அண்ணலார் பெருந்தன்மையோடு அவற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், இஸ்லாத்தில் மிக்க உறுதியும் ஈடுபாடும் கொண்ட சில முஹாஜிர்களும் அன்சாரிகளும் சுயநலம் காரணமாக படையில் செல்லாது பின் வாங்கியது தான் பெருமானாருக்குப் பெரிதும் மனவேதனையை அளித்தது. எனவே, இவர்களுடன் முக்கியமாக அகபா உடன்படிக்கையின் போது இஸ்லாத்தைத் தழுவிய கஅப் இப்னு மாலிக், பத்ருப் போரில் பங்கு கொண்ட முராரா இப்னு ருபய்யி, ஹிலால் இப்னு உமய்யா ஆகிய மூவருடன் முஸ்லிம்கள் எவ்விதப் பேச்சும் தொடர்பும் வைத்துக் கொள்ளலாகாது என ஆக்ஞாபித்தார்கள். இத்தகைய பகிஷ்காரத்தின் காரணமாக அவர்கள் முஸ்லிம்களுடன் கூடி உறவாட முடியாமல் திண்டாடினர். இந்நிலை நீங்க அவர்கள் மனங்கசிந்து கண்ணீர் உகுத்து இறைவனிடம் அல்லும் பகலும் மன்னிப்புக் கோரி வந்தனர். ஐம்பது தினங்களுக்குப் பின் இறைவன் அவர்களை மன்னித்துத் திருவசனம் வெளியாக்கி பகிஷ்காரத்தை நீக்க வகை செய்தான். அக்கணமே அவர்கள் உலக ஆசாபாசங்களுக்குக் காரணமாயிருந்த தங்களின் சொத்துப்பற்று, சுற்றம் அனைத்தையும் இஸ்லாத்திற்காகத் தியாகம் செய்து பரிசுத்தமாக்கிக் கொண்டனர்.

**இப்னு உபையின் மரணம்**

அப்துல்லாஹ் இப்னு உபை என்னும் நயவஞ்சகன் நபிகள் நாதருக்கு இழைத்து வந்த கெடுதிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றில், முஸ்லிம்களைப் பிளவுபடுத்தும் எண்ணத்தில் கஸ்ரஜ் வர்க்கத்தைச் சேர்ந்த அபூ ஆமிர் ராகிப் என்பவனின் பொருளுதவியால் புதிதாக மஸ்ஜிதெ ஜிரார் என்னும் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டி முடித்தான். பின் அவனும் மற்ற சில முனாபிக்கீன்களும் பெருமானார் தபூக் புறப்படவிருந்த நேரத்தில் அவர்களை அணுகி, “நோயாளிகள், தேவையுற்றோருக்காகவும் கால நிலை சரியில்லாத இரவுகளிலும் தொழுது கொள்வதற்காக நாங்கள் வசிக்கும் பகுதியில் பள்ளிவசால் ஒன்றைக் கட்டி முடித்திருக்கிறோம். அதில் தாங்கள் வந்து தொழுது, எங்களுக்காக துஆச் செய்து ஆரம்பித்து வைக்க வேண்டும்” என நயவஞ்சகமாக விண்ணப்பித்துக் கொண்டனர். இச்சூதினை அறியாத திருத் தூதரவர்கள் அப்போது அவகாசமில்லாததால், தபூக்கிலிருந்து திரும்பிய பின் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாகச் சொன்னார்கள். அப்பள்ளி, சூதின் இருப்பிடமாக கட்டப்பட்டிருப்பதாக, அண்ணலார், மதீனாவுக்கு அருகாமையில் தூஅவான் என்னுமிடத்திற்கு வந்தபோது இறைவனிடமிருந்து 9:107, 108 திருவசனங்களைக் கொண்டு எச்சரிக்கை கிடைத்தது. ஆகவே, தபூக்கிலிருந்து மதீனா திரும்பியதும் அப்பள்ளியைச் சுட்டெரிக்குமாறு மாலிக்

பின் அல்துக்ஷுமையும், மஅன் அதீயையும் கட்டளையிட்டார்கள். அவ்வாறே அது கொளுத்தப்பட்டு இன்றளவும் குப்பை மேடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது அப்துல்லாஹ் இப்னு உபைக்கு அந்திம காலம் நெருங்கி, கடும் நோயுற்று மரணப்படுக்கையில் கிடந்தான். கருணை வடிவான நபிகள் பெருமான், இறைவனுக்கும் இஸ்லாத்திற்கும் அவன் ஜென்ம விரோதி என்பதையும் பாராட்டாது, அவனது இல்லம் ஏகி இதமாக மொழிகள் பகர்ந்து ஆறுதல் கூறி வந்தார்கள். அத்தருணத்திலும் கூட அவன் தனது சூதான எண்ணத்தைக் கைவிட்டானில்லை. ஆனால் இது அவனது பத்தாண்டு கால துரோகச் செயல்களுக்கு பாவ மன்னிப்புத் தேட முயன்ற சூழ்ச்சியாக அமைந்திருந்தது. பெருமானார் தன்னை விட்டு அகன்றதும் தன் மகனைப் பின்னால் அனுப்பி, தனது பிரேதத்தின் மீது போர்த்துவதற்கு அவர்களின் புனித மேலங்கியைப் பெற்று வருவதுடன், விண்ணும் மண்ணும் போற்றும் அந்த வித்தகத் திருநபியவர்களே தன் பிரேத தொழுகையை முன்னின்று நடத்தித் தன் ஆத்மசாந்திக்காக துஆ இறைஞ்சவும் இணக்கம் பெற்று வருமாறும் ஏவினான். இப்னு உபைின் மகன் அண்ணலாரின் அன்புத் தோழர்களில் ஒருவர். எனவே, அவ்விரு கோரிக்கைகளையும் அகிலமனைத்திற்கும் அருட்கொடையாகத் தோன்றிய, ஆண்டவனின் திருத்தூதரவர்கள் அட்டியின்றி ஒப்புக் கொண்டார்கள். உமர் (ரலி) அவர்கள் ஆட்சேபித்தும் அவற்றை அவ்விதமே நிறைவேற்றவும் செய்தார்கள். இதுவே அப்துல்லாஹ் இப்னு உபை இறந்த அன்றைய தினமே நயவஞ்சகர்கள் அனைவரும் உண்மை விசுவாசிகளாக மாற்றியமைத்த மாமருந்தாக அமைந்தது. அப்துல்லாஹ் இப்னு உபை ஹிஜ்ரி 9, ஷவ்வால் மாதம் நோய் கண்டு துல்கஃதாவில் (கி.பி. 631 பிப்ரவரி) மரணமடைந்தான்.

மக்காவும், கஃபத்துல்லாஹ்வும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததின் பின், அண்ணலாரின் ஆற்றலையும் அதிகாரத்தையும் அரேபியாவின் அனைத்து வர்க்கத்தாரும் ஐயமற அறியலாயினர். அரேபியாவில் எவரும் அடைந்திராத மகோன்னத அந்தஸ்தையும் செல்வாக்கையும் அவர்கள் பெற்று விளங்கினார்கள். முஸ்லிம்களை இனிப்புறக்கணித்து வாழ முடியாதென்ற நிலை மக்களிடையே ஏற்பட்டு விட்டது. இந்நிலையில், ஹிஜ்ரி 9, 10வது ஆண்டுகளில் பல கூட்டத்தார் பெருமானாரிடம் வந்து விவாதங்கள் புரிந்தும் கருத்துக்கள் பரிமாறியும் மன நிறைவு கொண்டு இஸ்லாத்தில் இணைந்தனர். சில கூட்டத்தார் எதிர்த்துத் தோல்வி கண்டு தப்ப வகையின்றி இஸ்லாத்தை ஏற்றனர். ஆகவே, மக்கா வெற்றிக்குப் பின் அரேபியாவின் அரசியல் ஆதிக்கம் முழுவதும் முஸ்லிம்களின் கைக்குக் கீழ் வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். யமன், பஹ்ரைன், சிரியா, பாரசீகம், இராக் முதலான நாடுகளில் இருந்தெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக மதீனாவுக்கு வந்து இஸ்லாத்தை ஏற்றனர்.

## முதல் ஹஜ்

தபூக் படையெடுப்புக்குப் பின் இப்னு உபையின் மரணத்தை அடுத்து ஹஜ்ஜுடைய நாள் நெருங்கி விட்டது. துல்ஹஜ் மாதத்தை இபுறாகீம் நபி காலத்திலிருந்தே அராபியர்கள் மிக்கப் புனிதமானதாகக் கொண்டாடி வந்தனர். அம்மாதத்தில் அவர்கள் மக்காவுக்கு யாத்திரை வந்து கஃபாவை இடம் சுற்றித் தரிசித்துச் செல்வது அவர்களின் தொன்று தொட்ட வழக்கமாக இருந்து வந்தது. கஃபாவிலிருந்த விக்கிரகங்கள் அனைத்தும் இப்போது அகற்றப்பட்டுப்

பரிசுத்தப்படுத்தப்பட்ட பின்னரும், உருவ வழிபாட்டுக்காரர்களான அரபிக்காபிர்கள், மக்காவுக்கு யாத்திரை வந்து புராத சம்பிரதாயப்படி கிரியைகளைச் செய்வதும், க.்.பாவை நிர்வாணமாக வலம் சுற்றுவதும் நின்றபாடாக இல்லை.

எனவே, இஸ்லாத்திற்குப் புறம்பாக க.்.பாவில் நடக்கும் ஆபாசங்களை நீக்கிச் செம்மைப்படுத்தப் பெருமானார் தீர்மானித்தார்கள். அதன்படி ஹிஜ்ரி 9ம்ஆண்டு துல்க.்.தா மாதம் இறுதியில் கி.பி. 631 மார்ச்சு ஹலரத் அபூபக்கர் அவர்களின் தலைமையில் பல கோத்திரத்தாரிலிருந்தும் 300 பேரைத் தேர்ந்து ஹஜ் செய்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். இக்குழு மதீனவை விட்டும் புறப்பட்ட பின், ஹஜ் பற்றிய 8:28 மற்றும் இறை வசனங்கள் வெளியாயின. அவற்றை இந்த ஹஜ்ஜின் போது, ஹலரத் அலீ அவர்களைக் கொண்டு மினாவில் குர்பானி தினத்தன்று பிரகடனப்படுத்துமாறு கூறி, ஹலரத் அபூபக்கர் அவர்களுக்குப் பெருமானார் செய்தி அனுப்பினார்கள். அத்துடன் ஹஜ் செய்ய வேண்டிய முறைகளை மக்களுக்குக் கற்பிக்குமாறு, ஹலரத் அபூபக்கர் அவர்களிடம் சொல்லுமாறும் கூறியனுப்பினார்கள். இந்த ஹஜ்ஜை இறைவன் தன் திருமறையில் “ஹஜ்ஜுல் அக்பர்” (உயர்வான யாத்திரை) எனக்குறிப்பிடுகின்றான். ஹலரத் அலீ அவர்கள் ஹஜ் குழுவை வழியில் கண்டு அதனுடன் சேர்ந்து கொண்டார்கள்.

ஹஜ்ஜுக்குரிய சம்பிரதாயங்கள் அனைத்தும், வந்திருந்த முஸ்லிம் யாத்ரிகர்களுக்குப் போதிக்கப்பட்டுச் சரிவர நிறைவேற்றிய பின்னர், வந்திருந்தவர்கள் அனைவரும் நன்கு அறியும் விதமாக ஹலரத் அலீ அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலம் தந்தனுப்பிய திருவசனக் கட்டளைகளை மினாவில் பிரகடனஞ் செய்தார்கள்.

1. முஸ்லிம் அல்லாதாருடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளிலிருந்து அல்லாஹ்வும் - அவன் திருத்தூதரும் விலகிக் கொண்டனர்.
2. முஸ்லிம் அல்லாதார் நான்கு மாத காலத்துக்குள் அல்லாஹ்வின் தூதருடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். அதற்குப் பின் அம்மக்களுடைய பாதுகாவல் முஸ்லிம்களின் பொறுப்பில் இராது.
3. முஸ்லிம் அல்லதார் இனி க.்.பா ஆலயத்துக்குள் நுழைய உரிமை கிடையாது.
4. இனி, யாரும் நிர்வாணமாகக் க.்.பாவை இடம் சுற்றக்கூடாது.

இப்பிரகடன் அரேபியாவில் நிலவிய விக்கிரக வணக்கத்திற்கு இறுதிக் கல்லறைச் சடங்காக அமைந்தது.

பொதுவாக அரபு நாடெங்கிலும், குறிப்பாக மக்கா மதீனாவிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இஸ்லாமிய ஆட்சி நிலைபட்டதின் பின்னர், அதன் எல்கைக்குள் விக்கிரக வணக்கவாதிகள், சிறு சிறு கூட்டங்களாக இருந்து கொண்டு, ஆட்சிக்குள் ஆட்சியாக அதிகாரம் செலுத்திக் கொண்டிருப்பதை, இனியும் அனுமதித்துக் கொண்டிருப்பது இயலாததாகி விட்டது. அது இஸ்லாமிய ஆட்சி, சரிவரத் தனது சட்ட திட்டங்களை அமலாக்குவதற்குத் தடைக்கல்லாய்க் காணப்பட்டது. எனவே தான், இறைவனும் காலங்கனிந்தவுடன் மேற்கண்டவாறு தன்

திருவசனங்களை வெளியாக்கி, விக்கிரகத் தொழும்பர்களின் ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டான்.

இவ்வறிக்கையை செவிமடுத்த யாத்திரிகர்கள் தத்தம் ஊர் திரும்பி, அதனை மக்களிடம் எடுத்துக்கூறினர். அதனால் இஸ்லாமிய ஆட்சியின் பாதுகாப்பை விழைந்தவர்கள் இஸ்லாத்தை வலிந்து ஏற்றனர். ஹலரத் அபூபக்கர் அவர்களும் ஹலரத் அலீ அவர்களும் ஹஜ் யாத்திரையைச் சிறப்புடன் முடித்துக் கொண்டு வெற்றிகரமாக மதீனா திரும்பினர்.

இந்த ஹஜ்ஜுக்குப் பின்னர் தான் ஹிஜ்ரி 10, முஹர்ரம் மாத ஆரம்பத்தில் முஸ்லிம்களுக்கு ஜக்காத்தை விதியாக்கி இறைவசனங்கள் வெளியாயின. அதன்பின் இஸ்லாத்தைப் பரப்பவும், எதிர்ப்பவர்களைக் கட்டுப்படுத்தவும், நபிகள் பிரான் பல பகுதிகளுக்கும் தோழர்களையும், வீரர்களையும் அனுப்பினார்கள்.

**பாலகர் இபுறாகீம்**

ஹிஜ்ரி 8ம் ஆண்டு இறுதி, பெருமானாரின் திருப்புதல்விகளில் ஹலரத் உதுமான் அவர்களின் மனைவியர் ருக்கையா, உம்மு குல்தூம் ஆகிய இருவரும் ஏற்கனவே காலமாகி விட்டார்கள். அபுல் ஆஸ் அவர்களின் மனைவி ஜைனபும் இப்போது காலமாகி விட்டார். எஞ்சியிருப்பது பாத்திமா நாயகி மட்டுமேயாம்.

பெருமானார் மக்காவிலிருந்து திரும்பிய பின், தங்கள் புதல்வியரின் மரணத்தால் கவலையுற்றிருந்த நேரத்தில், எகிப்து மன்னரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுத் தாம் மணமுடித்துக் கொண்ட மாதரசி மாரியா கிப்திய்யாவுக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. அவ்வழகு திருமகனுக்குப் பெருமானார் (ஸல்) இப்ராஹீம் எனப் பெயர் சூட்டி மிக்கப் பிரியமுடன் போற்றி வளர்த்தார்கள்.

இப்றாஹீம் ஒன்றரை வயதை அடைந்த போது அச்செல்வக் குழந்தை நோயுற்று இறந்து விட்டது. அதற்காக அண்ணலாரவர்கள் ஆறாத் துயரடைந்து மிகவும் அழுது துக்கப்பட்டார்கள்.

அன்றைய தினம் தற்செயலாகச் சூரிய கிரகணம் ஏற்பட்டது. இது பெருமானாரின் அன்புத் திருமகன் இப்ராஹீமின் மரணத்தாலேற்பட்டதாக, மக்கள் இரண்டுக்கும் பாலமிட்டு இணைத்தும் பேசத்தலைபட்டனர். இதைக் கேள்வியுற்ற நபிகள் (ஸல்) "சூரியனையும் சந்திரனையும் சிருஷ்டித்துள்ள இறைவன் அவற்றையும் இயக்க முறைகளையும் திட்டப்படுத்தியுள்ளான். கிரகணங்கள் ஏற்படுவது இயற்கையின் நியதிப்படியே அல்லாது, யாருடைய பிறப்பு, இறப்பின் நிமித்தமாகவும் நிகழுவதில்லை. அவ்வாறாகக் கருதுவது அறியாமையும், இறை நம்பிக்கைக்கு இடையூறு விளைவிப்பதுமாகும்" எனக் கண்டித்துக் கூறி, மக்கள் மனத்திலிருந்த மௌட்டீகத்தை விரட்டியடித்தார்கள். இச்சூரிய கிரகணம் கி.பி. 632 ஜனவரி 27ல் ஹிஜ்ரி 10, ஷவ்வால் பிறை 28 திங்கட்கிழமை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

**இஸ்லாமிய ஆட்சி**

அரேபியாவில் இப்பொழுது முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும், முஸ்லிமல்லாதார் சிறுபான்மையினராகவும் மாற்றம் ஏற்பட்டு விட்டது. சிறுபான்மையினரில் யூதர்கள், கிறிஸ்தவர்கள், பல தெய்வ வணக்கக்காரர்கள் ஆகியோர் இருந்தனர். ஆட்சி முஸ்லிம்களின் கைக்கு மாறி அவர்களின் பொறுப்பில் நடைபெறுவதால் எல்லா மக்களின் உயிர், உடைமைகளைப் பாகுபாடின்றிப் பாதுகாக்கும் பொறுப்பு முஸ்லிம் அரசைச் சார்ந்ததாகிவிட்டது. அதனால், மதீனாவைத் தலைநகராகக் கொண்டு மக்களின் தேசீய வாழ்க்கை பரிணமிப்பதற்கான சூழ்நிலை ஹிஜ்ரி 10ம் ஆண்டு கி.பி. 631ல் உருவாகியிருந்தது.

அந்நியர் படையெடுப்புகளை எதிர்க்க வேண்டியதும், முறியடிக்க வேண்டியதும் இப்போது முஸ்லிம் வீரர்களைக் கொண்டுதான் செய்ய வேண்டியதாக இருந்தது. முஸ்லிம் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு முஸ்லிம் அல்லாதாரைப் படையில் சேருமாறு நிர்ப்பந்தித்தல் தர்ம நியாயமற்ற தெனப் பெருமானார் கருதினார்கள். அன்றியும் இது ஐந்தாம்படை உருவாகும் அச்சத்தையும் கிளப்பியது.

பாதுகாப்புப் படை பராமரிப்பிற்கும் உள்ளாட்சி நிர்வாகத்திற்கும் அரசாங்கப் பொது நிதி என்ற “பைத்துல்மால்” தேவைப்பட்டது. இதற்காக முஸ்லிம்கள் தங்கள் சொத்து மதிப்பு, வருமான மதிப்புகளில் வருடத்திற்கு இரண்டரை சதவிகிதம் ஜக்காத் கொடுத்து வர வேண்டுமென்ற இறை கட்டளைகளையும் வெளியாகி விட்டது. முஸ்லிம் அல்லாதாருக்கு அளிக்கப்படும் உயிர், சொத்து பாதுகாப்பு, வாழ்க்கை வசதிகளுக்காக அவர்கள் அரசுக்கு ‘ஜிஸ்யா’ என்னும் நபர் வரி செலுத்துவது அவசியம் என்ற இறை கட்டளையும் வெளியாகி விட்டது. இவ்வரி வசூல்களுக்கெனச் சிப்பந்திகளை அரசு நியமிப்பதும் அவசியமாயிற்று. இவர்கள் அரசு ஊதியம் பெறும் முழுநேர ஊழியர்களாகப் பணிபுரியலாயினர்.

ஜிஸ்யா வரியை வசூலித்து வருவதற்காக பனூதமீம் கூட்டத்தாரிடம் பெருமானார் தங்கள் ஆட்களை அனுப்பி வைத்தார்கள். இவர்களை அக்கூட்டத்தார் அடித்துத் துரத்தி விட்டனர். அண்ணலாருக்கு விவரம் தெரிந்ததும் ஐம்பது குதிரை வீரர்களை அங்கு அனுப்பினார்கள். இவ்வீரர்கள் பனூ தமீம் கூட்டத்தாரைத் தாக்கி ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக ஐம்பது பேரைச் சிறைப்பிடித்துக் கொண்டு மதீனா திரும்பினர்.

கைதிகளை மீட்டுச் செல்வதற்காகத் தமீம்களில் முக்கியஸ்தர்களான தொண்ணூறு பேர் மதீனாப் பள்ளிவாசலுக்கு வந்தனர். அங்கு நின்றுகொண்டு திருத்தூதரவர்களின் பெயரைச் சொல்லி கூவியழைத்தனர். பெருமானார் வீட்டைவிட்டு வெளியே வந்ததும், அவர்களை நோக்கி, “உம்மோடு வாக்குவன்மை கவித்திறன் இவற்றில் சொற் சிலம்பம் ஒன்றை நடத்தி, எங்கள் பெருமையை உமக்கு அறிவிக்க இங்கு வந்துள்ளோம்”, எனக் கூறினார். அதற்கு நபிகள் பிரான், “நல்லது, அப்படியே செய்வோம்” எனக் கூறியனுப்பினார்கள். நண்பகல் தொழுகைக்குப் பின், பள்ளிவாசல் முற்றத்தில் வீற்றிருந்து கொண்டு, தமீம் கூட்டத்தாரை அழைத்துவரச் சொல்லி அவர்களின் மகிமைப் பிரதாபங்களை பட்டு விரிக்கச் சொன்னார்கள்.

அவர்களில் வாக்குவன்மை மிக்கவரான உதாரித் பின் ஹாஜிப் என்பவர் எழுந்து, இறைவனைப் புகழ்ந்து கீழ் நாட்டு மக்களனைவரிலும் ஈடானவர்கள் இப்பூமண்டலத்தில் எவருமில்லையெனவும் கூறி அமர்ந்தார். பெருமானார், தாபித் இப்னு கைஸ் என்பவரைப் பதில் கூறுமாறு பணித்தார்கள். தாபித் எழுந்து இறைவனைப் புகழ்ந்து, அவன் அருள்கூர்ந்து தங்களிலே சிறந்த ஒருவரைத் தீர்க்க தரிசியாக அனுப்பி, வேதத்தையும் இறக்கியருளினான் என்றும், அத்திருத்தூதரின் அழைப்புக் கிணங்க, நாங்கள் இஸ்லாத்தைத் தழுவி ஏற்றமடைந்திருப்பதாகவும் எடுத்துக் கூறினார். பின்னர், தமீம்களில் அல்ஜிப்ரி கான் பின் பத்ரு என்பவர் எழுந்து தம் பாட்டுத் திறனைக் காட்டினார். அதற்கு முஸ்லிம் புலவர், ஹஸ்ஸான் இப்னு தாபித் என்பவர் தக்க எதிர்ப்பாட்டொன்றைப் பாடிப் பதிலளித்தார், முஸ்லிம்களின் சொல்லழகும் நயமும் கொண்ட பதில்களைக் கேட்ட அக்கூட்டத்தார், வியப்பிலாழ்ந்து, தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு இஸ்லாத்தைத் தழுவினர். பெருமானாரவர்கள் அக்கூட்டத்தாருக்கு அன்பளிப்புகள் பல வழங்கி, பெருமைப்படுத்தி, சிறைப்பட்டவர்களையும் விடுதலை செய்து அனுப்பி வைத்தார்கள்.

**உர்வாவின் உயிர்த் தியாகம் :**

தாயிபிலுள்ள பனூ தகீப் கூட்டத்தாரில் உர்வா பின் மஸ்ஊத் என்ற ஒரு பிரமுகர் இருந்தார். இவர் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது, குறைஷிகளின் சார்பில் பெருமானாரிடம் தூது வந்தவர், நாளடைவில் இஸ்லாத்தின் மீது பற்று கொண்டு, இஸ்லாத்தைத் தழுவி மதீனா சென்று, அங்கேயே இருந்து வந்தார். இவர் ஒரு நாள் அண்ணலாரை அணுகித் தம் கூட்டத்தாரிடம் சென்று இஸ்லாத்தை எடுத்துக்கூறி, அவர்களை அதில் சேர்ப்பதற்கு அனுமதி கோரினார். அதற்கு அன்புத் திருநபியவர்கள், தகீப் கூட்டத்தார் பிடிவாதமும், இஸ்லாத்தின் மீது வெறுப்புணர்ச்சியும், வெறிப்போக்கும் கொண்டவர்களெனவும், உர்வாவுக்கு பிரணாபத்தை விளைவிப்பவரெனவும், கூறி, அங்கு போக வேண்டாமெனத் தடுத்தார்கள். எனினும், தமக்குத் தம் மக்களிடம் செல்வாக்கிருப்பதால், அசம்பாவிதம் ஏதும் நேராதெனச் சமாதானங் கூறியவராய் உர்வா தாயிப் புறப்பட்டு சென்றார்.

அங்கு தம் கூட்டத்தாரிடை இஸ்லாத்தைப் பற்றி ஏற்றமாகக் கூறி, விக்கிரக வணக்கத்தை வெளிப்படையாகத் தாக்கிப் பேசத் தலைப்பட்டார். தாயிப் மக்கள் உர்வாவிடம் ஓரளவு அன்பும், மதிப்பும், மரியாதையும் வைத்திருந்த காரணத்தால் இவரின் தாக்குதல்களை ஒருவாறு சகித்துக் கொண்டு வாளாவிருந்தனர். இதனைக் கண்டு ஊக்கமடைந்தவராய் உர்வா ஒரு நாள் அதிகாலையில் ஒரு வீட்டின் முகட்டின் மீது ஏறி நின்று, உரத்த குரலில் பாங்கு சொல்லி மக்களைத் தொழுகைக்கு அழைத்தார். சகிப்பு அதன் விளிம்பைத் தாண்டி விட்டதால், ஆத்திரங் கொண்ட அம்மக்கள் அவ்வீட்டைச் சூழ்ந்து கொண்டு பல பக்கத்திலிருந்தும் அம்புகளால் எய்யத் துவங்கினர். எண்ணற்ற அம்புகளைத் தம் உடலில் வாங்கிக் கொண்ட உர்வா, தாம் இஸ்லாத்திற்கு அருந்தியாகம் புரிந்ததாக திருப்தியுற்ற நிலையில் ஆருயிரை விட்டார்.

**பனூ தகீப்**

உர்வாவைக் கொன்று விட்டுத் தகீப் கூட்டத்தார் சில மாதங்கள் வாளாவிருந்தனர். பெருமானார் தபூக்கிலிருந்து திரும்பிய பின்னர். இஸ்லாத்தை

இனியும் எதிர்ப்பது இயலாத காரியம், அது பயனற்றது எனக் கண்டு அதனைத் தழுவி முஸ்லிம்களாகி விட முடிவு செய்தவர்களாய், பன்னிரண்டாடுகட்கு முன், குறும்புக்காரப் பொடிகளை ஏவி, அண்ணலாரின் பொன்மேனி மீது கல்லெறியச் செய்து, இரத்தம் சிந்த வைத்து அப்துயாலீல் பின் அமர் தலைமையில் அவர்களின் பிரமுகர்களில் பலர் மதீனா வந்து பள்ளிவாசல் முற்றத்தில் கூடாரமடித்துச் சில நாள் தங்கினர். இஸ்லாத்தைச் சேருவதானால், தங்களுக்குச் சில விஷயங்களில் பிரத்தியேகச் சலுகை காட்டி, விதிவிலக்கு அளிக்க வேண்டுமெனக் கோரினர்.

முதல்படியாக, விவாகம் ஆகாதவர்கள் விலைமாதருடன் வாழ்வதற்கும், வட்டித் தொழில் புரிவதற்கும், மது தயாரித்து விற்பதற்கும் அனுமதி கோரினர். இந்தக் கோரிக்கைகளுக்கு விளக்கம் கூறிப் பெருமானார் நிராகரித்தார்கள். அடுத்த படியாக, தங்களின் குலதெய்வ விக்கிரகங்களையாவது வீடுகளில் வைத்துக் கொள்ள அனுமதிக்குமாறு கோரினர். இதுவும் அவ்வாறே விளக்கத்தோடு மறுக்கப்பட்டது. விக்கிரகங்களை அகற்றி அழித்தொழிப்பதற்கு 3,2,1, அரை, கால் சுருடத் தவணைகள் கோரப்பட்டு, அவையும் மறுக்கப்பட்டன. தொழாமல் இருந்து கொள்ளவாவது தங்களை அனுமதிக்க வேண்டுமெனக் கோரினர். அவ்வாறானால், அவர்கள் இஸ்லாத்தில் சேர்வதில் பயனேதுமில்லை என எடுத்துக்காட்டப்பட்டது.

இறுதியாக ஜக்காத் கொடாதிருப்பதும், ஜிஹாதில் கலந்து கொள்ளாதிருப்பதற்கும் அனுமதி கோரினர். அது அவர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது. காரணம் “இஸ்லாம் அவர்களின் மனதுகளில் வேரூன்றியதும் அவர்களே வலிந்து, அவற்றை நிறைவேற்ற முன்வருவர்” எனப் பெருமானார் சமாதானங் கூறினார்கள். அதன் பின், பனூ தகீப்கள் அனைவரும் இஸ்லாத்தில் சேருவதற்கு முன் வந்து பெருமானார் முன்னிலையில் கலிமாச் சொல்லி முஸ்லிம்களாயினர். அப்போது ரமலான் மாதமாக இருந்ததால் அவர்களும் மற்றவர்களைப் போல் நோன்பு நோற்றுப் பெருநாளை மதீனாவில் கொண்டாடி விட்டுத் தாயிபுக்குத் திரும்பி சென்றனர். அவர்களுடன் அபூசுப்யானையும், தகீப் வகுப்பைச் சேர்ந்த உர்வாவின் சகோதரர் மைந்தர் அல் முகீரா பின் ஷு:.பாவையும் பெருமானார் (ஸல்) அனுப்பி, அவர்கள் பெரிதும் போற்றிக் கொண்டாடிய, “அல்லாத்” என்னும் பெண் விக்கிரகத்தை உடைத்தெறியச் செய்தார்கள். மதீனாவாசிகள் “மனாத்” என்னும் விக்கிரகத்தையும், தாயிப்வாசிகள் “லாத்” என்னும் விக்கிரகத்தையும், மக்காக் குறைஷிகள் “ஹுபல் “உஸ்ஸா” ஆகிய விக்கிரகங்களையும் தங்கள் குலதெய்வங்களாகக் கொண்டாடி வந்தனர்.

**நஜ்ரான் பாதிரிகள்**

அறுபது கிறிஸ்தவப் பாதிரியார்களைக் கொண்ட குழு ஒன்று அப்துல் மஸீஹ், அப்துல் ஹாரிது தலைமையில் நஜ்ரானிலுள்ள சினாய் குன்றின் அருகாமையிலுள்ள செயின்ட் காத்தரீன் மடத்திலிருந்து மதீனா வந்து சேர்ந்தது. சிலர் இப்பாதிரிகள் பதினான்கு பேர்தான் எனவும் கூறுகின்றனர். அண்ணலார் அக்குழுவினரை அன்புடன் உபசரித்து மதீனாப்பள்ளி வாசலில் தங்க வைத்தார்கள். கிறிஸ்தவ சம்பிரதாயப்படி, அப்பள்ளியிலேயே வணக்கம் புரிந்து கொள்ளவும் அவர்களை அனுமதித்தார்கள். இஸ்லாத்தைப் பற்றி மிகத் தெளிவான முறையில் அவர்களுக்கு விளக்கம்

செய்தார்கள். எனினும், அது சமயம் அவர்கள் மனமாற்றம் அடையவில்லை. இறுதியாக அப்பாதிரிகள் இஸ்லாமிய அரசின் பாதுகாப்பு தங்களுக்கிருந்து வருவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை - இது ஒவ்வொன்றும் 30 திர்ஹம் மதிப்புள்ள 2000 அங்கிள் எனக் கூறப்படுகிறது – கப்பம் செலுத்தி வர அனுமதி கோரி, உடன்படிக்கை முடித்து ஊர் திரும்பினார்.

இந்தப் பாதுகாப்பு உரிமம் உலக சரித்திரத்தில் செய்து கொள்ளப்பட்ட, மனித சகிப்புத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் தஸ்தாவேஜுகளில் சிறப்பு மிக்கதாக நின்றிலங்குகிறது. இது மன விசாலத்தையும் பெருந்தன்மையையும் நிதர்சித்துக் காட்டும் ஒப்பற்ற சின்னமாகத் திகழ்கின்றது. இதில் கண்டுள்ளது போன்ற சலுகைகளையும் பாதுகாப்புகளையும் கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்த மன்னர்களிடமிருந்தும் கூடப் பெறுவது இயலாத காரியம்.

இச்சாசனத்தில் குறிப்பிட்டுள்ளவைகளில்,

1. எந்த முஸ்லிமும் இதில் உத்தரவிடப்பட்டுள்ளவற்றிற்கு மாற்றமாகவோ அல்லது மீறியோ நடந்தால், அவன் இறைவனின் வேதத்தை மீறியவனாகவும், இறை நம்பிக்கை (ஈமான்) அற்றவனாகவும் கொள்ளப்படுவான்.
2. அவன் தானும் தன் கீழுள்ளவர்களும் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கவும் அவர்களின் கோயில்கள், மடாலயங்கள் குருமார்களின் இல்லங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றவும், தீங்குகளினின்றும், விடுவிக்கவும் கடமைப்பட்டுள்ளான்.
3. அவர்கள் மீது பாரபட்சமான வரிகளை விதிக்கக் கூடாது.
4. எந்த பிஷப்பை (தலைமைக் குருவை) யும் பதவி நீக்கம் செய்யக்கூடாது.
5. எந்தக் கிறிஸ்தவனையும் அவனுடைய மதத்தைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கக்கூடாது.
6. எந்த சந்நியாசியையும் அவரிருக்கும் மடத்தை விட்டும் அப்புறப்படுத்தக் கூடாது.
7. எந்த யாத்திரீகனையும் அவன் யாத்திரையின் மீது செல்வதைத் தடை செய்யக்கூடாது.
8. பள்ளிவாசல், அல்லது முஸ்லிம்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக கிறிஸ்தவர் கோவில்களை இடித்துத் தகர்க்கக்கூடாது.
9. முஸ்லிம்கள் திருமணம் செய்து கொண்டுள்ள கிறிஸ்தவப் பெண்களை இஸ்லாத்தில் இணையுமாறு வற்புறுத்தவோ அல்லது துன்புறுத்தவோ கூடாது. அவர்கள் தங்கள் சொந்த மதத்தையே பின்பற்றிக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.
10. கிறிஸ்தவர்கள் தங்கள் மத சம்பந்தமான கோவில், மடம் போன்ற கட்டிடங்களில் மராமத்துகள் ஏற்பட்டால் அவற்றைச் சீர்படுத்தி (ரிப்பேர்)க் கொள்ளவும் அல்லது அவர்கள் மத சம்பந்தமான வேறு காரியங்களுக்கும் உதவி தேவைப்பட்டால் முஸ்லிம்கள் அவற்றை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இவ்வித உதவிகள் முஸ்லிம்கள் கிறிஸ்தவ மதத்தில் பங்கு கொள்வதாகாது. மாறாக, அவை இறைவனும் அவனது தூதரும் ஆணையிட்டுள்ள கட்டளைகளுக்கு அடிபணிவதேயாகும்.
11. அன்றியும், முஸ்லிம்கள் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்(அரசு)களுடன் போரிடுங்காலை, தங்கள் பாதுகாப்பிலுள்ள கிறிஸ்தவர்களை (மாற்று மதத்தவர்)

என்னும் காரணத்தால் வெறுப்புணர்ச்சி காட்டி எவ்வித இம்சையோ அல்லது நிர்ப்பந்தம் செய்யவோ அல்லது செய்ய நினைக்கவோ கூடாது. சில நாட்களுக்குப் பின், பாதிரிகளும் கிறிஸ்தவர்களுமாகப் பலர் நஜ்ரானிலிருந்து மதீனா வந்து இஸ்லாத்தைத் தழுவினர்.

பனூ ஸஅத் பின் பக்கர்களின் சார்பில் திமாம் பின் தஅலபா வந்து பெருமானாரைப் பள்ளிவாசலில் கண்டு "நீங்கள் உண்மையில் இறைவனின் தூதர் தானா? நிஜமாகவே, உங்களுக்கு வானவர் ஜிப்ரீல் திருக்குர்ஆன் வேதத்தை இறைவனிடத்திலிருந்து பெற்று வந்து அளிக்கிறாரா? இறைவன் ஐங்காலத் தொழுகையைக் கடமையாக்கியிருப்பது வாஸ்தவந்தானா? ரமலான் நோன்பை இறைவன் மக்கள் மீது கடமையாக்கியுள்ளானா?" என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு, ஐயந்தெளிந்து இஸ்லாத்தைத் தழுவித் தம் கூட்டத்தாரிடம் சென்று, விஷயமறிவித்தார். அன்று இரவுக்குள் ஸஅத்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாகி விட்டனர். திமாமைக் குறித்துப் பெருமானார், "இரு முன் குடுமிகள் உள்ள இவர் உண்மையாளராகயிருந்தால், நிச்சயமாக சுவர்க்கம் புகுவார்" எனக்கூறினார்கள்.

மக்காவுக்கும் மதீனாவுக்கும் மத்தியில் கிழக்காக யமன் மாகாணம் இருக்கிறது. இங்:கு பனூதை என்ற கூட்டத்தார் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு மத்தியில், ஹாத்திம் என்னும் பெயருடைய தர்மசிந்தனையாளரான கொடை வள்ளல் ஒருவர் இருந்தார். இவர் கிறிஸ்தவ சமய சார்புள்ளவர். இவரைச் சிலர் விக்கிரகத் தொழும்பர் எனவும், மற்றுஞ் சிலர் சமய சார்பற்ற ஏகேசுவரவாதி எனவும் வரைகின்றனர். இவரது வள்ளல் தன்மைக்காக அரபு நாட்டின் அனைத்து மக்களும் இவரை ஒருமித்துப் போற்றுகின்றனர். புகழ் பாடுகின்றனர். இவரும், இவரது பெருங்கொடையும் மக்களின் வாய்களில் பாக்களாகவும், பழமொழிகளாகவும் கர்ண பரம்பரைக் காதைகளாகவும், விடுகதைகளாகவும் வழங்கி நர்த்தனம் புரிகின்றன.

பெருமானார் சிறு குழந்தையாயிருந்த போது ஹாத்திம் காலமாகி விட்டார். முஹ்யித்தீன் இப்னு அரபி இவரின் வழித் தோன்றலாவார்கள். ஹாத்திம் காலமான பின் அவரின் புதல்வி அதீ என்பவர் தை கூட்டத்தின் தலைவராகி ஓர் சிற்றரசனைப் போல் வாழ்ந்து வந்தார். இவர், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்திருந்தார்.

யமனிலிருந்த முஸ்லிம்களை தை வர்க்கத்தார் மிகவும் இம்சித்து வருவதாகப் பெருமானாருக்குச் செய்தி கிடைத்தது. ஹலரத் அலீ அவர்களின் தலைமையில், இருநூறு குதிரை வீரர்களை அனுப்பி வைத்தார்கள். இதை அறிந்த அதீ தம் மனைவி மக்களை மட்டும் அழைத்துக் கொண்டு சிரியாவுக்கு ஓடி விட்டார். ஹலரத் அலீ அவர்கள் தை கோத்திரத்தாரை அடக்கிக் கட்டுப்படுத்தி விட்டுச் சிலரைச் சிறை பிடித்துக் கொண்டு மதீனாவுக்குத் திரும்பினார்கள்.

சிறை பிடிக்கப்பட்டவர்களில் ஹாத்திம் தையின் புதல்வி அதீயின் சகோதரியுமான ஸஃப்பானாவும் இருந்தாள். இவள் பெருமானாரை அணுகி "நான் கொடை வள்ளல் ஹாத்திமுடைய புதல்வி, என் சகோதரர் தங்களுக்குப் பயந்து, தம் குடும்பத்தை அழைத்துக் கொண்டு சிரியாவிற்கு ஓடி விட்டார். அதனால் தாங்கள்

எனக்கு விடுதலையளித்து, ஊருக்கு அனுப்பி வைத்துக் கருணை புரிய வேண்டும்” என இறைஞ்சி நின்றாள். இதனைக் கேட்ட நபிகள் நாதர், “உனது தந்தையிடத்தில் ஒரு முஸ்லிமுக்குரிய நற்குணங்களனைத்தும் அமைந்திருந்தன, உருவ வழிபாட்டினரின் ஆன்ம நலனுக்காகப் பிரார்த்திக்க இறைவன் என்னை அனுமதித்திருந்தால், நிச்சயம் அவருக்காக இறைஞ்சியிருப்பேன், பொறுப்புடன் உன்னை அழைத்துச் செல்ல ஆள் இருந்தால் தெரிவி, அவருடன் உன்னை அனுப்பி வைக்கிறேன்” எனக் கனிவுடன் நவின்றார்கள். அதற்கு ஸ.்.ப்பானா” என்னுடைய குடும்பத்தாரும் கூட்டத்தாரும் இங்கே சிறைப்பட்டிருக்கும் போது நான் மட்டிலும் ஊர் திரும்பி என்ன செய்வது?” என சாதுர்யமாக மீண்டும் கூறினாள். உடனே நபிகள் பிரான் (ஸல்) கைது செய்யப்பட்ட ‘தை’ கோத்திரத்தார் அனைவரையும், தோழர்கள் அனுமதியுடன் விடுதலை செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹாத்திம் தையின் புதல்வியைப் பெருமைப்படுத்தி அண்ணலார் அவளுக்குப் பிரயாணத்திற்கு ஒட்டகமும், வழிச்செலவுக்குப் பணமும், அணிவதற்கு ஆடைகளும் கொடுத்து, அவள் கூட்டத்தாருடன் அனுப்பி வைத்தார்கள். அதுபோழ்து, தங்கள் தோழர்களிடம், “அவளின் தந்தை இரக்கச் சிந்தனையாளர், கொடை வள்ளல், இத்தகையோரை இறைவன் நேசிக்கிறான், அவர்களுக்கு அருள் பாலிக்கிறான்” எனக் கூறினார்கள். ஸ.்.ப்பானா சிரியாவுக்குச் சென்று தன் சகோதரனைக் கண்டு, பெருமானாரின் பெருமையையும், பெருந்தன்மையையும், இஸ்லாத்தின் மேன்மையையும் எடுத்துரைத்தாள். அதீ, யமன் சென்று, தம் கூட்டத்தாருடன் இணைந்து பின்னர், அனைவரும் மதீனா வந்து ஹிஜ்ரி 9 ரபீயுல் ஆகிரில் (கி.பி. 630 ஜுலை) இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர். அதீ 120 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து ஹிஜ்ரி 68ல் காலமானார்.

அது சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “அதீ!. நீர் இஸ்லாத்தில் இணையாதிருந்ததற்குக் காரணம், முஸ்லிம்கள் சிறு தொகையினராயிருக்கின்றார்களே எனக் கருதியிருக்கலாம். அல்லது, முஸ்லிம்களின் விரோதிகளாயுள்ளவர்கள் பெரும் எண்ணிக்கையினராகவும் பணக்காரராகவும், அதிகாரமிக்க ஆதிக்கமுடையோராகவும் இருக்கின்றனரே எனவும் ஐயுற்றிருக்கலாம். ஆனால் உண்மையாகச் சொல்கிறேன். இன்னும் சிறிது காலத்தில் முஸ்லிம்கள் இவற்றிற்கு நேர் மாற்றமான நிலையை அடைந்து விடுவர். அப்பொழுது தானதர்மங்களைப் பெற்றுக் கொள்பவர் — ஏழைகள் - யாரும் இருக்க மாட்டார்கள். அன்றியும், ஒரு பெண் அச்சமின்றித் தன்னந்தனியே ஒட்டகையின் மீது சவாரி செய்தவளாக இராக்கிலுள்ள காதிஸிய்யா நகரினின்றும் மக்கா நகர் வந்து தன் ஹஜ்ஜை நிறைவேற்றிச் செல்லக் கூடிய, கொள்ளை, கொலை, வழிப்பறி நடவாத பயமற்ற நிலையும் ஏற்பட்டு விடும். இவை நடந்தேறுவதை நீர் விரைவில் தெரிந்து கொள்வீர். மேலும், பாபல் நகரிலுள்ள வெண்ணிற அரண்மனை, மாளிகைகளும், முஸ்லிம்களின் கைக்கு வந்து விட்டன என்ற நற்செய்தியும், விரைவில் உமக்கு எட்டும் என முன்னறிவிப்புச் செய்தார்கள். அவை அனைத்தும் அண்ணலார் கூறியவாறே அதீயின் மரணத்திற்கு முன் நடந்தேறின.

**கவிஞர் கஅப்**

கஅப் இப்னு ஜுஹைர் பின் அபூஸுலமா என்னும் புகழ் படைத்த கவிஞர் இருந்தார். இவர் புலவர் பரம்பரையில் உதித்தவர். இஸ்லாத்தையும் நபிகளாரையும் பற்றிக் கேலியும் கிண்டலுமாகப் பாட்டுப் புனைவதில் முதன்மை பெற்று விளங்கினார். இவரின் சகோதரர் புஜைர் என்பவர் ஏற்கனவே இஸ்லாத்தைத் தழுவி இருந்தார். அவர் தம் சகோதரர் கஅப் இடம், இஸ்லாத்தை இனியும் எதிர்ப்பதில் பயனில்லை. அது தீமையே பயக்கும். ஆனதால், அண்ணலவர்களை அண்மி மன்னிப்புக் கோரி இஸ்லாத்தில் சேர்ந்து கொள்ளுமாறு உபதேசித்து வற்புறத்தி வந்தார்.

கஅபைப் பெருமானாருக்கு நேரில் தெரியாது. அவரது பாடல்களின் நச்சுத் தன்மையையும் அவை மக்களிடைப் பரவுவதால் நேரும் தீமையையுங் கருதி கஅபைக் கண்ட இடத்தில் கொன்று விடக் கட்டளையிட்டிருந்தார்கள்.

கி.பி. 630 ஆகஸ்டில் ஒருநாள், கஅப் மதீனாவுக்கு வந்தார். பள்ளிக்குச் சென்று அங்கு தோழர்களுடன் வீற்றிருந்த அண்ணலவர்களை நோக்கி, "இறைவனின் திருத்தூதரே! கஅப் என்னும் புலவர் இஸ்லாத்தைத் தழுவித் தங்களிடம் வருவாராயின், நீங்கள் அவரை மன்னிப்பீர்களா"? என வினவினார். "ஆம் சந்தேகமின்றி மன்னிப்பேன்." என மறுமொழி பகர்ந்தார்கள். உழுவலன்பு கெழுமிய உத்தமத் திருநபியவர்கள், "அவ்வாறாயின் நான் தான் கஅப்" எனத் தம்மை அறிமுகப்படுத்தினார். அவ்வளவு தான், சுற்றியிருந்த தோழர்கள் அவரைத் தாக்க முனைந்தனர். நானிலம் போற்றும் நற்றவத் திருத்தூதரவர்கள் கஅபுக்குத் தீங்கேதும் நேராடு தடுத்து விட்டார்கள்.

பின்னர், கஅப், பெருமானாரின் அனுமதி பெற்று சிறியதொரு கவிதை பாடினார். அதனைப் பெரிதும் மதித்தவர்களாய் மனங்குளிர்ந்து தங்கள் தோள் மீது கிடந்த அழகிய போர்வையொன்றைக் கஅபுக்குப் பொன்னாடை யாகப் போர்த்திக் கவுரவித்தார்கள். இப்போர்வை புலவரின் குடும்பப் பரம்பரைச் சொத்தாகப் பேணிக்காக்கப்பட்டு இன்று கான்ஸ்டான்டிநோபிலுள்ள கலைப் பொருள் காட்சிக்கூடத்தில் (மியூசியம்) புனிதச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**யமன் கவர்னர் முஆத்**

தை கோத்திரத்தைக் கட்டுப்படுத்தி அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின் பெருமானார் முஆத் பின் ஜபல் என்பவரை யமன் மாகாணத்தின் கவர்னராக நியமித்து, அங்கு அனுப்பி வைத்தார்கள். அவர் அங்கு சென்று ஆளுங் காலத்தில் அமைதியுடன் பணியாற்றுமாறும், இஸ்லாத்தைத் தழுவுமாறு எவரையும் நிர்பந்திக்கக் கூடாதென்றும், அவர்களுடன் மிருதுவாகப் பழகி அவர்களின் குறையகற்ற வேண்டுமென்றும், துன்புற்றோரின் தூற்றுதலுக்குப் பெரிதும் அஞ்சி நடக்க வேண்டுமென்றும் அறிவுரை பகர்ந்தார்கள்.

மேலும், யமன் மக்களுக்கு முதலில் ஐங்காலத் தொழுகையைக் கடைப்பிடிக்குமாறு உபதேசிக்கும்படியும், அதன்பின் ஜக்காத்தைப் பற்றி உபதேசிக்கும்படியும், இஸ்லாத்தை ஏற்காதிருப்பவர்களிடமிருந்து ஜிஸ்யா வரி

வசூலிக்கும் படியும், இதில் அவர்களின் பெண்டிர், குழந்தைகள், குருடர், அங்கஹீனர், தீரா நோயாளிகள், முதியோர், புத்தி சுவாதீன மற்றோருக்கு விலக்களிக்கும்படியும் முஆதுக்கு உபதேசித்தனுப்பினார்கள். விவசாயிகள், நடுத்தர வகுப்பார், பணக்காரர் எனத் தரம் பிரித்து நபர் ஒன்றுக்கு ரூ 2 முதல் ரூ 8 வரை ஜிஸ்யா வரி வசூலிக்கப்பெற்றது. இது சாமான்கள், தானியங்கள், ஆடு, மாடு, ஒட்டகை போன்ற கால்நடைகளாகவும் பெறுமதியைக் கணக்கிட்டு வசூலிக்கப்பெற்றது.

பின்னர், முஆதை நோக்கி, "நீர் எந்தச் சட்டத்தைக் கொண்டு உம்மிடம் ஒப்படைக்கப் பெற்றிருக்கும் மக்களை ஆளுவீர்?" எனப் பெருமானார் வினவினார்கள். அதற்கு முஆத், "திருக்குர்ஆன் சட்டத்தின்படி ஆட்சி செய்வேன்", என மொழிந்தார். "அதில் நீர் விரும்பும் பிரச்சினைக்கு வழி காணாவிடில் என் செய்வீர்!" என மாநபியவர்கள் மறுவினா விடுத்தார்கள். "தாங்கள் திருவாய் மொழிந்த பொன்மொழிகளையும் செயல்படுத்திய இறைவழியையும் அனுசரித்து நடப்பேன்", என்றார் முஆத், "அவற்றிலும் உமக்கு எடுத்துக்காட்டு கிடைக்காவிட்டால் வேறென்ன செய்வீர்!" அவ்வாறாயின், இறைமறைக்கும் நபிமொழிக்கும் முரணின்றி என் சொந்த அறிவைப் பயன்படுத்திக் காரியமாற்றுவேன்" என முஆத் அடக்கமாகக் கூறினார். இது கேட்ட நபிகள் நாதர் முஆத் தங்கள் இரு கரமேந்தி, "எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே உரியன" என முறுவலித்தவாறு மொழிந்தார்கள். அதன்பின் முஆதை ஒட்டகையிலேற்றிக் கூடவே சிறிது தூரம் நடந்து சென்று வழியனுப்பி வைத்தார்கள்.

முஆத் யமனை நோக்கிச் சிறிது தூரம் சென்றதும் ஆளனுப்பி அவரைத் திரும்ப அழைத்து, "யாரிடமும் எதையும் எனது அனுமதியின்றி அன்பளிப்பாகப் பெறக்கூடாது. அவ்விதம் செய்வது திருட்டுக்கு ஒப்பாகும். தான் வாங்கியதை மறைப்பவன் இறுதி நாளில் அதை வெளிக்கொணர நேரிடும். இதை எச்சரிக்கவே உம்மைத் திரும்ப அழைத்தேன். இப்போது நீர் நலமே சென்று வருவீர்!." என விடை கொடுத்தனுப்பினார்கள், ஏந்தல் நபி.

நஜ்ரான் பிரதேச பனூ ஹாரித் பின் கஅப் வர்க்கத்தாரை இஸ்லாத்தில் அழைப்பதற்காக காலித் பின் வலீது தலைமையில் ஹிஜ்ரி 10ம் ஆண்டு ஜமாதில் அவ்வல் மாதம் படையனுப்பி, மூன்று தினங்கள் வரை அழைப்பு விடுக்குமாறும், அதை ஏற்று அவர்கள் இஸ்லாத்தில் சேர மறுத்தால் அவர்கள் மீது யுத்தம் தொடுக்குமாறும் அண்ணலார் கூறி அனுப்பினார்கள். காலித் பல பக்கங்களுக்கும் ஆட்களை அனுப்பி பனூ ஹாரித்களை இஸ்லாத்தின் பால் அழைத்த போது அவர்கள் அனைவரும் அட்டியின்றி ஏற்றுக் கலிமாச் சொல்லி முஸ்லிம்களாயினர். காலித் மதீனா திரும்பு போது அவருடன் பனூ ஹாரித் தூதுக்குழு ஒன்றும் சென்றது. தாடியில்லாமல் வெறும் மீசையுடன் காட்சியளித்த அதிலுள்ளவர்களைக் கண்டதும் பெருமானார்," இந்தியர்களைப் போன்றுள்ள இவர்கள் யார்" என வினவினார்கள்.

இம்மக்களுக்கு உபதேசம் புரியவும் மார்க்கக் கட்டளைகளைப் பேணி நடக்கச் செய்யவும் அம்ருப்னுல் ஹம்ஸ் என்பவரைப் போதகராக உடன் அனுப்பி, அதன்பின்,

கட்டளைகளை விவரித்துக் கடிதமும் அனுப்பினார்கள். அதில், ஒலு தொழுகை, ஹஜ் பற்றியும் ஜக்காத்தைப் பற்றியும் விவரித்திருந்தார்கள்.

ஜக்காத் கொடுப்பதில் யுத்தப்பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கும், விவசாயத்தில் சுனை, மழைநீர் விளைச்சலில் 10ல் ஒன்றும், இறவைத் தண்ணீர் விளைச்சலில் 20ல் ஒன்றும், இறவை 20ல் ஒன்றும், கன்று காலிகளில் 10 ஒட்டகைக்கு 2 ஆடுகளும், 20 ஒட்டகைக்கு 4 ஆடுகளும், 40 பசுக்களுக்கு ஒரு பசுவும், 30 பசுக்களுக்கு ஒரு காளை அல்லது பசுங்கன்றும், 40 ஆடுகளுக்கு ஒரு ஆடும் கொடுக்க வேண்டியது இறை கட்டளை எனவும் அதில் குறிப்பிட்டிருந்தார்கள். இதற்கும் அதிகமாகக் கொடுப்பது அதிக நன்மை பயக்கும் எனவும் கண்டிருந்தார்கள்.

ஹிஜ்ரி 8,9,10ம் ஆண்டுகளில் இஸ்லாம் ஹிஜாஸ் பகுதியைத் தாண்டி ஒரு பக்கம், யமன், பஹ்ரைன், யமாமா, பாரசீக எல்லை வரையிலும் மறுபக்கம் இராக், ஷாம் ஹல்ர மௌத் வரையிலும் பரவி நின்றது. இக்கால கட்டத்தில் அண்ணலாரை அண்மி நல்லுபதேசம் பெற்று இஸ்லாத்தைத் தங்களது சன்மார்க்கமாக ஏற்றுக் கொண்ட கூட்டத்தார் எழுபதுக்கும் அதிகம் என வரலாற்றாசிரியர்கள் வரைந்துள்ளனர்.

## இறுதி ஹஜ்

இப்போது ஹிஜ்ரி 10ம் ஆண்டு இறுதி, தம்மை இவ்வுலகுக்கு அனுப்பி வைத்த இறைவனின் திருத்தூதை ஒருவாறு நிறைவேற்றி விட்டோம். இஸ்லாம் வேரூன்றி விட்டது என்ற எண்ணம் உலக இரட்சகர், உத்தமத் திருநபி (ஸல்) அவர்களின் உள்ளத்தில் உதிக்கலாயிற்று. முதுமை, தள்ளாமையினின்றும் தங்களைக் காத்தருளுமாறு செய்த பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டதாகவும் உணர்ந்தார்கள். ஹஜ்ஜின் மாதமும் நெருங்கிக் கொண்டிருந்தது. இறுதி முறையாக மக்கா சென்று கஃபாவைத் தரிசித்து, ஹஜ்ஜை நிறைவேற்றி தூதுக்கு இறுதி வடிவங் கொடுத்து வருவதெனத் தீர்மானித்தார்கள். இந்த ஹஜ்ஜுக்கு எவ்வளவு முஸ்லிம்கள் தங்களுடன் வருவார்களோ அவ்வளவு பேரையும் அழைத்துச் செல்வதற்கும் எண்ணங் கொண்டார்கள். தங்களின் உள்ளக்கிடக்கையை அரபுநாடு முழுவதும் அறிவிக்கச் செய்தார்கள். ஹஜ்ஜு யாத்திரையை நிறைவேற்றிக் கொள்ள ஆசையுடைய அனைவரும் பயண ஆயத்தங்கள் செய்து கொண்டு மதீனாவை நோக்கி சாரிசாரியாக வந்தனர். நானிலம் போற்றும் நபிகள் கோமானுடன் சென்று ஹஜ்ஜு செய்யும் ஒப்பற்ற பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சுமார் ஒன்றே கால் இலட்சம் யாத்திரிகர்கள் மதீனாவில் வந்து கூடி விட்டார்கள். அவர்களில் பல்வேறு கூட்டத்தார், கோத்திரத்தாரும், அவர்தம் தலைவர்களும், வீரர்களும், புலவர்களும், அறிஞர் பெருமக்களும், வணிகர்களும், விவசாயிகளும், கைவினைஞர்களும், ஏழை, பணக்காரர், தொழிலாளிகளும் ஆகிய பலதரப்பட்ட மக்களும் இருந்தனர்.

ஹிஜ்ரி 10ம் ஆண்டு துல்கஃதா மாதம் 26ம் தேதி சனிக்கிழமை அதிகாலை கி.பி. 632 பிப்ரவரி 22 அண்ணலாரவர்கள் நீராடி, புத்தாடை புனைந்து, பரிமளம் பூசிப் பள்ளி வந்து இறைவனைத் தொழுதபின் தங்களின் கவர்ச்சி மிக்க திருவதனத்தில் புன்முறுவல் தவழ அங்கு வந்தோருக்குத் தரிசனம் வழங்கிக் கொண்டிருந்தார்கள். பின்னர் லுஹர்த் தொழுகையை முடித்துக் கொண்டு தங்கள் இல்லம் சென்று வெளியேறி தங்களது பிரிய ஒட்டகையான அல் கஸ்வாவின் மீது கம்பீரமாக வீற்று, தங்கள் மனைவியர் அனைவரும், இலட்சத்தி இருபத்திநாலாயிரம் யாத்திரிகர்களும்

புடைசூழ தக்பீர் முழக்கத்துடன் மண்ணும் விண்ணும் எண்ணு நபி மக்காவை நோக்கி புனித யாத்திரை புறப்பட்டார்கள். அ∴து பூதலம் கண்டிராத ஓர் புதுமைக் காட்சியாகத் திகழ்ந்தது. அபூதுஜானா அல் ஸாயிதியை சிலர் ஸி∴பா பின் உர்பத்தா அல் கிபாரி என்கின்றனர். மதீனாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்திச் சென்றார்கள்.

மதீனாவுக்கு ஆறு மைல் தொலைவிலுள்ள துல் ஹுலைபா என்ற இடத்தை அடைந்தபோது பொழுது சாய்ந்து மாலை மயங்கிவிட்டது. அதனால், அனைவரும் அவ்விடத்தில் தங்கி இரவைக் கழித்தனர். காலையில் எல்லோரும் நீராடி, இஹ்ராம் கட்டிக்கொண்டு "லப்பைக்" "அல்லாஹும்ம லப்பைக்" எனக் தல்பியாவை மொழிந்தவர்களாய் யாத்திரையைத் தொடர்ந்தனர். மக்கா வெற்றி கொள்ளச் சென்றபோது பெருமானார் எவ்வெவ்விடங்களில் தங்கித் தொழுதார்களோ அங்கெல்லாம் இப்பொழுது பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு இருந்தன. அவற்றில் இப்பொழுதும் தொழுது கொண்டார்கள்.

பயணமான ஒன்பதாம் நாள் - துல்ஹஜ் மாதம் நான்காம் தேதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல், மாநபி அவர்களும் மற்றவர்களும் மக்காவை அடைந்தனர். அங்கு அண்ணலவர்களைத் தொடர்ந்து அனைவரும் க∴பத்துல்லாஹ்வைத் தவாபு செய்து, ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தியிட்டு இறைவனைத் தொழுது, முறைப்படி செய்ய வேண்டிய யாத்திரைச் சடங்குகள் அனைத்தையும் துல்லியமாகச் செய்து முடித்தனர். இம்முறைகளைப் பின்பற்றியே இன்று ஹஜ்ஜுக்கடமைகளை நிறைவேற்ற அப்புனித பூமிக்குச் செல்லும் முஸ்லிம்கள் அனைவரும் நடந்து வருகின்றனர்.

பின்னர், ஸபா, மர்வா குன்றுகளுக்கிடையில் ஸபாவில் தொங்கலோட்டம் துவங்கி ஏழாவதாக மர்வாவில் முடிவடைந்தது. அங்கு அண்ணலார் அல் கஸ்வாவின் மீது வீற்றிருந்தவாறு அனைத்து மக்களும் தங்களைக் கண்களால் கண்டு பருகும் வண்ணம் காட்சி வழங்கினார்கள். தங்களின் மன இருள் போக்கி அறிவொளி துலங்கிய அந்த இரட்சக நாதரைக் காண மக்கத்து மக்கள் திரண்டு எழுந்து வந்தனர். கட்டழகுக் கன்னியருங்கூட இல்லம் நீங்கி வெளியேறி அவர்களது திவ்விய தரிசனங் காண மர்வாவை நோக்கி விரைந்தனர்.

துல்ஹஜ் மாதம் 8ம் நாள் வியாழக்கிழமை அனைவரும் மக்காவை விட்டுப் புறப்பட்டு 3 மைல் தூரத்திலுள்ள மினா என்னுமிடத்தை அடைந்தார்கள். அன்றைய தினம் அங்கு தங்கி மறுநாள் காலையில் அதை விட்டுப் புறப்பட்டு 6 மைல் தொலைவிலுள்ள அர∴பாத் மணல் வெளியைச் சென்றடைந்தனர். இந்த வெளி ஆதம் நபியவர்களும் ஹவ்வா நாச்சியாரும் இறைவனின் முனிவுக்கு ஆளாகி அவர்கள் வசித்த உத்தியானத்தை-வனப்புச் சோலையை விட்டும் வெளியேற்றப்பட்டதின் பின் நீண்ட காலம் பிரிந்து வாட நேர்ந்தபோது, அவர்கள் அழுது, வணங்கி, மன்னிப்புக் கோரியதன் பயனாய் இறைவன் கருணை கூர்த்து அவ்விருவரையும் அரபாத்தில் சந்திக்க வைத்து ஒன்று சேர்த்தான். மீண்டும் ஒன்றினைந்து அறிமுகம் ஏற்பட்ட இடம் என்பதற்காக இது 'அர∴பாத்' என வழங்கலாயிற்று. இம் மைதானத்தில் இலட்சத்தி இருபத்தி நாலாயிரம் யாத்திரிகர்களும் கூடாரங்கள் அடித்துத் தங்கி ஓய்வு கொண்டனர். இறை தியானம், வணக்க வழிபாடு, இறைஞ்சுதல்களில் ஈடுபட்டனர்.

அன்று மாலை பொழுது சாய, பெருமானார் உஸாமாவுடன் தங்கள் ஒட்டகை மீதேறி யாத்திரிகர்கள் அனைவரும் பின் தொடர தல்பியாவை ஓதிக் கொண்டு 3 மைல் தூரத்திலுள்ள மஷ்அருள் ஹராம் என்றும் முஸ்தலிபா போய்ச் சேர்ந்தார்கள். அங்கு இராத் தங்கி மறுநாள் காலைத் தொழுகையை முடித்துக் கொண்டு சூரியன் உதயமாகுமுன், தங்கள் ஒட்டகையில் பலுல் இப்னு அப்பாஸை ஏற்றிக் கொண்டு தல்பியாவையும் ஓதிக் கொண்டு மினாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அன்று முன்பகல் மினாவை அடைந்து ஜம்ரத்துல் உக்பா என்ற இடத்தில் யாத்திரிகர்களைக் கல் எறியச் சொல்லித் தாங்களும் ஒட்டகத்தின் மீதிருந்தவாறே ஏழு சிறு கற்களை எறிந்தார்கள்.

அதன்பின் தங்கள் கூடாரத்திற்கு வந்து, கொண்டு வந்திருந்த 100 ஒட்டகங்களில் 63ஐ தங்களின் கைப்படக் குர்பானி செய்துவிட்டு மீதியை ஹலரத் அலீ அவர்களைக் குர்பானி செய்யுமாறு பணித்தார்கள். ஏனைய யாத்திரிகர்களும் மினாவில் குர்பானிகள் செய்தனர். குர்பானி வேலை முடிந்ததும் நாவிதரை அழைத்துத் தலையை மொட்டையடித்துக் கொண்டார்கள். பெருமானாரைப் பின்பற்றி மற்ற யாத்திரிகர்களும், முடியைச் சிரைத்து அல்லது சிறுகக் கத்தரித்துக் கொண்டனர். பின்னர் குர்பானி செய்த ஒட்டகை ஒவ்வொன்றிலிருந்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சமைக்கச் செய்து, ஹலரத் அலி அவர்களுடனிருந்து சிறிதை சாப்பிட்டார்கள். ஏனைய மாமிசம் அனைத்தையும் அங்கிருந்த மக்களுக்கு அளிக்கச் செய்தார்கள்.

மினாவில் பெருமானார் மூன்று தினங்கள் தரித்திருந்தார்கள். அங்குள்ள “மஸ்ஜிதுல் ஹீப்” பள்ளியில் 70க்கும் அதிகமான நபிமார்கள் சமாதி கொண்டுள்ளனர். மூன்றில் ஒரு நாள் மக்கா சென்று க∴பாவைத் தவாபு செய்துவிட்டுத் திரும்பினார்கள். ஊர் திரும்பவிருக்கும் மற்ற யாத்திரிகர்களை இறுதியாக ஒருமுறை க∴பாவைத் தவாபு செய்து விட்டுத்தான் புறப்பட வேண்டுமெனவும் கட்டளையிட்டார்கள். அண்ணலார் மினாவிலிருந்த மூன்று தினங்களும் பொழுதடைந்தபின் தவறாது ஜம்ரத்துல் உக்பா, ஜம்ரத்துல் ஊலா, ஜம்ரத்துல் உஸ்தா சென்று கல் எறிந்தார்கள். கல் ஏன் எறிகிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்குத் தமது விருத்தாப்பியத்தில் அன்னை ஹாஜிரா மூலம் பெற்றெடுத்த குலக் கொழுந்தான இஸ்மாயீல் (அலை) அவர்களை குர்பானி (பலி) இடுமாறு இறைவன் கனவின் மூலம் கட்டளையிட்டதைச் சிரமேற்கொண்டு தங்களின் கண்மணியைக் குர்பானி கொடுக்க மக்காவிலிருந்து அழைத்துச் செல்கையில், ஷைத்தான், அன்னை, பிதா, புத்திரர் மூவரிடத்தும் தோன்றி கனவை மெய்யென நம்பி மதி கெட்டதனமாக பலி கொடுக்கப் போவதாகச் சந்தேகத்தையும், அச்சத்தையும் கிளப்பி விட முயன்றான். அவனை விரட்டியடிக்கும் பான்மையிலும் ஹஜ்ஜாஜிகளும் தங்கள் மனதுகளிலுள்ள ஷைத்தானியத்துக்களை விரட்டியடிக்க வேண்டுமென்றும் நோக்கத்திலும் இவ்வாறு மூன்று இடங்களிலும் அவர்களும், பெருமானார் (ஸல்) அவர்களும் செய்ததுபோல் நாமும் கல் எறிகிறோம்.

இம்மூன்று நாட்களில் ஹஜ்ஜுக் கிரியைகள் பற்றி தங்களுக்கிருந்த ஐயப்பாடுகளை எல்லாம் மக்கள் பெருமானாரை அணுகிக் கேட்டு விளக்கங்கள் பெற்றனர்.

சத்தியத் திருநபியவர்கள் தங்களின் வரலாற்றுப் பெற்சாசனமான இறுதி உரையை மினாவில் ஆற்றதாக ஒரு சாராரும், அரபாத்திலுள்ள ஜபலுர் ரஹ்மத் குன்றின் மீது நின்று ஆற்றதாக மற்றொரு சாராரும் கூறுகின்றனர்.

**வரலாற்றுப் பொற்சாசனம்**

அன்று ஹிஜ்ரி 10, துல்ஹஜ் மாதம் 9ம் நாள் வெள்ளிக்கிழமை (கி.பி. 632 மார்ச் 6) நண்பகலுக்குப்பின் வெய்யில் தாழ, நபிகள் நாதர் (ஸல்) சிகப்பு அங்கி அணிந்து தங்கள் அல்கஸ்வாவின் மீது அமர்ந்தவர்களாய் அரபாத் மைதானத்தின் உயர்ந்த குன்றான ஜபலுர் ரஹ்மத் மீது வந்து நின்றார்கள். அங்கிருந்தவாறு மைதானத்தில் குழுமியிருந்த மக்களைத் தங்களின் கருணை நிறைந்த கண்களால் சுற்றி நோக்கியவாறு, அவர்களிடம் பிரியா விடைபெறும் தோரணையில் தங்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். மிருதுவான கணீரென்ற தொனியில், மிகத் தெளிவான வாக்கியங்களில், முத்து முத்தாகவும், கச்சிதமாகவும் வார்த்தைகளை உதித்தார்கள். அந்த அரபாத் பெருவெளி மணலில் கூடியிருந்த ஒன்றே கால் இலட்சம் - சிலர் இலட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் என்பர் – யாத்திரிகப் பெருமக்களும் அண்ணலவர்களின் அப்பொன்னுரையைத் தெளிவாகச் செவியேற்கும் விதமாக அஞ்சல் செய்வதற்கென உரத்த ஆழிய குரல் படைத்த பலரை ஆங்காங்கே நிறுத்தச் செய்தார்கள். அவ்வரிய தீஞ்சுவை மிக்க தேவாமிர்தச் சொற்பொழிவு அன்றுள்ள மக்களுக்கு மட்டுமின்றி, இனி என்றென்றும் தோன்றும் மனித சமுதாயத்தின் உய்வுக்கான உயரிய கருத்துக் கருவூலமாக அமைந்து விட்டது. அந்த உயரிய வரலாற்றுப் பொற்சாசனம் ஆற்றொழுக்கான அழகிய நடையில் இவ்வாறாக அமைந்திருந்தது.

“மக்களே! நான் கூறுபவற்றைக் கவனத்துடன் செவிதாழ்த்திக் கேளுங்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை எதுவுங்கிடையாது. ஆட்சி அனைத்தும் அவனுக்கே உரியது, அனைத்துப் புகழுக்குமுரியவன் அவனேயாம். உயிர் அளிப்பவனும் மரணிக்கச் செய்பவனும் அவனாகவே இருக்கிறான். அவன் சர்வ வல்லமை பொருந்தியவன்.

“அவன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான். தன் அடிமையாகிய எனக்கு உதவி புரிந்தான். இனி நீங்களும் நானும் இங்கே ஒன்று கூடுவோமா என்பதை நான் அறியமாட்டேன்.

மனிதர்களே! இந்த மாதமும், இந்த நாளும், இந்த நகரமும் எவ்வாறு புனிதம் பெற்று விளங்குகின்றனவோ, அவ்வாறே உங்களின் உயிர்களும், உடமைகளும், கௌரவமும் புனிதமாகவும் பாதுகாப்புடனும் இருந்து வரச் செய்வது உங்கள் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். அவ்வாறே எக்காலத்தும் இருந்து வர இறைவன் அருள் பாலிப்பானாக!

“நீங்கள் இறைவனைச் சந்திக்கும் நாள் நெருங்கிக் கொண்டு வருகிறது. அந்த நாளில் உங்களின் செயல்களைப் பற்றி அவன் உங்களிடம் கணக்குக் கேட்பான்.

ஆகவே, சொத்துரிமை உடைய ஒருவனுக்கு அவனது உரிமைக்கும் அதிகமாகச் சாசனம் செய்து வைத்தல் கூடாது. அமானிதப் பொருள்கள் வைத்திருந்தால் அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுங்கள். கடனாகப் பெற்றதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். வாக்குத் தத்தம் செய்து பொறுப்பேற்றவன் தனது வாக்குத் தத்தத்தை நிறைவேற்ற வேண்டும். ஒருவர் மற்றவரின் சொத்தை அனுமதியின்றிக் கபளீகரம் செய்து கொள்ளாதீர்.

“இன்று முதல் எவரும் எந்த வகையானவும் வட்டிவாங்கக் கூடாது. அப்துல் முத்தலிபின் புதல்வர் அப்பாஸ் அவர்களுக்கு சேரவேண்டிய வட்டியை நான் நீக்கிவிட்டேன். அசலை மட்டுமே நீங்கள் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்.

“கொலைக்குப் பழி வாங்கும் பழக்கம் இன்றோடு ஒழிக்கப்பட்டு விட்டது. பனூ லைஸ் கூட்டத்தாரிடம் பாலை குடித்துக் கொண்டிருந்த எனது பெரிய தந்தையின் மகன் ரபீஆபின் ஹாரிதைக் கொலை செய்த ஹுஸைல் என்பவனை இன்று நான் மன்னித்துவிட்டேன்.

“குற்றம் செய்தவனே அக்குற்றத்திற்குப் பொறுப்பாளி தந்தையின் குற்றத்திற்குத் தனயனும், தனயனின் குற்றத்துக்குத் தந்தையும் பொறுப்பாளி அல்ல. நீங்கள் தவறு செய்யாதீர்கள். பிறரும் உங்களுக்கு அநீதி இழைக்கமாட்டார்கள்.

“முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் உடன் பிறந்த சகோதரர்களாவர், அரபிகளும் அரபியரல்லா அஜமிகளும் அந்தஸ்தில் சமமானவர்களேயாம். உங்கள் எல்லாரின் உரிமைகளும் ஒரே விதமானவையே. இதில் பாகுபாடு, ஏற்ற வித்தியாசம் எதுவும் கிடையாது.

“ஜனங்களே! செயல்களில் தூய்மையான எண்ணத்தையும், ஜமாஅத் என்னும் சமுதாய ஒற்றுமையையும் உங்களின் நோக்கங்களாகக் கொள்ளுங்கள். இவை உங்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி வலிவும் பொலிவும் பெற்றவர்களாக விளங்கச் செய்யும்.

“ஹபஷி அடிமை ஒருவன் உங்களுக்குத் தலைவனாக ஏற்படினும் இறைவனின் கட்டளைப்படி அவன் நடந்து கொள்வானாயின் அவனது ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்.

“பெண்கள் விஷயத்தில் நீங்கள் அஞ்சி நடந்து கொள்ளுங்கள்! உங்கள் மனைவியர் மீது உங்களுக்குச் சில உரிமைகள் இருப்பதே போல், உங்கள் மீதும் அவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பெண்கள், உங்களிடம் ஒப்படைக்கப் பெற்ற இறைவனின் அமானிதத்திற்கு ஒப்பானவர்கள். அவர்களைப் பேணிக் காத்துத் திரும்பி ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும். அவர்களுக்கு உண்டி, உடை, கொடுத்து அன்புடன் ஆதரியுங்கள். கற்புநெறி தவறுபவளைக் கண்டியுங்கள், தண்டியுங்கள், விலக்கி வையுங்கள். அவர்கள் மீது அன்போடு கூடிய அதிகாரத்தைப் பிரயோகியுங்கள். ஆகுமான காரியங்களில் ‘தலாக்-விவாக ரத்து செய்வது அல்லாஹ்வுக்கு மிக வெறுப்பானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

‘அடிமைகள் விஷயத்தில் உங்களை நான் மிகவும் எச்சரிக்கிறேன். அவர்கள் மீது இரக்கங்காட்டி நடந்து கொள்ளுங்கள். நீங்கள் உண்ணுவதை அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். அவர்களின் சக்திக்கும் அதிகமாக அவர்களை வேலை வாங்காதீர்கள். அவர்களின் குற்றங்களை மன்னியுங்கள்! கொடுமைப்படுத்தாதீர்கள்.

“என்னுடைய மக்களே! எனக்குப் பின்னர், எந்த நபியும் வருவதற்கு இல்லை. நீங்கள் இறைவன் ஒருவனையே வணங்க வேண்டும். அவன் விதித்துள்ள ஐங்காலத் தொழுகையையும், ரமலானின் நோன்பையும், ஏழை வரியான ஜக்காத்தையும் ஒழுங்காக நிறைவேற்றி வாருங்கள். அதோடு இறைவனின் இல்லமான க∴பாவையும் வந்து தரிசித்து ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். அப்போது சுவனபதி உங்களுடையதாக ஆகிவிடும்.

“நான் உங்களிடம் இரண்டு வஸ்துக்களை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒரு போதும் வழி தவறி விடமாட்டீர்கள். ஒன்று இறை வேதமாகிய திருக்குர்ஆன், மற்றொன்று எனது வாழ்க்கையும் வாய்மொழியுமான சுன்னத்தாகும்.

“இன்று உங்களின் இந்நாட்டிலே தன் ஆட்சி தகர்ந்து தவிடு பொடியாகி விட்டதைக் கண்டு ஷைத்தான் மனம் உடைந்து ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறான். அற்ப விஷயத்திலேனும் நீங்கள் அவனுக்கு வழிப்பட்டு விடுவீர்களாயின், அவன் பெருமகிழ்ச்சி அடைவான். ஆதலின், இறைவனின் ஏகத்துவத்தில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் உறுதியுடன் இருந்து கொள்ள வேண்டுமென எச்சரிக்கிறேன். எனக்குப் பின் சிலை வணக்க முறைகளுக்கு இடமளித்து விடாதீர்கள்.

“மனிதர்களே! ஹஜ்ஜுக் காலத்தை மாற்றிக் கொள்வது மௌட்டீக காலத்து வழக்கமாகும். இறைவன் எந்த மாதங்களைப் புனிதப்படுத்தியிருக்கிறானோ அந்தச் சேர்க்கையான மூன்று மாதங்களாகிய துல்க∴தா, துல்ஹஜ்ஜு, முஹர்ரம் மாதங்களும் ரஜப் மாதமும் புனிதமான மாதங்களாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

“இங்கு வந்திருப்பவர்கள் வராதவர்களுக்கு இச்செய்தியை எடுத்துச் சொல்வார்களாக! ஏனெனில், இங்கு கேட்பவர்களைவிட இதனை கேள்வியுறுபவர்கள் இவ்விஷயங்களை நன்கு மனதில் பதிய வைத்துக் கொள்ளலாம்.

பெருமானாரின் இறுதி ஹஜ்ஜின் போது பதிமூவாயிரம் முஸ்லிம்கள் பெருமானாரைப் பற்றிப் பிறருக்கு அறிவிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அப்பதிமூவாயிரம் முஸ்லிம் களின் சரித்திரமும் இப்போது நமக்குக் காணக் கிடைக்கின்றது. இவர்களைத் தவிர பெருமானாரின் வாழ்க்கையினைப் பற்றிப் பிறரிடம் கேட்டோ அல்லது கேட்டவர்களின் வாயிலாக அறிந்தோ கூறவல்ல ஐந்து இலட்சத்துப் பதிமூவாயிரம் பேர்களினுடைய வாழ்க்கைக் குறிப்புகளும் “அஸ்மாவுர்ரிஜால்” என்னும் பெரு நூலில் விரிந்து செறிந்து வரையப்பட்டுள்ளன. இது போன்றதொரு நூலினை இஸ்லாத்திற்கு முன், பிற மதத்தினர் எவரும் தொகுத்து வெளியிட்டதில்லை.

“நபிகள் வரலாற்றில் எவரும் ஏமாந்துபோகவோ அல்லது வேறொருவரை ஏமாற்றவோ முடியாது. இங்கு ஒரே பகலாக இருப்பதுடன், அதன் ஒளி ஒவ்வொரு பொருளின் மீதும் வீசுகின்றது. எந்தப் பொருளும் அவ்வொளியினின்றும் மறைய இடமே இல்லை” என ரெவரெண்டு பாஸ்பொர்த் ஸ்மித், தமது “முஹம்மதுவும் - முஹம்மதிய மதமும் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

“மனித அறிவுக்கு ஒவ்வாத முறையிலான சித்தாந்தங்களால் மற்ற மதங்கள் தாலாட்டப்பட்டு வந்தது (Cradled in Mystery) போலல்லாமல் இஸ்லாம் சரித்திரத்தின் பூரண ஒளியில் உதயமாகியுள்ளது அதன் வேர்கள் அடித்தளத்தினின்றும் கிளப்பியுள்ளன. அதன் ஸ்தாபகரின் வாழ்க்கை பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீர்திருத்தவாதிகளினுடையவற்றைப் போன்று தெள்ளத் தெளிவானதாக நமக்குக் காட்சியளிக்கின்றது” என எர்னஸ்ட்ரினான் என்பவர் முஹம்மதுவும் இஸ்லாத்தின் தோற்றமும்” என்னும் தமது கட்டுரையில் வரைந்துள்ளார்.

**தூதின் சம்பூரணம்**

பின்னர் நபிகள் கோமான் அங்கு குழுமியிருந்த ஜன சமுத்திரத்தை நோக்கி உரத்த குரலில், “மக்களே!. இறைவனின் தூதை நான் உங்களிடம் சரிவர அறிவித்தேனா என நியாயத் தீர்ப்பு நாளில் அவன் உங்களை வினவுங்காலை யாது கூறுவீர்கள்?” எனக் கேட்டார்கள். அதற்கு அந்த ஜனசமுத்திரம், “இறைவன் உங்களுடைய திருப்பணியைப் பூரணமாக நிறைவேற்றி விட்டீர்கள் எனச் சாட்சி பகர்வோம்” என்று ஒரே குரலோடும் முழக்கம் செய்தது. நபிகள் நாதர் தங்களின் மலர்க்கரமிரண்டையும் வானத்தின் பால் உயர்த்தியவர்களாய்,” இறைவா! இதற்கு நீயே சாட்சி” என மும்முறை உரக்கக் கூறினார்கள். அந்நேரம்,” இன்று உங்களுக்காக இஸ்லாத்தையே நேரிய மார்க்கமாகத் தேர்ந்தெடுத்து, எனது அருட்பேறுகளை உங்கள் மீது சம்பூரணமாக்கி விட்டேன்.” 5:3 என்னும் திருவசனத்தை இறைவன் இறக்கி வைத்தான்.

இத்திருவசனத்தில் பெருமானாரின் பூவுலகப் பணி முற்றுப் பெற்றது. இனித் தங்கள் எஜமானனிடம் திரும்பும் நாள் நெருங்கி விட்டது என்ற பொருள் மறைந்து நிற்பதை அண்ணலார் ஐயமற அறிந்து கொண்டார்கள்.

இதற்குப் பின், மக்கா திரும்பி க.்.பாவை இடம் வந்து அப்பட்டணத்தில் மூன்று நாட்கள் தங்கினார்கள். அதன் பிறகு, பெருமானார் தங்கள் மனைவியர், மற்றவர்களுடன் துல்ஹஜ் 16ம் நாள் மதீனாவுக்குப் பயணமானார்கள். இந்த இறுதிப் புனித யாத்திரையை முஸ்லிம்கள் “ஹஜ்ஜத்துல் விதா” “ஹஜ்ஜத்துல் பலக்” என அழைப்பர்.

மாநபியவர்கள் பெற்றிருந்த மகோன்னத நிலையைக் கண்டு பொறாமை கொண்ட சிலர் இவர்களும் - கலிமாச் சொல்லி முஸ்லிம் ஆனவர்கள் தாம் - தாங்களும் அவர்களைப் போன்ற நபி தான், தங்களுக்கும் இறைவனித்திலிருந்து திருவசனங்கள்

இறங்குகின்றன எனக்கூறிக் கொண்டு மக்களை ஏமாற்ற முற்பட்டனர். ஆனால், அவர்களின் பொய்யான வாதங்கள் சில நாட்களில், நீர்க்குமிழி போல் மறைந்தொழிந்தன. இவ்வாறு தங்களை நபியெனக் கூறி வாதாடியவர்களில், அல்அஸ்வத் என்ற அய்ஹாலா இப்னு கஅப், துலைஹா என்ற தல்ஹா, முஸைலமத்துல் கஸ்ஸாப் பின் துமாமா ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெருமானார் அவர்கள் தங்கள் மதீனா வாழ்க்கையின் பத்தாண்டு காலத்தில் இருபத்தேழு போர்களில் பங்கு கொண்டு படை நடத்திச் சென்றிருக்கிறார்கள். அவற்றில் ஒன்பது, கடும் யுத்தங்களாகும். தங்கள் தோழர்களின் தலைமையில் முப்பத்தி எட்டு படைகளை அனுப்பியுள்ளார்கள். போர்களுக்கான சகல ஏற்பாடுகளும் அணி வகுப்பு முறைகளும், அண்ணல் அவர்களின் நேர்முகப் பரிபாலனத்தின் கீழும், ஆலோசனையின் பேரிலுமே நடைபெறலாயின. பெருமானார் அவர்களே கலந்து கொண்ட போர்களுக்கு “கஸ்வா” எனவும் அவர்கள் கலந்து கொள்ளாத போர்களுக்கு “ஸிரிய்யா” எனவும் கூறுவர்.

ஏந்தல் நபிகளார் (ஸல்) தங்கள் ஆயுட்காலத்தில் ஸ்தாபித்துச் சென்ற அந்த இஸ்லாமிய அரசு பத்து இலட்சம் சதுர மைல்களைக் கொண்ட நிலப்பரப்புடையதாய் அமைந்திருந்தது. இதனைப் பத்தாண்டு காலத்தில் வெறும் 255 முஸ்லிம்களையும் 759 எதிரிகளையும் சேதங் கொடுத்து எதிர்ப்புக்கள் அனைத்தையும் அடக்கி ஒடுக்கி விட்டு, இலட்சோப இலட்சம் மக்கள் முன்னேற்றப் பாதையில் பீடு நடை போட்டு செல்ல வழி வகுத்தார்கள். நடந்து முடிந்த அந்த யுத்தங்களில் முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 6564, இதில் 6347 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இருவர் மட்டிலும் அவர்களின் மன்னிக்க முடியாத குற்றத்திற்காக மரண தண்டனை அடைய நேரிட்டது. 215 பேர் இஸ்லாத்தில் இணைந்து விட்டிருக்கின்றனர்.

“மேலை நாடுகள் இருளில் ஆழ்ந்திருந்த பொழுது கிழக்கு வானிலே ஒளிமிக்கதொரு நட்சத்திரம் தோன்றியது. துன்பத்தில் மூழ்கியிருந்த உலகினுக்கு இன்ப ஒளியையும் சுகத்தையும் கொடுத்தது. ஹிந்துக்கள் அதைக் கவனத்துடன் கற்று, ஆழந்து சிந்தனை செய்வார்களாக!. அப்பொழுது நான் நேசிப்பதைப் போலவே முஹம்மது நபியவர்களை அவர்களும் நேசிப்பார்கள்.

காந்திஜி “அக்கால உலகினிலே இஸ்லாம் மார்க்கத்தை உயர்த்தி நல்லிடம் அளித்தது வாள் அல்ல என்று நான் முற்ற முற்ற நம்புகிறேன். பெருமானாரின் கண்டிப்பான எளிமை, தன்னலமற்ற தன்மை, வாக்குறுதியின் படி அதை நிறைவேற்றல், நண்பர்களுக்கும் தம்மைப் பின்பற்றுவோருக்கும் பெருமானார் காட்டிய ஆழ்ந்த அன்பு, நிறைந்த பற்று, அஞ்சாமை, ஆண்மை, இறைவன் மீதும் தம் தூதிலும் பூரண நம்பிக்கை இவையே காரணங்களாகும்” என்று காந்திஜீ கூறுகின்றார்.

**மைக்கேல் ஹார்ட் எழுதிய “அந்த நூறு மனிதர்கள்”**

இப்பூவுலகில் பெருவெற்றி பெற்று, அதன் வரலாற்றை மாற்றிய ஒரு நூறு மனிதர்களைப் பற்றி “அந்த நூறு மனிதர்கள் (The Hundred) என்னும் தலைப்பில் பெரு நூலொன்றை எழுதி வெளியிட்ட மைக்கேல் ஹார்ட் என்னும் அமெரிக்க ஆசிரியர்,

அவர்கள் அனைவரிலும் முஹம்மது நபி (ஸல்) அவர்களே முதன்மையானவர் என்று குறிப்பிட்டு அதன் காரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

“இப்பாருலகில் அளப்பரிய செல்வாக்குப் பெற்றவர்களின் பட்டியலில் முதன்மையானவராக முஹம்மது அவர்களை நான் தேர்ந்தெடுத்தது, சிலருக்கு வியப்பாகவும் வேறு சிலருக்கு வினாவாகவும் அமையலாம். ஆனால், மதம் உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் மகத்தான வெற்றி கண்டவர்கள், வரலாற்றில் அவர்கள் ஒருவரேயாம்.

“உலகப் பெருமதங்களில் ஒன்றை முஹம்மது அவர்கள் எளிய நிலையில் நிறுவி, பிரகடனம் செய்து மிகப் பெரும் சக்தி வாய்ந்த அரசியல் தலைவருமானார்கள். அவர்கள் மறைந்து பதிமூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இன்றும் அவர்களின் செல்வாக்கு சக்தி குறையாது படர்ந்து பரவியுள்ளது.” என்று மைக்கேல் ஹார்ட் என்பவர் “தி ஹன்டரட்” என்னும் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

அம்முதல் அத்தியாயத்தின் பிற்பகுதி பின்வருமாறு :

இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை விடக் கிட்டத்தட்ட இரு மடங்கு இருப்பதால் இயேசுவை விட முஹம்மது அவர்களுக்கு உயர்ந்த இடத்தை அளித்திருப்பது வினோதமாகத் தோன்றலாம். அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது, கிறித்தவ மத வளர்ச்சிக்கு இயேசு ஆற்றிய பணியை விட மிக அதிக முக்கியத்துவமான பணியை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு முஹம்மது ஆற்றியுள்ளார்கள். கிறிஸ்துவ மதத்தின் முக்கியமான அறவிதி, நெறிமுறை போதனைகளுக்கு இயேசு காரணமாயிருந்த போதிலும், கிறித்துவ மதத்தின் இறையியலை உருவாக்கியதில் முக்கியமானவரும், மேலும் அம்மதத்தைப் பரப்பியதில் முதன்மையானவரும், புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதிக்குரிய நூலாசிரியரும் தூய பால் என்பவரே தாம். ஆனால், இஸ்லாமிய இறையியல், நெறிமுறை மற்றும் அறவிதிக் கொள்கைகளுக்குப் பொறுப்பானவர் முஹம்மது அவர்கள் மட்டுமே தான். மேலும் புதிய மார்க்கத்தைப் பரப்புவதிலும் மத அனுஷ்டானங்களை வகுப்பதிலும் பெரும் பங்கு வகித்த வரும் அவர்களே தான்.

“முஹம்மது அவர்களின் மன உள்ளுணர்வுகளில் அல்லாஹ் நேரடியாக அருளியவற்றின் தொகுப்பே முஸ்லிம்களின் வேத நூலாகிய திருக்குர்ஆன். முஹம்மது அவர்களின் ஜீவிய காலத்திலேயே இவ்வறிவிப்புகள் பக்தி சிரத்தையுடன் பதிவு செய்யப்பட்டன. அவர்கள் மறைந்த சிறிது காலத்திற்குள் (அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் இரண்டாண்டு கால ஆட்சியின் போதே) ஆதாரபூர்வமான முறையில் ஒன்று திரட்டப்பட்டன. முஹம்மது அவர்களின் கருத்துகளும் போதனைகளும் திருக்குர்ஆனின் அடிப்படையில் அமைந்தவை. இது போன்று கிறித்துவின் போதனைகள் அடங்கிய விரிவான தொகுப்பு நிலைத்திருக்கவில்லை. கிறித்தவ மதத்தின் மீது இயேசு கிறிஸ்துவும் தூய பாலும் இணைந்து ஏற்படுத்திய தாக்கத்தை விட முஹம்மது அவர்கள் இஸ்லாத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் அதிகமே!.

மேலும், இயேசுவைப் போலின்றி முஹம்மது அவர்கள் மதத்தலைவராகவும் உலகத்தலைவராகவும் இருந்தார்கள். உலகத் தலைவர் என்ற நிலையை முஹம்மது

அவர்களுக்கு அளித்தது, அராபியர்களின் வெற்றிகளுக்குப் பின்னால் இயக்க சக்தியாக அவர்கள் இலங்கியதே.

”முக்கியமான பல வரலாற்று நிகழ்ச்சிகளை வழி நடத்தி சென்ற அரசியல் தலைவர்கள் இல்லாமலிருந்தாலும் அவைகள் நடந்தேறியிருக்கும். ஆனால் அராபியர்களின் வெற்றிகளைப் பற்றி இப்படிச் சொல்ல முடியாது. முஹம்மது அவர்களின் காலத்திற்கு முன்பு இத்தகைய வெற்றிகள் நிகழவில்லை. அவர்களின்றியே இத்தகைய வெற்றிகளை ஈட்டியிருக்க முடியும் என நம்புவது அறிவுக்குப் பொருத்தமாகாது.

”மதம், மற்றும் உலகவியலில் முஹம்மது அவர்கள் பெற்ற கூட்டுச் செல்வாக்கு ஈடிணையற்றது. இதுவே முஹம்மது அவர்களை மன்பியல் வரலாற்றில் அளப்பரிய செல்வாக்குப் பெற்ற ஒரே மனிதராகக் கருத உரித்தாக்குகிறது.

பெருமானாரின் யுத்தக் கொள்கை, எதிரிகளைக் கொன்று நிர்மூலமாக்குவதாக இருக்கவில்லை. மாறாக, ஆட்சேதம் அதிகம் ஏற்படாத வகையில் எதிரியைப் பலவீனப்படுத்தி, எதிர்ப்பைக் கை விடுமாறு அல்லது ஒத்துழைப்பு நல்குமாறு வயப்படுத்துவதையே இலட்சியமாகக் கொண்டிருந்தது.

”ஒரு பெரும் நிலப்பரப்பில், மக்கள் வாழ்வில் ஒரு மாபெரும் நல்லொழுக்கப் புரட்சியைத் தோற்றுவித்து அதைத் தம் வயப்படுத்திக் கொண்டார்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இப்புரட்சி வெறும் அரசியல் புரட்சியல்ல, அது ஓர் ஒழுக்கப் புரட்சி, ஆன்மீகப் புரட்சி ஏன்? மானிட எழுச்சிக்கு அவசியமான மாபெரும் புரட்சி என்றே சொல்லலாம். கொள்ளையடித்தவன் நம்பிக்கைக்குரியவனாகவும், இறையச்சமற்றிருந்தவன் ஒழுக்க சீலனாகவும், விதவிதமான அக்கிரமம் புரிந்தவன் மக்கள்மீது அன்பு சொரிபவனாகவும், அப்புரட்சி அவர்களை மாற்றி அமைத்துவிட்டது. இது ஒழுக்க ஓம்புதலால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சியே தவிர, வாளின் வலிமையினால் வற்புறுத்தி ஏற்பட்ட புரட்சி அல்ல. பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த ஒரு சத்திய நெறியை மக்களுக்குப் போதித்து, நடைமுறையில் செய்து காட்டினார்களோ அது இன்றும் அப்படியே உள்ளது. அணுவளவு மாற்றங்கூட அதில் காணமுடியாது.

”ஜொராஸ்டர், கன்பூஷியஸ், சோலான், சோக்ரத்தீஸ், மோஸே (மூஸா நபி), இயேசு (ஈஸா நபி), புத்தர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் தெளிவாக இல்லாதது கண்டு வருந்த வேண்டியுள்ளது. ஆனால், இஸ்லாமியச் சமய நபியின் வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயமும் வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. அதில் எத்தகைய இரகசியமும் இல்லை” என்கிறார் ஆங்கில சரித்திராசிரியர் ஒருவர்.

”நீதி நெறி வகுத்தோருள்ளும், வெற்றி பல கண்டோருள்ளும் எவரது சரிதையுமே, இஸ்லாத்தின் ஸ்தாபகராம் முஹம்மதுவின் வாழ்க்கை வரலாற்றைப் போன்று விரிவானதாயும், அப்பழுக்கற்ற உண்மைகளைக் கொண்டதாயும் கிடையாதென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமே இல்லை”, என்று அறிஞர் ஜான் டேவன் போர்ட் கூறுகிறார்.

”முஹம்மது நபி வென்றார்! கலங்காத நெஞ்சுடைய ஞான தீபமும் - அழியாத நம்பிக்கையும் அவரிடத்தே இருந்தன. ஆதலால் அவருக்கு.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி,
எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி,
விடுத்த தாய்மொழிக் கெங்கணும் வெற்றி,
வேண்டு முன்னர் அருளினன் அல்லாஹ்!
முஹம்மது நபி மஹா சுதந்திர புருஷர்!
மஹா சூரர்! மஹா ஞானி! மஹா பண்டிதர்!
மஹா பக்தர்! மஹா லௌகீக தந்திரி”

- பாரதியார்.

**நோயுற்றார்கள்**

ஹிஜ்ரி 11ம் ஆண்டு ஆரம்பம், நபிகள் பிரானுக்கு 63வது வயது நடைபெறுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சிரியா எல்லையில் நடக்கும் எதிர்ப்புகளைச் சமாளித்துக் கட்டுப்படுத்தும் பொருட்டு, நபிகள் நாதரவர்கள், மூத்தாப் போரில் ஷஹீதான தங்கள் வளர்ப்பு மகன் ஜைது பின் ஹாரிதா (ரலி)க்கும் தங்களின் அடிமையும் செவிலித் தாயுமான உம்மு அய்மனுக்கும் பிறந்த உஸாமா என்னும் 18 வயது இளைஞர் தலைமையில் பாலஸ்தீனத்தின் அல் தாரூம் (பல்கா) நோக்கி பெரும்படை ஒன்றை அனுப்ப முடிவு செய்தார்கள். முன்பு புஸ்ரா சிற்றரசன் மீது போர்தொடுக்க ஜைது அவர்களின் தலைமையில் மூத்தாவுக்குப் படையனுப்பிய போது ஏற்பட்ட சலசலப்புப் போன்று இப்பொழுது அவரது புதல்வரைத் தளபதியாக நியமித்த போதும் முணுமுணுப்பு ஏற்பட்டது. இதை அறிந்த பெருமானார், ”இஸ்லாத்தில் ஏற்றத்தாழ்வு கிடையாது. ஜைது எவ்வாறு என் அன்பிற்குப் பாத்திரமாகி இருந்தாரோ, அவ்வாறே ஜைதுடைய மகனும் இருக்கிறார். மேலும், அவர்களின் தகுதியை உணர்ந்துதான் நான் அவர்களைப் படைத் தளபதிகளாக நியமிக்கிறேன்” எனச் சினந்தவர்களாய், ஹலரத் அபூபக்கர், உமர் போன்ற பெருந் தலைவர்களையும் உஸலாமாவின் தலைமையில் நின்று போரிடுமாறு பணித்தார்கள். உடனே சலசலப்பு அடங்கி அமைதி நிலவியது.

அவ்வாண்டு ஸபர் மாதம் இறுதியில் ஒரு புதன்கிழமை கி.பி.632 மே மாதம் - பெருமானார் ஒரு ஜனாஸா அடக்கத்திற்கு சென்று திரும்புங்காலை நோயுற்றார்கள், இலேசான தலைவலியாக ஆரம்பித்து, பின் மயக்கமும், காய்ச்சலுமாக மாறி, மாறி ஏற்பட்டு வந்தன. அந்நிலையிலும் அண்ணலவர்கள் நேர்மை தவறாது முறைப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனைவி வீட்டில் தங்கி வந்தார்கள். அவ்வழக்கப்படி அன்று தினம் மைமூனா நாச்சியார் இல்லத்தில் தங்கியிருந்த போது காய்ச்சல் அதிகரித்துக் கடுமையுற்றது. மற்ற மனைவியரனைவரும் மைமூனா வீட்டிற்கு விரைந்தனர். நோய் இருந்த நிலையை எண்ணி ”நபிகள் நாதர் தங்கள் அன்பு மனைவியாரிடம், ”நான் இனி யார் வீட்டில் தங்கலாம் என நீங்கள் விரும்புகிறீர்கள்?” என்று அவர்கள் கருத்தறிய ஆவலுற்று வினவினர். நோய் நீங்கும் வரை ஆயிஷா பிராட்டியாரின் இல்லத்தில் தங்கியிருப்பதற்கு அனைவரும் ஒருமித்து விருப்பம் தெரிவித்தனர். அதன் பேரில் ஹலரத் அப்பாஸ் அவர்களின் புதல்வர் பலுல், ஹலரத் அலீ ஆகிய இருவரின் கைத்தாங்கலுடன் ஆயிஷா நாச்சியாரின் இல்லம் சென்றார்கள். நோய் விட்டு விட்டுக் கடுமையானதே தவிர குறைவதற்கான அறிகுறி தென்படவில்லை.

உஸாமாவும் அவரது படையும் மதீனாவுக்கு ஒரு கல் தொலைவிலுள்ள அல்ஜுர்ப் என்ற இடத்தில் கூடாரமடித்துத் தங்கிப் பெருமானாரின் நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ரபீயுல் அவ்வல் மாத துவக்கத்தில் ஓர் இரவு அண்ணலார் தங்கள் பணியாளர் அபூமுவைஹிபாவை அழைத்துக் கொண்டு முஸ்லிம்களின் அடக்கத்தலமான "ஜன்னத்துல் பகீஃ" அல்லது "பாக்கியுல் கர்க்கத்" என்னும் கப்ருஸ்தானுக்குச் சென்று அங்கு நின்று கொண்டு, "புதை குழிகளில் அடக்கமாகி இருப்பவர்களே! உங்களுக்குச் சாந்தியுண்டாக்கட்டும். உயிருடனிருப்பவர்களைக் காட்டிலும் நீங்கள் தான் பாக்கியசாலிகள். பூசலும் பிணக்கும் அலைபோல் வந்து கொண்டிருக்கின்றன. முன்னால் சென்றதை விடப் பின்னால் வருவது அதிகக் கேட்டை விளைவிப்பதாயிருக்கக் கூடும்" என மொழிந்தவர்களாய் மரணித்தோரின் ஆன்ம சாந்திக்காக துஆச் செய்து விட்டு இல்லம் திரும்பினார்கள்.

இப்பொழுது பெருமானார் நோயுற்றுப் பத்து தினங்களாயின. அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்த இயலாத அளவு மயக்கமும், பிரக்ஞை இழக்கும் நிலையும் அடிக்கடி ஏற்பட்டு வந்தது. எனவே, தங்களுக்குப் பதிலாக ஹலரத் அபூபக்கர் அவர்களை இமாமத்துச் செய்யுமாறு (தொழுகையை முன்னின்று நடத்தி வருமாறு) ஆயிஷா நாச்சியாரிடம் சொல்லியனுப்பினார்கள். தம் தந்தை இளகிய மனம் படைத்தவர், தொழுகையின் போது அழுது விடுவார் என மறுத்தும் அண்ணலார், அபூபுக்கர் அவர்கள் தாம் இமாமத்துச் செய்ய வேண்டுமென அழுத்தமாகக் கூறிவிட்டார்கள். அதன் பேரில், ஹலரத் அபூபக்கர் அவர்கள் இமாமாக நின்று மொத்தம் பதினேழு வக்து (வேளை)த் தொழுகைகளை நடத்தினார்கள்.

இடையில் ஒருநாள் சிறிது உடல்நலம் ஏற்பட்டதாகத் தோன்றியது. அன்று நண்பகல் உத்தமத் திருநபியவர்கள் குளித்து உடை மாற்றிக் கொண்டு ஹலரத் அலீ, அப்பாஸ் இருவரின் கைத்தாங்கலுடன் பள்ளி வாசலுக்குள் வந்தார்கள். இமாமத் செய்து கொண்டிருந்த ஹலரத் அபூபக்கர் அவர்களின் அருகில் அமர்ந்து தொழுகையில் கலந்து கொண்டார்கள். பின் மிம்பர் மேடை மீதேறி அமர்ந்தவர்களாய், உஹத் போர்களத்தில் வீர மரணம் அடைந்த முஸ்லிம்களுக்காக நீண்ட நேரம் பிரார்த்தனை புரிந்தார்கள். அதன் பிறகு அங்கு குழுமியிருந்த மக்களை நோக்கி,

"இம்மையின் இன்பத்தையோ அல்லது மறுமையின் பேறுகளையோ இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை ஆண்டவன் தன் அடியானுக்கு அளித்தான். அவ்வடியான் பின்னதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்" என்று தங்களுக்கு அந்தியகாலம் அண்மித்து விட்டதைக் சூசகமாக உணர்த்தினார்கள். மற்றவர்களுக்கு இது புரியவில்லை. ஹலரத் அபூபக்கர் அவர்கள் மட்டும் அதை புரிந்தவர்களாய் வாய்விட்டு அழ ஆரம்பித்தார்கள், இதைக் கவனித்த பெருமானார், "அழாதீர்" என பரிவுடன் கூறிச் சாந்தப்படுத்தியவர்களாய் மீண்டும் தொடர்ந்தார்கள்

"நிச்சயமாக, நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களுள் இறைவனுக்குப் பின் அபூபக்கர் இரண்டாமவர் பள்ளிவாசலுக்கு வரும் வாயில்களில் அபூபக்கர் இல்லத்திலிருந்து வரும் வாயில் மட்டும் திறந்திருக்கட்டும், மற்றவைகளை அடைத்துவிடுங்கள், தலைவர்களின் அடக்கஸ்தலங்களை உங்களின் முன்னோர்கள்

வணக்கஸ்தலங்களாக ஆக்கியதைப் போல் நீங்களும் செய்துவிடக் கூடாதென உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்" எனக் கூறினார்கள். பின்னர் மதீனாவாசிகளை நன்றியுணர்வுடன் நோக்கியவர்களாக "ஏ, முஹாஜிரீன்களே! நான் மதீனாவாசிகளைப் பெரிதும் நேசிச்கிறேன். உங்களுக்கும் எனக்கும் ஆதரவு தந்து உதவியவர்களை நான் ஒருபோதும் மறக்க முடியாது. அன்ஸாரிகள் மீது பட்சம் காட்டி நடந்து கொள்ளுங்கள். அவர்களில் கண்ணியம் வாய்ந்தவர்களையும், சிறந்தவர்களையும் கவுரவிக்க வேண்டியதும் தவறிழைப்பவர்களை மன்னிக்க வேண்டியதும் உங்கள் எல்லோரின் கடமையாகும். ஏனெனில், மற்ற மனிதர்கள் அதிகரித்துக் கொண்டே போகும்போது, சூழ்நிலையின் காரணமாக அவர்கள் பெருக முடியாதிருக்கின்றனர். நீங்கள் காரிய மாற்றுங்காலை ஏதும் தாமதமேற்படில் அதற்காக அவரசப்படாதீர்கள், யாவும் இறைவனின் நாட்டப்படியே நடப்பனவாயிருக்கின்றன" என்று கூறி முடித்தார்கள். இது ஏந்தல் நபிகளாரின் இறுதி உபதேசமாக இருந்தது.

**பட்ட கடன் தொட்ட கடன்**

அதன்பின் ஒரு நாள் அன்று வியாழக்கிழமை நண்பகல் தொழுகைக்குப்பின் பள்ளிக்கு வந்திருந்த மக்களை நோக்கி, "உங்களில் எவருக்கேனும் நான் கடன்பட்டிருந்தாலும், எனது சொல்லோ அல்லது செயலோ நோவினை செய்திருந்தாலும், அவற்றை இப்பொழுதே திரும்பப் பெற்றுக் கொள்ளக்கடவீர். மறுமையில் இறைவனின் முன்னிலையில் தலைகுனிந்தவனாக நிற்பதைவிட உங்கள் முன் தலை குனிவது எவ்வளவோ மேலானது" என்றனர் உத்தமத் திருத்தூதரவர்கள்.

அக்கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவர் எழுந்து பெருமானார் ஒருசமயம் ஓர் ஏழைக்கு மூன்று திர்ஹங்கள் கொடுக்கச் சொன்னதாகவும் அவை தமக்குத் திரும்பக் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார். உடனே அப்பணத்தைத் தங்களின் சிறிய தந்தை ஹலரத் அப்பாஸ் அவர்களின் மகனான பலுல் இடம் சொல்லி கொடுத்துவிடுமாறு பணித்தார்கள்.

மற்றொருவர் எழுந்து தனது வெற்றுடம்பில் பெருமானார் ஒரு சமயம் விரல் கொண்டு தட்டியதாகவும் அவ்விதம் தாமும் செய்ய விரும்புவதாகவும் சொன்னார். மக்கள் முன்னிலையில் தங்கள் திருமேனியை திறந்து காண்பிக்கச் சங்கோசமுற்ற சத்தியத் திருநபியவர்கள், அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கியை அகற்றி அங்கத்தைத் திறந்து காட்டி அவரின் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு கூறினார்கள். அம்மனிதர் நபிகள் கோமான் முதுகிலிருந்த நபித்துவ முத்திரை - இலாஞ்சனையைக் கண்ணுற்றதும், அதை முத்தமிட்டவராய், பெருமானாரின் பொற்பாதங்களில் வீழ்ந்து, "இறைவனின் திருத்தூதரே! என்னை மன்னித்தருளுங்கள். தங்கள் திருமேனியிலுள்ள இந்த இலாஞ்சனையை என் பாவக் கண்களால் கண்டு விமோசனம் பெற எண்ணியே இவ்வுபாயத்தினைக் கையாண்டேன்" எனக் கோவெனக் கதறியழுது மன்றாடி நின்றார். அண்ணலார் தங்களின் பொற் திருவதனத்தில் புன்முறுவல் நெகிழ, "நன்று, நீர் செல்வீர் — நரகத்தின் வாயில்கள் உமக்கு மூடப்பட்டு விட்டன" எனக் கனிவுடன் கூறி அனுப்பி வைத்தார்கள். இறைவனின் இறுதித் தூதர் என்பதற்கடையாளமாக அம்மேலோன், எம்பெருமான் (ஸல்) அவர்களின்

முதுகில் இரு தோள் பட்டைகளுக்கும் நடுவே, முகுதுத் தண்டை விட்டும் வலது பக்கம் சற்று ஒதுங்கியதாக, புறா முட்டை வடிவில் சிறிய மேடாக, சுற்றிலும் உரோமங்களையுடையதாய், பொன் நிறமான தொரு இலாஞ்சனையை தோற்றுவித்திருந்தான். இதனையே அந்த மனிதர் அடையாளங் கண்டு முத்தமிட்டார்.

**மேலான தோழனிடம்**

திங்கள்கிழமை வைகறை (பஜ்ரு) தொழுகையை ஹலரத் அபூபக்கர் அவர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். பெருமானார் ஆயிஷா நாயகியின் அறையிலிருந்து பள்ளி வாசலுக்குள் வந்தார்கள். அன்று சற்று தெளிவுடன் காணப்பட்டார்கள். உடனே அபூபக்கர் அவர்கள் அண்ணலாருக்கு இடமளிப்பதற்காக தாம் நின்ற ஸ்தானத்தை விட்டும் நகர முனைந்தார்கள். நகர வேண்டாமெனச் சாடை செய்து விட்டுச் சிறிது விலகியமர்ந்து தொழுகை நடப்பதை மனப் பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தொழுகை முடிந்த பின், பள்ளிவாசலில் அமர்ந்து, வந்திருந்த மக்களுடன் சிறிது நேரம் உரையாடினார்கள். அபூபக்கர் அவர்கள் அனுமதி பெற்று, மதீனாவுக்கு அருகிலுள்ள அஸ்ஸுன்ஹ் என்னும் இடத்துக்குச் சென்று விட்டார்கள். சிறிது நேரத்திற்குப் பின் நபிகள் நாதருக்குப் களைப்பு மேலிட்டதால் ஆயிஷா நாயகியின் அறைக்குச் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டார்கள்.

களைப்புற்றுக் கிடந்த பெருமானாரின் தலையைத் தூக்கி அவர்களைத் தமது நெஞ்சில் அணைத்துக் கொண்டார் ஆயிஷா நாச்சியார். அந்நேரம் அவரது சகோதரர் அப்துல் ரஹ்மான் கையில் ஒரு 'மிஸ்வாக்' (பல்துலக்கும் குச்சி) குடன் அங்கு வந்தார். அதைக் கண்டதும் பெருமானார், தாங்கள் பல்துலக்க விரும்புவதாகச் சாடையால் உணர்த்தினார்கள். இதனைப் புரிந்து கொண்ட ஆயிஷா நாச்சியார் தம் அண்ணன் கையிலிருந்த 'மிஸ்வாக்'கை வாங்கித் தட்டி, மென்று சரி பண்ணிப் பெருமானாரிடம் கொடுத்தனர். சிறிது நேரம் பல்துலக்கிய பின், குச்சியை அப்பால் வைத்து விட்டு, வாய் அலம்பத் தண்ணீர் கேட்டார்கள். தண்ணீர் வந்ததும் ஆயிஷா நாச்சியாரின் மார்பில் சாய்ந்தபடியே வாய் அலம்பினார்கள். பக்கத்திலிருந்த நீர்ப் பாத்திரத்தில் கையை நனைத்துப் பலமுறை தங்களின் சுந்தரவதனத்திலும் தடவிக் கொண்டார்கள். பின்னர் ஆயிஷா நாச்சியாரின் மடிமீது தலைவைத்துப்படுத்தவாறு, "இறைவனே மரணத்தின் வேதனையை (சக்ராத்) எனக்கு இலேசாக்கியருள்" என இறைஞ்சினார்கள்.

தம் மடிமீது வைத்திருந்த அண்ணலாரின் திருமேனி நொடிக்கு நொடி கனத்துக் கொண்டு வருவதை ஆயிஷா நாச்சியார் உணரலானார். அது சில்லிட்டுக் கொண்டும் வந்தது. அவர்களைக் கீழே கிடத்தித் தலையணை மீது படுக்க வைத்தார். அப்போது நபிகள் நாதர், தங்களின் திருமேனியைச் செம்மைப்படுத்திக் கொண்டு, கால்களை நீட்டிச் சேர்த்துக்கிடந்தவாறு, "தொழுகையை நியமமாக நிறைவேற்றுங்கள், அடிமைகளை அன்பாய் நடத்துங்கள், பெண்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதமாவர், எனவே, அவர்களைக் கண்ணியத்துடன் நடத்துங்கள்" என மொழிந்தார்கள். அதையடுத்து, "அல்லா ஹும்ம ர.்.பீக்குல் அ.்.லா" அல்லாஹ்வாகிய மேலான தோழனிடம் என்ற வார்த்தைகள் இறுதியாக மும்முறை அவர்களின் அமுதத் திருவாயினின்றும் வெளியாயின. மனித குல மாணிக்கம், மறுவிலா முழுமதி, மங்காச்

சுடரொளி, அகிலங்களுக்கு ஓர் அருட்கொடை, இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களின் தேஜோமயமானந்தமான ஆன்மா தம் மேலோனின் திருச்சந்நிதானம் மீண்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் (நாம் இறைவனிடத்திருந்தே வந்துள்ளோம். அவனளவிலேயே மீளுபவர்களாயிருக்கிறோம்) (89:27-30) அந்நேரம் ஹிஜ்ரி 11 ஆண்டு ரபீயுல் அவ்வல் பிறை 12 கி.பி. 632 ஜுன் 8ம் நாள் திங்கட்கிழமை முன்பகல் 11:30 மணியாக இருந்தது.

இருமூன் றில்தாய் இழந்தநபி
இருபத் தைந்தில் மணந்தநபி
அருநாற் பதிலே நிறைந்த நபி
அறுபான் மூன்றில் மறைந்தநபி

எனப் பேராசிரியர் கா.அப்துல் கபூர் பாடியுள்ளார்கள்.

**இறப்பற்றவன் இறைவன் ஒருவனே**

நபிகள் நாதர் காலமாகிவிட்டார்கள் என்ற செய்தி நொடிப்பொழுதில் மதீனா எங்கும் பரவிவிட்டது. ஸுன்ஹ் சென்றிருந்த அபூபக்கர் அவர்களுக்குச் செய்தி எட்டியதும், குதிரை மீதேறிக் கொண்டு ஆயிஷா நாச்சியாரின் இல்லம் விரைந்தார்கள். உள்ளே சென்று நாயகத் திருமேனியை மூடியிருந்த போர்வையை விலக்கி அண்ணலாரின் திருமுகத்தைப் பார்த்தார்கள். "பெருமானே! தாங்கள் உயிருடனிருந்த போது எவ்விதப் பொலிவுடன் விளங்கினீர்களோ அது போலவே இப்போதும் நான் தங்களைக் காண்கிறேன்" எனக்கூறியவாறு அத்திருச் சென்னியை முத்தமிட்டார்கள். அத்திருவதனத்தைச் சற்று நேரம் கூர்ந்து நோக்கியவர்களாய், ஹலரத் அபூபக்கர் "என்மீது அளவற்ற அன்பு பூண்டிருந்த என் உயிருக்குயிரான தோழரே! தாங்கள் மெய்யாகவே காலமாகிவிட்டீர்கள், இனியொரு மரண வேதனை என்பது தங்களுக்கு இல்லை. இறைவன் தங்களைப் பெரிதும் உவந்து போற்றுவான்" எனக் கூறியவர்களாய் மீண்டும் ஒருமுறை அத்திருச் சென்னியை முத்தமிட்டார்கள்.

ஆயிஷா நாச்சியாரின் இல்லத்தின் முன் மதீனாவின் மக்கள், வெள்ளமெனத் திரண்டு நின்றனர். ஹலரத் உமர் அங்கே வந்தார்கள். நபிகள் பெருமான் மயக்க நிலையில் கிடக்கின்றார்கள் என்ற எண்ணத்தில் "மாநபியவர்கள் மரணிக்கவில்லை. யாராகிலும் அவ்வாறு கூறினால் எனது இவ்வாளுக்கு அவரை இரையாக்குவேன்" எனக் கண்களில் பொறி பறக்கக் கர்ஜித்தார்கள். அது சமயம் ஹலரத் அபூபக்கர் அவர்கள் வெளியில் வந்து, உமர் அவர்கள் நிற்கும் வெறி நிலையைக் கண்டார்கள். அவரது தோள் மீது கையை வைத்துச் சாந்தப்படுத்தியவாறு, அங்:கு கூடி நின்ற மக்கள் கூட்டத்தின் பக்கம் திரும்பி "மக்களே! முஹம்மது அவர்களை வணங்குபவர் எவரேனும் இருந்தால், நிச்சயமாக அவர் இறந்து விட்டார் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும். இறைவனை வணங்குபவர் யாராகிலுமிருந்தால் அவன் இறக்கவில்லை. உயிருடனிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளட்டும்" எனக்கூறியவர்களாகத் திருக்குர்ஆனின் 3:144 திருவசனத்தில் "முஹம்மதுவுக்கும் அவருக்கு முன் காலஞ்

சென்று போன நபிமார்களைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியேயாவார். அவர் இறந்து விட்டாலோ அல்லது கொல்லப்பட்டாலோ, அதற்காக நீங்கள் (இஸ்லாத்தைக் கைவிட்டுப்) புறமுதுகு காட்டி ஓடி விடுவீர்களா? அவ்வாறு நடந்து கொள்பவர்கள் இறைவனுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கவில்லை. நன்றியுடையோருக்கு இறைவன் நிச்சயமாக சன்மானமளிப்பவன்" எனக்கூறப்பட்டிருப்பதையும் ஓதிக் காண்பித்தார்கள். இதைச் செவியேற்ற ஹலரத் உமர் துக்கந்தாளாதவராக வெட்டப்பட்ட மரம் போல் கீழே சாய்ந்தார். கூடி நின்ற மக்கள் தேம்பி அழுதனர். இத்திருவசனத்தை முன்பு மக்கள் எத்தனையோ தடவை கேட்டிருந்தும் இப்போது அது அவர்களுக்கு புதியதாகக் காணப்பட்டது. அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

**முதல் கலீபா**

சிரியா நோக்கிச் செல்லவிருந்த சேனை புறப்படத்தயாராக இருந்த நேரத்தில், பெருமானாரின் நிரியாணச் செய்தி கேட்டு அல்ஜுர்ப் என்ற இடத்திலிருந்து மதீனா திரும்பி விட்டது. இது சமயம் அன்சாரிகள் தங்களுக்குள் ஒருவரைக் கலீபா (தலைவர்) வாகத் தேர்ந்தெடுக்கக் கூட்டம் கூடியுள்ளனர் என்பதைக் கேள்வியுற்று ஹலரத் அபுபக்கர், உமர், அபூ உபைதா ஆகிய மூவரும் அங்கு விரைந்தனர். ஹலரத் அபூபக்கர் அவர்கள் மதீனாவாசிகளை நோக்கி, "மதீனாவாசிகளே!. நீங்கள் மேன்மை பொருந்தியவர்கள். சிறப்புடையவர்கள் என்பது உண்மையே!. எனினும், குறைஷிகளைத் தவிர்த்து வேறொருவரை நீங்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுத்தால் அதை மற்ற அராபியர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். அதனால் குழப்பமும், ஒற்றுமையின்மையும் ஏற்படும். நாங்கள் தலைவராயிருந்து காரியங்களைக் கவனிக்கிறோம். நீங்கள் அமைச்சர்களாயிருந்து எங்களுக்கு உதவி புரியுங்கள்" எனச் சமாதானங் கூறினார்கள். அதற்கு அன்சாரிகள் "உங்களில் ஒருவரையும், எங்களில் ஒருவரையும் தலைவர்களாய்த் தேர்ந்தெடுத்துக் காரியங்களை நிர்வகிக்கலாம்" என மாற்று யோசனைக் கூறினர். மீண்டும் ஹலரத் அபூபக்கர் அவர்கள் மதீனாவாசிகளுக்குச் சமாதானங்கூறி ஹலரத் உமர், அபூ உபைதா இருவரில் ஒருவரைக் கலீபாவாகத் தேர்வு செய்யுமாறு ஆலோசனை கூறினார்கள். உடனே ஹலரத் உமர் அவர்கள், அபூபக்கர் அவர்களே!. பெருமானார், தங்களைத் தான் முஸ்லிம்களின் தலைவராக்கும் எண்ணத்தில் இமாமாக நியமித்துள்ளார்கள். ஆதலால், தாங்களே எங்களின் தலைவர், தங்களுக்கே நாங்கள் பணிந்து நடப்போம்" எனக்கூறியவர்களாய், ஹலரத் அபூபக்கர் அவர்களின் கரத்தில், "பைஅத்" விசுவாசப்பிரமாணம் செய்து கொடுத்தார்கள். உமர் அவர்களின் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளைக் கேட்ட மற்றவர்களும் அவரைப் பின்பற்றி "பைஅத்" செய்தனர்.

பொழுது சாய்ந்து விட்டது. அனைவரும் ஆயிஷா நாச்சியாரின் இல்லம் வந்தனர். பெருமானாரின் புனித உடலைக் குளிப்பாட்டிக் கபன் செய்தார்கள். பெருமானாரின் புனிதப் பொன்மேனியை ஹலரத் அலீ, அப்பாஸ், அவர்களின் புதல்வர்கள் பலுல், குதம், உஸாமா பின் ஜைது, பணியாள் ஷுக்ரான் ஆகியோர் குளிப்பாட்டினர். அன்று இரவு கழிந்தது. வைகறை (பஜ்ரு) தொழுகைக்குப் பின், மக்கள் பள்ளிவாசலில் வந்து கூடினர். ஹலரத் உமர் அவர்கள் எழுந்து ஹலரத் அபூபக்கர் அவர்களின் தலைமைத்தனத் தகுதிகளை, திருக்குர்ஆனில் 9:40வது திருவசனத்தில் இறைவன்

அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதையும், அவர்களையே நபிகள் நாதர் இமாமாக நியமித்துச் சென்றதையும், எடுத்து விளக்கி, அனைவரும் அபூபக்கர் அவர்களையே கலீபாவாக ஏற்று பைஅத் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அங்குக்குழுமியிருந்த கூட்டத்தலைவர்களும், கோத்திரத் தலைவர்களுமான அனைத்து மக்களும் வரிசைக்கிரமமாக வந்து ஹலரத் அபூபக்கர் அவர்களின் கரத்தின் மீது கையை வைத்து விசுவாசப் பிரமாணம் செய்தனர்.

“பைஅத்” பெற்று முடிந்த பின் ஹலரத் அபூபக்கர் அவர்கள் எழுந்து தங்கள் பதவிப்பிரமாண உரையை நிகழ்த்தினார்கள்.

“மக்களே! நான் உங்களை விட மேலானவனாக இல்லாதிருப்பினும் இப்பொழுது நான் உங்களுக்குத் தலைவனாக இருக்கிறேன். நான் நடப்பது நியாயமாகத் தோன்றினால், அதற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள், அநீதமாக இருந்தால் அதற்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டாம். பலவீனனை ஆதரிக்கவும், பலசாலியை அடக்கவும் இறைவன் எனக்கு உதவி புரிவான். நான் ஆண்டவனுக்கும் அவனது ரஸூலுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும் வரை நீங்களும் எனக்குக் கீழ்ப்படிந்து ஆதரவு தாருங்கள். நான் மாறுபட்டவனாக நடந்தால் நீங்கள் எனக்கு ஆதரவு தர வேண்டாம். எல்லோரும் தொழுகையைக் கடைபிடியுங்கள். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவான்.

**நல்லடக்கம்**

ஹலரத் அபூபக்கர் அவர்கள் பேசி முடித்ததும் நாயகத் திருமேனியை நல்லடக்கம் செய்யலாம் என்ற பேச்சு எழுந்த போது, “நபிகளின் பூதவுடலை அவர்கள் மரணமடைந்த இடத்திலேயே நல்லடக்கம் செய்வது தான் மரபு” என்ற பெருமானாரின் பொன்மொழியை ஹலரத் அபூபக்கர் அவர்கள் நினைவூட்டியதும் அவ்வாறே செய்வதென அனைவரும் அங்கீகரித்து ஆயிஷா நாயகியாரின் இல்லத்திலேயே கப்ரு தோண்ட செய்தனர். கப்ரு மக்காப் பாணியில் தோண்டுவதா அல்லது மதீனா பாணியில் தோண்டுவதா என்ற சர்ச்சை எழுந்தபோது, மக்காவாசி ஒருவரையும், மதீனாவாசி ஒருவரையும் கப்ரு தோண்ட அழைப்பதென்றும், அதில் யார் முந்தி வருகின்றாரோ அவரது ஊர் முறைப்படியே கப்ரு தோண்டுவதென்றும் முடிவெடுத்து ஆளனுப்பியதில் மதீனாவாசியான அபூதல்ஹா என்பவர் முன்னதாக வந்து சேர்ந்தார். எனவே, கப்ரு மதீனா முறைப்படியே தோண்டப்பட்டது.

அதன் பின், மக்கள் இறுதி மரியாதை செலுத்தும் பொருட்டுத் திருமேனியை வரிசைக்கிரமமாக வந்து தரிசித்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஆண்கள் முன்னதாகவும் பெண்கள் பின்னதாகவும் வரிசையாகச் சென்று தரிசிக்க வழி செய்யப்பட்டது. திருமேனியைக் கப்ரில் இறக்க வேண்டிய தருணத்தில், கப்ரு ஈரடிப்பாக இருந்ததால், பெருமானாரின் படுக்கையை அதில் விரித்து ஹலரத் அலீ, பலுல், உஸாமா, அப்துர் ரஹ்மான் ஆகிய நால்வரும் திருமேனியைத் தாங்கிப் பிடித்துக் கப்ருக்குள் வைத்து ஹிஜ்ரி 11, ரபீயுல் அவ்வல் பிறை 14 (கி.பி. 632 ஜூன் 9) செவ்வாய் பின்னேரம் புதன் இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

**ஸல்லல்லாஹு அலா முஹம்மது**

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.